1/6 89

பி. ஆர். ராஜமய்யரின்

கமலாம்பாள் சரித்திரம்

நூற்றாண்டு விழா
வெளியீடு

முதல் நாவல்
வரிசை - 1

கமலாம்பாள்

சரித்திரம்

ஆபத்துக்கிடமான அபவாதம்

அல்லது

கமலாம்பாள் சரித்திரம்

ஆசிரியர் :

பி. ஆர். ராஜமய்யர், பி. ஏ.

திங்கள் பிரசுரம்

3, கொண்டி செட்டித் தெரு • சென்னை-1

திங்கள் முதற்பதிப்பு : 14—1—72

முன்னர்வந்த பதிப்புக்கள் :

1896, 1904, 1910, 1915, 1930, 1944, 1957.

நூற்றாண்டுவிழா வெளியீடு

விலை ரூ: 7-00

பார்க்கர் பிரஸ்,
சென்னை-1.

நாவலாசிரியர் ஸ்ரீ ராஜமய்யரின் நூற்றுண்டு விழாக் கொண்டாடும் இந்த ஆண்டில் இந்நூலை வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம். தமிழ் நாவலின் முன்னேடியான ஆசிரியர்க்குச் செலுத்தும் எங்கள் அன்புக் காணிக்கையே நூல் வடிவில் உருப்பெற்றுள்ளது.

எங்கள் பிரசுரத்தின் இரண்டாவது நூல் இதுவேயாகும். இந்நூலை வெளியிடுவதால் தமிழ் வளர்ச்சிக்கு நாங்கள் செலுத்தும் காணிக்கையாகவும் நீங்கள் கருதலாம்; கருதவும் வேண்டும். இதுவே எங்கள் வேண்டுகோள்.

★

எண்ணிய முடிதல் வேண்டும்
    நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
    தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
    பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்மு னிங்கு
    நசித்திடல் வேண்டு மன்னும்.

★

அன்பார்ந்த வாசகர்களுக்கு......

"கமலாம்பாள் சரித்திரம்" மதுரைப் பல்கலைக் கழகத்திலும், மற்றும் பல இடங்களிலும் 'தற்கால இலக்கியம்' பற்றிப் படிப்பதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது. கல்லூரி மாணவர்களுக்கு இத்தலைப்பில் செய்திகள் அறிய உதவும்பொருட்டு "தமிழில் நாவல்", "கமலாம்பாள் சரித்திரம் - ஒரு பார்வை" என்ற இரு கட்டுரைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவ்விரு கட்டுரைகளையும் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையைச் சார்ந்த டாக்டர் தா. வே. வீராசாமி, எம்.ஏ.பி எச்.டி. அவர்கள் எழுதியுள்ளார். அவர்க்கு எங்கள் நன்றி.

★

தோற்றம் : 25—1—1872

மறைவு : 13—5—1898

நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில், மதுரை மாவட்டத்தில் வத்தலகுண்டு என்ற கிராமத்தில் அந்தணர் குலத்தில் தோன்றிய ராஜமய்யர் எழுதிய நாவல்தான் **கமலாம்பாள் சரித்திரம்** என்பதாகும். இந் நாவல் எழுதி இன்றைக்குச் சுமார் எழுபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றதெனினும், இந்நாவல் ஓர் இணையற்ற கலைப்படைப்பாக—காலத்தை வென்ற கலைச் செல்வமாக—நிற்கின்றது.

தாம் வாழ்ந்த குறுகிய காலத்தினும் தம் பெயரை இலக்கிய வானிலும், தத்துவத் துறையிலும் நிலைக்கச் செய்துவிட்ட சாதனையைப் புரிந்தவர் 'கமலாம்பாள்' ராஜமய்யர்.

'விவேக சிந்தாமணி' என்ற பத்திரிகையில் 'கமலாம்பாள் சரித்திரம்' 1893ஆம் ஆண்டில் தொடர் நாவலாக வெளிவந்தது. அதன் பின்னர் 1897இல் நூல் வடிவில் உருப்பெற்றது. பல பதிப்புக்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளமையே, இந்த நாவலின் சிறப்பை விளக்கப் போதுமான சான்றும். 'மனோன்மணீயம்' எழுதிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இந் நூலினைப்பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "ஐரோப்பாவில் பிரசுரமாகும் முதல்தரமான எந்த சஞ்சிகைக்கும் இந்த நாவல் புகழ் தேடிக் கொடுக்கும்" என்றே குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியரின் தமிழ் இலக்கிய அறிவையும், ஆழத்தையும், பற்றையும் இந்நாவலின் பலவிடங்களில் நாம் காணலாம்.

மற்றும், ஆத்மஞான விஷயங்களிலும் தாம் தீவிரவாதி எனபதையும் இந்த நாவலில் அவர் காட்டியுள்ளார்.

இச் சிறப்பு வாய்ந்த இவரின் பெயர் தமிழ் இலக்கிய உலகில் என்றென்றும் ஒளிரும் என்பதில் ஐயமில்லை.

★

ஆசிரியர் ஸ்ரீ ராஜமய்யர்

★ ஸ்ரீ ராஜமய்யர் வத்தலகுண்டில் பிறந்தவர். கதையும் மதுரை ஜில்லாவைப் பற்றியதுதான்.

★ விவேகானந்தராலும் பாரதியாராலும் புகழப்பட்டவர் ஸ்ரீ ராஜமய்யர்.

★ ஸ்ரீ ராஜமய்யர் தமது 26ஆவது வயதிலேயே உயிர் நீத்தார். அதற்குள் இவர் தமிழில் எழுதிய நவீனம் 'கமலாம்பாள் சரித்திரம்' ஒன்றே.

★ விவேகானந்தர் தன் அமெரிக்க விஜயத்திற்குப் பின் சென்னையில் துவக்கிய 'பிரபுத்த பாரதா' அல்லது 'விழித்துக்கொண்ட இந்தியா' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் முதல் ஆசிரியராக ஸ்ரீ விவேகானந்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கௌரவத்தை அடைந்தவர்.

★ *ஷெல்லி, பைரன், கீட்ஸ், கம்பன் இவர்களின் கவிதைகளில் ஆழ்ந்த கலைக்கனவு. தன் கலைத் திறமையால் சிகாகோவையும் லண்டனையும் ஒரு கை பார்க்க வேண்டும் என்ற பெரிய எண்ணம். தன் புகழ் கடல் தாண்டி பரவவேண்டுமென்ற அவா. இவையே வத்தலகுண்டு ராஜத்தின் இளமை. பி. எல். பரீக்ஷை தேராமல் போகவே ஆசை அவலமானது. ஆளே மாறிப்போனார். கலைக் கனவுகள் வேதாந்த பித்தமாகி விட்டது. 1893ஆம் ஆண்டில் 'விவேக சிந்தாமணி' பத்திரிகையில் தமது சித்த நிலையையே 'கமலாம்பாள்' என்ற தொடர் கதையாக அவர் எழுதினார்.

★ *அவர் அமைதியாக இறந்த காட்சி ஓர் அற்புதம். இரண்டு நாள் கழித்து பிரபுத்த பாரதத்தில் வெளியான 'வேதாந்தம்', 'ராஜாதிராஜன்' என்னும் கட்டுரைகளுக்காக அவர் மீது ராஜத் துரோகக் குற்றம் சாட்டினார்கள். அரசாங்கம் பிடி வாரண்ட் அனுப்பியது. போலீஸார் வந்தனர். ஆனால் வாரண்டை சாதரா செய்ய ஆள் தான் இல்லை.

---

* இப்பகுதிகள் ஸ்ரீ ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் 'கல்கி'யில் எழுதிய ''பெரியவாள் கதை''யிலிருந்து எடுக்கப்பட்டவை.

தமிழில் நாவல்

டாக்டர் தா. வே. வீராசாமி, எம்.ஏ., பிஎச்.டி.
கேரளப் பல்கலைக் கழகம்.

மக்கள் சமுதாயம் நாளும் நாளும் வளர்கிறது; பற்பல மாற்றங்களைப் பெறுகிறது. அதன் சிந்தனைகளில் சிறகு முளைக்கிறது, சில சமயங்களில் உதிரவும் செய்கிறது. மாறாக மேலும், மேலும் உயர்ந்து சென்று படர்கிறது; சில சமயங்களில் கண்ணுக் கெட்டாத தொலைவில் பறந்து செல்கிறது. ஆய்ந்து ஓய்ந்தபின் மனத்தின் ஒரு மூலையில் காலாற அமர்கிறது.

இத்தகைய மனச்செயல்களால் சிந்தனையிலே புதுப்புது இலக்கிய வடிவங்கள் தளிர்க்கின்றன. தொடக்க காலத்திலே சின்னஞ்சிறு கருத்துக்களைத் தாங்கிய சிறுசிறு பாடல்கள் வெளிவந்தன. கருத்தின வளர்ச்சியும் சமுதாய வளர்ச்சியும் பின்னிப் பிணைந்தபோது நீண்ட நெடும் பாடல்கள் அலைமோதின. மக்கள் வாழ்வில் கட்டுப்பாடு தளரவே ஒழுக்க உணர்வு மேம்பட நுண்ணிய நெறியில் குறட்பாக்கள் மனித சமுதாயத்திற்கு நெறிகாட்டின. வாழ்வில் வளமும் வளர்ச்சியும் பெருகப்பெருகக் கற்பனை மிகப் பெரிதாய் வளர்ந்து காப்பியம், நாடகம் என்ற முறையில் இலக்கிய வகைகள் புதுப்புதுக் கோலம் பூண்டு வெளிவரத் தொடங்கின. இலக்கியத்தில் செம்மை மாந்தரை மட்டும் தேர்ந்தெடுத்து இலக்கியத்தைப் படைத்த நிலை மாறி, எல்லாவகை வாழ்க்கைத் தரத்திலும் உழல்கின்ற 'பொது மக்களை'யும் அவர்களுடைய இயல்புகளையும் செயல்களையும் விளக்குவதற்கு நாவல் என்ற புதிய சாளரத்தைத்திறந்தனர்.

அதில் புறப்பட்ட ஒளி, இலக்கிய உலகில் புதிய மாற்றத்தையும் தோற்றத்தையும் காட்டியது.

இலக்கிய உலகில், பழம்பெரும் படைப்பாய்த் தன்னிகரற்ற செல்வாக்குடன் செங்கோல் ஓச்சியது கவிதை ஆகும். ஆனால், அத்தகைய பெருமை வாய்ந்த கவிதையும் இடைக்காலத்தில் புதிதாய்ச் செல்வாக்குப் பெற்ற உரைநடையும் போட்டியிட்டதில் கவிதையை உரைநடை வெற்றி கொண்டது. இங்ஙனம் வெற்றி கொண்ட உரைநடையை விளைநிலமாகக் கொண்டு கற்பனை வளர வளர நாவல் என்ற புதிய மலர் பூக்கத்தொடங்கியது.

இப் புதுமலர் மணம் வீசத் தொடங்கியதுமே பொது மக்களின் பொழுதுபோக்கிலே மகிழ்ச்சியைக் கலந்தது; அறிஞர் மனத்திலே புதுக்கருத்துக்களைத் தூவியது. எனவே, படித்த மக்களிடையே காணப்படும் பல நிலையினரும் நாவலை விரும்பிப் படிப்பதற்கு இடமேற்பட்டது.

நாவல், மனித வாழ்க்கையில் பலதுறைகளுக்கும் உரிய மாந்தரைப் படைக்கிறது. எனவே, கதையின் கருவோ, நடையின் தெளிவோ ஒன்றோடொன்று பிரித்தறியா வண்ணம் பிணையினும் நாவல் வெற்றி பெறுதற்குத் தடை ஏற்படுவதில்லை. எனவே, அன்றாட வாழ்வில் துய்த்து உணர்ந்தவற்றைத் தெளிவாக நாவலில படைக்கும் போது, அது மேலும் மேலும் வெற்றி பெறுகிறது.

வரலாற்றையும், கதையையும் ஒன்றாகவே ஒரு காலத்தில் கருதி வந்தனர். (தமிழில் 'பிரதாப முதலியார் சரித்திரம்', 'கமலாம்பாள் சரித்திரம்' என்ற பெயர்களிலேயே சரித்திரம் என்ற சொல் அமைந்திருத்தல் இங்குக் குறிப்பிடத்தக்கது) இதனால், வரலாற்றைக் கதையிலிருந்து தனியே பிரித்தனர், கதையிலோ கற்பனை கரை கடந்து பெருகிற்று. தொடக்க காலத்தில் நாவல் பல

தொகுதிகளாக :வெளிவந்தது. சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் ஏற்பட்ட உண்மையான மாற்றங்கள் நாவலிலும் புதுவகை வளர்ச்சிகள் ஏற்பட வழிவகுத்தன. இத்தகைய புதுமைக்கவர்ச்சி கவிஞர்களேயும் தாக்கிற்று. கவிதை என்ற கருவியை அப்புறம் வைத்துவிட்டு நாவலேக் கைக்கொண்டனர். தமிழில் கவிதையும் கீர்த்தனேயும் பாடிய நீதிபதி வேதநாயகம் பிள்ளே அவர்களே “பிரதாப முதலியார் சரித்திரம்” எழுதியதால் இக்கருத்தின் மெய்ம்மை நன்கு புலப்படும்.

வாழ்விலே செல்வம் செழித்திருப்பினும் படித்தற்கு நேரம் கிடைக்க வாய்ப்பில்லே. வறுமைப் பிடிப்பிலே சிக்கித் தவிப்பினும் படிப்பிலே ஆர்வம் எழுதற்கு வழியில்லே. இவ்விரு நிலேகளுக்கும் இடைப்பட்ட நிலேயில் வாழும் மக்கள் இலக்கியத்தைப் படித்து இன்பத்தை ஓரளவு கண்டு மகிழ்ந்தனர். ஐரோப்பிய மக்களிடையே பதினெட்டாம் நூற்ருண்டில் தோன்றிய பற்பல சமுதாய மாற்றங்களின் பயனுக அச்சுக்கலே வேகமாக வளர்ந்தது. எளிய நூல்களேப் பலரும் விரைந்து படிக்கும் உணர்ச்சி ஏற்பட்டது. இவ்வாறு படிக்கும் பழக்கத்தை மேற்கொண்ட மக்கள் புதிய புதிய கதைகளே வரவேற்றனர். பழமை புதுமைக்கு வழிவிட்டது.

அச்சுக்கலேயின் வளர்ச்சி, நாவலின் பெருக்கத்திற்குப் பெரிதும் துணேபுரிந்தது உண்மையே. தொழிற் புரட்சி போன்ற இயக்கங்கள் மக்களின் கற்பனேயைப் புதுப்புதுப் பகுதிகளிலே விளேவித்தன. பெண்கள் முன்னேற்றம் சமுதாயத்தின் புறவளர்ச்சியாகவும், உளநூல் துறையின் முன்னேற்றம் சமுதாயத்தின் அகவளர்ச்சியாகவும் மிளிரப் பழைய மரபுகள் மாறத் தொடங்கின. வாழ்க்கையில் காணும் நுண்ணிய வேறுபாடுகளேக் காட்டும் புத்துணர்வு எங்கும் பரவியது.

இங்ஙனம் புதுமை நெறிகாட்டிய வழியில் நாவல் உருவானதும், அதனைப் பாலூட்டி வளர்க்கத்தக்க செவிலியையும் 'தற்காலம்' தந்துதவியது. வார, மாத இதழ்களாக வெளிவரும் ஏடுகள் தத்தம் விற்பனையைப் பெருக்குதற்கு ஆர்வத்தையும் கவர்ச்சியையும் ஊட்டும் நாவல்களைப் பலவகைகளில் வெளியிடத் தொடங்கின. நல்ல ஆதரவு கிடைக்கவே, நாவலின் வேர் நன்கு ஊன்றத் தொடங்கியது.

இன்றைய இலக்கியத்தில் நாவலுடன் சிறுகதை, நாடகம்,கட்டுரை ஆகிய துறைகளும் வளர்ந்துவருகின்றன. நாவலையும் சிறு கதையையும் ஒப்பிட்டால் வாழ்க்கையின் பல சிக்கல்களைப் பிரித்துணரவும், மாந்தர்தம் வாழ்வை முழுமையாக அறிந்து கலந்துறவாடவும் நாவல் துணை புரியும் என்றும், சிறுகதை இதற்குத் துணை புரியாது எனவும் உறுதியாக அறியலாம். நாடகத்திலே காணப்படும் காலம், களம் போன்ற கட்டுப்பாடுகள் நாவலுக்கு இல்லை, கட்டுரை போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது எல்லோராலும் முடியாது. ஆதலால் சிறுகதை, நாடகம், கட்டுரை ஆகியவற்றிற் கில்லாத சிறந்த வளர்ச்சி உரிமையை நாவல் பெற்றுள்ளது.

பெரும்பாலான நாவல்கள் ஆசிரியர் கூறும் முறையிலேயே அமையும். இவற்றில் ஆசிரியரின் சொந்தக் கருத்து ஆங்காங்கே இடம் பெற்று நாவலின் அழகினைக் கூட்டவோ குறைக்கவோ செய்யும். பண்புநலம், உணர்வுகள், நோக்கங்கள் இவற்றை மனத்தில் தைக்கும் வண்ணம் எடுத்தியம்ப இயலும். கதை நிகழ்ச்சியைத் தட்டுத்தடங்கலின்றி விளக்கிச் செல்லும். இங்ஙனம் அமையும் நாவல்களுக்கு டால்ஸ்டாய் எழுதிய உலகப்புகழ் பெற்ற 'போரும் அமைதியும்','அன்னு கரீனினு' போன்றவை சான்ருகும்.இந்த முறையின்படி ஆசிரியர் நினைத்தவண்ணம்

படிப்போர் உள்ளத்தில் ஆசிரியர் கருதிய உணர்வை எழுப்புதல் கடினம். அவருடைய குறைபாட்டால் நாவலில் சுவைகுன்றலும், மற்றொன்று விரித்தலும் வளர்ந்து நாவல் அழகு சிதைய இடமேற்படும்.

நாவலில் காணும் சுவைகள் பற்பல. இன்பச்சுவையும் நகைச்சுவையும் நாவலில் பெறும் பங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விரு சுவைகளைக் காட்டிலும் நாவலில் தோன்றும் துன்பச் சுவையிலும் எள்ளற்சுவையிலுமே நாவல் ஆசிரியரின் தனிப்பட்ட ஆற்றல் வெளிப்படும்போது நாவலின் தகுதி உயர்கிறது.

பல்வேறு வகையிலும் முறையிலும் வளர்ந்த கதைக் கரு நாவலின் உயிர்நாடி ஆகும். எத்தகைய பொருள் கருவாக அமைந்தாலும் ஆசிரியரின் திறமையாலேயே அது மேலோங்கி வளரும். நாட்டுக் கதைகள், புராணங்கள், வரலாற்றுக் கதைகள், அன்றாட வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் ஆகிய இவற்றில் எவ்விடத்தில் வேண்டு மாயினும் கதைக் கரு பிறக்கும். கதையின் நிகழ்ச்சியில் தொடர்போ, ஒருமைப்பாடோ அமைந்தாலும் அமையா விட்டாலும் கதைக் கரு செம்மையாக அமைவதில் தடை யேதும் இல்லை. கருவைப் போலவேதான் கதை மாந்தர் களும். கதையின் கரு, மாந்தர் ஆகிய இரண்டும் சிறந்து விளங்கினால் நாவலில் கதையும் உயர்ந்து ஓங்கும்.

கதை மாந்தரே கதை கூறுவதாக நாவல் அமைவதும் உண்டு. இதனால் இங்ஙனம் கதை கூறுவோர் 'எந்த நிறக் கண்ணாடி' அணிந்து கதை நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்களோ அதற்கேற்ப நாம் கதைக் காட்சிகளைக் காணும் முறையும் மாறி விடும். இதே முறையில் சென்று ஒவ்வொரு பொருளையும் காணும் முறையில், நாவல் கற்போர் சுவை காண்பது எளிது. வேண்டுதல் வேண்டாமை உணர்வுகள்

கதை மாந்தரின் எல்லைக்குள் சுருங்கி விடும். காண்டேகர் நாவலில் வருவதைப் போன்று ஒரே நாவலில் பல நிலையிலும் அமைந்த கதை மாந்தர்கள் கூறுவதாக நாவல் அமைவதும் உண்டு. மனத்தின் அடித்தளத்தில் கிடக்கும் உணர்வுகளை வெளிக்கொணர இது சிறந்த முறை. இதில் காணும் மனப் போரைக் காணும்போது நம்மை அறியாமல் கதையில் ஈடுபடுவது இயற்கையே.

சில நாவல்களில் அன்றாடம் கேட்கும் உரையாடல் நம் காதில் ஒலித்தவண்ணமிருக்கும். நாவல் ஆசிரியர் தேவையான சொற்களைத் தேர்ந்தெடுத்தால் அவர் காட்ட நினைத்த கருத்தும், தூண்ட எண்ணிய உணர்வும் தாமே வெளிப்படும். கதைக் கருவை நோக்கிச் சுவையான உரையாடல் பகுதிகள் அமைந்து பண்பு நலனை விளக்க வேண்டும். அன்றாட வாழ்வில் மனிதரின் பேச்சு முறையிலே காணும் அழகான தொடர்களே நாவலின் அழகை வளர்க்கத் துணை செய்யும்.

நாவலை நாட் குறிப்பு வடிவிலும், கடித வடிவிலும் எழுதும் முறை மிகமிக அருகியே தோன்றியுள்ளது. ('கோகிலாம்பாள் கடிதங்கள்' என்ற மறைமலையடிகள் எழுதிய நாவல் சான்றாகும்.)

வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்படும் நாவல்களில் அவை குறிப்பிடும் கால எல்லையில் வளர்ந்த நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்குள் நாவலாசிரியன் தன்னைச் சிறை செய்துகொள்ளவேண்டும். இல்லையெனில் காலவழு என்ற பிழை புரிய நேரிடும்.

பல திற நாவல்களில் பொழுது போக்கிற்காக எழுதப்பட்டவையும் உண்டு; அவை கதையை மட்டும் சொல்லத் தொடங்கின. நாளும் சிக்கலாகி முடிகின்ற

வாழ்வில் ஒதுங்கித் துன்பத்தை மறக்க வேண்டி, அற்புதம், மந்திரம், மாயம், துப்பறிதல் போன்ற அடிப்படையில் நாவலின் கிளைகள் நாளும் பெருகியது உண்மையே. இன்றும் வெளிவருகின்ற நாவல்களின் எண்ணிக்கையில் விஞ்சி நிற்பவை இவையே. இத்தகைய நாவலில் தோன்றும் மாந்தரும் நிகழ்ச்சியும் விரைவில் மனத்தை விட்டு மறைகின்றன. ‘உண்மை’க்கு மாருக இவற்றில் ‘இன்மை’ நிலை பெறுகிறது. இவற்றைப் படிப்போர் ‘இன்மை நவிற்சி’யிலேயே இன்பங் கண்டு பொழுதைப் போக்குகின்றனர். திடுக்கிடும் நிகழ்ச்சிகளில் அடிக்கடி ஆர்வமூட்டிக் கவர்ச்சியை உண்டாக்கும் வேட்கை மீதூர மீதூர இத்தகைய நாவல்களை விழுந்து விழுந்து படிப்போரும் உள்ளனர்.

ஏதேனும் ஒரு பொருளை மையமாகக் கொண்டு அதை விளக்குவதற்கு வரலாறு, சமுதாயம், வாழ்க்கைத் துறை ஆகியவற்றில் ஒரு பகுதியைச் சூழலாகக் கொண்டு விளக்கும் வருணனை நாவல்களும் உருப்பெற்றன.

வருணனைக்கு மாருக நிகழ்ச்சி என்ற வட்டத்தினுள் கதை மாந்தர்தம் பண்பினை அடிப்படையாகக் கொண்ட நாவல் வளர்ந்தது. கதையின் நிகழ்ச்சிகள் பண்பினை விளக்கத் தொடங்கின. ஒரே பாதையில் நெறி பிறழாது செல்லும் கதை மாந்தரும் உருப் பெற்றனர். பல்வேறு வளைவு சுழிவுகளில் வெவ்வேறு வகைப் பணபு வளர்ச்சியைப் பெறுவதும் உண்டு. சிறந்த கதை மாந்தர் இத்தகைய நாவலில் நடையிடுவர். அவர்களுடைய சிறப்பை அந் நாவலிலே உலவிடும் பல வகைப்பட்ட மாந்தரின் உரையாடல், நாட் குறிப்பு, கடிதம் முதலியவை புலப்படுத்தும்.

நாடக நெறியில் அமையும் நாவலிலோ நிகழ்ச்சிகள் கதை மாந்தரை விளக்கும். அவர்களும் அவர்களுடைய பண்பும் கதைக் கருவைத் தெளிவாகப் புலப்படுத்தும்.

*

கதையிலே காணும் பெரிய சிக்கல் கொஞ்சங் கொஞ்சமாக அவிழும்வண்ணம் இத்தகைய நாவலின் உரைநடை தெளிவாக அமையும்.

இவ்வாறு காணப்படும் பலவகைத் தன்மைகளும் நாவலில் கலக்கும்போது எது எதனோடு கலந்துள்ளது எனப் பிரித்துணர்வது மிகமிகக் கடினம் என்பதை நாம் மறத்தல் கூடாது.

நாவல் பற்றிய பொதுத் தன்மையைக் கண்டபின், தமிழ் நாவல் பற்றிக் காண்பது ஓரளவு எளிது. தமிழில் தோன்றிய சிறு கதை, நாடகம் ஆகியவற்றைவிட நாவல் பெற்றுள்ள வளர்ச்சியானது யாவரும் ஒப்புக்கொள்ளும்வண்ணம் சிறப்புற்று விளங்குகிறது எனலாம். ஐரோப்பியரின் வருகை அடிமைத்தனத்திற்கு வழி கோலினும், இலக்கிய வடிவங்களிலும் கொள்கைகளிலும் புதிய ஆற்றலைக் கொடுத்தது. வீரமாமுனிவர் போன்றவர் புதிய இலக்கியங்களைப் படைத்துத் தந்தனர். கால்டுவெல் போன்றவர் ஒப்பீட்டு முறையில் புது நெறி வகுத்துத் தந்தனர். எனவே, தமிழின் பழைய இலக்கிய நெறி மரபுகள் மெல்ல மெல்லக் கட்டவிழத் தொடங்கின; புதுமை மணம் மெதுவாக வீசத் தொடங்கிற்று.

உரைநடைக் கதைகள் மேனாட்டு வடிவில் மயங்கி அதன் முறையைப் பின்பற்றத் தொடங்கின. தம் நாவலைப் பாடப் புத்தகமாக வைக்கலாம் என்ற ஆசையும் அக்கால ஆசிரியரிடம் எழுந்ததில் வியப்பில்லை. ஆங்கிலம், பிரஞ்சு போன்ற மொழிகளில் தோன்றிய கதைகளை முதலில் மொழிபெயர்த்தனர். பின்னர்த் தனித்த முறையிலேயே தமிழில் நாவல்களைப் படைக்கத் தொடங்கினர். தமிழ் உரைநடையின் வளர்ச்சிக் கட்டத்தில் தமிழ் நாவல்களே முதலிடம் பெறுகின்றன.

முதன் முதலில் தமிழில் 'ஆதியூரவதானி' என்னும் செய்யுள் நாவலை D. V. சேஷையங்கார் என்பவர் 1875-லேயே எழுதினர். அதன்பின்னரே மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826-1889) தமிழ் உரைநடையை வளர்க்கவும் வாழ்வில் ஒழுக்கத்தை நிலைநாட்டவும் 'பிரதாப முதலியார் சரித்திரத்'தை 1879இல் எழுதினர். தன் வரலாறே என எண்ணும்படி இந்த நாவலைப் பிள்ளையவர்கள் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது. உரைநடையில் அமைந்த முதல் நாவல் என்ற முறையில் இதனை யாரும் மறக்க முடியாது. இவர் கையாண்ட எளிய நடை, இனிய நகைச்சுவை, தக்க கதை மாந்தர் ஆகியவை தமிழ் இலக்கிய வுலகில் புதுமையைப் புகுத்தின.

அடுத்தாற் போல 'ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்' என்ற நாவலை விவேக சிந்தாமணி என்ற மாத இதழில் இராஜமையர் (1872-1898) எழுதினர். 26 வயதே வாழ்ந்த இந்த ஆசிரியர் தமிழில் நாவல் என்ற இலக்கணத்திற்கு அழியாத சான்றுகத் தம் நாவலை அளித்துச் சென்றுள்ளார். இதில் ஒவ்வொரு அத்தியாயமும் தன்னிறைவு பெற்றதாக அமைந்துள்ளது. ஒரு நிகழ்ச்சி மற்றொன்றை முறையாக நாடிச் செல்லுமாறு ஒழுங்குடன் அமைக்கப்பெற்றுள்ளது. கதைக் கரு சிக்கல் வாய்ந்தது. ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளையை இறவாப் புகழுடைய கதை மாந்தராகப் படைத்துவிட்டார். வேதநாயகர் நாவல் வழியினின்று இவர் வழி வேறுபட்டது என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். உண்மை நயம் (Realism) நேரிடைக் காட்சியாக வெளிப்படவும், மக்களின் பேச்சு மொழி வாழ்கின்ற மண்ணின் சூழ்நிலையைப் பின்புலமாக்கவும் செய்தது இவரது புதுமைப் போக்கு. கம்பர், ஷேக்ஸ்பியர், கோதே போன்றவரை ஏற்ற இடங்களில் இந் நாவலில் காண்கிறோம். ஆசிரியர் உண்மையிலே வேதாந்தி

யாக இருந்தாலும் இந்த நாவல் புனை கதைதான் என்பதை மறுக்க முடியாது.

வேதநாயகர் விட்ட பணியை மேலும் மாதவையா (1872-1925) தொடங்கினர். "பத்மாவதி சரித்திரம் (ஒரு தமிழ் நாட்டுக்கதை)" என்ற இவரது நாவல், இவர் காலத்திலேயே ஐந்து பதிப்புகள் விற்றுப்போயின என்ற உண்மையே இதன் சிறப்பை விளக்கப் போதுமான சான்ருகும். இவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நாவல் எழுதினர். சமுதாயச் சீர்திருத்தம் இவர் நெஞ்சைக் கவர்ந் திருந்ததை இவருடைய நாவல்கள் நன்கு வெளிப்படுத்தும். கல்வி அறிவு மிகமிகத் தேவை என்பதை வற்புறுத்துவார்; குழந்தை மனத்தைக் கடிவார். உண்மை நயம் வெளிப்பட ஆசிரியரின் துடிப்பு வாய்ந்த எளிய தமிழ் நடையும் பயன் பட்டது. நிகழ்ச்சிகள் மிக வேகமாக நடைபெற்றன. பெண்டிர் பற்றிய சிக்கலையே கதைக் கருவாகக் கொள்வது இக்காலப் போக்கிலமைந்த நிலை என்பது குறிப்பிடத்தக்க நிலையாகும்.

சீர்திருத்தமோ, ஒழுக்கமுரைத்தலோ தம் நோக்கமாகக் கொள்ளாத நடேச சாஸ்திரியார் (1859-1906) இன்ப மூட்டலைத் தன் கொள்கையாகக் கொண்டார். 'தெனாலி ராமன் கதைகள்', 'தென்னிந்திய நாடோடிக் கதைகள்', 'பாரசீகக் கதைகள்', 'ஷேக்ஸ்பியர் கதைகள்' போன்ற வற்றைத் தொகுத்துத் தந்தார். 'தீனதயாளு' போன்ற நாவல்களை எழுதினர். துப்பறிதலைப் புகுத்தித் தமிழ் நாவலில் 'புது வெடியோசை'யைக் கேட்குமாறு செய்தார். அதன் ஓசையை இன்றும் கேட்டவண்ணம் இருக்கிறோம்.

பொன்னுசாமிப் பிள்ளை 'கமலாக்ஷி', 'வீர சுந்தரம்', 'ஞானசம்பந்தம்', 'சிவஞானம்' போன்ற புதினங்களைப் படைத்தார். 1900-லிருந்து 1920-க்குள் வெளியான

மேற்கண்ட நாவல்கள் தமக்கென ஓர் ஒப்பற்ற வடிவம் உடையவை. மற்றவர் யாரும் பெருத வெற்றியை உரையாடலில் இவர் பெற்றுள்ளார். சுருக்கமாக நாடக அமைப்புப்போல மனக்கண்ணிற்கு இவர் அமைக்கும் கதைக் கரு சிக்கல் நிறைந்தது. மாந்தர் நல்லவராகவோ அல்லது கெட்டவராகவோ மட்டும் அமைவர். நாட்டுக்கோட்டைச் செட்டியார் வாழ்க்கை,தமிழ்நாட்டிற்கே வெளியே காணும் குடும்ப நெறி ஆகியவை பற்றி மிக விளக்கமாகச் செய்திகளைத் தொகுத்துத் தருவார். சைவ சித்தாந்தம் இவர்க்கு மிகவும் பிடித்தமான கொள்கை என்பதை நாவலின் அகத்தும், அதன் தலைப்பிலும் உணர முடியும். ரெயினால்ட்ஸ் வளர்த்த நெறியில் இவர் பாதை சென்றது. 1969 இல் கூட ரெயினால்ட்ஸ் நாவலைத் தமிழில் மொழிபெயர்க்கின்றனர் என்ருல், பொன்னுசாமிப் பிள்ளையைக் குற்றம் சொல்ல முடியாதன்ருே?

1901-லே வரலாற்றுக் கதைகளைத் தமிழில் நாவலாக எழுதத் தொடங்கிவிட்டனர். இங்ஙனம் பல வளர்ச்சி பெற்றிருந்தும் இடைக்காலத்தில் தமிழில் நாவலின் தரம் தாழ்ந்ததற்குரிய காரணத்தைத் தெளிவாகக் கூற முடியவில்லை. பொதுவாகவே முருகியல் உணர்வைக் காட்டிலும் பொழுதுபோக்கு உணர்வுக்குத் தீனிபோட நினைத்தகாரணம் நன்கு புலப்படுகிறது. வங்காள நாவல்கள் பலப்பல வடிவங்களில் தமிழில் வெளிவந்தன. தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாரும், முற்றுப்பெருத—'சந்திரிகையின் கதை'யை நாவலாக எழுதினர். அவருடைய சீடராம் வ. ரா. 'சுந்தரி'யை நமக்குத் தந்தார். இந்தப் பெண்ணின் கண்ணீரே கதையை வெளிப்படுத்தும் உணர்வாக விளங்குகிறது. மராத்தி, இந்தி, பிரஞ்சு, இரஷ்யன், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலிருந்து பல வேறுபட்ட துறை நாவல்களும் மொழிபெயர்க்கப்பட்டுக் குவிந்தன.

நாவல் உலகிலே 'கல்கி'யின் வர்லாற்று நாவல் தனிச் சிறப்புப் பெற்றது. வரலாற்றில் பல்லவர், சோழர் ஆகிய மன்னர்களையும் வரலாற்று நிகழ்ச்சியையும் அக்காலத்தில் புகழ்பெற்று வரலாற்றில் அழியா இடம் பெற்றுவிட்ட இடங்களையும் கலந்து கதை ஓட்டம் தடைப்படாது எழுதும் ஆற்றலைப் பெறுவது மிகக் கடினம். இவ்வழியில் சென்று பொது மக்களின் ஆதரவைப் பெற்றவர் கல்கி என்பதில் இரண்டுபட்ட கருத்து இருக்க முடியாது. 209 அத்தியாயங்கள் கொண்ட மிகப் பெரிய 'சிவகாமியின் சபத'த்தைக் கீழே வைக்க மனமின்றிப் படிப்பவர் எண்ணற்றோர் எனில் கல்கி நிலை மிகத் தெளிவு.

கல்கியைத் தொடர்ந்து பொதுமக்கள் புகழைப் பெற்றிருப்பவர் 'சாண்டில்யன்'. சோழ, பாண்டிய, ஈழ நாட்டிற்குள்ள வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு 'கன்னி மாடம்' போன்ற நாவல்களை எழுதினார். வெளிநாட்டார் தொடர்பினையும் சங்ககாலத்தையும் சேர்த்து 'யவனராணி' போன்ற பெரிய நாவல்களைப் படைத்தார். 'கல்கி'யின் பின்னர் 'வேங்கையின் மைந்த'னையும் பாண்டிநாட்டுக் 'கயல் விழி'யையும் விஜயநகர சாம்ராஜ்யத்தை 'வெற்றித் திருநக'ராகவும் 'அகிலன்' தம் தெளிந்த நடையில் காட்டி வெற்றி பெற்றார். வரலாற்று நாவல் என்பதே பெரிய நாவலாக அமைய வேண்டும் என்பதற்கேற்ப அமைந்தது 'வீரபாண்டியன் மனைவி.' அரு. ராமநாதன் ஜனநாதன என்ற ஒப்புயர்வற்ற கதை மாந்தனை மிகச் சிறந்த முறையில் படைத்துக் கதையில் பல திருப்பங்களை அவனைக் கொண்டே உருவாக்கி, எங்கும் பரந்த 'பரம் பொருள்' ஆக ஆக்கியுள்ளார். பாண்டிய வரலாற்றில் 'ஜெகசிற்பிய'னும் 'மணிவண்ண'னும் ஓரளவு பங்கு பெறுகின்றனர். பல வேறு வகைப்பட்ட வரலாற்றுக் கதைக் கருக்களைக் கையாள்கின்றார் கோவி. மணிசேகரன்.

துப்பறியும் நாவல்களை மேனாட்டுத் துறைமுகத்தில் ஏற்றித் தமிழில் இறக்குமதி செய்யும்போது சிற்சில மாற்றங்களைச் செய்தனர் ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் போன்றவர்கள். கோதை நாயகி அம்மாள், ஜே. ஆர். ரங்கராஜு போன்ரோர் மாலைமாலையாய் நாவல்களை எழுதிக் குவித்துச் சென்றனர். இவற்றை யெல்லாம் படிப்பதில் காட்டிய வேகத்தை மறப்பதிலும் காட்டினர் மக்கள்.

சமுதாயத் துறையிலும் 'கல்கி'யின் எழுதுகோல் வேகமாகச் செயல்பட்டது. 'தியாகபூமி', 'மகுடபதி', 'அலையோசை' போன்ற நாவல்கள் பல எழுத்தாளர்க்கு வழி காட்டின. 'தேவ'னின் படைப்புகள் நகைச்சுவையும், அனுபவமும் கலக்கும்வண்ணம் எழுதினர். 'அன்பின் ஆட்சி'யும், 'பெண்மை' எழிலும் கலக்க 'அகிலன்' எழுதுவதாகச் சொல்வர். 'பாவை விளக்கு'ப் போன்ற நாவல்களில் 'அகில'னின் உணர்வு மோதல்களை எளிதில் காணலாம். கதையும், கதை மாந்தரும், அவற்றால் புலப்படும் உருவகப் போக்குகளும் காண முடியும். சமுதாயக் குறைகளை வேகமும், சமுதாய நிலை பற்றிய உணர்வும் கலந்திட கண்ணன், 'மாயாவி', 'கலைமணி', ஆர். வி., சுப்பையா, நல்ல பெருமாள் போன்ற ஆசிரியர்கள் புதிய கருக்களைப் பயன்படுத்தினர். பெண்மை உள்ளத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளையும், குடும்பப் பாசத்தையும், மன அலைகளையும் அணு அணுவாகப் புலப்படும் வகையில் 'லக்ஷ்மி,' 'அநுத்தமா,' சூடாமணி, இராஜம் கிருஷ்ணன் ஆகியவர் எழுதுகின்றனர். காதல் போன்ற மெல்லுணர்வு களை நயம்படக் கலந்து பழைய பண்பாட்டையும், இன்றைய சமூகச் சிக்கலையும் சேர்த்து மென்மையாகக் காட்டுதற்க வழிகாட்டியவர்களுள் ஒருவரான 'மணிவண்ணன்' (நா பா.) தம் பழைய இலக்கிய அறிவை யும் சேர்த்துக் 'குறிஞ்சி மல'ரையும், 'பொன் விலங்'கையும்

படைத்தார். சமுதாயத்தின் சீர்கேடுகளை ஒழிக்கவேண்டும் என்று மாதவையா எண்ணியதுபோலப் புதிய அரசியல் உணர்வோடு அண்ணாத்துரை, கருணாநிதி, இராதாமணாளன், டி. கே. சீனிவாசன் போன்றவர்கள் சமூகச் சீர்திருத்த நாவல்களைக் கவர்ச்சி நடையில் மென்மை அலங்காரம் விளங்க எழுதினர். 'பார்வதி பி. ஏ', 'இரங்கோன் ராதா' போன்ற நூல்கள் வெளிவந்தன.

சமுதாய உண்மை நயத்தை நேர்காட்சியாகக் கண்டு உள்ளதை உள்ளபடி எழுதி உணர்வூட்டிய நெறியில் 'முருகன் ஓர் உழவன்' போன்ற நாவல்களை வெங்கடரமணியும், 'மண்ணாசை'யைச் சங்கரராமும், 'பொய்த் தே'வை க. நா. சுப்பிரமணியமும் 'இதய நாதத்தை'ச் சிதம்பர சுப்பிரமணியமும் எழுதினர்கள்.

நாவலின் களத்தையும் தனித்தன்மைகளையும் கண்டு உள்ளவாறே படம் பிடித்து விடுவதுடன், கதை நடக்கும் வட்டார மண்ணின் மணத்தையும், மக்கள் வடித்த சொல்லையும் குழைத்துத் தருவது நாவலின் புதுப்போக்கு. இத்துறையில் சண்முகசுந்தரம் கோவை வட்டாரத்தையே முழுக்க முழுக்கக் கொங்கு மணம் கமழும்வண்ணம் படைத்துள்ளார். யந்திரநாகரிகத்தின் கால்சுவடு படாத இடமெல்லாம் நடமாடிய 'நாகம்மாளையும்', 'அறுவடை'யையும், 'அழியாக் கோல'த்தையும் 'சட்டி சுட்ட'தையும் காட்டுவார். கள்ளங்கபடமற்ற உள்ளமும், புதிய நாகரிக வீச்சால் கிராம வாழ்வு அடையும் மாற்றமும் கொங்கு மண்ணில் வெட்டி எடுத்த சொற்செல்வமும் அழியா அழகு தருபவை. 'தஞ்சாவூ'ரினைப் பின்னணியாகக்கொண்டு, 'காவேரி' ஆற்றிலே மிதக்கும்வண்ணம் செய்வதில் ஜானகிராமன் தனித்திறமையைக் காட்டுகிருர். சமுதாயச் சிக்கலை 'மோக முள்'ளாகவும், 'அம்மா வந்தாள்' ஆகவும் காட்டத் தயங்கவில்லை. திருநெல்வேலியை இரகுநாதன்

'பஞ்சும் பசியும்' என்று காட்ட, ஹெப்சிபா ஜேசுதாசன் 'புத்தம் வீடாக'வும், நீல பத்மநாபன் 'தலைமுறை'யாகவும் நாஞ்சில் வட்டாரத்தைக் காட்டுவர். வட்டாரச் சூழ்நிலையும் மொழியும் படிப்போர்க்கு விளங்கும்போது நாவலை நன்கு சுவைத்துப் பயில வாய்ப்புண்டு.

நகர்ச்சூழ்நிலையைப் பின்னணியாகக்கொண்டு சென்னையில் வாழும் நடுத்தர மக்களைச் சுற்றிச்சுற்றி எளிய நடையில் நாவல் எழுதினார் மு. வரதராசன். சமுதாயத் தீமைகளை, ஏற்றத் தாழ்வுகளைப் 'பெற்ற மனம்', "கள்ளோ காவியமோ?', 'அகல் விளக்கு', 'நெஞ்சில் ஒரு முள்' போன்ற புதினங்களால் விளக்கினார். கலை வாழ்வின் செம்மைக்காக என்ற குறிக்கோளை அறிவுறுத்தும் 'அறவாழி'கள் அவர் நாவலில் வருவது குறிப்பிடத்தககது. சிந்தனைச் செறிவு இவர் நாவலின் தனித்தன்மை எனலாம். டெல்லி போன்ற நகர்ப்புறங்களைக் காட்டி மனித வாழ்க்கையின் நிலையைக் குத்திக் காட்டும் முறையில் இந்திரா பார்த்தசாரதி 'தந்திர பூமி'யைக் காட்டுகின்றார். சமுதாயக் கண்ணோட்டத்தில் பால் உணர்வும பொருளியலும் கலந்து மோதும காட்சியைப் புலப்படுதத்தி ஜெயகாந்தன எழுதிய 'பாரீசுக்குப் போ'-பழைய மரபிலே புதிய நெறியைக்காட்டும் சுந்தரராமசாமி எழுதிய 'புளியமரததின் கதை'-சமுதாய மாற்றத்தை மறைமுகமாகப் படம் பிடிதது்க்காட்டும். இராமாமிருதத்தின் நாவல்கள் இனந்தெரியாத நடையோட்டத்தில் ஏதோ ஒரு உலகிற்கு அழைததுச் செல்லும். இங்ஙனம் உண்மை நயம், இயற்கை நயம், மனப்பதிவு, நனவோடை ஆகிய புதுப்புது நெறிகள கலந்தும் கலவாமலும் தமிழ்நாவலில இடமபெற்றுள்ளன.

தமிழ் நாவல் பற்றி அறிதற்கு ஏற்ற திறனாய்வு புத்தகஙகள் இன்னும் தோன்றவில்லை. இன்று வெளி வந்துள்ள க. நா. சு. அவர்களின் 'முதல் ஐந்து தமிழ்

நாவல்கள்' (1957), நாவல் விழாக் கருத்துரைகளின் தொகுப்பான 'தமிழ் நாவல்கள்' (1966), கி. வா. ஜகந்நாதனின் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' (1963), கைலாசபதியின் 'தமிழ் நாவல் இலக்கியம்' (1968) போன்ற புத்தகங்கள் ஓரளவுதான் துணைபுரிவன. 'தீபம்' இதழிலும், 'தாமரை' இதழிலும் வெளிவந்த கட்டுரைகளும் இந்தத் துறையின் திறனாய்வு வளர்ச்சிக்கு உதவக் கூடியவை.

தமிழ் இதழ்களின் தேவையால் இன்று நாவல்கள் பெருகியுள்ளது உண்மையே. ஆயினும் அவற்றைத் தரம் பிரித்துக்காட்டுவதற்கு வேண்டிய நெறிமுறைகள் இன்னும் உருவாகவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆசிரியர் பெயரைக்காட்டிப் பல நாவல்களையும் அடக்கிட முனைவர் சிலர். 'குணம் நாடிக் குற்றம் நாடும் நிலை' குறைவு எனவே, தமிழில் நாவல் வளர்வதற்குப் பழைய நாவல்களில் சிறந்தவற்றைப் பயிலவேண்டும். அங்குக கையாண்டுள்ள கலை நுணுக்கங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். புதிதாகப் படைப்பதற்கு முயலவேண்டும். நாவல் இலககியத்தில் 'முன் பற்றி'ச் செல்லவேண்டும். சமூகம் பரந்து கிடக்கிறது ஏராளமானவரின் 'திறந்த' வாழ்க்கை நாவல்களின் எதிர்காலச் செல்வம். புதிய நாவல்கள் தமிழில் எழுதற்குரிய நம்பிக்கைக்குரிய பல அறிகுறிகள் தோன்றியவண்ணம் உள்ள நிலை மகிழ்ச்சிக்குரியது.

★

கமலாம்பாள் சரித்திரம்

—ஒரு பார்வை—

டாக்டர் தா. வே. வீராசாமி, எம் ஏ., பிஎச்.டி.

தமிழில் வெளியான இரண்டாவது நாவல் 'கமலாம்பாள் சரித்திரம்'. இதன் ஆசிரியர் இராஜமையர். இவர் இளமையிலே துறவு மனப்பான்மை கொண்டிருந்தாலும் அக்கால மக்கள் வாழ்வைப் புறக்கணிக்காமல் அப்படியே வடித்துத் தருவதில் நன்கு வெற்றி பெற்றுள்ளார்.

புதிய இலக்கியப் போக்குகளில் கண் வைத்திருந்த பாரதியார் இவரைப் பற்றிக் கூறும்போது, 'நாவல் எழுதுவதில் உண்மையான திறமையைக் காட்டி இருக்கிறார்'என்று சொன்ன வாக்குப் பொய்க்கவில்லை. மதுரை மாவட்டத்தில் வத்தலகுண்டில் பிறந்த இராஜமையர் தம் நாவலில் 'மதுரை ஜில்லாவில் சிறுகுள'த்தில் வாழ்ந்த மக்களைப் பற்றியே எழுதியுள்ளார். மேனாட்டுக் கவிகளில் ஷெல்லி, பைரன், கீட்சு போன்றவர்களிடம் ஈடுபட்ட இவர் தமிழ நாட்டுக் கவிஞர்களில் புகழேந்தியிடமும் சிறப்பாகக் கம்பனிடமும் தன் மனதைப் பறிகொடுத்த நிலையை நாவலின் பல இடங்களில் பார்க்கிறோம். தாம் எழுதிய கட்டுரைகளில் அரசியல் உணர்வைக் கலந்ததற்காக ஆங்கில அரசினரால் கைது செய்ய நினைத்தும், அவர்கள் பிடியில் சிக்காமல் 26 ஆம் வயதிலேயே மறைந்தார். வாழ்ந்த வாழ்க்கையின் அளவு சிறிது

எனினும் 'கமலாம்பாள் சரித்திரம்' ஒன்றை மட்டும் நாவலாக எழுதியதால் இலக்கிய உலகில் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளார். எப்போது எடுத்துப் படித்தாலும் புதுப் புது அழகை வெளிக்காட்டும் 'பொன் மான்' இது. ஒரு முறை படித்தால் என்றும் நினைவில் இருக்கும்வண்ணம் 'கமலாம்பாள் சரித்திரம்' நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளது. கனிந்து திரண்ட கதை மாந்தரைப் படைத்தும் தமிழில் நாவல் கலை வெற்றி பெறுமாறு தொடக்கத்திலே செய்துவிட்டார்.

'கமலாம்பாள் சரித்திர'த்தில் கதை நேரிய முறையில் மிக விரைவாகச் செல்கிறது. கதையில் 'சிக்கல்' என்ற தொல்லையே படிப்போரை அச்சுறுத்துவதில்லை கதையின் போக்கு சிறுகுளத்திலிருந்து சென்னை, சிதம்பரம், புதுச்சேரி, காசி ஆகிய ஆரவார நகரங்களுக்குச் சென்றாலும் கடைசியில் அமைதியான சிறுகுளத்திலேயே வந்து அடங்குகிறது. மனித சமுதாயம் பெரியது, விரிந்தது. சின்னஞ் சிறு கிராமம் முதல் பென்னம் பெரிய நகரம் வரை எங்கும் மக்கள் கூட்டம். அதனதன் அளவிற்கேற்பச் சிறிதும் பெரிதும் ஆகக் கூடிக் கிடக்கின்றது. அதில் தனி மனிதர், குடும்பம் போன்றவை கொதிக்கும் நீர்க் கலத்தில் இட்ட சருகுபோல் மேலும் கீழுமாய்ச் சுழன்றுகொண்டே இருக்க உண்மையின் வடிவம் கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்படும்.

பழைய சமுதாயத்தைச் சேர்ந்த சிறுகுளத்தின் 'பெரிய வீடு' புதுமை வர்ணம் மங்கிப் போய்ச் சிறிது சிறிதாக வெடிப்புக்கு இடம் கொடுக்கிறது. முத்துஸ்வாமி ஐயர் எவ்வளவு முயன்று பார்த்தும் அந்தப்

பெரிய வீட்டின் கட்டுக்கோப்பை அவரால் பாது காக்க முடியவில்லை. இயற்கையிலே அவர் நல்லவர் தான். சிற்சில சமயங்களில் அவரும் தன்னிலையி லிருந்து மாறுபடுவார். கலியாணப் பந்தலிலேயே சகுனத் தடை நேர்ந்தாலும் குப்பிப் பாட்டியிடம் இனிமையாகப் பேசி அமைதி காணுவார். அதே சமயத்தில் தன் மனைவி பற்றித் தீட்சதரும் சுப்பம் மாளும் சொன்ன பழிச் சொல்லை நம்பும் அளவுக்கு மாறி விடுவார். பிள்ளையை இழந்த துக்கத்தில் இராமனைக் காட்டுக்கு அனுப்பிய தசதரன்போல் புலம்புவார். சச்சிதானந்தரின் கருணை பெற்று ஒளிமயமான இன் பத்தில் மிதப்பார். இவ்வாறு மாறும் தனி மனிதனின் ஆற்றல் சமுதாயப் போக்கின் பெரு வெள்ளத்தை ஒரு நொடி நேரம்கூடத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. பாறையில் மோதிய பாவையைப் போலப் பெரிய வீட்டின் கதை மாந்தர் ஒவ்வொரு திக்கிலும் நிலை இழந்து தவிக்கின்றார்கள். இன்ப இசைபாட நினைத்தாலும் பனியால் நனைந்து என்ற சந்திரமதியின் புலம்பல்தான் வெளிப்படுகிறது. இறுதியில் பெரிய வீடு ஒன்றுசேர்ந்தும் பழைய பொலிவை மீண்டும் பெறமுடியவில்லை. கெட்டகுடி ஒட்டினாலும் முன்னைய வலிமையைப் பெற முடியாது என்பதை உணர்த்தாமல் உணர்த்திவிட்டார்.

தமிழ் நாட்டில் பிறந்த மக்கள் நாள்தோறும் சுற்றித் திரிந்த தோட்டத்தையும், துரவையும், ஊரை யும், கோயிலையும், ஆற்றையும், கடற்கரையையும் நம் கண் முன் கொண்டு வந்து ஆசிரியர் நிறுத்தும்போது இவற்றை யெல்லாம் நாம் இப்படிப் பார்க்கவில்லையே

என நினைக்கும்வண்ணம் காட்டுகிறார். பொன்னம்மாளும், குப்பிப் பாட்டியும், சுப்பம்மாளும் நாளும் நாளும் நம் வீட்டிலும் தெருவிலும் பார்ப்பவர்கள் தாம். அவர்களை மற்றவர்கள் பழிக்கும்போது ஆசிரியர் பயன்படுத்திய சொற்களை நாமும் கேட்டுக் கேட்டுப் பழகிய சொற்களாகவே இருக்கின்றன. இவ்வாறு ஆசிரியர் காட்டும் இடங்கள், நம்முன் நிறுத்தும் கதை மாந்தர், அவர்கள் கூறும் சொற்கள் ஆகிய யாவும் நம்மோடு ஒட்டி உறவாடி நம் நெஞ்சைத் தொட்டு அணைப்பவை. இவற்றையெல்லாம் கண்டு சுவைத்த சுவைஞர்களிற் சிலர் நாவல் வழியில் 'இராஜமையரின் வழி தான் சிறந்தது, இலக்கிய பூர்வமானது' என்றும், 'தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களில் சிலர் இவ்வழியையே பின்பற்றுகின்றனர்' என்றும் கூறுவார்கள்.

உலகில் காணும் பலவகைச் சுவைகளுக்கும் நாவல் இடம் தந்து அவற்றைப் படிப்போர்க்குச் சுவையோடு படைக்க வேண்டும். எந்த நாவல் இக்கலையில் வெற்றி பெறுகிறதோ அது, காலத்தின் வெள்ளத்தை எதிர்த்து உலகத்தின் சிறந்த நாவல் வரிசையில் ஒன்றாக இடம் பெறும். 'கமலாம்பாள் சரித்திரத்'தில் பல சுவைகள் மாறி மாறி வெளிப்படுகின்றன.

அப்பாவி ஆசிரியர்கள் குறும்புக்கார மாணவர்களிடம் சிக்கி மைக் கோலம் பூணும்போதும், "வாத்தியார் சாகாரா? வயிற்றெரிச்சல் தீராதா" என்ற பாட்டைக் கேட்கும்போதும் அக்காலப் பள்ளிக்கூடத்தின் அவலச்சுவை நன்கு புலப்படுகிறது. ஒரு பெரிய வீட்டில் நடக்கவிருந்த கலியாணம் மேலப் பாளையம், தென்கரை, வீரபாண்டியம், குள்ளப்புரம் ஆகிய

ஊர்களில் வாழ்ந்த மக்கள் மனத்தில் எத்தனை வகை உணர்வுச் சுவைகளைத் தந்தது எனச் சிறு சிறு நிகழ்ச்சிகளால் உணர முடிகிறது. சிறுகுளத்தில் நடந்த திருமணக் காட்சி, இளைஞர்களின் கேலியும் கிண்டலும் கலந்த பேச்சு, கலியாண முடிவில் பொங்கும் கண்ணீர் ஆகிய இருவகைப்பட்ட சுவைக் கலப்பு என்றும் மறத்தற்கரியது. தன் கணவனுக்குப் பாலில் வசிய மருந்து கலக்கித் தர வரும் பொன்னம் மாளின் நடையில் இராமன் முன் வந்த 'வஞ்சமக'ளாம் சூர்ப்பநகையையே பார்க்கிறோம். வைத்தியநாதன் சிறு குளத்திற்கு வந்து சடுகுடு விளையாடி, லட்சுமி (மீனாட்சி) மீது மோதி, அன்று வரை எல்லோராலும் பெரிய மனிதராக மதிக்கும்வண்ணம் வாழ்ந்த முத்துஸ்வாமி ஐயர்மீது அதுவரை யாருமே கூறத் துணியாத வசைமொழியைப் பொழியும்போது 'பெரிய வீடு' வெடிக்கும் வெடிப்பொலியைக் கேட்கி றோம். புத்திர சோகத்தில் கமலாம்பாளும் முத்து ஸ்வாமியும் அழியாத அவலத்தின் சுவையைப் பிழிந்து காட்டுகின்றனர். அவர்கள் பேச்சும் செயலும் துன்பக் கவிதையாகவே மாறி விடுகின்றன எனலாம். அச் சோகத்தின் எல்லையாகச் சுப்பிரமணிய அய்யர் சாவும் அவர் மனைவி பொன்னம்மாளின் பைத்திய வடிவமும் விளங்குகின்றன. சிதம்பரத்திலே ஆருத்ரா தரிசன பக்திச் சுவையின் இடையே, கமலாம்பாள் பற்றிய அவல மொழி காதில் விழ உலகையே வெறுத்து ஒதுக்கும் கசப்புச் சுவையும் நெஞ்சின் குழியிலேயே தங்கிவிடுகிறது. இதற்கு நேர்மாறாக விசுவரூப தரிசனத்தைப் பார்க்கும்போது உலகமே அமைதியின் அணைப்பிலே மகிழ்ந்து, தவழ்ந்து

விளையாடும் 'சாந்தி'யைக் காண்கிறோம். தாயுமானவரும், மணிவாசகரும் மாறி மாறி வருகின்றனர். இதன் பின்னர் நாவலில் இதுவரை தலைகாட்டாமல் இருந்த அம்மையப்ப பிள்ளையின் வருகையும் கள்ளப் பண்டாரத்தின் யமகக் கவிதையும் நகை அரும்புதற்கு வழி வகுக்கின்றன. எதிர்பாராத விதமாய்க் கதை மாந்தரிடையே பிரிவு, இரயில் விபத்து, கனவு போன்றவை அடுக்கடுக்காகத் தோன்றி வியப்பினுள் ஆழ்த்துகின்றன. கண்டாரும், கேட்டாரும் நடுங்கும்வண்ணம் காட்டுராஜாவாக வாழ்ந்த பேயாண்டி காசியிலே 'காராம் பசு'வாக மாறி நிற்கும் காட்சியைக் காணும்போது நிகழாததும் நிகழுமோ என்ற ஐய உணர்வுக்கு ஆளாகிறோம். இறுதியாகக் கம்ப ராமாயணக் கவிதைப் பெருக்கில் மூழ்கி இராமனைக் கண்ட சீதைபோல் கதைத்தலைவி கமலாம்பாள் இராமத் தியானத்தில் மகிழ்வதைக் காணும் கவிதை இன்பச் சுவையில் நாவல் முடிகிறது.

இங்ஙனம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சுவைகள் நாவலில் அடுத்தடுத்து வரும்போது நாவலின் சிறப்பு மேலும் மேலும் வளர்ந்து செல்கிறது.

கற்றறி மூடத்தனத்தின் கைவிளக்காக ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளையின் வடிவத்தில் ஒரு சிறு புள்ளியைக் கூட நம்மால் மறக்கமுடியாதது போலவே பேயாண்டித் தேவனின் உலா மூவருலாவையும், பிற தேவருலாவையும் மிஞ்சி இலக்கிய முதன்மை பெற்று விடுகிறது. முத்துஸ்வாமி ஐயரின் மகளுடைய கம்ப ராமாயண அறிவு கதையில் பல இடங்களில் வெளிப் படுகிறது; குறிப்பாக ஒரு நாள் இரவு சென்னையில்

அந்த நூலை எடுக்கும்போது இந்திரஜித்தை இழந்த இராவணன் புலம்பலைப் படிப்பது நினைதற்குரியது. உடனே காணமற் போன குழந்தை நடராஜனைக் குறித்துத் தன் தகப்பனரும் இப்படித்தானே அழுதார் என்று கூறும்போது கம்பன் காவியம் 'வசன காவியமாம் கமலாம்பாள் சரித்திரத்'திற்குக் கை கொடுப்பதை நன்குணர்கிறோம்.

பேயாண்டித் தேவன் 'கோலாகலத்துடன் (வண்டிக் கூடாகிய) பல்லக்கின்மேல் கம்பீரமாய் உட்கார்ந்து கஞ்சா, புகையிலை முதலிய வாசனைத் திரவியம் சகிதம் தாம்பூலம் தரித்துக்கொண்டு பவள வர்ணமான தனது திவ்ய மங்கள எச்சிலைக் கத்தி பிடித்த வீரர்கள்மேல் தாராளமாய்த் துப்பியதைக் காணும்போது இராஜமையர் ஆங்கில அரசின்மீது உமிழ்ந்த வெறுப்பைக் காண்கிறோம். இவ்வெறுப்பே பின்னர் ஆங்கில அரசால் இராஜத்துரோகக் குற்றச் சாட்டைச் சுமத்தும்படி பிரபுத்த பாரதப் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளாய் வெளிவந்தன எனலாம்.

பொதுவாக நாவல் அமைப்பில் கதைக் கூற்று, உரையாடல், வருணனை, கருத்துரை, நனவோட்டம் ஆகிய ஐந்து பிரிவுகளைக் காணலாம். இதில் கதைக் கூற்று 'ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா' என்ற பழைய கால முறையில் அமையும். தொடக்க கால நாவல்கள் இம்முறையைப் பின்பற்றியே முளை விட்டன. வேதநாயகம் பிள்ளையின் இரு நாவல் களிலும் ஆடம்பரமான தொடர்கள் தோரணமாக விளங்க நாவல் திறப்பு விழா நடைபெறுகிறது.

ஆனால், 'கமலாம்பாள் சரித்திரம்' கூற்று முறையில் தொடங்கி வெளிப் பகட்டின்றி அமைதியாகக் காவிரி போல் நடையிட்டு 'மதுரை ஜில்லாவில் சிறுகுளம் என்ற ஒரு கிராமம் உண்டு' என விரிகிறது. எனினும் இது பழங்கதை சொல்லும் பாங்கிலிருந்து மாறவில்லை என்பதை நாலைந்து தொடர்களைப் படித்ததுமே உணர முடிகிறது.

இராஜமையர் கையாண்ட உரையாடல் பேச்சு மொழியையே பெரிதும் தழுவிச் செல்கிறது. உண்மை நயத்திற்குப் புறம்பாக அவர் எங்கும் செல்லவில்லை என்பது பெரும்பாலும் ஒத்துக்கொள்ளக் கூடிய கருத்தாகும். இந்நாவலில் வரும் சிதம்பர ரகசியம் (அத்தியாயம் 30) ஆசிரியர் கூற்றுப்படியே சின்மய சொரூபத்திலும், ஞானானந்த வல்லமையிலும் நம்பிக்கை கொண்டவரே படிக்கமுடியும். ஆனால், நாவலின் தொடக்கத்திலேயே வரும் ஸ்திரீ புருஷ ஸம்வாதம், வாத்தியாரும் ஜோசியரும், வம்பர் மகா சபை, திரிவிதம் துஷ்ட வட்சணம் போன்ற பல அத்தியாயங்களில் காணும் உரையாடல் யாவரும் படித்துச் சுவைக்கும்படி அமைந்துள்ளது. அந்தணர் வீட்டுத் தமிழை உள்ளது உள்ளபடியே உயிரோடு வடித்துத் தருகிறார் கமலாம்பாள் ஆசிரியர். அட்டகாசமாகப் பேசும் பேயாண்டித் தேவன் பேச்சையும், சுப்பாத்தேவனின் மிரட்டல் பேச்சையும் கேட்கும் போது மதுரை வாழ் தேவர்களின் மொழி அழகையும் ஆசிரியர் தம் உரையாடலில் நன்கு தருகிறார்.

சிறந்த நாவல்களில் வருணனை குறைவாகவே காணும். தற்கால நாவல்களில் இப்பகுதி சுருக்கமாக

அமையினும் கமலாம்பாளில் பல வருணனைப் பகுதிகள் சுருங்கிய அளவில் உள்ளன.

பேயாண்டித் தேவனின் கொள்ளைக்குக் கொலு மண்டபமாய் விளங்கிய தோணி மலைக் குகையும், காட்டிலே இயற்கை தந்த அமைதிக்கிடையே கொலையின் கோரத்தைக் காட்டும் பத்ரகாளி கோயிலும், நாட்டிலே தில்லை நடராசன் கோயிலிலே காணும் பாழ் மண்டபமும், சீறிப் பெருக்கெடுத் தோடிப் பாலத்தை உடைத்துப் பல உயிர்களைக் குடிக்கும் வெள்ளப் பெருக்கும், கம்பீரமாக அரசன் பவனி வருவதுபோலச் சென்று கடலில் கலக்கும் கங்கையும் கமலாம்பாள் சரித்திரத்தில் அளவாக வருணிக்கப் பெற்று, அழியாக் கோலம் கொள் கின்றன. காப்பியங்களுக்குரிய உருவகங்களும், கற்பனைப் படைப்புகளும், இயற்கை வருணனையின் இடையே மெய்ப்பொருள் உணர்வும் மிதக்கக் காண்போம். கம்ப ராமாயணமும், நள வெண்பாவும், குறளும், தேவாரமும், திருவாசகமும், தாயுமானவர் பாடலும் பயின்று பயின்று திளைத்த கவிதைச் சுவை யும், இளமைத் துடிப்பும் கலந்திட இராஜமையரின் வருணனை நாவலுக்குத் தனி வளமூட்டுகிறது.

கதைக் கூற்றிலே ஆசிரியர் தம் கருத்துரை யையும் ஆங்காங்கே கலக்கத் தவறவில்லை. இங்ஙனம் இடையே ஆசிரியர் தலையைக் காட்டுவது வெறுப்பைத் தரும். ஆனல், கமலாம்பாள் வீட்டிற்கு நெருப்பு வாங்க வந்த இடத்தில் இவ்வளவு காலம் கௌரவக் குறைவாக நிறுத்தி வைத்த குற்றத்தை இதைப் படிப்பவர்கள் தயவுசெய்து மன்னிக்கவும். எப்படி

கூனி, சூர்ப்பனகை முதலிய உத்தம ஸ்திரீகள் இல்லாவிடில் ராமாயணம் நடந்திருக்கமாட்டாதோ அப்படியே நாம் எழுதிவரும் அற்புத சரித்திரமும் சுப்பம்மாள் இல்லாவிட்டால் நடந்திருக்கமாட்டாது. ...ஒவ்வொரு வீட்டிலும் போட்டது போட்டபடியே சுப்பு, சேஷி, வேம்பு, நாகு, அம்மாப் பொண்ணு, அலமேலு, நாணி, சாச்சி, சிட்டம்மா, எச்சி, பாப்பு (நம்முடைய ஸ்திரீகள் பெயர்கள்தான் எவ்வளவு அழகாயிருக்கின்றன) முதலிய எல்லாப் பெண்டுகளும் பட்டாளம் பட்டாளமாகப் புறப்பட்டு விட்டார்கள் என்பன போன்ற இடங்களிலெல்லாம் ஆசிரியர் குறுக்கிடினும் இவற்றிடையே காணும் எள்ளல் குறிப்பு அக்குறைபாட்டை மறைத்துவிடு கிறது. சில சமயங்களில் கதை மாந்தர்மீது நம் கவனம் பதியும்வண்ணமோ அல்லது பழங்கதையை நினைவூட்டும்வண்ணமோ அக்குறிப்பு வரும்.

நாவல்களில் காணும் கதை மாந்தர் சக்கரவர்த்தி யின் திருமகனோ, அரசனுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்பெற்ற கோவலன் போன்றவர்களோ வருவதில்லை. நாவலில் வரும் ஒவ்வொரு மனிதனும் தனித்தனி மனிதன் ஆவான். இத்தகைய தனி மனிதர்களிடையே மோதல் ஏற்படுகிறது. முத்து ஸ்வாமி ஐயர் வைத்தியநாதன் மோதல், கமலாம்பாள் பொன்னம்மாள் மோதல், சுப்பிரமணிய ஐயர் கோமள நாய்க்கனூர் ஜமீன்தார் மோதல் போன்ற வற்றால் உணர்கிறோம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறையுண்டு. நாவலின் தொடக்கம் முதல் கடைசி வரை சிறு சிறு பிழைகள் செய்தவண்ணம்

தன்னைத் தானே தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்குத் துணியும் முத்துஸ்வாமி ஐயர் முதலில் கமலாம்பாள் நடத்தை பற்றிச் சிறுகுளம் ஈஸ்வர சாஸ்திரியும், சுப்பம்மாளும் சொல்வதைக் கேட்டு நம்புகிறார். அதன் விளைவாகக் கொஞ்சும் கிளிகளைக் கூடப் பொறுக்க முடியாமல் கல்லை எடுத்து எறியும் அளவிற்குப் போகிறார். பிறன் மனையாளாகிய லட்சுமியைத் (மீனாட்சி) துரத்திக்கொண்டு வைத்திய நாதன் செல்வதும், அவளுடைய கணவன் என்ற காரணத்தால் சீனிவாசனைப் பிடித்துக் கட்டிக் கீழே தள்ளி மணலில் தேய்த்துக் கிள்ளிக் காயப்படுத்தினான். கோவிலிலிருந்து வரும் லட்சுமி (மீனாட்சி) மீது ஒரே மோதாய் மோதினான். உயர்ந்த நிலையிலிருந்த முத்துஸ்வாமி ஐயரை வாய்க்கு வந்தவண்ணம் திட்டினான். சுப்பிரமணிய ஐயரோ பெண்டாட்டியாத்தாள், பெரியாத்தாள் என இருப்பவர். இவ்வாறு தனிப்பட்டவர்களின் நிலையிலும், மோதலிலும், நாவலின் வலிமை வளர்ந்து செல்கிறது.

இங்ஙனம் மனிதருள்ளும், சமுதாயத்துள்ளும் தோன்றிய முரண்பாடு கதைமாந்தரின் படைப்பிலும் இடம் பெறுகிறது. மனிதனின் குறைகள் உண்மையில் குறைகளாகவே வெளிப்படுகின்றன. அவன் அடைகின்ற வீழ்ச்சி எவ்வகையிலும் மறையாமல் தோன்றுகிறது. அவன் பட்ட புண்ணிலிருந்து ஒழுகும் பச்சை இரத்தச் சுவடுகள் அழியாமல் கண்ணிற்கு நன்கு தெரியும். இவ்வாறு படைக்கப்பட்ட இக்கதை மாந்தர்களால் நாவலின் பெருமை தலைசிறந்து நிற்கிறது.

சிறுகுளத்திலிருந்து வெறுப்புடன் வெளிக் கிளம்பிப் பல ஊர்களிலும் சுற்றி அலைந்த பின்னர், வேதாந்தப் பார்வையுடன் மறுபடியும் சிறு குளத் திற்கே பூர்ண கும்பம் வரவேற்கக் 'கமலாம்பாள் சரித்திரம்' குடி புகுகிறது. இங்ஙனம் புகுந்த நாவலின் முடிவைப் பல கதை மாந்தரின் முடிவைக் கொண்டு பார்த்தால் இராஜமையரின் உள்ளம் நன்கு புலப் படும். கணவனுக்கு மருந்திட்ட பொன்னம்மாள் பைத்தியமாகிறாள். அண்ணனை நட்டாற்றில் கை விட்ட தம்பி அவலமாக மடிகிறார். ஊரையெல்லாம் திட்டியே வாழ்ந்த பாப்பா பட்டியகத்து வெட்டரிவாள் குப்பிப் பாட்டி நெடுநாள் வியாதியால் வருந்தி இறக் கிறாள். நல்ல குடும்பத்தைப் பிரித்து வெட்டிய சங்கரியம்மாள் தன் மகளைப் பறி கொடுத்ததுடன், தான் கெடுக்க நினைத்த கமலாம்பாள் நல்வாழ்வு பெற்றதைக் கேட்டுக் கிணற்றில் விழுகிறாள். வம்பர் மகா சபைத் தலைவி சுப்பம்மாள் கணவனையும், ஒரு கண்ணையும் இழந்து பிச்சை எடுத்துத் திரிகிறாள். பொய்ச் செய்தியைப் பரப்பி முத்துஸ்வாமி ஐயரைச் சந்தேகச் சுழலில் சிக்க வைத்த 'ஈஸ்வர தீட்சதர் குஷ்ட நோயில் சிக்குகிறார். இவ்வாறு ஆபத்துக் கிடமான அபவாத (கமலாம்பாள் சரித்திரத்திற்கு மற்றொரு பெயர்.)த்திற்கு அடிப்படையாய் அமைந்தவர் களெல்லாம் சாவு, வறுமை, நோய் என்னும் நரக வேதனையை அனுபவிப்பதைக் கண்முன் காட்டி 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற கொள்கையை இந்த நாவல் வற்புறுத்துகிறது.

பொதுவாகப் பார்க்கும்போது, 'கமலாம்பாள் சரித்திரம்' தமிழ் நாவல் இலக்கியத்தில் சிறந்த

இடத்தைப் பெற்றுள்ளது. தற்காலத் தமிழ் எழுத்தாளர்களில் உண்மை நயம் நாடுகின்றவர்க்கு நெறி காட்டுகிறது. சாகாத கதை மாந்தர்களைப் படைத்து இலக்கிய உலகில் ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளை போன்றவர்களைச் சிரஞ்சீவியாக்கியுள்ளது. மதுரை மாவட்ட மண்ணின் மணத்தையும், மொழியின் நயத்தையும் கலப்படமின்றி உணரச் செய்கிறது. இறுதியாகத் தனி மனிதன் அழியினும் சமுதாயம் அழியாது வாழும்; மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும் என்ற கொள்கைக்கு வழி காட்டுகிறது.

★

உ

கமலாம்பாள் சரித்திரம்

—:0:—

1

ஸ்திரீ புருஷ சம்வாதம்

மதுரை ஜில்லாவில் சிறுகுளம் என்ற ஒரு கிராமம் உண்டு. அந்தக் கிராமத்தின் நடுத்தெருவின் மத்தியில் 'பெரிய வீடு' என்று பெயருள்ள ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் கூடத்திற்கு அடுத்த ஓர் அறையில் கீழே ஒரு கோரைப் பாய் விரித்து, அதன்மேல் ஒரு திண்டு போட்டுச் சாய்ந்து கொண்டு ஒருவர் படுத்திருந்தார். அவர் நித்திரை தெளிந்து எழுந்திருந்தவுடன், "ஆ, சம்போ சங்கரா" என்று இரண்டு தடவை உரக்கக் கொட்டாவி விட்டுவிட்டு, காலைச் சொரிந்துகொண்டு, "அடியே, அடியே" என்று கூவினர். அப்பொழுது கூடத்தில் ரவிக்கை தைத்துக்கொண்டிருந்த அவர் மனைவி, இவர் குரல் காதில் கேட்டவுடன் இரண்டு முறை இருமிவிட்டு மௌனமாய் இருந்தாள்.

அதற்குள் படுத்திருந்த பிராமணர், "அடியே, உன்னைத் தானடி, அடியே" என்று மறுபடியும் அழைத்தார்.

அதற்கு அவர் மனைவி கோபித்தவள்போல பாவனை செய்துகொண்டு, "இங்கே அடியையும் காணோம், நுனியையும் காணோம்; அடியாம், அடிக்க வேண்டியதுதான். காசு கொடுத்துச் சந்தையில் வாங்கினல்போலத்தான். இனிமேல் அப்படிச் சொல்லுங்கள், வழி சொல்லுகிறேன்!" என்று பரிகாசமாய்ச் சொன்னாள்.

அவர், "சூ, சூ, எவ்வளவடா" என்று சொல்லிவிட்டு, "துரை மகளானாலும் பாரி உரியவனுக்கவள் ஊழியக்காரி" என்று சங்கீதம் பாடத் தொடங்கினர்.

மனைவி: "உங்களைப்போல அவன் ஒரு புருஷன்தானே, வேதநாயகம் பிள்ளையாம். கரியாவான். இனி வெள்ளைக் காரச்சிகளைப்போல் ஆரம்பிக்க வேண்டியதுதான்; அடியாவ தென்ன அடி! எங்களப்பா இரண்டு கரை வைத்தாண்டார்; எங்கள் பாட்டனர் மூன்று கரை வைத்தாண்டார்; சந்தையில் கொண்டுவந்து தள்ளி விட்டாப்போல் 'அடி' என்று கூப்பிடு வது என்ன ?'

அவர்: "மூன்று கரையாகப் போவானேன், அக்கரை, இக்கரை, குளக்கரை, மயானக்கரை ஒன்று, ஆக நாலு இருக்கிறதே!"

மனைவி : "எங்களுக்கு அதுதான் உண்டு ; நீங்களெல் லாம் ஸரபோஜி மஹாராஜா பிள்ளைகள்! உங்களுக்கும் எங்களுக்குமா, உங்களுக்கு நாங்கள் அடிமைதான்!"

அவர் : "அடியேன் செய்த பிழையை தேவரீர் பொறுத் தருளவேண்டும். 'சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராகிற் பொறுப்பது கடனே.' ஓய் ஸ்ரீமதி ராஜ ராஜேஸ்வரி கமலாம்பாள்! தயவுசெய்து கொஞ்சம் தீர்த்தம் சாதிக்க வேண்டும்!"

மனைவி : "எங்களாத்தில் தீர்த்தம் கொடுக்கிற வழக்க மில்லை."

அவர்: "கொடுத்தால்தான் உனக்குப் பிள்ளைக் குழந்தை பிறக்கும் பார்!" (அப்பொழுது கமலாம்பாள் ஆறு மாத கர்ப்பிணி.)

மனைவி : "ஆ! இருக்கிற பெண்ணைக் காப்பாற்றினல் போதாதா, பிள்ளைக் குழந்தை இல்லையென்று இப்பொழுது யார் உங்களிடம் சொன்னர்கள்?"

அவர் : "சொல்லாவிட்டாலும் மனதிற்குள்ளாவது இருக்குமல்லவா ? இப்பொழுது தீர்த்தம் கொண்டு வந்தால், இதற்கு மூன்ருவது மாதத்தில் ஆண் பிள்ளை பிறக்கும்."

மனைவி : "மூன்று மாதம் போவானேன்? இப்பொழுதே செல்லப்பிள்ளை நீங்கள் இருக்கிறீர்களே" என்று சொல்லி

விட்டு உள்ளே போய் ஒரு தட்டில், தேங்குழல், எள்ளு ருண்டை முதலிய பக்ஷணங்களை எடுத்துக்கொண்டு, கையில் பனிபோல் ஜிலு ஜிலென்று குளிர்ந்த தீர்த்தமும் கொண்டு வந்து தன் கணவர் படுக்கை அருகில் வைத்துவிட்டு, "அப்பா", என்று அவர்மேல் சாய்ந்து கொண்டாள். உடனே அவர் அவளை இறுகத் தழுவிக்கொண்டு பக்ஷணங்களைக் கணக்குப் பார்க்கப் புகுந்தார்.

பாதி சாப்பிட்டான பிறகு, தன் மனைவி பராக்குப் பார்த்திருந்த சமயங்கண்டு அவள் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, "ஏனடி, நிரம்பப் பெரிய மனுஷியாய் விட்டாயோ ? அடியே என்றால் ஸரபோஜி மஹாராஜா பிள்ளை என்று பரிகாசம் பண்ணுகிறாயா?" என்று கன்னத்தில் மெதுவாய் அடித்தார். அவள் சிரித்துக்கொண்டு, "இல்லை, இனிமேல் இல்லை" என்று சொல்லிவிட்டு, "மரியாதையாய்க் கையை விட்டுவிடுகிறீர்களா! இல்லாவிடில் கூச்சலிடட்டுமா?" என்றாள். அவர், "கூச்சலிடு, யார் வருகிறார்கள் பார்ப்போம்!" என்றதும் அவள் "ஐயோ", என்று மெதுவாகச் செல்லக் கூச்சலாய் இட, அவர், மறுபடியும் கன்னத்தில் மெல்ல அடித்துவிட்டு, கையை விட்டுவிட்டார். பின் இரண்டு பேருமாய் அதிக சுறுசுறுப்புடன் பக்ஷணங்களைத் தின்றனர்.

மனைவி : "இப்படி பக்ஷணம் தின்றுகொண்டிருந்தால் நம்முடைய குட்டி கல்யாணிக்கு எப்பொழுது கல்யாணம் செய்கிறது ?"

அவர் : " 'யாரே அழகுக்கு அழகு செய்வார்?' அவளே கல்யாணி ஆகிவிட்டதே. இனி அவளுக்குக் கல்யாணம் எதற்கு ?"

மனைவி: "உலகம் புத்தியற்ற உலகம்; ஆயிரம், ஐந்நூறு என்று செலவழித்துக் கல்யாணங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். சுருக்கமாகக் 'கல்யாணி' என்று பெயரை வைத்துவிட்டு இருந்துவிடலாமே! நமக்குத் தெரிந்த இந்தப் பரம ரகசியம் ஒருவருக்கும் தெரியவில்லை பாருங்கள்!"

அவர் : "கல்யாணி எங்கே கண்ணிலேயே காணோம்," என, "அவள் அடுத்தகத்துக்குப் போயிருந்தாள்," என்று

சொல்லிவிட்டு அந்தம்மாள், "கல்யாணி" என்றழைத்தாள். அந்தக் குழந்தை, "எங்களண்ணு அழைக்கிருர்கள்" என்று தன் தோழிகளிடத்தில் விடை பெற்றுக்கொண்டு புஸ்தகமும் கையுமாய் வந்து நின்ருள்.

"ஒரு காரியம், 'புஸ்தகம் ஹஸ்த பூஷணம்' என்றபடி நமது கல்யாணி, அண்ணுவைக் காணும்போதெல்லாம் கையில் புஸ்தகமில்லாமல் இருக்கிறதில்லை" என்ருர் அவர். அதற்கு அச்சிறுமி, "இல்லை, அண்ணு! படித்துக்கொண்டு தானிருந்தேன், மீனுட்சியை வேண்டுமானுல் கேளுங்கள் அண்ணு" என்ருள். அதற்கு அவர் அவளைப் பரிசோதனை செய்யும்பொருட்டு, "ஓராங்கல்படி' என்று ஆடிக்கொண் டிருந்தாயே, எனக்குக் கேட்கவில்லையா?" என, "இல்லை அண்ணு, நிச்சயமாக வாசித்துக் கொண்டுதான் இருந்தேன்" என்ருள். அவர், 'புஸ்தகத்தை அப்படியே கொடு' என்று வாங்கி, அது தான் நல்ல பாட்டுகளாய்த் தெரிந்தெடுத்து, உரையுடன் சேர்த்துச் செய்த கம்பராமாயணச் செய்யுள் திரட்டாயிருக்கக் கண்டு, "கடைசியில் எந்த இடத்தில் நிறுத்திருய்?" என்று கேட்க கல்யாணி, "சூர்ப்பனகை ராவணனிடத்தில் போய் முறையிட்டுப் போர் மூட்டுகிற இடம்" என்று சொன்ஞள்.

அவர் (தன் மனைவியைப் பார்த்து), "ஸ்திரீகள்தான் உலகத்தில் கலகத்திற்கெல்லாம் காரணம். சீதை யில்லா விட்டால் ராமாயணம் ஏது?"

மனைவி : "ஆமாம், ஸ்திரீகள் பேரில் ஆசை வைத்துப் புருஷர்கள் கெட்டலைந்தால் அதற்கு ஸ்திரீகள்தான் காரணம்; ராவணன் கெட்டது சீதையினுலேயா, அல்லது தன் கொழுப்பினுலேயா?"

அவர் : "அது போகட்டும்; இன்ஞெரு விசேஷம் பார், ராமாயணப் போருக்கு முதல்முதல் காரணமாய் இருந்ததும் பெண், அதை நடுவில் நின்று மூட்டிவிட்டதும் பெண்-சூர்ப் பனகை. இல்லையா? இதிலேதான் வால்மீகியின் சாமர்த்திய மும் முக்கியமாய் விளங்குகிறது. 'நாரதர் கலகப்பிரியர்' என்று சொல்வது வழக்கம்; ஆனுல் நாரதர்கூட இவ்வளவு

பெரிய யுத்தம் உண்டு பண்ணினதில்லை. இவ்வளவு ஜாலமும் மோசமும் அவர் கனவிலும் கண்டறியார். அவர் யாரிடத்தில் போய் சண்டை மூட்டினாலும் சூர்ப்பனகை ராவணனுக்கு உண்டுபண்ணின அவ்வளவு கேடு அவர் செய்ததே யில்லை. பத்து நாரதர் சேர்ந்தால் ஒரு சூர்ப்பனகை ஆகாது!''

மனைவி : ''அப்படியே இருக்கட்டும். உலகத்தில் புருஷர் கள் எல்லாம் ராவணனையும் கும்பகர்ணனையும்போலிருந்தால், ஸ்திரீகள் எல்லாம் சூர்ப்பனகையாக இருக்கட்டுமே!''

அவர் மேல் சமாதானம் ஒன்றும் சொல்லத் தோன்றாத தினால் குழந்தை கல்யாணியைப் பார்த்து, "உனக்கு ராமனைப் போல் புருஷன் வேண்டுமா ? லட்சுமணனைப் போல வேண்டுமா ?'' என்றார். கல்யாணி வெட்கத்துடன் தலை குனிந்து மௌனமாயிருந்தாள். அப்பொழுது அவர், "ராமன் கருப்பு, லட்சுமணன் சிவப்பு; ராமன் அப்பாவி, அவனுக்கு அழத்தான் தெரியும்; லட்சுமணன் நல்ல தீரன். பார், 'ராமனைக் காட்டுக்குப் போ' என்றதற்குமுன் மரவுரியும் கையு மாய்ப் புறப்பட்டுவிட்டான். லட்சுமணனோ தைரியமாய் எல் லாரையும் கொன்று விடுகிறேன் என்று வில்லைத் தூக்கினான். ராமனுக்கு லட்சுமணன் எவ்வளவோ திறம். எல்லாவற்றை யும் யோசித்து சீக்கிரம் பதில் சொல். நான் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று பரிகாசம் செய்தார்.

கல்யாணி, "என்ன அண்ணா! இதற்குத்தான் கூப்பிட்டீர் களாக்கும்! மீனாட்சி கூப்பிடுகிறாள், நான் போகிறேன்'' என்று புறப்பட, உடனே அவர், ''இந்தாடி குட்டி, நீ ராமனையும் கலியாணம் செய்து கொள்ள வேண்டாம், லட்சுமணனையும் கலியாணம் செய்து கொள்ள வேண்டாம்; அவர்கள் இருவருக் கும் கலியாணம் ஆகிவிட்டது. அதற்காக நீ ஏன்—'' என்று சொல்லி முடிப்பதற்கு முன், "முத்துஸாமி, முத்துஸாமி'' என்று வாசல் கதவை யாரோ தட்ட, முத்துஸ்வாமி அய்யர், ''ராமண்ணா வாத்தியார் வந்திருக்கிறார், நீங்கள் உள்ளே போங்கள்'' என்று சொல்லிவிட்டு, கதவைத் திறந்தார்.

2

வாத்தியாரும் ஜோஸியரும்

முத்துஸ்வாமி அய்யர் கதவைத் திறந்தவுடன் ராமண்ணு வாத்தியார் உள்ளே வந்தார். அவரைப் பார்த்தால் ஐம்பது வயதுக்குமேல் மதிக்கமாட்டார்கள். ஆனால் அவருக்கு சதாபிஷேகமாய் வருஷம் ஐந்து ஆகிவிட்டது; அதாவது இப்பொழுது வயது 85. இன்னும் சிறுகுளத்தில் இவரைவிட்டு வேறொருவரைப் பிராமணார்த்தத்திற்குச் சொல்வதில்லை. அந்த ஊரில் ஒரு மாதத்திற்குக் குறைந்தது இருபது சிரார்த்தத்துக்கு மோசமில்லை. அதில் பதினெட்டுக்குக் குறையாமல் வாத்தியாருக்குக் கிடைக்கும். கலத்தில் பரிமாறும்பொழுது "போதும்" என்று சொல்லுகிற துர்வழக்கம் அவரிடத்தில் கிடையாது. "எவ்வளவு போட்டாலும் சாப்பிட வேண்டியது நம்முடைய கடமை" என்று அவர் சொல்லுவார். அந்த ஊர் ஜனங்களுக்கும் அவர் பிராமணார்த்தம் சாப்பிட்டால்தான் திருப்தி. 'இந்தப் பிராமணர் இவ்வளவு சாப்பிடுகிறாரே, இதில் பாதியாவது நம்முடைய பிதுர்க்களுக்குக் கிடைக்காதா என்று அவர்களுக்கு எண்ணம். எதார்த்தத்தை அவர்கள் அறிந்ததில்லை. இவர் மத்தியானம் சாப்பிடுவது போதாமல், ராத்திரிப் பட்டினி யாகையால், இருபது முப்பது வடையை மட்டும் தின்று விட்டு சுத்தப் பட்டினியாகவே யிருந்து விடுவார். உளுந்து வடைதான் அவருடைய தேகக்கட்டு விட்டுப் போகாமல் அவரைக் காப்பாற்றி வருகிறது. ஒரு நாள் ஜுரம் என்று கீழே படுத்துக்கொள்ள வேண்டுமே, கிடையாது! வயதினால் கொஞ்சம் கூனினவர் போல் இருந்தாலும், அவர் நடை கொஞ்சங்கூட தளர்ச்சி யடையவே யில்லை. ஆற்றங்கரையில் தினந்தோறும் அவர்தான் ஓடுகால் தள்ளுகிறது வழக்கம்.

வாத்தியார் உள்ளே வந்தவுடன் நமது முத்துஸ்வாமி அய்யர், "மாமா வாருங்கள், வாருங்கள்! குட்டி, பலகை கொண்டுவா!" கல்யாணி பலகை கொண்டுவர,

"உட்காருங்கள்! நானே அங்கே வரலா மென்றிருந்தேன்... அடே! யாரடா, வீரா!" என்று கூவினர். உடனே வேலைக்கார ஞகிய வீரன், "ஸ்வாமி" என்று வர, அவர், "அடே, போய் குழந்தை சுந்தரத்தைக் கூட்டிவா!" என்று சொல்லி விட்டு, வாத்தியாரைப் பார்த்து, "ஜோஸ்யரவர்களைக் கூட்டிக்கொண்டு வரச் சொல்லுகிறேன், ராகுவேளை போய் விட்டதல்லவா, இன்று என்ன, வெள்ளிக்கிழமையோ?"

வாத்தியார் : "ஆம் ஆம், ராகுவேளை போய் எந்தக் காலம் ஆகிவிட்டதே!"

முத்து: "ஆம், ஆம், செவ்வாய்க்கிழமை ஞாபகமாய்ச் சொன்னேன்." அப்பொழுது பையன் சுந்தரம் ஒரு பந்தை உருட்டிக்கொண்டு, "ஏன் அப்பா, கூப்பிட்டாயாமே?" என்று கேட்டுக்கொண்டு வந்தான்.

முத்து : "பந்து எதற்கடா? அட்டா! தாத்தாமேல் படப்போகிறது! அதைக் கையில் எடு எடு!"

பையன் : "புதுப்பந்து அப்பா, பெரிய களச்சிக்காய் உள்ளே வைத்திருக்கிறேன்!"

"அது இருக்கட்டும், என்ன விளையாட்டுப் புத்தி; நீ போய் சங்கர ஜோஸியரை, அப்பாவும் தாத்தாவும்..." என்று மேல் சொல்வதற்குள், "எந்தத் தாத்தா?" என்று பையன் கேட்க, "ஆமடா இந்தத் தாத்தா தானடா, 'உங்களைக் கையோடு கூட்டிவரச் சொன்ஞர்கள். ஏதோ அவசர காரியமாம்' என்று சொல்லிக் கூட்டிக்கொண்டு வா!" என்ருர்.

பையன் : "என்ன காரியம் சொல்லு!"

முத்து : "சொல்லுகிறேன் போ!"

பையன் : "சொன்ஞல்தான்..."

முத்து : "அக்காளுக்குக் கலியாணம்."

பையன் : "அக்காளுக்குக் கலியாணமாம், உங்களைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்ஞர்கள் என்று சொல்லிக் கூட்டி வருகிறேன்."

முத்து: "இது ஏதடா இவன்! நீ ஒன்றும் சொல்ல வேண்டாமடா, கையோடு கூட்டிக்கொண்டு ஓடிவாடா!"

பையன்: "அவர் என்னோடு ஓடமுடியுமா, நான் அவருக்கு முந்தி ஓட்டம் பிடித்து விடுவேனே!"

முத்து: "நீ ஓட வேண்டாம்; போய் மெள்ளக் கூட்டிக் கொண்டுவா" என்று சொல்ல, சுந்தரம் குதித்துக்கொண்டு வெளியே ஓடினான்.

சற்று நேரத்திற்கெல்லாம் சிவந்த நிறமுள்ள ஒரு மனிதர் உள்ளே வந்தார். அவர் கழுத்தில் ருத்திராட்சமும், கையில் திருப்பதி காப்பும், விரலில் பொன் மோதிரமும் அணிந்து கொண்டு, நெற்றியில் விபூதி சந்தனுட்சதை தரித்துக் கொண்டு, கையில் ஒரு ஏடுடன் வந்தார். இவர் வந்தவுடன் அய்யர், "வாருங்கள்" என்று ஆசனம் கொடுக்க, வாத்தியார், "சங்கரா, வா" என்று சொல்லி, "இதோ இந்த ஜாதகங்களைப் பார்." என்று கையில் கொடுத்தார்.

ஜோஸியர் உட்கார்ந்துகொண்டு, "குட்டிக்காக ஒரு கட்டு ஜாதகம் இருக்கிறதே! நூற்றுக்கும் குறையாதுபோல் இருக்கிறதே" என்றார்.

முத்து: "இருக்கும்."

ஜோஸியர்: "உங்களுடைய குணத்திற்கும் புத்திக்கும் ஐசுவரியத்திற்கும் வாய்திறந்து சொன்னல் போதாதா. லட்சம் ஜாதகம் வருமே! குழந்தைக்குத்தான் என்ன! எல்லோரும் பெண், அவளும் பெண்ணு! அவள் புத்திக்கும் சாந்தத்துக்கும் அழகுக்கும் படிப்புக்கும்—" என்று இப்படி ஸ்துதி பண்ணினர்.

முத்து சகிக்க மாட்டாதவராய், "குட்டிக்கு பத்து வயது ஆகிறது, இந்த வருஷத்திலாவது மேலேக்காவது கலியாணத்தை நடத்தி விடவேண்டும்."

ஜோஸியர்: "இதுதான் சரியான வயது. இதற்கு முன் என்ன கலியாணம்! அதெல்லாம் எனக்கே மனதுக்கு சமாதானப்படுகிறதில்லே" என்று சொல்லிக்கொண்டே, "ஆஹா இது பேஷ் ஜாதகம், பஞ்சமத்தில் சூரியன், ஜனனம் சனி

தசை, அஷ்டாமாதிபதி குரு; சுக்கிரதசையில் நல்ல யோகமிருக்கிறது.''

முத்துஸ்வாமி அய்யர் : "பொருந்தின ஜாதகத்தையெல்லாம் ஒரு பக்கமாக வையுங்கள்; அப்புறம் அதிலே பொறுக்கிக் கொள்வோம்."

வாத்தியாரும், ''இதற்கு இரண்டு பாவமிருக்கிறது. இதுவும் பாவஜாதகந்தான்'' என்று ஒன்ருென்ருய்த் தள்ளி வைத்துக்கொண்டிருந்தார்.

*　　　*　　　*

இங்கே இப்படியிருக்க, மதுரையில் வெள்ளியம்பலத் தெருவில் ஒரு பெரிய காரை மச்சுவீட்டுத் திண்ணையில் இரண்டு கிழவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்களுள் ஒருவர், "முத்துஸ்வாமி பெண் ஜாதகமும் பயல் ஜாதகமும் பொருந்துகிறது. அதுதான் என் மனதுக்குப் பிடித்ததாயிருக்கிறது. நீங்கள் இன்னும் யோசனை செய்து கொண்டு சொல்லுங்கள்'' என்ருர்.

மற்றவர் : ''யோசனை என்ன? மனத்துக்கும் பிடித்து, ஜாதகமும் பொருந்திஞல், அதைத்தான் பண்ணிவிடுவோம். முத்துஸ்வாமியும் மனிதர்கள் பேரில் அபிமானம், விதரணை இதெல்லாமுடையவன். அவன் சம்சாரம் அதைவிட; நான் போய்விட்டேஞுல் 'மாமா, மாமா' என்று செய்யும் ஆசார உபசாரம் சொல்லி முடியாது. ஊர்யோக க்ஷேமம் விசாரிக்கிறதும், எதிராளி நோக்கத்தைக் கண்டு நடக்கிறதும் அவளிடத்தில் நிரம்ப நன்ருயிருக்கும்; இரைந்த சொல் கிடையாது. சொத்தோ அளவில்லாமல் கிடக்கிறது. பெண் வெறுமனே தங்கத்திலே வார்த்தாற்போல் இருக்கும், மின்னல் கொடிதான். அவள் அழகு பயலுக்குக்கூட வராது!''

மற்றவர் : "போகட்டும் அதுதான் எனக்கும் மனதிற்குப் பிடித்ததாய் இருக்கிறது, இராத்திரி புஷ்பம் வேணுமாஞல் வைத்துப் பார்ப்போம்."

அதற்குக் கிருஷ்ணய்யர், "புஷ்பம் வைத்துப் பார்ப்போம், சகுனத்தையும் பார்ப்போம். ஜாதகத்தையும் ஒரு தடவைக்கு இரண்டு தடவை பார்ப்போம். மனதில் சந்தேகமென்னத் திற்கு? நமக்கு என்ன, பெண் கிடையாதா? நாம் செய்வதை யெல்லாம் செய்துவிட்டால் அப்புறம் உள்ளபடி யிருக்கிறது. இராத்திரி கோயிலுக்கு நானும் வருகிறேன், மீனாட்சி சம்மதத்தையும் கேட்போமே, இதிலென்ன?" என்றார். ராமசுவாமி சாஸ்திரிகளும், "ஆஹா சரி, அப்படியே செய்வோம்" என்றார். கிருஷ்ணய்யர், "நான் சித்திரை வீதி வரையிலே போய்விட்டு அப்புறம் வருகிறேன்" என்று விடை பெற்றுக் கீழே இறங்கிச் சென்றார்.

3

வம்பர் மஹா சபை

அன்று பகலில் கிருஷ்ணய்யரும் அவர் சம்பந்தியாகிய ராம சுவாமி சாஸ்திரிகளும் பேசிக்கொண்டபடியே, இராத்திரி மீனாக்ஷி அம்மன் கோயிலுக்குச் சென்று புஷ்பம் வைத்துப் பார்க்க, வெள்ளைப் புஷ்பம் அகப்பட்டதுந் தவிர, அம்மன் சந்நிதியில் மூலக்கிரகத்தருகில் ஏற்றிவைத்திருந்த திருவிளக்கி லிருந்தும் பொறிகள் கல கலவென்று புஷ்பங்கள் போல் உதிர்ந்தன. இதைக் கண்ட இருவரும் அடங்காத ஆனந்தத் துடன் வீட்டுக்கு வந்து, எப்பொழுது விடியுமென்று இரவெல் லாம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்து, விடிந்தவுடன் காலை அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, சிறுகுளம் முத்து ஸ்வாமி அய்யருக்குக் கடிதம் எழுதுவதற்காக உட்கார்ந்தனர்.

அப்பொழுது தபால்காரன் கிருஷ்ணய்யருடைய மேல் விலாசத்திற்கு ஒரு கடிதம் கொண்டுவந்தான். அது 'சிறு குளம்' என்று மேல் முத்திரை யிடப்பட்டிருந்ததால், அதை ஆவலுடன் உடைத்து வாசித்துப் பார்க்க, அதில் அடியில் வருமாறு வரையப்பட்டிருந்தது :—

சிறுகுளம்,
பங்குனி மீ 19உ

ஸ்ரீமத் ம-ா-ா-ஸ்ரீ மாமா அவர்களுடைய திவ்விய ஸ்ரீ பாதபத்மங்களிலே பாலன் முத்துசாமி சாஷ்டாங்க பூர்வமாக நமஸ்கரித்து விஞ்ஞாபனம். இவ்விடத்தில் அனைவரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமாதிசயங்களுக்கு அடிக்கடி எழுதும்படி ஆஞ்ஞாபிக்கக் கோருகிறேன்.

தங்களுடைய ஆசீர்வாத அனுக்கிரகம் ஸம்பூர்ணமாயுள்ள எனக்கு என்ன குறை? 'ஜலமிருக்கப் பயிர் வாடுவதேன்?' சி. ஸ்ரீநிவாசனுடைய ஜாதகமும் சௌ. லட்சுமி (கல்யாணியின் மறுபெயர்) ஜாதகமும் எல்லாவிதப் பொருத்தங்களிலும் பொருந்துகின்றன. ஸ்ரீநிவாசனும் லட்சுமியும் கலந்து வாழ மனுஷ்ய யத்தனமும் வேண்டுமோ? இனிமேல் நடக்க வேண்டிய காரியமனைத்தும் தங்களதே. 'காற்றில்லாமல் மரத்திலைகள் ஆடுவதுமுண்டோ?'

தங்களுடைய சம்பந்தி ம-ா-ா-ஸ்ரீ மாமா ராமசுவாமி சாஸ்திரிகளவர்களுடைய அபிப்ராயத்தை அறிந்ததன் பேரில் அவர்களுக்கே நேரே எழுதுகிறேன். அம்மான் சேய் ஆயிசு முழுவதும் *அம்மான் சேயாகவே யிருக்க வேண்டியதைப்பற்றி விசனப்படாமல் நான் தேற்றினேன் என்று சொல்லவும்.

வேணும்
அனேக நமஸ்காரம்
முத்துஸ்வாமி.

இக்கடிதத்தைப் படித்தவுடன் கிருஷ்ணய்யர், "முத்துஸ்வாமி நிரம்பப் படித்தவன், காகிதம் எழுதுகிற மாதிரியைப் பாருங்கள்! சுருக்கமாக உபமான உபமேயங்களோடு, தான் ஒன்றும் மேலே போட்டுக்கொள்ளக்கூடாதாம்" என, சாஸ்திரிகளும் சந்தோஷத்தால் முகமலர்ந்து, "நன்றாயிருக்கிறது" என்றார். பிறகு சிறிதுநேரம் பேசிவிட்டு, இருவரு

*பைத்தியக்காரன் என்ற அர்த்தத்தில்

மாய் சிறுகுளத்திற்கு அன்று பகலிலேயே போய் முகூர்த்தம் வைத்துக்கொண்டு வருவதாய்த் தீர்மானம் செய்தார்கள்.

* * * *

மறுநாள் காலையில் சிறுகுளம் என்ற கிராமத்தில் ஆற்றங்கரையில் சில ஸ்திரீகள் புடவை தோய்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருத்தி,† "ஆமாம், எல்லாம் 'காரியமாகிறவரையில் கழுதையுங் காலைப்பிடி' தான். இப்பொழுது எட்டாவது பிள்ளை பெற்றவளுக்கு ஆசார உபசாரமாய்க் கிடக்கிறது! இதற்கு முன்னே நடந்ததெல்லாம் நேற்றுக் குழந்தைக்குக்கூடத் தெரியும். தலைச்சன் பிள்ளைப் பெற்றிருந்தேன். வேளா வேளைக்கு மருந்து கிடையாது. சாப்பாடு கிடையாது. தாயாரும் பெண்ணுமாகக் கூடிக்கூடிக் குடியைக் கெடுக்கிற பேச்சுப் பேசிக்கொண்டிருந்தது தெரியாதா? அப்பொழுது ஒருநாள் விளாச்சேரியிலிருந்து பலாப்பழம் வந்தது. அன்றைக்கு மாதப் பிறப்பு; சேப்பங்கிழங்கு போட்டு மோர்க்குழம்பு, தேங்காய் கோசுமல்லி, பலாக்காய்க் கறி, கத்தரிக்காய் போட்டு பொரித்த கூட்டு. சக்கரவள்ளிக் கிழங்குக் கறி. புருஷர்கூட ஊரிலில்லை. மானுமதுரைக்குப் போயிருந்தார் மருமகனகத்துக்கு. அப்பொழுது எல்லாவற்றையும் பண்ணி எடுத்துக்கொண்டு பலாப்பழத்திலேகூட எனக்கு ஒரு சுளை கிடையாது. "பசுவன்" போல் கொட்டிக்கொண்டு என் காதிலே படவேண்டுமாம், "அடவாகக் கறி காய்கூடக் கிடையாது" என்று சொல்லிக்கொண்டு, பருப்புத் துவையலும் சாதமுமாக, நல்ல நாள் திங்கள் நாள்கூடப் பாராமல் போட்டாளே! அதெல்லாம் மறந்து போவேன் என்று நினைக்கிறாயோ? அதுவும் ஒரு பக்கத்தில் இருக்கும்!" என்று சொல்லிக்கொண்டு நிமிர, அப்பொழுது பொன்னம்மாள் என்ற ஒரு ஸ்திரீ குடமும் கையுமாக எதிர்ப்பட்டாள்.

†இந்தப் பரதேவதைக்கு 'ர' கரம் வாயில் நுழையாது; அதற்குப் பதிலாக 'ய'கரந்தான் வரும். முதலிலேயே அந்தப் பரிபாஷையைத் துவக்கினால் உலகம் பயந்து போகும் என்று அதற்கு உதாரணம் பின் அத்தியாயங்களில் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவள் முத்துஸ்வாமி அய்யருடைய தம்பி சுப்பிரமணிய அய்யருடைய மனைவி. தஞ்சாவூர்ப் பெண். இந்தப் பூமண்டலத்திற்குள் அவளுக்கு ஒருவரும் நிகரில்லை. யாரையும் லட்சியமில்லாமல் எடுத்தெறிந்து பேசுவாள். பாவம்! சுப்பிரமணிய அய்யரைப் பம்பரமாய் ஆட்டி வைப்பாள்.

இந்தப் பதிவிரதா சிரோமணியிடம் அவர் யதார்த்தத்தில் அதிக பயந்தவராயிருந்தாலும், வெளிக்குத்தான் மனைவி சொல் கேட்பதில்லையென்று அடிக்கடி பெருமை பேசிக்கொள்வார். ஆனாலும் அந்த அம்மாள் படுத்துகிற பாட்டிற்கு அவர் சாகமாட்டாமல் அவஸ்தைப்படுகிறார் என்ற சங்கதி சிறுகுளம் முழுவதும் தெரியும். அவருக்கு ரோஷம் பிறக்க அவரை வைய வேண்டுமானால், 'பெண்டாட்டி ஆத்தாள் பெரிய ஆத்தாள்' என்று சொல்லிவிட்டால் போதும், அவர் முகம் சிவந்து கண்களில் இரத்தம் சுரந்துவிடும்.

பொன்னம்மாள் வெகு அலங்காரப் பிரியை. அவள் நடக்கும்போது உலகம் முழுவதும் தன்னழகையே இமை கொட்டாமல் சித்திரம்போல் பார்த்து பிரமித்து நிற்பதாக அவள் ஞாபகம்; போய்க்கொண்டிருக்கும்போதே நாம் அன்னநடை நடக்கிறோம் என்று சில சமயங்களில் திடீரென்று அவளுக்கு எண்ணம் உண்டாகிவிடும். உடனே அவளுக்குக் கர்வமும் வஜ்ஜையும் ஏககாலத்தில் உண்டாகி, கால் தீப் பொறியின் மேல் மிதித்தாற்போல் கீழே பாவாமல், விகார நடையுடன் அவள் ஏதாவது சாக்கு வைத்து, நின்று நின்று வது அல்லது விரைந்தாவது வீட்டுக்குப் போவதைப் பலர் பார்த்திருக்கிறார்கள்.

இந்தப் பரதேவதை தண்ணீரில் இறங்கியவுடனே மேலே சொன்னபடி அங்கே பிரசங்கம் செய்துகொண்டிருந்த ஸ்திரீ அவளைப் பார்த்து, "பொன்னம்மாள்! ஏது இத்தனை நாழிகை? கல்யாண அமர்க்களமோ? அதாரடி உன் மைத்துனனகத்துத் திண்ணையில் ஜோடியாக இரண்டு கிழவர்கள் உட்கார்ந்திருக்கிறார்களே! அவர்கள் யார்?" என்று கேட்டாள்.

பொன்னம்மாள் வெகு சலிப்புடன், "யாரோ! 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?' உலகத்தில் அவரவர்கள்

பாட்டை அவரவர் கவனித்தால் போதாதா?'' என்று வெகு இலக்கணமாய் மறுமொழி சொன்னாள்.

பொன்னம்மாள் யதார்த்தத்தில் கமலாம்பாள் படித்த தில் பாதிகூடப் படித்திராவிட்டாலும், தன்னிடத்திலுள்ள சொற்ப சரக்குகளை வைத்துக்கொண்டு எல்லாம் படித்து விட்டதாகப் பாவனை செய்வாள். கமலாம்பாள் அதிக அழ காகப் பேசுகிறாள் என்பதைப் பற்றி அவளுக்கு அடங்காப் பொறாமை. 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்துத் தானுந் தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல' கமலாம்பாளைப் பார்த்துத் தானும் நிரம்ப இலக்கணமாகப் பேச ஆரம்பிப்பாள். பிராமணர்கள் தாங்கள் பேசும் பாஷையில் சமஸ்கிருத பதங்களை இடை இடையே, மரத்தில் இலை மத்தியில் புஷ்பங்கள் சேர்ந்தாற் போல், சேர்த்துப் பேசுவதைக் கண்ட ஓர் ஆட் டிடையன், தானும் அவர்களைப்போல் பேச எண்ணி, வீட்டுக்குப் போய், தாயாரை அழைத்து, "அம்மா, ஆஷ்டுக் குட்டி வந்து வேஷ்டியைத் தின்கிறது! ஓஷ்டு ஓஷ்டு" என்று சொன்னதாக ஒரு கதையுண்டு. அதுபோல் பொன்னம்மாள் பேசுகிற இலக்கணத் தமிழ் சிற்சில சமயங்களில் அதிக இலக் கணமாய்விடும். ஆனாலும் கற்றறிவில்லாத அவ்வூர்ப் பெண்டிர்க்குக் கமலாம்பாளைக் காட்டிலும் அவள் அதிகமாகப் படித்திருப்பதாக எண்ணம்.

அவள் மறுமொழியைக் கேட்ட சுப்பு என்ற ஸ்திரீ, "உனக்குத் தெரியாதா? சொல்லாமல் போனால் வைத்துக் கொள்ளேன். அடே இழவே, தன்னால் அகத்துக்குப் போனால் தெரிகிறது!'' என்று கோபத்துடன் சொன்னாள்.

பொன்னம்மாள், "என்னங்காணும், அவர்கள் கல்யாணத் துக்காகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள், நீர் என்ன இழவு என்கிறீரே!''

சுப்பு, "நான் இழவு என்றா சொன்னேன்? நன்றாயிருக் கிறது, அம்மா! கலகம் பண்ணி விடுவாய் போலிருக்கிறது!''

பொன்னம்மாள், "என்ன தங்களுக்கு இவ்வளவு கோபம்? நான் பொழுதுபோக்காக பரிகாசமாகச் சொன்னேன். அவர்கள் வீட்டில் கலியாணம் என்று உமக்கு ஜோஷ்யம் (ஜோதிஷம்) தெரியுமா? அவர்கள் ஏதோ மதுரைப் பட்டணமாம். மைத்துனர் பெண்ணை *நிச்சியஸ்ரார்தம் பண்ண வந்திருக்கிருர்களாம்."

சுப்புவுக்கு அவர்கள் இன்ஞர் என்று தெரியும். இருந்தாலும் பொன்னம்மாளைத் தூண்டிஞல் கமலாம்பாளுக்கும் அவளுக்கும் கலகம் உண்டுபண்ணி வேடிக்கை பார்க்கலாம் என்று எண்ணிக்கொண்டு மறுபடியும் அவள், "ஓஹோ! உங்கள் புக்ககத்து மாமா வரப்போகிருர் என்ருர்களே, அவர் வந்திருக்கிருரோ? நான் செவ்வையாய்ப் பார்க்கவில்லை. நான் என்ன! அவர்கள் வீட்டிற்கெல்லாம் போகிறேஞ வருகிறேஞ?" என, பொன்னம்மாள், "அவர்கள்தான் போலிருக்கிறது" என்று நீட்டிச் சொல்லி மெதுவாய் சூள் கொட்டிவிட்டு மௌனமாயிருந்தாள்.

சுப்பு, இதுதான் சமயம் என்று கண்டு, "என்ன! போலிருக்கிறது என்கிருய், உன் புக்ககத்து மாமா உன் அகத்துக்கு வரவில்லையோ? உனக்கென்ன அவரைத் தெரியாதா? நிரம்ப நல்ல பிராமணன்."

பொன்னம்மாள் : "எங்களகத்துக்கு வரவேண்டும் என்று எந்த சாஸ்திரம் முறையிடுகிறது? உலகத்தில் நல்லவர்களுக்கென்ன பஞ்சமா! அதுவும் இப்பொழுது வரமாட்டார். மனிதர்களுக்குள்ள நல்ல புத்தி இல்லாவிட்டாலும் அவர்களுக்குள்ள அச்சம் சுலபத்தில் போகிறேன் என்கிறதா?"

---

* நிச்சியதார்த்தம் என்பது சரியான வார்த்தை. பொன்னம்மாள் சம்ஸ்கிருதம் பேசுகிற பெருமையில் வார்த்தைகளின் வித்தியாசம் தெரியாமல் ஒன்றை ஒன்ருக மாற்றியிருக்கலாம். அல்லது விஷமமாக 'ஸ்ரார்தம்' என்று அமங்கலமாய்ச் சொல்லியிருக்கலாம்.

சுப்பு: "அதென்ன? அப்படி என்ன வந்துவிட்டது! ஓஹோ! அவர்தானோ லட்சுமியை மதுரையிலே கொடுக்கக் காரணம்? என்னடி! இப்படித்தான் செய்யலாமோ? நீயும் உன் ஓர்ப்படியாளும் இருக்கிற நேசத்திற்கு சிவனே என்று உன் தம்பி பிள்ளைக்குக் கொடுத்துவிடலாம். அவர்களுக் கென்ன, ஸ்திதியில்லையா, மதியில்லையா?"

பொன்னம்மாள்: "அவர்களுக்கேது ஸ்திதியும் மதியும். இவர்கள் வீட்டு வாசலிலேதான் இராப்பகலாகச் சோற்றுக் குக் காத்திருக்கிறார்கள். அவர்கள் வீடுகளிலெல்லாம் இவர் கள் ஏற்றிவைத்த விளக்குத்தான் பிரகாசம் என்று வடக்கே யெல்லாம் பிரஸ்தாபம். நான் ஒருத்தி இங்கே வந்து அகப் பட்டுக் கொண்டது போதாதா? இந்தப் பட்டிக்காட்டில் சம்பந்தம் செய்யாவிட்டால் ஊர்களில் அவர்களுக்கும் பெண்கள் கிடையாது, பாவம்! குழந்தை பெண்ணும் அழகில் ஊர்வசி!"

இதுவரையில் நடந்த சம்பாஷணையை எல்லாம் காது கொடுத்துக் கவனித்துக் கேட்டிருந்த நாகு என்ற ஒரு ஸ்திரீ: "பணமாம் பணம். இந்த ஊருக்குத்தான் அதிசயம். 'ஆலை யில்லாவூரில் இலுப்பைப்பூ சர்க்கரை.' பொன்னம்மாள் மருமகனுக்குக் கொடுத்தால் என்ன! அடடா, இல்லை, வைத்துக் கொள்ளட்டுமே. (பொன்னம்மாளைப் பார்த்து) நீ தான் எழுதிவிடேன், இவ்விடத்து சம்பந்தம் வேண்டா மென்று உன் உடன்பிறந்தானுக்கு" என்றாள்.

அதற்குப் பொன்னம்மாள், "சூ, இத்தனை நாள் தாமதமா? அன்றைக்கே 'டெலகராப்' அடித்து விட் டேனே!"

சுப்பு: (தன் மனதுக்குள் "எத்தனை செருக்கு! தலை கழுத்திலே நிற்கவில்லை" என்று சொல்லிக்கொண்டு) "முத்துஸ்வாமி உங்கள் பேரில் வைத்திருக்கிற அபிமானத் துக்கு, ஜாதகம் பொருத்தமில்லையாம். இல்லாவிடில் உன் மருமகனுக்கே பெண்ணைக் கொடுப்பான்."

நாகு : "ஆமாம், ஜாதகம் ஒரு சாக்கு. சகுனத்தைப் பார்த்து எத்தனை இடங்களில் நடக்கவில்லை ? என்னமோ 'வைத்தியன் பெண்டாட்டி சாகிறதில்லை, வாத்தியார் பெண் அறுக்கிறதில்லை' என்ற சம்பந்தமாய் இருக்கிறது. மனம் கொண்டது மாங்கல்யம். மனப்பொருத்தம் இருந்தால் எல்லாப் பொருத்தமும் இருக்கும். நேற்று மீனுட்சிசுந்தரம் பெண்ணை சங்கரம் பிள்ளைக்குக் கொடுக்க என்ன ஜாதகத்தைப் பார்த்தார்கள்? ஓஹோ என்று கல்யாணம் நடக்கவில்லையா? அவர்களுக்கு என்ன குறைவு ! நொண்டிக் கழுதைக்குச் சறுக்கினது சாக்கு !"

பொன்னம்மாள்: "வெள்ளைக்காரர்களுக்குள் ஜாதகந் தான் பார்க்கிருர்களோ ?"

சுப்புவும் நாகுவும் : "ஆ ! அவர்களும் ஜாதகம் பார்க்கத்தான் பார்ப்பார்கள்."

பொன்னம்மாள் : (இவர்களுடைய மூடத்தனத்தைக் கண்டு சிரித்துக்கொண்டு) "அவர்கள் ஜோஷ்யத்தையே நம்புவதில்லை."

நாகு : "ஸோஸ்யம் அவர்களுக்குத் தெரியாதா ?"

பொன்னம்மாள்: "ஸோஸியமா!" என்று இடி இடி என்று சிரித்துவிட்டு "ஜோஷ்யம் (ஜோஸ்யம் அல்லது ஜோதிஷம் என்பது சரியான பதம்) என்று சொல்லுவார்கள். நீங்கள் பேசுவது சூத்திரப் பேச்சாயிருக்கிறதே !"

நாகு கொஞ்சம் வருத்தத்துடன், "நாங்கள் படியாதவர்கள். எதோடு கூட்டு !" என்ருள்.

உடனே சுப்பு பொன்னம்மாளைப் பார்த்து, "அது கிடக்கட்டும். இப்போதுதான் என்ன, ஒரு சகுனத்தைப் பார்த்து உன் மருமகனுக்கே கட்டிவிடலாமே !"

பொன்னம்மாள் : "ஊரிலுள்ள தெய்வங்களுக்கெல்லாம் நமஸ்காரம். இனி ஸர்வதேவ வேண்டாம். ஆயிரம் பொன் கொடுத்துப் பெண்ணைக் கட்டினுலும் வேண்டாம்; அப்படி மானம் கெட்டவர்களல்ல நாங்கள்."

சுப்பு : "உன் அகமுடையானிடம் சொல்லி ஏற்பாடு செய்தால் செய்யலாம்."

பொன்னம்மாள் : "ஆ, எவ்வளவடா என்றுளாம். நான் சொல்லி இவர்கள் கேட்கிறதும் தம்பி சொல்லத்தான் அண்ணு கேட்கிறதும், என்னமோ சொன்னுப்போலிருக்கிறது. இவர்கள் யாரோ, அவர்கள் யாரோ !"

நாகு : "அதென்ன அப்படி சொல்லுகிருய், முத்துஸ்வாமி அப்படி நினைப்பவனல்ல. உன் பிள்ளை சுந்தரத்தைக் கண்ணுக்குக் கண்ணுய் வளர்க்கிருனே, காற்றடிக்க சகிக்கிறதில்லையே !"

பொன்னம்மாள் : "அதற்கென்ன ! பிள்ளை வேண்டியிருக்கிறது. சுவாமி கண் விழித்துப் பார்க்கவில்லையே, அதற்கு யாரிடம் முட்டிக் கொள்வது. என் பிள்ளையைக்கூட செல்லம் கொடுத்து, தாய்க்குப் பிள்ளையாகாமல்,"கைம்பெண் வளர்த்த கழிசறை" எனக் குட்டிச் சுவரிலும் கேடுகெட்டவனுகச் செய்தாயிற்று !" என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு அரை வார்த்தையாய் 'புருஷக் கைம்பெண்' (கைம்பெண்-விதவை) என்ருள். எனவே சுப்புவுக்கு வந்த சந்தோஷத்திற்கு அளவு இல்லை. 'இப்படிப்பட்ட வார்த்தைக்காகத்தான் இவ்வளவு நேரம் காத்தேன்' என்று எண்ணிக்கொண்டு துணி மூட்டைகளைக் கட்டிச் சுருட்டிக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள்.

வீட்டில் குடத்தை இறக்கினதுதான் தாமதம். ஈரப் புடவையுடனே ஒரு எருமுட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு கமலாம்பாள் வீட்டை நோக்கி அடுப்பு நெருப்புக்காகப் புறப்பட்டாள். யதார்த்தத்தில் தன் வீட்டிலேயே நெருப்பு இருந்தது. ஆனுல் பொன்னம்மாள் சொன்ன வார்த்தைகளைக் கமலாம்பாளிடம் ஒன்றுக்குப் பத்தாய்ச் சொல்லவேண்டியது அதிக அவசியமாயிருந்தது.

4

சபைச் சிறப்பு

சுப்பு அப்படி அதிக கெட்டவள் அல்ல. நல்ல ஈகைக் குண முள்ளவள். மற்ற நாட்டுப் பெண்கள் தங்கள் மாமியா ருடன் சண்டை செய்வதைக் காட்டிலும் இவள் தன் மாமியா ருடன் அதிகமாகச் சண்டை செய்வதில்லை. சுக்கிரவாரம், வருஷப் பிறப்பு முதலிய நாட்களில் தன் மாமியார் என்ன சொன்னாலும் அவளுடன் சண்டை செய்யமாட்டாள். ஆனால் மறுநாள் வட்டியும் முதலுமாக யுத்தம் நடக்கும். சில ஸ்திரீகளைப்போல் குடும்ப யுத்தங்களில் அவள் இருபது வருஷத்திய குற்றக் கணக்கை யெடுத்துக் கூறுவதில்லை. பதினைந்து வருஷத்திற்கு முன் ஒரு தினத்தைச் சொல்லி அன்று உனக்கும் உன் மாமியாருக்கும் என்ன நடந்தது என்றால் அவள் திட்டமாய்ச் சொல்ல முடியாது. ஆனால் பதினைந்து வருஷத்திற்கு இப்பால் இருந்தால் சகல சங்கதி களுக்கும் அவள் மனதில் பதிவு ஏற்பட்டிருக்கும். ஆகையால் பதினாலு வருஷத்திற்கு முன் அவள் மாமியார் அவளை 'ஸாகஸி' என்று வைத அன்றைக்கு நடந்த சரித்திரத்தைச் சொல்லச் சொன்னால், அன்றைக்கு இன்ன கறி, இன்ன கூட்டு, மோர் புளித்ததா புளிக்கவில்லையா, இன்ன துவையல், யார் சமையல், அதில் இன்ன குற்றம் என்பதை நிர்ணயமாய், அப்பீலுக்கிடமில்லாமல், சொல்லக்கூடிய திறமை அவளுக் குண்டு. இங்கிலீஷ் படிப்பவர்களுக்குச் சுப்பம்மாளுடைய ஞாபக சக்தியில் பத்தில் ஒரு பங்கு இருந்தால் எம்.ஏ., எம். எல்., பரீட்சைகளில் நிச்சயமாய்த் தேறி விடலாம். சுப்பம்மாளுக்கு யார் வீட்டிலாவது கலகம் நடந்தால் போதும், தனக்குச் சாப்பாடுகூட வேண்டாம்!

பகல் பன்னிரண்டு மணிக்கு, அவள் வீட்டில் ஒரு 'காங்-கிரஸ்' மஹாசபை கூடும். அது சாயந்திரம் 6 மணிக்கு ஓய்ந்து மறுபடி இரவு 8 மணிக்குக் கூடும். அதற்கு விடுமுறை நாளே கிடையாது. அம்மகாசபைக்குச் சுப்பம்மாள்தான்

கனம் பொருந்திய அக்கிராசனுதிபதி அவர்கள். அவளுக்கு அந்தக் கௌரவ பட்டத்தைப் பகிரங்கமாகக் கொடுக்கா விட்டாலும் அப்பட்டத்திற்குரிய அதிகாரத்தை அவள் அனுபவிப்பதுமன்றி அதற்குரிய மரியாதையையும் எல்லாரும் முணுமுணுக்காமல் அவளுக்கே செலுத்தி வந்தார்கள். அந்த மகாசபைக்கு ஏதாவது சமாசாரப் பத்திரிகை உண்டோ என்று சிலர் ஆவலுடன் வினவலாம். ஆனுல், அச்சிலடங்காத அனேக சங்கதிகளும், அச்சில் போடக்கூடாத அநேக ரகசியங் களுமே அந்தச் சபையில் முக்கியமாய் நடந்தேறி வந்தபடியால் அதற்குச் சமாசாரப் பத்திரிகை ஒன்றும் கிடையாது. அதற்குப் பதிலாகச் 'சமாசார ஸ்திரீகள்' என்று சொல்லத்தக்க சிலர் உண்டு. அவர்களுடைய வேலை என்னவென்ருல், பொழுது விடிந்தது முதல் அஸ்தமிக்கிற வரையில் ஊரைச் சுற்றிக் குறைந்தது மூன்று தடவை சந்து பொந்துகள் பாக்கி விடா மல் காற்றைப்போல் நுழைந்து கிராமப் பிரதட்சணம் செய்து, யாராவது புதிதாக அந்த ஊருக்கு வந்தாலும் சரி, யாரகத்திலாவது இரைச்சல் கேட்டாலும் சரி, யார் ரகசியம் பேசினுலும் சரி, யாராவது சிரித்தாலும் சரி, அழுதாலும் சரி, எங்கே என்ன நடக்கிறது என்று ஜாக்கிரதையாய்க் கவனித்து, தேனீக்கள் பற்பல இடங்களிலும் திரிந்து தேன் திரட்டி எல்லாம் ஒருமித்து உண்பதுபோல் தங்களுடைய சமாசாரச் சரக்கு மூட்டைகளை அந்த வம்பர் மஹாசபையில் அச்சபையின் அபிப்ராயத்துக்கு அவிழ்த்து ஆஜர் செய்ய வேண்டியதே! இந்த உத்தியோகஸ்தர்களுடைய சாமர்த்தியம் அதியற்புதமாயிருக்கும்.

முன்னெரு காலத்தில் ஸ்பானியா முதலிய கிறிஸ்தவ தேசங்களில் மதசம்பந்தமான ஓர் ஸ்தாபனம் இருந்தது. அதன் உத்தியோகஸ்தர்களுடைய தொழில் சாமானியமாக உத்தியோகச் சின்னங்கள் ஒன்றுமில்லாமல் ஒரு மனித னிடத்து சகஜமாய்ப் பேசுவதுபோல் பேசி, சர்க்கார் மதத் துக்கு அணுவளவேனும் விரோதமாக அவன் பேசினுலும் சரி, நினைப்பதாகக் காணப்பட்டாலும் சரி, அவனைக் கச்சேரிக்கு இழுத்து விடுவதே. தந்திர சக்தியில் அந்தப் பிரபலமான

உத்தியோகஸ்தர்கள்கூட இந்த வம்பர் மஹாசபையின் சமாசார ஸ்திரீகளுடைய பாததூளியின் விலைபெற மாட்டார்கள். ராஜ்யமாளும் மந்திரிகூட, இவர்களிடத்து இரண்டொரு மாதம் சிட்சை பெற்றுக்கொண்டால் நலமாயிருக்கும். அவர்கள் அறியாத பழமொழி இனி ஔவையாருக்கும் தெரியாது. எவ்வித தந்திரமுள்ள மீனுனுலும் தூண்டில், வலை இவைகளால் அவைகளை எப்படிப் பிடிக்கிறார்களோ, அப்படி ஸ்திரீயோ, புருஷனோ, யாவராயினும் சரி, அவர்கள் எவ்வளவு தந்திரிகளானாலும் சரி, அவர்களிடத்திலுள்ள சங்கதி எவ்வளவு ரகசியமானாலும் சரி, அதை இந்த உத்தியோகஸ்தர்கள் கிரஹிப்பது திண்ணம்.

இவ்வாறு கிரஹிக்கிற சக்திமட்டுந்தான் அவர்களுக்குண்டென்று நினைக்கவேண்டாம். கற்பனைசக்தி குறைந்த நமது தமிழ் வித்வான்கள்போல ஒருவர் சொன்னதையே சொல்வதில் அவர்களுக்குச் சற்றேனும் திருப்தியில்லை. பொய்யை நிஜமாக்குவதிலும் நிஜத்தைப் பொய்யாக்குவதிலும், நரியைப் பரியாகவும் (பரி-குதிரை) பரியை நரியாகவும் மாற்றிய பரமசிவனைக் காட்டிலும் சமர்த்தர். கண்ணுபின்ணு என்னுமல் கல்லும் புல்லும் உருகப் பேசுவர். ராமாயணத்தை ஒன்றுக்குப் பத்தாய்ச் சொன்ன கம்பரிலும் கற்பனை சக்தியில் சிரேஷ்டர் இவ்வம்பர். வியாச ரிஷி செய்த புராணம் பதினெட்டே. இவர்களோ வீடுதோறும் ஒரு ஸ்தல புராணம் சிருஷ்டிப்பர். அன்பு, புத்தி, சித்தம் இவற்றை மாறுபடச் செய்வதில் ‘நடுவேனிற் கனவு’ என்ற நாடகத்தின் ‘பக்’ என்ற குட்டிப் பேயினும் சிறந்தவர்கள். இச்சமர்த்தர்கள் தங்களைத் தாங்களே உத்தியோகஸ்தராக நியமித்துக் கொள்ளுவார்கள். இவர்கள்தாம் அம்மஹாசபையின் மகா அங்கத்தினர்.

5

கலக நெருப்பு

இவ்வம்பர் மகாசபையின் அக்கிராசனாதிபதியாகிய சுப்பம்மாளைக் கமலாம்பாள் வீட்டிற்கு நெருப்பு வாங்க வந்தவிடத்தில் இவ்வளவு காலம் கௌரவக் குறைவாக நிறுத்தி

வைத்த குற்றத்தை இதைப் படிப்பவர்கள் தயவுசெய்து மன்னிக்கவும். எங்கே சுப்பம்மாளைச் சாதாரண சுப்பம்மாள் ஆக நினைத்துவிடுகிறார்களோ என்று பயந்து அவளுடைய அந்தஸ்தையும் அதிகாரத்தையும் விஸ்தரித்து எழுதலானேன். சுப்பம்மாள் திண்ணையில் உட்கார்ந்திருந்த கிருஷ்ணய்யர், ராமஸ்வாமி சாஸ்திரிகள் இவர்களைக் கண்டு நாணினவள் போல் ஓரமாக ஒதுங்கி மேற்புடவையை இழுத்துப் போர்த்திக்கொண்டு வெகு மரியாதையாய் தலைகுனிந்து உள்ளே சென்று, கமலாம்பாளை நோக்கி ஏதோ ரகசியம் சொல்பவள் போல் மெதுவாக "உங்கள் மாமாவும் அவர் சம்பந்தியுமோ?'' என, கமலாம்பாள் 'வாருங்கள்' என்று சொல்லி, "அவர்கள்தான், இன்றுதான் வந்தார்கள்'' என்றாள்.

சுப்பம்மாள் உள்ளே போகும்பொழுது தலைகுனிந்து சென்றாளே, அவள் எவ்விதம் திண்ணையில் உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்திருக்கக்கூடும் என்று சிலர் சந்தேகிக்கலாம். 'மங்கையர் கண் பெருவிரலைப் பார்க்கும்போதே கடைக்கண் உலகெலாம் சுற்றும்' என்பது பழமொழி. அப்படியே சுப்புவும் ஆந்தையின் விழியை யுடையவளானாலும் 'காதங்கள் கோடி கடை சென்று காணும்' கருடனிலும் அதிதீட்சண்யமான கடைக்கண் பார்வையை யுடையவள். இவ்வளவு விசேஷ சக்தி உள்ளது பற்றியல்லவோ அவள் வம்பர் மகா சபைக்கு அக்கிராசனாதிபதியானாள். அவளைப் பற்றியும் அவளுடைய சபையைப்பற்றியும் பின்னால் நாம் பலமுறை சொல்லவேண்டி வரும். சுப்பு நமக்கு முக்கிய தோழி. எப்படி கூனி, சூர்ப்பனகை முதலிய உத்தம ஸ்திரீகள் இல்லாவிடில் ராமாயணம் நடந்திருக்க மாட்டாதோ, அப்படியே நாம் எழுதி வருகிற அற்புத சரித்திரமும் சுப்பம்மாள் இல்லாவிட்டால் நடந்திருக்கமாட்டாது. ஆகையால் தேவர்கள், ரிஷிகள் முதலிய சாதுக்கள் எல்லாரும் கூனி, சூர்ப்பனகை இவர்களுக்கு வந்தனமுள்ளவர்களாயிருப்பதுபோல் நாமும் சுப்பம்மாளிடத்தில் அதிக விசுவாசமாயிருப்போமாக!

கமலாம்பாள் "வாரும்'' என்றவுடன், சுப்பு அவளை நோக்கி, "மதுரையிலேதானே கல்யாணம், நல்ல வேளை

அம்மா! மனதிற்கு இப்பொழுதுதான் சமாதானப்பட்டது'' என, கமலாம்பாள், "ஏதோ தெய்வ சங்கல்பம் போலிருக்கிறது. நாம் செய்கிறோம் நாம் போகிறோம் என்று நினைப்பதேயல்லாமல் யதார்த்தத்தில் நாம் செய்கிறது ஒன்றுமில்லை'' என்றாள்.

சுப்பு, "அவ்வளவுதானே, அப்படித்தான் போகவேண்டும். அதைவிட்டு வீண் வார்த்தை செலவழிப்பதில் கலகத்தைத் தவிர வேறு லாபமுண்டோ?'' என, கமலாம்பாள் "நாம் யாரையாவது தவறிப்போய் ஏதாவது சொல்லிவிட்டோமோ'' என்று சந்தேகித்து, "வார்த்தையா? என்ன வார்த்தை? எப்பொழுது சொன்னேன்?'' என்றாள். சுப்பு, "நீயா! நன்னுயிருக்கு தங்கக்குடம் இன்னுல் உனக்கே தகும்'' என்று சொல்லி முடிப்பதற்கு முன் கமலாம்பாள் 'இவள் யாரோ சொன்ன வார்த்தையை நம்மிடம் சொல்ல வருகிறாள், இதற்கு இடம் கொடுக்கக்கூடாது' என்று எண்ணி சீக்கிரம் உள்ளே சென்று சுப்பம்மாளுக்கு நெருப்புக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, "பலர் பலவிதம் சொல்லுவார்கள், ஊர்வாயை மூட நம்மாலாகுமோ? ஈரப்புடவையுடன் நிற்கிறீர்களே!'' என்றாள்.

சுப்பம்மாளுடைய தொழிலும் திறமையும் அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் அவளைச் சீக்கிரம் வெளியே அனுப்பிவிட்டால்தான் க்ஷேமம் என்று எண்ணி ஜாடையாய், "ஈரப்புடவையுடன் இருக்கிறீர்களே'' என்றாள். சுப்பு அந்தக் குறிப்பை அறிந்தாலும் பொன்னம்மாளுக்கும் அவளுக்கும் கலகம் மூட்டுவது அதிக அவசியமாயிருந்தபடியால் அவள் வெளியே பிடித்துத் தள்ளச் சொன்னுலும் போவதில்லை என்று தீர்மானம் செய்துகொண்டு அருகில் இருந்த ஒரு முட்டையை எடுத்து நெருப்பை மூட்டிக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள். சுப்பம்மாளுக்கும் அவள் சபையாருக்கும் கமலாம்பாளிடத்தில் அதிக வெறுப்பு உண்டு. ஏனெனில், அவள் வம்பர் மகாசபையைப்பற்றிக் கொஞ்சமும் கவனிப்பதேயில்லை. அதில் அரை நாழிகையாயினும் சேர்வதில்லை. அதைச் சற்றும் லக்ஷியம் செய்யாதவள்போல் அவள் நடந்து

வந்தாள். மேலும் கணித சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற வித்வான்களுக்குக் கடினமான கணக்குகளைச் செய்வதில் விசேஷ திருப்தி. காம விஷயத்தில் அழுந்தி, கற்பழிப்பதில் கௌரதாப்பட்டம் பெற்ற விட புருஷர்களுக்கு அனுபவிப் பதற்குத் தயாராய்க் கைவசத்திலுள்ள சொந்த ஸ்திரீகளைக் காட்டிலும் குட்டிச்சுவரேறி குடுமி அறுபட்டு வருத்தத்துடன் அடையும் அன்னிய ஸ்திரீகளை அனுபவிப்பதில் அதிக திருப்தி. அதுபோல் சகல வித்தையிலும் கைதேர்ந்த நாரதருக்கும் மேல் என்று பிரசித்தி அடைந்த சுப்பம்மாளுக்குச் சுலபத்தில் சண்டை செய்யும் சாமானிய ஜனங்களுக்குள் சண்டை மூட்டு வதைக் காட்டுவதிலும் சண்டை என்பதையே அறியாத சாது வாகிய கமலாம்பாளைக் கலகத்தில் இழுத்துவிடுவதில் அதிக திருப்தி. எப்பொழுது தனக்கு சமயம் கிடைக்குமென்று அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவள் சாதாரண நெருப்பை மூட்டுவதோடுகூட கலக நெருப்பையும் அடியில் வருமாறு மூட்டத் தொடங்கினாள் :—

சுப்பு: "நான் ஆத்தங்கரையில் (சுப்புவுக்கு ரகரம் வாயில் நுழையாது; அதற்குப் பதில் அவள் யகரம்தான் சொல்லுவாள் என்று முன்னமேயே சொன்னோம். அந்தப் பரிபாஷையில் கொஞ்சம் பேசிப் பார்ப்போம்.) பொடவே தோச்சிக்கின்டி யிந்தேன். அங்கே குலுக்கி மினுக்கிக்கிண்டு தஞ்சாவூயா வந்தாள். ஒன் ஒய்ப்படி. என் வாயிலே சனி இயுந்தது. வெயுன்னே இயுக்காமல் அவளைப் பாய்த்து உங்க மச்சுனனுத்துத் திண்ணையிலே யாய் உக்காந்தியுக்கியா இன்னு ஒன்னைக் கேக்கல்யோ அதுபோலே கேட்டேன். அதுக்கு அவள், அது யாயுக்குத் தெரியும், எவயுக்குத் தெரியும், கெணத்துத் தப்பளைக்கு நாட்டு வளப்பமேன். ஊய் (ஊர்) எழவெல்லாம் நமக்கு என்னத்துக்கு?' அப்பிடி இன்னாள், நான் "என்னடி—"

கமலாம்பாள்: "அவள் கிடக்கிறாள் பயித்தியக்காரி; யார் சொல்லுகிறாள். அவள்தானே. இதை ஒரு வார்த்தையாக நீங்கள் சொல்லவேண்டுமா?"

சுப்பு: ''ஆமா இந்த சாம்பியாஜ்யத்தைச் சொல்யத்துக் குத்தான் வாசல் விட்டு வாசல் வந்தேன். சொல்யேன் முழுக்கக் கேளு! அப்புயம் நீயே சொல்லுவே. அவளா பயித்தியக்காயி? பல்லுக்குப் பாம்பிலே விஷம் (பாம்புக்குப் பல்லில் விஷம் என்பதற்குப் பதிலாக) அவளுக்கு ஒடம்பெல்லாம் விஷம்; ஒனக்கும் முத்சாமிக்கும் வெளுத்ததெல்லாம் பாலு; பாகமாயபோது அவள் நகையை தியுடினது, கோட்டுக்கு (கச்சேரிக்கு) இயுத்துவிடத் தெயுஞ்சது. சியுபாடு வித்து வட்டிக்குப் போட்டுகிண்டு இயுக்கியது எல்லாம் மயந்து போச்சோ! என்னமோ அவன் சொன்னுப்ளே இயுக்கு தஞ்சாவூயா, அவதான் பயித்தியக்காயி!''

கமலாம்பாள்: ''அவன் புத்திசாலியாயிருப்பது நல்லது தானே, அதனுல் நமக்கென்ன தோஷம். போனதெல்லாம் போகட்டும்; இப்பொழுது நாங்கள் இருவரும் இருப்பது போல் அவ்வளவு நேசமாய் உலகத்தில் யார் இருக்கிருர்கள்?''

சுப்பு: ''ஆ! என்னமோ சொன்னுப்ளேயியுக்கு யாஜா (ராஜா) பொண்ணே கல்யாணம் பண்ணிக்கிண்ட சம்பந்தமாயிய்க்கு நீ நல்லவதான்; ஒன்னே சும்மா இயுக்கவிட்டாத் தானே என்ன கய்வம்! என்ன செயுக்கு! தலே (தலை) கழுத்திலே நிக்கமாட்டேன்கியது. என்னமோ படிச்சி இயுக்கியாளாம் படிப்பு. அதிசயப் படிப்பு என்ன கேலி, எங்களை—''

கமலாம்பாள்: ''என்ன அப்படிச் சொல்கிறீர்கள், நீர் சொல்வது புதிதாயிருக்கிறது எனக்கு. அப்படி எல்லாம் இருக்கமாட்டாளே.''

சுப்பு: ''நீ எண்ணிக்கிண்டுய்க்கே. அவபேச்ய பேச்சைக் கேட்டா புழுத்த நாய் குயுக்கே போகாது. நீ ஆயியம் பொன் குடுத்தாலும் உம்பொண் வேண்டாமாம். எத்தனை வக்கணை! பட்டிக்காட்டுக் குட்டியாம். அழகு இல்லையாம். மூக்கும் முழியும் கயுப்பணசாமி போலே இயுக்காம். கொயந்தைகள் கண்டா யாத்தியி வேளெலே பயந்து கிண்டுடுமாம்.

(இதெல்லாம் சுப்பம்மாளுடைய சொந்தக் கற்பனைகள்.) நம்பெல்லாம் பட்டிக்காட்டுக் கழுதைகளாம். முத்ச்சாமிக்கு ஏதுடா தம்பியே என்ய விசுவாசம் கடையாதாம். அவன் ஆயோ நாம் யாயோ இன்னு இயுக்கியாளும். இம்புட்டா? ஒனக்கு ஒயு நல்ல பெய்ய (பெரிய) கொடை கொடுத்தியுக்கியா. அந்த வசவைக் காதிலே கேக்கப் பிடிக்காது. சொன்ன பாவத்திலே அந்த முண்டெ போயாள். கள்ளனுக்குத் தோணும் திருட்டுப் புத்தி. சுப்பியமணியன் புத்தியை செயுப்பாலடிக்கணும். வேண்டாம் வேண்டாம் இங்கய போதே வடக்கே போய் கல்யாணம் பண்ணிக்கிண்டு வந்தானே!''

கமலாம்பாள்: ''என்ன இப்படி வைகிறீர்களே! என்ன சொன்னுள் என்னை ?''

சுப்பு: ''எனக்கு வயத்தை எயியது (எரிகிறது) முத்ச்சாமி கேட்டான்னு பியியை (பிரியை) கட்டி அவனை இழுத்துப் பிடுவன். அவள் புள்ளை (பிள்ளை) இயுக்கேயில்லையோ, அதை செல்லங் குடுத்துக் குடுத்து கம்மண்டாட்டி வளத்த கழிசையை யாக்கி விட்டெயாம். தாய்க்கும் பிள்ளைக்கும் ஆக விடாமல் அடிக்கியயாம். (இதுவும் சுப்பம்மாள் கற்பனை.) நன்னுயிக்கா வசவு? அப்படி சொன்ன முண்டையை நாக்கை அயுத்தா என்ன? கழுவிலே போட்டுட்டால் என்ன! நீ கல்யாணம் பண்ண ஆயம்பிக்கியது. ஒன் கடுகத்தனை கொயந்தை கயுப்பணசாமி; உன் கல்யாணம் எழவு, நீ ஒளசாயிக் (அவிசாரி) கம்பண்டாட்டி. என்னமாயிக்கு வாயத்தை? அந்த முண்டை தலையிலே நெயுப்பை வைச்சுக் கொளுத்த.''

கமலாம்பாள்: ''மன்னி! அப்படிச் சொன்னுளா? என்னையா? நேரில் சொல்லுவீர்களா ?''

சுப்பு: ''ஒன் புத்திக்கு அவள் அவ்வளவா சொல்லுவாள். (கோபித்து) இன்னும் சொல்லுவள். நான் சொல்யது தான் பொய்; கூட நாகு இயுந்தா, அவளைக் கேள். எனக்கு என்ன பயமா? எதிய (எதிர) வைச்சிக்கிண்டு சொல்யேன் (சொல்லுகிறேன்). சத்தியம் வேண்ணுலும் பண்ணயேன்.''

கமலாம்பாள்: ''உங்களை நம்பலாமா? இப்படியுந்தான் சொல்லுவாளா ஒருத்தி ? சிவ சிவ !''

சுப்பு : '' மயுமானுக்குப் பொண்ணைக் குடுக்கல்யாம் கொண்டே. ஜாதகம் பொயுந்தாட்டா அதுக்கு யாய் என்ன பண்ணுவா ? நடு ஆத்தங்கயையிலே 'பப்ளிக்' ஆக குடியானச்சிகள் கூட இப்படி வசுக்கொள்ள மாட்டாளே. முத்ச்சாமி கிட்ட சொல்லி கண்டிக்கச் சொல்லு. இல்லியோ நெடுக இப்படித்தான் பாத்துக்கோ !'' என்று சொல்லிவிட்டு கமலாம்பாள் யாதும் பதில் சொல்லு; முன்னமே திடீரென்று வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள் சுப்பு.

சுப்பம்மாளுடைய பிரசங்கத்தை நான் அப்படியப்படியே சொல்லவில்லை. அவளுடைய ராகமும், குரலும் பேசுகிற கம்பீரமும் எனக்கு வரவே வராது. மேலும் இடையிடையே முத்துமாலையில் வயிரக்கற்கள் பதித்தாற்போலே அனேக பழமொழிகள் அவள் பிரயோகித்தாள். அவைகளைச் சற்று நாணமுள்ள புருஷர்கள் உச்சரிக்கக் கூடப் பயப்படுவார்கள். அவற்றை இங்கே உள்ளபடி எழுதினால் 'அசுண நன்மாச் செவி பறையெடுத்த போதிலும்' என்றபடி கானத்தில் பிரியமுள்ள அசுணம் என்ற பட்சிக்குத் தம்பட்ட ஓசை எப்படியோ அப்படி இலக்கண இலக்கிய ஆராய்ச்சியுள்ள ஸ்திரீ புருஷர்களுக்கு அப்பழமொழிகளும் பிரசாரங்களும் அருவருப்பை யுண்டாக்குமாதலால், இங்கே அவற்றை எழுதாது விட்டேன்.

6

அந்தப்புர ரகசியங்களும் நிச்சயதார்த்தமும்

சுப்பு போன பிற்பாடு கமலாம்பாள் 'ஒரு பாவத்தையுமறியாத நம்மை இவள் ஏன் இந்தப் பாடுபடுத்துகிறாள், ஜாதகம் பொருந்தாவிட்டால் அதுவும் நம்முடைய குற்றமா? அடடா! இதென்ன வசவு!' என்று பலமுறை நினைத்து

வருத்தப்பட்டாள். இவ்வாறு உலகத்தில் இவ்வளவு கெட்டவர்களாக மனிதர் இருக்க வேண்டுமா என்று வருத்தப்பட்டுக் கொண்டே கலியாண நிமித்தமாக வந்த கிருஷ்ணய்யர், ராம சுவாமி சாஸ்திரிகள் ஆகிய இருவருக்கும் தக்கபடி உபசார முறைகளில் யாதொரு குறைவுமில்லாமல் பாயசம், வடை, போளி, அப்பளம் முதலிய சம்பிரமங்களுடன் விருந்து செய்தாள். போஜனமானவுடன் ஒரு தூக்கம் தூங்கி எழுந்த பிறகு கடைக்குப்போய் சாமான்கள் வாங்கிக்கொண்டு அன்று சாயந்திரமே நிச்சயதார்த்தம் செய்துவிடுவோம் என்று சொல்லிக்கொண்டு கிழவர்கள் இருவரும் திண்ணைக்கு ஒருவராய் நித்திரை செய்யத் தொடங்கினார்கள். முத்துஸ்வாமி அய்யரோ உள்ளே கூடத்தில் கமலாம்பாள் சாப்பிடும் இடத்திற்கு எதிரே ஜமக்காளம் விரித்து ஒரு தூணில் திண்டு போட்டு சாய்ந்துகொண்டு தனது அன்புள்ள மனைவியை நோக்கி உல்லாசமாய் "எங்கள் மாமா தானே வந்திருக்கிறார். உங்கள் மாமா வந்திருக்கிறாரோ? என்ன செய்வாய்" என்று சொல்ல, அம்மாதர் சிரோமணியும் "கண் சிமிட்டைப் பார் எங்கள் மாமா அவர்கள் ஊரிலிருக்கிறாரே? உங்கள் மாமா அவர்கள் ஊரில் இல்லையே, என்ன செய்வீர்கள்," என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுந்தரம் ஓசைப்படாமல் பின்னே தவழ்ந்துகொண்டு வந்து முத்துஸ்வாமி அய்யரை ஒரு மாட்டுத் தும்பால் கழுத்தில் கட்டித் தூணில் இழுத்து மாட்டி விட்டான். முத்துஸ்வாமி அய்யர், "அடடா விட்டு விடடா, நான் போகிறேன் விட்டுவிடடா" என, சிறுவன் "இல்லையப்பா" என்றான். முத்துஸ்வாமி அய்யர், "நான் இருக்கிறது என்கிறேன், நீ இல்லை என்கிறாயா? இதோ பாரடா தும்பு இருக்கிறதேயடா, அவிழ்த்து விடடா" என, கமலாம்பாள், "அப்படித்தான், அப்படித்தான், வேணும் நன்றாய் கட்டு," (தலையை அசைத்துக் கொண்டு) "அகப்பட்டுக் கொண்டாரே விட்டலபட்டர் அகப்பட்டுக் கொண்டாரே" என்று பல்லவி பாடத் தொடங்கினாள். அதற்குள் சுந்தரம் கொஞ்சம் தள்ளி நின்றுகொண்டு "பை, பை, டுர்ர்ரி, டுர்ர்ரி நின்று குத்திக் காளை, டுர்ர்ரி" என்றான்.

மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் 'ஜெல்லிக் கட்டு' என்று ஒரு வேடிக்கை உண்டு. அது என்னவெனில், இருநூறு முன்னூறு மாடுகளை ஒரு தொழுவில் அடையப்போட்டு அவற்றை ஒவ்வொன்ருய் கழுத்தில் ஒரு உருமால் கட்டி வெளியில் விட்டுப் பிடிக்கிறதுதான். அது பட்டிக்காட்டு மனிதர்களுக்கு ஒரு பெரிய திருவிழாவாகையால் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து கூடுவார்கள். ஜெல்லிக்கட்டு என்று சொல்லி விட்டால் போதும், அவர்களுக்கு உண்டாகும் உற்சாகத்திற்கு எதுவும் ஈடு இல்லை. என்ன வேலையிருந்தாலும் அதையெல்லாம் போட்டுவிட்டு சந்தனப் பூச்சென்ன, மருக்கொழுந்து மாலைகளென்ன, சிவப்பு உருமால்களென்ன, கோடி வேஷ்டிகளென்ன, இவ்வித சம்பிரமங்களுடன் விரல்களில் எல்லாம் வெள்ளி மோதிரங்களைக் கணக்கில்லாமல் அணிந்துகொண்டு, கையில் 'சோட்டாத் தடி'களுடன் திரள் திரளாகப் புறப்பட்டு வந்து, மரக்கொம்புகள், வண்டிக் கூடுகள், வீட்டுக் கூரைகள், மதிற்புறங்கள், ரஸ்தாப் பாதைகள் எங்கும் ஏராளமாய் நிரம்பி விடுவார்கள். புருஷர்களுக்குத்தான் இந்த உற்சவம் என்று நினைக்கவேண்டாம். ஸ்திரீகளும், கூர்மையான மூக்குள்ள மனிதர்களைக் கூப்பிடு தூரத்திற்கப்பால் துரத்தத்தக்க மஞ்சளெண்ணெய், வேப்பெண்ணெய் முதலிய 'வாசனை'த் தைலங்களைத் தடவிக்கொண்டு, செவந்திமாலை, புதுப்புடவை, பாசிமணி, பட்டோலை முதலிய சர்வாபரண பூஷிதராய் புருஷருடன் வேற்றுமை தெரியாது வந்து நெருங்கி விடுவார்கள். பளபளவென்று சீவித் தைலந் தடவிய கொம்புகளுடன் உடல் நிறைய, புஷ்பமாலைகளை ஏராளமாய் அணிந்து, கழுத்தில் உருமாலும் கம்பீரமான நடையும் பயங்கரமான பார்வையும் கொண்டு கண்டோர் ரிஷபராஜர்கள் என்று சொல்லும்படியான உயர்ந்த ஜாதி மாடுகள் தொழுவுக்குள் நெருங்குவதும் அங்கு நின்று உருமால் கொண்டு ஓட்டோட்டமாய் ஓடுவதும், மனிதர்கள் அவற்றின்மேல் உயிரை வெறுத்துப் பாய்ந்து அவற்றைப் பிடிப்பதும், பிடித்து உருமாலைக் கழட்டிக்கொண்டு ஹாய் என்று முடுக்குவதும், மனிதர்களை அவைகள் தூக்கிப்போட்டு விட்டு அலட்சியமாய் ஓடுவதும் நாகரிகமற்ற அந்த மனிதர்

களுக்குக் கண்கொள்ளாத காட்சியாயிருக்கும். அம்மாடுகளில் எல்லாம் கூட்டத்தைக் கண்டு வெருண்டு ஓடாமல் நின்று பாயும் மாட்டிற்கு 'நின்று குத்திக்காளை' என்று சொல்லுவது வழக்கம். விசேஷ சந்தோஷத்தை யுண்டுபண்ணக்கூடிய நின்று குத்தி பாயும் மாடு ஒன்று வந்துவிட்டால், மூலைக் கொருவராய் அதை 'டுர்ர்ரி, டுர்ர்ரி' என்று கூவிக் கோபமூட்டி வேடிக்கை செய்வார்கள்.

அதுபோலவே முத்துஸ்வாமி அய்யர் கழுத்தில் தும்பைக் கட்டி கமலாம்பாள் 'பேஷ், பேஷ்' என்று சிரிக்க, சுந்தரம் அவரை 'டுர்ர்ரி' பழக்கினான். அவர் என்ன செய் கிறான் பார்ப்போம் என்று தலைகுனிந்து புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டு சும்மா இருக்க, சிறுவன் "முட்டு அப்பா, முட்டு. நீ தான் மாடாம், முட்டுவாயாம்" என்று முற்றும் திருந்தாத மழலைச் சொல்லால் சொன்னான். பின்னும் அவர் சும்மா இருந்தார். அவர் மனைவி "அந்த மாடு அப்படித்தான் இருக்கும், இந்தக் குச்சி எடுத்துக் குத்து" என்று சொல்லவே சுந்தரம் தும்பை இழுத்துப் பிடித்துக்கொண்டு குச்சியை எடுத்து 'பை பை' என்று ஓட்டத் தொடங்கினான். அய்யர் "இதேதடா இந்தப் பயல்!" என்று சொல்லிக்கொண்டு சுந்தரத்தைப் பார்த்து "நான் மாடில்லையாம், அம்மாள்தான் மாடாம், இந்தத் தும்பை அவள் கழுத்தில் கட்டு. நீயும் நானும் ஓட்டுவோம்" என்று சொல்ல, சுந்தரம் "ஆமாம் அப்பா" என்று சொல்லி அவர் தும்பை அவிழ்த்து சாப் பிட்டுக் கொண்டிருந்த கமலாம்பாள் கழுத்தில் கட்டி அவளை ஓட்ட ஆரம்பித்தான். கமலாம்பாள் "நான் *பொம்மனாட்டி; நான்தான் மாடா! அப்பாதான் மாடு. (அவரைப் பார்த் துக் கொண்டு) கொழுத்த உருமால் கட்டிக்காளை, அவரை ஓட்டு" என்றாள். சுந்தரம் மாட்டு விளையாட்டை மறந்து, "இதோ பாரு, என் கம்பு பேஷான கம்பு" என்று அவளை அடித்து, "நீ அழு அம்மா, அழு" என்றான். அவள்

---

*பெண்-பெண்டாட்டி என்பதே 'பொம்மனாட்டி' என்று மருவி வழங்கப்படுகிறது.

"ஆமாடா அப்பா அழுகிறேன்" என்று சொல்லவே பின்னும் அவளை அடித்தான்.

சுந்தரத்தினிடத்திலிருந்த சாமான்களைப் பார்த்தால் வெகு விநோதமாயிருக்கும். ஒரு ஓட்டைக் கொட்டாங்கச்சி, ஒரு கயிறு, ஒரு மாக்கல், ஒரு பென்சில், ஒரு வெள்ளிக்கல், ஒரு உடைந்த பம்பரம், இரண்டு கோலியுருண்டை, ஒரு துணிப் பந்து இதுபோன்ற பல வஸ்துகள் அவனிடத்தில் இருந்தன. அவனுக்கு இவைகளே ஐசுவரியமாக விளங்கின. உத்தியோகஸ்தர்கள் அடிச்சட்டை, மேல்சட்டை, கைக்குட்டை, கால் நிஜார், ஜோடு, குடை, தலைப்பாகை, கடிகாரம் முதலிய வேஷங்களுடன் கச்சேரிக்குப் போவதுபோல், சுந்தரமும் மாட்டுத் தும்பு, பட்டுக் கயிறு, விசிறிக் கட்டை முதலிய கௌரவச் சின்னங்களுடன் விளையாட்டுக்குப் போவான். முத்துஸ்வாமி அய்யரையும் அவர் மனைவியையும் கண்டு விட்டால் அவனுக்கு வெகு உற்சாகம் வந்துவிடும். அவர்கள் அவனுக்கு முக்கியமான விளையாட்டுத் தோழர்கள். அவனுடன் 'கண் பொத்துதல்', 'மாது மாது', 'கிட்டி அடித்தல்' முதலிய விளையாட்டுக்களை விளையாடும்போது வெகு வேடிக்கையாயிருக்கும்.

அவன் கமலாம்பாளை அடித்தவுடன் கமலாம்பாள் அழுததாக பாவனை செய்யவே, அவன் அதிக திருப்தி அடைந்தவனாய் முத்துஸ்வாமி அய்யரிடம் வந்து "துட்டு கொடுப்பா" என்று அவர் முதுகின் மேல் ஏறிக் குடுமியைப் பிய்க்க எத்தனிக்கும்போது கமலாம்பாள் சாப்பிட்டு எழுந்திருந்து கையலம்பிவிட்டுத் தன் பர்த்தாவின் அருகில் உட்கார்ந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் திடீரென்று ஒரு பெருமூச்சு விட்டாள். அவள் மலர்ந்த முகம் மாறியதைக் கண்ட அய்யர், "ஏன் என்ன சங்கதி?" என்று கேட்க, அவள், "ஒன்றுமில்லை" என்றாள். அவர் மறுபடியும் அழுத்திக் கேட்க அவள் தன் மன வருத்தத்தை அவருக்கும் சொல்லி அவரையும் சஞ்சலப்படுத்துவானேன் என்ற எண்ணத்துடன் மறுபடியும் "ஒன்றுமில்லை" என்றாள். அவர்

அவனை 'சொல்லத்தான் வேண்டும்' என்று கட்டாயம் செய்தார். அவள் "என்னை யறியாமல் எனக்கு வருத்தம் வருகிறது. இன்று பொழுது நன்றாய் விடிந்தது. நான் சுந்தரத்தை அவன் அம்மாளிடம் போக வேண்டாமென்று போதிக்கிறேனாம். அவனை நான் கைம்பெண் வளர்த்த கழிசறை ஆக்கிவிட்டேனாம். நான் தட்டுவாணிக் கைம் பெண்டாட்டியாம், எனக்குக் கிடைத்த மரியாதை" என்றாள். அவர் சுந்தரத்தைப் பார்த்து 'இரு' என்று சொல்லிவிட்டு, 'அப்படிச் சொன்னது யார்?' என்று கேட்க, அவள் "யார் சொல்லுவார்கள்? சொல்ல சுதந்தரமுள்ளவர்கள்தான்" என்றாள்.

அய்யர் உடனே முகம் சிவந்து, "ஆரம்பித்து விட்டாயா ஸ்தலபுராணம் (பல்லைக் கடித்துக்கொண்டு) தெரியுமே உன் சங்கதி. கலகமே பிரதானம்" என்று கோபித்தார். "என்னைச் சொல்லாவிட்டால் உங்களுக்குப் பொழுது போகாது" என்றாள் கமலாம்பாள்.

அதற்கு முத்துஸ்வாமி அய்யர், "பெண்களுக்கே கலகம் தான் தொழில். சுத்த நாய்கள் அப்பா! அதிலும் நீ—"என்று சொல்லி முடிப்பதற்குள் அவள் சிரித்துக்கொண்டு, "புருஷர்கள்தான் நல்லவர்கள்—பரம சாதுக்கள்!" என்றாள். அய்யர் அதிகரித்த கோபத்துடன், "ஆமாம், ஆமாம் புருஷர் கள் இப்படித்தான் கோளும் புரளியும் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். அப்பா! இந்தப் பொம்மனாட்டிகளுடன் சகவாசம் செய்வதைக் காட்டிலும் கழுதை கட்டி மேய்க்க லாம். சீ! ஓயாமல் இதே தொழிலா! நமக்கு நன்றாய் வந்து வாய்த்ததடா சனியன். எது சமயம் என்று பார்த்திருந்து கலகத்தை உண்டுபண்ணுகிறது. கொஞ்சமாவது அறிவிருக் கிறதா பார், கலகக்கழுதை" என்று பல்லைக் கடித்துக் கொண்டு பலவாறு வையத் தொடங்கினார்.

கமலாம்பாள்: (சகிக்கமாட்டாமல் சற்று பதட்டத் துடன்) "எடுத்ததற்கெல்லாம் கோபம் என்றால் அப்புறம் என்ன செய்கிறது?"

அய்யர்: "வாயை மூடு சனியனே. பண்ணுவதை எல்லாம் பண்ணிவிட்டு, எதற்கெடுத்தாலும் கோபித்துக் கொள்கிறேனும். என்னைப் பைத்தியம் பிடித்தவன் என்று எண்ணினுயோ? அப்படித்தான் ஞாபகம் போலிருக்கிறது! கழுதை, நாசமாப்போகிற சனியன்."

கமலாம்பாள்: "நான் நாசமாய்ப் போய்விடுகிறேன், அப்புறமாவது நீங்கள் சுகமாயிருங்கள்" என்றவுடன் முன்கோபிஷ்டராகிய முத்துஸ்வாமி அய்யர், "ஆ! இதுதான் தெரியும். போய்விட்டால் குடிகெட்டுப் போகும், பயமுறுத்து கிருயோ? தொலை சனியனே" என்று ஒரு இடி இடித்து அப்புறம் தள்ளினுர். தள்ளவே, பாவம் கமலாம்பாள் கரகர என்று கண்ணீர் விட்டழத் தொடங்கினுள்.

முத்துஸ்வாமி அய்யர் தன் மனைவிமேல் அதிக வாஞ்சை யுள்ளவராயிருந்தும் அவளிடத்தில் ஒரு அற்ப குற்றத்தையும் சகிக்க மாட்டார். உலகத்திலுள்ள ஸ்திரீகள் எல்லோரிலும் அவள் குணம் சிறந்தவளாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய முக்கிய ஆசை. அவ்வித ஆசைக்கு விரோதமாக அவளிடத்தில் மற்ற ஸ்திரீகளிடத்திலுள்ள குறைவுபோல் ஏதாயினும் ஒரு சிறிய குறையாவது இருக்கிறதாக அவருக்குத் தென்பட்டால், உடனே வெகு கோபம் வந்துவிடும். பெண் களே கெட்டவர்கள் என்பது அவர் அருமையாகப் பாராட்டி வந்த அபிப்பிராயங்களில் ஒன்று. ஆதலால் தன் மனைவி மற்ற ஸ்திரீகள்போல அற்பத்தனமுள்ளவளாகவாவது 'கோள் சொல்லி' என்ருவது அவருக்கு ஜாடையாய்த் தென் பட்டுவிட்டால் போதும். அன்றைக்கு அனர்த்தம்தான். அவர் முன் கோபத்தை அவர் மனைவி தவிர, வேறெருவரும் அறியார். சில புருஷர்கள் மற்றவர்களிடத்தில் பழகும் போது சர்வசாந்தமுள்ளவர்களாயிருந்தும், தங்கள் மனைவி யிடத்து தங்களுடைய கோபத்தைக் காட்டுவதை நாம் அனு பவத்தில் கண்டறியலாம். முத்துஸ்வாமி அய்யர் அடிக்கடி தன் மனைவியைக் கோபித்துக் கொண்டாலும் அனேக சமயங் களில் அவள் அந்தக் கோபத்தை மாற்றிவிடுவாள். ஆனுல் சிற்சில சமயங்களில் அவளும் மனவருத்தத்தைப் பாராட்டி

விட்டால், அவருடைய கோபம் அதிகரித்து, "ஐயோ நாம் வகை மோசமாய்க் கலியாணம் செய்துகொண்டு விட்டோமே!" என்று அவருக்குத் தோன்றும். இது அவருடைய குண விசேஷங்களுள் ஒன்று! ஆனால், அவர் கோபம் சீக்கிரம் அடங்கிப் போய்விடும். சற்று நேரத்திற்கெல்லாம் அவர் மனைவி தன் வருத்தத்தை மறந்து அவரிடம் வலியச் சென்று, அவரைக் குளிர்ந்த வார்த்தைகளால் சந்தோஷிப்பிக்கும் பொழுது, "என் தங்கமே, உனக்கு சமானம் நீதான், இந்த உலகத்தில் என்னைப்போல் பாக்கியம் செய்தவர்கள் யார்!" என்று அவர் அவளிடம் கொஞ்சிக்கொண்டு பேசுவார்.

இவ்விதமாக, இந்த உலகத்தில் நன்மை தீமை எப்படிச் சமமாகக் கலந்திருக்கிறதோ அப்படியே நமது அய்யருக்கு இன்பமும் துன்பமும் கலந்திருந்தது. கமலாம்பாள் தன் ஓர்ப்படி வைத வசவை இவருடன் சொல்ல வாயெடுக்கும் போதே அவள் ஏதோ கலகம் செய்ய எத்தனிப்பதாக இவர் புத்தியில் பட்டு, இவருக்குக் கோபம் உண்டாயிற்று. அப்பொழுது அந்த அம்மாள் சமயமறிந்து சந்தோஷ வார்த்தைகளால் இவர் கோபத்தை மாற்றுததால், அது இன்னும் அதிகரித்தது. அவள் அழத்தொடங்கவே அய்யர் பல்லைக் கடித்துக்கொண்டு, "ஸாகஸம் கூடவா! செய்வதெல்லாம் செய்துவிட்டு அழவும் ஆரம்பிக்கிறாய். பெரிய தெப்பக் குளங்கள் மடைதிறந்து போய்விட்டன. அழு! மூதேவிக் கழுதை!" என்று மறுபடியும் கையாலடித்து அப்புறம் தள்ள அவள் முன்னிலும் அதிகமாக அழுதாள். அது பார்த்து சுந்தரமும் பயத்தால் பதறிக் கயிற்றைக் கைநழுவவிட்டு தன் பெரிய தாயாரைக் கட்டிக்கொண்டு, தலை குனிந்து கடைக்கண்களால் தனது பெரியப்பாவின் கோபத்தாற் சிவந்த முகத்தைப் பார்த்து அழத் துவங்கினான். இவ்வாறு சிறிது நேரம் செல்லவே முத்துஸ்வாமி அய்யருடைய மனம் சற்றுக் கோபம் நீங்கி இளக ஆரம்பித்தது. அவர் தன் மனைவியை அணுகி, "ஏனடி அழுகிறாய்?" என்று இரண்டு தடவை அதட்டிக் கேட்டுவிட்டு, அவளைத் தன்மேல் சேர்த்தணைத்துக்கொண்டு, "உன்னை யார் இப்பொழுது என்ன

சொல்லிவிட்டார்கள். ஏன் அழுகிறாய்? நிஷ்காரணமாய் அழுகிறாயே, இதுதான் எனக்குக் கோபம் வருகிறது. அழாதேயடி. இன்றைக்கு இவ்வளவு போதும் நிறுத்து!" என்று அரை வெறுப்புடன், 'இவ்வளவுதான் நமக்குப் பிராப்தி' என்று தன் மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டு, "வேண்டாமடி கமலா, போதுமடி" என்று அவள் கண்களைத் தன் வஸ்த்ரங்களால் துடைத்தார். அவள் அழுகை ஸாகஸமென்றே அவர் எண்ணம்; ஆயினும் அவள் அழுதது அவருக்கு ஹிம்சையாயிருந்தபடியால் அவளை அவர் ஆற்றலானார். அந்த அம்மாள், "என்ன பிழைப்பு இது! இருந்தால் நன்றாயிருக்கவேண்டும். உங்கள் பிரியம் தவறிவிட்டால் அப்புறம் எனக்கு என்ன இருக்கிறது? என் மன வருத்தத்தை உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லி நான் ஆற்றிக்கொள்வேன். எனக்கு உங்களை விட்டால் கதி என்ன? தாயார் தகப்பனார் எல்லோரையும் விட்டு நீங்களே பிதாவுக்குப் பிதா, மாதாவுக்கு மாதா, பர்த்தாவுக்கு பர்த்தா என்று அந்தரங்கமாய் பக்தி பாராட்டி, என் வருத்தத்தைச் சொல்ல வரும்போது, நீங்கள் கோபித்துக் கொள்வது எரிகிற புண்ணில் நெருப்பை வைத்தது போலிருக்கிறது. 'வருத்தப்படாதே' என்று ஆற்றவேண்டியிருக்க நீங்களே இப்படி உதறி எறிந்தால் அப்புறம் நான் என்ன செய்வேன்? அவள் அப்படி வைதாள் என்றுதானே சொன்னேன். இதில் குற்றமென்ன? அது பொய் நிஜமென்று கூட விசாரிக்காமல் என்னைத் தண்டிக்க ஆரம்பித்தீர்களே!" என்று விம்மி அழ, முத்துஸ்வாமி அய்யர் மனம் உருகி, "கமலா! நான் பண்ணியது தப்பிதமடி, அதை மறந்துவிடு," என்று சொல்லி அவளை இறுகத் தழுவிக் கொண்டு செல்லமான சில வசவுகளை வைதும் வேடிக்கை யான பேச்சுகளைச் சொல்லியும் அவள் விசனம் மாறாததுகண்டு தானும் கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தார். அவர் அழு வதைப் பார்த்து சுந்தரம் முன்னிலும் அதிகமாய் அழ, அவள் தன் அழுகையை நிறுத்திவிட்டு, அவருடைய அழுகையை நிறுத்த முயற்சித்தாள். அவர் தேறி செல்லமாய், "என் கமலா! உன்னோடு டூ—விட்டேன், என்னோடு பேச

வேண்டாம்'' என்று சொல்ல, அவர் மனைவி, ''ஏன் என்ன கோபம்?'' என்று கேட்கவும், அய்யர் குதூகலத்துடன் கை கால்களை அசைத்துக்கொண்டு, ''உன்னை யார் என்ன சொன்னார்களென்பதை நீதான் சொல்லமாட்டேனென் கிறாயே, போ, போ!'' என்று மிருதுவான குரலுடன் சொன்னார். அதற்குள் அவள் அழுதுகொண்டிருந்த சுந்தரத்தை மார்போடணைத்து, ''வேண்டாம் போ எவ்வளவு பிரியம், என் கட்டி மாம்பழம்'' என்று சொல்லிக்கொண்டு கண்களைத் துடைத்து, ''உன் அம்மாள் உன்னை இங்கே வரக் கூடாதென்று சொல்லுகிறாளே, அவள் அப்படிச் சொல்ல லாமா!'' என்றாள். உடனே சுந்தரம், ''இதோ பார்! நான் அவளைப் போய் அடித்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று குபீரென்று கிளம்பினான்.

சுந்தரம் அவன் வயதுக்கு அதிக புத்திசாலி. அவனை வெட்டினாலும் கமலாம்பாளை விட்டுப் பிரிய மாட்டான். ஒரு நாளைக்கு ஒரு தடவைக்குமேல் தன் தாயாரிடம் அவள் பக்ஷணம் வைத்து வருந்தியழைத்தாலும் அவன் போக மாட்டான். கமலாம்பாளைத் தன் தாயார் வைதாள் என்று கேட்டவுடனே அவன் திடீரென்று வெளியிலே கம்பும் கையு மாக ஓடினான். அவனை, ''இங்கே வா, இங்கே வா'' என்று கமலாம்பாள் வாசல் வரையில் பின்தொடர்ந்தாள். அவன் ஓடியே போய்விட்டான். ஏதாவது கலகம் அவனால் நேரிட்டாலும் நேரிடும் என்ற பயம் கமலாம்பாளுக்கிருந்தா லும் பொல்லாதவளாகிய பொன்னம்மாள் முகத்தில் அவளுக்கு விழிக்க இஷ்டமில்லாததால், வாசலுக்கு அப்புறம் அவள் அவனைப் பின்தொடரவில்லை.

சுந்தரம் தன் வீட்டுக்குள்ளே போனவுடன் ரவிக்கை தைத்துக்கொண்டிருந்த தன் தாயாரை, ''அம்மாளை ஏனடி கைம்பெண்டாட்டி என்று வைதாய் நீ?'' என்று ஓங்கி கையில் வைத்திருந்த கம்பால் அடித்தான். அவள் அடியின் வலியினால் மூர்க்கத்தன்மையடைந்து, ''காலாந்தகா! உனக்கு அந்தச் சிறுக்கிதான் அம்மாள். நீ வீட்டை விட்டு வெளியேறு, காலை முறித்துப் போடுகிறேன்,'' என்று சொல்லிக்கொண்டு

ரவிக்கையைக் கீழே போட்டுவிட்டு அவனைப் பிடித்து, அவன் கம்பை முறித்தெறிந்து ஒரு கயிறை எடுத்துத் தூணில் கட்டி, தயிர் கடையும் மத்தால் கால் வீங்கும்படி அடித்தாள். சுந்தரம் போட்ட கூக்குரலைக் கேட்டு உள்ளே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த சுப்பிரமணிய அய்யர் திடுக்கிட்டு எழுந்து, "என்னடி கொலைபாதகி" என்று வர, அந்த ராக்ஷஸி, "இன்றிரவு அவர்கள் வீட்டு நித்தியஸ்ராத்தத்துக்கு (நிச்சயதார்த்தம் என்பதற்குப் பதிலாக) போனீர்களோ, பாருங்கள்!" என்று ஒரு பெரிய அதட்டாய்ப் போட பிராமணர், பாவம் கை கால் நடுங்கி, வாய் குழறி தூரத்தில் நின்றுகொண்டு, "குழந்தையை ஏனடி அப்படி கட்டினாய்?" என்று கேட்டார். "போங்கள் உங்கள் பாட்டைப் பார்த்துக் கொண்டு. கைம்பெண்டாட்டி என்று சொன்னேனாம் நான், பொய்யும் புளுகும், குழந்தை கொள்ளிக்கட்டை கையில் தடியைக் கொடுத்து வைது அடித்துவிட்டு வரச் சொல்லி யிருக்கிறாளே சாமர்த்தியச் சிறுக்கி! அவளல்லவோ பொம்ம னாட்டி! இது ஜடம் என்னை அடக்க வந்துவிட்டது. தூங்கு போ, ராத்திரி நிச்சயஸ்ராத்தத்துக்கு உங்கள் அப்பனானை போகக்கூடாது!" என்று மரியாதையாகப் புருஷனைப் பார்த்துச் சொன்னாள்.

அப்போது ஒரு ஸ்திரீ உள்ளே வந்தாள். அவள் பெயர் நாகு. வம்பர் மஹாசபை அக்ராசனாதிபதியான சுப்பம்மாள், தான் காலையில் கமலாம்பாள் வீட்டில் மூட்டிய கலக நெருப்பு எவ்விதம் எரிகிறது என்று பார்த்துவரும்படி தன் உத்தியோகஸ்தர்களுள் ஒருத்தியாகிய நாகுவைப் பொன்னம் மாளிடம் ஒற்றாய் (வேவு பார்க்க) அனுப்பினாள். இவள் பிரசங்கத்தை நாம் காலையில் ஆற்றங்கரையில் கேட்டோ மல்லவா? பொன்னம்மாள் முத்துஸ்வாமி அய்யரை, 'புருஷக் கைம்பெண்' என்று இகழ்ச்சியாய் வைதாள் என்றும், கமலாம் பாளைத் 'தட்டுவாணிக் கைம் பெண்டாட்டி' என்று வைய வில்லை என்றும், ஆனால் சுப்பு பின் சொன்னவிதம் கமலாம் பாளிடம் சொல்லியிருக்கிறாள் என்றும் நாகுக்கு நன்றாய்த் தெரியும். அவள் உள்ளே வந்தவுடன் 'அடி பாவி' என்று.

கதறிக்கொண்டு, கூச்சலிட்டழுது கொண்டிருந்த குழந்தையின் கட்டை அவிழ்த்துவிட்டாள். பொன்னம்மாள் அவனை, "போடா உள்ளே" என்று வாசலில் போகாதவண்ணம் தடுத்துக்கொண்டு, "நாகு! என்னைக் கைம்பெண்டாட்டி என்று வைது அடித்துவிட்டு வா என்று இந்தக் கொள்ளிக் கட்டையைக் கம்பும் கையுமாய் அனுப்பியிருக்கிறுளே ஒரு பொம்மனுட்டி, நான் வைதேனும், என்னை வந்து இந்த சின்ன எமன் கேட்கிறது!" என்றுள். நாகு ரகசியம் சொல்லுபவள் போல அவளுடைய காதில் மெதுவாய், "நீ அவளுடன் இன்றைக்கா பழகுகிறுய், எனக்கு அவள் சமாசாரம் வெகு நாளாகத் தெரியுமே!" என்றுள். இவ்விதம் இவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதற்குள் பாவம் சுப்பிரமணிய அய்யர், ராத்திரி நடக்கும் நிச்சயதார்த்தத்திற்குப் போகாமல் எவ்விதம் தப்புகிறது. போனுல் இந்த ராக்ஷஸியினுடைய விரோதம்; போகாவிட்டாலோ தமையனுடைய விரோதம். அவர் என்ன தான் செய்வார்! அவர் நித்திரை இந்த விசாரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்து போய்விட்டது. ஒரு வேளை "இவள் கிடக்கிறுள்; தமையன் பிதாவுக்குச் சமானம். அவர் என்மேல் வைத்திருக்கிற பிரியத்திற்கு நான் போகாமலிருக்கலாமா?" என்றும், அடுத்த நிமிஷத்தில் "இவள் நம்மை மறந்துவிடுவாளே, அப்புறம் வீட்டுப்பக்கம் நமக்கு வேலையில்லை" என்றும் யோசிப்பார். இப்படி அஸ்தமிக்க மூன்று நாழிகை மட்டும் யோசனை செய்துவிட்டு "ஓஹோ நிச்சய தார்த்த காலம் சமீபித்து விட்டதே! தெய்வமே என்ன செய்வேன்! ஒரு உபாயமும் தோன்றவில்லையே! பொன்னம்மாளைக் கேட்போமென்றுல், 'ஜடம், பயங்கொள்ளி' என்று வைது திட்டுவாளே ராக்ஷஸி, இருக்கட்டும்" என்று தனக்குள் இவ்வாறு யோசனை செய்தபிறகு தம் மனைவியிடம் போய், "நான் அண்ணுவகத்துக்குப் போகாமலிருக்கக்கூடாது; போகத்தான் போவேன் உனக்கென்ன வெறுமனே" என்றுர். "அதைத்தானே இன்று பார்க்க வேணும்; நானும் இங்கேயே இருக்கிறேன். எப்படித்தான் போகிறீர்கள் பார்ப்போம்!"

என்று அந்தப் பிடாரி கண்டிப்பாய் பதில் சொன்னாள். அப்பொழுது அய்யர், "நீயும் குழந்தையைக் கூட்டிக்கொண்டு எங்கேயாகிலும் போய்விடு; நானும் அண்ணா வீட்டுக்குப் போகவில்லை, என்னை உள்ளே விட்டுக் கதவைப் பூட்டிவிட்டுப் போய்விடு!" என்றார். அதற்குப் பொன்னம்மாள், "நான் இங்கேயே தானிருப்பேன். நீரும் (மரியாதையாக) வீட்டை விட்டு வெளியேறினீரோ, காலை முறித்துவிட்டேன், பத்திரம்" என்று கூறவும் சுப்பிரமணிய அய்யர், "என்னடி, போடி, விளையாடாதேடி, அப்புறம் வீண் பொல்லாப்பு வரும். நீ கதவைச் சாத்திக்கொண்டு போடி" என்றார். அம்மாள், "என்ன, 'ஞுஞ்ஞுமிஞ்ஞு' சும்மா இங்கேதானே கிட" என்றதும் அய்யர் பல்லையிளித்துக் கொண்டு அவளைக் கெஞ்சாத-வண்ணம் கெஞ்சி, வெளியே கதவைப் பூட்டிப் போகச் சொன்னார். அவள் அப்பொழுதும் போயிருக்கமாட்டாள். ஆனால் சில விசேஷ சமாசாரங்கள் வம்பர் மகாசபையில் தெரியப்படுத்தவேண்டிய தவசியமா யிருந்தது. ஆதலால் அவள் கதவைப் பூட்டிக்கொண்டு அப்படியே சபைக்குச் சென்றாள். அய்யர் கோட்டான்போல் விழித்துக்கொண்டு உள்ளே தனியாக உட்கார்ந்திருந்தார்.

இது நிற்க, பெரிய வீட்டுத் திண்ணையில் படுத்திருந்த கிழவர்கள் இருவரும் எழுந்திருந்து முத்துஸ்வாமி அய்யருடன் நிச்சயதார்த்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். சிறுகுளத்திலுள்ள எல்லா ஜனங்களும் முத்துஸ்வாமி அய்யர் வீட்டுக் கூடத்தில் வந்து கூடினார்கள். ஆனால், சுப்பிரமணிய அய்யரை மாத்திரம் காணோம். முத்துஸ்வாமி அய்யர், "யாரடா *சுப்புளி! சுப்பிரமணியனைப் பார்த்துக்கொண்டு வா, முட்டாள், சமயத்துக்கு எங்கேயோ போய்விடுகிறான்" என்றார்.

வம்பர் மஹா சபைக்குப் போயிருந்த பொன்னம்மாள் அன்று நடந்த புராணம் முழுவதையும் சவிஸ்தாரமாய் அரங்கேற்றிய பிற்பாடு சபையைவிட்டு வீட்டுக்கு வந்து தானும்

---

* சுப்பு பிள்ளை என்பது சுப்புளி என மருவி விட்டது. அவன் பெயர் வேம்பு.

தன் மைத்துனர் வீட்டிற்குப் போகாததற்கு உபாயம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் கதவைத் திறந்து சுப்பிரமணிய அய்யரைக் கையைப்பிடித்துச் சரசர என்று இழுத்து ஒரு பாயின்மீது படுக்கச்செய்து, நாலைந்து துப்பட்டிகளை அவர் மேலே போர்த்தி, அவரிடம், "யாராவது கூப்பிட வருவார்கள், அப்பொழுது உமக்கு 'ஒரு தலைவலி' என்று நான் சமாதானம் சொல்லியனுப்பிவிடுகிறேன். நாமிருவரும் போக வேண்டாம்" என்ருள். சுப்பிரமணிய அய்யர் நமக்கு தெய்வம்தான் பொன்னம்மாளாய் வந்திருக்கிறது என்று மகிழ்ந்து, "ததாஸ்து" என்ருர்.

சுப்புளி வருகிற காலடி அரவம் கேட்கவே, சுப்பிரமணிய அய்யர் பலமாய் அலட்டத் தொடங்கினுர். அவர் மனைவி, அய்யர் தலையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "பொறுத்துக் கொள்ளுங்கள், என்ன செய்வோம், படுவதெல்லாம் நாம் தானே படவேண்டும்" என்று சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தாள். சுப்புளி என்ற அதிசய நாமத்தையுடைய தூதன் உள்ளே வந்தபொழுது அய்யர் கோலத்தைக் கண்டு வருத்தமுற்று 'என்ன உடம்பு?' என்று சமிக்ஞை செய்து கேட்டான். அய்யர் ஏதாவது தாறுமாருய் உளறி விடுவார் என்று பயந்து பொன்னம்மாள் விரைவாய், "இத்தனை நாழிகை வெளியிலே போய்விட்டு இப்பொழுதுதான் வந்தார். வந்ததுதான் தாமதம். திடீரென்று கீழே அலறிக்கொண்டு விழுந்தார். நான் துவையலரைத்துக் கொண்டிருந்தேன், ஓடி வந்து என்னவென்றேன். அப்பா! தலைவலி என்று சொன்ன வார்த்தைதான். ஒரு நாழிகையாய் ஓயாமல் இந்த அலட்டல்தான், ஏன் என்று கேட்பாரைக் காணேம்! நான் தனியாயிருந்து போராடுகிறேன். நிச்சயதார்த்தம் என்ன கல்யாண முகூர்த்தமா? இன்றைக்கில்லாவிட்டால் நாளை வெள்ளிக்கிழமை ஆகாதா? அதுகூட நாம் யார் சொல்வதற்கு! ஆனுல் தம்பி வர வேண்டுமென்பது அவசியமா? நடக்கட்டும். நான்கூட வருவதற்கில்லையே என்று எனக்கிருக்கிற வருத்தம் எனக்குத் தெரியும். சம்பந்திகள்தான் கூப்பிட வரவில்லை. அண்ணுவாவது நினைத்துக்கொண்டாரே. வேம்பு நீ நல்ல பிள்ளையப்பா. அவர்கள் சொல்லாமல்கூட நீ கூப்பிட

வருவாய்; உனக்கு சமானமா?'' என்று சொன்னுள். சுப் புளிக்கு 'தீச்சன் தலையில் புளியம் சாத்துக்கூடையை வைத்த' கதையாய் நம்மையல்லவோ இவ்வளவு புகழ்கிருள் என்ற சந்தோஷம் உண்டாய் திக்கிக்கொண்டு, "உ-உ உண் மை—மை-மைச்சனர் எ-எ-எங்கேயீன்னுர், நாஞு ஆஞு கூ கூ கூப்ட வந்தேன்'' என்று சவுக்கத்தில் பல்லவி சங்கதிகளுடன் மறு மொழி சொன்னுன். இந்தத் திக்குவாய்ப் பாண்டியன் மறு மொழி சொல்லிவிட்டு வீட்டிற்குப் போவதற்குள் அங்கே நிச்சயதார்த்தம் ஆகிவிட்டது. வருகிற சித்திரை மீ 18உ திங்கட்கிழமை என்று கலியாண முகூர்த்தம் பார்த்தாகி விட்டது. ஆனுல் முத்துஸ்வாமி அய்யருக்கு மட்டும் ஒரு விசாரம். அதென்னவெனில் நம்முடைய தம்பி நிச்சயதார்த்தத்துக்கு ஒரு தலைவலியைச் சம்பாதித்துக் கொண்டான். கலியாணத்துக்கு என்ன சாக்கு சம்பாதிப்பானே? ஒரு வேளை ஜுரம் ஏதாவது வந்துவிடுமோ என்பதே!

———

7

தமிழ் வித்வான் அம்மையப்ப பிள்ளை அவர்கள்

இப்பொழுது சிறுகுளத்தைவிட்டு மதுரைக்குப் போய் வருவோம். மதுரையில் நமக்குக் கொஞ்சம் காரியம் இருக்கிறது; அதைப் பார்த்துக்கொண்டு சிறுகுளத்தில் நடக்கப் போகிற பெரிய கலியாணத்துக்கு மாப்பிள்ளை, சம்பந்தி முதலானவர்கள் வரும்போது அவர்களுடன் கூடவே வந்துவிடுவோம். நமக்கு மதுரைக்குப் போகவேண்டி பல்லக்கு, குதிரை இவை ஒன்றும் தேவையில்லை. முற்காலத்து ரிஷிகளிடத்தில் 'கமன குளிகை' என்று ஒரு அருமையான வஸ்து இருந்ததாம். அதில் ஒன்று எடுத்து வாயில் போட்டுக்கொண்டால் எந்த இடத்துக்கு வேண்டுமோ அந்த இடத்துக்குக் கொண்டுபோய் விடுமாம். நமக்கு அம்மாதிரி குளிகைகளின் உதவிகூடத் தேவையில்லை. நினைப்பின் மாத்திரத்தில் இடம் விட்டு இடம் போக சாமர்த்தியமுண்டல்லவா?

மதுரையில் 'ஜில்லா ஸ்கூல்' என்று பெயர் வழங்கிய கமர்ன்மெண்டு காலேஜ் என்ற பள்ளிக்கூடத்தின் தாழ்வாரத்தில் ஒரு மூலையில் சில பெஞ்சுகளும் அவற்றின் மத்தியில் ஒரு நாற்காலியும் மேஜையும் போடப்பட்டிருந்தன. அந்த மேஜையின்மேல் சில மைக்கூடுகள் இருந்தன. 'டிங்டாங்' என்று பத்தாவது மணி அடித்தவுடன் அவ்விடத்தில் சுமார் இருபது பையன்கள் வந்து கூடினார்கள். அவர்கள் வந்து ஐந்து நிமிஷத்திற்குள் அம்மைத் தழும்புகள் நிறைந்த முகத்தையும் நீண்ட கருத்த உருவத்தையுமுடைய ஒரு மனிதர் அங்கே வந்தார். அவர், அந்தப் பள்ளிக்கூடத் தமிழ்ப் பண்டிதர். அவர் பெயர் அம்மையப்ப பிள்ளை. அவருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கலாம். அவர் பிறந்த ஊர் 'ஆடுசாபட்டி' என்று ஐந்தாறு வீடுகளும் ஒரு புளிய மரமும் உள்ள ஒரு பெரிய பட்டணம். அவர் அகாத சூரர். எமகம், திரிபு என்று இப்படிப் பாட ஆரம்பித்தாரானால் குரங்குகள் அத்திப்பழத்தை உதிர்ப்பதுபோல் சடசட வென்று உதிர்த்து விடுவார். யாராவது தமிழ் தெரிந்தவன் அவர் கையிலகப் பட்டு விட்டால், ராமபாணம் போட்டாற்போல மூச்சு விடு முன்னே முந்நூறு நானூறுக் கணக்காகப் பாட்டுகளை வீசி அவன் காதைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து விடுவார்.

ஒரு காலத்தில் தமிழ் தெரியாத ஒரு பைராகிக்கும் ஒரு சாஸ்திரியாருக்கும் சண்டை உண்டாகி விட்டது. பைராகி தன் வசவுகளில் 'காரே, பூரே' என்று அபரிமிதமாய் வைய, சாஸ்திரியார் முட்டாள், போக்கிரி என்றிப்படித் தனக்குத் தெரிந்த வசவுகளை யெல்லாம் வைது பார்த்தார். அவன் வாயொடுங்குகிற வழியாகவில்லை. அய்யர் பழைய வசவுகளுக்கு இவன் கட்டுப்பட மாட்டான் என்று நினைத்து புது மாதிரியாக, "அடா போடா, புஸ்தகமே, சிலேட்டே, பென்சிலே, கடப்பையே" என்று இப்படி வாயில் வந்த வார்த்தையை எல்லாம் வசவாக அடுக்கவே, அந்த பைராகி புது வசவுகள் அகப்படாமல் திண்டாடித் தத்தளித்துப் போனான். அதுபோல அம்மையப்ப பிள்ளையுடன் ஏதாவது ஒரு விஷயத்தைக் குறித்துத் தர்க்கம் செய்ய ஆரம்பித்தால் ஆயிரக்-

கணக்காகப் பாட்டுகளைச் சொல்லி எதிராளியின் வாயை அடக்கி விடுவார். அந்தப் பாட்டுகள் எடுத்த விஷயத்திற்குச் சம்பந்தமில்லாவிட்டால் என்ன? அதனால் என்ன குறைவு? பாட்டுகள் பாட்டுகள்தானே! அதுவும் அவர் பாட ஆரம்பித்தால் அவருக்குச் சரியாக மகா வைத்தியநாதய்யர்கூடப் பாட முடியாது.

ஒரு நாள் மதுரை கட்டை செட்டி மண்டபத்தில் நமது புலவர் கம்பராமாயணத்தில் சீதா கல்யாணப் படலத்தை விவரித்துப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது தற்செயலாய் தெரு வழியே போன ராம பக்தன் ஒருவன் ராமன் என்ற பேரைக் கேட்டு விட்டு, ராமகதை போலிருக்கிறது கேட்போம், என்று உள்ளே வந்தான். அப்பொழுது அம்மையப்ப பிள்ளை வாயினின்றும் எச்சில் காத வழிக்குத் தெறிக்க, கண்கள் சிவந்து வெகு உக்கிரகமான முகத்துடனும் கடூரமான குரலுடனும் அதிக உற்சாகமாய்ப் பிரசங்கம் செய்ய, வந்த ராமபக்தன் ராம-ராவண யுத்தம் போலிருக்கிறது. அதுதான் இவர் இவ்வளவு கோபாவேசமாயிருக்கிறார். நல்ல பக்தர் போலும்' என்று இவரை மனதுக்குள் கொண்டாடிக் கொண்டிருக்கும்போதே புலவர், "ராமன் சீதையைக் கல்யாணம் பண்ணிக்கொண்டான். சீதையைக் கல்யாணம் பண்ணிக்கொண்டான் ராமன்" என்று கைகளை வீசிக்கொண்டு கர்ஜித்தார். அதைக் கேட்டு அந்த ராம பக்தன் திடுக்கிட்டு எழுந்து கண்களில் தீப்பொறி பறக்க, "ராமன் அப்படித்தான் சீதையைக் கல்யாணம் செய்து கொள்வான். அதற்கு நீர் என்ன ஓய் கோபிக்கிறது!" என்று அதட்டிக்கொண்டு அவரை ஓங்கி அடிக்கச் செல்லவே, சுற்றியிருந்தவர்கள் அந்த ராம பக்தனைக் கைப்பிடித்திழுக்க, அவன், "விடுங்கள், சீதையை மணம் செய்ததற்கு இவ்வளவு கோபம் கோபிக்கிற சண்டாளனைக் கொல்லுகிறேன்!" என்று சொல்ல, "அது கோபமல்ல, உள்ள சாந்தமே அவ்வளவுதான் அவருக்கு" என்று சொல்லி அவனைச் சமாதானப் படுத்தினார்கள். பிள்ளை அவர்களோ நடுநடுங்கி பாதிக் கல்யாணத்தில் நிறுத்திவிட்டு, 'ராமன்பாடு, சீதைபாடு,

அவர் விஷயத்திற்கு நான் வரவில்லே, போதும்போதும்' என்று அன்றுமுதல் பொது ஸ்தலங்களில் கதாபிரசங்கம் செய்வதை நிறுத்திவிட்டார். இவ்விதம் சங்கீத ஞானம், சாரீர சம்பத்து, தமிழ் வித்வத்துவம் இவைகளில் இவர் சிறந்தவரா யிருந்தது மன்றி நல்ல புத்திமாளுயும் இருந்தார்.

ஒரு காலத்தில் அவருக்கும் அம்மாபட்டிக் கவண்டயன் கோட்டைக் கவிராயருக்கும் அன்ன நடை என்று நடைக்கு விசேஷமாகக் கூறும் அன்னப்பட்சி உலகத்தில் தற்காலத்தில் உண்டா? இருக்குமாளுல் அது எது? என்ற பெரிய விஷயத்தைப்பற்றி யுத்தம் நடந்தது. கவிராயர், "அன்னம் என்பது காக்கையா யிருக்கவேண்டும். ஏனெனில் காக்கை யொன்றே பட்சிகளுக்குள் நடையிற் சிறந்ததாயிருக்கிறது. ஆனதுபற்றிக் காக்கையே அன்னப்புள்ளாதல் வேண்டும்" என்று அதற்கு ஆதாரங்கள் காட்டிச்சாதித்தார். அம்மையப்ப பிள்ளே "அல்ல, அல்ல. அன்னம் என்ருல் சாதம்; அன்னமும் வெள்ளே, சாதமும் வெள்ளே. சாதத்திற்கே அன்னமெனப் பெயருண்டு. மேலும் அன்னமும் பட்சி; சாதத்தையும் நாம் பட்சிக்கிருேம் (சாப்பிடுகிருேம்). ஆதலால் சாதத்தையே அன்னமென்று—தட்டுபவனேத் தட்டான் என்று சொல்லுவது போல்—உருவக நவிர்ச்சியலங்காரத்தில் சொல்லப்பட்டிருக் கிறது" என்று அதற்குப் பிரமாதமாய் ஆயிரம் பாட்டுகளே யெடுத்து ஆதாரம் காட்டிச் சண்டப்பிரசண்டமாய் ஆட்சே பித்தார். முதலில் இந்த யுத்தம் கடித மூலமாகவே நடந்தது. பிறகு இரண்டு வித்வான்களும் நேரிலே மதுரையிலேயே சந்தித்து பத்துநாள் இரவும் பகலும் அண்டை வீட்டுக் காரரைத் தூங்க விடாமல் யுத்தம் பண்ணிஞர்கள். கடைசி யில் ஒருநாள் ராத்திரி அம்மையப்ப பிள்ளே கவண்டயன் கோட்டைக் கவிராயாரை, அன்னத்தைக் காக்கையென்று சொன்னதற்காகக் 'காக்கை'யென்று பரிகாசம் செய்தார். அவர் இவரை அன்னத்தைச் சாதம் என்று சொன்னதற்காகச் 'சாப்பாட்டு ராமா' என்று பரிகாசம் செய்யவே, இவர் அவரைக் 'கவிராயர் குரங்குராயர்' என்ருர். (கவி என்ருல் குரங்கு என்று அர்த்தம்.) அவர் இவருடைய அம்மைத்

தழும்பு நிறைந்த முகத்தைச் சுட்டிக்காட்டி 'அம்மையப்ப பிள்ளை என்றால் உமக்கே தகும்' எனவே இருவருக்கும் கோப முண்டாகி அவரை அடிக்கச் சென்றார். கவிராயர் "உமக்கு நான் இளைத்தவனா!" என்று திருப்பி அடிக்க வந்தார். இதற்குள் காவல் காக்கும் போலீஸ்காரர்கள் இவர்களுடைய நிலைமையைக் கண்டு 'தமிழ் வித்வான்கள் தர்க்கம், இதில் நாம் பிரவேசிக்கக் கூடாது' என்று அறியாமல், அநியாயமாய் அவர்களைப் பிரித்து விட்டு விட்டார்கள். மறுநாள் காலைப் பொழுது விடியுமுன்னமேயே கவிராயர் ஒருவரும் அறியாமல் ஊர்போய்ச் சேர்ந்தார். அம்மையப்ப பிள்ளை அவர் ஓடிப் போய்விட்டாரென்று செவ்வையாய் விசாரித்துக்கொண்டு தான் அவரை வென்றுவிட்டதாகப் பெருமை பேசிக்கொண் டார். அம்மா பட்டியிலோ கவிராயர் அம்மையப்ப பிள்ளையை ஜெயித்துவிட்டதாகப் பிரஸ்தாபம். அன்னப் பட்சியைப் பற்றிய தர்க்கம் இவ்வாறு முற்றிற்று.

இவ்வளவு பிரதாபத்தையுடைய அம்மையப்ப பிள்ளை யவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்தவுடன் சுற்றும் முற்றும் கம்பீரமாகப் பார்த்துவிட்டு தமது ஆசனத்திலெழுந்தருளி னார். அவரைச் சுற்றியிருந்த வகுப்பு 'மெட்ரிக்குலேஷன்' வகுப்பு. அப்பொழுது நளவெண்பாப் பாடம். அதில் சுயம்வர காண்டத்தில் 'கோதைமடவார்தங் கொங்கை மிசைத் திமிர்ந்த' என்ற பாட்டைப் படித்துவிட்டு, தான் படித்ததை கேட்டு, எல்லோரும் மெச்சுகிறார்களா வென்று சுற்று முற்றும் பார்த்தார். அந்த வகுப்பில் ராமசாமி என்ற ஒரு பையன் உண்டு. அவன் வெகு வேடிக்கையாகப் பேசுவதால் அவனைத் 'தெனாலிராமன்' என்று பையன்கள் கூப்பிடுவது வழக்கம். அந்தத் தெனாலிராமன் வாத்தியார் குறிப்பை யறிந்து, "ஸ்வாமி, இன்னொருதரம் படிக்கவேணும், கேட்கக் கேட்க இன்பமாயிருக்கிறது. புத்தகமோ நளவெண்பா, படிப்பதோ இன்னாரென்று சொல்ல வேண்டாம்" என, உபாத்தியாயர் உள்ளங் குளிர்ந்தவராக, "படிக்கிறது யார்? ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளை என்று சொல்லேன்?" என்றார். பையன், "சுவாமி, தாங்கள் பேர் முழுவதும் நன்றாகச்

சொல்லவேண்டும்'' என்றதும் குரு, ''என் பெயரா, சொல்லு கிறேன் கேள்! 'கடல்சூழ்ந்த இந்நிலவலயத்திற்கு ஓர் திலகம் போன்ற ஆடுசாபட்டி மகாவித்வான் அம்மையப்ப பிள்ளை'' என்றார். தெனாலிராமன் (மெதுவாக) ''ஒரு வண்டி காணாது போல் இருக்கிறதே'' என்று சொல்லிவிட்டு, ''சுவாமி, முன் போல முழுவதும் சொல்லவில்லையே'' என்றான். வாத்தியார் நாழிகையாகிறது, மேலே சொல்வோம்'' என, பையன், ''முழு வதும் சொன்னால்தான்'' என்றான். உடனே வாத்தியார், ''கடல்சூழ்ந்த இந்நிலவலயத்திற்கு ஓர் திலகம் போன்ற ஆடுசா பட்டியில் அவதரித்த அண்டர் புகழும் அஷ்டாவ தானம் அருந்தமிழ்ப் புலவர் மகாவித்வான் அம்மையப்ப பிள்ளை அவர்கள். இப்பொழுது சரிதானா?'' என்றதும் எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். வாத்தியார் வாயில் கை பொத்திக்கொண்டு, ''சிரிக்காதேயுங்கள், ஹெட்மாஸ்டர் வந்துவிடப் போகிறார்,'' என்று சொல்லிவிட்டு, மறுபடி பாட்டைப் படித்து, ''மாவிந்த நகரத்தில் ஸ்திரீகள் மார்பி லணிந்த சந்தனமானது அவர்கள் ஸ்நானம் செய்யும்பொழுது சேறாகித் தெருவெல்லாம் நிறைந்திருப்பதால் அந்நகரத்து வீதிகளில் செல்லும் யானைகள் அச்சேற்றில் வழுக்கி விழுகின்றன. அவ்வளவு சந்தனம், அவ்வளவு சேறு, பேஷான பாட்டு, ஆஹா!'' என்று பிரசங்கித்துவிட்டு மறுபடியும் அந்தப் பாட்டைப் படிக்கப்போனார். அப்பொழுது தெனாலி ராமன் எழுந்து, ''சுவாமிகளே, ஒரு சந்தேகம், அந்த ஊரில் யானைகளே அந்தப் பாடுபட்டால், மனிதர்கள் நடப்பது தெப்படி?'' என்றான்.

வாத்தியார் : ''அந்த ஊரில் மனிதர்கள் நடப்பார் களோ! பல்லக்கு சவாரி செய்வார்கள். இந்தத் தரித்திரப் பட்டணங்களைப் போலவா?''

தெனாலிராமன் : ''சுவாமி, எல்லோரும் பல்லக்கேறினால் சுமக்கிறவர்கள் யார்? சுமக்கிறவர்கள் என்னமாய் நடப்பார்கள்?''

வாத்தியார் : ''பல்லக்கு என்றால் பல்லக்கா? சாரட்டு களில் சவாரி செய்வார்கள்.''

தெனுலிராமன்: "அப்படியானுல் குதிரைகள் வழுக்கி விழாதோ?"

வாத்தியார்: "இப்படி யெல்லாம் கேட்டால் சரிப்படுமா? பாட்டில் மூன்று சங்கதிகள் சொல்லி யிருக்கிருர். புகழேந்தி யின் சாமர்த்தியமே சாமர்த்தியம், என்ன? அவ்வூரில் சந்தனம் ஏராளமாகப் பூசிக்கொள்கிருர்கள். அது தெரு வெல்லாம் சேருகிறது. மூன்ருவது அந்த ஊரில் யானைகள் உண்டு."

இன்னெரு பையன் எழுந்து, "சுவாமி, இன்னும் இரண்டு சங்கதிகள் விட்டுவிட்டீர். அந்த ஊரிலேகூட ஸ்திரீகள் உண்டு, இரண்டாவது அவர்கள்கூட ஸ்நானம் செய்வது உண்டு" என்ருன். வாத்தியார், "கலிகாலத்துப் பிள்ளைகள்! மகா அதிகப்பிரசங்கி! பேச்சு மிஞ்சுகிருற்போல இருக் கிறது" என்றபடி "அப்பா, நான்தான் அதிகப் பிரசங்கி, நீங்கள் எல்லாம் பெரியவர்கள்" எனக் கோபித்துக் கொண்டு பின்னுள்ள பாட்டுகளை வாசித்து அதிவேகமாய் அர்த்தம் சொல்லிக்கொண்டு போகவே, பையன்கள் இவர் பிரசங்கத் தைச் சற்றும் கவனியாமல் சிலர் வம்பு பேசினுர்கள். சிலர் அடுத்தமணிப் பாடத்தைப் படித்தார்கள், சிலர் தூங்கினுர் கள். சிறிது நேரத்திற்கெல்லாம் வாத்தியாருக்கும் தூக்கம் வந்துவிட்டது.

> "நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
> ஓடி வளைகின்ற தொப்பவே—நீடியநல்
> பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக்கொடு போந்து
> தங்கோவின் முன் வைத்தார் தாழ்ந்து"

என்ற பாட்டைப் படிக்கத் தொடங்கி, 'நாடி மடவன்னத்தை நல்லமயிற்' என வாசித்தார். 'குழாம்' என்ற வார்த்தை தூக்கத்தில் போய்விட்டது. வாத்தியார் தலை இரண்டு தடவை ஆடிற்று. பிறகு அவர் திடுக்கிட்டு தன் சிவந்த கண்களை விழித்துக்கொண்டு 'ஓடி வளைக்கின்ற தொப்பவே— நீடியநல்' என்று வாசித்த பிறகு ஐந்து நிமிஷம் மௌனம். பிறகு சற்றுக் கண் விழித்துக்கொண்டு ஈனஸ்வரத்துடன்,

தூங்கவில்லை போலும், ஏதோ ஒன்றை யோசித்தவர் போலும் பாவனை பண்ணிக்கொண்டு, "அப்படியா! இப்பொழுது சரியாயிருக்கிறது" எனச் சொல்லிக்கொண்டே 'பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றி' என்று படித்தார். அப்புறம் பேச்சு மூச்சைக் காணோம்.

இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சில பையன்கள் வாத்தியார் தூங்கிப் போய்விட்டார் என்ற செய்தியை மற்றவர்களுக்கும் பரவச்செய்யவே கிருஷ்ணஸ்வாமி என்ற ஒரு பையன், "பேசாமல் இருங்கள், வேடிக்கையைப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு, கொஞ்சம் சீமைச் சுண்ணாம்பைப் பொடிபண்ணி சந்தடி செய்யாமல் தன் சிரிப்பை அடக்கிக்கொண்டு மேஜையிலுள்ள மை நிறைந்த ஒரு மைக்கூட்டிற்குள் போட்டு விட்டான். அந்த மை சற்று நேரத்திற்கெல்லாம் 'டபீர்' என வெடித்துப் பொங்கி அம்மையப்ப பிள்ளையின் கண், மூக்கு, முகம் சட்டைகளிலெல்லாம் பாயவே, அவர் பாவம் திடுக்கிட்டு விழித்து, "இது எந்தப் போக்கிரிப் பையன் பண்ணின வேலை" என்று எழுந்திருக்க, பையன்களெல்லாம் கொல்லென்று சிரித்தார்கள். தெனாலி ராமனோ வாத்தியார் நிலைமையைக் கண்டு பரிதவித்தவன் போலக் கிட்டச் சென்று, "அடடா, மூக்கு முகம் எல்லாம் மையாய் விட்டதே. அதாவது போகிறது! சட்டை யெல்லாம் மையாகிவிட்டதே ஸார், இது எந்தப் பயல் பண்ணின வேலை? முட்டாள்பயல்கள், இருக்கிற ஒரு சட்டையிலும் மையைக் கொட்டி விட்டால் அப்புறம் ஸார் நாளை என்ன பண்ணுவார் என்று அறியவேண்டாமா! நீங்கள் இருக்கிற போதே யார்தான் இப்படிச் செய்யக்கூடும்? நீங்கள் இன்றைக்குத் தூங்கக் கூடவில்லையே!" என்று சமாதானம் பண்ண, வாத்தியார், "எந்தப் பயல் செய்தது? மரியாதையாய் உண்மையைச் சொல்லி விடட்டும், மன்னித்து விடுகிறேன். இல்லாவிடில் ஹெட்மாஸ்டரிடம் சொல்லிப் பேரையடிக்கச் சொல்வேன்!" என்று பயமுறுத்தினார். முத்துஸ்வாமி என்ற பையன், "நீங்கள் ஹெட்மாஸ்டரிடம் போய்ச் சொல்லுங்கள் சுவாமி, அதுதான் சரி. இல்லாவிடில்

உண்மை வெளிப்படமாட்டாது!'' என்ருன். ராமையா என்ற பையன், ''வாத்தியார் பள்ளிக்கூடத்தில் தூங்கினது உண்மையா?'' என்ருன். ''நான் ஹெட்மாஸ்டரிடம் போகிறேன் பார்''என்று வாத்தியார் புறப்படவே,கிருஷ்ணஸ்வாமி, ''நாங்கள் பார்த்தது போதாது, எல்லோரும் பார்க்கவேண்டுமல்லவோ இந்த வேஷத்தை! போங்கள், ஸார்'' என்ருன். லட்சுமணன், ''அங்கே போனுல் வாத்தியாருக்குத்தான் அபராதம் விழும், மை கொட்டினபோது நீர் எங்கே போயிருந்தீர்?'' என்று கேட்டால்,''தூங்கிப்போய்விட்டேன்'' என்று சொல்லுவாரோ, சொன்னுல் அபராதம் நிச்சயம்'' என்ருன். வாத்தியார் ஒன்றும் செய்யத் தோன்ருமல் திரும்பத் தன்னிடம் வந்து, ''நாளை முதல் இப்படிச் செய்யுங்கள் சொல்லுகிறேன் வழி'' எனவும், சுப்புக்குட்டி என்ற பையன் ''நாளையும் செய்தால் இன்றைக்குப் பண்ணினமாதிரி பண்ணிவிடுவீர்களோ!'' என்ருன்.

ஒரு பிராமணன் ஒருவர் வீட்டுக்குப்போய், ''எனக்குச் சாதம் போடுகிறீர்களா அல்லது நேற்று அங்கே பண்ணினது போல் பண்ணிவிடட்டுமா?'' என்ருராம். வீட்டுக்காரன் மனைவி பயந்து, ''அப்படியெல்லாம் ஒன்றும் செய்துவிடாதேயும்; நாங்கள் இருக்கிருேம் தெய்வமே என்று, சாதம் போடுகிறேன் சாப்பிட்டுப் போம்'' என்று உள்ளே அழைத்துப் போய் சாதம் போட்டாள். வெளியில் வந்த பிறகு 'நேற்று என்ன பண்ணினீர் சொல்லும்' என்று கேட்க, அந்தப் பிராமணர் ''சொல்லிவிடட்டுமா!'' என அம்மாள் ''சாப்பிட்டாய் விட்டதல்லவோ, சும்மா சொல்லுங்கள்'' என்ருள். பிராமணர் 'நான் சொல்லியே விடுவேன்' என்று மறுபடியும் பயமுறுத்தினுர். அம்மாள் ''சொல்லுங்கள்'' என்று கேட்க, 'நேற்றைக்கா இந்த இடது கை யிருக்கிறதல்லவோ அதை ஒரே யடியாய் தலைக்குயரம் வைத்துக்கொண்டு பட்டினியாகவே படுத்துக் கொண்டு விட்டேன்'' என்ருர்.—என்று ஒரு கதையுண்டு' அதுபோல் வாத்தியார் கொஞ்சம் பயமுறுத்திப் பார்த்தார். பலிக்கவில்லை. ராமசுப்பன் என்ற பையன், ''இல்லை இல்லை. நாளை இப்படிப் பண்ணினுல் அழுதுவிடுவார்'' என்ருன்.

தெனாலிராமன் "சூ சூ சும்மா இருடா, அவரை இப்பொழுதே அழவைத்து விடுவீர்கள் போலிருக்கிறதே, நாளை அழுகிறதாம்! நாளை முதல் பள்ளிக்கூடத்தில் தூங்கினால்தானே! அவன் கிடக்கிறான் ஸார், நீங்கள் நாளை முதல் தூங்காதேயுங்கள் ஸார்!" என்று சொல்லிக்கொண்டு அவர்மேல் படிந்திருக்கும் மையைத் துடைப்பவன்போல் அதை அவர் சட்டை முழுவதும் தேய்த்து அவர் முகத்திலும் கோரமாகத் தடவவே அவர், பாவம், அல்லா பண்டிகைக்குச் சிங்காரம் செய்து கொண்ட கோமாளிபோல் கண்டோர் நகைக்க நின்றார்.

3

அழகுள்ள நல்ல பிள்ளை

இவர் பாடு இப்படியிருக்க, அந்த வகுப்புக்குச் சமீபத்திலுள்ள சரீரப்பயிற்சி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கொட்டகையில் தங்கள் சொந்தப் பேச்சே பெரிதாகத் தாழ்ந்த குரலுடன் அம்மையப்ப பிள்ளையின் மாணாக்கரும் மெட்ரிகுலேஷன் வகுப்பினராகிய ஸ்ரீனிவாசன், சுப்பராயன் என்ற இரண்டு சிறுவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் ஸ்ரீநிவாஸன் என்ற பையனுக்குப் பதினாலு வயதிருக்கலாம். அவன்தான் சிறுகுளம் முத்துஸ்வாமி அய்யரிடம் நிச்சயதார்த்தம் பண்ணி வந்த ராமஸ்வாமி சாஸ்திரிகளுடைய பேரன். அவன் தகப்பனார் நாராயண அய்யர் கலெக்டர் ஆபீசு சிரஸ்ததார். அவனுடைய பூங்கொடிபோல் மெல்லிய சரீரமும், உருக்கியோட விட்ட தங்கம்போன்ற நிறமும், ரோஜாபுஷ்பம் மலர்ந்ததுபோன்ற முகமும், ஓயாது சலித்துக்கொண்டிருக்கும் கண்களும், நீண்டு கிளியின் மூக்குப்போல சிறிது வளைந்து முனையில் கூர்மையாயுள்ள மூக்கும், குதித்துக் குதித்து நடக்கும் நடையும், மழலைச் சொல் மாறாத வார்த்தையும், அவன் புத்தியும், உற்சாகமும், சாந்தமும், குணமும் அவனை அறிந்தவர் உள்ளத்தை அடிமைப்படுத்தும் தன்மையனவா யிருந்தன. அவனுடன்

படிக்கும் கொட்டை முத்து ராமையா என்ற பையன் அவனை 'லேடி' (ஏ பெண்ணே) என்று கூப்பிடுவான். நொண்டி சுப்பையா அவனை 'என் கண்மணியே' என்பான். பெருந்தீனி வைத்தி அவனை 'மாம்பழம்' என்று கூப்பிடுவான். தமிழில் கொஞ்சம் தேர்ச்சியடைந்த முத்துஸ்வாமி என்பவன் அவனைக் காணும்போதெல்லாம் 'அய்யோ இவன் வடிவென்பதோரழியா அழகுடையான்' என்றும்,

''காவியுங் குவளையுங் கடி கொள்கா யாவுமொத்
தோவியஞ் சுவைகெடப் பொலிவதோ குருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினன்''

என்றும் பாடத் தொடங்கிவிடுவான். தெனாலிராமன் அவனைக் காணுந்தோறும் 'என் பொன்னம்மங்காள், என் தங்கமே' என அழைப்பதுமன்றி வாத்தியார் வரச் சற்றுத் தாமதப்பட்டால் ஸ்ரீநிவாசனைப் பார்த்து 'முங்கி முழுகுகிற பெண்ணே' என்றிப்படித் தாளம் போட்டுக்கொண்டு கீர்த்தனை பாட ஆரம்பித்து விடுவான். இங்கிலீஷ் வாத்தியார் நித்தியானந்த பிள்ளைக்கு அந்தப் பள்ளிக்கூடத்திலேயே அவன் ஒருவனைத்தான் தெரியும். 'ஹெட்மாஸ்டர்' திருமலாச்சாரியார் பாடம் நடத்தும்போது அவன் ஒருவனைத்தான் பார்த்து நடத்துவார். கடு கடு என்று கடுவன் பூனைக்கு நிகராகக் கோபிப்பதையே தொழிலாக உடைய சம்ஸ்கிருத வாத்தியார் அப்பா சாஸ்திரிகள்கூட இவன் தமிழ் படிப்பவனாயிருந்தாலும் இவனைக் கண்டு ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது பேசாமல வீட்டுக்குப் போகமாட்டார். புருஷ லட்சணத்தில் தனக்கு மிஞ்சினவன் இல்லையென்று கர்வித்த சேஷாசலத்துக்கு மட்டும் இவனிடத்து பொறாமை யிருந்தாலும 'சேஷு நடையே நடை, அவனுடன் யார் ஓடுவார்கள்' என்றிப்படி அடிக்கடி ஸ்ரீநிவாசன் அவனைப் பார்த்துச் சொல்லுவதால் அவனும் இவன்மேல் வைத்த பொறாமையை இவனைக் கொண்டாடும மற்றவர்கள் மேல் வெறுப்பாக மாற்றிக் கொள்வான். இபபடி எல்லோருக்கும் சிநேகனாயிருந்த ஸ்ரீநிவாசனுக்கு முக்கிய சிநேகிதன் சுப்பராயன்

என்ற பையன். அவன் மதுரை தாசில் குப்புசாமி அய்யருடைய பிள்ளை. அவனுக்கு வயது இருபதிருக்கும். மூன்று வருஷ காலமாகத்தான் இருவருக்கும் பழக்கம். ஆனால், அவர்கள் ஒருவரை யொருவர் சந்தித்த முதல் நாளே நெடுநாட் பழகிய வர்கள் போல் சினேகிதர்களானார்கள்.

ஸ்ரீநிவாசன் படித்துக்கொண்டிருந்த வகுப்பில் புதிதாய் வந்து சேர்ந்த சுப்பராயன் அந்த வகுப்பில் அவன், கணக்கு ஒன்று தவிர, மற்ற பாடங்களில் எல்லாம் முதல் பையனு யிருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டு அவன் சினேகத்தைச் சம்பா தித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் பள்ளிக் கூடம் விட்டவுடன் அவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டான். அன்று 5 மணி அடித்தவுடனேயே ஸ்ரீநிவாசன் அகத்திற்குப் புறப்பட்டு விட்டான். அவன் சில பையன்களுக்கு மத்தியில் போய்க்கொண்டிருந்தபோது வேட்டை நாய் ஒன்று அவர்களை நோக்கி ஓடிவர, மற்ற பையன்கள் எல்லாம் மூலைக்கொருவ ராய் ஓடிவிட்டார்கள். ஸ்ரீநிவாசன் மாத்திரம் வேகமாய் ஓடக் கூடவில்லை. அந்தக் கொடிய நாய் அவனுக்கு வெகு சமீபத்தில் வந்து விட்டது. அவன் அலறுகிருன். அப்பொழுது திடீரென்று அந்த நாய் தலையில் ஒரு பெரிய சிலேட்டும் அதன் பிறகு ஒரு கல்லும் வந்து விழுந்தது. சீனு திரும்பிப் பார்த் தான். தன் பள்ளிக்கூடத்திற்குப் புதிதாய் வந்து சேர்ந்த சுப்பராயன்தான் தன்னைத் தப்புவித்தது என்று காணுமுன் சுப்பராயன் அவனைத் தூக்கித் தோள்மேல் வைத்துக்கொண் டான். அந்த நாயோ கழுத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரே ஓட்டமாய் 'உயிர் தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று ஓடிவிட்டது. ஸ்ரீநிவாசன் கீழே இறங்கிக் கொண்டு சுப்பராயனுடைய கைகளால் தன் கண்ணைப் பொத்திக் கொண்டு கண்ணீர் பெருக்கினுன். சுப்பராயன் அவனைப் "பயப்படாதே!" என்று தட்டிக் கொடுத்து, அவன் புஸ்தகங்களையும் தான் வாங்கிக்கொண்டு நாய்மேல் எறிந்த தால் உடைந்துபோன தன் சிலேட்டையும் எடுத்துக் கொண்டு, அவனையும் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய், கூழ் மோர் காய்ச்சிக் கொடுத்து அவனுடைய

அகத்துக்குக் கூட்டிக் கொண்டு வந்து விட்டுவிட்டு அவன் தாயார்,பாட்டியார் முதலியவர்களுடைய ஆசீர்வாதங்களுடனும் ஸ்ரீநிவாசன் வந்தனங்களுடனும் வீட்டிற்குச் சென்றான். அன்று முதல் அவ்விருவரும் அத்யந்த சிநேகிதர்கள்.

அவர்களுக்குள் ஒருவர்க்கொருவர் சொல்லாத ரகசியமே கிடையாது. அவர்கள் சேர்ந்துதான் படிப்பு, சேர்ந்துதான் படுக்கை. சுப்பராயனகத்தில் மாடியில் ஒரு அறை இவர்களுடைய ஆதீனம். சில நாள் ஸ்ரீநிவாசன் தன் வீட்டிற்கு வராமலேகூட இருந்து விடுவான். அவனை ஒருவரும் பரிகாசம் கூடச் செய்யக்கூடாது; சுப்பராயன் சண்டைக்கு வந்து விடுவான். அவன் அழகுக்கு எங்கே திருஷ்டி வந்துவிடப் போகிறதோ என்ற பயத்தால் அவன் அழகைக் கண்டு யாராவது புகழ்வதைக் கண்டால் சுப்பராயன் "ஆ, வெகு அழகு! ஒடிந்து விழுகிறாற்போல் இருக்கிறான். ஆயிரக்கலநோய் சிவப்புத் தோல்தான் சமயநல்லூர் புளிப்பு மாம்பழம் போல்" என்று சொல்லுவான். கலியாணப் பிரஸ்தாபம் வந்தது முதல் அன்றன்று நடக்கிற சமாசாரத்தை ஸ்ரீநிவாசன் சுப்பராயனுக்குச் சொல்லிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பான். அம்மையப்ப பிள்ளைக்கு அல்லா பண்டிகை வேஷம் போட்ட அன்று இவர்கள் இருவரும் தனிமையாய்ப் 'பேசிக் கொண்டனர்.

ஸ்ரீநிவாசன்: "இப்படித்தானே உட்காரலாம். இந்த ஒரு மணியும் விருதா காலட்சேபம். இவ்வளவு பெரிய பள்ளிக்கூடத்திற்கு ஒரு நல்ல தமிழ் வாத்தியார் அகப்படவில்லையா?"

சுப்பராயன்: "ராமசாமி அவர்கள் பள்ளிக்கூடத்திலிருக்கிறாரே ராகவய்யர், அவர் நல்ல வித்வானும்."

ஸ்ரீநிவாசன்: "ஆமாம், எல்லாம் ஒரு கணக்குத்தான். இவருக்காவது பாட்டுத் தெரியும்; அவருக்கு அதுகூடத் தெரியாது; அது போகட்டும். இன்றைக் காலமே சங்கதி கேட்டியா? நான் எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டுமென்று எட்டு மணிக்கே போனேனல்லவோ? அப்பொழுது அகத்திலே ஏதோ புதுக்குரல் கேட்டது, யார் என்று பார்த்தேன், நமது சங்கரனும் அவன் அம்மாளும் வந்தார்கள்."

சுப்பராயன்: "சங்கரனு?"

ஸ்ரீநிவாசன்: "ஆமடா! தெரியாதா, மேலக்கோபுரத் திற்கடுத்தாற்போல இருக்கிறது அவன் அகம்."

சுப்பராயன்: "ஓஹோ! நம்முடைய 'ஷோக்' சங்கரனு, பலே! பாட்டுப் பாடுவானே அவன்தானே?"

ஸ்ரீநிவாசன்: "ஷோக் சங்கரன்தான், அப்படிச் சொன்னால்தானே உனக்குத் தெரியும். அவனும் அவ னம்மாளும் சிறுகுளத்துக்குப் போயிருந்தார்களாம்."

சுப்பராயன்: "உனது மாமனுருருக்கோ?"

ஸ்ரீநிவாசன்: "அதற்குள் மாமனுர் ஆக்கிவிட்டாயா? கைக்கெட்டினது வாய்க்கெட்ட வேணுமே, பாக்கியையும் கேள்! அப்பொழுது அங்கே ஒரு அகத்தில் 'ததிவியம்' போட் டார்களாம். அங்கே ஒரு சிறு பெண் தம்பூர் வைத்துக் கொண்டு பாட்டுப் பாடினுளாம். கேள், கம்பராமாயணம் என்ன, தாயுமான சுவாமி பாடல் என்ன, தேவாரம், திருவாச கம், திருவாய்மொழி, கப்பற்பாட்டு, ஜாவளி இப்படி தினுசுக்கு ஐந்தாறு ஜமாய்த்து விட்டாளாம்; ஏகக் கூட்ட மாம். புருஷர்களும் பெண்களும் அதுவும் கம்பராமாணம் பாடுகிறபோது-கங்கைப் படலத்து முதற்பாட்டுகள் போல இருக்கிறது-குதிக்காதவர்கள் பாவம்; தாயுமானவர் பாடல் பாடுகிறபோது உருகி அழாதவர்கள் பாவமாம். சொல்லு கிருன் சொல்லுகிருன் அதிக அற்புதமாயிருக்கிறது. சொல்லு கிறதிலேயே அவனுக்கு ஆனந்தம் பொங்குகிறது. அந்தப் பெண்தான் என் அகமுடையாள்."

சுப்பராயன்: "ஆ அப்படியா! அவ்வளவு பாட்டா? உன் அகமுடையாளா! பத்து வயதுக் குட்டியல்லவோ?"

ஸ்ரீநிவாசன்: "பத்து வயதுக் குட்டியானுல்? இன்னும் கேள், தாயார், பிள்ளை இரண்டுபேரும் சொல்லுகிருர்கள், அப்படிச் சொல்லுகிருர்கள். குணத்தை ஊர்முழுவதும் கொண்டாடுகிருர்களாம், வீண்வம்பு, இரைந்த சொல் கிடையாதாம்!"

சுப்பராயன் : "நீதான் அதிர்ஷ்டசாலி அப்பா!"

ஸ்ரீநிவாசன் : "முத்துஸ்வாமி அய்யர் என்பவர் கொழுத்த பணக்காரராம். அவர் மனைவி நிரம்பப் படித்தவளாம். மகாலட்சுமி என்றால் அவளுக்கே தகுமாம்! இந்தப் பெண்ணுக்கு அவளும் அவருமாய் வெகு அருமையாய்ப் பாட்டும் படிப்பும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்களாம். கம்பராமாயணம் தலை கீழாகத் தெரியுமாம்!"

சுப்பராயன் : "கம்பராமாயணமா! அவள் சிறு பெண். எனக்கு எருமைக்கிடாபோல் இருபது வயதாய் விட்டது. நான் இன்னும் அதில் ஒருபாட்டுக்கூட அறியேன், நீ சொன்னதைத் தவிர !"

ஸ்ரீநிவாசன் : "பெண் மின்னல் கொடிபோல இருக்கிறாளாம், அதிக லட்சணமாம். அவள் நடையும், பார்வையும், சாயலும் இப்பொழுதே வெகு அழகாயிருக்கிறதாம்!"

சுப்பராயன் : "நிரம்ப சரியாகப் போய்விட்டது."

ஸ்ரீநிவாசன் : "அவளுக்குப் பந்துக்கள் சிலர் பெரிய பெரிய உத்தியோகங்களிலிருக்கிறார்களாம். முத்துஸ்வாமி அய்யருடைய பெரிய தகப்பனார் பிள்ளையோ என்னவோ மஞ்சக்குப்பத்தில் டிப்டி கலெக்டர் உத்தியோகம் பண்ணுகிறாராம்."

சுப்பராயன் : "மஞ்சக்குப்பமா! நாராயணசாமி அய்யரோ? அடடா அப்படிச் சொல்லு. சரிதான் உன் அகமுடையாளை நான் பார்த்திருக்கிறேன். என்னமாக என்று கேள். போன வருஷம் என் தகப்பனார், நாராயணசாமி அய்யருடைய வீட்டிலே அவர் பெண்ணுக்குக் கல்யாணம். அங்கே ஒரு சிறு பெண் தம்பூர் வைத்துப் பாடினாள்; எல்லாரையும் ஆனந்த பரவசமாக்கி விட்டாள். அடடா பேஷ்! பேஷ்! அப்படியா, ஸ்ரீநிவாசா! உன்னைப்போல் பாக்கியசாலி கிடையாது! உனக்கேற்றவள் அந்தப் பெண்ணே! அவளுக்கேற்றவன் நீயே" என்று சொல்லிக்கொண்டு, சந்தோஷத்தால் அவன் முதுகில் தட்டினான்.

அதற்குள் அம்மையப்ப பிள்ளையவர்களுடைய திருக் கூத்து நடந்து எல்லாரும் இடி இடி என்று சிரித்த இரைச்சல் கேட்டு இருவரும் ஓடிவர, அம்மையப்ப பிள்ளையவர்கள் செம் புள்ளி கரும்புள்ளி குத்திக்கொண்டு நின்றதைக் கண்டார்கள். உடனே ஸ்ரீநிவாசன் அவர் நிலைமையைக் கண்டு பரிதபித்து தன் சட்டையுள் ஒன்றைக் கழற்றி அவருக்குக் கொடுத்துத் தன் கைக்குட்டையால் அவர் முகத்தைத் துடைத்தான். வாத்தியார் இவன் செய்த உபகாரத்துக்காகக் கண்களில் நீர் ததும்ப இவனுக்கு வந்தனமளித்து, "நீ சீக்கிரம் நல்ல பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு நெடுங் காலம் சுகமாக வாழ்ந்திருப்பாய்!" என்று மனப்பூர்வமாய் ஆசீர்வதித்தார். அருகிலிருந்த சுப்பராயன், "கலியாணத்திற்கு முகூர்த்தம் வைத்திருக்கிறது" என்று சொன்னான். வாத்தி யார் ஸ்ரீநிவாசன் கையைப் பிடித்துக்கொண்டு, "எனக்கு நீ இந்தச் சங்கதியைச் சொல்ல வேண்டாமா? எங்கே, எப்பொழுது கலியாணம்?" என்றிப்படி விசாரித்ததில் 'சிறு குளம் முத்துஸ்வாமி அய்யர்' எனவும், அவருக்கு வந்த சந்தோஷத்திற்களவில்லை. "என் தாதா முத்துஸ்வாமி அய்யரா! அடடா, அவர் முதல் வள்ளல் அன்றோ! நான் அவருடைய அடிமையல்லவோ! அந்த மகான் பெண்ணா? உனக்கா நிச்சயமாயிருக்கிறது? உனக்குக் கடவுள் கிருபை பூர்த்தியாக இருக்கிறது. எனக்கும் கடிதம் வரும். நானும் வருகிறேன் உன் திருக்கல்யாணத்திற்கு" என்றார். அம்மை-யப்பபிள்ளை மொத்தத்திற்கு வெகு நல்லவர். அவர் குண குணங்கள் பின்னால் வெளிப்படும். அவர் இந்தச் சரித்திரத்தில் சம்பந்தப்பட்டவர். ஸ்ரீநிவாசனிடம் அவர் பேசிக்கொண்டி ருக்கும்போதே மணியடித்து விட்டது. ஸ்ரீநிவாசன் மறு வகுப்புக்குப் போய்விட்டான்.

மறுநாளிரவு ஸ்ரீநிவாசன் சுப்பராயனகத்துக்குப் போன பொழுது விசேஷ சங்கதி ஒன்று அவனுக்குச் சொல்ல ஆவல் கொண்டவனாயிருந்தான். ஆனால் சுப்பராயன், அவன் தகப்பனார் முதலானவர்களுடன் சாப்பிட்டுக்கொண்டிருந் தான். ஸ்ரீநிவாசன் அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு மாடியில் உலாத்தத் தொடங்கினான்.

கல்யாண ஞாபகம் தவிர, அவனுக்கு வேறு ஞாபகமே கிடையாது. உலாத்திக்கொண்டே மெதுவாகப் பாடி, சற்று நேரம் பாடிவிட்டுப் பிறரறியாமல் தனக்குள்ளேயே பேசிக் கொண்டான்: "என் மேலென்ன அவளுக்கு அவ்வளவு பிரியம்? அழகாயிருக்கிறேன் என்று? அதற்கு என்னைப் பார்த்ததுகூட இல்லையே! நன்றாய் வாசிக்கிறேனென்று? நமக்கென்னடா குறைவு, அப்பா உத்தியோகம் பண்ணுகிறார். இரண்டு தாத்தாவும் இருக்கிறார்கள். என்மேல் காற்றடிக்கச் சகிக்க மாட்டார்கள். இதைக்காட்டிலும் பாக்கியம் வேறென்ன இருக்கிறது! (கண்களில் நீர் ததும்ப) அவர்கள் அன்பே நமக்குப் பெருஞ்செல்வம். படிப்பு, அழகு, செல்வம் எல்லாம் இருக்கிறது; என்ன குறைவு! எல்லா வகுப்பிலும் நான்தானே முதல்! சரி வந்துவிட்டதா கர்வம், நமக்குச் சமானம் யார் இருக்கிறார்கள் என்று! கழுதைக்கானது போல் வயது 14 ஆகி விட்டது; இன்னும் மெட்ரிகுலேஷன் தேறவில்லை. அதற்குள் தலைகால் தெரியவில்லை" என்றிப்படித் தன்னையே புகழ்ந்து கொண்டும் கண்டித்துக்கொண்டும், சிறிது பேசிவிட்டுப் பிறகு, "கல்யாணத்திற்குச் சமானமா? வேஷ்டியைப் பஞ்சகச்சம் வைத்துக் கட்டிக்கொண்டு, சந்தனம் பூசிக்கொண்டு, வெற்றிலை போட்டுக்கொண்டு ஜம் என்று,—சுவாமீ! இந்தக் கல்யாணத்தை மட்டும் குறைவில்லாமல் நடத்திக் கொடுக்க வேண்டும்! மீனாட்சி! ஐந்து தேங்காய் வாங்கி உடைக்கிறேன்! இன்னும் பத்துநாளிருக்கிறது. பத்துநாளாவது. ஒன்பது நாள்தான். இன்றைப்போதுதான் கழிந்து போய் விட்டதே" என்று சொல்லிக்கொண்டே உல்லாசமாக,

"நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு."

என்று பாடிக்கொண்டு உலாத்திக் கொண்டிருந்தான். அப்பொழுது வசந்தகாலம். மிருதுவான தென்றல் வீசிற்று. இளம்பிறைச் சந்திரன் அழகான வெள்ளிக் கோடுபோல் உயரப் பிரகாசித்தது. அதினின்றும் ஜிலுஜிலென்று பொழியப்

பட்ட அமிர்த ஊற்றுப் போன்ற நிலவு, ஸ்ரீநிவாசனுக்கு அடங்காத ஆனந்தத்தை உண்டுபண்ணிற்று. 'ஆஹா' என்று தலையசைத்தான். "என்ன சுகமாயிருக்கிறது" என்றான். அவன் நாவில் இன்னமிர்தம் ஊறிற்று. அவ்வளவு ஆனந்தமாய், "இனிது இனிது, ஏகாந்தம் இனிது" என்றபடி ஏகாந்தத்தின் இனிமையை அவன் அனுபவித்துக் கொண்டிருக்கிறபோதே சுப்பராயன் வந்தான். அவன் வந்ததைக்கூட இவன் பார்க்கவில்லை. சுப்பராயன், "ஏன்? விளக்கேற்றவில்லையோ?" என ஸ்ரீநிவாசன், "ஏற்றலாம் வா,. சற்று இங்கே உட்காரு" என்று அவன் மடியில் தலைவைத்துக் கொண்டு மழலை திருந்தாத தன் மொழியில், "இங்கே பார்,. இந்த இள நிலா எவ்வளவு சுகமாயிருக்கிறது. இந்தத் தென்றலும், இந்த மரங்களும், இந்தச் சோலை மலர்களும் ஆஹா, பேஷ்! என்ன ராத்திரி! இந்த வேளைக்கு ஓடிக் குதிக்கவேணும். கழுதைகளை இதோ தெருவிலோட்டிக் கொண்டோடுகிறார்களே இவர்கள்கூட இந்த நிலவாகிய அருமைச் செல்வத்தை அனுபவிக்கிறார்கள். ஆடிப்பாடி கூத்தாடவேணும்போல இருக்கிறது. ஆயிரம் மாம்பழம் தின்பதில்கூட இந்தச் சுகம் கிடையாது. பேஷ்! ஆஹா அதோ தெருவிலோடுகிற குழந்தைக்குக்கூட என்ன சந்தோஷம்! அம்மாள் கூப்பிடுகிறாள். வரமாட்டேன் என்று ஓடுகிறது; இந்த நிலவு போதும் அதற்கு; தாயார்கூட வேண்டாம் என்று சந்தோஷத்தால் தத்தளித்துச் சொன்னான். சுப்பராயன் "நிலவுக்குச் சமானமா?" என்றான். ஸ்ரீநிவாசன், "அதோ! பார், பட்சிகள் கத்துகிறது. இந்த வேளைக்குக் காக்கை கத்தினால்கூட பேஷாயிருக்கிறது; பைத்தியக்காரக் காக்கைகளா! சண்டை மட்டும் செய்யாதேயுங்கள்! வேறு என்ன செய்தாலும் இந்த நிலவிற்கு இன்பமாயிருக்கும். அடடா, அந்தத் தெப்பக் குளத்தைப் பார், பாசி படர்ந்த அந்தப் பைத்தியக்காரத் தெப்பக்குளத்துக்குக்கூட என்ன மகிமை வந்திருக்கிறது பார்! சந்திரன் அதிலே தவழ்கிறது, கொஞ்சுகிறது, விளையாடுகிறது; இந்த ராத்திரிக்குக் குதிக்கவேண்டுமென்கிறேன். நீ ஆடு, நான் பாடுகிறேன்; இல்லாவிடில் நான் ஆடுகிறேன். நீ பாடு. 'இரவின் ஜோதியே,' இந்துவின் ஒளியே

பாடு" என்று இப்படி ஸ்ரீநிவாசன் ஆனந்தத் தாண்டவம் செய்தான். சுப்பராயன், "நிலவு நன்ருயிருக்கிறது" என்று சொல்லிவிட்டு, "உன் கல்யாணத்தின்போதும் நல்ல நிலா, கிராமப்பிரதக்ஷணத்தன்றும் விடிய விடிய நிலவாயிருக்கும்; நீ பல்லக்கின் மேல் உல்லாசமாய் ஏறிக்கொண்டு போகும்போது என் நினைவுகூட உனக்கிராது" என்று சொல்ல, ஸ்ரீநிவாசன், "உன் நினைவில்லாமலா? உன்னைவிட்டு எனக்குச் சந்தோஷமுமா? உன்னைவிட எனக்கு இவ்வுலகத்தில் மனமொத்த சினேகிதன் யார்?" என்று கண்ணில் நீர்ததும்ப மறுமொழி சொன்னுன். அதற்குள் சுப்பராயன், "நான் பரிகாசமாய்ச் சொன்னேன்" என்று சொல்ல, ஸ்ரீநிவாசன், "இன்னொரு சங்கதி கேட்டாயா? சிறுகுளத்துக்கு நெல்லிக் குப்பத்துக் காமாக்ஷி அம்மாள் போயிருந்தாளாம். எனக்கு நிச்சயம் பண்ணியிருக்கிற பெண்ணை அவள் சிற்றம்மை தன் தமையன் பிள்ளைக்குக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயம் பண்ணினுர்களாம். அந்தப் பெண் என்னைத் தவிர வேருெரு வரையும் கலியாணம் செய்துகொள்ளமாட்டேன் என்று சொல்லுகிறதாம்" என்ருன். சுப்பராயன், "இப்பொழுது முதல் என்ன அறிவு! என்ன அன்பு!" என்று சொல்ல, ஸ்ரீநிவாசன் சந்தோஷத்துடன், "இந்தப் பெண் எனக்குக் கிடைக்குமாஞல் நான் அதிர்ஷ்டசாலிதான்" என்ருன்.

ஸ்ரீநிவாசன் எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும் சிறு குழந்தையானதிஞல் உலகத்தை அறியான். பெண்டாட்டி என்ருல் 'பாக்குக் கொடுத்த பாக்கியவதி, புஷ்பம் கொடுத்த புண்ணியவதி, சந்தனம் கொடுத்த சரஸ்வதி' என்ற இவ்வித எண்ணந் தவிர, வேறென்றும் அறிய அவனுக்கு வயது போதாது. ஆயினும், 'காதலிருவர் கருத்தொத்து ஆதரவு பட்டதே இன்பம்' என்ற சில உண்மைகளை அவன் புஸ்தகங்கள் மூலமாய் அறிந்திருந்தான். பாக்கியிருந்த பத்து நாளும் அவனுக்குப் பத்து யுகமாகவே இருந்தன. பகல் வந்துவிட்டால், 'பொல்லாப் பகலே, போகாப் பொழுதே' என்று நிந்தித்துக்கொண்டு எப்பொழுது இரவு வருமென்று எதிர் பார்ப்பான். இரவு வந்துவிட்டால், 'செல்லா இரவே, சிறுகா இருளே' என்று நிந்தித்துக்கொண்டு எப்பொழுது

விடியுமென்று ஏக்கமுறுவான். எந்தப் பாடமானாலும் சரி, எந்தக் கணக்கானாலும் சரி, எல்லாம் கலியாணத்துக்குப்பிறகு பார்த்துக் கொள்ளலாமென்று போட்டு விட்டான். இவனுக்கும் சுப்பராயனுக்கும் ரிப்பன் பாக்கெட் பஞ்சாங் கத்தை வைத்துக்கொண்டு பொருத்தங்கள் பார்ப்பதும் (ஜோதிஷரிடம் கேட்க வெட்கம்) அதிர்ஷ்ட சக்கரங்களைச் சோதிப்பதுமே தொழிலாக இருந்தது. இப்படியாக நாட் களும் கழிய, முகூர்த்தத்திற்கு இரண்டு நாளைக்கு முன் சிறுகுளம் போவதற்காகச் சுமார் இருபத்தைந்து வண்டிகள் ஸ்ரீநிவாசன் வீட்டு வாசலில் வந்து நின்றன.

9

கல்லுளியும் குப்பிப் பாட்டியும்

முத்துஸ்வாமி அய்யர் பெரிய பணக்காரர் என்று நாம் முன்னமே பலமுறை சொல்லியிருக்கிறோம். பாகம் செய்து கொள்ளும் காலத்தில் அவருக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் ஆஸ்தியிருந்தது. சில பெரிய வியாபாரங்களில் அவர் இறங்கி அவைகளைச் செவ்வையாக நடத்தி வந்தபடியால், சில வருஷங் களுக்குள் அவர் லக்ஷத்து ஐம்பதினாயிரம் ரூபாய் ஆஸ்திக்கு அதிபதியானார். ஆகையால் அந்தப் பக்கத்தில் அவர் பெரிய பணக்காரரென்று பிரசித்தி பெற்றிருந்தார். அதுவும் தவிர நல்ல கொடையாளி என்றும், அநேக விஷயங்களில் அதிக தேர்ச்சி பெற்றவரென்றும், நல்ல புத்திமான் என்றும் அவர் பெயர் எங்கும் பிரபலமாயிருந்தது. அவர் கையால் சம்மானம் பெறாத தக்க வித்வான்கள் இந்த ராஜதானியிலேயே கிடை யாது. சிறுகுளத்தைச் சுற்றியுள்ள எல்லாக் கிராமங்களிலும் பொழுது விடிந்தது முதல் அரவம் ஒடுங்கும் வரை முத்துஸ் வாமி அய்யர் வீட்டுக் கலியாணப் பேச்சைத் தவிர, வேறு பேச்சுக் கிடையாது.

மேலப்பாளையம் என்ற கிராமத்தில் ராமஸ்வாமி அய்யர் என்ற ஒரு பிராமணர் சாப்பிட்டுவந்து வெற்றிலை போட்டுக்

கொண்டு திண்ணையில் உட்கார்ந்தார். அப்பொழுது சாப்பிட்டு விட்டு வெற்றிலையைக் கையிலெடுத்துக் கொண்டு யார் வீட்டுத் திண்ணையில் பேச ஆளிருக்கிருர்கள் என்று பார்த்துக் கொண்டு தன் மேல்வேஷ்டியைக் கீழே போட்டுக்கொள்வதற்காகச் சித்தமாய் கையில் எடுத்துக்கொண்டு அப்பய்ய தீட்சதர் என்பவர் வந்தார். ராமஸ்வாமி அய்யர் அவரைக் கண்டதும் "வாருங்கள்" என்ருர். தீட்சதரும் கை வேஷ்டியைக் கீழே போட்டுக்கொண்டு, "அப்பாடா," என்று உட்கார்ந்தார். அய்யர், "இப்பொழுதுதான் சாப்பிட்டாச்சாக்கும்" என, தீட்சதர், "இத்தருவாய் ஆயிற்று" என்ருர். பிறகு சற்று நேரம் மௌனம். பிறகு அய்யர், "தேதி 13ஆய் விட்டாற் போலிருக்கிறதே. சிறுகுளத்துக்கு எப்பொழுது பயணம்? நீங்கள் வருகிறீர்கள் அல்லவா?" என, தீட்சதர் வெற்றிலைபோட்டு மென்றுகொண்டே, "நான் வருகிறது சந்தேகந்தான். சனியன் ஒரு சிராார்த்தம் வந்து குறுக்கிட்டுக் கொண்டு இழவு கொடுக்கிறது. இல்லாவிட்டால் இங்கே என்ன சாதிக்கிறேம். போய்விட்டு வருவதைவிடத்தான் என்ன?" என்ருர். அதற்கு அய்யர், "அடடா நீங்கள் அவ்வளவுதான் கொடுத்து வைத்தது. மூவாயிரம் ரூபாய் பிரத்தியேகமாய் எடுத்துக் கட்டி வைத்து விட்டானும் கலியாணத்துக்காக. கீவளூர் கந்தன் மேளமாம். அவனுக்கு 200 ரூபா பேசியிருக்கிருர்களாமே! பாட்டுக்கு ராகவய்யர். பெரிய வைத்தி பெரிய யுத்தம் நடக்கும். வேடிக்கை பார்க்கலாம். இது போக இன்னும் வந்து கோவிந்தசாமி ராவ் மிருதங்கத்துக்கு, அப்புறம் வந்து பிடிலுக்கு நடராஜன். இதெல்லாம் சாதாரணமாயிருக்கும். இவ்வளவும் போதாதென்று திருவாரூர் ராஜலட்சுமி சதிர்" என தீட்சதர் வெற்றிலையை விழுங்கிக்கொண்டு, "பேஷ் அவனுக்கென்ன மகாராஜன் லட்சப்பிரபு, ஒரே பெண், அதற்குக் கல்யாணம்" என்ருர் அய்யர். "நீங்கள்தான் வரமாட்டேன் என்கிறீர்களே" என தீட்சதர், "உன்னைவிட எனக்குப் பத்துபங்கு ஆசையிருக்கிறது. ஆசையிருந்து என்ன பண்ணுகிறது? இந்த இழவு சிராார்த்தம் ஒன்று வந்து கழுத்தறுக்கிறது. நல்ல நாள் என்ருல் அன்றைக்குத்தான் பெண், பெண்டாட்டிகள் 'தூரம்'

என்று கொல்லையில் உட்காருவார்கள். அதுபோல வந்திருக்கிறது நமக்குச் சனியன் பிடித்த இழவு, இரு பார்ப்போம். 18வ யா முகூர்த்தம்? 18, 19, 20, 21, 22-ந் தேதிவரைக்கும் கலியாணம். இங்கே 19-ந் தேதி சிரார்த்தச் சனியன். அதைத் தொலைத்துக் கொண்டு ஒரேயடியாய் 19-ந் தேதி ராத்திரியே புறப்பட்டால் 20-ந் தேதி காலமே அங்கே வந்துவிடலாம். பார்ப்போம். அப்படித்தான் செய்யவேணும்" என, ராமஸ்வாமி அய்யர், "அதுதான் சரி, அப்படித்தான் செய்யுங்கள். நான் 16-ந் தேதியே புறப்படுகிறேன்" என்றார்.

இங்கே இப்படியிருக்க, தென்கரை என்ற மற்றோர் கிராமத்தில் சுப்பிரமணியசுவாமி கோயிலில் 'குட்டைப் பெருச்சாளி' என்ற பட்டப்பெயர் பெற்ற முத்துவும், 'கல்லுளி' என்றும் 'கடப்பாரை முழுங்கி' என்றும் பெயர் பெற்ற சுப்பய்யாவும் காலணா மேஜை வைத்து 'அவுட்' ஆடிக் கொண்டிருந்தார்கள். சுப்பய்யா, "இன்னொரு ஆட்டம் போடடீ மகளே போடு" என, முத்து, "ஏதப்பா! அவன் சொன்னாற்போலிருக்கிறது. ஒரு ரூபாய் தோற்றாய்விட்டது. இன்னும் ஆடவா? இன்னும் ஒரு ரூபாயை அவன் சொன்னாற் போல பற்றப் பார்க்கிறாய்! அவன் சொன்னாற்போல உனக்கென்ன?" என, கல்லுளி, "எவன் சொன்னாற்போல? எத்தனை அவன் சொன்னாற்போல! அந்த அவன் தான் இன்னான் என்று நிரம்ப நாளாய்த் தெரியவில்லை, அவன் போகட்டும். இன்னும் ஒரே ஆட்டம். யோசிக்காதே, அந்த ஒரு ரூபாய்க்குச் சிறுகுளம் முத்துஸ்வாமி அய்யர் அகத்துக்கு கலியாணத்துக்குத் திருவாரூர் ராஜம் வருகிறாள். அவளைவிட்டு உனக்குச் சந்தனம் பூசிவிடச் சொல்கிறேன். பயப்படாதே, ஆடு" என்றான்.

இது நிற்க, வீரபாண்டியம் என்ற இன்னொரு கிராமத்தில் சில சிறு பிள்ளைகளாய்ச் சேர்ந்து தாயார், தகப்பனார், வாத்தியார் இவர்களுக்குத் தெரியாமல் சிறுகுளம் கலியாணத்துக்குப் போய் வருவதாகக் கூட்டுக் கள்ளயே சனை செய்து கொண்டு ஒருவரொருவராய் அந்த ஊர் காளியம்மன் கோயிலில் வந்து சேர்ந்தார்கள். "ஒங்காத்திலே கோவிச்சுக்குவா, ஒன்னாலே நடக்க முடியாது. நீ ஆத்துக்குப் போயிடு" என்று அவர்

களால் புத்திமதி சொல்லியனுப்பப்பட்ட காமேசுவரன் என்ற ஒரு சிறு பையன் சரசரவென்று வாத்தியாராகிய நாகேசுவர 'ஸாரி'டம் போய் அவர்கள் திருட்டு யோசனையை வெளி யிடவே, சாப்பிடுவதற்காக இலையில் உட்காரப்போன நாகேசுவர 'ஸார்' சாப்பிடாமல் ஒற்றை வேஷ்டியுடன் காளியம்மன் கோயிலுக்கு வந்துவிட்டார். அவரைக் கண்டது தான் தாமதம், உடனே பையன்களெல்லாம் சிறுகுள மார்க்கத்தில் ஓடத் துவங்கினார்கள். அதுகண்டு வாத்தியாரும் "ஏனடா பையன்களா! நிஜந்தானா? ஓடுவீர்களா? மரியாதை யாய் வந்துவிடுங்கள். இல்லாவிட்டால் வெளுத்துவிடுவேன். வந்துவிடுங்கள். வந்துவிடுங்கள். வந்தால் அடிக்கவில்லை. ஏனடா ஓடுவீர்களா? நிஜந்தானா, நிஜந்தானா?'' என்று கூவிக் கொண்டு அவர்கள் பின்னே ஓட, அவர்கள் ''ஆமாம். நிஜந் தான். நிஜந்தான்'' என்று சொல்லிக்கொண்டு,

''நெடுமால் திருமருகா
நித்த நித்தம் இந்த இழவா
வாத்தியார் சாகாரா
வயிற்றெரிச்சல் தீராதா?''

என்று பாடிக்கொண்டும் ஓடினார்கள். இப்படி அரை மைல் தூரம் ஓடவே வாத்தியார் பசியால் களைத்து ஓடமாட்டாமல் ஓடி ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டார். பின்னே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு ஓடின பையன்கள் வாத்தியார் விழுந்ததைக் கண்டு 'ஹாய்' 'ஹாய்' என்று சிரித்து 'வேணும், வேணும்' என்று சொல்லிக் கொண்டு ஓட்டமோட்டமாய் ஓடி ராத்திரி ஒரு சத்திரத்தில் தங்கி தங்கள் கால் கொப்பளங்களை ஆற்றிக் கொண்டு, மறுநாட் பகல் பத்து மணிக்குச் சிறுகுளம் போய்ச் சேர்ந்தார்கள். வாத்தியாரோ பாவம் நொண்டி நொண்டிக் கொண்டு பட்டினியாய் ஊர்வந்து தன் காலைப் பார்க்கும்போதெல்லாம், ''அந்தப் பயல்கள் வரட்டும் சொல்லுகிறேன்'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு அவர்களை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

சிறுகுளத்துக்கருகில் கடுகனூர், குள்ளப்புறம், விருதக்கப் பட்டி, சோரனூர் முதலிய சில பிரபலமான கிராமங்கள்

உண்டு. அவற்றின் மகாஜனங்களுடைய உத்தியோகம் அபிசிரவணம் சொல்லல், பரிசாரகம் செய்தல், சவண்டி தின்னல், பொய்சாட்சி சொல்லல் முதலியனவாம். இவர்களுடைய கீர்த்திக்கு ஒரு அத்தாட்சியாக யாரையாவது இகழ்ச்சியாய் வையவேண்டுமானால்,'என்னடா,சுத்த குள்ளப்புறத்து பிராமணனா யிருக்கிறாய்!' என்று சொல்வது வழக்கம். முத்துஸ்வாமி அய்யர் பெண்ணின் கலியாணத்தைச் சிறப்பிக்க எண்ணி இந்தப் பிராமணோத்தமர்கள் தங்கள் தங்கள் வீடுகளில், "அடியேய், சிறுகுளத்து முத்துசுவாமியாத்திலே கலியாணமாம், வர பதினைந்து நாள் செல்லும். ஆத்தைப் பாத்துக்கடீ. . என்னடி ஆட்டுமா?" என்று தங்கள் மனைவிமாருக்குத் தாக்கீது கொடுத்துவிட்டு ருத்திராட்சம், விபூதி டப்பி, ஸ்தாலிச்செம்பு, மடிசஞ்சி, பட்டுக்கயிறு ஆகிய இவ்வித உத்தியோக சின்னங்களுடன் சர்வாபரண பூஷிதர்களாய் சிறுகுளத்தை நோக்கிக் கலியாணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னமேயே தங்களுடைய இஷ்டமித்திர சகல பரிவார பந்துக்களுடன் முகூர்த்தத்தை நடத்திவைக்க நூற்றுக் கணக்காகப் புறப்பட்டு விட்டார்கள்.

இவ்விதமாக, சிறுகுளத்தைச் சுற்றியுள்ள பிரதேச முழுவதும் முத்துஸ்வாமி அய்யர் வீட்டுக் கலியாணப் பேச்சே பேச்சாயிருந்ததுமன்றி, ஒவ்வொரு ஊரிலுமிருந்து சிறு பையன்கள் முதல் வயதுசென்ற பெரியவர்கள் வரை ஒருவரும் பாக்கியில்லாமல் நானாவித ஜனங்களும் வந்து கூடினார்கள். ஊர் முழுவதும் சில நாளைக்கு அல்லோல கல்லோலப் பட்டது. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என நாலா திக்குகளிலிருந்தும் வண்டிகளும் ஜனங்களும் மேலும் மேலும் வந்து நெருங்கவே, எங்கே பார்த்தாலும் வண்டிக்காடும் மனிதக் காடுமாக இருந்தது, வீட்டுக்கு வீடு நாற்பது ஐம்பது ஜனங்கள் கூடியிருந்தார்கள். இவ்விதமாக 'காற்றெறி கடலின் களிப்பனேங்கினர்' என்றபடி சிறுகுளம் சிறிய குளமாயிராமல் இராப்பகல் ஓய்வில்லாமல் ஆரவாரித்த பெரிய கடலாயிருந்தது.

சம்பந்தி, அவர்களுடைய இஷ்டமித்திர பரிவார பந்து பட்டாளம் பாரி பட்டாளமாயிருந்தது. அவர்கள் அமர்த்தின வாடகை வண்டிகள் 25 போக ராமசுவாமி சாஸ்திரிகளுடைய குமாரர் சிரஸ்ததார் நாராயணய்யருடைய பெட்டி வண்டி ஒன்று, சாஸ்திரிகள் சம்பந்தி கிருஷ்ணய்யர் அகத்து வண்டி இரண்டு, தாசில் குப்புசாமி அய்யருடைய (சுப்பராயனுடைய தகப்பனுர்) பெட்டி வண்டி ஒன்று, டிப்டி கலெக்டர் ராமராயர் குதிரை வண்டி ஒன்று, இவ்விதமாகக் கூடிய இம் முப்பது வண்டிகளும் விடிந்து பத்து நாழிகைக்குப் பயணம் புறப்பட ஆரம்பித்து, அஸ்தமிக்கப் பத்து நாழிகைக்கு ஊரைவிட்டு நகர்ந்ததையும், அவைகள் இராத்திரி இருட்டிப் போகும்போது கிருஷ்ணய்யர் 'லாந்தரைக்' கையில் பிடித்துக் கொண்டு யார் என்ன சொல்லியும் 'உங்களுக்குத் தெரியாது' என்று சொல்லிவிட்டுச் சேவகர்களுடன் வண்டிப் பாதையைப் பார்த்துக்கொண்டு போனதையும், நொடிகள் பார்த்து வண்டிக்காரர்களுக்கு அவர் எச்சரிக்கை கொடுத்ததையும் கள்ள ஊராகிய நகரி என்ற கிராமம் சமீபிக்கவே, ஓரிருண்ட தோப்பின் வழி போகும்போது வெளிச்சங்களை யெல்லாம் மறைத்துக்கொண்டு குழந்தைகள் வாயைப் பொத்திக் கொண்டு 'பேசாதே, பேசாதே' என்று மெதுவாய் எல்லோரும் பேசியதையும், மரத்துக்கு மரம் கள்ளனிருப்பதாகப் பயந்து வண்டிக்காரர்கள்கூட மாட்டை இரைந்து அதட்டாமல் வண்டியை வேகமாய் விட்டதையும், அவ்வூர் தாண்டிய உடனே 'ஜோ' என்று மழை பெய்ததுபோல் எல்லோரும் இரைந்து பேசியதையும், வனதேவதைகள் கோவில்தோறும் எல்லோரும் இறங்கி சேவித்துச் சென்றதையும், மறுநாள் ஒரு பெரிய சோலையில் தங்கிச் சாப்பாடு செய்ததையும், அங்கே ஆகாயமட்டு மளாவிய மரங்களைக் கண்டு ஸ்ரீநிவாசன் ஆச்சரியமடைந்து அவற்றின் அருகே ஓடும் நதியில் அவைகளின் இருண்ட நிழல்களைக் கண்டு மயிர்க்கூச்செறிந்து 'இவைகளில் குரங்குகளைப்போல ஏறிப்பாய்ந்து ஓடி சஞ்சரிக்க வேணுமென்று ஆசையாக இருக்கிறது' என்று சுப்பராயனிடம் சொன்னதையும், பிறகு எல்லோரும் புறப்பட்டு பொன்னிறமான மஞ்சள் வெயில் அழகாய் படிந்திருக்கும் தருணத்தில்

சிறுகுளத்திற்கு வந்து சேர்ந்ததையும் பற்றி விஸ்தரிப்ப தனவசியம்.

சம்பந்திகள் வந்து அவர்களுக்கேற்பட்ட ஜாகையில் இறங்கினவுடனே மாப்பிள்ளையை அழைப்பதற்காக இரட்டைக் குதிரை சாரட்டு வந்து நின்றது. அது ஒரு ஜமீன்தாரிடமிருந்து கலியாணத்திற்காக முத்துஸ்வாமி அய்யரால் வரவழைக்கப்பட்டது. அது சிறுகுளத்தில் அறியப்படாத ஓர் பெரிய அதிசயம். முதல் முதல் அவ்வூர் மந்தையில் வந்து சேர்ந்தவன்றைக்கு அவ்வூர் முழுவதும் அதைப் பார்ப்பதற்காக வந்து கூடிப்போய்விட்டது. அது வந்து நின்றவுடன் ஸ்ரீநிவாசன் அதன்மேல் ஏறிக் கம்பீரமாய் உட்கார்ந்து கொண்டு எல்லா ஜனங்களும் தன்னையே பார்க்கிறார்கள் என்பதில் வெகு திருப்தி யடைந்தவனாய்ச் சென்று மாளிகை போன்ற தன் மாமனார் அகத்து வாசலில் இறங்கி, தக்கபடி உள்ளே யழைத்துக்கொண்டு போகப்பட்டான். கிரமப்படி வேதவேதியர், தேவகணங்கள் இவர்கள் முன்னிலையில் அக்கினி சாட்சியாகச் செய்யப்பட வேண்டிவைகள் எல்லாம் நடந்தன. 'பம் பம்' என்று கிருஷ்ணபகவான் பாஞ்ச ஜன்னியத்தைத் துவானம் பண்ணியதுபோல் மேளவாத்தியத்தில் தனக்கு உயர்வு ஒப்பில்லையென்று கீர்த்தி பெற்ற கீவளூர் கந்தன் செய்த மங்கள வாத்தியத்துடன் மாங்கலிய தாரணமும் ஆயிற்று.

முகூர்த்தம் ஆனபிறகு ஆசீர்வாதத்திற்கு எத்தனமாய் எல்லோரும் வந்திருக்கும தருணத்தில் திடீரென்று, ''ஐயோ ஐயோ ஐயோ! நீ நாசமாய்ப்போக, உன் கையை முறித்து அடுப்பிலே வைக்க; நீ கட்டையிலே போக, நீ கரியாகப்போக, உன் அப்பன், ஆத்தாள், மாமன், மச்சுனன், பிள்ளை, பேரன், பேத்தி, அத்தான், அம்மாஞ்சி (அம்மான்சேய்) எல்லோரும் பூண்டோட நாசமாய்ப்போக! ஐயையோ! ஐயையோ!'' என்றிப்படி ஓர் பெரிய கூக்குரல் உண்டாக, எல்லாரும் திடுக்கிட்டு வெளியே ஓடினார்கள். ''அங்கே, போடா அந்தப் பக்கம் எழுந்திருக்கிறாளா பார்! போடடா, அலகில் கையைப் பிடித்திழடா சரசர வென்று. குத்தடா வெட்டடா, அடியடா,

தள்ளடா, போகிருகியா, மிதிக்கட்டுமாடி, அப்புறம் மிதித்தே விடுவேன். இன்னும் நாலுமொத்து மொத்திவிடுவேன்'' என்றிப்படி ஒவ்வொருவரும் கூவிக்கொண்டு நின்ற ஒரு பெரிய கூட்டத்தின் நடுவில் கீழே ஊன்றி தரையை நோக்கிச் சாய்ந்த உடலும், நீட்டிய காலும், மேல்துணி நீங்கிய கிழட்டு மார்பும், முட்டாக்கு நீங்கிய மொட்டைத் தலையும் பொக்கை வாயுமாய் கையால் மார்பிலும் மண்டையிலும் மாறிமாறி யடித்துக் கொண்டு மண்ணை வாரித் தூற்றிக்கொண்டு சப்தலோகங்களும் கிடுகிடு என்று நடுங்கச் செய்யத்தக்க பெருங்குரலுடன், ''ஐயோ'' என்று கதறிக்கொண்டு தாடகை போன்ற கரிய பெரிய உருவத்தையுடைய ஒரு கிழவி உட்கார்ந் திருந்தாள். அவளுக்குச் சுமார் 80 வயது இருக்கலாம். அவ்வூர் வம்பர் மஹா சபையின் உத்தியோகஸ்தர்களில் அவள் ஒருத்தி. வம்பு, வழக்கு விசாரணையில் கணக்கன், நாட்டாண்மைக் காரன்கூட அவளுக்கு நிகரில்லை.

ஒரு காலத்தில் மழையில்லாது சிறுகுள முழுவதும் பயிர்கள் எல்லாம் விளையாமல் சாவியாப்போக அவ்வூர் குடிகள் தீர்வையைத் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். சாவி பார்க்க அனுப்பப் பட்ட தாசில்தார் அவர்கள் விண்ணப்பத்துக்கு விரோதமாகத் தீர்வையை வசூல் செய்யும்படி உத்தரவு செய்துவிட்டார். யார் என்ன மன்ருடியும் அவர் கேட்கவில்லை. இப்படியிருக்கையில் ஒரு நாள் அவர் மனைவி ஆற்றங்கரைக்கு வந்திருந்தபோது இந்தக் கிழவி அவளிடத்தில் போய் அவள் முகத்தைக் கடித்துவிடுபவள்போல் சமீபத்தில் சென்று கூர்ந்து பார்த்துகொண்டு, ''நீ யாரம்மா, இந்த தாசிலாய் வந்திருக்கிருனே அவன் பெண்டாட்டியா? ஊர் வாயிலெல்லாம் விழுந்திருக்கிறீர்களே, குஞ்சுங் குழந்தையுமாக க்ஷேமமாயிருக்க வேணடும்!'' என, அந்த அம்மாள் பயந்து தன் புருஷனிடம் ஆற்றங்கரையில் நடந்த சங்கதியைச் சொல்லி, ''நமக்கு ஏதோ சனியன பிடித்திருக்கிறது, அவள் வாயில் நச்சுப்பல் நிச்சயமாயிருக்கிறது. இந்த ஊராருக்கு விரோதம் செய்ய வேண்டாம்'' என்று வேண்ட, அவரும் பயந்துபோய் தீர்வை

முழுவதையும் தள்ளுபடி செய்ததுமன்றி, அந்த ஊருக்கு ஒரு குளமும் வெட்டிக் கொடுத்துவிட்டுப் போனார். அந்த ஊருக்கு இவ்வளவு பெரிய உபகாரம் செய்த கிழவியின் பெயர் குப்பிப் பாட்டி; அவளுக்குப் 'பாப்பாபட்டி யகத்து வெட்டரிவாள்' என்று பட்டப்பெயர். ஏனெனில், சுமார் இருபது வருஷங் களுக்கு முன்னே தன் அயல் வீடாகிய பாப்பாபட்டி சங்கரய்யர் அகத்துக் கொல்லையில் போடப்பட்டிருந்த ஒரு விறகுக் கட்டையை அவள் இராத்திரியில் திருடிவிட்டு மறு நாட் காலையில் அந்த விறகை வெட்ட அரிவாளுக்கு அவர்கள் வீட்டிற்கே போனாள். அவள் திருட்டு வெளியாய்விட்டது. ஆதலால் அதுமுதல் அவளுக்குப் 'பாப்பாபட்டி யகத்து வெட்டரிவாள்' என்று பட்டப்பெயர் ஏற்பட்டது.

அவள் தெருவழியே போகும்போதெல்லாம் அவ்வூர்ப் பிள்ளைகள் (சில சமயங்களில் பெரியவர்கள்கூட) அப்பெயர் வைத்துக் கூப்பிட, அவளுக்கு அசாத்தியமாகக் கோப முண்டாகி அவள் ஏகமாய்த் திட்டுவாள். அப்படிச் செய்யவே பையன்களுக்கு இன்னும் அதிக உற்சாகம். கடைசியாக அப்படிக் கூப்பிடப்படுவதிலும் கோபிப்பதிலும் அவளுக்கே உற்சாக முண்டாகிவிட்டது. பொழுது போகா விட்டால் அவள் வீதி வழிவந்து சும்மா இருப்பவனைப் பார்த்து 'நீ நல்லவன், ஒன்றும் சொல்லமாட்டாய்' என்பாள். அவன் எதிரே 'ஆமாம் பாட்டி' என்று சொல்லிவிட்டு அவள் கொஞ்ச தூரம் போனவுடனே "பாப்பா பட்டி வெட்டரிவாள்" என்று உரக்கக் கூப்பிட்டுவிட்டு ஓடிப்போய்விடுவான். இவளோ, "ஏனடா கட்டையிலே போவாய்" என்று தன் னுடைய ராமபாணத்தைத் தொடுத்து விடுவாள். கேலிக்காரப் பிள்ளைகள் அவளைப் பார்த்து நான் என்றைக்காவது உன்னை "பாப்பா பட்டி யகத்து வெட்டரிவாள் என்று சொல்லி இருக்கிறேனா பாட்டி?" என்றும், "பாட்டி அவன் உன்னைச் சும்மா பாப்பாபட்டி யகத்து வெட்டரிவாள் என்று சொல் கிறான்" என்றும் சொல்லாததுபோல் சொல்வது வழக்கம்.

இப்பொழுது அவள் இருந்த நிலைமையை முத்துஸ்வாமி அய்யர் பார்த்த மாத்திரத்தில் அறிந்துகொண்டு அவளிடம்

வரவே இருபுறமும் ஜனங்கள் விலகினார்கள். நடந்த சங்கதி என்னவென்றால், அவள் வழக்கம்போல் கிராமப் பிரதட்சணம் செய்துகொண்டு வருபவள்போல வரும்போது கலியாணத்திற்கு வந்திருந்தவர்களில் ஒருவன் உள்ளூர்ப் பிள்ளைகளால் தூண்டப்பட்டு அவளைப் பெயரிட்டழைக்கவே, அவள் வழக்கம்போல வைய ஆரம்பித்தாள். அவன் "கலியாணப் பந்தலுக்கருகே வையாதே'' என, அவள் அதுதான் சமயமென்று, "உன் கலியாணமும் கண்டது இன்னொன்றும் கண்டது, உன் கல்யாணத்தில் இழவுவிழ'' என்று வையவே, அங்கிருந்தவர்களில் ஒருவனுக்குக் கோபம் வந்து அவளைப் போவென்று பிடித்துத் தள்ளினான். அவள் கீழே விழுந்து மறுபடி அதிகமாய் வையவே கூட்டம் கூடிவிட்டது. அவள் என்ன பண்ணியும் அவ்விடம் விட்டுப் போகாததால் ஒருவன் அவளை ஓங்கியறைந்தான். அதனால் அவள் பெரிய கூக்குரல் போட்டாள். அதைக் கேட்டுத்தான் உள்ளே இருந்தவர்கள் எல்லாரும் ஓடி வந்தார்கள்.

முத்துஸ்வாமி அய்யர் அவளிடம் சென்று, "இது என்ன பாட்டி இது?'' என, அவள், "அப்பா முத்துஸ்வாமி, வந்தாயா மகாராஜனா யிருப்பாயப்பா! இந்தச் சனியன்களெல்லாம் என்னைப்போட்டு மொத்துகின்றன. (அழுகிறதாகப் பாவனை பண்ணிக்கொண்டு) இதோபார் இங்கே காயம்,இங்கே காயம்' என்று அவர் கையைப் பிடித்துக்கொண்டு அவள் மார்புப் பக்கம் கொண்டுபோக அவர் கையைப் பின்னிழுத்துக் கொண்டு, "அவர்கள் கிடக்கிறார்கள். நீ நல்லவள், புத்திசாலி, எழுந்திரு, நல்ல சமயம் பார்த்துக்கொண்டாய்! அகத்துக்குப் போ; நீ என்ன பண்ணுவாய்! உன்னைச் சொல்லக் குற்றமில்லை'' என்றார். அவள் "எனக்குத் தொண்ணூறு வயதாய்விட்டது; எனக்கு அடிபடச் சீவனிருக்கிறதாப்பா, முத்துஸ்வாமி என் தங்கக் குழந்தை, நீ இல்லா விட்டால்'' என்று சொல்லி முடிப்பதற்குமுன் அவர் "சரிதான் போ. எனக்கு நடந்த சங்கதியெல்லாம் தெரியும் போ; சரிதான் போ, அந்தப் பக்கம்'' என்று கோபித்துச் சொல்ல அவள் எழுந்திருந்து கொண்டு, "நீ என்னடாப்பா அதட்டுகிறாயே!

நீ நல்லவனப்பா, உனக்குச் சமானமா, என் பிள்ளை சொல்லு வான்'' என, அவர் "நல்லவனுயிருக்கக் கண்டுதான் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்கிறது. நீயும் நல்லவள்தான். அப்புறம் பேசிக்கொள்வோம்போ'' என அவள் தன் துணிகளைக் கட்டிச் சுருட்டிக்கொண்டு போய்விட்டாள். அவள் போகவே முத்துஸ்வாமி அய்யர் திரும்பினுர்.

"இதென்ன இப்படி சகுனத்தடை நேரிட்டது'' என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த கிருஷ்ணய்யர், ராமசுவாமி சாஸ்திரிகள் ஆகிய இருவரையும் அவர் பார்த்து அவர் களுடைய யோசனையை அறிந்து சிரித்துக்கொண்டு, "ஏன் மாமா உள்ளே போவோமே. இது ஒரு வேடிக்கை. இவள் மாதிரி இன்னும் இரண்டு மூன்று பைத்தியக்காரிகள் உண்டு இந்த ஊரிலே'' என்ருர். குப்பி செய்கை சகுனத்தடை யென்று முத்துஸ்வாமி அய்யருக்கும் பட்டது. ஆயினும் அவளும் பொன்னம்மாளும் முந்தின நாள் தனித்துப் பேசிக் கொண்டிருந்ததை அவர் பார்த்ததால், இவளை அந்தப் பொன்னம்மாளே தூண்டிவிட்டிருப்பாள் என்பது அவருடைய எண்ணம். ஆயினும் நல்ல வேளையாய் மாங்கலியதாரண சமயத்துக்கே வந்துவிடாமல் நம்மைக் காப்பாற்றினுள் என்று அவருக்குச் சந்தோஷம். அவர் அவளை பைத்தியக்காரி என்ற வுடன் கிருஷ்ணய்யர், "அவள் பைத்தியக்காரிபோல் தோன்ற வில்லையே'' என, முத்துஸ்வாமி அய்யரும் சற்று மனங்கலங்கி, "அரைப்பைத்தியக்காரி, வந்த காரியம் வேறு. அப்புறம் சொல்கிறேன். தஞ்சாவூராளுடைய சேஷ்டை இது'' என்ருர். ராமசுவாமி சாஸ்திரிகள், "ஆனுலும் இப்படிச் செய்வளா'' என, முத்துஸ்வாமி அய்யர் "அவளா! அவள் எல்லாம் செய்வாள் மாமா! சரிதான் கழுதையை விட்டுத் தள்ளுங்கள். உள்ளபடி இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மீனுட்சிதான் காப்பாற்றவேணும். அவள் மேலே பாரத்தைப் போடுவோம். உள்ளே வாருங்கள். (உரக்க) எல்லாரும் உள்ளே வர வேண்டும். தயவுபண்ணவேணும்'' என்று சொல்லிக்கொண்டு எல்லாரையும் உள்ளே கூட்டிச்சென்ருர்.

10

கல்யாண தடபுடல்

இது நிற்க, மணவறையிலிருந்த ஸ்ரீநிவாசன் தனக்குக் கல்யாணம் நடக்கிறதென்பதை நினைத்துத் தன் மனதுக்குள் பெருமைப்பட்டது இவ்வளவு அவ்வளவு அல்ல. தன்னருகில் லட்சணமான ஒரு பெண் தன் மனைவியாக உட்கார்ந்திருப்பதை நினைக்க அவனுக்கு உள்ளம் பூரித்தது. புதிதாகப் பட்டாபிஷேகமாகும் ராஜகுமாரனுக்குக்கூட அவ்வளவு சந்தோஷமும் கர்வமும் இருக்காது. அவன் தன் ஆசனத்தில் கொஞ்சம்கூட முதுகை வளைக்காமல் கம்பீரமாய் நிமிர்ந்தபடியே உட்கார்ந்தான். அங்கவஸ்திரத்தை இழுத்து இழுத்து அடிக்கடி சீர்திருத்திக் கொண்டான். தன் வலது கையால் முகவாய்க் கட்டையைப் பல முறை தடவினன். அடிக்கடி தொண்டையைத் திருத்திக் கொள்பவனைப்போல் கர்ச்சித்து இருமினன். சில வேளை தன் இரண்டு கைகளாலும் முழந்தாளைக் கட்டிக்கொண்டு யானை ஆடுவதுபோல மெதுவாய் ஆடினன். சிலவேளை தன் விரல்களால் கீழே வெகு விரைவாய் இங்கிலீஷில் எழுதினன். ஒவ்வொரு வேளை தன் முகத்தைத் தன்னருகிலிருந்த சுப்பராயனை நோக்கி அழகாய்த் திருப்பிக் கொண்டு, சில வார்த்தைகளை இங்கிலீஷில் பேசினன். ஹோமம் செய்யும்போது புகையுடன் பழகாத தன் கண்களில் ஜலம் வர அதை அங்கவஸ்திரத்தால் துடைக்காமல் தன் விரலால் சுண்டி எறிந்துகொண்டு, சுப்பராயனை நோக்கி, தன் பெண்டாட்டி காதில்பட "ஆனந்தபாஷ்பம்" என்று சொல்லிக்கொண்டான். ஏதோ புதுமையைக் கண்டவன்போல அடிக்கடி புன்சிரிப்புச் சிரித்தான். நேற்று வரையில் வேஷ்டி கூடச் செவ்வையாய் உடுத்தத் தெரியாத பையன் இன்று பாராட்டிக் கொண்ட பெருமையைப் பாருங்கள்! ஒரு வேளை நாமும் நம்முடைய கல்யாணத்தில் இப்படித்தான் இருந்திருப்போம். மேலும் ஸ்ரீநிவாஸன் சிறுவன்தானே!

மகாகனம் பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யர் அவர்கள் தமது ஆசனத்தில் இவ்வாறு வீற்றிருக்க, குழந்தை லட்சுமி உடல் ஒடுங்கி தலைகுனிந்து அவரிடமிருந்து ஒரு முழத்துக்கப்பால் தங்கத்தில் வார்த்த பிரதிமைபோல் அசைவற்று அமர்ந்திருந்தாள். அவள் அகமுடையானை அவள் இன்னும் செவ்வையாய்ப் பார்க்கவில்லை. அவள் சபைக்கு வரும்போது ஸ்ரீநிவாஸன் உட்கார்ந்தது ஏதோ ஒரு ஜோதி போல் அவளுக்குத் தோன்றியதைத் தவிர, அவனுடைய உருவத்தையும் முகத்தையும் அவள் இன்னும் சரியாகப் பார்க்கவில்லை. ஒருவருமறியாமல் கடைக்கண்ணால் அவனைக் கொஞ்சம் பார்த்துவிட இஷ்டந்தான். ஆனால் எல்லோரும் தன்னைக்கவனித்துக்கொண்டிருந்ததாக அவளுக்குத்தோன்றியதால் அவள் அப்படிச் செய்ய மிகவும் கூசினாள். ஸ்ரீநிவாசனாவது இவளைப் பார்த்தானா! அதுவுமில்லை. அவனுக்கு ஸ்திரீகளைக் காட்டிலும் பத்துப் பங்கு அதிக நாணம். அவளைப் பார்க்க அவனுக்கு ஆசை பூரணமாயிருந்தது. ஆனால் நீக்க முடியாத கூச்சம் குறுக்கிட்டது. இவர்கள் நிலைமை இப்படியிருக்க, தாடகை குப்பியின் கூக்குரல் கேட்டது. உடனே ராமண்ணா வாத்தியாரையும் மற்றும் சிலரையும் தவிர, எல்லோரும் வெளியே போய்விட்டார்கள். ராமண்ணா வாத்தியாரும் வாசல் வரையில் போய்க் கூக்குரலின் காரணத்தை யறிந்து, "இந்தப் படுபாவிக்குச் சாக்காலம் வரவில்லையே! இவளைக் கண்டம் கண்டமாக வெட்டிவிட்டால் தான் என்ன?" என்று முணுமுணுத்துக்கொண்டு திரும்பி விட்டார். குழந்தை லட்சுமியோ திடீரென்று உண்டான சப்தத்தைக் கேட்டு வேடர்களுடைய கொம்பு வாத்தியத்தைக் கேட்ட மான்போலத் திடுக்கிட்டு நடுங்கினாள். இதற்குள் ஸ்ரீநிவாசன் நடக்கும் சங்கதியை யறிந்துவர சுப்பராயனை அனுப்பிவிட்டு வாத்தியாரைப் பார்த்துக் கம்பீரமாய், "தாத்தா, அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டுவிட்டு, "இந்த அற்ப விஷயந்தவிர வேறொன்றுமில்லையே!" என்று வெகு இலக்கணமாய் மறுமொழி சொன்னான். வாத்தியார் மறுமொழியைக் கேட்ட லட்சுமி மனந்தெளிந்து கூட்டம் நீங்கினதை ஒரு பெரிய பாரம் நீங்கினதுபோல் உணர்ந்து

பெருமூச்செறிந்து தன் தலையைக் கோதுபவள்போல சற்று நிமிர்ந்தாள். ஸ்ரீநிவாசன் கூட்டம் திரும்புமுன் தன் மனைவியை எப்படியாவது பார்த்துவிட வேண்டுமென்ற ஆசையுடன் தூணைப் பார்ப்பவன் போலவும் சுவரைப் பார்ப்பவன் போலவும், விட்டங்களைப் பார்ப்பவன் போலவும் கொஞ்சம் கொஞ்சமாய் லட்சுமியைப் பார்க்கத் துணிந்தான்.

இப்படி இவன் கள்ளத்தனமாகப் பார்க்கும்போது, தலையைக் கோதுவதுபோல் பாவனை பண்ணிக்கொண்டு இவனுடைய அழகை ஜாடையாய்க் கண்டு அடங்காத ஆனந்தத்துடன் மிருதுவாக மந்தஹாசம் செய்துகொண்டு தன் கண்களை இவனுடைய அழகான மேனியினின்றும் பறிக்க மாட்டாமல் லட்சுமி பார்த்துக் கொண்டிருக்கத் தற்செயலாய் இவ்விருவர் கண்களும் இமைப்பொழுது சந்தித்தன.

அப்படிச் சந்தித்த உடனே லட்சுமி தலைகுனிந்து விட்டாள். அவள் முகம் வியர்த்தது, கைகால் பதறின, உடல் மயிர்க்கூச்செறிந்தது. காலையில் இளஞ் சூரியனைப் பார்த்த கண்களுக்கு எப்படிச் சற்று நேரத்திற்கு எங்கே பார்த்தாலும் சூரியனுகத் தோன்றுமோ அதுபோல லட்சுமியின் கண்களுக்கு கொஞ்சநேரத்திற்குத் தன் புருஷனுடைய செந்தாமரைபோல் மலர்ந்த முகமும் அழகிய கம்பீரமான பார்வையுமே எங்கும் தோன்றி விளங்கின. அவள் சந்தோஷத்தால் உடல் பூரித்தாள். ஸ்ரீநிவாசனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவு இல்லை. அவனுடைய கண்கள் தேனுண்ட வண்டுகள் போலச் சந்தோஷத்தால் சலித்து அவனுடைய மனக் களிப்பை வெளிப்படுத்தின. லட்சுமியின் இனிமையான முகத்தில் புஷ்பித்த மெல்லிய மந்தஹாஸமும், 'கஞ்சத்தி னளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்' என்ற லட்சணத்திற்குப் பொருந்திய அவளுடைய விசாலமான கண்களும் இவன் உள்ளத்தை அடிமைப்படுத்தின. 'என்ன அன்பு! என்ன அன்பு! என்னைப் பார்த்து அவள் சிரித்த சிரிப்பு ஒன்று போதாதா?' என்று அவன் நினைக்குந்தோறும் அமிர்தம் உண்டவன்போல சந்தோஷ மடைந்தான். இவ்வாறு

இருவரும் பரஸ்பர சரிசன ஆனந்த வெள்ளத்தில் மூழ்கித் தங்கள் தங்கள் நிலைமை தெரியாது மயங்கியிருந்தார்கள்.

இதற்குள் குப்பிப்பாட்டியின் திருக்கூத்து முடிந்து எல்லோரும் திரும்பிவிட்டார்கள். ஆதலால் பெண்ணும் மாப்பிள்ளையும் மறுபடி ஒருவரை யொருவர் பார்த்துச் சந்தோஷிக்க சமயம் வாய்க்கவில்லை. ஆனால் லட்சுமி தன் கழுத்தில் நூதன காந்தியுடன் விளங்கும் திருமங்கல்யத்தை அடிக்கடி தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அதை ஜாடையாய்க் கண்ட ஸ்ரீநிவாசன் தன் மேலுள்ள அன்பை அவள் அவ்விதம் வெளியிட்டாளென்றும் அதைத் தொடும்போதெல்லாம் அதற்கு மெதுவாய் அவள் ஒரு முத்தம் கொடுத்தாள் என்றும் நினைத்துக் கொண்டான். அது உண்மையோ அல்லவோ என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது முதல் ஸ்ரீநிவாசன் தன்னுடைய இரட்டைப் பூணூலையும் பஞ்சகச்சத்தையும் அடிக்கடி கோதி விட்டுக் கொண்டான் என்பது வாஸ்தவம். அதுவுமின்றி ஆசீர்வாதம் முடிந்து எழுந்திருக்கும் தருணத்தில் முன் ஒருவரிடமிருந்து ஒருவர் ஒரு முழந் தூரந்தள்ளியிருந்த தம்பதிகள், இப்பொழுது எப்படியோ ஒருசாண் தூரத்திற்குள்ளாக வந்துவிட்டார்கள். கடைசியாக எழுந்திருந்தபோது ஸ்ரீநிவாசன் தன் அங்கவஸ்திரத்தைச் சரியாகத் தரித்துக்கொள்பவன்போல், வேண்டுமென்றே லட்சுமியின் மீது மெதுவாய் வீசியதை அவ்விருவரையும் சலியாத கவனத்துடனும் அடங்காத சந்தோஷத்துடனும் பார்த்துக் கொண்டிருந்த சுப்பராயன் கண்டான்.

அன்று சாயந்திரம் வழக்கப்படி கூடிய வம்பர் மஹாசபையில் சுப்பம்மாள், "என்ன புள்ளே (பிள்ளை) அணிப்புள்ளே தென்னம்புள்ளே. கொழந்தைகளியுந்தால் முத்துசாமியாத்து மாப்புள்ளையைப்போல இயுக்க வேணும். இல்லாவிட்டா அதுக்கு பியக்கவே பிடாது" என்று (பாணினியில்கூட இல்லாத *"ரயயோரபேத" என்ற சூத்திரவிதிப்படி) வெகு கண்டிப்பாய் உத்தரவு செய்தருளினாள். உடனே நாகு, "ஏன்?

*ரயயோ : × அபேத : = ரகரத்திற்கும் யகரத்திற்கும் பேதமில்லை.

பொண்ணுக்குத்தான் என்ன! பொண் இன்னுப்பிளே நன்னு யில்லேயோ?'' என, வேம்பு, "என்னைக் கேட்டால் மாப்பிள்ளை யைவிட பொண்ணு நன்னுயிருக்கு. அவள் சிரிக்கிறது ஒன்று போதாதா?'' என்றாள். உடனே சுப்பு ஆவேசம் வந்தவள்போல் கைகளை வீசி, ''இந்தா,அதெல்லாம் எனக்குத் தெரியாது. பொண்ணும் மாப்பிள்ளையும் நன்னுப் பொயுந்திக் கையாயியுக்கு. இதா அவாத்திலே பண்ணினுளே, பனமயம் போலே மாப்புள்ளையும் மயப்பாச்சி போல பொண்ணும்'' என்றாள் கேலி செய்யும் பாவனையில்.

எதார்த்தத்திலேயே ஸ்ரீநிவாசனுக்கு லட்சுமி அழகில் குறைந்தவளில்லை. அவளுடைய அழகாயமைந்த அங்கங்கள் செவ்வையாய் சுருதி கூட்டிய வீணையின் தந்திகள் தனித்தனி தங்கள் நாதத்தைத் தொனிக்கிறது மன்றி,மற்ற தங்களுடைய நாதத்தையும் எப்படிச் சோபிக்கச் செய்கின்றனவோ அது போலத் தனித்தனி தத்தம் அழகால் விளங்கியதும் தவிர, மற்றுள்ள அங்கங்களின் அழகையும் எடுத்துக்காட்டின. தெய்வீகப் புலவர்களாகிய கம்பர் முதலியோருடைய கவிகளில் எப்படி உள்ள பதத்தை எடுத்து, வேறு எந்தப் பதம் போட்டாலும் ரசம் குறைந்து போமோ அதுபோல, லட்சுமியினுடைய அங்கங்களில் எதையும் சிறிது மாற்றி னாலும் அழகுக்குக் குறைவே தவிர, விருத்தி கிடையாது. 'கழுத்து சிறிது நீண்டிருந்தால் நன்றாயிருக்கும்,' 'கால் சிறிது குறுகிக் கை சிறிது பெருத்திருந்தால்,' என்றிப்படி, 'ஆல், உம்' என்ற விகுதிப் பிரயோகங்களுக்கு இடம் கிடையாதபடி அவளுடைய அங்கங்களின் அமைப்பு அவ்வளவு அழகா யிருக்கும்.

ஸ்ரீநிவாசனுடைய உருவத்தில் சரீர அமைப்பைக் காட்டி லும் மிருதுத்துவமும் பளபளப்புமே முக்கியமாக விளங்கின. சங்கீதத்தில் தியாகய்யர் கிருதிக்கும் இங்கிலீஷ் நோட்டுக்கும் என்ன வித்தியாசமோ, அந்த வித்தியாசந்தான் இவ்விரு வருடைய சரீரங்களுக்கும் இருந்தது. அவர்களுடைய முக லட்சணத்திலும் இவ்வித வித்தியாசங்களிருந்தன.ஸ்ரீநிவாசன் பேசும்போது அவன் கண்ணின் ஒளி,பார்ப்பவர்களுக்குப் பளீர்

பளீர் என்று விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் மின்னல் ஞாபகத்தை உண்டுபண்ணும். லட்சுமி பேசும்போது அவளுடைய முகக் குறி அடிக்கடி அழகாக மாறுவது, தகதகவென்று பலவித மாய்ப் பிரகாசிக்கும் வைரக்கல்லை ஞாபகப்படுத்தும். அவள் பேசும்போது அவளுடைய கைகால் செய்யும் அபிநயத் தாலும் முகத்தில் உண்டாகும் வேறுபாட்டாலும் தூர நிற்பவர்கள் கூட அவள் கருத்தை அறியலாம். அவளுடைய உயர்ந்த உதடுகளும், விசாலமான கண்களும் எவ்வளவு துன்பம் வந்தாலும் பாராட்டாது சகிக்கக்கூடிய திட சித்தத் தையும் பொறுமையையும் காட்டி நின்றன. துள்ளித் துள்ளி விழும் மீன்கள்போலச் சுழலும் அவளுடைய கண்களும், அவளுடைய கன்னங்களில் உண்டாகும் சுழிகளும், அவ ளுடைய அழகான பல்வரிசையும் அவள் முகத்திற்கு ஓர் அபூர்வ மான வசீகர சக்தியை உண்டுபண்ணின. அவளுடைய கண்களின் தோற்றம் வெகு அரிதான குளிர்ச்சியையும் மிருதுத் தன்மையையும் உடையதானாலும், தேவையான காலத்து, கண்டோரைக் கலக்கத்தக்க, 'உடலினுயிரையு முணர்வையு நடுவு போயுருவு மதர்விழி' என்ற லட்சணத் திற்குப் பொருந்திய ஒரு கூர்மையான பார்வையும் அவை களுக்கு உண்டென்று நினைக்க இடமிருந்தது. ஸ்ரீநிவாச னுடைய முக அழகு வேறுவிதம். அவனது உயர்ந்த மண்டை யும், உருண்டை முகமும், விசாலமான நெற்றியும் அவனுக்கு ஓர்வித கம்பீரமான தோற்றத்தைக் கொடுத்தன. அவனது சற்று கீழ்நோக்கிய கண்களும், சிறிது முன்னேவந்து ஒன்றின் மேல் ஒன்றாய்ப் படிந்திருக்கும் அவன் உதடுகளும் சாந்தத் தையும், சிற்சில சமயங்களில் சோர்வையும் உணர்த்தின. ஆனால் அவனுடைய கூர்மையான மூக்கும், ஓயாது சுழலும் கண்களும் அவனுடைய முகத்தில் மந்தமான தோற்ற மென்பதே இல்லாமல் நீக்கி, அவனுடைய தீட்சண்யமான புத்தியையும் மனோகரமான சுறுசுறுப்பையும் ஹிருதய பூர்வ மான உற்சாகத்தையும் பிரகாசிக்கச் செய்தன.

''ஓங்குமலைக்காட்டி னுள்ளிருந்து தூங்காமல்
தூங்குசப்ர மஞ்சமிசைத் தூங்கு நவரசத்தே

மொய்த்தமலைக் காட்டு முள்ளு டலையாமல்
மெத்தையின்மே லேறிவிளையாடுந் தோகைமயில்,''

என்றிப்படி எவ்விதம் வர்ணித்தாலும் போதாத அழகு பொருந்திய லட்சுமியும் அவளுக்காகவே சிருஷ்டி செய்யப் பட்டவன்போல் தோன்றிய 'சித்திரத்தும் எழுதொணு வனப் பினனுகிய'—சித்திரத்தில் கூட எழுதமுடியாத அழகையுடைய ஸ்ரீநிவாசனும் மணவறையில் உட்கார்ந்திருந்த கண்கொள் ளாக் காட்சியைக் கண்டு சந்தோஷிக்காதவர்கள் கிடையாது.

இவர்கள் 'நலங்கு' இட்டதும், தேங்காய் உருட்டிப் 'பூச்செண்டு' ஆடியதும் வெகு நேர்த்தியாயிருந்தன.

ஸ்திரீகள் எல்லாரும் ஸ்ரீநிவாசனுடன் பேசுவதை ஒரு பெரிய ஆனந்தமாய் நினைத்தார்கள். சற்றேறக்குறைய அவன் வயதுள்ள பெண்கள் மனதில் கொஞ்சங்கூடக் களங்கம் இல்லாமல் அவனுடன் பரிகாசம் செய்து விளையாடினுர்கள். விசாலாட்சி என்ற ஒரு பெண் அவனைப் பார்த்து, ''மாப் பிள்ளைக்கு ஆனுலும் இவ்வளவு கர்வம் ஆகாது'' என்று சொல்லிவிட்டு இடி இடி என்று சிரித்தாள். சுப்புலெட்சுமி என்ற பெண் ''அப்படிச் சொல்லாதேயடி, என் அம்மங்காள் அகமுடையான் நிரம்ப சாது. அடித்தால்கூட அழத் தெரியாது!'' என்ருள். பாகீரதி அவன் முதுகில் அப்பளம் உடைத்தாள். காவேரி அவனுடைய ஜடை சிங்காரத்தைப் பற்றி யிழுத்தாள். காமாட்சி, ''என் அத்தங்காள் அகமுடை யானுக்குப் பெண் வேஷம் போட்டால் நன்ருயிருக்கும்'' என்ருள். இவ்விதமாக எல்லாப் பெண்களும் ஏதாவது உறவு கொண்டாடிக்கொண்டு அவனைப் பரிகாசம் செய்தார் கள். முதலில் சுப்பராயன் கூட இருக்கும்போது கொஞ்சம் கூச்சப்பட்டார்கள். வர வர அவனிருந்தாலும் சட்டை பண்ணுவதில்லை.

மூன்ரும் நாள் கலியாணத்தன்று ஸ்ரீநிவாசன் ஔபாசனம் பண்ணிக்கொண்டிருந்தபொழுது, கோதாவரி என்ற பெண் சந்தடி செய்யாமல் பின்பக்கம் வந்து, ஒரு சுருக்கிட்ட கயிற்ருல் அவனுடைய தலைப்பின்னலுக்கும்

லட்சுமி தலைப்பின்னலுக்கும் முடிச்சுப்போட்டு விட்டாள். ஔபாசனமானவுடன் நடந்த சேஷ்டையை அறிந்த ஸ்ரீநிவாசன், முடிச்சை அவிழ்க்க எத்தனித்தான். அதற்குள் நாலைந்து பெண்கள் கூடி லட்சுமி கையைப் பற்றி, வீட்டின் உள்பக்கம் இழுக்க, ஸ்ரீநிவாசன் முடிச்சை அவிழ்க்கக் கூடாததுமன்றி, அவனும் உள்ளே இழுக்கப்பட்டான். அவன் அதைத் தடுக்க என்ன முயன்றும் முடியவில்லை. அந்த விளையாட்டுப் பெண்கள் சுண்டிச் சுண்டி இழுக்கும்போது அவன் லட்சுமிமேல் மெதுவாய் பலமுறை சாய நேரிட்டது. இவ்விருவரும் இப்படி ஒருவர்மேல் ஒருவர் படும்போது எல்லாரும் 'கொல்' என்று சிரித்தார்கள். இதற்குள் ஏகக் கூட்டம் கூடிவிட்டது. வந்த பெண்டுகளாவது முடிச்சை அவிழ்த்தார்களா? அதுவும் இல்லை. எல்லாருமாய், "அப்படித் தான் இழு. இந்தா இந்த உள்ளே இழுத்து, இருவரையும் விட்டுக் கதவைச் சாத்திப்போடலாம். அகப்பட்டுக் கொண்டாரையா விட்டலபட்டர்,அகப்பட்டுக்கொண்டார்!" என்றிப்படிக் கூவினார்கள். சில ஸ்திரீகள் ஸ்ரீநிவாசனைச் சுற்றி, "மாப்பிள்ளை, மாப்பிள்ளை, மண்ணாங்கட்டி தோப் பிலே..." என்று குதித்துப் பாடினார்கள். ஒருத்தி பின்புறமாக வந்து அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்து, "மாப்பிள்ளை அழாதேயுங்கள், வேண்டாம், அழுவார்களா?" என்றாள். இன்னொருத்தி, "விட்டு விடுங்கடி பாவம், அழுகிறான், குழந்தை,கோந்தை" என்றாள். மற்றொருத்தி, "சிரி ஒக்கச் சிரித் தார்க்கு வெட்கமில்லை, பொம்மனாட்டிகளை மீறிக்கொண்டு போக முடியவில்லை, சிரிப்பு வேறேயா!" என்றாள். இன்னொருத்தி, "மாப்பிள்ளை வேஷ்டியைப் பார் அத்தைப் பாட்டி புடவைபோல" என்றாள். இவர்கள் இப்படிப் பரிகாசம் செய்தது ஸ்ரீநிவாசனுக்குச் சகிக்க முடியவில்லை. ஆயினும் அத்தனை அழகான யௌவன பருவமான பெண்கள் இவ்வளவு உல்லாசமாய் அவனுடன் விளையாட அவனுக்குக் கோபம் வருமா? கோபித்துக் கொள்பவன் போல் பல முறை பாவனை பண்ணினான். அதற்கு அவர்கள், "கோபித்துக் கொள்ளத் தெரிந்தால கோபித்துக் கொள்ளவேணும், இல்லா விடில் சும்மாயிருக்க வேணும்" என்று சொல்லிச் சிரிக்க,

அவனும் சிரித்துக்கொண்டு அவர்களுக்குச் சரியாக விளையாட ஆரம்பித்தான்.

நாலாபக்கமும் அந்தப் பெண்களைத் துரத்திக்கொண்டு 'நின்று குத்திக்காளை' போலப் பாய்ந்தான்; அவர்களைத் திருப்பிக் கேலி பண்ணினுன். ஒருத்தியைப் பார்த்து, "இரு இரு உன் அகமுடையானிடம் சொல்லுகிறேன் இரு" என்றுன். இன்ெெனுருத்தியைப் பார்த்து, "அதோபார் அதோபார், உன்னகத்துக்காரர் வந்துவிட்டார்" என்றுன். அவன் வெள்ளிப் பஞ்ச பாத்திரத்தைக் கையில் ஓங்கிக்கொண்டு மார்பில் யோக வேஷ்டி தரித்து இடுப்பில் அலங்காரமாய் பஞ்சகச்சம் உடுத்தி, குதித்துக்குதித்து ஓடியதும் அந்த அற்புத யௌவன பருவமுள்ள பெண்கள் பாதரசம் குலுங்கக் குலுங்க, கலீர் கலீர் என்று மெட்டிகள் சப்திக்க 'விறறவழ வாணிமிர மெய்யணிகள் மின்ன சிற்றிடை நுடங்க வொளிர் சீரடி பெயர்த்து' அவனைச் சுற்றி ஓடி விளையாடியதும் ஒரு மின்னரசைப் பளீர் பளீர் என்று பாயும் பல மின்னல் சூழ்ந்தது போல வெகு அழகான நேத்திரோற்சவமாயிருந்தது. இவ் விதம் ஸ்ரீநிவாசன், குழந்தை கிருஷ்ணன் ஆயர்பாடியில் கோபிகா ஸ்திரீகளுடன் விளையாடியதுபோல விளையாடிக் கடைசியில், "அந்த உள்ளுக்குத்தானே போகவேணும் என்கிறீர்கள்; நானே போகிறேன். நீங்கள் விட்டு விடுங்கள்" என்று சொல்லி லட்சுமியைப் பார்த்து உரக்க, "அந்த உள்ளுக்குப் போகலாம் வா" எனவே எலலாரும், "பெண்டாட்டியோடு பேசினுன். வெட்கமில்லாமல் பெண டாட்டியோடு பேசினுன்" என்று விழுந்து விழுந்து சிரித் தார்கள். இதற்குள் தற்செயலாய் ராமண்ணு வாத்தியார் வந்தார். வந்தவுடன் ஸ்ரீநிவாசன் அவரைப் பார்த்து முடிச்சை அவிழ்க்கச் சொல்ல, அநதப் பெண்கள், "அவருக்கு முடிச்சவிழ்க்கத் தெரியாது. ('முடிச்சவிழ்க்கி' எனறுல திருடனென்றும் அர்த்தம்.) தாத்தா, அவிழ்ததீரா பார்ததுக் கொள்ளும்! தொந்தி பத்திரம்!" எனறு சொல்லி அவரை மடக்கி விட்டார்கள். நெடுநாள் சிரமப்பட்டுச் சம்பாதித்த தொந்தியை இழக்க அவருக்கு இஷ்டமில்லை. கொஞ்ச

நேரத்திற்கெல்லாம் முத்துஸ்வாமி அய்யரே வந்து விட்டார். அவர் வந்தவுடன் நடக்கும் சங்கதியைக் கிரகித்துக்கொண்டு ஸ்ரீநிவாசனுடைய குணத்தைக் கண்டு மகிழ்ந்து, அவனிடம் வந்து முடிச்சை அவிழ்க்கவே, அந்தப் பெண்களெல்லாம் "அவிழ்க்காதேயுங்கள் மாமா, அவிழ்க்காதேயுங்கள் அப்பா" என்று சொல்ல, அவர் சிரித்துக்கொண்டே, "பொல்லாத குட்டிகள் அம்மா! பொங்கல் சாப்பிட வேண்டாமா, நாழிகையாகவில்லையா? பலமா போட்டிருக்கிறுள் முடிச்சை, யாரடி போட்டது!" என்று சொல்லிக் கொண்டே முடிச்சை அவிழ்த்து விட்டார். உடனே ஸ்ரீனிவாசன் தன் ஜாகைக்குப் புறப்பட்டான். அந்தப் பெண்கள் "அறுத்து விட்டதும் கழுதை எடுத்து விட்டதாம் ஓட்டம்" என்று சொல்லிக்கொண்டு அவனை வாசல்வரை துரத்திவிட்டு, உள்ளே சிரித்துக்கொண்டே ஓடினுர்கள்.

அன்று மத்தியானம் சாப்பாடான பிறகு ஸ்ரீநிவாசன் சுப்பராயனுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று ஒரு பெண் ஓடிவந்து, "இந்தா உன் பெண்டாட்டி காகிதம் கொடுத்தாள்" என்று சொல்லி, ஒரு கடிதத்தை அவன் மடியில் போட்டு விட்டு ஓடிவிட்டாள். அதை அவன் வெகு ஆவலுடன் எடுத்தான். அது முரட்டுக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது. வரிகள் வெகு கோணலாயிருந்தது மின்றி எழுத்துக்கள் விகாரமாயும் பிழையாயுமிருந்தன. அதில் எழுதப்பட்டிருந்த விஷயம் இதுதான்:

"நீ இன்னிக்கு வெடி காலம் அப்பத்தாஞு எம்மேலே இடிக்கரது? அப்போது இடிச்சது எனக்கு இன்னும் வலிக்கிறது. அழுகைகூட வருது. பொம்மண்டாட்டி குட்டிகளை துமுரிக்கிண்டு ஒடப்படாடட எந்நை இடிக்கச் சொல்லிருக்கோ. இந்நமே அப்படி இடிக்கப்படாது. எல்லா குட்டிகளுக்கும் எ தெரக்க எந்நோடு பேசலாமா, சீ இது எந்ந லெட்சைக் கூத்து- கல்யாணி". (லட்சுமியின் மறுபெயர்.)

இந்தக் கடிதத்தை ஸ்ரீநிவாசன் பார்த்தவுடன் அவனுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன. உதடுகள் படபடவென்று துடித்தன.

கைகள் பதறின. இப்படிச் சிறிது நேரம் மௌனமாயிருந்து பிறகு பெருமூச்சு விட்டு சுப்பராயனைப் பார்த்து, "இதைப் பார்த்தாயா?" என்று சொல்லி அவன் கையில் கடிதத்தை எறிந்தான். ஸ்ரீநிவாசன் படிக்கும்போதே கூடப்படித்த சுப்பராயன் மறுபடியும் அதைப் படித்துவிட்டு, "என்ன ஆச்சரியமா யிருக்கிறது, என்ன தைரியம்!" என்றான். ஸ்ரீநிவாசன், "தைரியம் மட்டுமா, "நீ" யாம் "நீ". "நீங்கள்" என்றுகூட எழுதவில்லை. வயது போதாது. அவள் என்ன பண்ணுவாள், ரொம்ப பலமாய் இடித்து விட்டேன்! அவளா யிருக்கக்கண்டு பொறுத்தாள்? (கடிதத்தை வாங்கிக் கொண்டு) அழுகை வருகிறதாம். அழு, உன்னைக் கல்யாணம் பண்ணியதற்காக உன்னைக் காட்டிலும் எனக்கு அதிகமாய் அழுகை வருகிறது" என்றான்.

சுப்பராயன்: "அவள்தான் எழுதியிருப்பாள் என்று நினைக்கிறாயா?"

ஸ்ரீநிவாசன்: "அவள் எழுதாமல் வேறே யார் எழுதப் போகிறார்கள், என்ன தைரியம்! நான் அவள் கையைப் பிடிக்குமுன் அவள் என் கையைப் பிடிக்கிறாள். எவ்வளவு துணிவு என்கிறாய்! யாரார் எவ்வளவு கொடுத்து வைத்திருக்கிறார்களோ அவ்வளவுதான் கிடைக்கும். ஆசைப் பட்டால் பிரயோசன மென்ன?"

சுப்பராயன்: "சே! அவள் எழுதியிருக்கமாட்டாளடா! கம்பராமாயணம் முதல் வாசித்தவளுடைய எழுத்து இப்படியா இருக்கும், குட்டிகள் யாரோ இந்த சேஷ்டை பண்ணியிருக்கிறார்கள். நான் சொன்னேன் என்று பாரேன்."

ஸ்ரீநிவாசன்: "நல்லது, இருக்கட்டும். லச்சைக் கூத்தா, அப்படியா! என்னைப் பார்த்தால் பொருட்டாய்த் தோன்ற வில்லை."

சுப்பராயன்: "என்ன! நிச்சயமாய் அவள் இதை எழுத வில்லையென்று நான்தான் சொல்லுகிறேனே, அவள் முகத் தைப் பார்த்தாலே தெரியவில்லையா? குட்டிகள் யாரோ எழுதியிருக்கிறார்கள். அப்புறம், தன்னைப் போலத் தெரியும்.

நீதான் அவளைக் கேளேன்'' என, ஸ்ரீநிவாசன், ''இன்னும் அவளுடன் பேசிவிடவும் வேண்டுமா?'' என்று கண்ணீர் விட ஆரம்பிக்கவே, சுப்பராயன் அவனைத் தேற்ற அவன் தேறியிருந்தான். மறுநாளும் அன்று போலவே எல்லாப் பெண்களும் அவனுடன் உல்லாசமாய் விளையாடினார்கள். அவன் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவன் நெற்றியில் சுண்ணும்பையும் விளக்கெண்ணெயையும் குழைத்து நாமம் போட்டுவிட்டு அவன் இலையில் உட்கார்ந்து பரிசேஷனம் செய்யும்வரை வாயை மூடிக்கொண்டிருந்து, பிறகு எல்லாரும் கொல்லென்று சிரித்துப் பரிகாசஞ்செய்து விளையாடினார்கள். ஆனால், ஒருவராவது நெடுநேரம் காகித சங்கதியைப்பற்றிச் சொல்லவே யில்லை. அது ஸ்ரீநிவாசனுக்கு ஒரு விதத்தில் வருத்தத்தை உண்டுபண்ணினாலும் அவர்களுக்கு அந்த அசந்தர்ப்பமான கடிதம் காட்டப்படவில்லையென்ற எண்ணம் அவனுக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்தது. பிறகு அவர்களே எழுதினார்களென்ற சங்கதி வெளியாய் விட்டது.

மறுநாள் ஸ்ரீநிவாசன் சாப்பிடும்போது, சிற்சிலர் தவிர ஏறக்குறைய எல்லாப் பெண்களும் ஒருமித்து நின்றாலும் அவனுடன் ஒருவராவது பேசவில்லை. அதில் ஏதோ விசேஷ மிருக்கிறது என்று கொஞ்சம் மனதில் பயமிருந்தாலும் விளையாட்டாய்க் கேட்பவன் போல், ''ஏது, இன்றைக்கு என் அம்மங்காள் முதலிய எல்லோரும் பேசமடந்தையா யிருக்கிறது?'' என, ஒருத்தி, ''உன்னுடன் என்ன விளை யாட்டு, நாளைப் பொழுது விடிந்தால் நீ எங்கேயோ நாங்கள் எங்கேயோ?'' என்றாள். மற்றொருத்தி, ''நீதான் எங்களை எல்லாம் விட்டு விட்டு ஊருக்குப் போகிறாயே, உன்னுடன் என்ன பேச்சு வைத்திருக்கிறது?'' என்றாள். மற்றொருத்தி பெருமூச்செறிந்து, ''இந்த இரண்டு மூன்று நாளும் எவ்வளவோ சந்தோஷமாய் விளையாடிவிட்டு நாளை எப்படிப் பொழுது போகும் என்று இப்பொழுதே ஏக்கமாயிருக்கிறது, இவ்வளவுதான். எத்தனை நாள்தான் சந்தோஷமாயிருக் கிறது!'' என்றாள். இப்படி எல்லாரும் தான் ஊருக்குப் போகிற விஷயத்தைக் குறித்து உண்மையான விசனத்தை வெளியிட, ஸ்ரீநிவாசனுக்குச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்

போதே தன்னையறியாமல் கண்களில் ஜலம் வந்துவிட்டது. அடக்க அடக்க அதிகமாய் விசனம் மேலிட்டது. அவன் கண்ணீர் விட்டதைப் பார்த்து அவனுடன் விளையாடின ஸ்திரீகள் எல்லோரும் விம்மி விம்மி அழ ஆரம்பித்தார்கள். அங்கிருந்த கிழவிகளில் சிலர், "நன்றாயிருக்கிறது, கல்யாணமு மிதுவுமா அழுகிறதைப் பாரடி, அடி பைத்தியக்காரக் குட்டிகளா" என்று கோபிக்க, அவர்கள் ஒருவர் ஒருவராய் முகத்தில் துணி போட்டவண்ணமாய் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டார்கள். ஸ்ரீநிவாசனும் சாதத்தை அப்படியே வைத்துவிட்டு மூக்கைச் சிந்திப்போட்டு கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே சென்றான்.

கல்யாண விமரிசையைப்பற்றி விஸ்தரிப்பதனாவசியம். ஜனங்கள் காலை மாலை வெளியே போகும்போது வரும்போ தெல்லாம் "இவ்வளவு சிறப்பான கல்யாணம் கண்டது மில்லை கேட்டதுமில்லையப்பா, அடடா பேஷ், என்ன விமரிசை, என்ன விதரணை" என்று கொண்டாடியவண்ண மாய் இருந்தார்கள். அந்தப் பிரபஞ்ச முழுவதும் முத்து ஸ்வாமி அய்யருடைய கீர்த்திமயமாயிருந்தது. நாலைந்து டிப்டி கலெக்டர்கள், பத்துப் பதினைந்து தாசில்தார்கள், இருபது முப்பது சிரஸ்ததார்கள், நாற்பதைம்பது ஸப் மாஜிஸ்ட்ரேட்டுகள், நூறு நூற்றைம்பது கோர்ட்டு உத்தி யோகஸ்தர்கள், இருநூறு முந்நூறு குமாஸ்தாக்கள், ஐந்நூறு அறுநூறு வைதிகர்கள் என்றிவ்விதம் ஆயிரக்கணக்காய் நானாவித ஜனங்களும் கூடியிருந்தார்கள். முன்னமே சொல் லப்பட்ட பெரிய வைத்தி, ராகவய்யர் முதலிய வித்வான்கள் தவிர, தற்செயலாய் அந்தப் பிரதேசத்திற்கு வந்திருந்த தஞ்சாவூர் சமஸ்தான வைணீகர்(வீணை வாசிப்பவர்கள்)மகா வித்துவான் சலலகாலி (தென்றற்காற்று) கிருஷ்ணய்யரவர் களும் ராஜதானி முழுவதும் பிரக்யாதி பெற்ற ராமதாஸ் விகடகவியும் கல்யாணத்திற்கு வரவழைக்கப்பட்டார்கள் பெரிய வைத்தியும் ராகவய்யரும் போட்டிபோட்டுப் பாட, ராஜலட்சுமியாட, கிருஷ்ணய்யர் வீணை வாசிக்க, ராமதாஸ் விகடம் செய்ய, முத்துஸ்வாமி அய்யரகத்துக் கல்யாணப் பந்தல், தும்புரு நாரதர் பாட, ஊர்வசி திலோத்தமையாட

ஆனந்தமயமாய் விளங்கும் தேவேந்திர சபைக்குச் சமானமா யிருந்தது. அங்கிருந்த ஜனங்களோ 'உடம்பொடு துறக்க நாடுற்றவரையு மொத்தார்' என்றபடி சரீரத்துடன் தேவ போகத்தை அடைந்தவர்களை யொத்தார்கள். தங்களுடைய கவலைகளையும் கஷ்டங்களையும் மறந்து,'ஆஹா! ஆமாம், ஆமா மாம், அப்படித்தான், நிஜந்தான், அடடா, அப்பப்பா, பேஷ், பேஷ்,' என்றிப்படிச் சொல்லித் தன்னை யறியாமல் சிரக்கம்பம் கரக்கம்பம் செய்வதே அங்கு வந்திருந்த சகலருக்கும் தொழிலாக இருந்தது.

> ''பரித்த செல்வ மொழியப்படரு நாள்
> அருத்தி வேதியர்க் கான்குல மீந்தவர்
> கருத்தி னுசைக் கரையின்மை கண்டிறை
> சிரித்த செய்கை நினைந்தழுஞ் செய்கையாள்''

என்றபடி ஸ்ரீராமர் கொடுத்தும் திருப்தியடையாத வைதீ கர்கள்கூட இந்தக் கல்யாணத்தில், ''உமக்கென்ன தட்சணை, உமக்கென்ன தட்சணை?'' என்று ஒருவரைப் பார்த்து ஒருவர், பல்லை இளித்துக்கொண்டு ரகசியமாய்க் கேட்டு, ''நல்ல தட்சணை, நல்ல மனசு, மகாராஜனுக இருக்கவேணும்'' என்று ஆசீர்வதித்து சந்துஷ்டி யடைந்தார்கள் என்றால், கல்யாணத்தின் சிறப்பு எப்படி இருந்திருக்க வேண்டு மென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பாடகர்கள் பிரம்மானந்தமாகப் பாட, விகடகவி மகா வுல்லாசமாக விகடம் செய்ய, திருவாரூர்த் தேவடியாள் வெகு மனேரஞ்சிதமாய் ஆட, பிராமணோத்தமர்கள் தங்களுடைய நீண்ட கழுத்தில் ஆறுமாதத்திற்குப் போதுமான ஜலத்தைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் ஒட்டகங்களைப் போல, ஒரு வருஷத்திற்குக் காணும்படியான போஜனத்தை சுதாவாக சப்திக்கும்படியான தங்களுடைய கடவாத்தியங்களாகிய தொந்திகளில் சேர்த்து வைத்துக்கொள்பவர்போல போஜ னம் செய்தார்கள். அவர்கள் போட்டிபோட்டு, வாயில்லாப் பிராணிகளாகிய வாழைப்பழம், வடை, போளி முதலிய பண்டங்களைப் பகாசுரன், பீமசேனன் இவர்களைப் போல் துவம்சம் செய்ததையும், அனுமார் யுத்தகளத்தில் ராட்சதர்

களைக் கலக்கியதுபோல போஜன காலத்தில் கையில் அகப்பட்டதை யெல்லாம் கசக்கிச் சின்னுபின்னம் பண்ணி, போன இடம் தெரியாமல் செய்து அட்டகாசம் செய்பவர்கள் போல,ஏப்பம் விட்டுக் கர்ச்சித்ததையும், சாப்பிட்ட சிரமந் தீர, மணலில் கிடந்து புரளும் மதயானைகளைப்போலப் புரண்டதையும், முத்துஸ்வாமி அய்யர் இவர்களுடைய வயிறுகளாகிய ஓமகுண்டங்களைச் சலியாது சந்தோஷமாய் வளர்த்ததையும் இன்னும் அந்தப் பிரதேச முழுவதும் கதை கதையாகச் சொல்லுகிறார்கள். இவ்விதமாக எல்லாவித ஜனங்களையும் திருப்தி செய்த முத்துஸ்வாமி அய்யர், ராஜசூய யாகம் செய்து கிடைப்பதற்கரிய 'சம்ராட்' என்ற பட்டம் பெற்றுச் சிறப்புற்றிருந்த தருமபுத்திர மகாராஜாவைப் போல் விளங்கினார். சந்திரனுடைய கிரணங்கள் நாலா பக்கமும் பரந்து ஏழை, பணக்காரன், பாலன், விருத்தன், பிராமணன், சூத்திரன், ஸ்திரீ, புருஷன் முதலிய எல்லோருடைய உள்ளத்தையும் பட்சபாதமின்றிக் குளிரச் செய்வதுபோல முத்துஸ்வாமி அய்யருடைய தர்மமும் கீர்த்தியும் எங்கும் பரந்து எல்லோரையும் சந்தோஷிப்பித்தன.

11

பெண்டாட்டியாத்தாள் பெரியாத்தாள்

முத்துஸ்வாமி அய்யருடைய கிரகத்தில் நடந்த நிச்சயதார்த்தத்துக்குக்கூட அவர் தம்பி சுப்பிரமணிய அய்யர் போகவில்லை யென்று முன்னமேயே நாம் சொல்லியிருக்கிறோமல்லவா? அவர் பாரிசத் தலைவலியுடன் படாத பாடு படுகிறார் என்று அவரைக் கூட்டிவரப்போன சுப்புளி என்பவன் மூலமாக அறிந்த முத்துஸ்வாமி அய்யர், நிச்சயதார்த்தம் முடிந்த மறுநிமிஷமே அவரைப் பார்த்துவர, அவர் வீட்டிற்குச் சென்றார். அவர் வருவதைக் கண்ட சுப்பிரமணிய அய்யர் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாய் அலத்திக் கொண்டு படுக்கையில் கிடந்து அங்கும் இங்கும்

தலைவிரி கோலமாய்ப் புரளத் தொடங்கினார். அவர் அருமை மனைவியாகிய பொன்னம்மாளோ அவருடைய தலையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "ஐயையோ தெய்வமே, என்ன செய்வேன், என்ன செய்வேன்" என்று தேம்பித் தேம்பிக் கண்ணீர் பெருக்கியவண்ணமாயிருந்து, மைத்துனருக்கு நாணினவள் போல் உள்ளே சென்றாள். இவர்களுடைய கோலத்தைக் கண்ட முத்துஸ்வாமி அய்யருக்குத் தன்னை அறியாமலே கண்களில் ஜலம் வந்து விட்டது. அதை அவர் ஜாடையாய்த் துடைத்துக்கொண்டு, "சுப்பிரமணியம், சுப்பிரமணியம்,என்ன செய்கிறதடா அப்பா? தலைவலியானால் முன்னமேயே எனக்குச் சொல்லிவிட வேண்டாமா?" என்று சொல்லி அவருடைய தேகஸ்திதியை நுட்பமாய் விசாரித்துக்கொண்டு கையைப் பிடித்துப் பார்த்தார். கை நாடி வெகு சரியாக இருந்தது. அதில் யாதொரு வித்தியாசமும் தெரியவில்லை. பிறகு தலையைப் பிடித்துப் பார்த்தார். அங்கும் ஓர்வித மாறுபாட்டையும் காணோம். இவ்வளவு கொடுமையான தலைவலிகூட கைநாடியில் காட்டப்படாததைக் கண்டு அவர் ஆச்சரியத்துடன் சிறிது தலை நிமிர்ந்தார். நிமிரவே, தான் செய்த தந்திரத்தைத் தன் மைத்துனர்கூடத் தாராளமாய் நம்பியதைக் கண்டு சிரிப்பு வர, அதை அடக்கும்படி தன்னால் ஆனமட்டும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த பொன்னம்மாளுடைய முகம் அவர் கண்களுக்குத் தற்செயலாய்த் தென்பட்டது. அதைக் கண்டவுடன் தலைவலி பொய்யோ மெய்யோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த அவருக்குப் பொறுக்க முடியாத கோபமும் வருத்தமும் பொங்கிற்று. அந்தக் கொடிய சாஹஸி செய்த மோசத்தையும் அவள் கையில் அநியாயமாய் அகப்பட்டுப் பம்பரம்போல் தவித்துத் தத்தளிக்கும் தன் தம்பியின் நிலைமையையும் தன் நுட்ப புத்தியினால் கண்ட அவருக்கு அப்புறம் அரைநிமிஷமாவது அங்கேயிருக்கச் சகிக்கவில்லை. உடனே அவர் "நான் போய் வைத்தியரை அனுப்புகிறே"னென்று சொல்லிவிட்டுக் குபீர் என்று எழுந்திருந்து வெளியே போய்விட்டார். மறுநாள் தன் தம்பியை வரவழைத்து உடம்பு ஸ்திதியைப் பற்றிச் சற்று விசாரித்து

விட்டு, நிரம்ப வருத்தப்பட்டவர்போல சிறிது நேரம் மௌனமாயிருந்து பிறகு அவரைப் பார்த்து, "பைத்தியக் காரா, போ, பைத்தியக்காரா! பெண்டுகளுக்குள் ஆயிர மிருந்தாலும் அதையெல்லாம் நாம் மேலே போட்டுக் கொள்ளலாமோ?'' என்று ஜாடையாய்க் கண்டித்து விட்டு, கல்யாண விஷயங்களைக் குறித்து அவரைச் சில யோசனைகள் கேட்டு, பிறகு, "ஆயிரம், ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு ஜவுளி வாங்க வேண்டும். இப்பொழுது முதல் சாமான் களைத் தயார் செய்தால்தான் முகூர்த்தத்துக்குச் சரியாக வரும். நீதான் எல்லாவற்றையும் பொறுப்பாய்ப் பார்க்க வேண்டும்!'' என்றார். அவரும் அவைகளை அப்படியே செய்வதாகத் தாராளமாய் ஏற்றுக்கொண்டார். அவர் தன் தமையனிடத்தில் நிரம்ப பயபக்தி விசுவாசமுள்ளவர். அவரைப் பிதாவுக்குச் சமானமாய்ப் பாவித்து வந்தார். அவரிடத்தில் எதிராக நின்றுகூடப் பேசமாட்டார். கல்யா ணத்துக்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் அவருடைய சகோதர வாஞ்சையையும், மரியாதையையும், விதரணை யையும் நிரம்பக் கொண்டாடும்படி கல்யாணக் காரிய முழுவதையும் அவரே பொறுப்புடன் ஏற்றுச் செய்தார்.

இவர் எவ்வளவுக் கெவ்வளவு கல்யாணத்தைப் பரிமளிக்கச் செய்தாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவர் மனைவி பொன்னம்மாள் அதைக் கெடுக்கப் பிரயத்தனப்பட்டாள். கல்யாணத்தைத் தடுத்துவிடக்கூட அவள் சில முயற்சிகள் செய்தாள். நல்ல வேளையாய் ஒன்றும் பலிக்கவில்லை. பிறகு அதைத் தடுக்காவிட்டாலும் கெடுத்தாவது விடுகிறதென்று தீர்மானம் செய்துகொண்டு, சமையலைப் பழித்தாள், சீர் வரிசையைப் பழித்தாள், பெண்ணைப் பழித்தாள், கடைசி யில் கமலாம்பாளைப் பற்றி அவளுடைய சம்பந்திகளிடத்தி லேயே அவதூறு பேசத் துணிந்தாள். நடந்த சங்கதி முழுவ தையும் தன் நுட்ப புத்தியாலறிந்த கமலாம்பாள், எல்லா வற்றையும் பொறுத்துக்கொண்டு போனதுமன்றி தங்களைப் போல் ஒர்ப்படிகள் உலகத்தில் கிடையாதென்று கண்டோர் சொல்லும்படி அவளுடன் சிரித்து விளையாடிப் பரிகாசம்

செய்தாள். அவளுடைய சுபாவம் பெருந்தன்மையான சுபாவமானதால், முன்னே தன்னைப் பொன்னம்மாள் ஆற்றங்கரையில் வைத வசவுகளெல்லாம் அவளுக்கு ஞாபகங் கூட இல்லை. இவள் அன்பு பாராட்டப் பாராட்டப் பொன்னம்மாளுக்கு இவளிடத்தில் பொருமை அதிகமாயிற்று. சுப்பிரமணிய அய்யர் ஓடி ஓடிக் காரியம் செய்வதைக் காணும் போதெல்லாம் அவளுக்கு உண்டான கோபத்திற்கும் எரிச்சலுக்கும் அளவு சங்கையில்லை. அவர் கலியாணத்திற்கு நாலு நாளைக்கு முன் வீட்டுக்குப் போனவர்தான். அப்புறம் அந்தப் பக்கமே திரும்பவில்லை. கல்யாணம் முடியும் வரைக்கும் அவருக்கு வீட்டுக்குப் போகவேண்டிய அவசியமு மில்லை. பொன்னம்மாளுடைய தயவும் தேவையில்லை. ஆதலால் அவள் தன்னை வீட்டுக்கு வரும்படி என்ன ஜாடைகள் செய்தபோதிலும் அவைகளை யெல்லாம் அவர் பாராதவர் போல் சும்மா இருந்து விட்டார். அவளும் சற்று அவசரமாய் வந்து போகும்படி சுமார் ஆயிரம் பேரிடம் சொல்லி யனுப்பினுள். இவர் போகவே யில்லை. ஆனுலும் அவளிடத்தில் பயம் பயந்தான். ஒருதரம் அகப்பட்டு விட்டால் தப்பிக்கிறது அப்புறம் அந்த ஜன்மத்திற்கு இல்லையென்று அவருக்கு நன்ருய்த் தெரியும். எங்கே அவள் வந்துவிடப் போகிருளோ என்று அவர் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே யிருப்பார். வருகிருளென்று தெரிந்ததோ, உடனே ஏதோ ஒரு பெரிய காரியம் பார்ப்பவர்போல வெகு அவசரமாகப் போய்விடுவார். அவள் உள்ளே வந்து விட்டால் இவர் வெளியே போய் விடுவார். அவள் வெளியே வந்து விட்டால் இவர் உள்ளே போய் விடுவார். அவள் வருகிருளென்று தெரிந்தால் இவர் தனியே யிருக்கிறதே யில்லை. (என்ன செய்துவிடுவாளோ என்று பயம். பாவம்!) ''அடா ராமசாமி, சுப்பண்ணு!'' என்று ஏதாவது ஒரு பெயரைச் சொல்லி யாரையாவது கூப்பிட்டுக்கொண்டு, கூட்டத்தின் மத்தியில் போய் ஒளிந்து விடுவார். இவர் இப்படி ஓடி ஒளிவதைக் கண்ட சில போக்கிரிப் பையன்கள் பொய்யாவது, ''பொன்னம்மாள் வருகிருள்'' என்று சொல்லி வைக்கிறது. இவர் புலி வருகிறது என்று கேட்டு

ஓடிய ஆட்டிடையன் கதையாக விழுந்தெழுந்து ஓடுகிறது! இப்படி அவள் பெயருக்கே பயந்து ஓடி ஒளிந்ததால் அவள் அவரை என்ன தந்திரமாய் வெருட்டி வெருட்டி வேட்டையாடியும் அவர் அகப்படுவதாயில்லை. அவள் அவரைப் பார்த்துப் பல்லைக் கடித்துக்கொண்டு, விரல்களை நெரித்துக் கொண்டு தன்னுடைய கண்கள் மூலமாக எவ்வளவு கோபத்தை வெளியிடக் கூடுமோ அவ்வளவையும் காட்டினாள். ஒன்றும் பலிக்கவில்லை. இவ்வளவு தைரியம் இவருக்கு உண்டானது அவளுக்கு வெகு ஆச்சரியமாயிருந்தது. அவரை எவ்விதம் தண்டனை பண்ணுவதென்றும் அவளுக்குத் தோன்றவில்லை. அவருடைய தைரியத்தையும் அலட்சியத்தையும் நினைக்க நினைக்க அவளுக்கு ஆச்சரியமாயிருந்ததால், அவள் இராத்திரி முழுவதும் தூங்காமல் ஓயாத யோசனைகள் எல்லாம் செய்தாள். தன் கோபந் தீர அவரை வைது திட்டி அவருக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று கூட ஒருநாள் தீர்மானம் செய்தாள். ஆனால், அப்படிச் செய்வது தனக்கே விரோதமாகும் என்று அவளுக்கு மறுநாள் பட்டது. ஆகையால் அவரை நயவஞ்சகமாய்த் தன்னிடம் வரவழைத்து 'வசியமருந்து' செய்து, அதைப் பாலில் கலந்து அவருக்குக் கொடுத்து விடுகிறது என்று கடைசியாய்த் தீர்மானம் செய்துகொண்டதுமன்றி, துஷ்டப் பெண்கள் கையில் ஒரு கூர்மையான வாளாயுதம் போல் விளங்குகின்ற அந்த 'வசிய மருந்து' எனனும் விஷமருந்தை இங்கே சொல்லத் தகாத அநேக சரக்குகளைச் சேர்த்து மறுநாளே தயார் செய்துகொண்டு 'எப்போ வருவாரோ எந்தன் சாமி' என்று வெகு ஆவலுடன் தன் புருஷனுடைய வரவை எதிர்பார்த்திருந்தாள்.

12

மருந்தும் மாயமும், திருட்டும் தீயும்

கல்யாணம் கழிந்தவுடன், சிறுகுளத்திலுள்ளோரெல்லோரும் மேளதாளத்துடன் இரண்டு மைல் தூரம் வந்து வழியனுப்ப, சம்பந்திகள் மதுரை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் போன மறுநாள் ராத்திரி சுப்பிரமணிய அய்யர் தமது பள்ளியறையில் கல்யாண சிரமந் தீர வெகு பிரம்மானந்தமாய் நித்திரை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய உத்தம மனைவியாகிய பொன்னம்மாள் 'மலையிலே விளைந்ததானாலும் உரலிலேதான் வந்து மசியவேண்டும்.' இத்தனைநாள் கல்யாணம் கொண்டாடினாலும் இப்பொழுதாவது வீட்டுக்குத்தானே வரவேண்டும். நம்முடைய கையில் அகப்பட்டு விட்டார். இதுதான் சமயம். 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்.' இது விட்டால் இனிக் கிட்டாது. ஆகையால் நன்றாய் அலங்கரித்துக்கொண்டு அவரிடம் சென்று நம்முடைய அழகாலும் பேச்சாலும் அவரை மயக்கி மறக்கடித்து மருந்தைக் கொடுத்து விடுவோம் என்று யோசனை செய்துகொண்டு, ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கும் வைரம், பச்சை, கோமேதகம் முதலிய நவரத்னங்களாலிழைத்த தனது சர்வாபரணங்களையுமணிந்து, அழகிய ஜவ்வாதுப் பொட்டிட்டு, அலங்காரமான வெண் பட்டுடுத்தி, தாம்பூலம் தரித்த தன் பவள உதடுகளில் இனிய மந்தகாசம் தவழ, பாதசரங்கள் 'கலீர் கலீர்' என்று சப்திக்க, மெட்டிகள் 'பராக் எச்சரிக்கை பராக் எச்சரிக்கை' என்று கட்டியங் கூற, கமகமவென்று காததூரத்துக்கு வாசனை வீச, கையில் தாம்பூலத் தட்டு ஏந்தி பூங்கொடி போல் இடையசைய அன்னம் போலடி பெயர்த்து, மதரதிபோற் கை வீசித் தன் கணவரிடம் வந்து, அவரை இனிய வார்த்தைகள் கூறி மெதுவாய்த் தட்டி யெழுப்ப, சாதாரணமாகவே அவளுடைய அழகில் மயங்கிக் கிடக்கும் அவளுடைய புருஷர் கண் விழித்துப் பார்த்து வாசனையோடு கூடிய பொன் புஷ்பம் போல் விளங்குகின்ற அவளைக் கண்டு நம்முடைய பாக்கியமே பாக்கியம் என்று ஆனந்த பரவசமானார்.

அவர் விழித்தெழுந்ததைக் கண்ட பொன்னம்மாளோ அவர் மேல் மெதுவாய் சாய்ந்து கொண்டு, கல்யாணமானது முதல் அன்று வரை அவர் அறியாத அவ்வளவு அன்புடன் அவருடன் கேளீவிலாசம் செய்து, கொஞ்சிக் குலாவி உரையாடினாள். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே

திடீரென்று நினைத்துக் கொண்டவள் போல, "ஒஹோ! பாலை யெடுத்துக் கொண்டுவர மறந்து விட்டேன் !" என்று அவள் சொல்ல, சுப்பிரமணிய அய்யர், "இருக்கட்டும் போ, இதற்காக நீ மறுபடியும் போக வேண்டாம் ! இன்றைக்கு ஒரு நாளைக்குப் பாலில்லாவிட்டால் என்ன இப்பொழுது ?" என, அதற்கவள், "சே, நன்றாயிருக்கிறது. இது ஒரு சிரமமா எனக்கு ? கல்யாணத்தில் தங்களுக்கு நிரம்ப சிரமம். (அவர் உடம்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு) ஏதுக்கே நிரம்ப உஷ்ணமா யிருக்கிறது. அப்பொழுதே அப்படி அலைகிறீர்களே, உடம்பு கெட்டுப்போமே என்று எனக்கு இருந்த விசாரம் எனக்குத் தெரியும். இப்படி உங்களுக்காகக் கவலைப்பட்டுக்கொண்டு வேளா வேளைக்குச் சோறில்லாமல் தண்ணில்லாமல் இராப் பகலாய்த் தூக்கமில்லாமல் நான் இங்கே கிடந்து தனியாய்த் தவித்துத் தத்தளிக்கிறது; நீங்கள் 'எனக்குத்தான் இந்தப் பூலோகத்தில் அதிசயமாய் அண்ணா வாம் இருக்கிறது' என்று அங்கேதானே சாப்பாடு, அங்கே தானே படுக்கை யெல்லாம் பண்ணிக்கொண்டு நமக்குச் சமானம் நாம்தான் என்று பொழுது போக்குகிறது. ஆயிரம் இருந்தாலும் உங்கள் முத்தண்ணா, நான் ஒன்றும் சொல்லப் படாது, பொன்னண்ணா ! 'ஓடுகிறவனைக் கண்டால் துரத்து கிறவனுக்கெளிது' என்றாற்போல் அவர் ஐயர்வாள், கால் மேல் கால் போட்டுக்கொண்டு, "அடே சுப்பிரமணியா ! இந்தா அந்த வெற்றிலை பாக்குத் தட்டை எடுத்துக்கொண்டு வா !" என்று அதிகாரம் பண்ணிச் சட்டமிடுகிறது. (அவர் முகத்தில் கையால் இடித்துக்கொண்டு) இது ஏமாளம், பரிசாரகப் பயல் போல அங்கேயும் இங்கேயும் ஓடி ஓடி வேலை செய்கிறது. கூப்பிட்டாற்கூட தேகம் தெரிகிறதில்லை. நான் என்ன சாதிக்கப் போகிறேன், அண்ணாவாவது பணக்காரர்!" என்று சொல்லிவிட்டு அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு தன் முகத்தை அவர் முகத்துக்குச் சமீபத்தில் வைத்துக் கொண்டு வெகு நளினமான பார்வையுடன், "அவர் சொத்து முழுவதும் உங்களுக்குத்தான் கொடுக்கப் போகிறாராமே ! அவர் பெண்ணுக்குக்கூட இல்லையாம், எல்லாம் உங்களுக்குத் தானாம்!" என்றாள்.

அந்த ராட்சஸியினுடைய வார்த்தை நமக்குக் கர்ண கடூரமாயிருந்தாலும் சுப்பிரமணிய அய்யருக்குத் தேவகானம் போலவும் அமிர்தபானம் போலவும் இருந்தது. அவளுடைய நெருப்பு மழை ஒய்ந்தவுடன் அவர் நிரம்பச் செல்லமாய், "அடி போடி பைத்தியக்காரி, நீ என்னத்தைக் கண்டாய், எங்களண்ணுவுக்குச் சமானம் இந்தப் பூலோகத்தில் கிடைக்குமா?" என, பொன்னம்மாள், "ஐயோ போகட்டும், இப்படி யார் சொல்லப் போகிறார்கள், கிடக்கிறது, பாலைச் சாப்பிடுங்கள்" என்று சொல்லிவிட்டு, 'அண்ணு மயக்கமா இப்படி ஆட்டி வைக்கிறது. வா, வா, இன்றையோடு சரியாகப் போய்விட்டது. இனிமேல் இப்படிச் சொல்லுகிறதைப் பார்ப்போம்' என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டு மருந்து கலந்து தயாராய் வைத்திருந்த பாலை எடுத்து வந்து கீழே வைத்தால், அவர் நிறம் மாறியிருப்பதைக் கண்டு சந்தேகித்துவிடுவார் என்று பயந்து, தன் கையிலேயே வைத்துக் கொண்டு இடது கையால் அவரைக் கட்டியணைத்து மார்புமீது சாத்திக்கொண்டு, தானே அவருக்கு அந்தப் பாலைப் புகட்டினாள். அவள் அதன்மேல் சந்தேகம் ஏற்பட்டுவிடும் என்று பயந்து இவ்வளவு சாகஸம் செய்ய, அதை யறியாத சுப்பிரமணிய அய்யர் அவளுடைய விசேஷ அன்புக்கு இதை ஓர் அடையாளமாக எண்ணி, 'இவ்வுலகத்தில் என்னைப் போல் யார் பாக்கியவந்தர்களிருக்கிறார்கள் !' என்று தன்னையே புகழ்ந்துகொண்டு அவள் அழகின் மயக்கத்தால் பாலின் ருசியைக்கூடப் பாராமல் சாப்பிட்டுவிட்டார். சாப்பிட்டுச் சற்று நேரத்திற்கெல்லாம் (மருந்து மிதமிஞ்சிக் கலக்கப்பட்டிருந்ததால்) "பால் என்ன, என்னமோ போலிருக்கிறதே!" என்று சொல்லிக்கொண்டே வாந்தி பண்ண ஆரம்பித்துவிட்டார். பொன்னம்மாள் சீக்கிரம் போய்ப் பாத்திரத்தை அலம்பி வைத்துவிட்டு அவர் தலையைப் பிடித்துக் கொண்டாள். பாலைக் குடித்த பிராமணர் பாவம் இரண்டு நாழிகை வரையில் வாயோயாமல் வாந்தி பண்ணி நிரம்ப கஷ்டப்பட்டார். அவர் மனைவி, வாந்தி பண்ணினபோதிலும் அதிக மருந்து வெளியில் வந்துவிடவில்லையென்று கண்டு திருப்தியடைந்து, "பித்தம் அதிகரித்திருக்கிறது. பால்கூடச்

சேரவில்லை. பிசாசலைகிறதுபோல் அலைந்தால் பித்தமதிகரிக்காமல் என்ன பண்ணும்? எனக்கு அப்பொழுதே தெரியுமே! அந்த இழவு கல்யாணம் நல்லதுக்கா வந்தது. கல்லெடுப்பு. சுவாமி! இம்மட்டோடாவது போகவேண்டுமே, நான் என்ன செய்வேன்!'' என்று சொல்லிக்கொண்டே அழுவதாகப் பாவனை பண்ணினாள். சில ஸ்திரீகளுக்குப் பட்டணத்தில் குழாயைத் திருப்பினால் எப்படி ஜலம் வருகிறதோ, அதுபோல் கண்ணைக் கசக்கினாற் போதும், பிரவாகம் புறப்பட்டு விடுகிறது. அப்படி வரி கொடுக்காமல் வேண்டிய கண்ணீர் வரவழைத்துக்கொள்ளும்படி வரம் வாங்கிவந்த அதிர்ஷ்ட சாலிகள் எல்லாரிலும் பொன்னம்மாள் அதிக விசேஷமானவள் இப்படி அவள் அழத் துவக்கவும் சுப்பிரமணிய அய்யர் தன் வருத்தத்தைக்கூட மறந்து அவளை ஆற்றினார். இப்படியாக ஒருவரையொருவர் தேற்றிக்கொண்டே இருவரும் கண்ணயர்ந்தார்கள். ஆனால் தூங்குமுன், பித்தமதிகரித்திருக்கிறதென்றும், பித்தமதிகரித்ததினால் பால் சேரவில்லையென்றும் பால் சேராததினால் வைத்தியனைக் காலமே கூப்பிட வேண்டுமென்றும் அவர்களுக்குள் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அவர்கள் ஆடிப்பாடி யமர வெகு நேரமாய் விட்டபாடியால் இருவரும் அயர்ந்து நித்திரை போய்விட்டார்கள்.

இவர்கள் தூங்கி இரண்டு நாழிகைக்கெல்லாம் திடீரென்று, ''ரணபாதகா, ரணபாதகா, கடன்காரா, ரணபாதகா!'' என்று ஓர் சப்தம் உண்டாயிற்று. அப்பொழுது முத்துஸ்வாமி அய்யரும் கமலாம்பாளும் தங்கள் வீட்டு மாடியில் நெடுநேரம் வரையில் மாப்பிள்ளை, சம்பந்தி, கல்யாணம் முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு பிராமணபூதிச் செல்வராகிய தாயுமான சுவாமிகளுடைய திருவருட் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள் அப்பாடல்கள் அவர்களுக்கு ஓர் தெவிட்டாத திவ்ய தேஜோ. மயாநந்தத் திருப்பாற்கடலாயிருந்தது. அவற்றை அவர்கள் 'மெய்ஞ்ஞானக்களஞ்சியம்' என்றும், 'பேரின்ப நிமல ஊற்று' என்றும் போற்றிப் புகழ்வது வழக்கம். அவர்கள் இன்பமடைந்திருக்கும் காலத்தில் அமிர்தமயமான சந்திரிகையுடன்

பரவசப்படுத்தும் கானரஸமும் சேர்ந்தால் எப்படியோ அப்படியும், துன்பம் வந்த காலத்தில், எரிகின்ற கோடைப் பருவத்திற்குத் தென்றல் எப்படியோ அப்படியும் உதவிய அப் பாடல்கள் அவ்விருவருக்கும் சிறந்த ஓர் உயிர்த் துணையாய் விளங்கின. சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் சிறிது தூரந்தான் என்று காட்டுபவள்போலக் கமலாம்பாள் தாயுமான சுவாமிகளுடைய ஆனந்தக் களிப்பை வீணைக்கிசைத்து வீணையின் நாதமும் தன் குரலும் ஒன்ருேடொன்று அன்னியோன்னியமாய் வேற்றுமை தெரியாது தழுவிக் கிடக்கும்படி 'ஆதியனுதியுமாகி-எனக்-கானந்தமாய்யறிவாய் நின்றிலங்குஞ் சோதி மௌனியாய்த் தோன்றி - அவன் - சொல்லாத வார்த்தையைச் சொன்ஞண்டி தோழி' என்று பாடலின் கருத்துடன் கொஞ்சி வெகு இனிமையாயும் மிருதுவாயும் பாட, முத்துஸ்வாமி அய்யர் சிற்சில சமயங்களில் கூடப் பாடியும் மற்ற சமயங்களில் கேட்டுக்கொண்டு மிருந்தார். அங்கே பொன்னம்மாள் தன் புருஷனுக்கு விஷமிட்டுக் கொண்டிருந்தாள். இங்கே கமலாம்பாள் தானும் தன் புருஷனுமாய்ப் பேரின்பப் பாற்கடலில் ஆனந்தக் களிப்புடன் ஆடிப் பாடி விளையாடிக் கொண்டிருந்தாள்.

இப்படி இருக்குங் காலத்தில் திடீரென்று அந்த இருண்ட ராத்திரியில், "ரணபாதகா, ரணபாதகா, கடன்காரா, ரணபாதகா!" என்று மேலே சொல்லியபடி ஓர் கூக்குரல் கேட்கவே, இருவரும் திடுக்கிட்டு ஒருவரையொருவர் பார்த்தார்கள். கமலாம்பாள் நடுங்கிப் போய்விட்டாள். முத்துஸ்வாமி அய்யர் அவளைத் தைரியப்படுத்திவிட்டுக் கீழே இறங்கிவர, சமீபத்தில் ஒருவர் வீட்டில் பலர் கூடிப் பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் இருந்த சப்தம் கேட்டது. அது 'எருமைத் தொண்டை' குப்பா சாஸ்திரிகளுடைய கிரஹம். அவர் சம்சாரம் பயிஷ்டையாயிருந்ததால் கொட்டத்தில் மாடுகட்டியிருந்த இடத்திற்குச் சமீபத்தில் படுத்துக்கொண்டிருந்தாள். அவள் அரையில் ஒரு கறுப்புத்துணி கட்டியிருந்தாள். அந்த வீட்டில் ஒரு நொணுமரமுண்டு. அந்த மரத்தில் ஒரு பிசாசு இருப்பதாக ஊர் முழுவதும் பிரசித்தம். அந்த அம்மாள்

அந்த மரத்துக்கருகில் படுத்துக்கொண்டிருந்தபொழுது இரண்டு திருடர்கள் மாடு பிடிப்பதற்காக அந்த வீட்டுச் சுவரேறி உள்ளே குதித்து மாடு பிடித்து வெளியேறும் சமயத்தில், அந்த அம்மாள் விழித்துக்கொண்டுவிட்டாள். விழித்துக் கொண்டு திடீரென்று எழுந்திருந்து மார்பில் படீர் படீர் என்றறைந்துகொண்டு, "ரணபாதகா, ரணபாதகா!" என்று கூக்குரலிட, அந்தத் திருடர்கள் அந்த இருட்டு ராத்திரியில் அவளையும் அவளுடைய கறுப்புத் துணியையும் பார்த்து விட்டு, "ஐய்யய்யோ நொணுமரத்துப் பிசாசடா! நொணு மரத்துப் பிசாசடா!" என்றுஉளறி யடித்துக்கொண்டு பிடித்த மாட்டை விட்டுவிட்டுக் கீழே குதித்து விழுந்தடித்து உயிர் தப்பியது தம்பிரான் புண்ணியமென்று ஓடியே போய் விட்டார்கள்.

முத்துஸ்வாமி அய்யர் வந்தவுடன் குப்பா சாஸ்திரிகள் நடந்த சமாசாரத்தைச் சொல்ல, எல்லாரும் சிரித்தார்கள். இந்த வேடிக்கையைக் கமலாம்பாளிடம் சொல்ல எண்ணி முத்துஸ்வாமி அய்யர் வீட்டை நோக்கித் திரும்புகையில் அவர் தம்பி சுப்பிரமணிய அய்யர், "கள்ளன், மாடு, நகை, மாடு, நகைக் கள்ளன்" என்று உளறிக்கொண்டு வேகமாய் எதிரே வந்தார். அவரைப் பார்த்து நடந்த சங்கதியைக் கேட்க, பொன்னம்மாளுடைய நகைகள், ரூபாயாக 500 ரூபாய், ஜோடி மாடு 5, புதிதாய் வாங்கிய ஜோடி உருமால் கட்டிக் காளைகள் எல்லாவற்றையும் கள்ளன் கொண்டுபோய் விட்டதாகச் சொன்னார். இவர் சொல்லி முடிக்குமுன் 'தீ, தீ' என்று ஓர் அரவம் கிளம்பிற்று. எல்லாரும் திடுக்கிட்டுத் திரும்ப சுப்பிரமணிய அய்யருடைய பாரி வைக்கோற்போர் ஒன்று நெருப்புப் பற்றி எரிவதைக் கண்டார்கள். அந்தப் போர் சுமார் நாலு யானை உயரமிருக்கும். பர்வதம் போன்ற அந்தப் போரில் நெருப்புப் பற்றி எரிந்தது திருவண்ணாமலைக் கார்த்திகை விளக்குப்போல் நெடுந்தூரம் ஒளி வீசிற்று. இருண்ட இரவுக்குஅந்த வெளிச்சம் பயங்கரமாயும் இருந்தது. அந்தச் சமயத்திற்கென்று ஓர் விபரீதக் காற்று ஊர்ப் பக்கமாய் வீசி யடித்தது. நெருப்புக்கங்குகள் (கங்கு-கற்றை) ஆகாயத்தில் அங்குமிங்கும் சஞ்சரிக்கத் தலைப்பட்டன.

அவ்வூர் முழுவதும் அக்கினிப் பகவானுக்கு அவிர்ப்பாகமாய் விடும்போலிருந்தது. காற்றும் நெருப்பும் ஊரைச் சூறை கொள்ளச் சித்தமாயிருந்தன. பெரிய பெரிய நெருப்புக் கற்றைகள் பட்டாளம் பட்டாளமாய் வீடுகள் எங்கே எங்கே யென்று வெகு ஆவலுடன் விசாரித்துக்கொண்டு, காலதூதர்களைப் போலக் கிளம்பி, நட்சத்திரக் கூட்டங்கள் போல உதிர்ந்தன. ஊர் முழுவதும் ஆண் பெண் அடங்க அலறிக் கொண்டெழுந்தனர். கிழவிகளெல்லாம் "அடா பாவி, இப்படியுந்தான் உண்டா?" என்று கன்னங் களில் விரலை வைத்து ஆச்சரியப்பட்டார்கள். கிழவர்கள், "சண்டாளப் பறப் பயல்கள், ஊர் கெட்டுப் போய்விட்டது. அனர்த்தம் பிடித்திருக்கிறது" என்று அவலித்தார்கள். பாதித் தூக்கத்தில் எழுப்பப்பட்ட பையன்கள் ஒன்றுந்தோன்றாமல் பிரமித்து நின்றார்கள். ஸ்திரீகள், கங்குகள் அங்குமிங்கும் பறப் பதைக் கண்டு தாங்களும் அலறிக்கொண்டு அங்குமிங்கும் பறந்தார்கள். புருஷர்களில் சிலர் தலைவிரி கோலமாய் தண்ணீர் தூக்கினார்கள். சிலர் அதை வாங்கிச் சமீபத்திலுள்ள கூரை வீடுகளுக்கு அபிஷேகம் செய்தார்கள். சிலர் எதிர்த்து வரும் கங்குகளைத் தடிகளைக் கொண்டு யுத்தஞ்செய்து கொன்றார்கள். சிலர் தடபுடலாகக் கூரைகளைப் பிரித்தெறிந் தார்கள். இப்படி ஊர் முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கையில் நல்ல வேளையாய்க் காற்றமர்ந்தது. கங்கு அடங்கிற்று. அக்கினி ஜ்வாலை குறைந்தது. வைக்கோற் போரின் மேற்பாகம் கருகிப்போய் விட்டதாதலால் கங்குகள் பறக்காது தடுக்க ஒரு முக்கிய சாதனமாயிற்று. சுப்பிர மணியய்யர் பணக்காரர்தான். ஆனாலும் ஒரு நாளிரவில் 5000 ரூபாய் திடீரென்று கைவிட்டுப்போனால் யார்தான் வருந்தார்கள். அவர் வீட்டிலேயே களவு நடந்து அவர் வைக் கோற்போரிலேயே நெருப்பும் வைக்கப்பட்டிருந்ததால் அவருக்கு விரோதிகள் யாரோ அந்தக் காரியத்தைச் செய் திருக்க வேண்டும் என்று சிலர் அனுமானித்தார்கள். மற்றும் சிலர் திருடர்கள் திருடின பிற்பாடு யாராவது துரத்தி வருவார்கள் என்று எண்ணி அதைத் தடுக்கும்படி நெருப்புக் கொளுத்தினதேயன்றி வேறொன்றுமில்லையென்று தீர்மான மாய்ச் சொன்னார்கள். சிலர் உடனே திருடர்களைத்

துரத்தவேண்டும் என்ருர்கள். சிலர் "அவர்கள் போய் இருப் பார்கள் ஐம்பது மைல்" என்ருர்கள். சிலர் "பேயாண்டித் தேவன்தான் இந்தக் காரியம் செய்திருக்கவேண்டும்' என்ருர் கள். சிலர், "அவன் கூடத் துணியமாட்டான். தெற்குச் சீமைக் கள்ளன்கள்தான் இவ்வளவும் பண்ணியிருக்கிறது, இல்லாவிட்டால் கோமள நாயக்கனூர் ஜமீன்தார் ஆட்களா யிருக்கவேணும்" என்ருர்கள். இப்படிப் பலர் பலவிதம் சொல்லிக்கொண்டிருக்க யாரோ ஆட்கள் ஓடி வருவதாகக் காலடி அரவம் கேட்டது. உடனே எல்லாரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கவே கூட்டம் இருந்தஇடத்தை நோக்கி இரண்டு பேர்கள் வெகு வேகமாய் ஓடிவருவதைக் கண்டார்கள்.

13

இருட்டு ராஜா

ஓடிவந்த மனிதர்கள் வந்த வேகத்தால் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்க இரண்டு நிமிஷம் வரையில் ஒன்றும் பேசக்கூட வில்லை. அவர்கள் வாய்திறந்து வந்த காரியத்தைச் சொல்லும் வரையில் அங்கிருந்தவர்களுடைய பிராணன் அவர்களிடத் திலில்லை. கடைசியாய் சுப்பிரமணியய்யர் வீட்டில் திருடின வன் பேயாண்டித் தேவனே என்றும், அவன் போகும் வழியில் சிறுகுளத்திற்கு ஆறு மைலுக்கப்பாலுள்ள கல்லாபட்டிக் கணக்கன் குப்பாபிள்ளை அவர் மாட்டை அடையாளங் கண்டு ஆட்களைத் திரட்டிக்கொண்டு பேயாண்டித்தேவனை வழி மறித்துக்கொண்டிருக்கிருரென்றும், முத்துஸ்வாமி அய்யரைப் போலீஸ்காரர்களுடன் குப்பாபிள்ளை கூட்டிவரச் சொன்னு ரென்றும் அநேக உளறல், குளறல், கேள்வி, உத்தரம், ஆட்சேபனை, சமாதானங்களுக்குப் பிறகு வெளியாயிற்று. உடனே சிலர் "பேயாண்டித் தேவன்தான், நான்தான் சொன் னேனே. வேறு யார் இவ்வளவு தைரியமாகச் செய்வார்கள்" என்ருர்கள். சிலர் "பேஷ் பேயாண்டித்தேவன் அகப்பட்டா னடாப்பா" என்ருர்கள்.

'பேயாண்டித்தேவன்' என்பவன் வெகு பிரபலமான திருடன். அந்தப் பிரதேசத்துக் கள்ளர்கள் எல்லாருக்கும் அவன்தான் அதிபதி. அவன் தன் கொம்பு வாத்தியத்தை ஊதினுனுல் அரை நிமிஷத்தில் ஆயிரக்கணக்காக அவனுக்குப் படை சேரும். அவன் வயதில் சிறியவன். ஆனுலும், அவனுடைய அசையாத சிந்தையும், அழியாத உள்ளமும், புத்தி விசாலமும் பெருந்தன்மையும், பராக்கிரமமும், வாக்கு வல்லபமும், அவனது அளவற்ற ஊக்கமும் உற்சாகமும், கம்பீரமான தோற்றமும், காருண்யமான குணமும் அவனைக் காட்டிலும் எத்தனையோ வயதில் பெரிய திருடர்களைக்கூட அவனுக்கு நாய்போல அடிமைபடச் செய்ததுமன்றி அவனிடத்தில் அவர்களுக்கு அச்சமும் அன்பும் ஏககாலத்தில் ஜனிக்கச் செய்தன. அவர்களுக்கு இவன் இட்டது சட்டம்; இவன் சொன்னது வேதவாக்கியம்.

பேயாண்டித் தேவனுடைய விஸ்தாரமான பட்டப் பெயர் 'ராஜகம்பீர வீரமார்த்தாண்ட சங்கிலி வீரப்ப பேயாண்டித் தேவரவர்கள்'. கன்னங்கறேலென்று கறுத்துப் பெருத்த அவனுடைய உருவமும், கல்லைத் திரட்டிச் செய்தாற்போன்று, இருப்புச் சல்லடந் தரித்த அவனுடைய துடையும், யானைத் தும்பிக்கைபோல் தடித்த அவன் கைகளும், பர்வதம்போல், பருத்து வளர்ந்து, பரந்த அவனுடைய மார்பும், ஆட்டுக்கடாவின் கொம்புபோல் வளைந்து, திரண்டு கடையிற் கூரிய அவனுடைய மீசையும் திடசித்தத்தைத் தெளியத் தெரிவிக்கும் அவனது உள்ளடக்கிய உதடுகளும் அவனுடைய கூரிய மூக்கும், குறுகிய முகவாய்க் கட்டையும், கண்டோரைக் கலக்கும் கம்பீரமான தோற்றமும் 'இவன்தான் வீரப்பிரதாபன், இவன்தான் வீரப்பிரதாபன்' என்று இடைவிடாத மௌனப் பிரசங்கம் செய்து விளக்கின. அவனுடைய புருவங்களிரண்டும் வீரலட்சுமிக்காக அமைக்கப்பட்டிருக்கும் வில்வளைவு மண்டபங்கள் போல் விளங்கின. அவனுடைய கண்களோ அவன் அதிக திருப்தியுடன் அடிக்கடி அற்புதமாய் சுழற்றுந்தோறும் அவனுடனிருந்தவர்களுடைய உயிரையும் உணர்வையும் ஊடுருவிச் சென்றன. ஆனுல், அவன் சந்தோஷமாயிருக்கும் சமயத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்த அவன் உதடுகளும், சாந்த

சுவருபமாய் ஜொலிக்கும் அவன் கண்களும் அவன் முகத்திற்கு ஓர் அற்புதமான வசீகர சக்தியைக் கொடுத்தன. அவன் கிரமமாகக் கல்யாணம் செய்துகொண்ட மனைவிமார் பதின்மூன்றுபேர். அக்கிரமமாக அனுபவித்த ஸ்திரீகள் அனந்தம். சிங்கக்குட்டி போன்ற இச்சிற்றரசன் பேரைக் கேட்டால் அந்தப் பிரதேசத்தில் அழுத பிள்ளையும் வாய்மூடும்.

சுப்பிரமணியய்யர் வீட்டில் அவன் திருடக் காரணமென்னவென்றால் சில நாளைக்குமுன் சிறுகுளத்தில் பிரமாதமான ஜெல்லிக்கட்டு ஒன்று நடந்தது. அதில் வந்தது சுமார் ஆயிரம் மாடு இருக்கும். அது சுப்பிரமணியய்யருடைய கெடுக்கட்டு. உருமால், புஷ்பம், கருப்பணஸ்வாமி பூஜை முதலிய சகல செலவும் அவருடையதே. சுப்பிரமணியய்யர் வீட்டில் பொன்னம்மாளிடத்தில் பயங்கொள்ளியாயிருந்தாலும் வெளியில் உற்சாகப் பிரியர். அவர் புதிதாக 400ரூபாய் போட்டு ஒரு ஜோடி உருமால் கட்டி மாடு வாங்கியிருந்தார், அது வரையில் அந்தப் பிரதேசங்களில் பிரசித்தமாயிருந்தது பக்கத்திலுள்ள கோமளநாயக்கனூர் ஜமீன்தாருடைய 'கண்ணாடி மயிலை' என்ற காளை. அதையும் சுப்பிரமணியய்யருடைய புது மாட்டையும் போட்டியில் விட்டுப் பார்க்க வேண்டுமென்று அந்தக் கெடுக்கட்டு அவரால் ஏற்பாடு செய்யப்பட்டது. டம், டம், டம் டம் என்று அடிக்கிற பறைக்கொட்டுகளோடும், பூம் பூம், பூம் என்று முழங்குகிற கொம்பு வாத்தியங்களோடும் அரசமரத்தடியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய கருப்பணக் கடவுளுக்குப் பழம் நைவேத்தியமான பிறகு அக்கோயிலிலிருந்து கொட்டு முழக்கத்துடன் முக்கியமான ஒரு முப்பது கூளிக்காளைகள், இருபக்கமும் வீசப்பட்ட கயிறுகளைச் சொந்தக்காரர்கள் தூரத்திலிருந்து பயபக்தியுடன் பிடித்துவர, நந்தியாவட்டை, காட்டரளி, செம்பரத்தை முதலிய பூமாலைகளை ஏராளமாயணிந்துகொண்டு சதங்கை மாலைகள், அரக்கு மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு 'கலீர் கலீர்' என்று தொழுவுக்குள் பிரவேசமாயின. சிறிது நேரத்துக்கெல்லாம் மாடுகள் அந்தஸ்துக்குத் தக்கபடி உருவி விடப்பட்டன. கடைசியாய் 'வருகிறதடோய்

ஜமீன்தார் மாடு வருகிறதடோய்' என்ற பிரமாதமான கட்டியத்துடன் கொம்புகளும் பேரிகைகளும் கொந்தளித்து முழங்கக் காதில் கடுக்கனும் கழுத்தில் அரைஞாணும் அணிந்து பூமாலைகளும் சதங்கை மாலைகளும் ஏராளமாய்த் தாங்கி திமிலை டம்பமாய் அசைத்துக்கொண்டு ஓர் கம்பீரமான ரிஷபம் புறப்பட்டது. தொழுவினின்று புறப் பட்டுச் சிறிது தூரம் போவதற்கு முன்னேயே உயிரை வெறுத்த ராட்சஸப் பயல்கள் சிலர் சுப்பிரமணியய்யரால் முன்னமே தூண்டப்பட்டு அதன்மேல் திடீரென்று பாய்ந் தார்கள். பாயவே மனிதன் கை மேலே பட்டறியாத அந்தக் காளை வெகு ரோஷத்துடன் குபீரென்று கிளம்பிப் பள பளவென்று மின்னும்படி சீவி வைத்த தன் கூர்மையான கொம்புகளை இருபுறமும் வீசி நாலைந்து பேரைக் குத்திப் போட்டுவிட்டது. போட்டும் மற்றவர்கள் அதன் திமிலை விடாது பிடித்துக்கொண்டு முள்வேலிகள் மேலும் சுவர்களின் மேலும் அலட்சியமாய்த் தாவுகின்ற அந்த மாட்டுடன் தாங்களும் தாவி அதன் கழுத்தில் கைபோட்டுவிட்டார்கள். உடனே கூட்டம் ஏகமாய் வந்துவிட்டது. மாடு கீழே படுத்துப் போய்விட்டது. ஜமீன்தாருடைய ஆட்களெல்லாம் சண்டை போட்டும் அடங்காமல் சுப்பிரமணிய அய்யருடைய ஆட்கள் விடமாட்டோமென்று அந்த மாட்டினுடைய கடுக்கன் அரைஞாண், உருமால் முதலிய எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு அதை முடுக்கிவிட்டார்கள். இதுவரையில் ஒரு நாளும் பிடிபடாத அந்த மாட்டைச் சுப்பிரமணியய்யருடைய ஆட்கள் பிடித்ததைப்பற்றி வெகு கோபத்துடன் ஜமீன்தார் தன் அருகில் ஒரே பாயில் உட்கார்ந்திருந்த அய்யரைப் பார்க்க, அவர் "கோபித்தென்ன செய்வது? என் மாடு வரப் போகிறது, அதை உன்னுட்கள் பிடிக்கட்டும், வேடிக்கை தானே" என்று சொன்னார். உடனே முன்னிலும் அதிகமான கட்டிய முழக்கங்களுடன் சுப்பிரமணியய்யருடைய இரண்டு மாடுகளும் ஏக காலத்தில் புறப்பட்டன. ஆனால், அவை களுக்கு மனிதர் கூட்டம் லட்சியமே யில்லை. நிரம்ப ஜனங்கள் கூடியிருந்த இடத்தில் அவை வந்து அலட்சியமாய் நின்றன. சிலர் கிட்ட நெருங்க அவர்களைக் குபீரென்று கொம்பால் வாரி

ஆகாயத்தில்எறிந்து விட்டன. ஜனங்களும்அவற்றைப் பிடிக்கப் பல முயற்சிகள் செய்தார்கள். அதிலும் ஜமீன்தாருடைய ஆட்களெல்லாம் துணிந்து பின்னிருந்து அந்த மாடுகளிடம் போவது, 'டுர்ரீ' என்று கூப்பிடுவது முதலிய பல தந்திரங் களைப் பண்ணித் தலைகீழாக விழுந்து பார்த்தார்கள். கடைசி யாய் கண் போனவன், கால் போனவன், கை போனவன் என்ற அழுகைதான் மிஞ்சிற்று. அதுமுதல் அந்த மாடு களிடத்தில் ஜனங்கள் கிட்ட நெருங்குகிறதில்லை. 'டுர்ரீ' என்று ஒரு தடவை யாராவது கூப்பிட்டால் அவை திரும்பிப் பார்க்கும். பார்த்தவுடன் எல்லாரும் கதிகலங்கிப் புலியைக் கண்ட ஆடுகள்போல் ஒருவர் மேலொருவராய் விழுந்தோடு வார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் 'டுர்ரீ' என்ற சப்தமும் அடங்கிப் போய்விட்டது. அந்த இரண்டு மாடுகளும் கம்பீரமாய் இருபுறமும் கடாட்சித்துக்கொண்டு மெதுவாய் வீடு நோக்கிச் சென்றன. ஜெல்லிக்கட்டு முடிந்தது.

சுப்பிரமணியய்யருக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. வீட்டுக்குப் போனபின் பொன்னம்மாளுடன் தன் பெருமையைச் சொல்லிவிட்டுப் பருத்திக்கொட்டையும் தவிடும் தானேயெடுத்து அந்த மாடுகளுக்கு வைத்து உபசாரம் செய்யப் போய்விட்டார். வீட்டுக்குப் போன ஜமீன்தாரோ வெகு கோபத்துடன் தோற்றுப்போன தன் மாட்டை வரவழைத்துப் பறையரை விட்டுத் தன்னெதிரேயே உயிரோடு தோல் உரிக்க உத்தரவு கொடுத்துவிட்டுப் பேயாண்டித் தேவனை இரகசியமாய் வரவழைத்து அவனுடன் பேச்சுக் கொடுத்து கள்ளைக் குடம் குடமாய்க் குடிக்கச் செய்து அந்த மயக்கத்தில் சுப்பிரமணிய அய்யர் வீட்டில் கொள்ளையிடும்படி சத்தியம் வாங்கிவிட்டார். பேயாண்டி மயக்கம் தெளிந்த பிறகு, தான் செய்த சத்தியத்தைக் குறித்து வருத்தப் பட்டான். முத்துஸ்வாமி அய்யர் ஒருவரிடத்தில் அவனுக்கு உண்மையான பயமும் விசுவாசமும் இருந்தாலும் சத்தியம் கொடுத்தாகிவிட்டபடியால் திருடிவிட வேண்டியது அவசிய மாயிற்று. ஆனால், மேஜை நாற்காலி கொண்டு வந்து போட்டுக்கொண்டு பகிரங்கமாகத் திருடுகிற தன் வழக்கத் துக்கு விரோதமாய் முத்துஸ்வாமி அய்யரை உத்தேசித்து

திருட்டுத்தனமாய் சாதாரணத் திருடர்போல் அன்று திருட வந்தான். வந்த சமயத்தில் சுப்பிரமணிய அய்யரும் அவர் மனேவியும் ராத்திரி நெடுநேரம் தூக்கம் விழித்ததால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். பொன்னம்மாள் புருஷனுக்கு மருந்திட்டதில் முதல்முதல் கைகண்ட பலன் அவளுக்கு 3000 ரூபாய் நகை பலித்தது.

திருடினது பேயாண்டித் தேவன்தான் என்று கேட்ட முத்துஸ்வாமி அய்யருக்கு அச்சமும் கோபமும் உண்டா யிற்று. அவர் 'நம்மைவிடக் கோமள நாயக்கனூர்ப் பயல் அவனுக்குப் பெரிதாய்ப் போய்விட்டானு, இருக்கட்டும்' என்று சொல்லி சப் மாஜிஸ்திரேட்டு வைத்தியநாதய்யருக்கு ஆள் அனுப்பினுர். பேயாண்டித் தேவனைப் பிடிக்க நெடு நாளாய் போலீஸ்காரர்கள் தலைகீழாக நின்று பிரயத்தனம் பண்ணியும் பலிக்கவில்லை. வைத்தியநாதய்யர் வேலைத் திறமைக்காகப் பிரசித்தி பெற்றவர். பேயாண்டித் தேவனைப் பிடித்துக் கொடுப்பதற்காகவே அவரைச் சர்க்காரில் முக்கிய மாய் அந்தப் பக்கத்துக்கு அனுப்பினுர்கள். அவர் வந்து இரண்டு வருஷமாகியும் அவன் அவர் கையில் அகப்பட வில்லை.

அவர் பேயாண்டித் தேவனைப் பிடித்துவிட்டார்கள் என்றவுடனே 30 கான்ஸ்டேபிள்களையும் கூட்டிக் கொண்டு குதிரை போட்டுக்கொண்டு ஓடிவந்தார். அவர் வருவதற்குள் முத்துஸ்வாமி அய்யர், வேலைக்காரன் வீரனைக் கூப்பிட்டு, வண்டிக்காரனை வண்டிபோடச் செய்யச் சொன்னுர். வீரன், வண்டிக்காரன் மூக்கன் படுத்திருந்த இடத்துக்குப்போய் "மூக்கண்ணே, மூக்கண்ணே!" என்று சப்தம் போட்டான். பிறகு 'மூக்கா, மூக்கா' என்று சப்தம் போட்டான். பிறகு "அட மூக்கா, அடடே மூக்கா!" என்று கூப்பிட்டுப் பார்த்தான். ஒன்றுக்கும் பதிலைக் காணும். அசைத்து எழுப்பிப் பார்த்தான், அடித்து எழுப்பிப் பார்த் தான், உணர்ச்சி வரவில்லை. 'செத்துக் கித்துப் போயிட்டானு, மூச்சு துருத்தி ஊதினுப்போல ஊதுது, குறட்டு தயிர் கடையரதே' என்று சொல்லிக்கொண்டு மேலேறித் துவைத் தான். இவனுக்குத்தான் கால் வலித்ததே யொழிய

அவ்விடத்திய யோக நிஷ்டைக்கு யாதொரு சலனமுமில்லை. "இதேதடா கும்பகர்ணனுயிருக்கு" என்று சொல்லிக்கொண்டு அவன் காதில் போய் காத தூரங் கேட்கும்படி கத்திப் பார்த்தான். வீரனுடைய பிரம்மப் பிரயத்தனத்தைக் காட்டிலும் மூக்கனுடைய நித்திரை வைராக்கியம் பலமாயிருந்தது. கடைசியாய் அவனைத் தூக்கி நிறுத்திக்கொண்டு சுவரில் நாலைந்து தடவை பலமாய் மோதினான். நல்ல வேளையாய் எந்த சுவாமி புண்ணியத்திலோ கொஞ்சம் பிரக்ஞை வந்தது. "என்னடா பாதித் தூக்கத்திலே" என்று சொல்லிக்கொண்டு தலையைச் சொரிந்துகொண்டு சுவரில் சாய்ந்தவண்ணமே மூக்கன் மறுபடி தூங்கத் துவங்கினான். உடனே வீரன் பளீர் என்று பேயறைந்தாற்போல் அறைந்து, "ஊரெல்லாம் கொள்ளை போகுது, உனக்கு இன்னம் ஒறக்கம் போகல்லே" என்று சொல்லி, அவனை வெளியிலிழுத்து வந்தான். இதற்குள் வைத்தியநாதய்யர் வந்து ஒரு நாழிகையாய்விட்டது. பிறகு மூக்கன் வண்டி தேடி, மாடு தேடி பயணத்துக்குத் தயார் செய்ய, ஐந்தாறு வண்டிகளும், ஐம்பது, அறுபது ஜனங்களும், தீவட்டிகள், சுழுந்துகள் சஹிதமாய்க் கல்லா பட்டி மார்க்கமாய் புறப்பட்டார்கள். அங்கே வந்தவுடன் 'பேயாண்டித் தேவன் ஐந்தாறு பேரைக் காயப்படுத்திவிட்டுக் காததூரம் போய்விட்டான்' என்று கேள்விப்பட்டு எல்லாரும் திகைத்து நின்றார்கள்.

அப்பொழுது சொக்கன் என்ற ஒரு குடியானவன் அவர்களிடம் வந்து "நீங்கள் யோசிக்க வேண்டாம். பேயாண்டியை நான் பிடித்துக்கொடுக்கிறேன்" என்றான். அவனே ஜாதியில் கள்ளன் ஆனதால் அவர்கள் அவனிடத்தில் நம்பிக்கையுடன், "அப்படிச் செய்வாயானால் உனக்கு நல்ல வெகுமதி தருகிறோம்" என்றார்கள். சிறுகுளத்தில் அன்று இரவு முழுவதும் ஒருவருக்கும் தூக்கம் கிடையாது. ஜனங்கள் எல்லாரும் தீ பிடித்த திருஷ்டாந்தங்களையும் பேயாண்டித் தேவனுடைய பிரதாபங்களையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். பாவம் சுப்பிரமணிய அய்யரோ, முத்துஸ்வாமி அய்யர் அகத்திலேதானே இருக்கும்படி சொல்லி விட்டமை

யால் அங்கேயே இருந்துகொண்டு தனக்கு நேரிட்ட கஷ்டத்தைக் குறித்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு நகை போனதிலும் பணம் போனதிலும்கூட அவ்வளவு விசனமில்லை. பிரியமாய் வாங்கின உருமால் கட்டிக் காளை போனது அவருடைய பிராணனில் ஒரு பாகம் போய்விட்டது போலிருந்தது. மகாமேரு போலிருந்த அவர் வைக்கோற் போரோ அவருடைய நீர்ப் பெருக்கும் கண்கள் முன்னமேயே கரியாய்ப் போய்க்கொண்டிருந்தது.

14

கள்ளனுக்குள்ளே குள்ளன்

இரண்டு மாதத்துக்குப் பிறகு ஒரு கணவாய்க்கு அருகிலிருந்த ஓர் பெரிய ஆலமரத்தின்கீழ் பேயாண்டித் தேவன் பத்துபேருடன் உட்கார்ந்திருந்தான். அப்படி உட்கார்ந்திருக்கும்போது பகலில் சுமார் பன்னிரண்டு மணிக்கு ஒரு மனிதனும் ஒரு கிழவியும் அவர்களை நோக்கி வெகு வேகமாய் ஓடிவந்தார்கள். வந்தவர்கள், அந்தக் கிழவி பஞ்சுப் பொதி போல் தளர்ந்து கிடந்த தன் கிழட்டுச் சதையைத் தூக்கிக் கொண்டு ஓடி வருகிற வேடிக்கையைக் கண்டு சிரித்துக் கொண்டிருந்த பேயாண்டித் தேவனுடைய காலிலே விழுந்து, "எங்கப்பங் கப்பா மகாராசா! நீதான் காப்பாற்றவேணும், நீதான் எங் குலதெய்வம்" என்று கதறினார்கள். பேயாண்டித் தேவன் "நீங்கள் யார், என்ன சமாசாரம்" என்று கேட்க, அந்தக் கிழவி "சாமி நான் ஏழைப்பட்டவள், ஆயிரங்காலந் தவசு கிடந்து கோவிலுக்குப் போயி கொளத்துக்குப் போயி மரத்தைச் சுத்தி மாட்டைச் சுத்தி வரங்கிடந்து தவசு பண்ணிப் பட்டினி கடந்து பண்ணாத பூசையெல்லாம் பண்ணி அப்புறம், துரோபதைக்குச் சாம்பிராணி கொளுத்திக் கருப்பனுக்கு மாடு வெட்டி, ஆடு வெட்டி, கோழி வெட்டி அப்புறம் தருமம் குடுத்து, தானம் குடுத்து, பிராமணாளுக்கு அரிசி குடுத்து, அப்புறம் பஞ்சாங்கக்காரனுக்குத் தவசம் குடுத்து" என்று வார்த்தை வார்த்தையாக இழுத்து இழுத்துச்சொல்லிக்

கொண்டிருக்க, பேயாண்டித்தேவன் "ஆமாம் அப்புறம் சாப்பிட்டு, அப்புறம் தூங்கி, அப்புறம் கை கழுவி, ஏ ஏ, ஏ" என்று பரிகாசம் பண்ணிச் சிரிக்க, எல்லோரும் இடி இடி என்று சிரித்தார்கள். பேயாண்டித் தேவன் "யார் என்று கேட்டால் இன்னார் என்று சொல்ல ஒரு மாதம் ஆகும் போலிருக்கிறதே" என, அந்தக் கிழவியுடன் கூடவந்த மனிதன் "சாமி, அவள் அப்படித்தான் பேசிக்கிட்டே கிடப்பாள், அவதான் என்னுத்தா, நான்தான் அவமகன், வந்து அவதான் எங்கப்பனுக்கு மூத்த பெஞ்சாதி" என, அவள் "இல்லே இன்னொரு சக்காளத்தி யிருந்துக்கிட்டிருந்தா, அவதான் மூத்தது, நானு ரெண்டாவது; அவர்களுக்கும் அவளுக்குஞ் சேரவில்லே, எந்நேரமும் சண்டையுஞ் சல்லியமும் சச்சரவுந் தான். அப்புறம் அவர்கள்" என்று சொல்லிக்கொண்டிருக்க "நீ யிரடி சும்மா" என்று அவளை யிடித்துத் தள்ளிப்போட்டு "இவள் வந்து எந்நேரமும் இப்படித்தான். சாமி மகாராசாவே என் பேர் சொக்கன்" என்பதற்குள், அவள் "ஒரே மகன், பத்துமாதஞ் சுமந்து பெத்தேன். அவனும் இடிச்சித் தள்ள ரான்" என்று குய்யோ முறையோவென அழ ஆரம்பித்தாள்.

பேயாண்டித் தேவன் இவர்கள் ஒன்று மறியாத ஏழைகள் என்று நினைத்து எழுந்திருந்து அவர்களைச் சமாதானம் பண்ணிச் சமாசாரத்தைச் சாவகாசமாய் விசாரிக்க,சொக்கன் என்பவன் தான் ஜாதியில் தெற்குச் சீமைக் கள்ளன் என்றும், அவன் திருடினதற்காகச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டதாகவும், அதிலிருந்து தப்புவித்தோடி வந்து விட்டதாகவும் போலீஸ் காரருக்குப் பயந்து பேயாண்டித் தேவனுடைய பிரதாபத்தைக் கேள்விப்பட்டு அவனிடம் ஓடி வந்ததாகவும் சொல்லி, அவன் காலில் விழுந்து கண்ணீராறுகப் பெருக்க, பேயாண்டித் தேவன் அவனைத் தட்டிக் கொடுத்து "நீ பயப்படவேண்டாம், உன்னைக் காப்பாற்ற நானுய் விட்டது. உனக்காக என்னு யிரையும் கொடுப்பேன்" என்று கையடித்துக் கொடுத்துப் பிறகு "நான் போகிற இடமெல்லாம் உன்னைக் கூட்டிப் போகிறேன். நாளை ராத்திரி மல்லாபுரத்தில் கொள்ளை யடிக்கப் போகிறதாக இப்பொழுதுதான் பேசி முடித்தோம் உன்னையும் கூட்டிப் போகிறேன். பயப்படாதே, கொள்ளைப்

பணம் கிடைக்கும். அங்கே கொள்ளையடித்துவிட்டுத் தோணி மலைக் குகைக்கு வந்து கள்ளு கிள்ளு சாப்பிட்டு படுபோடு போட்டு விடுவோம் வா'' என்று சொல்லி ''உன் பெயர் என்ன அப்பன்'' என்று கேட்க, அவன் ''சொக்கன்'' என்றான்.

முத்துஸ்வாமி அய்யரிடத்திலும் வைத்தியநாதய்யரிடத்திலும் பேயாண்டித் தேவனைப் பிடித்துக்கொடுத்து விடுவதாகப் பேசிவந்த சொக்கன் இவனே. அவன் வழியில் போகிற ஒரு கிழவியைத் தன் தாயாரென்று கூட்டிவந்து இல்லாத வேஷமெல்லாம்போட அதை யறியாத பேயாண்டித் தேவன் ''சொக்கண்ணே இங்கே வா அண்ணே, உட்காரப்பேன் பயப்படாதே. கள்ளப்பிள்ளை அழலாமா, பாட்டி உட்காரு பாட்டி. போலீஸ் நாய்கள் வரட்டும், வப்பில்கட்டி யடிக்கிறேன்'' என்று சொல்லிச் சொக்கனுடைய கண்ணீரைத் தன் துணியால் துடைத்தான். மோசக்காரச் சொக்கன் அன்று சாயந்திரமே அந்தக் கிழவி மூலமாக மல்லாபுரம் கொள்ளையையும் தோணி மலைக்குகையிருப்பிடத்தையும் பற்றிச் சிறுகுளத்துக்குச் சொல்லி யனுப்பிவிட்டான்.

மறுநாள் மல்லாபுரம் கொள்ளை வெகு மும்முரமாக நடந்தது. ராத்திரி இரண்டு மணிக்குப்பேயாண்டித்தேவனும் சொக்கனும் இன்னும் 5பேர்களுமாய் தோணிமலைக் குகைக்கு வந்துசேர்ந்தார்கள். அந்த மலை ஓர் சரளைக் கற்காட்டு மத்தியிலிருந்தது. அது சுற்றுமுற்றும் மனித வாசனையே கிடைக்கப்பெறாது. கொல்லுக் கொலைக்கஞ்சாத சூனியக்காரனுடைய மனது போல வெந்து கிடந்தது. அதில் 'தாயைப்போல பிள்ளை' என்றபடி சப்பாத்துக் கள்ளியும் காட்டுக் கள்ளியும் ஏகமாகச் செறிந்து அடக்குவாரில்லாத ராட்சதப் பூண்டுபோல் வளர்ந்துகிடந்தன. அந்தச் சப்பாத்துக்கள்ளி மாளிகைகளில் சர சர வென்று சந்தடி செய்து சஞ்சரித்துக் கொண்டிருந்த பாம்புகள் வளைந்து ஓட, நரிகள் பாட, பேய்கள் ஆட, கோட்டான்கள் மிருதங்கம் வாசிக்க, ஆந்தைகள் ஆசீர்வதிக்க, ஓநாய்கள் உபதேசம் பண்ண, புலி கரடிகள் செப்படி வித்தைகள் செய்ய தங்களுடைய கல்யாணம், சாந்தி முகூர்த்தாதிகளை மங்கள

கரமாய் நடத்தி வந்தன. முட்களும் முட்கள்போலத் தைக்கும் கற்களுமே அந்தச் செழிப்பான பூமியின் முக்கிய செல்வமாயிருந்தன. பாட்டைக் கள்ளிகள் குட்டிப் பேய்கள்போல் நின்ற இந்த ஸ்மசான மத்தியில் வளப்பம் என்ற பெயருமில்லாது வறண்டு உபயோகமற்ற குட்டிச் செடிகள் நிறைந்து, கொள்ளிக்கட்டை நிறமாகவும், செத்து வெளுத்த பிணத்தின் நிறமாகவும் இருந்த பெரிய பெரிய ஜடா முனிகள் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டு நின்றாற்போல் ஐந்தாறு குன்றுகள் ஒன்றுக் கருகில் ஒன்றாய் நின்றன.

அவ்விருட்டில் அவைகள் எல்லாவற்றிற்கும் மத்தியில் நின்றது தோணிமலை. அது வஞ்சகர்களுடைய நெஞ்சம்போல அளவிறந்த குகைகள் நிரம்பிய குன்று. அவற்றுள் ஒரு பெரிய குகை பேயாண்டித் தேவருடைய இரவு மாளிகை. அது அவன் தொழில்போல இருண்டிருந்தது. அதன் வாசலைச்சுற்றிக் கஞ்சாச் செடிகள் போடப்பட்டிருந்ததால் தூரத்துப் பார்வைக்கு அது புலப்படுவது வருத்தம். அதில் கற்கள்வைத்து அடுப்புகள் கட்டப்பட்டிருந்தது மன்றி மனித நீளத்துக்குச் சரியாக அனேக படுக்கைகள் வெட்டப்பட்டிருந்தன. அதில் ஒரு மூலையில் பிள்ளையார் விக்கிரகமும் மற்றொரு மூலையில் வெட்டரிவாளும் கையுமாய் ஒரு கருப்பண்ணசாமி விக்கிரகமும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மத்தியில் ஒரு பொந்தில் குடங்குடமாய் கள் வைக்கப்பட்டிருந்தது. பேயாண்டித்தேவன் வரும்போது சந்திரன் உதயமாகிற சமயம். அவனும் அவன் தோழர்களும் வரும்போது சங்கலிக் கருப்பன் வருவதுபோல் வளைதடிகளைச் சப்தம் செய்து நரிகளையும் ஓநாய்களையும் வெருட்டிக் கொண்டு பாம்புகளைத் தடியால் எடுத்து அலட்சியமாய் வீசி யெறிந்துகொண்டு வந்தார்கள். அவர்கள் குகையில் வந்தவுடன் சுவரில் குழிவெட்டி எண்ணெய் வார்த்திருந்த தீபத்தை ஏற்றித் தாங்களடித்து வந்த கொள்ளையைக் கணபதிக்கும் கருப்பண்ணனுக்கும் சூடம் கொளுத்தி நைவேத்தியம் செய்துவிட்டுப் பிறகு கள்ளெடுத்துக் குடித்துவிட்டுப் பாட ஆரம்பித்தார்கள் :—

எதுகுல காம்போதி ராகம்—ஏகதாளம்

பேயாண்டித்தேவன் (கால்மேல் கால்போட்டு) :—

வீரன் இருளன் காட்டேரி
வெறியன் நொண்டி சாமுண்டி
தொந்திக் கணபதி பெத்தண்ணன்
தொட்டியச்சின்னுன் பாவாடை
நம்மதெய்வ நாமிருக்க
ஊரிருக்க மாடிருக்க
உண்ணச்சம்பாச் சோறிருக்க

(எல்லாரும்) தில்லா லேலே லேலோ தன்னுனே

கையில் கன்னக் கோலிருக்க
காத்துராயன் துணையிருக்க
குடிக்கக்குடம் கள்ளிருக்க, குடிக்கக்குடம் கள்ளிருக்க

(எல்லாரும் தோள் கொட்டி) நமக்கு முண்டோகுறை! நமக்கு முண்டோ குறை!

இரவுதான் நமக்குப் பகல்
நச்சத்திரம் நம்ம தீவட்டி
பேய்பிசாசும் வாய்மூடும்
பேயாண்டித்தேவன் பேர் சொன்னுலே

(மீசையை முறுக்கிக் கொண்டு எல்லாரும்) தில்லாலே லேலேலோ தன்னுனே

பெண்டுவிட்டுப் பிள்ளைவிட்டு
நாடுவிட்டுப் பாடுபட்டு
வாய்க்கால்வெட்டி வரப்புவெட்டி
பலபேராச் சேர்த்த சொத்து

(எல்லாரும்) நமக்காகத்தான் நமக்காகத்தான்.

பெண்டுபிள்ளைக்குத் தாலிப்பிச்சை
நாம் கொடுத்தால் தானே யுண்டு!
இந்தப் பூமிக்கு நாமே ராஜா
கன்னக் கோலே நம்ப செங்கோல்!

(எல்லாரும்) நமக்கு முண்டோ நிகர்! நமக்கு முண்டோநிகர்

இப்படி இவர்கள் பாடி 'நமக்குமுண்டோ நிகர்' என்று தோள் தட்டி ஆர்ப்பரிக்கும்போது திடீரென்று பிசாசுகள் வந்தாற்போல் 'ஹோ' என்று ஒரே மொத்தமாய்க் கத்திக் கொண்டு நூறுபேர் துப்பாக்கியும் கையுமாய் ஆகாயத்தி லிருந்து குதித்தாற்போலக் குதித்தார்கள். அவர்களைக் கண்ட வுடன் பேயாண்டித் தேவன் கூட நடுங்கிப் போய்விட்டான். வந்தவர்கள் ஒரு ஆளுக்கு மூன்று நாலு பேராய் குடிமயக்கத்தி லிருந்த பேயாண்டித் தேவனுடைய தோழர்களைக் கட்டி விலங்கிட்டு விட்டார்கள். பேயாண்டித் தேவனுக்கு மட்டும் கள்ளின் வெறியிருந்ததே யொழிய மயக்க முண்டாகவில்லை. மந்தமாய் பிரகாசித்த நிலவில் ஏறிட்டுப் பார்த்தான் முத்துஸ்வாமி அய்யருடைய உருவம் தெரிந்தது. உடனே அவன் அவரிடம் வந்து "ஐயர்வாளே வாருங்கோ! அப்படியா சர்க்கார் மனுஷனுப் போய்விட்டாற்போலிருக்கிறதே" என்று சொல்லி அவர் மார்புமீது ஒரு குத்து வைக்க, அவர் பாவம் சுருண்டு கீழே விழுந்துவிட்டார். உடனே பேயாண்டித் தேவன் வைத்தியநாதய்யர் குடுமியை ஒரு கையால் பிடித்துக் கொண்டு இன்னும் பத்துப் பேருடைய தலைமயிரை மற்றொரு கையால் சேர்த்துப் பிடித்துக்கொண்டு தேங்காய்களை முட்டுக்கு விடுவதுபோல ஒன்றோடொன்றை முட்டுக்கு விடவே, வைத்தியநாதய்யர் குடுமி அவன் கையோடு வந்து விட்டது. மற்ற பத்துப்பேருக்கும் பலமான காயம். அதற்குள் ஐம்பது அறுபது பேராக அவன்மேல் ஹோ என்று கதறிக் கொண்டு பாய்ந்து விழ அவனும் இருப்புலக்கைகள் போன்ற தன் கைகளை நாலாபக்கமும் வீசி 'ஹோ ஹோ' என்று கர்ச்சனை செய்துகொண்டு சிலரை முகங்களை யுடைத்தும், சிலரைப் பற்களைத் தட்டியும், சிலரை மண்டைகளை நெரித்தும் தன்னாலான மட்டும் நெடு நேரம் கொடூர யுத்தம் செய்தான். ஆயினும் அவன் நூறுபேருக்கு ஒருவன் ஆதலால் என்ன செய்தும் கடைசியாய் அவர்கள் அவனைக் கட்டிப்பிடித்துக் கை கால்களில் பலமான இரும்பு விலங்குகளை மாட்டிப் பூட்டி விட்டார்கள்.

உடனே அவன் "என் கையிலும் விலங்கா!" என்று ஆக்ரோஷத்துடன் பற்களை நறநறவென்று கடித்துக் கண்களில்

தீப்பொறி பறக்கக் கைகளைப் பலமாகத் திருகினான். திருகவே இரும்பு விலங்குகள் சில்லுச் சில்லாய் தெறித்து,போன இடம் தெரியாமல் போய்விட்டன. உடனே அவன் கைகளை வீசிக் கொண்டு தோள்களைத் தட்டி அட்டகாசம் செய்துகொண்டு, ''வாங்களடா பயல்களா, பத்து இருபது பேராக வாருங்க ளடா, ஒரு கை பார்ப்போம்'' என்று ஆர்ப்பரித்தான். அந்தப் போலீஸ்காரர்களுக்கு பத்து இருபது பேராக அவனிடத்துப் போகப் பைத்தியமா? வேட்டை நாய்கள் புலிமேல் பாய்வதுபோல் மறுபடியும் எல்லாரும் ஒரே மொத்தமாக அவன்மேல் பாய, அவன் ''போங்கடா வெறும் முண்டைகளா, இத்தனை பேராகச் சேர்ந்து ஒருத்தனைப் பிடிக்க வந்து விட்டீர்களே. வெட்கம் கெட்ட முண்டைகளா. இப்பொழுது என்ன செய்ய வேணுமடா, முண்டைகளா?'' என, அவர்கள் ''கச்சேரிக்கு வா'' என்றார்கள். அவன் ''எனக்குக் காலில் விலங்கு போட்டிருக்கிறது. என்னால் நடக்க முடியாது. வேண்டுமானால் என்னைத் தூக்கிக் கொண்டு போங்கடா பயல்களா'' என்று கீழே உட்கார்ந்து கொண்டு விட்டான். முப்பது நாற்பது பேராகச் சேர்ந்து அவனைத் தூக்கிப் பார்த்தார்கள், முடியவில்லை. பிறகு ஐம்பது அறுபது பேர் சேர்ந்து சிரமப்பட்டு அவனைத் தூக்க, அவன் ''என்னடா பயல்களா நான் என்ன செத்த பிணமா படுத்த படி தூக்குகிறீர்களே'' என்று தன்னைத் தூக்கினவர்களைக் கண்களிலும் தலைகளிலும் அடித்து வெருட்டினான். பிறகு வைத்தியநாதய்யர் தாங்கள் கொண்டுவந்திருந்த வண்டிகளில் ஒன்றை சக்கரத்தைக் கழற்றி வரச்சொல்லி அதற்குள் பேயாண்டித் தேவனை எழுந்தருளச் செய்து அதைச் சுமக்கும்படி சுற்றியிருந்தவர்களுக்குக் கட்டளை யிட்டார். பேயாண்டித் தேவனும் இவர்கள் சர்க்காரையும் பார்ப்போம் என்று அந்த வண்டிக்கூட்டில் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்துகொண்டு வெற்றிலை பாக்கை வாயில் போட்டுத் தின்றுகொண்டும், உருவின கத்தியும் கையுமாய் வந்த போலீஸ் வீரர்மேல் வழி நெடுகத் துப்பிக்கொண்டும், தாளம்போட்டுப் பாடிக்கொண்டும், ''தூக்குங்களடா பயல் களா, தூக்குங்கள்'' என்று சொல்லிக்கொண்டும் பல்லக்கு சவாரி செய்துகொண்டு போனான்.

15

பேயாண்டித்தேவர் உலா

இவ்வித கோலாகலத்துடன் பேயாண்டித் தேவனைப் பிடித்து வரும்பொழுது எந்த ஊர்ச் சிறைச் சாலையில் அவனைப் பத்திரப்படுத்துகிறது என்பதைப்பற்றி ஒரு ஆலோசனை நடந்தது. சப் மாஜிஸ்திரேட் வைத்தியநாதய்யர் சிறுகுளத்திலேயே அவனை அடைத்து விடலாமென்று அபிப்பிராயம் சொன்னார். முத்துஸ்வாமி அய்யர் "அது அபாயத்துக்கு இடமாகும். அவனைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ராட்சதர்கள். அவர்கள் அவ்வளவு சமீபத்திலிருக்கும்போது பேயாண்டியை வைத்துக் காப்பாற்றுவது அசாத்தியம்" என்று எடுத்துக் காட்டியதின்மேல் மதுரைக்கே அவனை அனுப்புவது என்று தீர்மானமாயிற்று.

ஆனால் போகும்பொழுது சிறுகுளம் மார்க்கமாகப் போக வேண்டியிருந்தது. அவ்வூருக்கு ஒரு மைலுக்கப்பால் பேயாண்டித்தேவன் வருகிறான் என்ற அரவம் உண்டான உடனேயே ஆண் பெண் அடங்கலும் அவனை எதிர்கொள்ளக் கிளம்பிவிட்டது. சுப்பு எப்பொழுதுமே அழுத்தந் திருத்தமாகப் பேசுகிறவளாய் விட்டதே. இப்பொழுது அவசரத்தில் கேட்க வேண்டுமா? "யேம்பூ பேயாயியேவனைப் பியிச்சுக் கிண்டுவயா யா, யா, யா," என்றிப்படி 'பேயாண்டித் தேவனைப் பிடித்துக்கொண்டு வருகிறார்கள் வா வா வா' என்பதை யெல்லாம் யகர வர்க்கத்திலேதானே பேசித் தீர்த்துவிட்டாள். ஸ்திரீகளுக்கு மாப்பிள்ளை, பெண், பெண் வயிற்றுப்பேரன், பேத்தி என்றால் என்ன பிரியம் இருக்குமோ அவ்வளவு பிரியம் சுப்புவுக்கு 'ய' என்ற சப்தத்தின்மேல். அரிச்சுவடியில் வேறு எந்த அட்சரமும் அவளுக்கு லட்சியமில்லை. சுப்பு இப்படிப் பிரசங்கம் செய்யும்போது வேம்பு புடவை உடுத்திக் கொண்டிருந்தவள் உடனே "நிச்சயம் மாவா! பேயாண்டித் தேவனையா!! பிடிச்சுட்டாளா!!! இதோ நானும் வந்துவிட்டேனடீம்மா" என, சுப்பு "நீ யா (வா) நான் போயேன்" என்று ஓட ஆரம்பித்தாள்.

அதற்குள் வேம்பு "அடயெழவே நானும் வந்து விட்டேண் டிம்மா. இதோ ஆச்சரிம்மா (ஆய்விட்டதடி யம்மா) ஒரு சித்து சித்துக்கிறதுக்கு எத்தனே நாழி செல்லும் என்று சொல்லி அவசரத்தில் ரவிக்கைகூடப் போட்டுக்கொள்ளச் சரிப்படாமல் மேலாடையிருக்க வேண்டிய பக்கம் 'கொசாமும், கொசாம்' இருக்க வேண்டிய பக்கத்தில் மேலாடையும் சுற்றிக்கொண்டு புடவையை உடுத்தினதும் உடுத்தாதுமாய் அலங்கோலத்துடன் வெளியே புறப்பட்டுவிட்டாள்.

அடுத்தகத்து நாகு தன் புருஷனுக்குப் பழையது போட்டுக் கொண்டிருந்தாள். சுப்புவும் வேம்புவும் போய் ஒரு குரல் கூப்பிட்டார்கள். கூப்பிட்டதுதான் தாமதம். நாகு தன் அகமுடையானேப் பார்த்து "மோரு கச்சட்டியிலிருக்கு; குழம்பு அடுப்பிலிருக்கு; எடுத்து வாத்துக்கட்டும், நான் போறேன்," என்று சொல்லி சாதக் கற்சட்டியை மூடாமல் அப்படித்தானே வைத்துவிட்டு பத்துக் கையைக் கூட அலம்பாமல் அப்படியே புறப்பட்டு விட்டாள். அவள் புருஷன் "அடியே போட்டுவிட்டுப் போடீ, அப்புறம் பார்த்துக்கொள்" என்று அதட்ட, அவள் "இதுக்கு வர்ர கோபத்தைப் பார்! நன்னுருக்கு!" என்று மரியாதையாய்ச் சொல்லிவிட்டு (அகமுடையானுக்குப் பயப்பட அதுதானு சமயம்!) ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டாள். அவள் புருஷனுக்கு வந்தகோபத்துக்கு அளவு சங்கையில்லே. "மொட்டைமுண்டை, வரட்டும் சொல்லுகிறேன், காலே முறித்துப் போடுகிறேன், சாதத்தை எறிந்துவிட்டுப் போய்விடுகிறேன் பார்" என்று கோபித்துக்கொண்டான். சாதத்தை எறிந்துவிட்டால் யாருக்கு நஷ்டம் என்பது படவில்லே. அப்படி எறியவும் மனது வரவில்லே. "வரட்டும் சொல்லுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே, தெய்வமே என்று ஒரு தரம் வைகிறது, ஒருபிடி சாப்பிடுகிறது, மறுபடி வைகிறது, மறுபடி சாப்பிடுகிறது. இப்படியாகச் சாப்பிட்டுவிட்டுப் போய்ச் சேர்ந்தான். இவ்விதமாக ஒவ்வொரு வீட்டிலும் போட்டது போட்டபடியே சுப்பு, சேஷி, வேம்பு, நாகு, அம்மாப்பொண்ணு, அலமேலு, நாணி, சாச்சி, சிட்டம்மா, எச்சி, பாப்பு, (நம்முடைய ஸ்திரீகள் பெயர்கள்தான்

எவ்வளவு அழகாயிருக்கின்றன!) முதலிய எல்லாப் பெண்டு களும் பட்டாளம் பட்டாளமாகப் புறப்பட்டு விட்டார்கள். பாப்பா பட்டியகத்து வெட்டரிவாள் என்று பட்டப் பெயர் பெற்ற குப்பிப் பாட்டியோ எல்லோருக்கும் முன்னமே முதல் பாலத்துக்கே போய்க் காத்துக்கொண்டிருந்தாள்.

பேயாண்டித்தேவனும் வந்து சேர்ந்தான். அவன் வருகை யென்ன திருடனைக் கச்சேரிக்குப் பிடித்துக்கொண்டு போவது போலவா இருந்தது! சட்டை தொப்பி தரித்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பல்லக்கு சுமக்க, உருவின கத்தியும் கையுமாய் சிப்பாய்கள் முன்னே செல்ல, முத்துஸ்வாமியய்யர் முதலிய மகா ஜனங்கள் பின்னே வர, ஸ்திரீகள், "கட்டேலே போவான் மூஞ்சியைப் பாரடி, கரியாப் போவான், மீசையும் அவனும்" என்று வழிநெடுகப் பல்லாண்டு பாட, இவ்வளவு கோலாகலத்துடன் ராஜ கம்பீர வீரமார்த்தாண்ட சங்கிலி வீரப்ப பேயாண்டித்தேவர் அவர்கள் (வண்டிக்கூடாகிய) பல்லக்கின்மேல் கம்பீரமாய் உட்கார்ந்து கஞ்சா, புகையிலை முதலிய வாசனைத் திரவிய சஹிதம் தாம்பூலந் தரித்துக் கொண்டும், பவளவர்ணமான தனது திவ்ய மங்கள எச்சிலை கத்தி பிடித்த யுத்த வீரர்கள்மேல் தாராளமாய் சமர்ப் பித்துக் கொண்டும், ஆடிப்பாடித் தாளம்போட்டு அட்ட காசம் செய்துகொண்டும் அலங்காரமாய்ப் பவனிவர, அந்த மகா புருஷனுடைய திவ்ய சேவையை அடையும்பொருட்டு ஆயிரக் கணக்கான ஜனங்கள் மதுரையில் மீனாட்சியம்ம னுடைய முளைக்கொட்டு உற்சவத்தில் பத்தாவது திருநாள் அன்று அம்மன் கனகதண்டிகையில் எழுந்தருளி வரும் காட்சியைக் காண ஒருவர்மேல் ஒருவர் விழுவதுபோல் விழுந்து தரிசனம் செய்து கிருதார்த்தர்களானார்கள்.

இவர்கள் எல்லாரிலும் விசேஷ பாக்கியத்தைப் பெற்றவள் குப்பிப்பாட்டி என்ற மொட்டச்சி. அவள் பேயாண்டித் தேவனைக் காணவேண்டியஆசாவேசத்தில் முட்டாக்கு பின்னே விழ மேலாக்கு முன்னே விழ ஸ்திரீ புருஷன் என்ற பேதத்தை மறந்து, பிராமணன் சூத்திரன் என்ற பேதத்தைத்துறந்து கூட்டத்திற்கு நடுவே பாய்ந்து பேயாண்டித் தேவனுக்குச்

சமீபத்தில் போகவே, அவளுடைய அற்புத பக்தியைக் கண்டு ஆச்சரியமடைந்த அத்தேவன் சேகரித்து வைத்திருந்த தனது திருவாயின் அமிர்தத்தை அவள்மேல் அன்புடன் புரோட்சிக்க, வெள்ளிமயமான அவளுடைய சிரரோமங்கள் அனைத்தும் அரைக்கணத்தில் ரத்னமயமாகப் பிரகாசித்த அற்புதத்தைக் கண்ட ஆங்குள்ளோர் அனைவரும் அடக்க வொண்ணாது ஆர்ப்பரித்து நகைத்தனர். அதாவது (சாதாரணத் தமிழில்) திருட்டுப் பேயாண்டி குப்பிப் பாட்டியின் மொட்டைத் தலையில் காவியேறிய தனது எச்சிலை உமிழ, அத்தலையிலுள்ள வெள்ளை மயிர்கள் எல்லாம் சாயமேறிச் சிவந்த நிறமாயின. இந்த வேடிக்கையைக் கண்டு எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். உடனே குப்பிப்பாட்டி தன்னதிர்ஷ்டத்தைக் கண்டு சந்தோஷிப்பதை விட்டு, “கட்டாலே போவே, நீ நாசமாப் போயிட, கரியாப்போக” என்றிவ்வாறு கர்ச்சிக்கத் தலைப்பட்டாள். இவ்விதத் திருக்கூத்துக்களுடன் பேயாண்டியை மதுரைக்கு உபசரித்து அழைத்துச் சென்று திரிபுரத்துள் ஒருபுரம் போன்ற கற்கோட்டை யொன்றில், காட்டில் திரியும் சிங்கத்தைக் கூட்டிலடைத்தாற்போல, அடைத்து அல்லும் பகலும் காலோயாது, கண் மூடாது, வாய் திறவாது, காவல் காக்கும்படி தக்க காவல்காரர்களை ஏற்படுத்தினார்கள்.

முத்துஸ்வாமி அய்யர் தானென்றும் தம்பியென்றும் பேதம் பாராமல் தன் கைப்பணத்தையே செலவழித்து தன் பெயராலேயே ‘பிரியாது’ கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளை நடத்தி விட்டு ஊருக்குத் திரும்பினார். நல்ல காரியம் ஒன்றை முடித்ததில் அவருக்கு உற்சாகம் கொஞ்சமதிகமாயிருந்தது, வீட்டு வாசலுக்கு வந்தவுடன் கலீர் கலீர் என்று சப்தம் செய்யும் சதங்கையணிந்த பாரசாரிக் காளைகள் கட்டிய தனது பெட்டி வண்டியினின்றும் கீழே யிறங்கினார். தலையில் வெகு அழகான ஓர் சரிகை யங்க வஸ்திரத்தை ‘குசால்’ கட்டுக் கட்டிக்கொண்டு கையில் வெள்ளிப் பூண் பிடித்த தடியேந்தி, காலில் ஜோடு மாட்டிக்கொண்டு தங்க அரைஞாணில் வெள்ளிச்சங்கிலி குலுங்க, வயிரக்கடுக்கன்களும், மரகத

மோதிரங்களும் பளீர் பளீர் என்று டால் வீச, தனது கிரஹத்துள் பிரவேசிக்க அங்கே திண்ணையில் உட்கார்ந்திருந்த சிலர் குபீரெனவெழுந்து அவரை வெகு வணக்கமாய் வந்தனம் செய்தார்கள். இப்படி அவர் வரும்பொழுது பொன்னம்மாள் தன்னகத்து வாசலில் நின்றுகொண்டிருந்தாள். அவர் வந்த வருகையையும், அவருக்கு நடந்த மரியாதையையும் பார்த்து அவளுக்கு உண்டான பொருமைக்கு அளவில்லை. 'சூள்' கொட்டிக்கொண்டு "இத்தனை வேண்டியிருக்கிறதா அது எத்தனை நாள் வாழ்வோ, எப்படியோ, ஓஹோ என்று இருந்தவர்கள் எல்லாம் எப்படியோ போய்விட்டார்கள்" என்று முணுமுணுத்துக்கொண்டு சகிக்க மாட்டாது உள்ளே சென்றாள். அப்போது சுப்பிரமணியய்யர் கூடத்தில் உட்கார்ந்திருந்தார். இவள் முணுமுணுப்பதைப் பார்த்து "என்னடியம்மா எனக்குச் சொல்லப்படாதா" என்று அவர் செல்வமாய்க் கேட்க, அவள் "ஆமாம்,என்னமோ சொன்னு சொரக்காய்க்கு உப்பில்லேன்னு; அவர் வந்திருக்கிறார், அய்யர்வாள், ஒங்கண்ணுவாள், முத்தண்ணுவாள், பொன்னண்ணுவாள், ஆனையோட, குதிரையோட. என்னமோ அற்பங்கள் தலைகீழே விழுகிறதுகள். ஜோடன்ன, குடையென்ன, தடி என்ன ஒன்றும் பார்க்கப்பிடல்லே. நடக்கட்டும், அதிசயமா கள்ளனைப் பிடிச்சுட்டாரில்லேயோ" என்றாள். அவளுக்குப் பொருமை மும்முரத்தில் நகைபோன வருத்தம்கூடப் போய் விட்டது.

மேலும் அன்று காலமே ஆற்றங்கரையில் கூடிய வம்பர் மகாசபையில் பொன்னம்மாளின் பொருமையை அதிகரிக்கத் தக்க சில தீர்மானங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆற்றங்கரையில் கூட அந்த சபை கூடுமோ என்று சிலருக்குச் சந்தேகமுண்டாகலாம். நெருப்பும் வைக்கோலும் சேர்ந்தால் தீப் பற்றுவதற்கு யாரைக் கேட்க வேண்டும். அந்த நெருப்பு சந்தர்ப்பமும் முகூர்த்தமும் பார்த்தா பற்றுகிறது. (இவைகளுக்கெல்லாம் ததைவலக்கினம் தான் விதி.) அதுபோல் சுப்பு கூட்டாளி இரண்டுபேர் எங்கே சேர்ந்தாலும் சரி

எப்பொழுது சேர்ந்தாலும் சரி அது வம்பர் மகாசபைதான். மேலும் அந்த சபையின் மீட்டிங்குக்கு ஆற்றங்கரையைப் போல் வசதியான இடம் வேறு கிடையாது. (அதனுல்தான் இக்காலத்தும்கூட பெண்டுகள் நதிக்குப் போனுல் அவ்வளவு சீக்கிரம் வந்து விடுகிறுர்கள்!)

ஆற்றங்கரையில் புடவை தோய்த்துக்கொண்டே சுப்பம் மாள் முத்துஸ்வாமி அய்யர் பேயாண்டித் தேவனைப் பிடித்த விருத்தாந்தத்தைச் சவிஸ்தாரமாய் அரங்கேற்றியபிறகு, "நீ, ஆயிய(ர)ந்தாஞ் சொல்லேம்மா, என்னன்னுலும் எங்க முத்து ஸ்வாமிக்குச் சமானம் வயாது. எங்கேதான் போகட்டுமே, அடி! டில்லிக்குத்தான் போகட்டுமே ஜெய்ச்சுக்குண்டு வந்துடுவன். போன காயியம் இல்லென்னு வய்ய (வருகிற) வய(ழ)க்கம் கிடையாது. சுப்பிரமணியனும் கெட்டிக்காயன் தான். என்னன்னுலும் அவனுக்கு அவ்வளவு சாமய்(ர்)த்தியம் வயாது'' என்று தனது அபிப்பிராயத்தை வெகு தயவாய் வெளியிட்டருளினள். வேம்பு, "சுப்பிரமணியன் யார் வழிக்குப் போறுன், எவர் வழிக்குப் போறுன்; அப்பாவி, அவனுண்டு பொன்னம்மா உண்டு, தெய்வமேன்னு இருக் கான்'' என்று நீட்டிச் சொன்னுள். பொன்னம்மா இவ்வள வுக்கும் அங்கேயே இருக்கிறுள். அவளுடைய பொறுமையைத் தூண்ட வேண்டுமென்றுதான் இந்த சம்பாஷணையே அக்கிராசனுதிபதி அவர்களால்? ஆரம்பிக்கப்பட்டது. வேம்பு பேசி முடித்தவுடன், பொன்னம்மாள் கம்பீரமாய் விழித்துப் பார்த்துக்கொண்டு "தலையிருக்க வாலாடணுமா, ஒரு ஊருக்கு இரண்டு பைத்தியக்காரன் வேணுமான்னு வெறுன்னே இருந்தாக்கா 'சுப்பிரமணியனுக்கு ஒன்றும் தெரியாது. அப்பாவி, எல்லாம் அவர் அண்ணுத்தான் சாதிக்கிறு' என்னு இப்படியெல்லாம் சொல்லச் சொல்லியிருக்கா! அப்படித் தான் இருக்கட்டுமே. அதிலென்ன எளப்பம், என்ன இருந்தா லும் அவாள் ஆணும் பெண்ணும் கெட்டிக்காரர்தான். நாங்கள் ஆமடையான் பெண்டாட்டியும் பைத்தியக்காரர் தானம்மா! கெட்டிக்காரரில்லாட்டா அம்பதினுயிரத்தோட வட்சம் சேருமா!'' என்று வெகு வெறுப்பாய்ச் சொல்லிவிட்டு,

வீட்டுக்குப் போக நேரமாய் விட்டபடியால் கட்டிச் சுருட்டிக் கொண்டு கால் நிமிஷமும் தங்காமல் புறப்பட்டு விட்டாள். ஊரார் முத்துஸ்வாமியய்யரைக் கொண்டாடக் கொண்டாட அவளுக்குப் பொருமை யதிகரித்தது.

மேலே சொல்லியபடி அவள் சுப்பிரமணிய அய்யருக்குப் பதில் சொல்லவே அவர் "வந்துவிட்டானு? இங்கேயே யிரு. நான் போய் என்ன சமாசாரம் என்று கேட்டு வருகிறேன்" என்று புறப்பட, அவள் "எல்லாம் போய்த்தானிருக்கு. வர வில்லே வரவில்லேயென்று ரொம்ப தாபந்தப்பட்ரு! விழுந்தடிச் சுக்குண்டு இப்பவே ஓடவேண்டாம், சாயங்காலம், வேண்ணு போயிக்கலாம்" என்று சொல்லி அவரருகிலிருந்து சல்லா பங்கள் செய்து போகாமல் நிறுத்திவிட்டாள்.

இதற்குள்ளாக முத்துஸ்வாமியய்யரிடம் ஊரார் அனேகர் போய் பேயாண்டித் தேவனுடைய நடத்தை, அவனேச் சிறைப்படுத்தியது முதலிய விஷயங்களேப்பற்றி விசாரிக்க அவரும் சவிஸ்தாரமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தார். சாயங் காலம் பொன்னம்மாளுடைய அனுமதியின்மேல் சுப்பிரமணி யய்யர் சாவகாசமாய் வந்தார். முத்துஸ்வாமி அய்யர் சுபா வத்தில் கர்வ இஷ்டர். ஊரார் வந்து விசாரிக்கிறபோது தன் தம்பி தன்னே முன்னமேயே வந்து விசாரிக்கவில்லே என்பதைப்பற்றி அவருக்கு அந்தரங்கத்தில் கோபம். ஆகை யால் சுப்பிரமணியய்யர் போனபொழுது அவர் அவரை ஒன்றும் கவனிக்கவில்லே, முகங்கொடுத்துப் பேசவில்லே. இவராவது சிறிது மலிந்தாரா? அவருக்கு இவர் தம்பி யல்லவோ! சிறிது நேரம் இருந்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் சட்டென்று அவர் வெளியே போய் விட்டார். அதைக் கவனித்த முத்துஸ்வாமியய்யருக்கு 'இவனுக்காக நாம் இவ்வளவு பாடுபடுகிறது! நம்மை இவன் இவ்வளவு அலட்சியம் பண்ணுகிறதா! இதுவரையில் இப்படிக் காணுேமே. சரிதான், இதுவும் விசேஷந்தான்' என்று மனதில் கோபம் உண்டாயிற்று. சுப்பிரமணியய்யர் வீட்டுக்கு வந்த வுடன் பொன்னம்மாளுடன் நடந்த சங்கதியைச் சொல்ல அவள், "உங்களுக்கு வேணும் நன்ருவேணும்" என்று

சொல்லி முகத்திலிடித்தாள். இந்த அற்பசங்கதி சகோதரர்களுக்குள் பரஸ்பர அருவருப்புக்குச் சிறிது இடங் கொடுத்தது.

சில நாளைக்குப் பிறகு சுப்பிரமணியய்யருடைய கிரகத்துக்கு ஒரு பையன் வந்தான். அவனுடைய நறுக்குமீசையும், குடுமியும், சாந்துப்பொட்டும், கிறுக்குச்சடாவும், அவனுடைய ஷோக் நடையும் அவன் போக்கிரி யென்று கட்டியம் கூறின. அவன் குணம் அவனுடைய நடை உடை பாவனைகளில் எழுதிக் கிடந்தது. பின்னும் ஏதாவது சந்தேகமிருக்குமாயின் ஐந்து நிமிஷம் அவனுடன் பேசினால் எல்லாம் நீங்கிப்போகும். துலுக்கு பாஷைதான் அவன் வாயில் விசேஷ சஞ்சாரம். அவனுக்குத்தான் லட்சுமியைக் கொடுக்கவேண்டுமென்று பொன்னம்மாளுடைய அருமையான கோரிக்கை. அவன் அவளுக்குச் சொந்தத் தமையன் (பொன்னன்ணு) பிள்ளை அவனுக்கு வயது 19 அல்லது 20 இருக்கலாம். நாலைந்து வருஷமாக 'மெட்ரிக்குலேஷன்' பரீட்சைக்குத் தவருமல் போய்க் கொண்டிருந்தான். இன்னும் பத்துப் பதினைந்து வருஷத்துக்குள் பரீட்சை தேறிவிடும் என்ற பயம் அதிகமாகக் கிடையாது. பணம் மட்டும் தயவுசெய்து யாராவது சோம்பலில்லாமல் கொடுத்து வரவேணும். மகாராஜர் சுப்பிரமணிய அய்யரவர்கள்தான் தற்காலத்துக்கு அந்த நல்ல தர்மத்தை நடத்தி வருகிறுர்கள். 'எங்கள் வைத்தி ரொம்ப அழகு, அவனேடே ஒருத்தர் பேசி முடியாது. துலுக்குக்கூடத் தெரியுமடி' என்று பொன்னம்மாள் பலமுறை அவனுடைய பிரசம்ஸையை வம்பர் மகாசபைக்குத் தெரியப் படுத்தியிருக்கிறுள். பணத்துக்காவது, அழகுக்காவது யாரை யாவது விசேஷிக்க வேண்டியிருந்தால் அவள் முறையே தன் பிறந்தகத்தையும், வைத்தியநாதனையும் சொல்லாமலிருக்க மாட்டாள். அவன் பெயர் வைத்தியநாதன்.

அவன் வந்த அன்று மத்தியானம் லட்சுமி சிற்றம்மையகத்திற்கு ஏதோ காரியமாகப் போனுள். அவளைக் கண்டவுடன் பொன்னம்மாள் வைத்தியநாதனைப் பார்த்து, "இவள் தாண்டாப்பா ஒன் பெண்டாட்டி; மதுரையான் அடிச்சுக்

குண்டு போயிட்டான்'' என்ருள். அதற்கவன் "இவள் இப்பொழுதும் என் பெண்டாட்டிதான். எனக்காகப் பேசினவள் என் பெண்டாட்டி தான். மதுரைப் பயல் கிடக் கிருன், நான்-'' என்ருன். லட்சுமிக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லே. போன காரியத்தைப் பார்த்துக்கொண்டு திரும்ப எத்தனித்தாள். பொன்னம்மாள், "என்னடி அவன் அவ்வளவு அருமையாக உன்னே விசாரிக்கிருன், நீ அவனே எப்போ வந்தேன்னு கூட விசாரிக்கப்படாதா? வெறுன்னே கேளு, வாய்முத்து உதிர்ந்துபோகாது. போஞ நானிருக்கேன் பொறுக்கித் தர'' என, அவள் ஒன்றும் சொல்லாமல் தலேகுனிந்து வெட்கி நின்ருள். உடனே பொன்னம்மாள் "அடி அதிசயமே, சீமைச்சரக்கே என்ன ஓவியம் பண்ணுகி ராளடி இந்தக் குட்டிதான். எங்களேயெல்லாம் லட்சியம் பண்ணி நீ பேசுவாயா,'' என்று சொல்ல, போக்கிரி வைத்தியநாதன், ''பெண்டாட்டியல்லவோ, நீ யிருக்கிற போது பேசுவாளா? நீ அந்தப் பக்கம்போ, பேசுவள்,'' கலியாணியைப் பார்த்து "ஏனடி அப்படித்தானே! என் தங்கமே, லேடி, யங் லேடி, மைடியர் மைடியர் என்று சொல்லிக்கொண்டு அவளே நோக்கிக் காமாவேசத்துடன் எழுந்து துரத்திச் சென்ருன். லட்சுமியோ உடம்புநடுங்கி பயந்து தன்னகத்துக்கு அலறிக்கொண்டு ஓடிவந்தாள். அப் பொழுதுதான் அவள் தகப்பஞர் தூங்கி யெழுந்த சமயம் ஓடி வருவதைக் கண்டு அவர் என்னடி யென்று கேட்க, ''அவள் ஒன்றுமில்லே யப்பா'' என்ருள். மறுபடியும் அவர் "தேம்பி அழுகிருயே சமாசாரம் என்னடி'' என்று அழுத்திக் கேட்க, அவள் சங்கதி நடந்ததைச் சொன்ஞள். அதற்குள் கமலாம் பாளும் அங்கே வந்தாள். உடனே அவளேப் பார்த்து முத்துஸ்வாமியய்யர் ''உனக்கு ஏதாவது புத்தி யிருக்கிறதா? அவளே நீ ஏன் அவர்கள் வீட்டுக்குப் போகச் சொன்ஞய்?'' என்று கேட்க, அதற்குக் கமலாம்பாள் "அற்ப காரியம் தானே. இதற்காக நான் போவானேன், போய்விட்டு ஒரு எட்டில் வந்துவிடுவாள் என்று போகச் சொன்னேன், என் மேல் தப்பிதந்தான், நான் சொல்லியிருக்கப்படாது'' என்ருள். முத்துஸ்வாமியய்யர் பெண்ணேப் பார்த்து "அவள் வீட்டுக்குப்

போகிறபோது என்னைக் கேட்டுக் கொண்டா போனாய். போ அந்தப் பக்கம், என்னெதிரே அழாதே போ!'' என்று அதட்டிச் சொன்னார். லட்சுமி பாவம் அழுதுகொண்டு உள்ளே போய்விட்டாள். அப்பொழுது இரண்டாங் கட்டில் பொன்னு என்ற ஒரு கைம்பெண் தோசைக்கரைத்துக் கொண்டிருந்தாள். அவள் இந்தச் சங்கதியை யெல்லாம் பொன்னம்மாளிடம் போய் ஒன்றுக்குப் பத்தாய் மூட்டி விட்டாள்.

அன்று சாயந்திரம் சுப்பிரமணியய்யரும் வைத்திய நாதனும் ஆற்றங்கரைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்பொழுது முத்துஸ்வாமியய்யர் எதிரே வந்தார். வந்தவர் வைத்தியநாதனை எப்பொழுது வந்தாய் என்று கேட்கவில்லை. அவனைக் கண்டவுடன் அவன் அயோக்கியன் என்று அவருக்குப் பட்டதுமன்றி மத்தியானம் நடந்த சங்கதியும் ஞாபகத்தில் வந்தது. அவர் இவனுடன் என்ன பேச்சென்று போய் விட்டார். உடனே வைத்தியநாதன் ''என்ன''வெகு அசட்டை யாய்ப் போகிறாரே'' என, சுப்பிரமணியய்யர் ''அவர்கள் எல்லாம் பெரியவாள். நம்மை லட்சியம் செய்வாரா''என்றார். வைத்தியநாதன் ''அவ்வளவு பெரியவாளா, அவர் கையும் நம்பகையும் ஒரு மூச்சுப் பார்ப்போமா, பார்த்துக் கொண் டிருக்கிறீர்களா? அத்திரிமாகு'' என்று மீசையை முறுக்கி வீரியம் பேசி, ஊருக்குப் போவதற்குள் ஏதாவது திருவிளையாடல் பண்ணிவிட்டுத்தான் போகவேண்டு மென்று தனக்குள் தீர்மானம் செய்துகொண்டான்.

16

'பலீன் சடுகுடு'

சில நாளைக்குப் பிறகு கமலாம்பாளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. நெடுநாளாய்ப் புத்திரபாக்கியமற்ற முத்து ஸ்வாமி அய்யருக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்ததில் உண்டான சந்தோஷத்துக்கு எல்லையில்லை. திடீரென்று கண்

பெற்ற பிறவிக் குருடனுக்குக்கூட அவ்வளவு சந்தோஷ மிராது. கல்யாண காலத்திலேயே கமலாம்பாள் கர்ப்பவதி யாக இருந்தாள் என்று நமக்குத் தெரியுமே. ஆனுல், அவ ளுக்குப் பெண் குழந்தைகள் பிறப்பதும் இறப்பதும் சகஜமா யிருந்தனவேயன்றி இதுவரையில் ஒரு ஆண் குழந்தையாவது பிறந்துகூட அவள் அறியாள். கன்னிகாதான பலன் கைமேல் சித்தித்ததென்று முத்துஸ்வாமி அய்யர் ஆனந்தித்துக் குழந்தை பிறந்த மறுநாளே சம்பந்தி ராமசாமி சாஸ்திரி களுக்கு இஷ்டமித்திர சஹ பரிவார பந்து ஜனங்களுடன் வந்து இருந்து புத்திரோற்சவத்தைச் சிறப்பிக்கும்படியாகக் கடிதம் விடுத்தார். அந்தக் கடிதத்தைக் கண்டவுடன் மாப்பிள்ளை ஸ்ரீநிவாசன், ராமசாமி சாஸ்திரிகள், கிருஷ்ண அய்யர் முதலிய எல்லோரும் சிறுகுளம் வந்து சேர்ந்தார்கள். புண்ணியாக வசனம் கிரமித்த பிறகு ஸ்ரீநிவாசனைச் சில நாள் இருந்து வரும்படி சொல்லிவிட்டு மற்றவர்கள் மதுரைக்குப் போய்விட்டார்கள்.

ஸ்ரீநிவாசன் வரப்போகிறுன் என்ற செய்தி கேட்டது முதலே பொன்னம்மாள் மருமகன் வைத்தியநாதன் பொறுமையால் பொங்கிக்கொண்டிருந்தான். 'அந்தப் பயல் வரட்டும், உண்டு இல்லை யென்று பண்ணிப் போடுறேன்' என்று அவன் தனக்குள் பலமுறை பிரதிக்ஞை பண்ணிக் கொண்டான். தனக்கு இருந்த துவேஷத்தைத் திருப்தி செய்து கொள்ளுவதற்குச் சீக்கிரத்தில் அவனுக்கு ஒரு நல்ல சமயம் கிடைத்தது. ஒருநாள் சாயங்காலம் குங்கும நதி என்றும் ஸ்வர்ணபூரணி யென்றும் பெயர் பெற்ற அவ்வூர் ஆற்றங்கரையில் விஸ்தாரமாய்க் கிடந்த வெண்மணலில் நாற்பது ஐம்பது பையன்களாகப் 'பலீன் சடுகுடு' ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தார்கள். இங்கிலீஷ் படிப்பு வர வர, நம்முடைய விளையாட்டுக்களைக்கூட நாம் மறந்துவிட்டோம். சூரியன் பட்டுப்போல் ஒளிவீசி மறைய இளவரசுபோல் காத்துக்கொண்டிருக்கும் சந்திரன் அரசாட்சித் துவக்கிக் காதல் மயமாய் உலகத்தைக் களிப்பிக்க, நட்சத்திரங்கள் பளீர் பளீர் என்று வெடித்து ஆகாயத்தில் நர்த்தனம்

செய்யும் அரம்பை மாதர்களைப்போல் ஆனந்தமாய் விளங்க வெப்பந்தணிந்து, வானம் பசந்து குளிர்ச்சி மிகுந்து தென்றல் வீச, பகவத் பக்தியால் பூரித்த யோகிகள் மனம்போல சாந்தஸ்வரூபமாய் விளங்கும் அந்திப் பொழுதில் வீசுகின்ற தென்றலைப்போலவும், பாடுகின்ற பக்ஷிகளைப் போலவும், தங்களுடைய கவலைகளை மறந்து, பஞ்சு மெத்தைகளைப் போன்ற மணற்படுக்கைகளின்மீது உல்லாசமாய் ஓடி விளையாடுவதை விட்டு இக்காலத்திய சிறுவர்கள் பசி பாம்பின் வாயிலகப்பட்ட தவளைகளைப்போல் புஸ்தகங்களுடன் கட்டியழுது பொழுது போக்குகிறார்கள்.

இதுநிற்க, சிறுகுளத்து ஆற்றங்கரையில் அன்று அநேக சிறுவர் கூடி 'பலீன் சடுகுடு' ஆடிக்கொண்டிருந்தார்கள். வைத்தியநாதன் தன்னுடைய மூர்க்கத்தனத்தினால் அவர்களுக்குத் தலைவனான். அவன் சேர்ந்திருக்கும் விளையாட்டில் ஸ்ரீநிவாசனுக்குச் சேர சற்றும் மனமில்லை. ஆயினும் அவனுடைய நல்ல சிநேகிதர்களில் சிலர் அதில் சேர்ந்தமையாலும், அவனையும் சேரும்படி அவர்கள் கட்டாயம் செய்தமையாலும் அவன் அதில் சேர்ந்தான். மேலும் அவனுக்கு அன்று சாயந்திரம் விளையாட்டில் விசேஷ திருப்தியிருந்தது. அன்று பகல் முழுவதும் அவன் நன்றாய் படித்திருந்தான். படிப்பைவிட்டு, வெளியே வந்தபொழுது 'மதர்த்துத் திரியும் மான் கன்றைப் போல்' அங்குமிங்கும் உல்லாசமாய் ஓடி விளையாட அவனுக்கு ஆசையாயிருந்தது.

அன்று அஸ்தமனம் வெகு அழகாயிருந்தது. கூட்டம் கூட்டமாய் மணிகளைச் சப்தம் செய்துகொண்டு மாடுகள் மலையிலிருந்திறங்குவதும், காக்கைகள் கா-கா என்று ஆனந்தக் களிப்புடன் ஆரவாரித்துக்கொண்டு வரிசைக் கிரமமாய் ஆகாயத்தில் பவனி செல்வதும், ஹம் என்று அடங்கிய சப்தத்துடன் வண்டுகள் சுருதி பாடுவதும், கிளிகள் ஆற்றங்கரையிலுள்ள அரசமரங்களில் கொஞ்சிக் குலாவுவதும், நதியில் ஜலம் கலக்குபவரற்று மிருதுவாய் வீணைகானம்போல் ஓடுவதும், அடங்கிய அஸ்தமனத் தென்றலில் மூங்கில் மரங்கள் 'மயில் போலாடி நயன மொளிப்பதும்' கண்ட ஸ்ரீநிவாச

னுக்குத் தன்னையறியாமல் ஆனந்தம் பெருகிற்று. அவன் நிமிர்ந்து பார்த்தான். அப்பொழுது ஆகாயத்தில் ஓர் அழகான ரோஜா வர்ணம் படர்ந்திருந்தது. சற்று நேரத்திற் கெல்லாம் அந்த வர்ணம் மாறி மிருதுவான நீல நிறம் பரவி மத்தியில் சிற்சில தீவுகளைப்போல மேகங்கள் தங்கியிருந்தன. ஒரே ஒரு நட்சத்திரம் மாத்திரம் உதயமாயிருந்தது. அது சிறிது தூரம் சஞ்சரித்துப் பிறகு மேகத்தில் மறைந்து மறுபடி வெளிப்பட்டு வழி நடந்த தோற்றம் அரணியத்தில் மரங்கள் மத்தியில் மறைந்தும் பிறகு வெளிப்பட்டும் அர்ச்சுனனைத் தேடியலைந்த ஊர்வசியைப்போல இருந்தது. இவ்வித இந்திர ஜால வேடிக்கைகள் நிறைந்த அஸ்தமன மஹோற்சவமானது வெகு அழகாயிருக்க அதைக் கண்ட ஸ்ரீநிவாசனுக்கு நதியாய் ஓடவும் இலைகளாக ஆடவும் பட்சியாய் பறக்கவும், நட்சத்திர மாய் உலாவவும் ஆசையாயிருந்தது. மணலில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களும், ஆனந்த நர்த்தனம் செய்யும் சந்தியா தேவியினுடைய மோகவலையிலகப்பட்டு சங்கீதத் தால் மயக்கமுற்றுப் படம் விரித்து ஆடும் பாம்புகளைப்போல் ஆடுபவர்களாக அவனுக்குத் தோன்றினார்கள், படமெடுத் தாலும் பாம்பு பாம்பே என்பதை மறந்து இங்குக் கூடிய சிறுவர்கள், மானிடக் குரோதங்களை ஒழித்து உயரப் பறக்கும் விஞ்சையர் குழாமென அவன் மதித்து, அவர்களுடன் தானும் விளையாட இணங்கினான்.

விளையாட்டு நடந்தது. ஒவ்வொருவரும் 'பலீன் சடு குடு' என்ற பீஜாட்சரத்தை ஜபித்துக்கொண்டு பகைவர்மீது படையெடுத்து முறைப்படி சென்றார்கள். ஸ்ரீநிவாசனுடைய முறையும் வந்தது. அவன் 'பல், பல், பலீன் சடு குடு' என்று பாடிக்கொண்டு போகும்போது மூச்சுவிட்டான் என்று பொய்யாவது சொல்லி அவன் மேலே கொக்கைபோலக் குறி வைத்திருந்த வைத்தியநாதன் அவனைப் பிடித்துக் கட்டிக் கீழே தள்ளி மணலில் தேய்த்து அடித்துக் கிள்ளிக் காயப் படுத்தினான். யார் வந்து விலக்கியும் அந்த முரட்டுப் பயலைத் தடுக்க முடியவில்லை. ஸ்ரீநிவாசன் பாவம் கதறுகிறான். அவனை அந்த மூர்க்கனிடத்திலிருந்து தப்புவித்து வீடுகொண்டுபோய்ச்

சேர்ப்பது வெகு கஷ்டமாய் விட்டது. அவனுடைய சரீரம் மிக மிருதுவானதால் எங்கே பார்த்தாலும் கீறலும் காயமுமாக ஆய்விட்டது. நடந்த சங்கதியை அவன் வீட்டில் யாரிடத்திலும் சொல்லவில்லை. ஆனால் முத்துஸ்வாமி அய்யர் இவ்வளவும் நடந்துகொண்டிருந்தபோது ஆற்றங்கரையில் சந்தியாவந்தனம் பண்ணிக்கொண்டிருந்தார். அங்கிருந்த பையன்கள் அவரிடத்துப் போய் சகல சமாசாரத்தையும் விஸ்தாரமாகச் சொல்லிவிட்டார்கள். அதற்குள் தன் எதிரியைப் பங்கம் செய்துவிட்ட கர்வ வெறியுடன் வைத்தியநாதன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். வரும்போது லட்சுமி கோயிலுக்கு நெய் விளக்குப் போட்டுவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள். அதைப் பார்த்த அந்த முரடன் அவள் மேல் ஒரே மோதாய் மோதிக்கொண்டு போனான். அவள் உடனே அழுதுகொண்டு அகத்துக்கு வந்து அம்மாளிடம் சொன்னாள். சொல்லிக்கொண்டிருக்கும்போதே முத்துஸ்வாமி அய்யர் வீட்டுக்கு வந்துவிட்டார். வந்தவுடன் ஸ்ரீநிவாசனை விளக்கு வெளிச்சத்திற்குக் கூப்பிட்டு அவனுடம்பைப் பார்க்க எங்கே பார்த்தாலும் காயமும் கீறலுமாயிருந்தது. அவருக்கு மனம் சகிக்கவில்லை. லட்சுமியினிடத்தில் அந்த வைத்தியநாதன் பயல் செய்த அக்கிரமமும் காதுக்கு வந்தது. உடனே கோபாவேசத்துடன் தம்பியை அழைத்து வரும்படி ஆள் அனுப்பி வெளியே வந்தார். அப்பொழுது சுப்பிரமணிய அய்யரும் வைத்தியநாதனும் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். முத்துஸ்வாமி அய்யர் கூப்பிடவே சுப்பிரமணிய அய்யர் வந்தார்.

முத்துஸ்வாமி அய்யர் (அவரைப் பார்த்து) "என்னடா சுத்த அக்கிரமக்காரப் பயல்களையெல்லாம் வீட்டில் வைத்துக்கொண்டு—இது உனக்கு நன்றாயிருக்கிறதா?" என்றார். அவர் பின்னே வந்த வைத்தியநாதன் குகையிலிருந்து பாயும் சிங்கம்போல் பாய்ந்துகொண்டு எதிரே வந்து "என்ன அக்கிரமத்தை காணும் வந்து உம்ம நடுவீட்டிலே பண்ணிப் போட்டார்கள், அக்கிரமக்காரப் பயலாம், பேசுகிற கிரமத்தில் பேசும். இல்லையா பல்லுகில்லெல்லாம் போய்விடும், ராமேசுவரத்தைப் பார்க்க, உஷார்!" என்றதும் முத்துஸ்வாமி

அய்யர் "ஏண்டா பயலே என்னடா சொன்னாய்?" என்றார். வைத்தியநாதன் "அதிகமாகப் பேசினால் பல்லுடைந்து போகும்; ஆள் எந்தவூர்ப்பேர்வழி என்று பார்த்துக்கிட்டீடம்" என, முத்துஸ்வாமி அய்யருக்குக் கோபம் காற்றுசேர்ந்த நெருப்புப்போல் எரிகிறது. அவர் தம்பியைப் பார்த்து "உனக்குச்சரியாயிருக்கிறதா?" என்று கேட்டார். சுப்பிரமணிய அய்யர் வைத்தியநாதனுக்குப் பரிந்துகொண்டு, "அவன் மேல் குற்றம் ஒன்றுமில்லாதபோது கோபித்துக்கொண்டால், யார்தான் பொறுப்பார்" எனவே, முத்துஸ்வாமி அய்யர் "ஒரு குற்றமுமில்லையா, நல்லது நீ என்ன செய்வாய், என் புத்தியைச் செருப்பாலடிக்கவேணும்" என்று பின்வாங்கினார். அவர் தணிவதைக் கண்டு வைத்தியநாதன் சந்தேகத்துக்காக வைத்திருந்த சொற்ப மரியாதையையும் விட்டுவிட்டு ஏகவசனப் பிரயோகத்திலாரம்பித்துச் சரமாரியாய் ஹிந்துஸ்தானி துலுக்கு வார்த்தைகளுடன் இங்குச் சொல்லத்தகாத வசவுகளை வாரி வீச, அவன் இரைச்சலைக் கேட்டு ஜனங்கள் ஏகமாக வந்து கூடிவிட்டார்கள். கூடிய ஜனங்கள் தாங்கள் தெய்வமாய்ப் பாராட்டிவந்த முத்துஸ்வாமியய்யரை நோக்கி இவ்வளவு அக்கிரமமாய் பேசிய வைத்தியநாதன் பயலை காலையும் கையையும் கட்டி மிதிமிதியென்று மிதிக்கத் துவங்கினார்கள். பெருந்தன்மையே பிறவிக்குணமாகவுடைய முத்துஸ்வாமியய்யர் "அவன் மேல் என்ன தப்பிதம் பாவம்! என்னுடைய வேளைப்பிசகு. அவனை யடிக்காதேயுங்கள்! விட்டுவிடுங்கள், விட்டுவிடுங்கள்" என்று மன்றாடி அவனை விடுவித்தார். விடுவித்துவிட்டுத் தன் வீட்டை நோக்கி வெகு விசனத்துடன் சென்றார்.

அதன் பிறகாவது வைத்தியநாதன் என்ற துஷ்டப் பயலுக்கு விவரம் வந்ததா? இல்லை, அவன் முன்னிலும் பதின் மடங்கு பிதற்றினான். பொன்னம்மாள் கலகம் நடந்த இடத்திற்குச் சமீபத்தில் நின்றுகொண்டு வேடிக்கை பார்க்க வந்த பெண்டுகள் கூட்டத்தில் முத்துஸ்வாமியய்யரைக் குறித்து அலட்சியமாக அவதூறு செய்தாள். அவள் அவ்விடம் ஆஜராயிருந்ததை அறிந்த சுப்பிரமணியய்யர் அவ்வளவு கலகத்

துக்கும் வைத்தியநாதன் பக்கமாகவே இருந்து பேசினர். முத்துஸ்வாமி அய்யருக்கோ தன் ஆயிசு நாளில் அதுவரையில் ஒரு நாளும் நடவாதபடி அன்று நடந்ததைப்பற்றியும் ஒருவராவது தன்னிடத்தில் பேசத்துணியாத பேச்சை அந்த வைத்தியநாதன் பேசினதைப் பற்றியும், தன் தம்பியும் சகோதர விசுவாசத்தை மறந்து, அந்த துஷ்டப்பயல் பக்கமாயிருந்ததைப் பற்றியும் நினைக்க நினைக்க ஆருத துக்கமும், கோபமும் மனவருத்தமும் மேலிட்டது. மேலிட்டும் அதை அடக்கிக்கொண்டு "நாய்வேஷம் போட்டால் குலைக்க வேணும். இவ்வுலகில் வாழ வரம் வாங்கி வந்த பிறகு, முடியவில்லை யென்ருல் யார் விடுவார், அந்த உணர்ச்சி முன்னமே இருந்திருக்க வேண்டும்" என்று தன்னையே நொந்துகொண்டு அவ்வளவு அக்கிரமத்துக்கும் இடங்கொடுத்து நடந்த தன் தம்பியுடன் அன்றுமுதல் அவர் நெருங்குவதையும் நிறுத்தி விட்டார்.

17

மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதை

மறுநாள் காலமே பேயாண்டித் தேவனுடைய விசாரணைக்காக முத்துஸ்வாமியய்யருக்கும் சுப்பிரமணியய்யருக்கும் 'சம்மன்' வந்தது. அன்றிரவு அஸ்தமித்து ஜாமத்துக்கப்பால் சுப்பிரமணியய்யரும் வைத்தியநாதனும் படுக்கைக்குப்போக இருந்த தருணத்தில் அவர்கள் கிரஹத்திற்குள் கன்னங்கரேலென்று கறுத்துப் பெருத்த உருவமும், கறுத்து வளைந்து காதளவோடிய மீசையும், கருப்பண்ணசாமியினுடைய கண்கள்போல் பயங்கரமான பெரிய கண்களும், கையில் இருப்புலக்கை போன்ற ஓர் பெரிய வளைதடியும் கொண்டு திடீரென்று ஒரு மனிதன் வந்தான். சுப்பிரமணிய அய்யருக்குத் தூக்க மயக்கம். அவர் "நாராயணு!" என்று தன் மனைவி காதில் படும்படி கொட்டாவி விட்டு வாயை மூடுகிற சமயத்தில் மேற்சொல்லிய உருவம் அவர் கண்ணுக்குத்

தென்பட்டது. உடனே அவர் திடுக்கிட்டு 'ஐயையோ பேயாண்டி!' என்று உளறிக் கொட்டிக் கொண்டு எழுந்திருக்க, அங்கு வந்த மனிதன் அவர் பயத்தைக் கண்டு நகைத்துக்கொண்டு "சாமி சும்மா இருங்க, நான்தான் அடியேன் சுப்பாத்தேவன்" என்றான். சுப்பாத்தேவன் என்பவன் பேயாண்டித் தேவனுடைய சிற்றப்பன், சூரத்தேவனுடைய மகன். அவன் உருவத்திலும் நிறத்திலும் பேயாண்டித் தேவனைப் போலவே கிட்டத்தட்ட இருப்பான். சுப்பிரமணியய்யர் தூக்க மயக்கத்தில் அவனைப் பேயாண்டி என்று எண்ணி அலறிவிட்டுப் பிறகு சுப்பாத்தேவன்தான் என்று தெளிந்து "சுப்பாத்தேவா, வா வா" என்று உபசரித்தார். அத்தருவாயில் அவன் தடியும் கையுமாய் வீட்டுக்குள் வந்ததில் அந்தப் பிராமணர் நடுநடுங்கிப்போய்விட்டார். அவரைப் பயப்படச் செய்யவேண்டுமென்றேதான் அவனும் அப்படி வந்தான்.

வந்தவுடன் அவர் அருகில் அவர் சொல்லாமலே உட்கார்ந்து மீசையை இரு கையாலும் முறுக்கிக்கொண்டு வளை தடியை ஓசைபடக் கீழே போட்டு "சாமியெல்லாம் இப்போ சருக்காரு சாமியாப் போயிருச்சு. இன்னமே இந்தக் கள்ளப் பயல்களுக்கும் நமக்கும் தீர்ந்து போயிருச்சு என்றுதானே சாமி இப்படியெல்லாம் பண்ணிக்கிட்டுத் திரிகிறீக? செய்கிறதெல்லாம் செய்யங்க சாமி, எங்களுக்காச்சு உங்களுக்காச்சு, ஒருகை பார்ப்போம்" என, சுப்பிரமணியய்யர் நடுநடுங்கி "என்ன சுப்பாத்தேவா, எப்படியோ ஆரம்பித்து எப்படியோ போய்முடிந்தது. நிசமாகச் சொல்லுகிறேன் கேளு, சுப்பாத்தேவா,உன்னிடம் சொல்வதற்கு என்ன! உங்களப்பனும் நம்முடைய ஐயாவும் இருந்த நேசத்துக்கு என்னமோ அப்பா நாம் நம்மதலைமுறைமட்டுமாவது கொண்டு செலுத்திவிட்டோமானால் கீழ்க்கடைகள் என்னமும் பண்ணிக்கிறது. நான் என்ன எல்லாமோ எண்ணிக் கொண்டிருந்தேன். நம்முடைய எண்ணப்படி என்னதான் நடக்கிறது!" என, சுப்பாத்தேவன் "ஏன் நீங்க எண்ணினதற்கு இப்போதுதான் என்ன குந்தகம்

வந்திடிச்சி, எல்லாம் நீங்களாப் பண்ணிக்கிட்ட காரியந் தானே, என்னமோ சாமி ஒங்க சருக்காரதிகாரத்திலே பேயாண்டித்தேவனை வேணும்ப் பிடிச்சு வைச்சுபிட்டீர்கள்' எங்கள் குலம் கூட்டம் முழுக்க வைச்சுபிட முடியுமா? இல்லே' அந்தச் சிங்கக் குட்டிதான் ஒங்க கையிலே என்னென்னிக்கு மிருந்துகிட்டேயிருக்கும் என்று நீங்க சொப்பனத்திலும் நினைக்கிறீர்களா? இன்னைக்கு அவனை அடைச்சுப்பிட்டால் நாளை அவன் தப்பிச்சு ஓடியாந்திர்ரான். பேயாண்டியை உங்க வீட்டுக் கிள்ளுக்கீரையின்னு நினைச்சுக்கிட்டீங்கள். இந்திரன் சந்திரன் குபேரனெல்லாம் அவன்கிட்ட நடுங்க ணுமே, கண்ணிலே விரல்விட்டாட்டி விடமாட்டானு? இருக் கட்டும் நாளை வந்திர்ரான், வந்தப்புரம் சுப்பிரமணியய்யர் எங்கே, முத்துச்சாமியய்யரெங்கே பார்ப்போமே, நீங்களும் இருக்கணும், நானும் இருக்கணும் அவ்வளவுதான், அந்தக் கருப்பனை வேண்டிக்கிர்ரது.''

சுப்பிர : ''சுப்பாத்தேவா சுப்பாத்தேவா, கோபித்துப் பேசாதே. சாதாரணமாக சுபாவத்தில் பேசு அப்பன். நமக் குள்ளே பேசுகிறது கோபிக்கப்படுமா. நாங்களாக முதலிலே வம்புக்கு போனோமா, நீயாச் சொல்லு. திடீரென்று நானுக வலியச் சண்டைக்கு இழுத்திருந்தேன் என்றால் நீ சொல்லுகிற தெல்லாம் சரிதான்.''

சுப்பா : ''ஆமாசாமி நான் ஒத்துக்கிட்டேன். திருடரது எங்க ஜாதித் தொழில்தானே. ஒங்க ஐயமாருக்கு வேதமோ தரது எப்படியோ அப்படி எங்களுக்குத் திருடரதுதான் ஜாதித்தொழில். அதுக்காக எங்களைச் சருக்காருக்குக் காட்டிக் கொடுத்துவிடரதா?''

சுப்பிர : ''இல்லேயப்பன் முன்னைப் பின்னை ஏதாவது விரோதமுண்டா? திடீரென்று அந்த கோமள நாய்க்கனூ ரான் சொன்னுனென்று வந்து கொள்ளையிடலாமா! நீதான் சொல்லேன், நாங்கள் பெரிதோ, அவன் பெரிதோ, இவ்வளவு யோசனைகூட இல்லாமல்—''

சுப்பா : ஆம் சாமி, மாடு போயிருச்சானு என்ன, நகை போயிருச்சானு என்ன! 'பேயாண்டி கொண்டுட்டு வாடா'

இன்னு கொணுந்துட்டுப்போரான். குடிமயக்கத்திலே அந்த சமீன்தாருக்குச் சத்தியம் குடுத்தாக்க--அந்தப் பரதப்பயல் கள்ளைக் குடுத்துச் சத்தியம் வாங்கிட்டான்— அதுப்படி செய்யனுமல்ல! அந்தக் கல்லாப்பட்டிக் கணக்குக் கழுதை அன்னிக்கு ராவு காணுட்டி பேயாண்டி வந்தான் இண்டு எந்தப் பயலுக்குத் தெரியும்? தெரிஞ்சாக்க என்ன, விளையாட்டுத்தானே. விசாரியாமல் சர்க்காருக்குக் காட்டி விட்டடரதா?''

சுப்பிர: ''அப்படியில்லே அப்பன்; பேயாண்டித் தேவனைப் பிடித்துக் கொடுப்பதில் எங்களுக்கேத்தாவது லாபமுண்டா? எல்லாம் அந்த சப் மாஜிஸ்திரேட்டு வைத்தியநாதய்யர் ஏற்பாடு.''

இப்படி நடந்த சம்பாஷணையைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்த வைத்தியநாதன் ''நம்மய்யர் அதற்கெல்லாம் போகவில்லே. அவர்கள் அண்ணன்தான் அதில் எல்லாம் முஷ்கரம், பிடித்ததும் அவர்தான், சிறைச்சாலேயிலடைத்ததும் அவர்தான், வக்கீல் வம்பு அமர்த்தினதுகூட அவர் கைப்பணந் தான் எல்லாம். இவரை ஒரு வார்த்தை மரியாதைக்குக்கூட கேட்கவில்லே'' என்முன். சுப்பாத் தேவன் ''சரி அந்த ஐயருக்கு என்னமோ பிடிச்சுகிட்டு ஆட்டிரது. அவ்வளவுக்கவ்வளவு அவருக்குப் பின்னுலே இருக்குது. அவர் என்னமோ பேயாண்டி, சுப்பாத்தேவன் இண்டா கையிலாகாத முண்டங்கள் இண்டு இருக்கிராரு. எங்கப்பன் கருப்பணுணே தொலேச்சு விட்டோம் அவரை. இன்னி தொட்டுப் பெரிய அய்யர் இண்ட மரியாதையெல்லாம் பறந்து போச்சு. அவர் போனுரு, இப்போ ஒரு வார்த்தை சொல்றேன். கேட்டா ஒங்களுக்கும் சேமம், நமக்கும் சேமம். இல்லாட்டி நமக்காச்சு ஓங்களுக்கு ஆச்சு, பார்த்துக்கிரும்'' என, சுப்பிரமணிய அய்யர் நடுக்கத்துடன் சுப்பாத்தேவா என்ன நான் இவ்வளவு தூரம் சொல்லியும் உனக்கு என் மேலே நம்பிக்கை ஏற்படவில்லேயே; என்ன அப்பன், நம்ம பெரியவகள் இருந்த நேசம் என்ன, நாம் இருக்கிற நேசம் என்ன; சொல்லுகிற சங்கதியைச் சும்மா சொல்லேன்; உன் பேச்சை நான் தட்டியா விடுவேன், சும்மா சொல்லப்பன்.''

சுப்பா: "சொல்றேன் சேளுங்க சாமி; விசாரணை நாளை நாயித்துக் கெட்டா நாளுக்கடுத்த திங்கள் கிழமை வரதாம். வக்கீல் அய்யுரு சொல்ருரு. ஒங்க சாச்சிதான் அதிலே முக்கியமாம். நீங்கள் சாச்சி சொல்லாமல் போனுல் கேசு ஒன்னுமில்லியாம். நீங்கள் ஒன்றும் களவு போகலே யன்டு சொல்லிப்பிடுங்கோ. உங்கள் நகை மாடு கீடு எல்லாத்தையும் அப்படியப்படியே குடுத்துடுகிறேம்."

சுப்பிர: "அதற்கென்ன அப்படியே செய்கிறேனே. நீ சொல்லி நான் கேட்காமலிருப்பானேன். சுப்பாத் தேவா ஒன்றும் யோசிக்காதே போ, அப்படியே செய்துவிடலாம் போ."

எதார்த்தத்தில் அப்படிச் செய்வதாக அவருக்கு அந்தச் சமயத்தில் யோசனை கிடையாது. எப்படியாவது ராத்திரி வேளையில் அவனுடன் சண்டை போடாமல் தப்புவித்தால் க்ஷேமம் என்று அவர் நினைத்து அப்படிச் சொல்லிவிட்டார். உடனே சுப்பாத் தேவன் "சாமி அப்படிச் செய்தேளோ அடியேன் ஒங்களுக்கு அடிமை. கள்ளப் பயல் பொய் சொல்ல மாட்டான். ஒங்க சாமான் எல்லாம் ஒருமணி சிந்தாமல் ஒங்கவிடம் சேர்க்க நானுச்சுது."

சுப்பிர: "சுப்பாத் தேவா, அது சரிதான், ஆனுல் மாடு கொண்டுபோனதைக் கல்லாப்பட்டிக் குப்பா பிள்ளை அவர்க ளெல்லாம் மறித்திருக்கிருர்களே, அவர்கள் சாட்சி சொல்லு கிறபோது என்ன செய்கிறது?"

சுப்பா: "அதுக்கு ஓசனை பண்ணுதேங்கோ சாமி! ஏதோ ரெண்டு உருப்படி மாடு களவு போச்சுது என்னு வேண்ணுச் சொல்லி வையுங்கோ; நகை போனதை எவன் கண்டுகிட்டிருந் தான். அப்படித்தான் வக்கீலய்யரும் சொன்னுரு."

சுப்பிர: "அதிருக்கட்டும், அத்தனை பெரிய வைக்கோற் படப்பை அப்படித்தாறு கொளுத்தி விடுகிறது."

சுப்பா : "என்ன சாமி, படப்பைக் கொளுத்தினது பேயாண்டித் தேவனு, அந்த ஜமீன்தார்ப் பயல் ஆட்களோ? பேயாண்டித் தேவன் தீக் கொளுத்துவான் இண்டு நினைக்கிறீங்க !"

சுப்பிர : "அப்படியா, ஆ, அடா பாவிப்பயல்களா ! இருக்கட்டும் சொல்லுகிறேன். நாமெல்லாம் சேர்ந்து அந்த ஜமீன்தார்ப் பயலைப் பொங்கலிட்டு விடவேண்டும்."

சுப்பா : "நான் சொன்னபடி நீங்கள் சாச்சி சொல்லுங்க, அப்படியே செஞ்சுடுவோம்."

சுப்பிர : "ஆம் அப்பன், நீ சொல்லுகிறதும் ஒரு நல்ல யோசனைதான் அப்பன். அப்படியே செய்து போடுவோம் போ, நீ ஒன்றுக்கும் யோசிக்காதே, சுவாமி ஒருவர் இருக்கிறார்—ஏன் அப்பன் நீ சாப்பிட்டையோ, கொஞ்சம் நம்ம வீட்டிலே சாப்பிடேன். அடியே யாரடீயங்கே!"

சுப்பா : "இல்லே சாமி நான் சாப்பிட்டுக்கிட்டேன். சாப்பிட்டுத்தான் வந்தேன். இல்லாட்டி இந்நேரம் என்ன

சுப்பிர: "இல்லே யப்பன், கொஞ்சம் ஒரு பிடி சாப்பிடு. குழம்பு கிழம்பு இருக்குது. கொஞ்சம் சாப்பிட்டுப்போ. யாரடீ இலையைப் போடவில்லை இன்னும்!"

வைத்தியநாதனும் சுப்பாத்தேவனை உபசரிப்பதில் கூடச் சேர்ந்துகொண்டான். இவர்கள் இவ்வளவு தூரம் அவனை உபசரித்த காரணம் அவனை எப்படியாவது சாப்பிடும்படி செய்து விட்டால் அப்புறம் 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதில்லை' என்ற அவர்களுடைய ஜாதி சத்தியத்தின்படி அவனால் பிறகு ஒரு கேடும் தங்கள் வீட்டுக்கு வராதென்ற எண்ணமே. கடைசியாய்ச் சுப்பாத்தேவனும் சம்மதித்து அங்கேயே கொஞ்சம் சாப்பிட்டான். சுப்பிரமணியய்யர் ஆசார உபசாரம் செய்தார். ஒரு யதி பிட்சைகூட அவ்வளவு சம்பிரமமாக ஆசார உபசாரத்துடன்

நடக்காது. பட்சணங்களும் பண்டங்களும் தாராளமாகச் சுப்பாத்தேவன்கூட "போதும், போதும்" என்னும்படி பரிமாறி விருந்திட்டார்கள். சட்டிப்பானைகளிலுள்ள ஊர்காய் பதார்த்தங்களெல்லாம் சுப்பாத் தேவருடைய வயிற்றுக்கு வந்து விட்டது. சூத்திரனுக்குப் போட்டால் சேஷம் என்ற விதியெல்லாம் அந்த அவசரத்தில் விலக்கி வைக்கப்பட்டது. கடைசியாய்ப் பால்விட்டு சாதம் போட்டார்கள். சுப்பாத் தேவன் பால்சாதம் சாப்பிடும்போது சுப்பிரமணியய்யரும் பொன்னம்மாளும் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவன் அந்தச் சாதத்தில் கொஞ்சம் மண்ணைக் கிள்ளிப் போட்டுக்கொண்டுவிட்டானுனல் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக்கூடாது என்ற சத்தியம் அவனைக் கட்டுப்படுத்தாது. அவன் அந்த வீட்டுக்குத் தாராளமாய்க் கெடுதல் செய்யலாம். இது கள்ளர் சாதிக்கு ஏற்பட்ட மனுஸ்மிருதிகளில் ஒன்று. சுப்பாத்தேவனுர் பிட்சை செய்துபோன பிற்பாடு விளக்கணைத்துவிட்டுப் பொன்னம்மாள் முதலிய எல்லாரும் படுத்து உறங்கினுர்கள்.

மறுநாட் காலையில் வைத்தியநாதன், பொன்னம்மாள், சுப்பிரமணியய்யர் இம்மூவருக்குமிடையே சம்பாஷணை நடந்தது. அந்த மந்திராலோசனை சபையில் கடைசியாய்த் தீர்மானிக்கப்பட்டது என்னவென்றுல், சுப்பிரமணியய்யர் சுப்பாத்தேவன் சொன்னபடியே நகைகள் ஒன்றும் திருட்டுப் போகவில்லை யென்றும், மாட்டில் இரண்டு உருப்படிதான் களவு போயிற்று என்றும், வைக்கோற் படப்பைக் கொளுத்தியது பேயாண்டித் தேவனல்லவென்றும் சாட்சி சொல்லிவிட வேண்டியது என்பதே. சுப்பிரமணியய்யர் அப்படிச் செய்வது தன் தமையனைக் காட்டிக் கொடுப்பது போலாகுமே என்று நெடுநேரம் அந்தத் தீர்மானத்துக் கிணங்க மனமற்றவராயிருந்தார். ஆனுல் 'மத்தளத்துக்கிரு பக்கமும் இடி' என்றபடி வைத்தியநாதனும் பொன்னம்மாளும் தங்களுடைய பிடிவாதத்தினுலும் முரட்டுத்தனத்தினுலும் அவரை இரண்டு பக்கமும் மோத, அய்யர் அவர்கள் சொன்னபடி கேட்பதாக

ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. வைத்தியநாதனுக்கு இந்த விதத்தில் முத்துஸ்வாமி அய்யருக்குப் பெரிய தீங்கு பண்ணி விடலாமென்று வெகு சந்தோஷம்.

பேயாண்டித் தேவனுடைய விசாரணை நடந்தது. சுப்பிரமணியய்யர் சுப்பாத் தேவனுக்குத் தந்த உறுதியைக் கொஞ்சமும் வழுவாது நிறைவேற்றி விட்டார். நகை போனதற்கு யாதொரு ருசுவும் ஏற்படவில்லை. மாடுகளில் இரண்டு உருப்படிதான் திருடப்பட்டதென்று ருசுவாயிற்று. வைக்கோற் போரைப் பேயாண்டித் தேவன்தான் கொளுத்தினன் என்பதற்கு யாதொரு முகாந்தரமும் கற்பிக்கப்படவில்லை. கோர்ட்டார் அவனைக் கொடுமையாய்த் தண்டிக்க வேண்டுமென்று நிரம்ப ஆவலுள்ளவர்களாயிருந்தும் ருசுக் குறைவினுல் அப்படிச் செய்யக்கூடவில்லை. சுப்பிரமணியய்யருடைய வாக்கு மூலம் முத்துஸ்வாமி அய்யருக்கு இடி விழுந்தாற்போல இருந்தது. இவர் இப்படிச் சாட்சி சொல்லுவார் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின கதையாய் இருக்கிறதே என்று விசனப்பட்டுக்கொண்டு தன் தம்பிமீது அடங்காக் கோபத்துடன் கோர்ட்டை விட்டு அவர் வெளியே வரும்போது, பேயாண்டித் தேவனை அவனுக்கு விதிக்கப்பட்ட இரண்டு வருஷம் தண்டனைக்கு உட்படுத்தும், பொருட்டு காவற்காரர்கள் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றூர்கள். அப்பொழுது அந்தத் தேவன் முத்துஸ்வாமி அய்யரைக் கண்டு பயங்கரமான பார்வையுடன் மீசையை முறுக்கிக் கொண்டு தோள் தட்டிக் கர்ச்சித்துக் கம்பீரமாய் "ஏ! பாப்பான், இரண்டு வருஷம் எனக்கு இரண்டு நாள்; இனி யுன்னைவிடேன் வா" என்று சொல்லி அலட்சியமாய்ச் சிறைச்சாலைக்குச் சென்றான். முத்துஸ்வாமி அய்யர் அவனைக் கப்பலேற்றிக் கடலுக்கப்பால் அனுப்பிவிடலாமென்று ஆசை வைத்திருந்தார். அப்படி அவனைப் பூராவாக ஒழித்து விடலாமென்ற தைரியமில்லாவிடில் அவனுக்கு விரோதமான ஒரு பிரயத்தனமும் அவர் செய்யத் துணிந்திருக்க மாட்டார்.

இப்பொழுது வியாபாரம் பாதிக் கிணறு தாண்டினுற் போல ஆய்விட்டது என்று விசனப்பட்டுக்கொண்டு

பேயாண்டித் தேவனுல் தனக்குச் சீக்கிரம் ஏதாவது தீங்கு வருவது நிச்சயம் என்ற பயம் மனதைக் கலக்க, தன் தம்பியின் நடத்தை அருவருப்பை யுண்டாக்க, கொஞ்சமும் தன் சித்தம் தன்னிடமில்லாமல் திரும்பி ஊருக்கு வந்து சேர்ந்தார். வீட்டுக்கு வந்தவுடன் கமலாம்பாள் மலர்ந்த முகத்துடன் அவரை உபசரித்தும், அவர் அவளுடன் முகங்கொடுத்துப் பேசாமல் "இதென்ன உலகம், சீ? இதில் உயிர் வாழ்வதைக் காட்டிலும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விட்டு விடலாம்" என்று இவ்விதம் சலித்துக் கொண்டிருந்தார்.

இப்படியிருக்கும்போதே கமலாம்பாள் இடுப்பில் இருந்த குழந்தை இவருடைய விசனத்தையும் கோபத்தையும் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் இவரைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்ததுமன்றி இவரிடம் வர அதிக ஆவல் கொண்டு தன் தாயார் இடுப்பில் தரிக்காமல் கையை, காலைக் காட்டிக் கூத்தெல்லாம் பண்ணியது. அதைக் கண்ட முத்துஸ்வாமியய்யர் தன்னை யறியாமலே சிரித்துக்கொண்டு 'உலகத்தில் குழந்தைகள்தான் கொஞ்சம் யோக்கியர்கள். இன்னும் வயது வந்தால் நீ என்ன என்ன அக்கிரமங்கள் பண்ணப் போகிருயோ' என்று தன் மனத்துக்குள்ளேயே சொல்லிக்கொண்டு அதை வாங்குவதற்காகத் தன் கைகளை நீட்டினுர். நீட்டினதுதான் தாமதம், அந்தக் குழந்தை ஒரே குதியாய்க் குதித்து அவர் தோள்மேலே தவழத் தொடங்கியது. அவர் "மற்றவர்கள் என்னை வெறுத்துத் தள்ளினுலும் நீயாவது என்னை லட்சியம் செய்கிருயே. உனக்கு இந்த ஜனனம் என்னத்துக்கு, என்ன பாவம் பண்ணியிருக்கிருயோ" என்று சொல்லிக்கொண்டே அதை மார்போடணைத்து முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவி அதன் சந்தோஷத்தில் தன் விசனத்தை மறந்து அதனுடன் விளையாட, அந்தச் சிறு குழந்தை அவருடைய முகத்தைத் தடவி மூக்கைப் பரிசோதனை செய்து கண்களைத் துடைத்துக் காதில் ஜொலிக்கும் வைரக் கடுக்கனை ஆட்டியாட்டிப் பார்த்துக் கைகளை (ரா ரா ராமைய்யா என்று) தாமரைப் பூப்போல் மலர்த்திக் காட்டிப் பாலகோபால லீலைகள் எல்லாம்

செய்ய, முத்துஸ்வாமி அய்யரும் கமலாம்பாளும் விநோத காலட்சேபம் செய்தார்கள்.

இந்தக் குழந்தைக்கு நடராஜன் எனப் பெயர். அதை அவர்கள் ராஜா, நடராஜா எனச் செல்வப் பெயரிட்டழைத்தார்கள். அது அவர்களுக்கு ஓர் விசேஷ பாக்கியமாயிருந்தது. சாக்ஷாத் கோபால கிருஷ்ணனே ஆயர்பாடியில் விளையாடினது போல அவர்களுடன் விளையாட வந்தது போலிருந்தது. இவ்விதம் வளர்பிறைச் சந்திரனைப்போல் சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த அக்குழந்தை நாளுக்கு நாள் அழகிலும் புத்தியிலும் வளர்ந்தது. நடராஜன் கொஞ்சம்கூட வேற்றுமுகம் என்பதில்லாமல் யாரிடத்திலும் பிரியமாய் விளையாடியதால் ஊருக்கெல்லாம் செல்லக் குழந்தையாய் விளங்கினான். அவன் விளையாடிக் கொண்டிருக்கும்போது தெருவில் அவசரமாய்ப் போகிறவர்கள்கூட நின்று பார்த்து விட்டுப் போவார்கள். நான் நீ என்று பொன்னம்மாளைத் தவிர மற்றப் பெண்டுகளெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு அந்தக் குழந்தையை அவர்களுடைய கிரஹத்துக்கு எடுத்துப்போய்ச் சிற்றுண்டி கொடுத்துச் செல்லம் பாராட்டினார்கள். இப்படி ஊரார் பெருமை பாராட்ட, கமலாம்பாளுக்கு எங்கே திருஷ்டி தோஷம் வந்து விடுமோ என்று குழந்தையை வெளியில்விட பயம் அதிகரித்தது. முத்துஸ்வாமி அய்யருக்கு நிரம்ப சந்தோஷமாயிருக்கும் சமயங்களில் இவ்வளவு அருமையான பாக்கியம் நமக்கு நிலைக்க வேண்டுமே என்ற பயம் வந்து விசனத்தை யுண்டுபண்ணும். இவ்விதம் காலம் கழிவது தெரியாமல் இரண்டு வருஷம் சென்றது.

இப்படியிருக்க ஒருநாள் திடீரென்று செல்வக் குழந்தை நடராஜனைக் காணவில்லை. அன்று ஆருத்திரா தரிசனம். முத்துஸ்வாமி அய்யர் காலமே ஸ்நானம் செய்து பட்டு வஸ்திரம் தரித்து சுவாமி தரிசனம் செய்யக் கோயிலுக்குச் சென்றார். கமலாம்பாள் லட்சுமிக்கும் நடராஜனுக்கும் ஸ்நானம் செய்துவைத்து, சர்வாபரணங்களையுமணிந்து.

சிங்காரித்திருந்தாள். முத்துஸ்வாமியய்யர் கோயிலிலிருந்து புஷ்பமும், பிரசாதமும் கையுமாய் வந்தவுடன் 'குழந்தை எங்கே'யென்று கேட்டார். கமலாம்பாள் 'குழந்தை வாசலில் குட்டிகளோடு விளையாடிக்கொண்டிருக்கும்' என்று சொல்லி வீட்டுக் காரியத்தின்மேல் கவனமாயிருந்தாள். முத்துஸ்வாமியய்யர் வாசலில் வந்து பார்த்தார்; குழந்தையைக் காணோம். 'ராஜா, ராஜா' என்று அழைத்துப் பார்த்தார். லட்சுமியை விட்டுத் தேடச் சொன்னார். தானும் அண்டை யசல்களில் போய்ப் பார்த்தார், நடராஜன் எங்கும் தென்படவில்லை.

முதல் பாகம் முற்றிற்று.

இரண்டாம் பாகம்

13

நரபலி

அதற்குள்ளாகச் சுவாமி எழுந்தருளுவதற்குக் காலம் சமீபித்துவிட்டபடியால் "சரி இங்கேதான் யாராவது எடுத்துக்கொண்டு போயிருப்பார்கள், வேறு எங்கே போகப் போகிறன், நான் கோயிலுக்குப் போகிறேன். தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு எடுத்துவை" என்று கமலாம் பாளுக்கு உத்தரவு கொடுத்துவிட்டு முத்துஸ்வாமியய்யர் போய்விட்டார். அன்று ஆருத்திரா தரிசனமானபடியால் தெருவெல்லாம் சித்திரக் கோலங்களால் நிரம்பியிருந்தது. வீடுகளெல்லாம் மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு ஸ்திரீயும் தான்தான் ரதி என்று பாவனை பண்ணிக்கொண்டு உல்லாச நடை நடந்தாள். புருஷர்களெல்லாம் ஸ்நானஞ்செய்து பட்டுடுத்தி விபூதி யணிந்து மன்மதாகாரமாயிருந்தார்கள். ஆய்விட்டது, சுவாமி எழுந்தருளுகின்ற சமயம். மேளக்கார முத்துக் கருப்பன் பம் பம் என்று கோஷம் செய்து தன்னிரு கன்னங் களும் வீங்கத் தனது அபசுரக் களஞ்சியத்தை வெகு தாராளமாய்த் தெரு நிறைய வீசத் துவக்கினன். தவுல் காரச் சின்னண்ணன் அங்கு இருப்பவர்களுடைய காதையும் மத்தளத்தின் தோலையும் ஒரேயடியாகச் சல்லடைக் கண் மயமாய்த் தொளைக்க ஆரம்பித்தான். தாளக்காரச் செம்பகன் இவர்களிரண்டுபேரையும் லட்சியம் செய்யாது, இருக் கிறவர்கள் தேவையானல் ஈவு வைத்துக்கொள்ளட்டும் என்று உத்தேசம் செய்து பத்து நிமிஷம் இடைவிடாமல் கதறக் கதற அடிக்கிறதும், மறுபடியும் பத்து நிமிஷம் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கிறதுமாய்க் காலம் கடத்தினன். இவர்கள் போதாதென்று தாசி பூரண சந்திரோதயமும் கூடப் புறப்பட்டுவிட்டாள். அவள் அழகு

வெகு அற்புதம்; கறுப்பாயிருந்தாலும் சந்திரன் சந்திரன் தானே. மேலும் அவள் நடக்கிறதே நாட்டியமாக இருக்கும். பட்டிக்காட்டு சுவாமிக்குரிய இவ்விதப் பரிவாரங்களுடன் ஏகாம்பரநாதர் உலாவுக்கு எழுந்தருளினர். செவ்வந்திப்பூ மாலைகளால் சிங்காரிக்கப்பட்ட விமானத்தின்மீது இரண்டு பக்கமும் இரண்டுபேர் சாமரை வீச, நாதசுரக் கோஷ்டி முன்னே செல்ல, பாகவத கோஷ்டி பின்னே வர, மான் மழுவேந்திய கையும், கங்கை தங்கிய சடையும், மதிவதிந்த மௌலியும், கடுவமர் கண்டமும் உமையவர் உருவமும், 'நெற்றியிற்றிகழ்ந்த வொற்றை நாட்டமும், எடுத்த பாதமும், தடுத்த செங்கையும், புள்ளியாடையும் ஒள்ளிதின் விளங்க' எளியார்க் கெளியனுயுள்ள சாக்ஷாத் கைலாச பதியே பிரத்தியக்ஷமாய் வந்து, பாவத்தை வென்று மோக்ஷத்தைப் பெற்ற ஆத்மாவின் உண்மை நிலையை யுணர்த்தும் உருவக நர்த்தனத்தைப் புரிந்தாற்போற்ருேன்ற அக்காட்சியைக் கண்ட அவ்வூரார் அனைவரும் ஆனந்த வாரியில் மூழ்கி, மெய்மறந்து, புளகாங்கித்து, ஆடிப்பாடி ஓடியுலாவி 'சம்போ, சங்கரா, தயாநிதே' என்று போற்றித் துதித்து, ஆனந்தத் தாண்டவம் செய்தார்கள். பாண்டவர் வனவாச காலத்து பகவான் கிருஷ்ணன் உண்ண, தூர்வாசாதி முனிவர்களெல்லாம் பசியாறியதுபோல், சிவபெருமானது ஆனந்தத்தையே தங்களது சொந்தமாய்ப் பாராட்டிக் களித்த பக்தர் கணத்தின் நிர்மலமான குதூகலத்தை முத்துஸ்வாமியய்யரும், கமலாம்பாளும் மெய் மறந்து அனுபவித்தார்கள். ஆயினும் தங்களருகில் அந்தச் சமயத்தில் குழந்தையைக் காணுததில் அவர்களுக்கு உண்டான வருத் தத்துக்களவில்லை. தங்களகத்து நடராஜனுக்குக் கோயில் நடராஜனைக் காட்டி அவனது சிறிய அழகிய நிஷ்களங்கமான கண்களின் மூலமாக அந்த திவ்விய காட்சியைக் கண்டுகளிக்கப் பாக்கியம் இல்லாமற் போனதைப்பற்றி அவர்களுக்கு நிரம்ப வருத்தம். முத்துஸ்வாமியய்யர் சுவாமியைப் பார்க்கிறுர், கமலாம்பாள் இடுப்பைப் பார்க்கிறுர்; லட்சுமியைப் பார்க்கிறுர். கமலாம்பாள் கண்களில் நீர் ததும்புகிறது. முத்துஸ்வாமியய்யர் ஏறிட்டுப் பார்த்தார்.

அவருக்கும் துக்கம் வர, வெளியில் ததும்பி வந்த கண்ணீரை உள்ளே இழுத்துக்கொண்டார். லட்சுமி சுவாமியைப் பார்க்க நிமிர்ந்தவுடன் அவளை ஆவலுடன் கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீநிவாசனுடைய கண்கள் அவளுடைய கண்களைச் சந்திக்க, இருவரும் பின்வாங்கி விட்டார்கள். உடனே லட்சுமி அம்மாளைப் பார்த்து 'அம்பியைக் காணேமே யம்மா' என்று சொல்லி நிமிரவே, கமலாம் பாளுக்கு அடக்க முடியாமல் கண்ணீர் பெருகிற்று. லட்சுமியும் தாரை தாரையாய் நீர் பெருக்கினள்.

சுவாமி கோயிலுக்குப் போனவுடனே குழந்தையைப் பற்றி எங்கும் விசாரிக்கத் தலைப்பட்டார்கள். வீட்டுக்கு வீடு ஆள்விட்டுத் தேடினர்கள். சிறுகுளததில் மந்தைக்குச் சமீபத்தில் ஓரமாக வீடுகள் உண்டு. அந்த வீடுகளுக்கெல்லாம் கடைசியாயுள்ள வீடு முத்துஸ்வாமியய்யருடைய தங்கை சீதாலட்சுமி அம்மாள் வீடு. அந்த வீட்டுக்குக் குழந்தை நடராஜனை யாரோ எடுத்துச் சென்றதாகச் சமாசாரம் வெளியாயிற்று. அதைப் பற்றிப் பின்னும் விசாரணை செய்ததில், நடராஜனைக் காலை 7-மணிக்குமுன் அநேகர் 'நான் பார்த்தேன், நான் பார்த்தேன்' என்று வந்தார்கள். அதுவு மன்றி மேற்சொல்லிய வீட்டுத் திண்ணையில் சில குட்டிகள் சேர்ந்து புளியம்விரை யாடிக்கொண்டிருந்ததாகவும் அவ் விடத்தில் ஒரு குட்டி நடராஜனை எடுத்துப் போயிருந்ததாக வும் தெரியவந்தது. முத்துஸ்வாமிபய்யர் முதலானவர்கள் இவ்விதம் விசாரித்துக்கொண்டிருக்கும்போதே சுப்பராய அய்யர் என்ற ஒருவர் 'ஐயோ என் பெண் மீனட்சியையும் காணேமே' என்று அலறிக்கொண்டு வந்தார். சீதாலட்சுமி அம்மாள் வீட்டுத் திண்ணையில் விளையாடிக்கொண்டிருந்த பெண்களுடன் மீனட்சியும் இருந்ததாகத் தெரிந்தது. நடராஜனையும் அவளையும் காணததால், அவனை அவள்தான் எடுத்துக்கொண்டு போயிருக்கவேண்டுமென்று அங்குள்ளவர் கள் ஊகித்தார்கள். ஆனல் அவள் எங்கே எடுத்துக்கொண்டு போயிருக்கக் கூடுமென்று தெரியவில்லை. அவ்வூர் முழுவதும் குடித்தெருவு, கடைத்தெருவு, அக்கிரஹாரம் ஒன்று பாக்கி

விடாமல் எங்கும் தேடிப் பார்த்தார்கள். எங்கும் காணுமை யால் நாலா பக்கமும் ஆள்விட்டு ஊருக்கு வெளியே பார்த்து வரும்படி அனுப்பினுர்கள். ஊருக்கு மேற்கே போனவர்கள் இரண்டு மைல் போனவுடன் ஒரு சிறு பெண் அழுத ஓசை கேட்டது. உடனே அவர்கள் அந்தச் சப்தம் வந்த இடத்தை நோக்கிச் செல்லுகையில் ஒரு புதரின் மத்தி யில் கால் கைகளில் எல்லாம் முட்காயம் பட்டு 'ஐயையோ அம்மா, அப்பா' என்றழுது கொண்டிருந்த ஒரு பெண் குழந்தையைக் கண்டார்கள். அவள்தான் மீனுட்சி. அவர் களைக் கண்டவுடன் அவள் ஓடிவந்து அவர்களைக் கட்டிக் கொண்டு அழுதாள். கேட்ட கேள்விக்கொன்றும் பதில் சொல்லக் கூடாமல் விம்மி, விம்மி யழுத அவளை அவர்கள் எடுத்துக்கொண்டு சமாதானம் பண்ணி தெளியச் செய்து ஊருக்குக் கொண்டுவந்தார்கள். அவள் சோர்ந்து அவர்கள் கையிலேயே நித்திரை போய்விட்டாள். வீட்டுக்கு வந்த வுடன் அவளுக்குக் குளுமோர் காய்ச்சிக் கொடுக்க அதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அவள் அப்படியே நித்திரை போய்விட்டாள். அவள் எப்பொழுது எழுந்திருக்கப் போகிருள் என்று முத்துஸ்வாமியய்யர் முதலிய எல்லோரும் ஆவலுடன் காத்திருந்தார்கள். பகல் இரண்டு மணிக்கு அவள் சோர்வு தெளிந்து எழுந்திருந்தவுடன் "குழந்தை நடராஜனை நீ கண்டாயா அம்மா" என்று அவளைக் கேட்க, அவள் சீதாலட்சுமி அம்மாளுடைய கிரஹத்தில் நடராஜனை எடுத்து விளையாடிக்கொண்டிருந்ததாகவும், யாரோ ஒரு சூத்திரச்சி அவளை இங்கே வா வென்று ஆசைகாட்டி யழைத்ததாகவும், நெடுநேரம் மதிமயங்கி அவள் கூடவே போக ஒரு காட்டுக்குப் பின்னுல் யாரோ பயங்கரமான கோர ரூபத்துடன் சில சூத்திரச்சிகள் அவளிடம் வந்து நடராஜனைப் பிடுங்கிக் குதிரையின்மேல் வைத்துக்கொண்டு ஓடியே போய்விட்டதாகவும், தன்னைக் கூட்டிப்போன சூத்திரச்சியும் அவர்களுடனே ஓடிவிட்டதாகவும் தேம்பித் தேம்பி யழுதுகொண்டு சொன்னுள். பிறகு அவள் வழி தெரியாமல் தவித்து நெஞ்சும் மாரும் படபட என்று அடிக்க, பயந்து அலறிக்கொண்டு கொஞ்சதூரம் ஓடுவதும்,

பிறகு பயம் மிஞ்சிக் கண்ணை மூடிக்கொண்டு அழுதுகொண்டு நிற்பதுமாகக் கடைசியில் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சமாசாரம் வரை சொல்லி முடிக்க, அதைக் கேட்டவர்கள் எல்லாரும் அவளை 'இந்தமட்டிலேயாவது வந்து சேர்ந்தாயே அம்மா' என்று தட்டிக்கொடுத்துத் தேற்றினார்கள். பிறகு திருடர்கள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு எந்தத் திசை நோக்கிப்போனார்கள் என்று விசாரித்துக்கொண்டு எல்லாரு மாகக் குழந்தைப் பறிநடந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். சப் மாஜிஸ்திரேட்டு வைத்தியநாதய்யரும் அவர்களுடன் கூடச் சென்றார். எல்லோருமாக அந்த இடத்திற்குப் போய் பார்க்கும்பொழுது அங்கே இரண்டு மூன்று குதிரைகள் காலடியும், நாலு வித்தியாசமான மனிதர்களுடைய காலடியும் தென்பட்டன. வைத்தியநாதய்யர் அந்த மனிதர்களுடைய காலடிகளைச் செவ்வையாய் அளக்கச் செய்து குறித்துக்கொண்டார். பிறகு அந்த அடிகளைத் தொடர்ந்து செல்ல அவை ஒரு காட்டுக் காளி கோயிலில் கொண்டு விட்டன. அந்த பத்ரகாளியம்மன் கோயில் இரண்டு மலைகளுக்கு மத்தியில் இருந்தது. அந்த அம்மன் சந்நிதியில் பத்துப் பதினைந்து மரங்கள் நெருங்கி வளர்ந்திருந்தன. அவற்றின் மத்தியில் குதிரைக் குளம்பு அடையாளங்கள் போயிருந்தமையால் எல்லாரும் அங்கே போனார்கள். போகவே ஒரு கோரமான தோற்றம் அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. அதென்னவெனில், மூன்று கற்கள் வைத்து ஒரு அடுப்பும், அதனருகில் ஒரு குழந்தையின் எலும்புகளும் காணப்பட்டன. தரையில் ரத்தம் சிந்தியிருந்தது. அதைக் கண்டவுடன் முத்துஸ்வாமியய்யர் 'ஐயையோ, நடராஜன், கொலை, பாவி' யென்று கூக்குரலிட்டார். அங்கே கிடந்த எலும்புகள் குழந்தை நடராஜனுடைய எலும்புகளாயிருக்கலாமென்று அவர்களுக்குப் பட்டது. அந்த அடுப்பின் சமீபத்தில் நெருப்பு மூட்டப்பட்டிருந்ததாகவும் நினைக்க இடமிருந்தது. உடனே அந்தக் குரூரமான துர்க்காதேவிக்கு நரபலி கொடுக்கக் குழந்தையைக் கொன்றிருப்பதாக எல்லாரும் ஊகித்தார்கள். குழந்தையை எடுத்துப் போனவர்கள் கள்ளர்களாயிருந்திருக்கும் பட்சத்தில் மீனாட்சி கழுத்தி

லிருந்த நகைகளை அவர்கள் அபகரித்திருப்பார்கள். ஒரு வேளை பேயாண்டித் தேவன் சிறைச்சாலையிலிருந்து வெளிப் பட்டு குழந்தையைத் திருடிக்கொண்டு போயிருக்கலா மென்றாலோ அவன் குழந்தையைக் கொன்று பலியிட்டிருக்க மாட்டான். நரபலி கொடுப்பது அவர்களுக்குள் வழக்க மில்லை. வேறு யார் இந்தக் கொடூரமான அக்கிரமத்தைச் செய்திருப்பார்கள் என்று தெரியவில்லை. முத்துஸ்வாமி அய்யர் மூர்ச்சைபோட்டு விழுந்துவிட்டார். அவரைத் தூக்கி வண்டியில்போட்டுக்கொண்டுஎல்லாருமாய் சொல்லக்கூடாத வருத்தத்துடன் ஊருக்குத் திரும்பினார்கள். கமலாம்பாள் முதலானவர்கள் சமைத்ததை மூடி வைத்துவிட்டுக் குழந்தை யைத் தேடிப்போனவர்களுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு வெகு துக்ககரமாய் உட்கார்ந்திருந்தார்கள். பத்திரகாளி கோயிலில் நடந்த விபரீத விர்த்தாந்தத்தைக் கேட்ட காலத்தில் அவர்கள் அடைந்த துயரத்தை என் னென்று சொல்லுவது. கமலாம்பாள் அலறியடித்துக் கொண்டு மூர்ச்சித்து விழுந்தாள். லட்சுமி கோவென்று கதறியழுதாள். முத்துஸ்வாமியய்யர் புலம்புவதும், அழுவது மாய் இருந்தார். வைத்தியநாதய்யரும் அவர்களுடன் சிறிது நேரம் துக்கித்துப் பிறகு, "அங்கே கிடக்கும் எலும்புகள் உங் களுடைய குழந்தையினுடையதாயிருக்கவேண்டு மென்பது என்ன! உங்களுக்கு அவ்வளவு கொடிய விரோதி யாரிருக் கிறார்கள்? அப்படியே விரோதிகள் இருந்தாலும் நரபலி யிடத்தக்கவர்கள் இங்கு யாரிருக்கிறார்கள்?" என்று பலவித மாக ஆட்சேபணைகள் செய்து அவர்களைத் தேற்றினார். "பலி யிடப்பட்ட குழந்தை வேறாயிருந்தால் நடராஜனைத் திருடிப் போனவர்களுடைய குதிரைகள் அந்தக் காளியம்மன் கோயி லுக்குப் போயிருக்கக் காரணமென்ன?" என்று முத்துஸ்வாமி யய்யர் கேட்க, வைத்தியநாதய்யர் ஒருவேளை அந்தத் திருடர்கள் நம்முடைய குழந்தை கொல்லப்பட்டதாக நாம் எண்ணும்படி வேறு எந்தக் குழந்தையினுடைய எலும்புகளை யாவது அங்கே கொண்டுவந்து போட்டுப் போயிருக்கலாம் என்றார். முத்துஸ்வாமியய்யர், "ஏது எனக்குத் தோன்ற வில்லை" என்று சொல்லவே, வைத்தியநாதய்யர், "ஆருடக்

காரனை வரவழைத்துக் கேட்டோம்'' என்று சொல்லி அவ்வூர் வள்ளுவனுக்குச் சொல்லி அனுப்பினார். அவன் உடுக்கை எடுத்துக்கொண்டு விரைவில் ஓடிவந்து தூப நைவேத்தியங்கள் எல்லாம் செய்து உடுக்கையடித்து அவ்வூரிலிருக்கும் ஒரு மந்திரவாதிதான் நரபலிசெய்தது என்று முடித்தான். உடனே அந்த மந்திரவாதிக்கு ஆள்விட்டார்கள். அவன் அவ்வூரைவிட்டு அன்று காலமேதான் போய்விட்டான் என்று சங்கதி தெரியவந்தது. உடனே அவன்தான் அந்தக் கொலைக்குக் கர்த்தாவென்று அங்குள்ளவர்கள் அனுமானித்தார்கள். உண்மையில் அங்கிருந்த வள்ளுவனுக்கும் அந்த மந்திரவாதிக்கும் விரோதம். அந்த மந்திரவாதியினுடைய தொழிலைக் கெடுப்பதற்கு இதுதான் நல்ல சமயமென்று அந்த வள்ளுவன் அவன் மேலே குற்றத்தைப் போட்டான்.

19

புத்திர சோகம்

அந்த மந்திரவாதி ஊரைவிட்டுத் திடீரென்று போய்விட்டபடியால் அவ்வூரிலுள்ளவர்களெல்லோருக்கும் அவன்மேல் சந்தேகம் பலமாக ஏற்பட்டது. அவனைக் கண்டுபிடிப்பதற்காகச் சர்க்காரில் பலவிதமான பிரயத்தனம் செய்தும் ஒன்றும் பலிக்கவில்லை. முத்துஸ்வாமியய்யருடைய நிலைமையோ மிகவும் பரிதபிக்கத்தக்கதாயிருந்தது. 'கண்ணிலான் பெற்றிழந்தானென,' அதாவது பிறவிக் குருடனொருவன் கண்கள் பெற்று, நூதனமாகக் கிடைத்த அந்தப் பாக்கியத்தின் மூலமாக உலகத்தின் காட்சிகளை ஆவலுடன் கண்டு களித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் திடீரென்று அந்தக் கண்கள் பார்வையை இழந்து விடுமானால் அவனுக்கு என்ன வருத்தம் உண்டாகுமோ அந்த வருத்தத்தை முத்துஸ்வாமியய்யர் முற்றும் அடைந்தார். குழந்தையே பிறவாமலிருந்தால் ஒரே துன்பமாகப் போய்விடும். குழந்தையைப் பெற்றுப் பிரியம் வைத்து வளர்க்கும் சந்தோஷத்தை அவர் அதிகமா யறிந்து

இருக்கமாட்டார். நீடித்து நிற்கும் துக்கம் மனிதனுக்கு சகஜமாய்விடும். கையில்லாமல் பிறந்தவனுடைய துன்பத்தைக் காட்டிலும் கை பெற்று இழந்தவனுடைய துன்பம் அதிகமல்லவா? கடவுள் புத்திரபாக்கியத்தைக் காட்டி ஒளித்ததினாலல்லவோ பட்டணத்துப் பிள்ளையும் உலகத்தை வெறுத்து ஞானியானார். முத்துஸ்வாமியய்யர் முன்னமேயே உலக இன்பத்தில் அதிருப்தியும், மனிதர் நடத்தையில் அருவருப்புமுள்ளவர் என்பது நமக்குத் தெரியும். இப்பொழுது குழந்தை போன பிறகு எல்லா விஷயத்திலும் அவருக்கு அருவருப்பு பலமாக ஏற்பட்டது. 'என்ன பாழுலகம்! என்ன பாவம் பண்ணினேனோ இந்த ஜன்மம் நமக்குக் கிடைத்தது' என்று அவர் அடிக்கடி சொல்லிக் கொள்ளுவார். சிற்சில சமயங்களில் 'சுவாமியேது, பூதமேது, உலகமே ஒருவரையொருவர் அடித்துத் தின்கிற வியாபாரந்தான்' என்பார். 'வேண்டேன் இம்மாயப் புன்பிறவி வேண்டேனே' என்ற வாக்கியத்தைப் பலமுறை தன் மனதுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொள்வார். யாராவது சிரித்து விளையாடிக்கொண்டிருப்பது அவர் கண்ணுக்கு எதிர்ப்பட்டால் தன் பார்வையை விலக்கிக் கொண்டு 'இதென்ன வேண்டியிருக்கிறது! ஐயோ, மூடன், மூடன்' என்று, தன்னுள் சொல்லிக் கொள்வார். குழந்தையை நினைத்து விசனப்பட்டுக்கொண்டே நாலைந்து நாள் அன்னபானாதிகள் கூடச் செவ்வையாகச் செய்து கொள்ளாமல் வீட்டுக்குள்ளேயே முக்காடிட்டு துக்கித்துக் கொண்டிருப்பார். ஊராரெல்லாரும் வந்து அவருக்குத் தைரியம் சொல்லுவார்கள். சொல்லியும் அவர் துக்கம் ஆறுது. கமலாம்பாள் தன்னைத் தேற்றிக்கொண்டு அவரைத் தேற்ற உத்தேசித்துச் சில சமயங்களில் வேதாந்தம் பேசுவாள். சில சமயங்களில் பாடுவாள். சில சமயங்களில் சரஸ ஸல்லாபங்கள் செய்வாள். சில சமயங்களில் 'குழந்தை அகப்பட்டாலும் அகப்படலாம்' என்பாள். இப்படி அவரைத் தேற்றி அவர் விசனமாறித் தெளிந்திருக்கும் சமயத்தில் அவளுக்கு அடக்க முடியாதபடி துக்கம் மேலிட்டுக் கண்ணீர் கரகர வென்று பெருகும். அப்பொழுது அவரும் கூட அழுது கொண்டு 'அழாதேடி' என்று அவளைத் தேற்றுவார். எதைப்

பார்த்தாலும் அவர்களுக்கு நடராஜன் ஞாபகம் வந்துவிடும். கொட்டாங்கச்சிகள், கயிறுகள், கொம்புகள் எல்லாம் அவர்களுக்கு அவன் ஞாபகத்தைக் கொடுத்து வருத்தும். அந்த விதமான துன்பத்தை ஒழிக்க நினைத்து அவர்கள் அவனுடைய பட்டு வஸ்திரங்கள், நகைகள், தொட்டில், பொம்மைகள் எல்லாவற்றையும் பிறருக்குத் தானம் செய்துவிட்டார்கள். அப்படியெல்லாம் செய்தும் திடீரென்று எவ்விதமாகவோ குழந்தை ஞாபகம் அவர்களுக்கு வந்துவிடும். முத்துஸ்வாமியய்யர் பூஜை பண்ணிக்கொண்டேயிருப்பார். உலக வாழ்க்கை எப்படியாவது ஒழிந்துபோக வேண்டுமென்ற வைராக்கிய சித்தத்துடன் அவர் சுவாமியைத் தியானம் பண்ணி பரமபக்தியுடன் மணியோசை செய்து தீபாராதனை நடத்திக் கொண்டிருப்பார். திடீரென்று குழந்தை ஞாபகம் வந்துவிடும். உடனே அவர் 'ஐயோ, நடராஜா!' என்று கதறிக்கொண்டு தீபத்தைக் கை நழுவ விட்டு விட்டு 'ஹோ!' என்று வாய் விட்டழுவார். வீதியில் போய்க்கொண்டிருக்கும் போதே யார் குழந்தையாவது எதிரில் தென்பட்டால் துக்கம் பெருக சரசரவென்று வீட்டுக்குள் வந்து ஒரு முறை கண்களைத் துடைத்துக் கொண்டு பிறகு வெளியே போவார். சில சமயங்களில் தெருவிலேயே நின்று அழுவார். எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து கொண்டிருப்பார். பாதி ஸ்நானம் ஆய்க் கொண்டிருக்கும்போதே அப்படியே 'ஐயோ' என்று கதறியழுவார். கமலாம்பாளும் அப்படியே சமையல் செய்து கொண்டிருக்கும் போதும், ஸ்நானம் செய்து கொண்டிருக்கும் போதும் அழத் துவக்கி விடுவாள். துக்கம் என்பது அவள் விஷயத்தில் ஆராதித்து அழைக்கப்பட வேண்டிய அன்னியனாக இல்லை. அவர்களுடைய குடும்பத்தில் ஐக்கியப்பட்டு இராப்பகல் பேதமில்லாமல் நினைத்தபோது வரப்போக அதிகாரமுடையதாய், காலியாயிருந்த குழந்தை நடராஜனுடைய இடத்தை நிரப்பிக் கொண்டிருந்தது. கமலாம்பாள் தன் கணவரைத் தேற்றித் தூங்கச் செய்து, அவர் நன்றாய் நித்திரை செய்யும் நடுநிசியில் எழுந்து உட்கார்ந்து கொண்டு நடராஜனைக் குறித்துக் கண்ணீர் பெருக்குவாள். சில சமயங்களில் முத்துஸ்வாமி அய்யரும் விழித்துக்கொண்டு

விடுவார். விழித்துக்கொண்டு விட்டால் விடிய விடிய அழுகைதான். ஆனால், அவளும் அவள் கணவரும் தங்களுடைய துக்கத்தை மறந்துவிட அநேக விதமான பிரயத்தனம் செய்தார்கள். உல்லாசமாகப் பேசுவது, சிரித்து விளையாடுவது 'என்னமோ இருக்கிறவரைக்கும் சுகமாக இருந்து விட்டுப் போகவேணும்; ஆய்விட்டது பாதி ஆயுசு, இனி மேல் ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ, இன்றைக்கோ நாளைக்கோ' என்று சொல்லிக் கொள்வது, பாடுவது முதலிய உபாயங்கள் எல்லாவற்றையும் அவர்கள் பிரயோகித்தார்கள். ஒரு நாள் ராத்திரி நிலவு சுகமாயிருந்தது. அன்றைக்குக் கமலாம்பாளும் அவள் கணவரும் மாடியின்மீது உட்கார்ந்துகொண்டு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்போதே கமலாம்பாள், "இந்தச் சந்திரனைப் பாருங்கள், இவனுக்குத்தான் என்ன கொழுப்பு! ரிஷபம்போல் ஆகாயம் முழுவதும் நம்முடைய ராஜ்யந்தான் என்று உல்லாசமாக நமக்கு நிகரில்லை என்று திரிகிறான்" என்றாள்.

முத்துஸ்வாமியய்யர்:—"ஆமாம், அவனுக்கு என்ன? அவனெல்லாம் தேவலோகவாசி. பூமியில் ஊரும் புழுவாகிய நம்மைப்போலவா? ஒருவனை யொருவன் அடித்துத் தின்று கொண்டு நாம் இருக்கிறோமே அதுபோல இவனும் இருக்க வேணுமா?"

கமலாம்பாள்:—"அப்படியில்லை, அதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியாமற் போனால் நான் சொல்லித் தருகிறேன். கேளுங்கள், சொல்லிவிடுவேன், பார்த்துக் கொள்ளுங்கள். சொல்லியே விடட்டுமா?"

முத். அ:—"சே! அப்படிச் செய்யாதே அம்மா, பயமாயிருக்கிறது. அப்படி எல்லாம் பண்ணிவிடாதே."

கம:—"இதோ சொல்லப் போகிறேன். பத்திரம்! இதோ சொல்லியே விடப்போகிறேன். என்ன தெரியுமா! ரோஹிணி, அவன் சம்ஸாரம் அவன் கிட்டவே எப்பொழுதும் இருக்கிறாளல்லவோ, அவன் கொழுப்புக்குக் கேட்க வேண்டுமா? தெரிந்ததா? இப்பொழுதாவது தெரிந்ததா?

அவர்கள் இரண்டு பேரும் யாரைப்போல் இருக்கிறுர்கள் சொல்லுங்கள். அதாவது தெரிகிறதோ பார்ப்போம்.''

முத்.—''ஆமடி ஆமாம்! உன்னையும் என்னையும் போல, மத்தியான மெல்லாம் அழுதது மறந்துபோய் விட்டது! கிடக்கிறது ஏதாவது பாடு பார்ப்போம்.''

கம.—''பாடட்டுமா. என் பாட்டைக் கேட்டு காற்று, சந்திரன் எல்லாம் மயங்கிப் பிரமித்துப் போகும்படி பண்ணி விடுகிறேன் பாருங்கள். 'பனியால் நனைந்து வெயிலா லுலர்ந்து'—சீ! என்ன பாட்டு வருகிறது இந்தச் சமயத்திலே.''

கமலாம்பாள் பாட ஆரம்பித்தவுடன் அவள் மனதில் பதிந்து கிடந்த 'பனியால் நனைந்து' என்ற அரிச்சந்திர புராணப் பாட்டு அவள் ஞாபகத்திற்கு வந்தது. இது பாம்பு கடித்து இறந்த குழந்தை லோகி தாட்சனைக் குறித்துச் சந்திர மதி புலம்பியழுவதைச் சொல்லும் பாடல். தன்னை யறியாமல் அந்தப் பாடல் அவள் நாவில் எழ, அவள் அதை விட்டு, 'போபோவேசெலியா' என்று வேறு பாட்டைத் துவக்கி ஞள். முத்துஸ்வாமியய்யர் ''இது வேண்டாம்; 'பனியால் நனைந்து' என்ற பாட்டைத்தான் பாடவேண்டும்'' என்று கட்டாயம் பண்ண, கமலாம்பாள் அதைப் பாடிஞள். 'தனியே கிடந்து விட நோய் செறிந்து தரைமீதுருண்ட துரையே, இனியாரை நம்பி உயிர் வாழ்வம் இறையோனும் யானும் அவனே' என்று பாடும்போது அவளுக்குத்துக்கம் நெஞ் சடைத்தது. அவள் 'ஐயோ என் குழந்தை?' என்று அலறி விட்டாள். ''நடராஜா, நடராஜா, ராஜா என்று உன்னை செல்வப் பெயரிட்டழைத்தேனே! ஐயோ! இனிமேல் ராஜா வென்று யாரைக் கூப்பிடப் போகிறேன். அம்மா என்று என்னை ஆறுமாசம் நன்ருகக் கூப்பிடவில்லையே! உன்னைப் பெற்ற வயிறு நெருப்பாயெரிகிறதே. ஐயையோ இந்த நெருப்பு என்றைக்கு அணையப்போகிறது. ராஜா, நடராஜா, அப்பா கூப்பிடுகிருரடா, ஏனென்று கேட்க மாட்டாயே! நடராஜா, நடராஜா இதற்குத்தாஞ உன்னைப் பெற்றெடுத் துப் பெயரிட்டது. உனக்குப் பால் கொடுக்கிறேனேடா, வாடா என்னப்பனே! அப்பா தங்கமே, முத்தே, மணியே

உன்னைப் புத்திகெட்டுத் தெருவில் விட்டேனே. இப்படியெல்லாம் வருமென்று நான் அறியேனே. உன்னைச் சிங்காரித்து உன்னழகைப் பார்த்து மகிழ்ந்தேனே. என் பாக்கியத்துக்கு எசோதையது கூடக் காணுதென்று இறுமாந்தேனே! சந்திரமதி செத்துப்போன குழந்தையையாவது மார்போடணைத்துக்கொண்டு அழுதாளே, எனக்கு அதுகூடக் கிடைக்கவில்லையே! கை வேறு, கால்வேறு எங்கே புதைத்துக் கிடக்கிருயோ? சிந்திப்போன உன் எலும்பையாவது உன்னைப் பெற்ற வயிருேடு வைத்து அணைத்துக்கொள்வேனே. நீ போன இடத்துக்கு என்னையும் கூட்டிப் போயிருக்கப்படாதா ஐயையோ?—'' என்று இத்தனை நாழிகை அடக்கிவைத்த துக்கமெல்லாம் கலகம் செய்து கிளம்ப வாய்விட்டுப் பிரலாபித்து அழுதுவிட்டாள். அழுதுவிட்டு, முகத்தில் துணிபோட்டு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்த முத்துஸ்வாமியய்யரைப் பார்த்து, ''என் புத்தி மோசம், அத்தனை சிங்காரம் சிங்காரித்துத் தெருவில்விட்டுவிட்டு அடுப்புக்காரியம் பெரிதென்று இருந்தேனே, என் பெற்ற வயிறு கொதிக்கிறதே'' என்று சொல்ல, அவர், ''வெளியே போய்வந்தேனே, நாலுவது தேடிப்பிடித்தேனு! எந்தக் காளிக்குப் பலியோ எந்தக் குழியிலே கிடந்து அவன் எலும்பு அழுகுகிறதோ. ஆண் சிங்கமென்று இறுமாந்தேனே. அத்தனை அழகும் குழியிலேயா போய்விட்டது'' என்று அவர் அழுதார். இப்படி இருவரும் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு 'ஓ' வென்று இரவு முழுவதும் அழுது தீர்த்தார்கள். இவ்வாறு அன்று இரவு சந்தோஷமாகத் தொடங்கி விசனகரமாக முடிந்தது.

20

அதிரகசியமான சில சங்கதிகள்

இவ்விதம் மூன்று வருஷகாலம் சென்றது. சூரிய சந்திர நட்சத்திரங்கள் எல்லாம் தங்கள் தங்களுடைய நித்திய கர்மானுஷ்டானங்களை வழுவாமல் நடத்திவந்தன. கமலாம்-

யாளும் முத்துஸ்வாமியய்யரும் விசனப்படுகிறார்களென்று அவைகளுக்கு யாதொரு கவலையும் இருப்பதாகக் காணவில்லை. நம்மை வென்ற கமலாம்பாள் மனங்கலங்கி உடல் வாடு கிறாளே யென்று மான், மயில், குயிலினங்கள் விசனப்படவு மில்லை. முத்துஸ்வாமியய்யர் புத்திரசோகத்தால் வருந்து கிறாரே யென்று சற்றும் கவலையில்லாமல் தூர்த்தத் தன்மை யை யுடைய காற்று மரங்களுடன் தாராளமாய் ஸல்லாபம் செய்வதும், அவைகளுடைய புஷ்பவர்க்கங்களை யனுபவித் தும், அவர்களுடன் மிருதுவாய் முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவி அவற்றின் நலங்களைக் கொள்ளைகொள்வதும், ஒரு சமயம் ஊடிய கணவரைப்போல ஒரு வார்த்தையும் பேசாது ஒதுங்கி மௌனமாய் நிற்பதும், மற்றொரு சமயம் அவை களுடன் சேர்த்து 'ஹோ' வென்று வெறிக் கூப்பாடிட்டு ஊர்ப்புறங்களை யெல்லாம் சீரழித்துச் சிந்தைகுலையச் செய் வதுமாகிய ஊடலாடலின்பங்களைக் கூசாமல் எப்பொழுதும் போல அனுபவித்துக்கொண்டிருந்தது. முத்துஸ்வாமியய்ய ருடைய இஷ்டமித்திர பந்துக்கள் மாத்திரம் அவருடைய துக்கத்தைத் தங்களுடைய துக்கம் என்று பாராட்டி அவகாச மான வேளையில் வேறு யாதொரு காரியமும் செய்வதற்கு இல்லாவிட்டால் அவருடைய குழந்தை காணாமற்போன கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். மற்றப்படி உருண்டு கொண்டேயிருக்கிற இவ்வுலகம் ஒருக்கணமும் இடை விடாது உருண்டுகொண்டேயிருந்தது. அம்பட்டன் மாரி யப்பன் க்ஷவரம் செய்வதும், வண்ணான் நாகன் வேட்டி துவைப்பதும், குசவன் குட்டையன் பானைசட்டி பண்ணு வதும், வேம்பப்பத்தன் வெள்ளி, பொன்களைத் (பிறரிடத்தி லிருந்து) தட்டுவதும், சூத்திரன் மூக்கன் மாடு மேய்ப்பதும், கணக்கு முத்துப்பிள்ளை கள்ளக் கும்பிடு போடுவதும், சேஷன் செட்டி கற்கண்டு விற்பதும், வைதீக ராமண்ணு பிராமணார்த் தம் சாப்பிடுவதும், வக்கீல் சேஷய்யன் கோர்ட்டுக்கு முன்னேயே கொள்ளையடிப்பதும், பிறப்போர் இறப்பதும், இறப்போர் பிறப்பதுமாக நாட்கள் வாரமாய், வாரங்கள் மாதமாய், மாதங்கள் வருஷமாய்க் கொஞ்சமும் கவலை யற்று ஸ்தூலித்துக்கொண்டு வந்தன.

இப்படிப் புனர்ஜன்மங்கூட இல்லாமல் இறந்துபோய்க் கொண்டிருந்த நாட்களுள் ஒருநாள் சந்தையிற் கூட்டமாகிய சென்னைமாபுரியில் (சென்னப் பட்டணத்தில்) தம்புசெட்டித் தெருவில் 321 நெ. வீட்டில் மாடிமீது இரண்டு வாலிபர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் பெரியவன் மற்றவனைப் பார்த்து "தபால்காரன் வருகிற சமயமாய் விட்டது. இன்றைக்கு வருமா காகிதம்" என்றான். "அவன் என்ன இழவு இன்னும் வரவில்லை. நேற்று இத்தருவாய்க்கு முன்னேயே வந்துவிட்டானே. நானும் அரைமணியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்," என்று சொல்லிக்கொண்டு மற்றவன் அறையைவிட்டுத் தெருவுக்கு நேராக மாடியில் வந்து நின்று தபால்காரன் வருகிற வழியைப் பார்த்தான். தபால்காரனைக் காணோம், பிறகு உள்ளே வந்து கடிகாரத்தைப் பார்த்தான். "இதென்ன சரியான மணியா, நேற்று நீ சாவி கொடுத்தாயா? மணி 9-ஆய்விட்டது, இன்னும் வரவில்லை" என்று சொல்லிக் கொண்டு மறுபடி வெளியே போனான், மறுபடி உள்ளே வந்து "இன்றைக்குக் காகிதம் இல்லைதான் போலிருக்கிறது. அதென்ன அப்படி எழுதாமலிருக்கமாட்டாளே. நடுவிலே எங்கேயாவது தாமதப்பட்டுப் போய்விட்டதோ?" என்றான். அதற்குள் உள்ளேயிருந்த அவனுடைய சிநேகிதன் "ஏதோ தெரியவில்லை, போகலாம் வா. சாப்பிட்டுவிட்டு வந்து பார்த்துக் கொள்வோம். இல்லாவிட்டால் சாப்பிட்டுவிட்டுத் தபாலாபீசில் போயாவது விசாரிப்போம். காகிதம் இருந்திருந்தால் வந்திருக்கும். இத்தனை நாழிகையாயிற்று, இன்றைக்கு இல்லை போலிருக்கிறது" என்றான். அதற்கவன் "என்னவோ ஸ்திரீகளை மாத்திரம் நம்பப்படாது. ஏதாவது உடம்பு கிடம்பு சௌக்கியமில்லையோ என்ன இழவோ; இருக்கிறாளோ போய்விட்டாளோ அதைத்தான் யார் கண்டார்கள்" என்று சொல்லிவிட்டு ஒரு பக்கமாகத் திரும்பிக் கொண்டு தன் கண்ணினின்று ததும்பிய நீரைத் துடைத்து, தன் மனதுக்குள் 'அடா போடா பைத்தியக்காரா, அவளே உன்னை லட்சியம் செய்யவில்லையாம், உனக்கு என்னடா இப்பொழுது. ஆனாலும் பிறந்தகத்துக்குப் போன பொண்டுகளை நம்பக்கூடாது. கிடக்கிறாளடா விட்டுத்தள்ளு

கழுதையை'' என்று சொல்லிக்கொண்டு, தன் சிநேகிதனைப் பார்த்து, "ஏன் சாப்பிடப் போகலாம் வா'' என்று உரக்கச் சொன்னான். பிறகு அவனும் அவனுடைய சிநேகிதனுமாகச் சாப்பாட்டுக்குப் போனார்கள். அன்றைக்கு அவனுக்குச் சாப்பாடு சாப்பாடாகவே இல்லை. காகிதம் வராததற்குக் காரணங்களைப் பற்றித் தன் மனதுக்குள்ளேயே ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்த அவனுக்கு மற்றவர்கள் பேசிக் கொண்டிருந்தது ஒன்றும் கேட்கவில்லை. இன்ன சாதம் சாப்பிடுகிறோம் என்ற நினைவுமில்லை. ஒரு க்ஷணம் புன்சிரிப்பும் மறுக்ஷணம் கண்ணீர்த் துளியும் ஒரே க்ஷணத்தில் இரண்டும் உண்டாக அவன் முகம் ஐப்பசி மாதத்திய ஆகாயத்தின் முகம்போல மாறுபட்டுக்கொண்டிருந்தது. இவ்விதமாகச் சாப்பிட்டு, அவனும் சிநேகிதனுமாகத் திரும்பி வருகையில் தபால்காரன் எதிரே வந்து அவன் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். "ஏன் இத்தனை நாழிகை'' என்று தபால்காரனைக் கேட்டான். அவன் "இன்றைக்கு மெயிலே இப்போது நான் வந்தது'' என்று சொன்ன மறுமொழிகூட காதில்படாமல் கடிதத்தை அவன் ஆவலுடன் உடைத்துப் பார்த்தான். அதில் அடியில் வருகிறபடி எழுதியிருந்தது :—

"என் அன்பை அதிகரிக்கின்ற என் பிராண நாயகராகிய ஸ்ரீமா அய்யரவர்களுக்கு அநேக நமஸ்காரம், க்ஷேமம், க்ஷேமத்துக்கு எழுதவும்.

"என் கடிதத்தைக் கண்டவுடனேயே பதில் எழுதுவதற்கு ஐயரவர்களுக்குச் சாவகாசப்படவில்லை. நீங்கள் என்ன செய்வீர்கள! பலஜோலிக்காரர். என் ஞாபகம் எங்கே யிருக்கப் போகிறது! மேலும் உத்தரவு கொடுக்க வேண்டிய வர்கள் உத்தரவு கொடுத்துத்தானே நீங்கள் பதில் எழுத லாம். இருக்கட்டும், இருக்கட்டும்; நான் நேரில் வந்து உங்களுக்குத் தக்க வழி சொல்லுகிறேன். ராத்திரிக்கு ராத்திரியே வந்து ஓசைப்படாமல் என் மனதைத் திருடிக் கொண்டு போகிறது. அப்புறம 'கூ கூ' என்றாலும் போட்ட காகிதத்துக்குக்கூட பதில் கிடையாது. தைரியமிருந்தால் நேரே வரவேணும். இல்லாவிடில் சும்மாயிருக்கவேணும்.

"என் துரையே! நான் என்ன வேடிக்கையாக எழுத வேண்டுமென்ருலும் எழுத முடியவில்லையே. தங்களை விட்டுப் பிரிந்து அனலிலிட்ட மெழுகுபோல உருகி, சோனை மழை பெய்யுமே—ஒருதரம் காற்று வீசுகிறது உடனே பலபல வென்று மழை பெய்கிறது-அதுபோலப் பெருமூச்சும் கண்ணீரு மாய் வழியில் படுத்துக்கொண்டிருக்கும் மலைப்பாம்பைப் போல் ஓடாத இந்தப் பொழுதை ஓட்டித் தவித்துக்கொண் டிருக்கிற எனக்கு என்ன வேடிக்கை வேண்டியிருக்கிறது. போன ஜன்மத்தில் எந்த நேசமான தம்பதிகளைப் பிரித் தோமோ அந்தப் பாவம் நாம்தான் பிரியும்படி நேர்ந்தது. கடிதமாகிலும் என் விசனத்தை மாற்றிவிடுமென்ருல் அதுவும் சரியானபடி வருகிறதில்லை. போகட்டும், இப்பொழுதாவது தயவுபண்ணி எழுதினீர்களே. கொஞ்சம் தாமதப்பட்டால் உடம்பு என்னமோ என்று சந்தேகமாயிருக்கிறது. எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணச் சொல்லுகிறது. அப்படி விசனப் பட்டுக்கொண்டிருக்கும்போது தங்கள் கடிதம் வந்தது. தங்கள் தங்கக் கையினுல் எழுதின அந்தக் கடிதத்தைக் கட்டிக்கொண்டு முத்தம் கொடுத்தேன். அதைத் திருப்பித் திருப்பி வாசிக்கும்போது தங்களுடன் நேரிலே பேசினுற்போல நினைத்துக்கொண்டேன். அதைக் கட்டி முத்தமிட்டது தங்களைக் கட்டியணைத்து முத்தமிட்டதுபோல இருந்தது. கணையாழியைக் கண்ட சீதையைப்போல எனக்குச் சந்தோ ஷத்திலே கண்கள்கூடத் தெரியவில்லை. தங்கள் கடித மென்ருல் அவ்வளவு சந்தோஷமுண்டாகும்போது நேரிலே காணப் போகிருேமென்ருல் எவ்வளவு சந்தோஷமாய் இராது. நான் அவ்விடத்திற்கு அடுத்த வெள்ளிக்கிழமை அப்பா அம்மாளுடன் தங்களையே நேரில் காண கட்டாயமாய் வரப்போகிறேன். குழந்தை நடராஜனைக் குறித்து ராப்பக லாய்க் கதறுவதே எங்களுக்கு மணியமாயிருக்கிறது. அதுவும் அப்பாவும் அம்மாளும் அழுதழுது துரும்பாய் மெலிந்து விட்டார்கள், அவர்கள் வீணுன இந்த ஞாபகத்தை ஒழிக்க எண்ணியே பட்டணம் வருகிருர்கள். என்னையும் விட்டுப் பிரிந்து அவர்கள் எவ்விதம் உயிர் வாழ்வார்கள். அடுத்த வாரம் கட்டாயம் வந்துவிடுவேன். சகுந்தலையை துஷ்யந்தன்

பார்த்து 'நீ யார்' என்று கேட்டானே அந்த மாதிரி என்னையும் கேட்பீர்களோ. கேட்டால் என்ன பதில் சொல்லு கிறேன் என்று வேணுமானால் பாருங்களேன். பார்ப்போமே; பயணம் நிச்சயம். என்னால் தாங்கள் எவ்வளவு துன்பம் அடைந்தீர்கள். நான் பட்ட பாடெல்லாம் நீங்களும் பட்டி ருப்பீர்களே. என் துரையே, தாங்கள் என்பேரில் வைத் திருக்கிற அன்பை நினைத்தால் எனக்கு வருகிற சந்தோஷம் இவ்வளவு அவ்வளவு இல்லை. இப்பொழுது தங்களை அவ்விடம் காண சமீபித்துவிட்டபடியால் இன்னும் மேல் மேலும் பொங்குகிறது. நந்தன் சிதம்பரம் போக வேணும் என்று எவ்வளவு விசாரத்துடன் இருந்து அதைக் காணவும் எவ்வளவு சந்தோஷமடைந்தான்—அதுபோல நான் தங்களைக் காண வருகிற சந்தோஷத்தை அவ்விடம் வந்து தங்களிடம் ஒரு வார்த்தைக்கு ஒரு முத்தமாகத் தேனும் சர்க்கரையும் கலந் தாற்போல் கலந்து சொல்லி மகிழ்வேன். ஒருநாளும் நம்முடைய அன்பு தவறக்கூடாது. தங்களைக் காண, தங்கள் அன்பை ஒரு பூஷணமாகப் போட்டுக்கொண்டு தங்கள் கவலையை நீக்கி இருவரும் களிப்படைய அவ்விடம் வருகிறேன். நான் நளவெண்பா முழுவதும் பாடம் பண்ணிவிட் டேன். நான் எழுதிய கடிதத்தில் பிசகு அதிகமாயிருக்கும். தாங்கள் அதைக் கிழியாமல் வைத்திருந்தால் அவ்விடம் வந்து தங்களிடம் பிழையைத் திருத்திக்கொள்வேன். என் உடம்பு சௌக்கியமாயிருக்கிறது. தங்கள் அன்பே எனக்குப் பூரிப்பைக் கொடுத்திருக்கிறது. நான் அவ்விடம் வருகிறபடி யால் கடிதத்தை நிறுத்தி நேரில் காண்போம். அதுவரையில் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாயிருக்கிறது. தங்க ளிடம் பக்ஷியாகப் பறந்து உடனே வந்துவிட வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது.

பிரியநாயகர் பாதத்தில்
தங்கள் இன்னுயிர்த் தோழியாகிய
லட்சுமி நமஸ்காரம்."

இந்தக் கடிதம் இன்னாரால் எழுதப்பட்டதென்றும் இன் னாருக்கு எழுதப்பட்டிருக்கிறதென்றும் நாம் சொல்லாமலே

இதைப் படிப்போர் அறிந்திருப்பார்கள். ஸ்ரீநிவாசன் இந்தக் கடிதத்தை ஆவலுடன் உடைத்து வாசித்தான். பிறகு மூடினுன், மறுபடி வாசித்தான். தன் சிநேகிதன் சுப்பராயனுக்கு வாசித்துக் காட்டினுன். மறுபடியும் தானுக வாசித்துக் கொண்டான். கண்களில் ஒற்றிக்கொண்டு முத்தமிட்டான். சந்தோஷத்தில் அவனுக்கு வாய் குழறிற்று. அவன் சிநேகிதன் சுப்பராயனும் அதிக சந்தோஷமடைந்து "உன் பெண்டாட்டி லட்சுமி யில்லை, சரஸ்வதியப்பா" என்ருன். ஸ்ரீநிவாசனுக்குச் சாந்தி முகூர்த்தமான சமாசாரத்தை நாம் முன்னமே சொல்ல அவகாசப்படவில்லை. அவனும் லட்சுமியும் நளனும் தமயந்தியும் போல வெகு அந்நியோந்நியமாய் இருந்தார்கள் 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்று சொல்லப்பட்ட இன்பத்தை அவர்களைப் போல் இவ்வுலகத்தில் அடைந்தவர்கள் கிடையாது. 'இகத்துள சுகத்திற்கு அளவுகோலாய் பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்' என்று வாணிக்கப்பட்டிருக்கிற உண்மையான அன்பின் மதுரமான அதிரகசியங்களை அவர்களைப்போல் அறிந்து அனுபவித்தவர்கள் இல்லை.

சாந்தி முகூர்த்தமாகு முன்னேயே அவர்களிருவரும் ஒருவருமறியாமல் பேசிக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்ரீநிவாசன் சிறுகுளத்துக்கு வந்திருந்த நாட்களுள் ஒருநாள் கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் பண்ணிவிட்டுத் தன் மாமனுரகத்து வாசற்றிண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்குச் சில நாளாகத் தன் பெண்டாட்டியுடன் பேச வேண்டுமென்று ஆசை. ஆனுல் சமயங் கிடைக்கவில்லை. சமயம் கிடைததால் தைரியம் உண்டாகிறதில்லை. அன்றைக்கு லட்சுமியைப் பற்றியே தியானம் செய்துகொண்டு மேலே சொல்லியபடி அவன் உட்கார்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பிச்சைக்காரன் பிச்சைக்கு வந்தான். ஸ்ரீநிவாசன் 'அவள் வந்தாலும் வருவாள் பிச்சை போட' என்று ஆவலுடன் பார்த்தான். லட்சுமியும் அப்படியே சாதம் எடுத்துக்கொண்டு வந்தாள். இதுதான் சமயம் பேசுவதற்கு என்று ஸ்ரீநிவாசன் யோசனை செய்துகொண்டிருக்கும்போதே

நெடுநாளாய்த் தன் அகமுடையாளுேடு பேச வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்த லட்சுமி 'அவராகப் பேசுகிற வழியா யில்லே. இனி வெட்கப்பட்டு முடியாது, இதுதான் சமயம்' என்று எண்ணி ஆசை தூண்ட, வெட்கம் கண்டிக்க, மிகுந்த பயத்துடன் அரை வார்த்தையாகச் 'சாப்பிட வாருங்களேன்' என்று வெகு இனிமையாகச் சொல்லி மெதுவாய்ச் சென்ருள். அதைக் கேட்டவுடன் ஸ்ரீநிவாசன் ஆனந்தத்தால் பரவசனுய் விட்டான். பதில் சொல்லக்கூட அவனுக்குச் சுய ஞாபக மில்லே. அவன் உள்ளம் வசந்தருதுவைப்போலக் குளிர்ந்து பூரித்தது மெதுவாய்ச் சொல்லப்பட்ட தன் பெண்டாட்டி யின் வார்த்தைகள் அவன் காதில் வீணுகானம் செய்து கொண்டு நின்றது. அதைத் திருப்பித் திருப்பித் தனக் குள்ளேயே சொல்லிக்கொண்டு அதிருசியான ஒரு பதார்த்தத்தை உண்டவன்போல் அந்த வார்த்தைகளே ஒவ்வொன்ருய் மெதுவாய் மென்று அனுபவித்து, கோயிலுக் குப் போய்விட்டு வந்த பலன் உடனே பலிதது என்று மகிழ்ந்தான். இதுதான் அவர்கள் முதல் முதல் பேசின சமயம். பிறகு அவர்கள் அடிக்கடி ஒளிந்து ஒளிந்து பேசிக்கொண்ட ரகசியங்களே யெல்லாம் பலரறிய இங்கே சொல்வானேன்?

நமக்குள் தற்காலத்தில் சில சிறுவர்கள் ஸ்திரீகள் இருபது வயதுக்கு மேற்பட்டு மணம் செய்தால்தான் புருஷனுடன் சுகித்து வாழக்கூடும் என்று நினேக்கிருர்கள். ஸ்ரீநிவாசன் லட்சுமி இவர்களுடைய நேசத்தை நன்ருய் அறிந்த எனக்கு அப்படித் தோன்றவில்லே.

ஸ்ரீநிவாசன் பி.ஏ. பரீட்சையில் எல்லாருக்கும் முதலாகத் தேறினுன். அதன் பிறகு சட்டப் பரீட்சைக்குப் படிக்கும் போது அவனுக்குச் சாந்தி முகூர்த்தம் நடந்தது. குழந்தை நடராஜனே யிழந்த முத்துஸ்வாமியய்யர், லட்சுமி ஸ்ரீநிவாசன் இவர்களுடைய சந்தோஷத்தில் தன் துக்கத்தை ஒருவாருக மறந்திருந்தார். அதனுல் லட்சுமியைப் புக்காத்துக்கு அனுப்பும்போது அவர் அழுத அழுகைக்கு அளவில்லே. 'என் வீடு இனிமேல் பாழ். அடுப்பங்கரையில் எருக்கு முளேக்கட்டும். இனிமேல் எனக்கு என்ன' என்றும், 'ஐயோ இதற்காகத்தானே

பெண்ணைப் பெற்றுக் கெட்டுப் போகாதே என்று சொல்லு கிறார்க' ளென்றும் அவர் விசனப்படும்போது, ஸ்ரீநிவாசன் தகப்பனார் லட்சுமியைக் கொஞ்சநாள் வைத்திருந்து பிறகு அனுப்பி விடுவதாகச் சொல்லி ஆற்றினார். ஸ்ரீநிவாசன் பட்டணத்துக்குப் போனபிறகு கமலாம்பாளும் முத்துஸ்வாமி யய்யரும் ஒரு தக்க ஜாகையமர்த்திக்கொண்டு தங்கள் பெண் மாப்பிள்ளையோடு இருக்க உத்தேசித்தார்கள். லட்சுமியி னுடைய கடிதம் வந்த சில நாளைக்கெல்லாம் அப்படியே எல்லாருமாகப் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கண்ட ஸ்ரீநிவாசன் தாயைக் கண்ட கன்று போலவும், துணையைக்கண்ட சக்ரவாகப் பக்ஷிபோலவும் ஆனந்தித்தான். வசதியான ஒரு கிரஹத்தில் அவர்கள் எல்லோரும் வெகு சந்தோஷமாய் வாழ்ந்தார்கள்.

21

கடற்கரை விளையாட்டு

ஸ்ரீநிவாசனும் லட்சுமியும் அடிக்கடி சமுத்திரக் கரைக்குப் போவதுண்டு. குழந்தைகள் தாய் மடிமீதேறி 'மண்டி' போட்டு நின்று பாய்ந்து விளையாடுவதுபோல், அலைகளாகிய குச-லவன் இவர்களைப் போன்ற குழந்தைக் கூட்டங்கள், தாயாகிய கடலின் மடிமீது ஏறி நின்று ஓடியாடிப் பாய்ந்து கரையின்மீது தவழ்ந்து மணலை வாரி ஜலத்திலும் ஜலத்தை வாரி மணலிலும் போட்டுக் கருமணல் மத்தியில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் எப்படியோ அப்படிச் சிறிய அளவற்ற பொன்மணல்கள் பிரகாசிக்கப் பற்பல விசித்திரக் கோலங்களை இயற்றி அழித்துப் பின்னும் இயற்றி நுரைத் தொகையையும் முத்தையும் சிந்தி நத்தைகளையும், சங்குகளை யும், கட்டைகளையும், உருட்டிப் புரட்டிப் பரப்பிப் புதைத்து ஒரு கணமும் ஓய்வொழிவில்லாத இவ்வித பால்ய லீலைகளைச் செய்துகொண்டிருக்கின்ற கடற்கரைக்கு ஒருநாள் அந்திப்

பொழுதில் ஸ்ரீநிவாசனும் லட்சுமியுமாக வந்தார்கள். அன்று அஸ்தமன அழகை என்னென்று சொல்வது! பகல் முழுவதும் காணக் கண் கூசும் காந்தியுடன் ஆகாயம் பூமியாகிய இவ்விரு உலகங்களையும் தனது ஆஞ்ஞைக் குள்ளடக்கித் தனியரசு புரிந்த காம்பீரச் செல்வனாகிய சூரியன் விருத்தாப்பிய தசையடைந்து, அஜ, ரகு, திலீபாதி யரசர்களைப் பார்த்துத் தானும் ராஜ்யத்தைவிட்டுத் தவஞ் செய்யக் கருதினான்போல், சாந்தஸ்வரூபமாய மாறிச் செந்தாமரை போல் மலர்ந்த தனது இனியமுகத்தை யாவரும் காணக்காட்டி அர்க்கியாதிகளால் தன்னை வாழ்த்தும் தனது பிரஜைகளிடமிருந்து விடைபெற்று (செவ்வானமாகிய) செஞ்சடை புனைந்து தனியே செல்ல, 'இதுவும் உனது திருவிளையாடலே' என்று பிரமிப்படைந்த பக்த கணங்கள் ஆறு, குளம், வீடுகள்தோறும் கைகூப்பி நின்று 'ஆரே உன் அதிரேகமாயை யறிவார்' என்று கடவுளைப் போற்ற; கடற் கரையிலோ, இன்று நம்முத்தியோகம் இத்துடன் ஒழிந்தது என்று தங்களுடைய மீன் நிறைந்த வலைகளுடன் கட்டை மரங்களையும், படகுகளையும் கரையில் சேர்த்துச் செம்படவர் கள் திரைகடலோடித் தாங்கள் தேடிய திரவியத்தை, கூடை யும் கையுமாய்த் தங்களை வழிபார்த்து, வந்தவுடன் கைகொட்டி நின்ற தம் பெண்டுகள் பிள்ளைகளுடன் பங்கு பகிர்ந்து நின்றனர் ஒருசார்.

மானினம் வருவபோன்று மயிலினந் திரிவபோன்றும்
மீனின மிளிர்வபோன்று மின்னின மிடைவபோன்றும்

பொம்மெனப் புகுந்த ஆங்கிலேய மாதர்கள் தோகை போன்ற உடையும், அன்னம்போன்ற நடையும், கிள்ளை போன்ற மொழியுங்கொண்டு தங்களுடைய (அல்லது பிறருடைய) நாயகர்களோடு கைகோர்த்து, உரையாடி நகையாடினர் ஒரு சார். பள்ளிக்கூடத்துப் படிக்கும் பாலர் சிலர் கங்கைக்குப்போன கடாவின் கதையாய்க் கடற் கரையிலும் புஸ்தகங்களுடன் கட்டியழுதனர் ஒருசார். வாலிபக்கணவர் சிலர் தம் சிறு மனைவிமாரோடு கடல் காணத் துணிந்து கரையை அணுக அங்கு யாரேனும் எதிர்ப்

பட்டால் தம்நோக்கு அகற்றித் தலை நாணி ஏதோ குற்றம் செய்தவர்போல நெஞ்சும் மார்பும் பதைபதைக்க மணற் புறத்துப் பதுங்கினர் ஒருசார். நாடுகள்தோறும் ஓடியலையும் வாடஜனங்கள் கடலைத் தொழுது கைகூப்பினர் ஒருசார். அடக்குவாரற்று ஆடியோடும் அலைகளையும் களிமயக்குற்றுக் கன்றுபோல் துள்ளிக் கடற்கரையில் நித்தியவசந்தம் செய்து வீசாநின்ற வாலிபக் காற்றையும் கண்டு தாமும் உற்சாகச் செறிவுற்றுத் தனியிடமடைந்து தம்மோசையைக் கடலோசை விழுங்குமென்று துணிவேறிப் பாடத்தெரியாதாரும் பாடினர் ஒருசார். ஏராளமாய் நிறைந்திருந்த மணற்பரப்பின்மீது சிலர் மல்யுத்தம் செய்து நின்றனர். சிலர் அங்கு வீசும் தென்றலைப்போல் ஓடியுலாவி ஓயாது அடிக்கும் அலைகளைப் போல் குதித்து விளையாடினர். சிலர் தனியே உட்கார்ந்து தங்களது குடும்ப ரகசியங்களை அலைகளுடன் சொல்லி யாற்றினர். இவ்விதம் 'வெறி வெய் விதாலு' (பயித்தியம் பலவிதம்) என்ற தெலுங்குப் பழமொழிக்கிணங்கப் பற்பல விசித்திரங்கள் நிறைந்த கடற்கரையில் ஸ்ரீநிவாசனும் லட்சுமி யும் ஓர் ஓரப்புறத்தில் (ஒரு படகின் மறைவில்) நட்சத் திரங்களிழைத்த ஆகாயமாகிய முத்துப் பந்தலின்கீழ் சமுத்திர ராஜன் பாதகாணிக்கை கொடுத்துப் பாதபூஜை செய்ய, வாயுபகவான் சாமரை வீச, அனேக ஆயிரம் அலைகள் கூடி அனவரதம் முயற்சித்து இயற்றிய வெண்மணல் விமானத்தின் மீது தமக்கு நிகர் தாமேயென எழுந்தருளினூர் கள். அவர்கள் உட்கார்ந்தவுடன் லட்சுமி பாடத்தொடங் கினுள். அஞ்சொற்கள் அமுதினின்று மள்ளிக் கொண்ட அவள், குயில், குழல், யாழ் இவற்றைப் பருத்த குர லுடன் பாட, ஸ்ரீநிவாசனுக்குப் பூலோகத்திலிருப்பதாக ஞாபகமே இல்லை. "விவரந்தெரியாத அலைகள் மட்டும் சிறிது நேரமாவது சப்தம் செய்யாது இருந்தால், கடலும் காற்றும் அப்படியே பிரமித்து மயங்கி யடிமையாய்ப் போயிருக்கும்" என்றுன் ஸ்ரீநிவாசன்.

லட்சுமி: "ஆமாம், சமுத்திரம் இரையாமலிரு என்றால் இரையாமலிருக்குமாக்கும், நிரம்ப சரி" என்று அவனைத் தட்டிக்கொடுத்துக் கேலி பண்ணினுள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சந்திரனும் வந்தது. கரகர வென்று அமிர்த கலசம்போல் எழுந்து, 'வெண்டாமரையின் மலர் பூத்த தொத்த தவ்வாழிவெண் திங்கள்' என்றபடி தாமரைப் புஷ்பம்போல் விளங்கும் சந்திரனுடைய மெல்லிய ஒளி கடலில் பரவிற்று.

ஸ்ரீநிவாசன்: "சந்திரன் வந்துவிட்டானும், சமுத்திரம் முகமலர்ந்து சந்தோஷத்தால் புன்சிரிப்புச் செய்கிறது, ஆஹா பேஷ்!"

லட்சுமி: "ஏன் அதற்கு அவ்வளவு சந்தோஷம் சொல் லுங்கள்?"

ஸ்ரீநி: "சந்திரன் விருந்தோ இல்லையோ அதுதான்."

ல: "அப்படியில்லை, 'கலந்தவர்க்கு இனியதோர் கள்ளு மாய்' என்று சொல்லியிருக்கிறதல்லவோ. ஸ்திரீ புருஷர்கள் அன்பாய் இருந்தால் அவர்களுக்குச் சந்திரன் அமிர்தபானம் போலே—"

ஸ்ரீநி: "யார் புருஷன்? யார் பெண்டாட்டி?"

ல: "சொல்லட்டுமா, இருங்கள் சொல்கிறேன். இந்தச் சமுத்திரந்தான் போய் பெண்டாட்டி; இளந்தென்றல் இருக் கிறதல்லவோ—"

ஸ்ரீநி: "ஆமாம், இருக்கிறது, அதற்கென்ன பண்ண வேண்டுமென்கிறாய். அது அப்படித்தான் இருக்கும்! நீ என்ன சொல்லுகிறது!"

ல: "போங்கள், நீங்கள் கேலி பண்ணுகிறீர்கள், நான் பேசவில்லை, போங்கள்."

ஸ்ரீநி: "இல்லையடியம்மா சொல்லு; சே, கோபித்துக் கொள்ளாதே."

ல: (ஸ்ரீநிவாசனுக்கு ஒரு முத்தம் கொடுத்து) "இளந் தென்றல்தான் சீமாவாம்; (ஸ்ரீநிவாசனும்) சமுத்திரந்தான் போய் லட்சுமியாம்; அலைகள்தான் குழந்தையாம்."

ஸ்ரீநி: "அப்படியானால் காற்றிற்கு எத்தனை பெண்டாட்டி. அதோ அந்த மரங்கள் எல்லாம் காற்றிலாடுகின்றனவே, அவைகளும் அதற்குப் பெண்டாட்டிதானோ?"

ல: "புருஷர்கள் எப்பொழுதும் பொல்லாதவர்கள்தானே. அவர்களை நம்பப்படாதல்லவா. அதோ பாருங்கள், காற்று அந்த மரத்தைப் போய் முத்தமிடுகிறது. அந்த மரம் 'நன்றாயிருக்கிறது! எல்லாரும் இருக்கிறபோதுதான் முத்தமிடுகிறதாக்கும்?' என்று கொஞ்சம் கசுகசுவென்று சலித்துக்கொள்வதாகப் பாசாங்கு பண்ணுகிறது."

ஸ்ரீநி: "ஆமாம் ஸ்திரீகளுக்கு எப்பொழுதும் பாசாங்கு பண்ணுகிறதுதானே தொழில். மாமாலக்காரிகள், சேலை கட்டிய மாதரை நம்பினால்'—"

என்று சொல்லி முடிக்குமுன் குபீரென்று ஒரு அலை சிதறி ஸ்ரீநிவாசன்மேல் ஜலத்தை வாரித் தூவிற்று. உடனே லட்சுமி தன் வஸ்திரத்தால் அவன் முகத்தைத் துடைத்து விட்டு, "இனிமேல் ஸ்திரீகளை வையாதேயுங்கள். வேணும், நன்றாய் வேணும்; பெண்டுகளைப் பழிக்கலாச்சா! திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை" என்றாள்.

ஸ்ரீநி: "போக்கிரி சமுத்திரம். அதிகப்பிரசங்கி சமுத்திரம். புருஷனுக்கு அடங்காத பெண்டாட்டிபோல சதா கரையிலே மோதிக்கொண்டிருக்கிறது."

ல: "ஆனாலும் இந்தச் சமுத்திரத்துக்கு நிரம்பக் கொழுப்புத்தான். உங்களைப்போலச் சாதுவாக இருக்கப்படாதா."

ஸ்ரீநி: "அகஸ்தியர் ஒருதடவை முழுவதையும் ஆசமனீயம் பண்ணித் தீர்த்துவிட்டார். ராமர் ஒரு தடவை வயிற்றெரிச்சல் தீர அவமானம் பண்ணிவிட்டார். அப்படியிருக்கிறதிலேயே இந்தப் பாடாயிருக்கிறது."

ல: "ஏன் அதற்கு முன்னாலேயே தேவர்களும் ராட்சதர்களுமாக இதனிடம் இருக்கிறதை யெல்லாம் கடைந்து எடுத்துவிடவில்லையோ! சந்திரன், லட்சுமி எல்லாவற்றையும் பறிகொடுத்த இந்தத் தரித்திரக்கடலுக்கு இத்தனை கர்வம்

வேண்டி யிருக்கிறதா? நீங்கள் வந்திருக்கிறீர்களென்று கொஞ்சமாவது மதிப்பிருக்கிறதா பாருங்கள்.''

ஸ்ரீநி : "ஓஹோ! சரிதான், சமுத்திரத்தைச் சொல்லக் குற்றமென்ன, அதனுடைய லட்சுமி நீ வந்துவிட்டா யல்லவோ, அந்த சந்தோஷமா அதற்கு? அப்படிச் சொல்லு. இந்த அமர்க்களத்தில் என்னை எங்கே அது லட்சியம் பண்ணப் போகிறது. மேலும் எத்தனையோ பேர்கள் அதில் ஸ்நானம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய பாவமெல்லாம் அதற்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. அந்தப் பாவத்தையெல்லாம் போக்குகிறதற்கு பதிவிரதா ஸ்திரீகளுடைய பாததூளிதான் மருந்து. பதிவிரதா சிரோமணி நீ வந்திருக்கிறாய். அது தான் அதற்கு இன்றைக்கு இவ்வளவு ஆஹ்லாதம்!''

ல : "அதற்கு ஒரு அலையாவது என்கிட்ட வந்ததா! என் மேலே ஒரு பொட்டு ஜலம் காட்டுங்கள். நீங்கள் சொல்லுகிறபடியில்லை. பிரகலாதனை இரணியன் சமுத்திரத் திலே தள்ளினபோது சமுத்திரம் அவனைத் தாங்கினதே, எதற்காக? அவன் மகா புண்ணியசாலி, அவனை யண்டினால் பாவமெல்லாம் போய்விடும் என்று. அதுபோல தாங்கள் ஐயர்வாள் இப்பொழுது விஜயம் பண்ணியிருக்கிறீர்கள். ஏகபத்தினி விரதர், போஜ ராஜாவுக்கு இரண்டாவதாகத் தங்களைத்தான் சொல்ல வேண்டும். அதுதான் தங்களைத் தொடுவதற்குச் சமுத்திரம் இவ்வளவு ஆத்திரப்படுகிறது. தொட்டாய் விட்டது. இப்பொழுது அலைகளெல்லாம் 'தேன்குடித்த நரி படுகிறபாடு' படுகிறது.''

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே ஒரு பெரிய அலையானது படையெடுத்து யுத்தத்துக்கு வரும் அரசனைப்போலக் கோஷித்துக்கொண்டு இவர்களைத் துரத்தி வர இவர்கள் ஓடினார்கள். பிறகு அவர்கள் கைகோர்த்துக் கொண்டு திரும்பி ஜெல்லிக்கட்டில், 'நின்று குத்திக்காளை' யுடன் விளையாடுவதுபோல அலைகளுடன் துரத்தும்போது ஓடி, ஓடும்போது துரத்தி, விளையாடினார்கள். பிறகு சிறு கட்டை ஒன்று அகப்பட, அதை ஜலத்திலெறிந்து 'எனக்கு வேண்டாம் பூசினிக்காய், எனக்கு வேண்டாம் பூசினிக்காய்'

என்ற கதையாய் அலைகள் அதை மேட்டில் போட, இவர்கள் அதை மறுபடி ஜலத்தில் போட்டு ஒருவரோடொருவர் போட்டி போட்டு விளையாடினார்கள். இப்படி ஓடிக் களைத்து வீட்டுக்குத் திரும்பவிருக்கும் சமயத்தில் கடலோசை அவர்களுடைய காதில் தீர்க்கமாக நுழைந்தது. இதற்குமுன் தங்களுடைய சொந்த ஆரவாரக் கொதிப்பினால் கடலின் ஆரவாரத்தை அவர்கள் முழுதும் கவனித்து அறியவில்லை. இப்பொழுது அவர்கள் ஆடிப்பாடி அமர்ந்திருந்ததனால் இடைவிடாமல் இம்மூட உலகத்துக்கு ஏதோ ஒரு அரிய பெரிய தத்துவார்த்த ரகசியத்தை உபதேசித்துக்கொண்டிருக்கிறாற் போன்ற கடலின் ஓசையைக் கிரஹித்து அதன் அர்த்தத்தையும் அவர்கள் அறியலாயிற்று.

லட்சுமி "இருங்கள், இருங்கள், இந்தச் சமுத்திர ஓசையைக் காது கொடுத்துக் கேட்போம்'' என்று சொல்லி தன் முழு மனதையும் செலுத்திக் கவனித்தாள். ஸ்ரீநிவாசன் அப்படியே செய்தான். கடலோசை விடபுருஷர்களின் விளையாட்டரவமல்ல; வாலிப ஸ்திரீகளின் வம்புக் கூப்பாடல்ல; இனிய வீணையாதிகளின் கானம் அல்ல; வெற்றித் தம்பட்டத்தின் ஓசையுமல்ல. அந்தக் குரலில் களியாட்டத் தொனி கிடையாது; சோக ரசம் உண்டு. ஆனால், புத்திரனை இழந்த பிதாவின் சோகம், புருஷனை இழந்த மனைவியின் சோகம் முதலிய சோகங்களுக்கும் அதன் சோகத்துக்கும் சம்பந்தமில்லை. புலையன் வயிற்றிற் பிறந்து "தஸ்மாத் ஜாக்கிரத ஜாக்கிரத' என்று பறையறைந்த புண்ணிய புருஷருடைய இரக்கங் கலந்த சுயஞாபகமற்ற சோகத்துக்கும் 'சுகமற்ற இப்பாழுலகத்தில் பந்துக்களையும் கொன்று சுகமனுபவிக்கக் கருதுவார்களா' என்று சோகித்த அர்ச்சுனனுடைய சோகத்துக்கும் காம்பீரிய தன்மை கடலோசையின் சோகத்துக்கும் நிரம்ப நெருக்கமான சம்பந்தமுண்டு. ஆனால் அவர்களுடைய பறையோசையையும் குரலோசையையும் போன்று சிறுத்திராமல் அழிவற்று, ஆகாயமட்டுமளாவி அநேக ஆயிரம் சிரசுகளையுடையதாய் எள்ளருந்திசைகளோடி பரமாத்வை மூர்த்திகரித்து நின்றாற்போல் நிற்கும் ஹிமோத்பர்வதமானது

திடீரென்று ஒருநாள் தனது மௌனப் பிரசங்கத்தை நிறுத்தி வாய்திறந்து பேசினால் எப்படியோ அப்படிப் பெரிய, கம்பீர மான, பொருள் நிறைந்த, வேத ரகசிய தத்வார்த்தத்திற்குத் தக்கதோர் குரலுடனே கடலானது நம்முடன் இடையறாது வசனிக்கிறது. ஸ்ரீநிவாசனும் லட்சுமியும் காது கொடுத்துக் கவனிக்கவே, அவர்களுடைய இயற்கைக் குணத்தினாலும், அவர்கள் அப்பொழுது அடைந்திருந்த சமனத் தன்மையினா லும் அக்கடலோசையின் ரகசியார்த்தம் அவர்கள் இருவருக் கும் ஏக காலத்தில் தொனித்தது. தொனிக்கவே அவர்கள் "கடவுளின் மகிமையே மகிமை, ஆஹா!" என்று வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் சொல்லி ஆனந்தித்தார்கள். அப்பொழுது லட்சுமி "என்ன கம்பீரம், என்ன விஸ்தீரணம்! அதில் எத்தனை கோடி ஜீவ ஜந்துக்களிருக்கின்றன? அதுவே தனியாக ஒரு உலகம் போலிருக்கிறது. அது ராத்திரிகூட தூங்காதோ?" என, ஸ்ரீநிவாசன், "சுவாமிக்குத் தூக்கம் உண்டோ! இதுவும் அவரைப் போலவே (மாயையாகிய காற்றினால் அலைகளை) சிருஷ்டிப்பதும் அழிப்பதுமாயிருக் கிறது. நாம் கடைசியில் ஈசுவரனைப் போய்ச் சேருவதுபோல அலைகளும் சமுத்திரத்தில் கலக்கிறது" என்று அத்வைதம் பேசிய பிறகு அவன் "இன்னொரு ஆச்சரியம் பார். இந்த அலைகள் பிறப்பதும், குதிப்பதும், சிரிப்பதும், ஓடுவதும், ஒன்றையொன்று அடிப்பதும், முட்டுவதும், மோதுவதும், இறப்பதுமே தொழிலாயிருக்கின்றன. இவைகளுடைய வீணாரவாரத்தினால் விளையும் கடைசி யோசையோ இவை களுடைய சிரிப்பு விளையாட்டுக்கு முற்றும் விரோதமாய் 'ஐயோ ஏன் இப்படி வீணாகக் கூப்பாடிட்டுக் கெட்டுப் போகிறீர்கள்!' என்று சொல்லுவதுபோல் சோகத் தொனியை உடைத்தாயிருக்கிறது. இப்படித்தான் உலக வாழ்க்கையும்!" என்றான்.

லட்சுமி: "இப்படித்தான் மனிதனும் பிறந்து, சிரித்து, அழுது, சண்டை போட்டு ஆடிப்பாடிக் கடைசியில் அமரு கிறது. இங்கே ஒரு ஆள் இருந்தானே என்னடா மிச்சம் என்றால், ஒரு பிடி சாம்பல். அதையும் காற்று ஒருமூச்சில் வாரிக்

கொண்டு போய்விடுகிறது. 'ஏனடா இந்த விருதாச்சண்டை, இதில் உனக்கென்ன மிச்சம் மிஞ்சுவது, அவர் ஒருவர்தான்; போய் அவரைத் தேடு' என்றும்,

" நீரில் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று''

என்றும் இந்தச் சமுத்திரம் நமக்குச் சொல்லுகிறுற் போலிருக்கிறது'' என்று சொல்ல இருவரும் சிறிதுநேரம் மௌனமாயிருந்தனர்.

ஸ்ரீநிவாசன், ''ஏது பெரிய வேதாந்தியாகப் போய்விட்டாயே'' என்று அவளைத் தட்டிக்கொடுக்க, தன்னைத் தட்டிக்கொடுத்த கைக்கு அவள் ஒரு முத்தம் கொடுத்தாள். இப்படி விளையாடிக்கொண்டு இவர்கள் வீடு வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் போய்ச் சேர்ந்த பின்னடியிலேயே தபால்காரன் முத்துஸ்வாமியய்யர் பெயருக்கு ஒரு அவசரத் தந்தி கொண்டுவந்தான். முத்துஸ்வாமியய்யர் எங்கேயோ வெளியே போயிருந்தார். தந்தியோ 'அவசரத் தந்தி'; சிறுகுளத்திலிருந்து வந்திருக்கிறது. கமலாம்பாள் 'என்னமோ ஏதோ நீங்கள் உடைத்துப் பாருங்களேன்' என்று மாப்பிள்ளையைப் பார்த்துச் சொன்னுள். அதை உடைத்துப் பார்க்கிறவரைக்கும் ஒருவருக்கும் சமாதானம் இல்லை. ஸ்ரீநிவாசன் அது எப்பேர்ப்பட்ட தந்தியோ, நாம் உடைக்கலாமோ உடைக்கக்கூடாதோ என்று நெடுநேரம் ஆலோசனை செய்தான். அகத்துக்கு உள்ளே தந்தி வந்துவிடுகிறது என்ருல் அப்புறம் என்ன பண்ணுகிறது, ஸ்ரீநிவாசனே கடைசியாய் அதை உடைக்க எத்தனித்தான்.

22

துர்மரணமும் சகோதர சோகமும்

வந்த தந்தியை உடைத்துப் பார்க்கும்வரை அவரவர் பிராணன் அவரவரிடத்திலில்லை. அதை உடைத்துக் கொண்டிருக்கும்போதே முத்துஸ்வாமி அய்யர் வந்து விட்டார். அந்தத் தந்தியில் 'தம்பி சுப்பிரமணியய்யர் அபாயமாய் அசௌக்கியம், உடனே வரவும்' என்று எழுதியிருந்தது. அந்த சமாசாரம் இடி விழுந்தால் எப்படியோ அப்படியிருந்தது. முத்துஸ்வாமி அய்யர் 'ஐயையோ இருக்கிறது அவன் ஒருத்தன், அவனும் போய்விட வேணுமா' என்றழுதார். அவருக்குச் சுப்பிரமணியய்யர் ஒரே தம்பி. ஒருவர்மேலொருவர் நெடுநாள் நிரம்ப அன்பாக இருந்தார்கள். கடைசி காலத்தில் கலகக்காரி பொன்னம்மாள் மித்திரபேதம் செய்தாலும் சிறுகுளத்தை விட்டுப் பட்டணத்துக்காக ரயிலேறும்போதே அதெல்லாம் முத்துஸ்வாமி அய்யருக்கு மறந்துபோய்விட்டது. 'அவன் என்ன செய்வான் பாவம்! அந்த ராட்சஸி கையிலகப்பட்டுப் பாம்பின் வாய்ப் பட்ட தவளைபோல் தவிக்கிறான். அவனைக் கோபிக்கிறதில் பயனென்ன' என்பது அவர் எண்ணம். தந்திவந்த அன்று சாயந்திரம்தான் முத்துஸ்வாமி அய்யர் தன் தம்பிக்காக ஒரு அழகிய விலையுயர்ந்த பனாரிஸ் பட்டும், சாரதா படமொன்றும், இன்னும் சில சில்லரை சாமான்களும் வாங்கி வந்திருந்தார். தந்தி சமாசாரம் காதில் பட்டவுடன் அவர் அவைகளை வீசி யெறிந்துவிட்டு 'ஐயோ என்னை இப்படியெல்லாம் சோதிக்கவேண்டுமா தெய்வமே' என்று அதிகமாய்த் துக்கித்தார். கமலாம்பாள் முதலானவர்கள் அவரை "உடம்பு சௌக்கியமில்லை யென்றுதானே சொல்லியிருக்கிறது. அச்சானியம் போல அழாதேயுங்கள். சுவாமி நம்மை இவ்வளவு சோதனை பண்ணினது போதாதா! ஒன்றும் வராது, துக்கப்படாதேயுங்கள்" என்று தேற்றத் தேற்ற அவருக்குத் துக்கம் அதிகரித்தது. பிறகு அவராக ஒய்ந்து மனதாறக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு 'இதென்ன துக்கம்?

அச்சானியம் போல' என்று தன்னையே சமாதானம் பண்ணிக் கொண்டார். இது நிற்க.

சிறுகுளத்தில் ஒருநாள் பாதிராத்திரிக்கு மேலாய் விட்டது. ஊரெல்லாம் விளக்குகளை யணைத்துவிட்டு எல்லோரும் தூங்குகிறார்கள். அமாவாசை இருட்டு. ஊரெங்கும் பயங்கரமான நிசப்தம் குடிகொண்டிருக்கிறது. ஆகாயத்தில் மேகங்கள் இடையிடையே அடர்ந்து குகைகள் நெருங்கிய கணவாய்களைப் போல பயங்கரமாயும் விகாரமாயும் இருந்தன. மரங்களெல்லாம் இருண்டு மௌனமாயிருந்தன. சுப்பிரமணியய்யருடைய கிரஹத்தில் மாத்திரம் கூடத்தில் ஒரு விளக்கு எரிகிறது. அதற்கருகில் சுப்பிரமணியய்யர் படுத்துக்கொண்டிருக்கிறார், அவருக்குத் தலை கழுத்தில் தரிக்கவில்லை; படுக்கையில் உடல் தரிக்கவில்லை; பேச முடியவில்லை. தலை ஓயாது புரளுவதும், கண்கள் மருண்டுவிழிப்பதும் வாய் முக்குவதும் பிதற்றுவதுமாய் அவர் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தார். அருகில் பொன்னம்மாள் மட்டும் உட்கார்ந்திருக்கிறாள். மற்றவர்களெல்லாம் அயர்ந்து நித்திரை செய்கிறார்கள். அவர் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்த பொன்னம்மாளைக் கையைப் பிடித்துக் கொண்டு, அதிசிரமத்துடன் "பாவி, அடிபாவி, குடியைக் கெடுத்துவிட்டாயே, ராட்சஸி! மோசம் பண்ணிவிட்டாயே ராட்சஸி! சண்டாளி! தோஷி! கொன்று போட்டாயே! இதற்காகவா நான் உன்னைக் கட்டினேன்! எத்தனை மருந்து உருண்டையாய் விழுந்தது. மேலெல்லாம் செக்கில் வைத்துத் திரிப்பது போல் வலிக்கிறதே பாவி! சுந்தரத்துக்குக் கல்யாண பண்ண வேணும், குட்டிகளுக்குச் சாந்தியாகவேணும்; 'ஐயோ' பிராணன் போகிறதே, பேசமுடியவில்லையே" என்று அழுதுகொண்டு சொல்லிச் சற்று மௌனமாயிருந்து பிறகு பொன்னம்மாளுடைய இரண்டு கைகளையும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு திடீரென்று எழுந்திருந்து பிணம் விரைத் தாற்போல் விரைத்து உட்கார்ந்தார். கண்களில் விழிபிதுங்கி நின்றன; தலைமயிர் அவிழ்ந்து அலங்கோலமாய்க் கிடந்தது, பல்லை நறநற வென்று கடிக்கிறார், முகத்தைக் கோரமாய்

வலிக்கிறார். பொன்னம்மாளைக் கொன்று போடுவார் போலப் பார்க்கிறார். பொழுதோ நடுநிசி. அவளோ தனியாயிருக்கிறாள். சுப்பிரமணியய்யர் இவ்விதம் திடீரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு 'துரோகி, கொலைக்காரி, சண்டாளி' என்று பல்லைக் கடித்துக் கொண்டு உரக்கக் கதறித் தன் கையால் அவள் முகத்தில் வெகு பலமாய் இடித்தார். அவர் முகம் அந்தச் சமயத்தில் வெகு கோரமாயும், பயங்கரமாயுமிருந்தது. பொன்னம்மாளுக்குத் தேகம் முழுவதும் வெட வெட என்று நடுங்குகிறது. ஏதோ சொல்ல வாயெடுத்த சுப்பிரமணியய்யர் சொல்லமாட்டாமல் முகத்தை வலித்துக்கொண்டு படீரென்று கீழே விழுந்தார். பொன்னம்மாளோ பயத்தினால் சித்தம் ஸ்வாதீனமில்லாது கூக்குரலிட்டாள். தான் முன்னே மருந்து கொடுத்ததுதான் இவ்வளவுக்கும் காரணம் என்று தெரிந்தது. புருஷன் இனிப் பிழைக்கமாட்டாரென்று அவள் நன்றாய் அறிந்தாள். விதவை முட்டாக்கு தன் தலையில் வந்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது. சுப்பிரமணியய்யர் எழுந்து உட்கார்ந்து அவள் முகத்திலிடித்தது அவள் மனதில் சாகும்வரை மறவாதபடி நிரம்ப ஆழமாய்ப் பதிந்தது. தான் தன் புருஷனை வசிபம்செய்ய வேண்டுமென்று கொடுத்த மருந்து தனக்கு வினையாய் வந்ததைக் குறித்து வருந்துகிறாள். ஐயோ பாவம்! எத்தனை ஸ்திரீகள் தங்கள் புருஷரை வசியம் செய்ய வேண்டுமென்ற துராசையுடனே மருந்தைக் கொடுத்துக் கொன்றிருக்கிறார்கள். எத்தனை புருஷர்கள் இந்த விஷமருந்தினால் பயித்தியம் பிடித்தலைந்திருக்கிறார்கள். கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாற்போல் தாங்கள் ஒன்று நினைத்து மருந்தைக் கொடுக்கிறது. அது ஒன்றைக் கொண்டு வந்து விடுகிறது. பின்வரும் கேட்டை நினையாமல் புருஷனை மயக்க வேண்டுமென்று எத்தனிக்கும் துஷ்டப் பெண்களின் கதி பொன்னம்மாள் கதி போலத்தான் ஆகுமென்பதற்குத் தடையேயில்லை. கீழே விழுந்த சுப்பிரமணியய்யர் அப்படியே அயர்ந்து மூர்ச்சை போனார். பொன்னம்மாள் தனியே அழுது கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். இன்ன பண்ணுவது என்று தெரியவில்லை. சித்தப்பிரமை கொண்டு மயங்குகிறாள். சுப்பிரமணியய்யர் எழுந்து உட்கார்ந்து முகத்தில் இடித்தது

அவள் ஞாபகத்தைவிட்டுப் போகாமல் அவள் நித்திரை செய்வதையும் தடுத்தது. விடிய நாலு நாழிகைக்கு சுப்பிரமணியய்யர் விழித்துக்கொண்டு பொன்னம்மாளைப் பார்த்து, "உன்னை நான் ஸ்திரீயென்று நினைத்திருந்தேன்! நீ எனக்கு எமனாக முடிந்தாயடி! எமனாக முடிந்தாய், நீ எனக்குக் கொடுத்த சுகத்துக்கு இப்பொழுது வட்டியும் முதலுமாய் என் உயிரையே பறித்துக்கொண்டுவிட்டாய். (பல்லைக் கடித்துக் கொண்டு) அந்தப் பாவத்தில் நீ போ. இந்த ஜன்மத்தோடு நம்மிருவருக்கும் தீர்ந்தது. என்னண்ணாவுக்கும் எனக்கும் ஆகவிடாமல் அடித்தாயே. ஐயோ அவனைப் பார்க்கவேணுமே, அண்ணாவைப் பார்க்க வேணுமே, என்னண்ணாவைப் பார்க்க வேணுமே! அவனுக்குத் தந்தியாவது கொடுத்து வரவழைக்க வேணுமே" என்று சொன்னார். இதற்குள் அவருடைய பந்துக்கள் சிலர் அவரைப் பார்க்க வந்தார்கள், அவருடைய தேகஸ்திதியைப்பற்றி விசாரித்துவிட்டு அவர்கள் உடனே பட்டணத்துக்கு ஒரு தந்தி கொடுத்தார்கள்.

சுப்பிரமணியய்யர் 'அண்ணா எப்பொழுது வருவார்?' என்று ஒரு மணிக்கு ஒருதடவை கேட்டுக்கொண்டிருந்தார். மறுநாள் அவருக்குத் தேகத்தில் உபாதி அதிகமாயிற்று. வயிற்று வலியும் கை, கால் குடைச்சலும் அவரைச் சஹிக்க முடியாதபடி துன்பப்படுத்தின. அவர் படுக்கை முழுவதும் புரண்டு உருண்டு வருத்தப்படுகிறார். ஊர் முழுவதும் வந்து கூடியிருக்கிறது. சிலர் கால் பிடிக்கிறார்கள்; சிலர் மருந்து தயார் செய்கிறார்கள்; சிலர் விசிறி போட்டு விசுறுகிறார்கள்; சிலர் அழுகிறார்கள்; சிலர் தேற்றுகிறார்கள்; சிலர் பொன்னம்மாளைத் துக்கம் விசாரிக்கிறார்கள். கிராமங்களில் இவ்வித சமயங்களில் ஜனங்கள் எல்லாம் ஒருவரோடொருவர் போட்டிபோட்டு உதவி செய்வதை யாரும் பார்த்திருக்கலாம். ஒரே வீட்டில் குடியிருக்கும் இரண்டு குடும்பங்களுள் ஒரு குடும்பத்தில் யாராவது இறந்துபோனால், இங்கேயிருந்து அழக் கூடாது என்று மற்றொரு குடும்பத்தாரும் வீட்டுக்காரனும் சேர்ந்து சொல்லுகிற நாகரிகமான பட்டணவாசத்திய வழக்கம் பட்டிக்காட்டு ஜனங்களுக்குத் தெரியாது. சுப்பிரமணி

யய்யருக்கு வரவர உபத்திரவம் அதிகம் ஆகிறது. 'அண்ணு வந்துவிட்டாரா' என்று நிமிஷத்துக்கு நிமிஷம் கேட்கிறர். முத்துஸ்வாமியய்யர் வருவதற்காக ரயிலிலிருந்து ஊர் வரையில் தபால் மாடுகள் தயாராய் வைக்கப்பட்டிருந்தன. இனிமேல் பிழைக்கிறது துர்லபம் என்று எல்லோருக்கும் தெளிவாயிற்று. முத்துஸ்வாமியய்யர் வந்து சேர வேண்டுமே என்று எல்லாரும் வழி பார்க்கிறர்கள். சுப்பிரமணியய்யருக்குப் பேசக்கூடத் திராணியில்லை. நிரம்ப வருத்தப்படுகிறர். அண்ணு வந்தாரோ என்று கேட்கத் தலையெடுக்கிறர். சுற்றியிருப்பவர்கள் என்ன சொல்லுவார்கள், 'வருகிற சமயமாய் விட்டது, சீக்கிரம் வந்துவிடுவார், ராந்தல் சுளுந்து எல்லாம் அனுப்பியிருக்கிறது, இதோ வந்துவிடுவார்' என்று தைரியப் படுத்துகிறர்கள். நிமிர்த்திய தலையை அவர் கீழே போட்டுக் கொண்டு அழுகிறர், மறுபடி நிமிர்த்துகிறர், மறுபடி கீழே போடுகிறர். இவ்விதம் இருக்கிறபோதே முத்துஸ்வாமியய்யர் வந்துவிட்டார் என்ற சமாசாரம் பரவியது. ஊருக்கு நாலு மைலுக்கப்பால் அவர் வரும்போதே அவர் வருகிற செய்தி இங்கே வந்துவிட்டது. முத்துஸ்வாமியய்யர் "அடித்து முடுக்கு; சீக்கிரம் விடு, ஓட்டத்தில்தானே விடு" என்றிப்படி வண்டிக்காரனுக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் தாக்கீது கொடுத்துக்கொண்டு வந்தார். ஊருக்கு ஒரு மைலுக்குள் வந்தவுடன் வண்டியைவிட்டு இறங்கி தபால் மாடுகளைக் காட்டிலும் வேகமாய் ஓடி வந்தார். 'இதோ வந்துவிட்டார், அதோ வந்துவிட்டார்' என்று ஊரெங்கும் செய்தி பரவியது. சந்தைப் பேட்டைக்கு வந்துவிட்டார். இரண்டு நிமிஷம் ஆயிற்று. சந்தைக்கு வந்துவிட்டார். இன்னும் ஒரே நிமிஷம்; வீட்டுக்குள் வந்தார். வந்ததுதான் தாமதம்! சுப்பிரமணியய்யரிடம் அலறிக்கொண்டு போய் 'அப்பா சுப்பிரமணியம்' என்று அவரைக் கையாலெடுத்துக் கட்டிக்கொண்டார். அதுவரையில் பேசமாட்டாமல் இருந்த அவர், அண்ணுவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு "அண்ணு வந்தாயா! அண்ணு, நான் செத்துப் போகப்போகிறேன். உனக்கு நான் ரொம்பப் பொல்லாதவனுகப் போனேன். எல்லாவற்றையும் மறந்துவிட வேணும்; மன்னித்துவிட வேணும்; குழந்தைகளைப் பார்த்துக்கொள்.

இனிமேல் என் பளுவு விட்டது. ஐயோ உன் முகத்தைப் பார்ப்போம் அண்ணு (அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்துக் கோண்டு), ஐயோ அந்தப் பாவி முண்டை சொல்லைக் கேட்டு உன்னுேடே பகைத்துக்கொண்டேனே, அதெல்லாம் மறந்துவிடு அண்ணு. நாம் முன்னே இருந்ததை நினைத்துக்கொள் அண்ணு. அண்ணு, உன்னைவிட்டு நான் போகிறேனே, 'ஐயையோ!" என்று அவரைக் கட்டிக்கொண்டு 'கோ' என்று அழுகிறுர். முத்துஸ்வாமி அய்யர் அதைவிட அழுகிறுர். சுற்றியிருந்த வர்கள் எல்லாரும் அழுகிறுர்கள். ஒருவருக்காவது சஹிக்கக் கூடவில்லை. மறுபடியும் சுப்பிரமணியய்யர் முத்துஸ்வாமி யய்யரைப் பார்த்து "ஐயோ அண்ணு, எனக்கு அப்பா, அம்மா, அண்ணு எல்லாம் நீதானே, உன்னைவிட்டுப் போகிறேனே. என்னமாகப் போவேன் அண்ணு; சஹிக்கமாட்டாயே அண்ணு. ஒரு தம்பி, நானும் போய்விட்டால் அம்பி அம்பி என்று அலறுவாயே அண்ணு, அழாதே அண்ணு" என்று சொல்லி 'கோ' என்று அழுகிறுர். முத்துஸ்வாமியய்யர் "ஐயையோ என் சுப்பிரமணியமே, உன்னை நான் இப்படியா பார்க்கவேணும். இதற்காகவா வந்தேன்! அப்பா தெய்வமே, உனக்கிது தர்மமா! ஐயோ!" என்று வாய்விட்டுக் கதறுகிறுர். இப்படி ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு அழ, கமலாம் பாள், லட்சுமி, ஸ்ரீநிவாசன் இன்னும் அங்கிருந்தவர்கள் எல்லோரும் மூலைக்கொருவராய் நின்று அழுகிறுர்கள். பொன் னம்மாள் மாத்திரம் அழவில்லை. அவளுக்குச் சித்தஸ்வாதீன மில்லைபோல் காணப்பட்டாள்; எங்கேயோ வெட்டவெளி யைப் பார்க்கிறுள்; 'என்ன விழி விழிக்கிறதடி, கண்ணைப் பார் பயமாயிருக்கிறது. அடிக்க வருகிறதடி' என்றிப்படித் தனக் குள்ளே சொல்லிக்கொள்ளுகிறுள். யாராவது போய் 'பொன் னம்மாள், பாவி, இப்படி வந்து விட்டதேயடி' என்றுல், சற்று நேரம் அவர்கள் சொல்வது அவள் காதில் படுகிறதில்லை. பிறகு "என்ன சொன்னுய், என்னவோ யாரார் என்ன பூஜை பண்ணினுர்களோ அதுதானே கிடைக்கும்" என்று சொல்லி யழுவாள். அவள் ஏதோ ஒரு மாதிரியாக இருப்பதாக மட்டும் எல்லாருக்கும் பட்டது. ஆனுல் அது இன்னதென்று ஒருவரும் அறியவில்லை. சுப்பிரமணியய்யர் அழுதுகொண்டே

பிராணனை விட்டார். முத்துஸ்வாமியய்யர் மூர்ச்சை போட்டு விழுந்தார். ஊரெல்லாம் ஒரே மொத்தமாய் அழ முத்துஸ்வாமியய்யர் மூர்ச்சை தெளிந்து எழுந்தபிறகு செய்ய வேண்டிய காரியங்களெல்லாம் விதிப்படி நடத்தப்பட்டன.

23

திரவிய நஷ்டமும் பிரிவும்

இவ்விதம் முடிந்தது சுப்பிரமணியய்யருடைய சரித்திரம். அவர் ஏன் இவ்விதம் இறந்திருக்க வேண்டும் என்று சிலர் கேட்கலாம். சரித்திரத்தை நாம் நடந்தபடி எழுத வேண்டுமேயல்லாது மாற்றுவதற்கு நமக்கு என்ன அதிகாரமிருக்கிறது? நம்முடைய திருப்திக்காக இவ்வுலகம் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதுபோல் காணவில்லை. உலகம் நமது ஆக்ஞைக்குள் அடங்குமாயின், வாலிபர்கள் இறப்பதேன், விதவைகள் பெருப்பதேன்? வீடுகளெங்கும் வியாதிகள் புகுந்து 'பூவுதிரப் பிஞ்சுதிரக் காயுதிரக் கனியுதிர' என்றபடி ஈவு இரக்கமில்லாது எங்கும் நிறைந்த பொருளாய் எமன் உலாவுவதேன்? பச்சைப் பாம்புகள் இலைகளோடிலைகளாய்க் கிடந்து வேற்றுமைப்படாது வாழும் ஓர் அடர்ந்த விருட்சம் போல பாப புண்ணியங்கள் பேதாபேதமின்றிப் பின்னிக் கிடக்குமிப் பாழுலகின் இன்பாதிகளை அற்பமெனக் கருதாது அவற்றில் ஆசைவைத்து ஓர் நாசகாலியின் பாட்டைக் கேட்டுப் பன்றியாய் மாறிய மானிடர்கள்போல் உணர்ச்சி, உணவு, உற்பத்தியாதிகளில் அவ்வுருவே அடைந்த அறிவீனர்களாகிய நாம் நமக்குளதோர் அரைக்கணத்துள் பண்ணும் பாபங்கள் எத்தனை? எண்ணும் எண்ணங்கள் எத்தனை? சொல்லும் துர்சொற்கள்தான் எத்தனை? இவ்விதம் செய்யத்தகாதன யாவும் செய்து கூட்டிய குற்றவியலை அனுபவிக்கப் புகுந்ததோர் சிறைச்சாலையாகிய இவ்வுலகின்கண்ணும் சிற்சில சமயங்களில் யதார்த்தமான அன்பானது தன்னினத்தை விட்டு வழிதப்பி வந்த மான் பேட்டைப் போல

வந்துவிடுகிறது. அவ்வாறு வந்தவிடத்து அது மனிதனு லாவது, விதியினுலாவது வேட்டையாடப்படாது போவது இல்லை.

சுப்பிரமணியய்யருக்கும் முத்துஸ்வாமியய்யருக்கும் இருந்த சகோதர வாஞ்சையானது நெடுநாள் யாதொரு குறைவுமின்றி நீடித்திருக்கக் கடவுளுக்குச் சம்மதமில்லாமற் போயிற்று. முன்பேயே விரக்தியடைந்திருந்த முத்துஸ்வாமி யய்யருக்கு மனிதருடைய கொடுமையைக் காட்டிலும் மனிதர்கள் நல்லவர்கள்தான் என்று அவர் சிற்சில சமயங் களில் தனக்குள்ளேயே சொல்லிக்கொள்வார். ஆயினும் இவ்வித துன்பங்கள் ஒருமித்து வருவது அவருக்கு இவ்வுலக இன்பதில் ஆசையை ஒருமிக்க வேண்டுமென்று கடவுள் அனுக்கிரஹம் போலவும் சிற்சில சமயங்களில் தோன்றும். 'நமக்குப் பிள்ளையேது, குட்டியேது, தம்பியேது, மனைவியேது; ஏதோ கடலில் காற்றினுல் துரத்தப்பட்ட இரண்டு நாணல்கள் சிலகாலம் ஒன்றையொன்று சேர்ந்திருந்தால் எப்படியோ அப்படித்தான் உலகத்தில் பந்துக்களும் மித்திரர் களும். எல்லாம் இந்திர ஜாலம், மாயை, அக்ஞானம்' என்று அவர் தன்னையே அடிக்கடி கண்டித்துக்கொள்ளுவார். 'அன்னை யெத்தனை யெத்தனை அன்னையோ, அப்ப னெத்தனை யெத்தனை யப்பனே, பெண்டி ரெத்தனை யெத்தனை பெண்டிரோ, பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ' என்று அவர் தன் மனதுக்குள்ளேயே அடிக்கடி பாடிக்கொள் வார். ஆனுல் உலக வியவகாரங்கள் அவரை முற்றும் விட்ட பாடில்லை. சுப்பிரமணியய்யர் சாகும் காலத்தில் தன் குழந்தைகளைத் தமையனிடம் ஒப்புவித்துப் போனுரல்லவா? முத்துஸ்வாமியய்யர் தன் தம்பியின் இச்சைக்கு ஏற்ப 'சுந்தரம், சுந்தரம்' என்று முன்னிலும் பதின்மடங்கு வாஞ்சையுடன் சுந்தரத்தைப் படிப்பு முதலிய விஷயங்களைப் பற்றி அடிக்கடி விசாரிக்கிறது; தம்பி கிரஹத்துக்கு வேண்டிய மற்ற காரியங்களை மேற்பார்க்கிறது; என்றிப்படிச் சிறிது காலம் செய்து வந்தார்.

பொன்னம்மாளுக்கு ஒரு தாயார் உண்டு. அவள் பொன்னம்மாளைக் காட்டிலும் குணவதி. அவளுக்குச் சங்கரி என்று பெயர். அவள் தொட்ட காரியம் ஒன்றும் துலங்காது பின்னால் இப்படித்தானிருக்கும் என்று அறிந்துதான் அந்த அம்மாளுக்குச் 'சம்கரிப்பவள்' சங்கரி எனப்பெயர் வைத்தார் களோ என்னவோ நாம் அறியோம். அவள் தன் மாப்பிள்ளை இறந்துபோன செய்தி கேட்டவுடனே பெண்ணுக்குத் துணை யாக வந்து சேர்ந்தாள். வந்து சில நாளைக்கெல்லாம் சுப்பிரமணியய்யருடைய ஏராளமான சொத்துக்கு அவள் தன்னையே 'திவான் ரீஜண்டாக' நியமித்துக்கொண்டு சகல காரியங்களையும் நடத்தத் தலைப்பட்டாள். அவளுடைய சுற்றத்தாருக்கு அன்று முதல் யாதொரு குறைவுமில்லை. ஒருவர் குடும்ப சஹிதமாய் மூன்றுமாதம், நான்கு மாதம் என்று இப்படி சிறுகுளத்தில் வந்து கூடாரமடித்துக்கொண் டிருந்தார்கள். முத்துஸ்வாமி அய்யருக்கு இந்தச் சொத்து இப்படி விரயமாகிறது சஹிக்கவில்லை. பிள்ளையில்லாத சொத்தா என்று கண்டிக்க எத்தனித்தார். தேவி சங்கரி எதிர்த்து யுத்தத்துக்குத் தலைப்பட்டாள். இப்படி யந்தத் தாடகை யுத்தத்தைத் தொடுக்கவே அவர் கொஞ்சம் பின் வாங்கினார். அதுகண்டு அந்த ராட்சஸி பின்னும் துணிவுற்று அவரால் சுப்பிரமணியய்யர் வீட்டு விஷயமாகக் கொடுக்கப் பட்ட ஒவ்வொரு உத்தரவையும் அப்பீலில் மாற்றிவிட்டாள். முத்துஸ்வாமியய்யர் சுந்தரத்தினிடம் அதிக அன்பு வைத் திருந்தார் என்று நமக்குத் தெரியுமே. அது மத்தியில் மங்கி யிருந்தபோதிலும் இப்பொழுது முன்னிலும் பதின்மடங்காய் அதிகரித்தது. அதைக் கண்ட சங்கரி சுந்தரத்தைத் தன் பெரிய தகப்பனாரிடம் போகவே கூடாதென்று கண்டித்து, தண்டித்து நிறுத்திவிட்டாள். முத்துஸ்வாமியய்யருக்கு இங்கே யிருந்து இந்த அற்பத்தனத்தையும், ராட்சஸத்தனத்தையும், கொடுமையையும் பார்த்துக்கொண்டு கஷ்டப்படுவதைக் காட்டிலும் உயிரை விட்டுவிடலாம், அல்லது இமயகிரிச் சாரலில் சென்று காஷாயந் தரித்து வாழலாம் என்று தோன் றிற்று. அவருக்கு உண்டான விரக்தி வைராக்கியத்தில் கமலாம்பாள் இடத்தில்கூட அருவை உண்டாயிற்று. அவள்

தன் புருஷ சிச்ருஷையில் குழந்தை போன துக்கத்தைக்கூட மறந்து இருந்தாள். இப்பொழுது அவள் என்ன உபசரித்தும் அவர் அவளை உதாசீனமாய் உதறியெறிந்தார். அவளுக்குத் தன் பர்த்தாவின் அன்புதான் ஆதாரமாயிருந்தது. அதற்கும் இப்பொழுது குறைவு நேரிட்டது. முத்துஸ்வாமியய்யர் சந்நியாசத்தில் விசேஷ சபலம் வைக்கத் தொடங்கினார். ஆனால் கமலாம்பாளைத் தனியே விட்டுப்போக அவருக்குச் சம்மதப்படாததால் அந்த நல்ல காரியத்துக்கு அவள்தான் தடையாயிருக்கிறதாக அவருக்குப் புத்தியில் பட்டது. அது முதல் அவர் அவளை ஒரு நாளும் இல்லாதபடி கொடுமையாய் நடத்த ஆரம்பித்தார். இவர் நடத்தையிப்படி மாறுபடுவதைக் கண்ட கமலாம்பாள் அதைத் திருத்தத் தன்னாலான மட்டும் முயன்றும் கூடாமல் தனக்குள்ளேயே துக்கித்து உருகினாள். அவள் அப்படி அவரை விட்டு ஒதுங்கித் தனக்குள்ளேயே வருந்திக் கொண்டிருந்ததைக் கவனித்த முத்துஸ்வாமியய்யர் 'அன்பாவது மண்ணாவது இந்தஉலகத்திலேயா! பார்! நம்மிடத்தில் அடிக்கடி ஓடி ஓடி வந்து கொண்டிருந்த கழுதை இப்பொழுது ஏன் என்றுகூட விசாரிக்கிறதில்லை. அப்படித்தான் இருக்கட்டும். நமக்கு நல்லதுதான். நாம் சந்நியாசம் வாங்கிக் கொண்டு புறப்பட்டு விடலாம்' என்று தன் மனதுக்குள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் பம்பாயிலிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் பட்டணம் போயிருந்தபொழுது ஓர் பெரிய வியாபாரத்தில் இறங்கினார். அது ஆதியில் அதிக லாபம் காட்டினபடியால் தன் நிலங்களையெல்லாம் விற்று அந்த வியாபாரத்திலேயே தன் சொத்து முழுவதையும் போட்டிருந்தார். அந்த வியாபாரத்துக்கு மூலஸ்தானம் பம்பாய். அன்று வந்த கடிதத்தில் அந்த வியாபாரம் க்ஷீணித்துப் போய்விட்டதென்றும், அவர் நம்பியிருந்த வியாபாரச் சங்கத்திற்கு அபாயம் வரும்போலிருந்ததென்றும், அவர் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும் கண்டிருந்தது. அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன் அவர் 'வருவதெல்லாம் வரட்டும், நாம் பண்ணுகிற அக்கிரமத்துக்கு

அவ்வளவும் வேண்டியதுதான். அவ்வளவு பணமும் போச்சா! நல்லது, நல்லது; போகிறதெல்லாம் போகட்டும்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு கமலாம்பாளைப் பார்த்து, "அடியே இனிமேல் எங்கேயாவது அவலிடித்தாவது, தட்டு வாணித்தனம் பண்ணியாவது பிழைத்துக்கொள். நான் போகிறேன்'' என, கமலாம்பாள் திடுக்கிட்டு திக்பிரமை கொண்டு நிற்க, "உனக்கும் நமக்கும் விட்டது'' என்று கடிதத்தை வீசியெறிந்து வேஷ்டி முதலியவற்றை யெடுத்து ஜாக்கிரதையாகக் கட்டத் துவக்கினர். கமலாம்பாள் அந்தக் கடிதத்தை யெடுத்துப் பார்த்துவிட்டு அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு அழுதாள். அவர் அவளை உதறி யெறிந்து விட்டு "பணம் போய்விட்டதென்று அழுகிருயல்லவா? அழு! இனிமேல் உனக்கும் எனக்கும் என்ன? நான் ஏழை! நீ எங்கே வேணுமோ போகலாம். நெய்க்குடத் தெறும்புகள். பணமிருந்தால் பெண்டாட்டி பிள்ளை யெல்லாம் உண்டு. 'இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்'' என, அவள் அவர் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கண்களில் பிரளயமாய் நீர் பெருக, "ஐயோ நான் என்ன தப்பிதம் செய்தேன். உங்களை விட்டால் எனக்கு என்ன கதியிருக்கிறது! எனக்குப் பிதாவும் நீங்கள், பர்த்தாவும் நீங்கள்; அண்ணன் தம்பி எல்லாம் நீங்கள்; எனக்குத் தெய்வமும் நீங்கள். ஐயோ நான் என்ன தப்பிதம் செய்தேன்; என்னை என்ன தண்டனை பண்ண உங்களுக்குச் சுதந்திரம் இல்லை! கத்தியெடுத்து என் கழுத்தை யறுங்களேன்; அப்பொழுதும் உங்கள் கையாலிறப்பதே மோட்சம் என்று நான் பிராணனைச் சந்தோஷமாய் விட மாட்டேனே. நீங்கள் ஒருநாளும் என்மேல் இப்படி யிருந்ததில்லையே! குழந்தை போனது போனதாக எனக்குத் தோன்றவில்லையே. உங்கள் முகமலர்ச்சியிலே நான் அதையும் மறந்து இருக்கிறேன். என்னை நீங்களும் உதறியெறிந்துவிட்டால் அப்புறம் நான் என்ன செய்வேன்? சொத்து அவ்வளவும் போனாலும் போகிறது. நமக்கு என்ன, பிள்ளையா, குட்டியா; சொத்து என்னத்துக்கு. நான் குடம் சுமந்து, அவல் இடித்து சம்பாதித்துப் போடுகிறேன். உங்களுடைய தற்கால சௌக்கியத்

துக்கு எப்பொழுதும் குறைவு வராமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். எனக்கு என்னத்துக்குக் காசும் பணமும்? உங்கள் அன்பு ஒன்று போதாதா? அதைவிட எனக்கு என்ன சொத்து பெரிது! ஐயோ! என்னை இப்படி உதறியெறிவது உங்களுக்குத் தருமமா? நான் ஏழை, பஞ்சை, அநாதை; உங்களை அண்டினேன்; காப்பாற்ற வேணும்'' என்று அவர் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தன் கண்ணீரால் ஸ்நானம் செய்விக்க, அவர் "இதென்ன கால்கட்டா யிருக்கிறது சனியன்'' என்று சொல்லி அவளைக் கையால் தூக்கி "என்னடி செய்யவேணுமென்கிறாய்?'' என்று அதட்ட, அந்த உத்தமி அவர் மார்பில் தானே சாய்ந்துகொண்டு தாரை தாரையாய் அழ, அவரும் உருகி அவளைக் கட்டிக்கொண்டு தானும் அழ ஆரம்பித்தார். பிறகு இருவரும் ஒருவரை யொருவர் தேற்றிக்கொண்டார்கள். வாடியிருந்த கமலாம்பாள் உடம்பு அன்று சந்தோஷத்தால் பூரித்தது. அழுகை யெல்லாம் ஓய்ந்த பிறகு கமலாம்பாள், "சொத்து போனால் சனியன் தொலைந்தது! நீங்கள் இங்கேதானே இருங்கள், நான் உழைத்துப் போடுகிறேன்; இல்லாவிட்டால் இரண்டு பேருமாய்ச் சேர்ந்து எங்கேயாவது போய்ப் பிழைக்க வழி தேடுவோம்'' என, முத்துஸ்வாமியய்யர், "சொத்து போனதாக இல்லை, நான் போய் போட்ட முதலையாவது பற்றிக் கொண்டு வருகிறேன். நமக்குப் பணம் வேண்டாமென்றாலும் லட்சக்கணக்காகப் பணம் பறிகொடுக்க மனது வரவில்லையே. நான் போய் எது சாத்தியமோ அதைச் செய்து வருகிறேன். அதுவரையில் நீ இங்கேதானே பல்லைக் கடித்துக்கொண்டிரு; நான் போய் கூடிய சீக்கிரத்தில் ஓடிவந்து விடுகிறேன்'' என்றார். கமலாம்பாள் அவரை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேனென்று மன்றாடியும் அவளைக் கூட்டிப்போவது அசௌகரியமாக இருந்தபடியால், அவள் ஊரிலேயே இருக்க வேண்டியிருந்தது. முத்துஸ்வாமியய்யர்மட்டும் பம்பாய்க்குப் புறப்பட்டார். அடிக்கடி கடிதம் எழுதுவதாக உறுதி சொல்லிச் சென்றார். பம்பாயிலிருந்து வந்த சமாசாரம் ஒருவருக்கும் தெரியக்கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவும் செய்துவிட்டுப் போனார்.

24

தாடகை, சூர்ப்பநகை, ஆஷாட பூதி, திரிவிதம் துஷ்டலட்சணம்

அவர் போய்ச் சில நாளைக்குப் பிறகு வம்பர் மகாஜன சபை அக்கிராசனாதிபதியாகிய மகாகனம் பொருந்திய சுப்பம்மாளும், பொன்னம்மாளும், பொன்னம்மாள் தாயார் சங்கரி அம்மாளுமாகச் சுப்பிரமணியய்யர ஹத்துக் கூடத்தில் ஏதோ ரஹசியம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சுப்பம்மாள்: "யாயா சொல்யேனே அவயா அப்டீனு சொன்னாய்."

சங்கரி: "சொல்லுகிறதைத் திருத்தமாய்ச் சொல்லு. நீ பேசுகிறது எனக்குப் புரியவில்லையம்மா; ஏது இப்படிச் சொல்லுகிறாள் என்று கோபித்துக் கொள்ளாதேயம்மா."

சுப்பம்மாள்: "கோபம் என்ன; தியுத்தமாயித்தான் சொல்யேன்; 'யாயா அவயா சொல்யா என்யா' என்றிப்படி முன்னிலும் அதிக திருத்தமாய் ஆரம்பித்தாள். பிறகு சங்கரி இவளுடைய பாஷையின் சூக்ஷ்மத்தைக் கிரஹித்துக்கொண்டாள். அரிச்சுவடியில் யகரம் இவளுக்குப் பெண்வயிற்றுப் பேத்தி என்றும், ரகரத்துக்கும் இவளுக்கும் சக்களத்திச் சண்டையென்றும் அவள் அறிந்துகொண்டாள். சுப்பம்மாள் இப்படி 'யரயோர பேத' என்ற சூத்திர விதிப்படி இலக்கணமாய்ச் சொல்லி முடித்தது என்னவென்றால், பொன்னம்மாள் மருந்து வைத்துத் தன் புருஷனைக் கொன்று விட்டாளென்று கமலாம்பாள் தன்னிடம் சொன்னாளாம். பொன்னம்மாளுடைய மருந்துதான் சுப்பிரமணியய்யருடைய மரணத்துக்குக் காரணம் என்று ஊரில் எல்லாருக்கும் சந்தேகமுண்டு. ஆனால் கமலாம்பாள் அதைப்பற்றி ஒரு வார்த்தையாவது பேசவேயில்லை. சங்கரியம்மாள் பணத்தைக் கண்டபடி வாரியிறைத்துக் கொண்டிருப்பதைக் கண்ட சுப்பு தனக்கும்

அதில் ஏதாவது கிடைக்க வேண்டுமென்று ஆசையடைந்து கமலாம்பாள்மேல் சாக்குப்போட்டு சங்கரியம்மாளிடம் மேலே சொன்னபடி சொல்ல, சங்கரியம்மாள் "அந்த முண்டை அப்படிச் சொல்லலாகிவிட்டதா, நாக்கை இழுத்து வைத்து அறுத்துவிட்டால்தான் என்ன? என் பெண்மட்டும் தாலியறுக்க வேணும். அவள் மட்டும் வாழ வேண்டுமோ; சொல்லுகிறேன் வழி அந்தச் சிறுக்கிக்கு" என்று கோபித்துக்கொண்டு, சுப்பம்மாளுக்கு ஒரு பெரும் பூசனிக்காயைத் தூக்கிக் கையில் கொடுத்து மறுநாளும் வரும்படி உத்தரவிட்டு அனுப்பினுள்.

சில நாளைக்குப் பிறகு முத்துஸ்வாமியய்யர் ஆருத்திரா தரிசனத்துக்காகச் சிதம்பரத்தில் இறங்கிவிட்டுச் சீக்கிரம் ஊருக்கு வருவதாகக் கமலாம்பாளுக்கு எழுதினுர். அவள் தன் பர்த்தா வருகிற சந்தோஷத்தை வீடுகூட்டி முதல் வந்தவர்கள் போனவர்கள் எல்லாருக்கும் சொல்லிச்சொல்லி மகிழ்ந்து கொண்டிருந்தாள். இந்தக் கடிதம் வந்த அன்று பொன்னம்மாளுடைய கிரஹத்தில் சங்கரியம்மாள், சுப்பம் மாள், ஈச்வரதீட்சதர் என்ற ஒரு தீட்சதர் மூன்றுபேராகக் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அதிக தாழ்ந்த குரலுடன் பேசிக்கொண்டிருந்ததால் என்ன பேசிக் கொண் டிருந்தார்களென்று எனக்குச் செவ்வையாய்த் தெரியாது. ஆனுல் கமலாம்பாள் என்ற பெயர் மட்டும் அடிக்கடி கேட்டது. எல்லாம் முடிந்த பிறகு சங்கரியம்மாளுடைய செலவில் ஈச்வர தீட்சதரும் சுப்புவும் சிதம்பரத்திற்குப் போவதாய்த் தீர்மானம் செய்தார்கள். "வந்த பிராமணனை அப்படியே திரும்பிப் போகப் பண்ணிப்போட நானுய் விட்டது" என்ருர் தீட்சதர். "இனிமேல் அவள் வாய்வதை (வாழ்வதை) பாய்த்துப்பிடயேன்" (கமலாம்பாள் வாழ் வதைப் பார்த்துவிடுகிறேன்) என்று சபதம் கூறினுள் சுப்பம்மாள்.

முத்துஸ்வாமியய்யர் போன காரியம் முற்றும் பிரதிகூல மாய் முடிந்தது. இவர் சேர்ந்திருந்த வியாபாரச் சங்கத்தில் முக்கிய உத்தியோகஸ்தர்களாயிருந்த இரண்டு பிராமணர்கள்

பணம் முழுவதையும் தஸ்கரம் செய்துகொண்டு எங்கேயோ போய்விட்டார்கள். போன இடம் தெரியவில்லை. பாவம் முத்துஸ்வாமியய்யருடைய சகல சொத்தும் திடீரென்று ஒருவனுக்குப் பேதி வந்திறந்தால் எப்படியோ அப்படி ஒரேயடியாய்ப் போய்விட்டது. நெடுநாள் சேகரித்த பெருந்திரவியம் திடீரென்று போய்விடுமானால் அவருக்கு என்ன வருத்தமிராது? ஆனால் அவர் தன் விசனத்தை விரக்தியினால் கண்டித்துக் கொண்டு காஷாயம் வாங்கிக்கொண்டு அநியாயம் நிறைந்த இவ்வுலகத்தை விட்டுத் தொலைந்துவிடுகிறதென்று தீர்மானம் செய்தார். தன்னைச் சந்நியாசியாகும்படி கடவுள் தனக்குத் துன்பங்களை யுண்டாக்கித் தூண்டுவதுபோல அவருக்குத் தோன்றிற்று. ஊருக்கு வந்து கமலாம்பாளுக்கு ஏதாவது ஒருவழி செய்துவிட்டு ஆச்ரமம் பெற்றுக் கொள்ளுகிறதாய்த் தீர்மானம் செய்துகொண்டு வரும் வழியில் ஆருத்திரா தரிசனம் நேரிட்டபடியால், சிதம்பரத்தில் இறங்கி ருத்திரர் லோகநாசனப் பிரளயஸ்மசானத்தில் தாண்டவம் செய்வதைப் பார்த்துத் தானும் தனது துக்கங்களை நசித்து அவற்றின் மேல் ஆனந்தத் தாண்டவம் செய்யவேண்டி விரக்தி வைராக்கியத்தைப் பலப்படுத்திக்கொண்டு போகலாமென்று தில்லை க்ஷேத்திரத்துக்கு வந்து சேர்ந்தார். அபரிமிதமான கூட்டத்தின் மத்தியில் பகவான் உலாவி வருவதை அவர் கண்டு பிராந்தராய் நின்று மதிமயங்கிக் குழந்தை நடராஜனைப் பற்றி யுண்டான ஞாபகத்தைச் சந்தோஷமாய்க் கண்டித்துப் பகவானுடைய தாண்டவ ஸ்வரூபத்தில் அமர்ந்து பிரம்மானந்தத்தில் மூழ்கி 'என் குழந்தையைத் தமது பாதாரவிந்தத்தில் சேர்த்துக்கொண்டதுபோல என்னையும் சேர்த்துக் கொண்டு அனுக்ரஹிக்க வேண்டு'மென்று அந்தரங்க பக்தியுடன் ஈசுவரனைத் தியானிக்கும்போது, "யார் முத்துஸ்வாமியா; எப்பொழுது வந்தாய், வா வா. இப்பொழுதுதான் வந்தாயோ?" என்று ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார். சிறுகுளம் ஈச்வர தீட்சதர் நின்றுகொண்டிருந்தார். அவரை வந்தீரா என்று விசாரித்துவிட்டு, பகவத் தியானத்தில் மறுபடி அவர் பிரவேசிக்க, ஈச்வர தீட்சதர் அந்த மட்டுடன் அவரைவிடச் சம்மதமில்லாமல் "முத்துஸ்வாமி, க்ஷேமந்

தானே; உடம்பு ஏது இளைத்திருக்கிறாற்போல் இருக்கிறது, எங்கே பம்பாய்க்கா போயிருந்தாய்!'' என்று இப்படிப் பேச்சுக் கொடுத்துக்கொண்டே கூட்டத்தினின்று அவரைப் பிரித்துத் தனியே ஓரிடத்துக்குக் கூட்டிப்போய் மற்றும் க்ஷேமலாபங்களை அன்புடன் விசாரிப்பவர்போல விசாரித்துப் பிறகு வெகு உறவாக நெருங்கி தாழ்ந்த குரலுடன் "அநியாயமாய் அசந்தர்ப்பமாய் போய்விட்டது, போனதைக் குறித்து ஒன்றும் விசனப்பட வேண்டாம். உனக்கே இதற்குள் சமாசாரம் தெரிந்திருக்கவேணுமே'' என, முத்துஸ்வாமி யய்யர் "என்ன விசேஷம்! எனக்கு ஒன்றும் தெரியாதே'' என்றார். தீட்சதர் "அப்படி ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. உனக்குத் தெரிந்திருக்கு மென்றல்லவா எண்ணினேன். இல்லாவிட்டால் நான் பிரஸ்தாபமே பண்ணியிருக்க மாட்டேனே'' என, முத்துஸ்வாமியய்யர் "என்ன சமாசாரம், வெறுமனே சொல்லுங்கள்'' என்று பலவந்தம் பண்ண, தீட்சதர் "சுவாமி தரிசனம் பண்ணுவோம், அந்த இழவுப்பேச்சு இப்பொழுது என்னத்துக்கு; பம்பாயிலெல்லாம் வெகுபேர் தனிகர்களிருக்கிறார்களாமே'' என்றார்.

முத்: அது கிடக்கட்டும், நீங்கள் சொன்னது என்ன சொல்லுங்கள்.

தீட்: அது ஒன்றுமில்லை என்கிறேன். காசிக்கும் பம்பாய்க்கும் 30,40-மைலிருக்குமா? நிரம்ப சமீபமென்று சொல்லுகிறார்களே.

முத்: நான் என்ன கேட்கிறேன், நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? 'தில்லைக்கு வழி யெது என்றால் சிவப்புகாளை முப்பது பணம்' என்று பதில் சொன்ன கதையாயிருக்கிறதே! அதைத் தயவுபண்ணி என்ன என்று சொல்லுங்கள்.

தீட்: நல்ல சங்கதியாயிருந்தால் அப்பொழுதே சொல்லியிருக்கமாட்டேனே? என்னவோ கழுதை பெண்டுகளுடைய சுவாபமிப்படித்தான்—சொல்லுகிறார் கீதையிலே—

முத்: அது கிடக்கட்டும். பெண்டுகளா! யார்? என்ன சமாசாரம்?

தீட்: தன்னாலே நாளைக்கு ஊருக்குப் போகிறாய், தெரிகிறது. அதற்கென்ன இப்பொழுது அவசரம்; ஒன்றும் இல்லை. விசனப்படாதே; பகவான் ஒருத்தர் இருக்கிறார். அவர் சூத்திரதாரி, நாம் சூத்திரப் பாவைகள். அவர் ஆட்டி வைக்கிறார், நாம் ஆடுகிறோம். புருஷ சூக்தத்திலே சொன்னார்—

முத்: அது இருக்கட்டும், சங்கதியைச் சொல்லுங்கள். அது என்ன கெட்ட சங்கதியாயிருந்தாலும் சரி, சொல்லி விடுங்கள். நடந்தது நடந்துபோய்விட்டது. இனிமேல் நீங்கள் சொல்லுவதில் என்ன குற்றம்? வெறுமனே சொல்லுங்கள்.

தீட்: ஸ்திரீகளே மாயாரூபிணிகள். அவர்களை ஒன்றும் நம்பக்கூடவில்லை. கலிபுருஷன் லோகத்திலே வந்து நர்த்தனம் பண்ணுகிறான், பேதி வைசூரி வந்து நர்த்தனம் பண்ணுகிறாற் போல. அதிலே வர்ஜா வர்ஜம் இல்லை, பிதா இல்லை, பர்த்தா இல்லை, சகோதரன் இல்லை, பந்து இல்லை, போய்விட்டது காலம். இந்தக் காலத்துக்குச் சிதம்பரம் நல்ல திவ்யமான க்ஷேத்திரம். அதுவும் இன்றைக்கு உண்டேயல்லவா...—

முத்: உங்களுக்கு இது நன்றாயிருக்கிறதா? முப்பது தடவை கேட்டாய்விட்டது. சுற்றிச் சுழட்டுகிறீர்களே யொழிய, காரியத்தைச் சொல்லமாட்டேன் என்கிறீர்களே. சீக்கிரம் சொல்லுங்கள்.

தீட்: நான் சொல்லத்தான் வேணுமா? தொந்தரவு பண்ணுகிறாயே, அப்படியொன்றும் அதிசயம் இல்லை. லோகத்திலே நடக்காதது இல்லை. இருந்தாலும் இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்றாற்போல கமலாம்பாள்கூட இப்படிப் பண்ணுவாளா என்பதுதான் ஆச்சரியம். ஏதோ காலவிசேஷம், பூர்வஜன்ம கர்மவாசனை. விட்டுத்தள்ளு கழுதையை; போனாற் போகிறது.

முத் : யார்? என் சம்சாரமா! என்ன சங்கதி, என்ன அது! (பதறி) செவ்வையாகச் சொல்லுங்கள்!

தீட் : என்னத்தைச் சொல்லுகிறது, என்னவோ யாரோடேயோ என்னமோவாம். கண்டுவிட்டார்கள். ஊரில் கூக்குரலாய் விட்டதாம்; என்னவோ உனக்குத் தெரிந்திருக்கு மென்றல்லவோ இந்தப் பிரஸ்தாபத்தை யெடுத்தேன். கிடக்கிறது கழுதை! இதற்காக ஒன்றும் விசனப்படாதே. பகவான்கூடச் சொல்லுகிருர், இந்திரியஸ்யேந்திரஸ்ய சர்வ கர்மாணி—

முத் : நிஜமாகத்தானு? யார், என் அகமுடையாளா, எப்பொழுது, எங்கே, என்றைக்கு, யார்? நீங்கள் சொல்லு கிறது நிஜந்தானு?

தீட் : பொய்யாக விருக்கவேண்டு மென்பதுதான் என் பிரார்த்தனையப்பா. ஊர் வதந்தியை நான் சொன்னேன். என்னவோ கையுங்களவுமாகக் கண்டுபிடித்து விட்டதாக எங்கேயும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நமக்கு என்ன வேண்டியிருக்கிறது! 'ரூபம் மகத்தே'—

முத் : எந்தப் பயலோடே இவ்வளவும்? ஆ!

தீட் : அதெல்லாம் என்னத்துக்கு விசாரிக்கிருய்? விட்டுத் தள்ளு கழுதையை! அதைச் சொன்ன நாக்குக்குக்கூட தோஷம் சொல்லுகிருர் ஸ்மிருதிக்காரர். போளுற் போகி றது. பிள்ளையைப் பறித்துக்கொண்டு போய்விடலாம், பெண்டாட்டியைப் பறித்துககொண்டு போய்விடலாம், பகவானைப் பறித்துக்கொண்டு போக முடியுமா? எங்கும் நிறைந்தவராய் எல்லோருக்கும் சமமாய்—என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே தேவி சுப்பம்மாள் அவர்களிடம் வந்து சேர்ந்தாள்.

தீட்சதரும் அவளும் கூடிப் பேசிக்கொண்டபடி அவர் பேசி முடித்தவுடன் அதுவரையில் மறைந்து நின்று கவனித்

துக்கொண்டிருந்த அவளும் வந்து சேர்ந்தாள். வந்தவுடன் "முத்துஸ்வாமி, என்னப்பா, குழந்தை போச்சு, தம்பி போனுன். இவ்வளவு போயாதா? (போதாதா) அந்தப் பாவி முண்டையுமா அப்படிப் பண்ணவேணும். என்னவோ உன் தலைலெயுத்து. நீ ஒயு பிள்ளை பியந்து இப்படியெல்லாம் அவதிப்பட வேண்டுமென்று வயம் வாங்கிவந்தாய்" என்று விஸ்தாரமாய்ப் பிரலாபிக்கத் தொடங்கினுள். முத்துஸ்வாமி யய்யருக்குக் கொஞ்சம் அறைகுறையாயிருந்த அவநம்பிக்கை இப்பொழுது ஒழிந்துபோய்விட்டது. 'அப்படியா பண்ணி ளுள். அடி சண்டாளி, பாவி, என்ன மோசம்! எந்தப் போக் கிரிப் பயலோடே இவ்வளவு அக்கிரமம் பண்ணினது அந்த முண்டை?" என்று கேட்டார். தீட்சதர் "அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிருய் போ. அந்தக் காவாலிப் பயல் நாரா யணசாமி இருக்கிருனே அல்லவோ, போக்கிரிக் கூத்தாடிப் பயல், அவனேடேதான். சிவசிவா, எத்தனை நாளைப் பழக்கமோ அவர்களிரண்டு பேருக்கும், என்ன இழவோ. அன்றைக்கு என்னவோ போதாத வேளை, கண்டுபிடித்துவிட் டார்கள். ஊரெங்கும் கூக்குரலாய் விட்டது, பாபம், பாபம்" என, சுப்பம்மாள் "அவனேடே எத்தனை நாள், ஊயை(ஊரை) விட்டு ஓடிப்போயியுப்பள். நான் வயபோதே, "தெயிந்ததோ தெயிந்துபோச்சு, எங்கேயாவது யென்டு பேயுமா ஓடிப்போய் விடவேணு" மெயு சொல்லிக்கொண்டியுந்தாள். இந்தப் பியாமணய் எனக்கு முன்னேயே வந்துவிட்டாய் (ர்) அவய் வந்து பத்து நாளாச்சு" என்று சொல்லி முடிக்க, தீட்சதர் "ஏன் பத்து நாளாகப் போவானேன்? நாயிரேடே நாயிறு எட்டு, ஒன்பது, பத்து இன்றைக்குச் சரியாகப் பன்னிரண்டு நாளாய்விட்டது.—முந்தின நாள் சாயந்திரம்தான் அவர் உண்மையாய் வந்தது—நாழிகையாய்விட்டது சுவாமியோடு கூடப் போகவேணும். நீ வருகிருயோ" என, முத்துஸ்வாமி யய்யர் "இல்லை, நீங்கள் போய்விட்டு வாருங்கள்" என, அவரை விட்டுவிட்டு தீட்சதரும் சுப்பம்மாளுமாகப் போனுர்கள்.

அப்பொழுது முத்துஸ்வாமியய்யருடைய நிலைமை யின்னபடி யென்று சொல்லிமுடியாது. 'ஐயோ பகவானே,

நீயேன் என்னை இப்படிச் சோதிக்கிருய். பகவான் என்று நீ ஒருவன் இருக்கிருயோ அதுவும் இல்லையோ,குழந்தையை யிழந்தேன்,சகோதரனை யிழந்தேன், சொத்தனைத்தையு மிழந்தேன், அவ்வளவும் போதாதென்று என் பேரையும் என் பெண்டாட்டியையுமா இழக்கவேணும்! ஐயோ ராட்சஸி, எனக்கு எமனாக வந்தாயா! நீ பேசாமல் கொஞ்சநாளாயிருந்த போதே எனக்குச் சந்தேகமுண்டு. ஸாஹஸி!என் காலைப் பிடித்துக் கட்டியமுதையா, நீலி, சண்டாளி, முகரையைப் பாரு, முகரையைக் குத்து. அந்த ஸாஹஸக் கண்ணிலே அழகென்ன வேண்டியிருக்கிறது அழகு! கன்னத்திலறைந்து வரிசையாக இருக்கிறதே அந்தப் பல்லை உடை; சிலசிவ! நான் இவளுடன் வாழ்ந்திருக்கவேண்டுமா! நான் அங்கிருந்தால் ஒரு கொலை நடந்திருக்கும்; உன்னைக் கொல்வானேன், நான் செத்துப் போகிறேன்; உனக்கு ஊரெல்லாம் புருஷன்; சுகமாய் தீர்க்க சுமங்கலியாய் சாசுவதமாய் வாழ்; நீ ஏன் சாகிருய்?—ஐயோ உனக்கும் எனக்கும் இப்படியா முடியவேணும்! நீலி, சண்டாளி, பாதகி, ராட்சஸி. ஒருவேளை சுப்பு சொன்னது பொய்யாயிருக்குமோ? தீட்சதர் பொய் சொல்லமாட்டாரே; ஒருவேளை இரண்டுபேரும் கலந்து பேசிக்கொண்டு செய்திருப்பார்களென்ருல் அதில் அவர்களுக்கு என்ன லாபம்? எனக்கு அவர்கள் விரோதிகளுமில்லையே, அவர்கள் பொய் சொல்ல வாவது! நம்முடைய அதிர்ஷ்டத்துக்கு எதுவும் அசாத்திய மில்லை!'—என்று இப்படி அவர் யோசனை செய்துகொண்டு போகும்பொழுது, சிறுகுளத்து மனிதர் நாராயண அய்யர் என்ற ஒருவர் முத்துஸ்வாமியய்யரைக் கண்டவுடன் துக்ககரமான குரலுடன் யோகக்ஷேமங்களை விசாரிக்கத் தொடங்கினுர். முத்துஸ்வாமியய்யருக்கு இருந்த சந்தேகம் மீதியில்லாமல் நிவர்த்தியாயிற்று. 'இந்த உலகத்தில் சுவாமியாவது, பூதமாவது; நல்லவனுக்குக் காலமில்லை. கொலை, வியபசாரம், திருட்டு இதுதான் இந்த உலகத்துக்குத் தகுந்த தொழில். ஒரு பாவத்தையு மறியாத எனக்கு இப்படி ஆபத்து மேல் ஆபத்தாய் வரவேண்டுமா! கடவுளுக்குக் கண்ணவிந்தா போய்விட்டது! அடா தெய்வமே!—சுவாமியோ இல்லை யென்று நீர்ந்தது. இனிமேல் என்ன? இருந்தாலென்ன,

போனுலென்ன! இருட்டினவுடன் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விட்டுவிடுகிறேன். இருக்கிறது ஒரு குட்டி, அந்தக் கழுதையையும் இன்னொரு பயலுக்குத் தொலைத்தாய்விட்டது. தாயைப்போல் பெண். ஸ்ரீநிவாஸா ஜாக்கிரதை! என்னைப் போல மோசம் போகாதே. நன்ருய்ப் பொழுது விடிந்தது இன்றைக்கு; போகட்டும், என் ஆயுசுக்குக் கடைசி நாளாக வாவது இருக்கிறதேயல்லவோ; நல்ல நாள்தான். சந்நியாச மும் ஆச்சு, கழுதையுமாச்சு. மொட்டையடித்துக்கொண்டு ஊரிலே பிச்சை யெடுத்துக்கொண்டு அப்படியாவது யாரைக் காப்பாற்ற வேண்டும்? கோவிலென்ன குளம் என்ன? எல்லா வற்றையும் நெருப்பை வைத்துக் கொளுத்து கழுதையை; கண்கள் நிறைந்த ஆகாயமே, உனக்குமா கண் தெரியவில்லை. உனது இடியோசைகள் எங்கேஒளிந்துவிட்டன. இந்த வீணிழவு களை ஒரு இடியில் தகர்த்தெரியமாட்டாயா!' என்று தனக் குள்ளேயே சொல்லிக்கொண்டு வழி நடந்தார். அன்று பகல் முழுதும் அவர் சாப்பிடவேயில்லை. 'இந்த வெட்கம் கெட்ட கட்டைக்குச் சோறு வேறேயா! அந்தத் தட்டுவாணி முண்டை யைத் தொட்ட கட்டையை எங்கே போட்டுக் கொளுத்தி னுலும் பாவம் போகாதே. இந்தக் கட்டைக்குச் சோறு வேண்டுமா'' என்று சொல்லிக்கொண்டு பகல் முழுவதும் ஒரு தோப்பில் விழுந்து கிடந்தார். 'பசி, நன்ருய்ப் பசி, வேணும் அந்தக் கட்டைக்குத் தண்ணீர்கூடக் கொடுக்கமாட்டேன்' என்று வைராக்கியமாய் நீர்கூடக் குடியாதிருந்தார். அந்தத் தோப்பில் குளிர்ந்த காற்று அடித்தது. 'சீ! கழுதை! இந்தக் காற்று யாருக்கு வேண்டியிருக்கிறது. இந்த உலகத்துப் போக் கிரிப் புழுக்களுக்குக் குளிர்ந்த காற்று வேறே வேண்டுமா?' என்று அவ்விடம்விட்டுக் காற்றடிக்காத உஷ்ணமான ஒரு இடம் போய் உட்கார்ந்தார். அங்கே சில கிளிகள் ஒன்ருே டொன்று கொஞ்சி விளையாட வந்தன. இவர் 'சீ தரித்திரப் பிணங்களா, ஊரெல்லாம் வியபசாரமாய்க் கிடக்கிறது, உங்களுக்கு விளையாட்டென்ன வந்தது, இங்கே விளையாட்டு!' என்று ஒரு கல்லை யெடுத்து எறிய அவைகள் பறந்து போய் விட்டன. 'மனிதனுக்கு இந்த உலகந்தான் சரி, எல்லாப் பயல்களும் வியபசாரம் பண்ணுங்களடா; கல்யாணமென்ன

வந்தது, கல்லெடுப்பு என்ன வந்தது; எல்லா முண்டைசளும் தட்டுவாணித்தனம் பண்ணட்டும். திருடு, குத்து, கொலை, அதுவும் ஒரு வேடிக்கைதான். இந்த உலகத்துக்கு அதுதான் சரி' என்றிப்படித் தனக்குள் பிதற்றிப் பகற்பொழுதைப் போக்கினர். கமலாம்பாளுடைய ஒவ்வொரு செய்கையையும் ஞாபகத்துக்குக் கொண்டுவந்து 'சிரிப்பைப் பார் சிரிப்பை, முகம் ரோஜாப் பூப்போலே இருக்கிறதாம், அப்படி ஞாபகம்; நாராயணசாமியை முத்தமிடுவதற்கு என்னை முத்தமிட்டுப் பழகிப் பார்த்துக்கொள்ளுகிருயோ? சீ நாயே, மேலே கையைப் போடாதே, வெட்கம் கெட்ட படவா, அழுகிருயா அழு; ஒரு புருஷன் கைக் கீழே இருக்கவேண்டியிருக்கிறதே என்று அழுகிருயோ அழு!' என்றிப்படி ஒவ்வொன்றையும் அவளுக்கு விரோதமாக வியாக்கியானம் பண்ணி மனதில் தோன்றியபடியெல்லாம் அவளை வைதார். பிறகு அஸ்தமித்தவுடன் எழுந்திருந்து 'பாடும் பட்சிகளே, வீசும் காற்றே, மலரும் புஷ்பங்களே, துளிர்க்கும் மரங்களே, நீங்கள்தான் இந்த உலகத்துக்கு நல்லவர்கள், உங்களை எத்தனை புழுக்கள் ஹிம்சை செய்கின்றன, (ஒரு வாடிப்போன புஷ்பத்தை எடுத்து) இந்தப் பூ யாரை என்ன பண்ணிற்று? இது போன போக்கைப் பார். இப்படியே நீங்கள் எல்லாம் சீக்கிரம் தொலைய வேண்டியதுதான், நானும் தொலையப்போகிறேன். உங்களுக்கு நிரயப வந்தனம். சீக்கிரம் இந்தப் பாழுலகத்தை விட்டு வெளியேறுங்கள்' என்று மரத்துக்கு மரம் புத்திமதி சொல்லிவிட்டு அதைவிட்டுப் புறப்பட்டு ஊர்மத்தியில் வர, 'கொலைக்காரக் கூட்டம், தட்டுவாணிக் கூட்டம்' என்று மேளவாத்யம் கேட்டால் காதைப்பொத்திக் கொண்டும், ஸ்திரீகள் எதிரே வந்தால் கண்ணை மூடிக்கொண்டும், நரகலோக மத்தியில் போவது போல் விரைவாய்ச் சென்று 'உங்களுக்கும் நமக்கும் இன்றுடன் விட்டது; நாளை நீங்கள் எங்கேயோ நானெங்கேயோ, உங்களை விட்டுப் பிரிவதில் ஒரு பொட்டு கண்ணீர்கூட நான் விடமாட்டேன். சிதம் பரமாம் சிதம்பரம்; வெட்டவெளி யென்றர்த்தம். ஒன்றுமில்லை, சுவாமியுமில்லை, அதுதான் சிதம்பரம். இந்தப் பாழுலகைவிட்டுப் போகிறேன். நம்முடைய பாக்கியந்தான்

என்ன பாக்கியம்! அப்புறம் தட்டுவாணியாய்ப் போகப் பெண்டாட்டியு மில்லை. பறிகொடுக்கப் பிள்ளையு மில்லை. நம்முடைய பாக்கியமே பாக்கியம்!' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டு கோவிலுக்கருகிலுள்ள ஓர் பாழ்மண்டபத்தை யடைந்தார். அங்கே பாம்புகளிருக்கும் என்று ஜனங்கள் அதன் அருகில் வருவதில்லை. இருட்டினவுடன் அந்த மண்டபத்துள் அவர் சென்று படுத்துக்கொண்டு 'மரியாதையாக என்னைப் பாம்பு கடித்தால் கடிக்கட்டும். இல்லையா, கயிறு இருக்கிறது கழுத்திருக்கிறது பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு படுத்துக் கொண்டார். 'சீக்கிரம் நன்றாய் இருட்டமாட்டேன் என்கிறதே! இந்தப் பாழ் வெளிச்சம் யாருக்கு வேண்டியிருக் கிறது' என்று சொல்லிப் படுத்திருந்து சிறிதுநேரத்துக்குப் பிறகு வேண்டிய இருட்டு வந்துவிட்டபடியால் எழுந்திருந்து சுவரில் ஆணியறைந்து ஓர் கயிறறை அதில் கட்டித் தன் கழுத்திலும் சுருக்கிட்டுக்கொண்டு 'தரித்திர உலகமே, நான் போய்வருகிறேன். அடிகுட்டி கல்யாணி உன்னம்மாள் முத்துஸ்வாமியை ஜாக்கிரதை பண்ணினதுபோல நீயும் ஸ்ரீநிவாசனை ஜாக்கிரதை பண்ணிவிடு. முத்துஸ்வாமி யென்ற பெயர் இன்றோடு முடிந்தது' என்று சொல்லிவிட்டு ஊசல் ஆட ஆரம்பித்தார். அப்பொழுது திடீரென்று 'முத்துஸ்வாமி, முத்துஸ்வாமி, முத்துஸ்வாமி!' என்று மூன்று தரம் ஒரு சப்தம் கேட்டது. 'எங்கிருந்து வந்தது? அவ்வேளையில் தன்னையறிந் தவராக யாரிருக்கக்கூடும்?' என்று சுற்றும் முற்றும் பார்த்தார். ஒன்றும் தென்படவில்லை, 'சப்தமுமில்லை, ஒன்றுமில்லை; நம்முடைய மனது நம்மையே மோசம் செய்கிறது' என்று சொல்லி மறுபடியும் கழுத்துச்சுருக்கை இறுக்க எத்தனித்தார். மறுபடியும் 'முத்துஸ்வாமி, முத்துஸ்வாமி, பயித்தியக்காரா' என்று மூன்று வார்த்தைகள் தெளிவாய்ச் சந்தேகத்துக்குச் சற்றும் இடமில்லாமல் கேட்டன.

———

25

இங்கற்றவர்க்கு அங்குண்டு விஸ்வரூப தரிசனம்

முத்துஸ்வாமியய்யர் சுற்றும் முற்றும் பார்த்தார். யாதொரு காரணமும் புலப்படவில்லை. திடீரென்று அவ்வேளையில் நிஷ்காரணமாக இவ்விதம் சப்தம் கேட்கவே அவருக்கு வெகு பயம் உண்டாய் விட்டது. கழுத்துச் சுருக்கை நழுவ விட்டுவிட்டார். கை கால்கள் நடுங்கின, நெஞ்சும் மார்பும் பதைபதைத்தன, உடல் முழுவதும் மயிர்க்கூச் செறிந்தது. தன்னறிவில்லாமலே கையைத் தட்டி வெளியே ஓடிவிட எத்தனித்தார். அதற்குள் மறுபடியும் 'முத்துஸ்வாமி பயப்படாதேயடா பயித்தியக்காரா. இப்படித்தான் பயப் படுவார்களா!' என்று வெகு குளிர்ச்சியான ஓர் சப்தம் கேட்டதுமன்றி அம்மண்டபம் முழுதும் திடீரென்று ஹேம தூமத்துடன் கூடிய பிரகாசம் ஒன்று தோன்றிற்று. அந்தப் பிரகாசத்தின் மத்தியில் ஓர் உயர்ந்த சிலா விமானத்தின்மீது யாரோ திவ்விய மங்கள ஸ்வரூபத்தையுடைய மகா புருஷர் ஒருவர் தனது இடது திருக்கரத்தால் செவ்வானம்போல் சிவந்து அழகிய மனோகரமான சடாபாரத்தையுடைய தனது உத்தமாங்கத்தை ஏந்தித் தாங்கிக்கொண்டு மற்றோர் கரத்தை முழந்தாள் மட்டும் தீர்க்கமாக நீட்டி க்ஷீராப்தியில் ஆதியந்தமில்லாத ஜகந்நிவாசராகிய சாக்ஷாத் பகவான் லட்சுமி சமேதராய் அனந்த சயனத்தின்மீது அரிதுயிலில் அமர்ந்ததுபோல வெகு கம்பீரமாய் அமர்ந்திருந்தார்.

ப்ரஸாதஸமுகே தஸ்மின் சநத்ரேச விசதப்ரபே
ததாசக்ஷுஷ்மதாம் ப்ரீதிராஸீ த்ஸமரஸாதவயோ:

என்றபடி அன்புமயமாய் விளங்கிய அவருடைய முகமானது குளிர்ந்த மிருதுவான காந்தியையுடைய இளஞ் சந்திரனைப் போல யாவருக்கும் பிரீதியையுண்டுபண்ணத்தக்க அற்புத மான ஓர் வசீகர சக்தியைப் பெற்றிருந்ததுமின்றி பரிசுத்த மான ஜலத்திற் பிறந்து பூச்சி புழுக்களால் ஹிம்சிக்கப்படாது

வேதாந்த உபமானங்களுக்கிடமாகும்படி குளிர்ந்து, பரந்து, பசந்து, பற்றற்று, மயங்காது அனுபவிக்கும் இலைகளின் மத்தியில் உத்தம வாழ்க்கையின் லட்சண பூர்த்தியாய், கம்பீரமான புருஷச் சாயை* யுடன் மேல்நோக்கி மலர்ந்து மந்தமாய் ஆடும் அழகிய தாமரைப் புஷ்பத்தைப்போல நிர்விசாரமும் சற்சம்சர்க்கமும், பரிசுத்தமும், கௌரவமும் மிருதுத்துவமும், அழகும், உயர்குடிப் பிறப்பும், உற்சாகமும் ஒருமித்து, உறவாடி, நகையாட மலர்ந்து விளங்கி நின்றது. அவருடைய உயர்ந்த மண்டையும், விசாலமான நெற்றியும், அவருடைய நெருங்கிய புருவங்களும் சற்றுத் தாழ்ந்த கபோலமும் ஞானத்தையும் அதனாலுண்டாகும் சாந்தத்தையும் காட்டின. அவருடைய சிவந்து இடைவிடாது புன்னகை தவழ மலர்ந்த அதரப்பிரதேசம் ததும்பிப் பெருகும் அவருடைய ஆனந்தத்தை யுணர்த்திற்று. அவருடைய கண்களோ வடவிருட்சத்தின் நிழலைப்போல் தம்மையணுகி வந்தவர் அனைவருக்கும் அற்புதமான குளிர்ச்சியை உதவி அலையெறிந்து ஒழுகும் கருணை சமுத்திரங்களாயிருந்தன.

முத்துஸ்வாமி அய்யருக்குத் திடீரென்று தோன்றிய இத்தோற்றத்தைக் கண்டதால் உண்டான பயமெல்லாம் இந்த மகா புருஷருடைய முகத்தாமரையைத் தரிசித்தவுடன்

---

* புஷ்பங்களுள் ராஜா தாமரை. ரோஜாவும் அல்லியும் ராணிகள். ரோஜாவின் பளபளப்பு தாமரைக்கில்லை. தாமரையின் கம்பீரம் ரோஜாவுக்கில்லை. தாமரையின் அழகு புருஷனுடைய அழகு. ரோஜாவின் அழகு ஸ்திரீயின் அழகு. தாமரை பூஜா யோக்கியம்; ரோஜா பூஷண யோக்கியம். யானை, கருடன், தாமரை ஒரு வர்க்கம். தாமரையின் குணம் கல்யாண குணம். ரோஜாவின் குணம் நாயகி நாயக ரது ஸரஸ ஸல்லாப குணம். தாமரை பரிசுத்தத்துக்கும், ரோஜா அழகுக்கும் விசேஷம். தாமரையின் வாசனை புருஷனுடைய வாசாலகம், ரோஜாவின் வாசனை ஸ்திரீயின் வாசாலகம். ரோஜாவும் அல்லியும் முறையே உத்தானுபாதருடைய மனைவிமார் சுனீதி சுருசியைப்போல்.

சூரியனைக் கண்ட இருள்போலப் பறந்துபோய்விட்டது. சாட்சாத் பரமசிவனே பூர்வம் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வலியத் தடுத்தாட்கொண்டது போலத்தன்னையும் தடுத்தாட் கொள்ள இவ்வித இனிய ஸ்வரூபத்துடன் எழுந்தருளினர் போல் அவருக்குத் தோன்ற, அவர் ஆனந்த பரவசராய்ச் சிரமேற் கரங்கூப்பி 'சுவாமி நான் செய்தது அபவாதம், மன்னிக்கவேணும் சுவாமி, அடியேனுக்கு ஒன்றும் தெரிய வில்லை. சித்தம் பிரமித்து மயங்குகிறது, நான் பண்ணினது அபராதம், க்ஷமிக்க வேணும்' என்று வாய்குழறச் சொல்லிச் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தார். சுவாமிகள் முத்துஸ்வாமியய்யரைத் தன்னருகே வரச்சொல்லி பலமாய் ஆசீர்வதித்துத் தனது வலது திருக்கரத்தால் அவரைத் தடவிக்கொடுத்து, குளிர்ந்த பார்வை சாதித்துப் பிறகு 'பயித்தியக்காரன், குழந்தை, ஒன்றும் தெரியவில்லை; அவசரப்படுவார்களா அப்பா, பொறுத்துக்கொள். அதைக் காட்டிலும் மேலானதாய் நாம் இந்த உலகத்தில் செய்யக் கூடியது ஒன்றும் இல்லையப்பா; உண்டு என்று சொல்வதற்கும் நமக்கு அதிகாரமில்லையடா; சாயந்திரம் சந்தியாவந்தனம் பண்ணினாயோ அப்பா முத்துஸ்வாமி!' என்று வெகு மிருது வாய்க் கேட்க, முத்துஸ்வாமியய்யர் அதிக வெட்கமடைந்து தலையைக் கீழே தொங்கவிட்டு மௌனமாய் நிற்க, சுவாமி கள் 'கோயிலில் பொற்றாமரையிருக்கிறது; அங்கே போய் சந்தியாவந்தனம் பண்ணி ஜெபம் பண்ணி விட்டு வா; தைரியமாயிரு. பயப்படாதே!' என்று சொன்னார். முத்து ஸ்வாமியய்யரும் அப்படியே எழுந்து மறுபடியும் நமஸ்கரித்து, 'திரும்பி வருவதற்குள் சுவாமிகள் எங்கே மறைந்து விடுகிறாரோ, நாம் இன்னும் அவரைச் செவ்வையாய் அறிய வில்லையே' என்ற சந்தேகத்தை மனதில் வைத்து சுவாமி களுடைய திவ்யமங்கள ஸ்வரூபத்தில் ஈடுபட்டவராய் அப் பரிசுத்தக் காட்சியினின்றும் கண்களைப் பறிக்கமாட்டாமல் மயங்கி நிற்க, சுவாமிகள் 'ஒன்றும் யோசிக்காதே, போ. போய் விட்டுச் சீக்கிரம் வா ! வேறு எங்கேயும் தங்காதே!' என்று கட்டளையிட, முத்துஸ்வாமியய்யர் திரும்பித் திரும்பிப் பார்த் துக் கொண்டு பொற்றாமரைக் குளத்தை அடைந்து ஜலத்

தைப் பார்த்தார். அது வெகு தெளிவாயிருந்தது. அதில் நட்சத்திரங்கள் தெரிந்தது. 'தெளிவான மனதுக்கு சுவாமியும் இப்படித்தான் தெரியுமோ' என்று சொல்லி நிமிர, உலக விசாரங்கள் ஒன்றுமில்லாமல் நம்மைப் பார்த்தும் பரிதபிக்காது நமது அஞ்ஞானத்தைக் கண்டு புன்சிரிப்புச் செய்யும் மேதாவிகளாகிய நட்சத்திரங்களைக் கண்டார். கண்டு 'அடா, இழவே உங்கள் மௌனந்தான் என்ன மௌனம்! மனிதன் இங்கே கிடந்து சாகவும் மாட்டாமல், பிழைக்கவும் மாட்டாமல் திண்டாடுகிறான், என்ன நிர்விசாரம் உங்களுக்கு!' என்று சொல்லி 'சாகவுங்கூட நமக்குச் சரிப்படவில்லையே, உயிரை விட்டு ஓடிப்போய்விடுகிறேன் என்றால் அதற்கு'மா தடை! நமக்கு இன்னும் என்ன அனர்த்தங்கள் பாக்கி யிருக்கிறதோ! என்னவோ! இன்னும் பார்ப்போம். இந்த மகா புருஷர், அவர் யார், நாம் யார்? எப்படிக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. சுவாமி இல்லை யென்று சொல்லவும் கூடுமா! நாம் பாவம் பண்ணிக் கஷ்டப்பட்டால் அதற்குக் கடவுளா பாத்தியம். பகல் முழுவதும் என்ன அக்கிரமமான வார்த்தைகளைச் சொல்லி அபசாரப்பட்டேன். சுவாமி, நீ இல்லை என்று சொல்ல நானா அருகன்? உன் கோயிலில் இடி விழ என்று வைததும் நான்தான்! உன் மாயை தெரியவில்லை என்று வாழ்த்துவதும் நான்தான். எனக்கு ஒன்றும் தெரியவில்லை. உன் செய்கை விசித்திரமாயிருக்கிறது. சுவாமி, நீதான் காப்பாற்றவேணும்' என்று பிரார்த்தனை செய்து கடவுளைப் பல மூர்த்தங்களாலும் தன் மனதில் ஆவாஹனம் செய்துகொண்டு சந்தியாவந்தனத்தைப் பக்தி வைராக்கியத்துடன் அட்சரமட்சரமாய் உச்சரித்து அர்க்கியாதிகளுடன் நியமப்படி முடித்து, 'ஐயோ உன் ஸ்வரூபந்தான் என்ன ஸ்வரூபம்! உன் மகிமைதான் என்ன மகிமை! இந்த மேகங்கள், இந்த நட்சத்திரங்கள், மரங்கள்; மனிதர்கள், எல்லோருக்கும் நீதான் அதிபதி. எல்லாமுன்னடிமையே எல்லா முன்னுடைமையே யெங்கணும் வியாபி நீ' என்று சிந்தித்து 'யாரே உன் மகிமையை அறிந்து பூஜிப்பார். எங்கும் நிறைந்திருக்கிற உன்னை நான் எப்படி அர்ச்சிப்பேன்!

'பண்ணேனுனக்கான பூசையொருவடிவிலே
பாவித்திறைஞ்சவாங்கே
பார்க்கின்ற மலரூடுநீயே யிருத்தியப்
பனிமல ரெடுக்கமனமு
நண்ணேனலாமலிரு கைதான்குவிக்கவெனி
ஞளுமென்னுளநிற்றி நீ
நான் கும்பிடும் போதரைக் கும்பிடாதலா
ஞன் பூசைசெய்ய முறையோ!
விண்ணே விஞதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்ககேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே யவித்தின் முளேயே
கண்ணே கருத்தே யெனெண்ணே யெழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருஞகரக்கடவுளே!

என்று வாய்விட்டுப் பாடியுருகி, காயத்திரி ஜெபத்துக்கு ஆரம்பிக்க, அத்தருணத்தில் கஞர், கஞர், கஞர் என்று கோயில் அர்த்தசாம மணியடித்தது. நிச்சப்தமான ராத்திரி சமயத்தில் கடலோசை போன்ற கம்பீரமான அந்த மணி முழக்கம் காதில் பட்டவுடன் முத்துஸ்வாமியய்யர் மயிர்க்கூச் செறிந்து புளகாங்கித்து 'ஐயோ உன் மகிமைதான் என்ன மகிமை' என்று சொல்லமாட்டாமல் சொல்லி ஆனந்தித்து 'உன் பாதம் எனக்கில்லேயோ; நான் எப்போது உன் கருணேக்கு உரித்தாவேனே; என் மனக் கவலேயை ஒழிப்பது உனக்கருமையோ' என்று உலக ஞாபகமழிந்து உருகி மெய்ம் மறந்து, நைந்து, ஏங்கி, இரங்கி, கடுகைத் துளேத்துக் கடலே யடைத்தது போல சர்வோத்கிருஷ்டமான சகல வேதாந்த தத்துவங்களேயும் ஒருமித்து உருட்டித் திரட்டிச் சாரசங்கிரஹ மாகச் செய்யப்பட்ட 'ஓம்' என்ற மூலப்பிரணவ மந்திரத்தை உச்சாரணம் செய்யும்பொழுது, இவருடைய பிராந்தியோ அல்லது குரு தரிசன விசேஷமோ அறியேன்—திடீரென்று பூமி முதல் ஆகாயம் மட்டும் நிலவினும் இனிதாய், வெயிலினும் காந்தியாய், தென்றலே உருவுகொண்டு வந்தாற்

போல ஜில், ஜில், ஜில் என்று குளிர்ந்து மந்தமாய் அசைந்து ஆடும் ஒரு திவ்ய தேஜஸானது இடைவெளியற்று எங்கும் பரந்ததுபோல அருக்குத் தோன்றிற்று. * அவ்வாறு தோன்றிய அந்தத் தேஜோ மகிமையில்,

ஆறெலாங் கங்கையாய வாழிதாம்
கூறுபாற் கடலேயே யொத்த குன்றெலாம்
ஈறிலான் கைலேயே யியைந்த.

—எந்தச் சிறு நதியும் கங்கா நதியினுடைய கௌரவத்தை யடைந்து பகவான் நாம பஜனையைச் செய்துகொண்டு சென்றது. சமுத்திரமோ தனது சோகத் தொனியை மறந்து சாக்ஷாத் பகவானுடைய சயன ஸ்தானமாகிய க்ஷீராப்தியைப் போல விளங்கி, அந்தப் பகவானுடைய குணங்களை விஸ்தரிக்கக் கம்பீரமான தனது குரல்கூடக் காணுது 'அன்பெனும் நறவமாந்தி,' 'மூங்கையான் பேசலுற்ருன்' என்றபடி கட் குடித்த ஊமை பேசத் தொடங்கினுற் போலக் கைகளையெல்லாம் நீட்டிச் சொல்லமாட்டாமற் சொல்லி ஆனந்தித்தது. மலேகளெல்லாம் சாக்ஷாத் கைலாச பர்வதத்தைப்போலக் காம்பீரியத்தை யடைந்து கடவுளினுடைய ஆலயங்கள்போல நின்றன. மரங்களெல்லாம் நூதனமான பசிய இலேகளை ஆடையாக உடுத்துத் தேன் தெளித்துத் தாது தூவி வசந்தமாடின. புஷ்பங்களோ பகவத்தாராதன மஹோற்சவத்தைப் பரிமளிக்க, அரம்பையர் விசும்பினுடு மாடவினுடின. பட்சிகளெல்லாம் உலகையிகழ்ந்து உயரப் பறந்து விஞ்சையர் குழாமென விசும்பிடை நின்று கடவுளேயே

* அன்று பகல் முழுவதும் கடவுளே நிந்தித்துக்கொண்டிருந்த அவருக்கு அவ்வளவு பக்தி எவ்விதம் உண்டாகும் என்று சிலர் சங்கிக்கலாம். ஆனுல் சுபாவத்தில் அவர் வெகு பக்திமான் என்று முன்னமேயே பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. அன்று வந்த நாஸ்திக வெறுப்பு மத்தியில் வந்ததோர் ஜ்வரம் போல. ராமர்கூட சீதையைப் பிரிந்த காலத்து அறத்தினுலினி யாவதென, தர்மத்தினுல் இனி யென்ன பிரயோசனம் என்று பலமுறை புலம்பவில்லேயா?

நோக்கிக் கானம் செய்தன. காற்று கந்தப்பொடிகளைத் தூவிக் கானத்தால் உலகை நிரப்பி எங்கும் பரவி எல்லோரையும் திருப்தி செய்து பகவதாராதன மங்கள காரியாதிபனுய் விளங் கிற்று. மிருகங்கள் தத்தம் வைஷம்யங்களை மறந்து வாலை யுயர்த்தி நாலு காலாலும் துள்ளித் துள்ளி ஓடின. கேவலம் மனிதனும்கூட தரையையே மோந்து, தரையையே பார்க்கும் பன்றிப் பார்வையைவிட்டு மேனோக்கி மதிமயங்கி,

அன்பெனுமாறு கரையதுபுரள,
நன்புலனொன்றி நாதவென்றரற்றி
உறைதடுமாறி உரோமஞ்சிலிர்ப்ப
கரமலர்மொட்டுத் திருதயமலர
கண்களிகூர நுண்டுளியரும்ப,
இடரைக்களையு மெந்தாய் போற்றி
ஈசாபோற்றி யிறைவாபோற்றி
அரசேபோற்றி அமுதேபோற்றி
முத்தாபோற்றி முதல்வாபோற்றி
அருமையிலெளிய அழகேபோற்றி
கருமுகிலாகிய கண்ணேபோற்றி

என்று போற்றிப் போற்றித் துதித்துக் கொண்டாடினன்.

பூலோகத்துப் பூஜாரீதியிப்படியிருக்க ஆகாயத்திலோ ஆதித்தர், வசுக்கள், மருத்துவர், திக்குப்பாலகர் முதலிய தேவர்களும் அகஸ்தியர், ததிசி, பிருகு, மார்க்கண்டர், வசிஷ்டர், பாரத்துவாசர் முதலிய முனிவர்களும், யட்சகர், கந்தருவர், இயக்கர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர் முதலிய கணங்களும் மின்னற்கொடி போலவும், இந்திர தனுசைப் போலவும், பளீர் பளீர் என்று மின்னிக்கொண்டு கூட்டம் கூட்டமாக நிற்க, தும்புருநாரதாதிகள் சுரபத், வீணை, தம்பூரு முதலிய வாத்தியங்களைக் கொண்டு ஓம் ஓம் என்ற ஓங்கார சுருதியையே சுருதியாகக்கொண்டு தேவகானம் செய்ய, சூரிய, சந்திர, நட்சத்திரங்களாகிய அகிலாண்ட கோடிகளும் தத்தம் பெரிய ரூபங்களுடன் ஒழுங்காய் ஒன்றை யொன்று அனுசரித்துக் கண்ணெட்டிய தூரமட்டும் வச்சிரம்

வைடூரியம், மரகதம், மாணிக்கம், பச்சை, கோமேதகம், நீலம், பவளம் முதலிய பற்பல வருணங்களாய்ப் பிரகாசித்துப் பகவானை நோக்கி அமிர்தமயமான கானத்தைச் செய்து ஓர் பயங்கரமான அழகுடன் வெகு கம்பீரமாய் உருள, இவை யெல்லாவற்றிற்கும் மேல் சகல லோகத்துக்கும் காரணனாய், சகல லோகத்துக்கும் நாயகனாய், சர்வலோக சரண்யனாய், நித்தியனாய், நிர்மலனாய், பெருமையினும் பெருமையாய், இனிமையினுமினிமையாய், அநேக கோடி சூரியர்கள் ஏக காலத்து உதித்தாற்போல பார்க்கப் பதினாயிரங் கண்களும் போதாத அபரிமிதமான ஜோதி ஒன்று தோன்றுவதை முத்துஸ்வாமியய்யர் கண்டார். தனது கண்களால் கண்டு பாதாதிகேசம்வரை மயிர்க்கூச்செறிந்து, புளகாங்கித்து, ஆ! என்று திறந்த வாயும், இமையாது விழித்த கண்ணுமாய் ஆனந்த சாகரத்தில் மூழ்கி, மதிமயங்கி, மெய்ம்மறந்து, பரவசமாய்ப் பிரமித்தும் ஸ்தமித்தும் நிற்க, காட்டி யொளிக்கும் மின்னல்போல் ஒரு கணத்துள் மறைந்தது அக்கரையில்லாக் காட்சி. மறைந்தும் நெடுநேரமாக முத்து ஸ்வாமியய்யருக்கு உணர்ச்சி வரவில்லை. உணர்ச்சி வந்த வுடன் 'கண்டேன் கண்டேன் காணாததைக் கண்டேன்' என்று மகிழ்ந்து,

'மண்ணாதிபூதமெல்லாம் வைத்திருந்த நின்னிறைவை
கண்ணாரக்கண்டு களித்தேன் பராபரமே
மண்ணுமறிகடலு மற்றுளவு மெல்லாமுன்
கண்ணிலிருக்கவுநான் கண்டேன் பராபரமே.'

'ஆதியநாதியுமாகி - எனக் கானந்தமா யறிவாய் நின்றிலங்குஞ் சோதி மௌனியாய்த் தோன்றி-அவன்-சொல் லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி - சங்கர சங்கர சம்பு - சிவ - சங்கர சங்கர சம்பு.'

என்று ஆனந்தக் களிப்புற்று வாயில் வந்தபடி யெல்லாம் பாடி மண்டபத்தை யடைந்து சுவாமிகளைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவரது திருவடித் தாமரைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு,

'தங்காமல் வந்தொருவன் தற்சொருபங் காட்டி யென்னை
கொள்ளைப் பிறப்பறுக்கக் கொண்டான் குருவடிவம்
கள்ளப் புலனறுக்கக் காரணமாய் வந்தாண்டி'

என்று அவரைப் பாடி ஸ்துதி செய்து எழுந்து தான் கண்டதைச் சொல்லி 'தேவரீர் யாரோ அறியேன். தங்களுடைய தரிசன விசேஷத்தினுலே தேவர், முனிவர் காணுததைக் கண்டேன், கண்டேன்! என்னுடைய இந்த ஏழைக் கண்களால் கண்டேன். "வேத வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா" ஆதிதேவனை நான் அறிந்தேன். தங்களைத் தரிசித்த பலனைக் கண்டேன். என்னைத் துர்மரணத்திலிருந்து ரட்சித்த தாங்கள்தான் அக்ஞானத்திலிருந்து ரட்சிக்க வேண்டும், சரணம், சரணம், சரணம்' என்று மறுபடி அவர் பாதத்தில் நமஷ்கரிக்க, அவர் அவரை எழுப்பி அருகே உட்காரவைத்து 'இதென்ன மயக்கம், சற்றுமுன் நீதானே "சுவாமியேது, பூதமேது" என்று சொன்னுய்' என, முத்து ஸ்வாமியய்யர் 'நான் பண்ணிய பெரிய அபசாரத்தை மண்ணிக்க வேணும். நான் பண்ணினது பாவம்; தெரியாமல் செய்துவிட்டேன். நான் என்ன தவறுதல் செய்தாலும் கடவுள் கிருபை எனக்கு இல்லாமற் போகவில்லை. தங்களைத் தரிசித்த எனக்குப் பெண்டாட்டி, பிள்ளை, தம்பி எல்லாரையும் பறிகொடுத்தென்ன நஷ்டம். என்னுடைய பிறவிப் பாசத்தை ஒழிக்கவேண்டு மென்றே கடவுள் எனக்கு விசேஷமாக அனுக்கிரஹம் செய்திருக்கிருர். உலகத்தில் விரக்தியை உண்டுபண்ணினது மல்லாமல் தங்களையும் எனக்குக் குருமூர்த்தியாய் அனுப்பியிருக்கிருர். தாங்கள் தான் காப்பாற்றவேணும்' என்று சொல்லிப் பிரார்த்திக்க, சுவாமிகள் 'பயப்படாதே, நல்ல நல்ல பூஜையைப் பண்ணி யிருக்கிருய், பகவான் உன்னிடத்தில் விசேஷ கிருபை வைப்பார். நீ இன்னும் பகவான் விஷயத்தில் கொஞ்சம் பக்தியோடுகூட மட்டும் இருப்பாயாகில் உனக்கு இன்று கிடைத்த ஆனந்த சேவை எக்காலத்தும் கிடைக்கும். நீ இப்பொழுது பகிரங்க பூதமாய்ப் பார்த்த காட்சியை உனக்குள்ளேயே இடைவிடாது நீ தரிசித்து அனுபவிக்கலாம். உன்னை அழைத்துப்போகவே என்னைக் கடவுள் இங்கு

அனுப்பியது போலிருக்கிறது. நமக்கு இனிமேல் இங்கே காரியம் இல்லை, போவோம் வா' என்று ஆக்ஞாபித்து எழுந்து மண்டபத்தை விட்டு வெளியேறி முன்னே செல்ல, முத்து ஸ்வாமியய்யர் 'இதுவும் ஓர் ஆச்சரியந்தான், நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் என்று முடிக்கிறது. நமக்கு இனி எங்கே போனாலென்ன,—கமலாம்பாள், ஐயோ இப்படியா மோசம் செய்தாய்? சிறுகுளம் நாம் பிறந்ததும், வளர்ந்ததும் —போகட்டும் என்னைப்போல பாக்கியசாலிகள் உலகத்தில் கிடையாது. அடிமுண்டை, நானே ஆசிரமம் வாங்கிக் கொள்ளப்போகிறேன் என்று தெரியுமே. அதற்குள்ளேயா அவசரம்—சீ! இந்த இழவு ஞாபகங்கள் இப்பொழுது ஏன் வருகிறது. ஐயோ, நான் இன்று கண்ட காட்சி அடாடா! என்ன அற்புதம்! என்ன அற்புதம்! ஐயோ அதல்லவோ சுகம். பேரின்பம் என்று நன்றாய்ப் பெயரிட்டார்கள். அந்தப் பாக்கியத்தை நாம் நித்தியமாய் அனுபவிப்போமானால்—

அந்தமுடனாகி யளவாமல் என்னறிவில்
சுந்திரவான்சோதி துலங்குமோ பைங்கிளியே!
'கண்ணுள் மணிபோல் இன்பம் காட்டி யென்னைப்பிரிந்த
திண்ணியவரும் இன்னும் வந்து சேர்வரோ பைங்கிளியே.'

என்று குதூகலத்துடன் மனதுக்குள் பாடிக்கொண்டு பின் செல்ல, இராப்பொழுதென்ற பயம் சற்றுமில்லாமல் இருவரும் காட்டு மார்க்கமாய்ப் பிரயாணம் செய்தார்கள்.

26

அழுதலன்றி மற்றயலொன்றுஞ் செய்குவதறியாள்

இங்கே முத்துஸ்வாமியய்யர் நிலைமை இப்படியிருக்க சிறுகுளத்திலோ, கமலாம்பாள் 'அவர் எப்பொழுது வருவாரோ, எப்பொழுது என் கலி தீருமோ' என்று ஏங்கி அவர் வரவை எதிர்பார்த்திருந்தாள். ஆருத்திரா தரிசனத்

துக்குச் சிதம்பரத்திலிருந்து விட்டுப் பிறகு வருவதாக எழுதி யிருந்ததால் ஆருத்திரா தரிசனம் எப்பொழுது கழியப் போகிறது, நான் எப்பொழுது அவர் முகத்தைக் கண்டு களிப்பேன் என்று இருந்தது அவளுக்கு. ஒரு நாள் போகிறது ஒரு யுகமா யிருந்தது. உடல் சோர்ந்து, ஒரு காரியமும் ஓடாமல், கொட்டாவி விட்டு நாட்களைக் கழித்தாள். தன் பர்த்தாவின் கடிதத்தில் பணம் திருப்பப்பட்டது என்று எழுதப்படாததினால் 'பணம் போனதுதான். அது போனால் போகிறது, அவராவது க்ஷேமமாய் வந்து சேரவேண்டும்" என்று கவலைப்பட்டாள். 'தன் கணவர் வந்த பிறகு தரித்திரத்தின் கொடுமையை அவர் உணராதபடி நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். அவர் இதுவரை அனுபவித்துவந்த சுகங்களுக்கு யாதொரு விஷயத்திலும் குறைவு வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று அதற்கு வேண்டிய ஆலோசனைகளெல்லாம் செய்துகொண்டிருந்தாள். 'வீடு இன்ன விலைக்குப் போகும், கொலுசு, காப்பு, ஓலை இன்ன இன்ன விலைக்குப்போகும், முருகு இன்ன விலைக்குப் போகும், காரையும் அட்டிகையும் என்ன குறைந்தாலும் இந்த விலைக்குப் போகும்' என்று தன் மனத்துக்குள்ளேயே விலைகளெல்லாம் திட்டம் செய்துவிட்டாள். அந்த ஊரிலேயே ஒரு சிறு வீட்டை வாங்கிவிடுவதாய்த் தனக்குள் தீர்மானம் செய்துகொண்டு ஆற்றங்கரைக்குப் போகும்போது வரும் போதெல்லாம் 'இதுதான் நம்முடைய அகம்' என்று அதை அன்புடன் கூர்ந்து நோக்கி 'ஏன், இந்த வீடு போதாமல் என்ன, கொல்லையிலே கீரைப்பாத்தி போடலாம், கறிகாய் விலைக்கு வாங்குகிறது என்றால் நமக்குக் கட்டி வருமா ? சுவரிருக்கிறது சாணம் தட்டலாம். வீடு கூட்டக் கூட வேண்டாம், நாமே பெருக்கி மெழுகிக் கொள்ளலாம்' என்று இப்படியெல்லாம் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தாள். 'பர்த்தா வந்தவுடன் அவரை இறுகக் கட்டிக கன்னம் வீங்க முத்தமிட்டு என் நகைகளை அவர் கையில் கழற்றிக் கொடுத்து விடப் போகிறேன்' என்றும், 'சுண்ணும்பு செங்கல் வால் கட்டிய வீடு போனால் போகிறது, என் அன்பாகிய பெரிய மாளிகையிலே அவரை நான் இறுத்திக் கொள்ளுவேன்"

என்றும் தன் மனதுக்குள்ளேயே பெருமை பாராட்டிக் கொண்டு மற்றவர்களிடத்தில் இதொன்றும் சொல்லாமல் 'ஸ்திரீ புருஷர்கள் அன்பாய் இருந்தால் அதற்குச் சமானம் உலகத்தில் என்ன இருக்கிறது' என்று சொல்லிக் காலம் கழித்தாள். தாங்கள் அனுபவித்த சுகங்களை நினைத்து நினைத்துச் சந்தோஷப் பட்டு அதை யெல்லாம் மறுபடி எப் பொழுது அனுபவிக்கப் போகிறோம் என்று துக்கப்பட்டாள். வீட்டிலுள்ள சாமான்களை யெல்லாம் எங்கேயோ பயணம் போகக் கட்டிவைத்தாற்போல் ஒழுங்காய் கட்டிவைத்துக் கொண்டாள். ஆருத்திரா தரிசனத்தன்று 'சுவாமி, என் பர்த்தாவை என்னிடம் க்ஷேமமாய்க் கொண்டுவந்து சேர்க்க வேண்டும்' என்று கண்ணும் கண்ணீருமாய் ஆழ்ந்த பக்தி யுடன் வேண்டிக் கொண்டாள். அன்று பகலெல்லாம் 'காக்கை ஓயாமல் கத்துகிறது. அடுப்பு சீறுகிறது, அவர் நாளை வந்துவிடுவார்' என்று எல்லாரிடத்திலும் சொல்லிக் கொண்டிருந்தாள். அந்த சந்தோஷத்தில் அவளுக்குப் போன பணம் திரும்பி வந்ததுபோல உடம்பு பூரித்தது. தன் குழந்தை லட்சுமி நல்ல இடத்தில் சேர்ப்பிக்கப்பட்டதைக் குறித்துத் திருப்தியடைந்தாள். திருவாதிரை கழிந்த மூன்றுவது நாள் தன் பர்த்தா வருவாரென்று நம்பி அவருக்கும் சேர்த்து பொழுதுக்கு முன்னேயே வெகு நேர்த்தியாய்ச் சமையல் செய்து வைத்துவிட்டு அவர் வரும் வழியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். வாசலில் வண்டிச் சத்தம் கேட்டால் இதோ வந்துவிட்டார் என்று மயிர்க் கூச்செறிந்து ஓட்ட மாய் ஓடி வாசலில் போய்ப் பார்ப்பதும், வராததைக் கண்டு மனம் வருந்தி, நடை தளர்ந்து. உயிர் சோர்ந்து, உடல் ஒடுங்கி வெறுப்புடன் கதவைச் சாத்தி மெதுவாய் உள்ளே வருவதுமாய், வாசலுக்கும் உள்ளுக்குமாக ஊசலாடிக் கொண்டிருந்தாள். திடீரென்று அவர் வந்து கதவைத் தட்டுகிறாற்போலச் சத்தம் கேட்கும். வாசலில அவருடைய வார்த்தைக் குரல் கேட்கிறாற்போல இருக்கும். ஓடோடி வந்து பார்த்துப்போவாள். அவள் உத்தேசப்படி முத்து ஸ்வாமியய்யர் வருவதானால் பத்து மணிக்கே வந்துவிட வேண்டும். மணி 11 ஆகிறது, காணோம்; 12 அடித்தது,

1 மணி, 2 மணி, 3 மணியாயிற்று; அப்பொழுதும் காணோம். நாழிகை யேற ஏற, பாம்பு கடித்த விஷம் ஏறுவதுபோல் கமலாம்பாளுக்கு மனத்துயரம் அதிகரித்தது. 'வராமலிருக்க மாட்டாரே, வரும் வழியில் என்ன ஆபத்து நேரிட்டதோ, ஒரு சங்கதியும் சொல்வாரில்லையே! பட்ட துன்பங்களெல்லாம் போதாதென்று இன்னும் என்ன நேரிட்டதோ! நம்முடைய அதிர்ஷ்டத்துக்கு எல்லாம் வருமே' என்று கண்ணீர் பெருக்கினள். 'ஐயையோ தெய்வமே, உனக்கு இது தர்மமா' என்று தெய்வத்தை நொந்தாள். சமைத்துவைத்த சோறு அப்படியே கிடக்க, ஒரு திவலை தண்ணீர்கூடக் குடியாமல் தரையில் படுத்துத் தனக்கு நேரிட்ட துன்பங்களையெல்லாம் நினைத்து நினைத்து, யார் ஆற்றியும் ஆறாது விம்மி விம்மி யழுதாள். அழுது, அழுது கண் சிவந்தது, தலைவலித்தது, முகம் வாடிக் கருகியது. 'அழுது கொண்டே பிராணனை விட்டு விடுகிறேன்' என்று புலம்பினாள். 'ஐயையோ' என்று கதறித் தீயிலிட்ட புழுப்போலத் துடித்தாள். இப்படி ஒருநாள், இரண்டு நாள், மூன்று நாள், ஒருவாரமாயிற்று. அவர் வரவேயில்லை. 'இனிமேல் அவர் வருவதேது. இவ்வளவுதான் நான் கொடுத்துவைத்தது-ஐயோ இப்படியா தீரவேண்டும். எங்களுறவு இப்படித் தீர்ந்து போய்விடு மென்று நான் சொப்பனத்திலும் நினைக்கவில்லையே. "நீ எங்கேயாவது போ, உனக்கும் எனக்கும் தீர்ந்தது" என்று சொல்லி உதறித் தள்ளினீர்களே அப்படியே செய்துவிட்டீர்களே, ஐயையோ உங்களை விட்டு நான் எவ்விதம் பிரிந்திருப்பேன். உயிரை விடவும் மனம் துணியவில்லையே. நீங்கள் இருக்கிற இடமாவது எனக்குத் தெரிந்தால், அது எமலோகமானாலும் சாவித்திரியைப்போல நான் துரத்திக்கொண்டு போவேனே. அனாதையாய் இப்படி விட்டுப் போய்விட்டீர்களே. உங்களுக்கு இது தர்மமா! ஐயோ சிதம்பரத்துக்குத் தான் வந்தாரோ வரவில்லையோ. இத்தனை ஆபத்துகளுக்கு அப்புறம் உயிரையும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா என்று பிராணனையே விட்டுவிட்டீர்களோ? ஒன்றும தெரியவில்லையே. என்ன செய்வேன். ஐயோ நடராஜா, நீ போனது முதல் நான் படும்

துன்பம் இவ்வளவு அவ்வளவில்லை. ஒரு செய்தியும் சொல் வாரில்லையே. நான் என்ன செய்வேன் தெய்வமே! பூமியில் பெண்ணாய்ப் பிறந்து என்னைப்போல் அனுபவிப்பவர்கள் கிடையாது'—என்று புலம்பி யழுது, கீரைத்தண்டு போலத் துவண்டு, தண்ணாய் உருகி, மூர்ச்சையாய்க் கிடந்தாள். அப்படிக் கிடந்து தூங்கிய தூக்கத்தின் மத்தியில் முத்து ஸ்வாமியய்யர் காவி தரித்த ஒரு சந்நியாசி ரூபமாக வந்தது போலவும், வந்து 'அடி பாவி, இந்தா இந்த மஞ்சளைப் பிடி. நான் ஆசிரமம் வாங்கிக் கொண்டாய் விட்டாது. இனிமேல் இவ்வளவுதான் உனக்கும் நமக்கும்' என்று சொல்லி வெகு இரக்கமான பார்வையுடன் பார்த்துப் பிறகு மறைந்தது போலவும் அவளுக்குத் தோன்ற, அவள் உடனே கதறி விழிந்தெழுந்து விளக்கேற்றி 'ஐயையோ சந்நியாசியாகவே போய்விட்டீர்களா? நீர் ஆண்டியானால் நான் ஆண்டிச்சி; உமக்கு ஊழியஞ் செய்து நாய்ப்போலப் பின்தொடர்ந்து வரமாட்டேனா! என்னை அனாதையாய் விட்டுப்போவதும் தர்மமா' என்று புலம்ப, பக்கத்திலிருந்தவர்கள் "என்னடி கமலாம்பாள், ஏனடி அம்மா, என்ன கனாக் கண்டாய்? ஏன் புலம்புகிறாய்? பயப்படாதே. அழாமல் சொல்லு," என்று கேட்க, அவள் தான் கண்ட கனாவைச் சொல்லி இன்னும் அதிகமாக அழ, "பயித்தியக்காரி, இப்படித்தான் அழுவார்களா? அதிசயமாயிருக்கிறது! கனாக்கண்டால் அதற் கென்ன இப்பொழுது! அன்றைக்கு அப்படித்தான் சேஷி அவள் அகமுடையான் செத்துப்போய் விட்டதாகக் கனாக் கண்டாள். மறுநாளே அவன் பூதம்போலே எதிரே வந்து நிற்கவில்லையோ; அதற்குக்கூட அவள் அழவில்லையே; அடி பயித்தியக்காரி! நாளை வந்துவிடுவான் பார் உன் அகமுடையான்; நான் சொன்னேன் என்று பாரேன்" என்று ஆற்றினார்கள். கமலாம்பாள் விம்மி, விம்மி யழுதுகொண்டு வாயால் பானம் பண்ணப்பட்ட கண்ணீருடன் "அவர் இனிமேல் இங்கே வருவார் என்று எனக்குத் தோன்ற வில்லை" என்று உடல் நடுங்கிச் சொல்ல, அவர்கள் ஏதோ தங்களுக்குத் தெரிந்த சமாதானங்களைச் சொல்லித் தேற்றினார்கள்.

27

தன்வினை தன்னைச் சுடும்

மறுநாள் பொழுது விடிந்தது. விடிந்து இரண்டு நாழிகைக்கெல்லாம் மூடப்படாத மொட்டைத் தலையும், வாழை மட்டை, கரண்டிக்காம்பு, நாலித்துணி முடிப்பு, கம்பளிக் கயிறு, எருமுட்டை முதலிய அலங்கார சாமான்கள் பிடித்த கையும், சுண்ணும்பு பூசிய கன்னமும், மஞ்சள் கீறிய நெற்றியுமாய், ஒரு கைம்பெண் நடு வீதியிலிருந்து ஓடி ஒற்றை வாடையிலிருந்த சப்-மாஜிஸ்ரேட்டு வைத்தியநாதய்யர் வீட்டுக்குப் போய், "வைத்திபநாதா, வைத்திபநாதா, அடே பைத்திய நாதா!" என்று கூவ, உள்ளே இருந்த வைத்தியநாதய்யர் திடுக்கிட்டு 'இப்படி யார் நம்மைக் கூப்பிடக்கூடும்' என்று வாசலில் வந்து பார்க்க, சுப்பிரமணியய்யர் சம்சாரம் பொன்னம்மாள் மேற்சொல்லிய வேஷத்துடன் நின்றுகொண்டிருந்தாள். அவள், "அடே வைத்தியநாதா, என் மைத்துனன் இன்னமே இங்கே வரமாட்டார். நான் யார் தெரியுமா? சுப்பிரமணியய்யர் என்று இருந்தாரோ அல்லவோ அவர் பெண்டாட்டி, அவர் போய்விட்டார். நீ ஆயிரம் ரூபாய் கொடு. தீட்சிதருக்குக் கொடுக்கவேண்டும். எனக்கு மருந்து வைக்கத் தெரியுமே. சுப்பம்மாள்கூடப் போயிருந்தாளடா சிதம்பரத்துக்கு. என் மைத்துனர் இங்கே வரமாட்டார் இனிமேல்" என்று சொல்லி திடும் திடும் என்று குதித்து, பிறகு "சுப்பிரமணியய்யர் நல்லவர், செத்துப்போய்விட்டார். நான் கொல்லவில்லை அவரை. நான் கொல்லவில்லை. கண்ணும் விழியும் பார், நீ அடி அவரை, குத்து கரண்டியைக் கொண்டு. கம்பளிக் கயிற்றைக் கொண்டு கட்டி இதோ இந்த வாழை மட்டையைக் கொண்டு அடித்து இந்தத் துணியைச் சுற்று கழுத்திலே, தலையைச் சரை, பார்க்கிறாயா, என்ன பார்வை. ஐயோ என்னழகு துரையே, என்னைக் கெடுத்த ராஜாவே நான் கெட்டேனே, கொள்ளைக் குடுமியிருக்கிறது எனக்கு, நான் நிரம்ப அழகு. எங்கள் அம்மாள் பொல்லாதவள், ராட்சஸி, அவள் வந்துவிடுவாள் உள்ளே போகலாம் வா' என்று பிதற்றி

"நான் உனக்கு ஒரு சங்கதி சொல்லுகிறேன், ஒருவரிடமும் சொல்லாதே'' என்று கேட்க, வைத்தியநாதய்யர் 'ஓஹோ இவளுக்குச் சித்தம ஸ்வாதீனமில்லை. அடடா இப்படியா போக வேணும். கொஞ்ச நாளைக்கு முன்னேயே ஏதோ ஒரு மாதிரியாய் இருப்பதாகச் சொல்லிக்கொண்டார்களே, பயித்தியமே பிடித்துவிட்டதா' என்று பரிதபித்தார்.

சுப்பிரமணியய்யர் சாகும் சமயத்தில் நடந்த விருத்தாந்தத்தை விஸ்தாரமாகச் சொன்னோம், அவர் நடுராத்திரியில் பொன்னம்மாள் கையைப் பிடித்துக்கொண்டு பல்லைக் கடித்து கண்கள் தீப்பறக்க 'சண்டாளி, ராட்சஸி' என்று திட்டி அடிக்க வந்தது அவளுடைய ஞாபகத்தைவிட்டு மறையவேயில்லை. அப்பொழுது அவள் நிரம்ப பயந்துபோய்விட்டாள். தன் புருஷன் மரணத்துக்குத் தான் காரணமானதால தன்னைப் பிரமஹத்தி சுற்றும என்ற பயமும், அன்று இராத்திரி அவர் விழித்த கோர விழி உண்டுபண்ணின பயமும் அவளுடைய சித்தத்தை நிலைகுலையச் செய்தது. எப்பொழுதும அதே ஞாபகமாயிருந்ததால் அது அவள் மனதில் ஆழமாய்ப் பதிந்துகொண்டு அவளுக்கு உள்ள இயற்கை அறிவைத் துரத்தியது. பிறகு, கமலாம்பாளுக்கு விரோதமாய் சங்கரியம்மாளும் சுப்பம்மாளும் சேர்ந்து செய்த துராலோசனைகளும், முத்துஸ்வாமியய்யரை ஊருக்கு வராதபடி செய்த செய்கையும் அவளுக்குப் பாக்கியிருந்த சித்த ஸ்வாதீனத்தையும் ஒழித்துவிட்டது. 'தன் வினை தன்னைச் சுடும்' என்ற சொல் அவளுக்கு நன்ருய்ப் பலித்தது. பொன்னம்மாளுடைய நடத்தை துர்நடத்தையானலும் அவள் அதற்குத் தக்க வலிய சித்தமுள்ளவளல்ல. அவளுடைய மனது தன்னுடைய செய்கைகளைத் தனக்கே ஒன்றுக்குப் பத்தாய்க் காட்டக்கூடிய பூதக்கண்ணுடி போன்றது. சில கண்ணுடி விளக்குகள் தீபத்தின் ஒளியை அதிக பிரகாசமாய்க் காட்டக்கூடியதாயிருந்தும் காந்தி மிதமிஞ்சிப் போய்விட்டால் உஷ்ணம் தாங்காது உடைந்து போவதுபோல, அவளுடைய மனதும் சமயத்தில் உடைந்துபோகக்கூடியபடி வலிமையற்றது. அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிற சங்கதியைச் சங்கரியம்மாள் எவ்வளவு மறைத்து வைத்தும் ஊருக்கெல்லாம் தெரிந்து

போய்விட்டது. அவள் வீட்டில் தக்க காவலில் வைக்கப்பட்டாள். நூதன விதந்து ஆனதால் புருஷன் இறந்துபோய் ஒரு வருஷமாகும் வரை வெளியே போகக்கூடாதென்ற ஜாதி நிபந்தனையை மீறி அவள் பலமுறை வெளியேற உத்தேசித்ததாலும், வீட்டுக்கு வந்தவர் போனவர்களிடமெல்லாம் பிதற்ற ஆரம்பித்ததாலும், அவளைச் சங்கரியம்மாள் ஒரு தனி உள்ளில் போட்டு அடைத்து நிர்ப்பந்தப்படுத்தினாள். யாராவது பொன்னம்மாள் எங்கே என்று விசாரித்தால் 'படுத்துத் தூங்குகிறாள். பத்துத் தேய்க்கிறாள்' அல்லது 'அவளுக்கு வெளியிலேயே வரப் பிடிக்கவில்லை. உள்ளேயே முக்காடிட்டு அழுதுகொண்டிருக்கிறாள்' என்று இவ்வித சமாதானங்களைச் சொல்லி மறைத்துவிடுவாள். இவ்விதக் காவலிருந்தும் அன்று ஏதோ தற்செயலாய் கதவு பூட்டப்படாதிருந்ததால் பொன்னம்மாள் அதுதான் சமயம் என்று சந்தடி செய்யாமல் வெளியேறி அந்தத் தெருவில்கூட நில்லாமல் ஒற்றை வீதிக்கு வந்துவிட்டாள். அது காலை சமயமானதால் ஊரிலுள்ள புருஷர்களெல்லாம் ஆற்றங்கரைக்குப் போயிருந்தார்கள். ஸ்திரீகளெல்லாம் வீட்டுக்குள் வேலையாயிருந்தார்கள். பொன்னம்மாளைத் தடுக்க ஒருவருமில்லை. அவள் நேரே வைத்தியநாதய்யர் வீட்டுக்கு வந்து மேலே சொல்லியபடி பிதற்றினாள். வைத்தியநாதய்யருக்கு நெடுநாளாய்க் குழந்தை நடராஜனைப் பற்றி அவள் மேலே சந்தேகமுண்டு. மேலும் தன் புருஷனை மருந்துகொடுத்து அவள் கொன்றுவிட்டாள் என்ற வதந்தி அவருடைய காதுக்கும் எட்டியிருந்தது. ஆகையால் தன்னுடைய முக்கிய சிநேகிதரான முத்துஸ்வாமியய்யருடைய குடும்ப சரித்திரத்தை அறிய அதுதான் சமயமென்றெண்ணி, அவர் உள்ளே ஒருவரையும் விடவேண்டாமென்று கண்டிப்பான உத்தரவு கொடுத்துச் சேவகர்களை வாசலிலே நிறுத்திவிட்டுப் பொன்னம்மாளைத் தொடர்ந்து உள்ளே செல்ல, அவள் 'பாலிலே கலந்தால் தெரியாது. குடம் குடமாக வாயில் எடுத்துவிட்டான் கட்டையிலே போவான், கரியாய்ப் போவான். பிசாசு விழிக்கிறாற்போல் விழியைப்பார். குத்து கண்ணை, இதோ இந்த வாழ மட்டையைக் கொண்டு அடி. எங்கள் மைத்துனன் இன்னமே

வரமாட்டார், மொட்டைமுண்டை'—என்று மறுபடியும் சரமாரியாக ஆரம்பிக்க, வைத்தியநாதய்யர் "ஏன் முத்து ஸ்வாமியய்யர் வரமாட்டார் என்கிறாய்? என்ன விசேஷம்? உனக்கென்னமாய்த் தெரியும்?" என, "போடா எனக்கா? கூடிப் பேசிப்பேசிக் குடியைக் கெடுத்தார்கள்; அதிலே நான் கிடையாது. இல்லே, நிஜமாக நான் கிடையாது தீட்சிதருக்கு 500 ரூபா, சுப்புவுக்கு 500 ரூபா கொடுக்க வேணும். ஆமாம் எனக்குத் தெரியாது, நான் மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். ஐயையோ கண்ணைப்பார், குத்து. ஏது தெரியவில்லேயோ, ஐயோ என் அழகு துரையே, என்னைக் கெடுத்த ராஜாவே, செத்துப்போய்விட்டாயே, நான் கொல்லவில்லே, கொல்லவில்லே' என்று இப்படிப் பிதற்றிக்கொண்டு போக இந்தப் பிதற்றுதலிலிருந்து வைத்திய நாதய்யர் சமயோசிதமான கேள்விகளைக் கேட்டு அவளுடைய மனதைத் தன் வழி திருப்பி, வேண்டிய சங்கதிகளைக் கிரகித்துக்கொண்டு விட்டார். சங்கரியம்மாள், ஈசுவர தீட்சிதர், சுப்பம்மாள் ஆகிய மூன்று பேரும் கூடிப் பேசிக் கமலாம்பாளைப்பற்றி முத்துஸ்வாமியய்யரிடத்தில் அபவாதம் பேசி அவர் ஊருக்கு வராதபடி செய்துவிட்டார்களென்று அவருக்குத் தெரிந்தது. இதற்குள்ளாகச் சங்கரியம்மாளும் சுப்புவும் பொன்னம்மாளைக் காணமல் தெருவெல்லாம் வீட்டுக்கு வீடு கூக்குரலிட்டுத் தேடிக்கொண்டு கடைசியாய் வைத்தியநாதய்யருடைய வீட்டுக்கு வந்தார்கள். உடனே வைத்தியநாதய்யர் அவர்களை அப்படியே நிற்கும்படி கட்டளை யிட்டு அவர்களை வெளியில் விடாதபடி போலீஸ்காரருக்கு உத்தரவு கொடுத்து ஊரிலுள்ள முக்கியமான பெரிய மனிதர் களுக்குச் சொல்லியனுப்பி அவர்களிடம் தான் பொன்னம் மாளிடமிருந்து கிரகித்த விர்த்தாந்தத்தைச் சொல்லி அவளு டைய பிதற்றுதலைக் கொண்டு அதை ருசுப்படுத்த, ஊரார் அனைவரும் சங்கரியையும், சுப்புவையும் வாயில் வந்தபடி யெல்லாம் திட்டி அவமானம் செய்தார்கள். வைத்திய நாதய்யர் ஈசுவர தீட்சிதரையும் வரவழைத்து இம்மூன்று பேரையும் சிறைச்சாலையில் வைக்கும்படி கட்டளையிட்டு விட்டார். இவர்கள் ஒவ்வொருவரும் 'உன்னாலே வந்தது

இவ்வளவும், உன் பெண்ணுக்காக என்னைக் கெடுத்தாயே' என்றும், 'உன்னாலே வந்தது இவ்வளவும், நீதானேயடி யோசனை சொன்னாய்' என்றும், சிறைச் சாலைக்குள், ஒருவரை ஒருவர் வைது, திட்டி, மடிபிடித்துக் கை கலந்து சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். ஈசுவரதீட்சிதர் லஞ்சம் கொடுத்துத் தான் தப்பிப் போய்விடலாமென்று நம்பி மௌனமாய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

இது நிற்க, வைத்தியநாதய்யர் கிரஹத்தில் நடந்த விருத்தாந்தம் கமலாம்பாளுக்கு எட்டியபொழுது கமலாம்பாள் "ஐயோ என்ன பாவம் பண்ணினேனோ, நன்றாய் அனுபவிக்கின்றேன். அவர்களைச் சொல்லக் குற்றமென்ன, என் பாவம் அவர்களை அப்படிக் கொடுமை செய்யத் தூண்டிற்று. அவர்கள் என்ன செய்வார்கள். இந்த அபகீர்த்தியை நம்பி எங்கே அவர் தேசாந்திரமே போனாரோ' அல்லது பிராணனைத்தான் விட்டுவிட்டாரோ. ஐயோ இப்படியும் வருமா! தெய்வமே அவரை நான் எப்பொழுது காண்பேன்? என் கற்பை அவருக்கு எப்படி ருசுப்படுத்துவேன்" என்று அழ, சுற்றியிருந்தவர்கள் அவளைத் தேற்றினார்கள், வைத்தியநாதய்யர் இந்தப் பெரிய குடும்பங்கள் இப்படிச் சீர்குலைந்ததைக் கண்டு பரிதபித்து முத்துஸ்வாமியய்யருடைய பெரிய தகப்பனார் பிள்ளையாகிய மஞ்சக்குப்பம் டிப்டி கலெக்டர் நாராயணசாமி அய்யருக்கு ஒரு தந்தி கொடுத்து அவர் வரும் வரையில் தானே அவர்களுடைய கிரஹ கிருத்தியங்களைக் கவனித்துக்கொண்டு வந்தார்.

இங்கு இவ்வாறாக. ஒருநாள் ராத்திரி சென்னைமாபுரியில் சமுத்திரத்தினுடைய காற்றானது அலைகளின் ஆவேசத்தைத் தானும் அடைந்து குழவிப் பருவத்திற்குரியதோர் குதூஹலத்துடன் பலகணிகள் வழியே உள்ளே புகுந்து ஆராய்ந்து ஆராய்ந்து, சிறிச்சிதறி, ஓடியுலாவி, விளையாடப் பெற்ற ஓர் மெத்தையறையுள் மெத்தை விரித்து அதன்மீது ஸ்ரீநிவாசனும், லட்சுமியும் பாற்கடற் பள்ளியினமர்ந்தது போல அமர்ந்து 'காமனும்ரதியும் கலந்த காட்சியாமென' உள்ளும் புறமும் ஒருமித்து, உரையாடி நகையாடிக்

கொண்டிருந்தனர். சிறுதுநேரம் இவ்விதம் உல்லாசமாய்க் களித்துப் பிறகு தாங்கள் வழக்கமாய்ப் படிக்கும் ராமாயணத்தைக் கையில் எடுத்தார்கள். எடுத்து அதைத் திறக்க இறந்துபோன இந்திரஜித்தைக் குறித்து ராவணன் பிரலாபிக்கும் கட்டம் வந்தது. அதை இருவருமாய் வாசிக்கத் தொடங்கினார்கள். ராவணேசுவரனுடைய கம்பீரத்தையும், அவனுடைய தீ நிகர் சீற்றத்தைக் கண்டு அருகேயிருந்த வானவர், மாதவர் அனைவரும் ஓடி 'யெங்கணும் சிந்தி யொளித்த ஓட்டத்தையும், பெருகுகாதலு மன்பும் பிறங்கிட, இருப்பதென்னும் எரி புரை கண்களும் உருகு செம்பென வோடிய தூற்று நீர்' என்றபடி அவன் தாரை தாரையாய் இருபது கண்களாலும் அழுத கண்ணீரையும் வர்ணித்திருக்கிற அட்சரலட்சம் பெறும்படியான பாடல்களை மனமுருகிப் பாடிப் பின்னர்,

கட்ட மானிடன் கொல்ல என் கரதலன்
பட்டு ஒழிந்தனனே எனும் பன்முறை
விட்டு அழைக்கும் உழைக்கும் வெதும்புமால்
எழும் இருக்கும் இரைக்கும் இரக்கும்உற்
றழும் அரற்றும் அயர்க்கும் வியர்க்கும்போய்
விழும் விழிக்கும் முகிட்கும் தன்மேனியை
உழும் நிலத்தை உருளும் புரளுமால்.

ஐயனே யெனுமோர் தலையானினஞ்
செய்வனே யரசெனு மங்கோர்சிரம்
கையனே யுனைக்காட்டிக் கொடுத்தநா
னுய்வனே யென்றுரைக்கு மங்கோர்சிரம்.

என்று இவ்விதம் பலவாருகப் பத்து வாயாலும் பிரலாபித்து படாத பாடெல்லாம் பட்டு 'விடம்பிறந்த கடலென வெதும்பி' அயற்றி, அயர்த்து, விழுந்து, உருண்டு, புரண்டு வாய்விட்டு ஓ! வென்று அலறியழுத ராவணனுடைய நிலைமை யைப் பற்றிப் படிக்கும்போது லட்சுமி, ராவணன் ராட்சதன் ஆனாலும் "அன்றவர்க்கடுத்த துன்னி மழைக்கண்ணீர் அருவி சோர்வாள்" என்றபடி ராமன் கரதூஷணர்களோடு செய்த யுத்தத்தில் கோடிக்கணக்காய் மாண்ட ராட்சதர்களைக்

குறித்து அழுத சீதையைப்போல அவனுக்கிரங்கியழ, குழந்தை நடராஜனைக் குறித்துத் தன் தகப்பனார் அழுத அழுகை திடீரென்று ஞாபகத்திற்கு வந்துவிட்டது. வரவும் "இப்படித்தான் எங்கள் அப்பாவும் அழுதார்; 'ஐயோ' நடராஜா!" என்று அலறி, அவன் எதிரே வந்து தவழ்ந்து விளையாடுகிறாற்போல இருக்கிறதே, ஐயோ, அவனைப் பார்க்க வேணும் என்று ஆசையாயிருக்கிறதே; எப்படிப் பார்ப்பேன்! இரண்டு வயதுக்கு உள்ளாக வாய்விட்டு மழலைச்சொல் சொல்ல ஆரம்பித்துவிட்டதே, போகிற குழந்தையல்லவோ! இருக்கிற குழந்தையானால் அப்படி வராது. அது கையைக் காலை ஆட்டுகிறதையும், ஐயோ அதன் பெரிய அழகிய கண்களையும் நான் எப்பொழுது காண்பேன்; ஒரு நிமிஷத்திலே போன இடம் தெரியாமல் போய்விட்டானே!" என்று அழ, ஸ்ரீநிவாசனுக்கும் அழுகை வந்துவிட்டது. இரண்டுபேருமாகச் சேர்ந்து விம்மி, விம்மியழுது பிறகு அயர்ந்து நித்திரை போனார்கள். இரண்டுமணி சுமாருக்கு அவர்களுடைய வீட்டுக் கதவை யாரோ வந்து பலமாய்த் தட்டினான். தட்டவே ஸ்ரீநிவாசன் திடுக்கிட்டு விழித்து வெளியே வர, வந்த மனிதன் அவன் கையில் ஒரு அவசரத் தந்தியைக் கொடுத்தான். ஸ்ரீநிவாசன் அதைக் கையில் வாங்கி, நெஞ்சும் மார்பும் படீர் படீர் என்று அடிக்க, விளக்கேற்றி அதை உடைத்துப் பார்த்தான். அதில், 'முத்துஸ்வாமியய்யரைக் காணோம், உடனே லட்சுமி சஹிதம் புறப்பட்டு வரவும்' என்று எழுதியிருந்தது.

23

அனர்த்த பரம்பரை

நாலு நாளைக்குப்பிறகு சிதம்பரத்துக்குப் போகும் ரயிலில் ஓர் வசதியான அறையில் கமலாம்பாள், ஸ்ரீநிவாசன், லட்சுமி, சுந்தரம் நாலு பேருமாக உட்கார்ந்திருந்தார்கள்.

சுந்தரத்துக்கு இப்பொழுது வயது 12 இருக்கலாம். நல்ல புத்திசாலி. வீட்டில் நடந்த சங்கதியெல்லாம் தெரிந்ததன் பேரில் 'அப்பாவை நான் பார்க்கவேணும்' என்று அதிக ஆவல் கொண்டு ஸ்ரீநிவாசன் புறப்படும்போது கூடப் புறப்பட்டுவிட்டான். கமலாம்பாளுக்கு ஒரு வேளை அவனையும் லட்சுமியையும் ஸ்ரீநிவாசனையும் உத்தேசித்தாவது தன் கணவர் உலகவிரக்தியை விட்டுக் கிரஹஸ்த மார்க்கத்திற்குத் திரும்பமாட்டாரா என்ற எண்ணம். அப்படிப் போகும் போதே ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஸ்ரீநிவாசன் கீழேயிறங்கி ஒருவேளை முத்துஸ்வாமியய்யர் தென்படலாமோ என்ற எண்ணத்துடன் தேடிக்கொண்டு வந்தான். சீர்காழி ஸ்டேஷனிலிறங்கி மழை பெய்துகொண்டிருந்ததால் குடையும் கையுமாய் அவ்வித ஆராய்ச்சி செய்யும்பொழுது விலையுயர்ந்த சரிகைத் தொப்பியும், பளபள என்று மின்னும் கருப்புப் பட்டுச் சட்டையும் மூன்றுகை அகலமுள்ள சரிகை அங்கவஸ்திரமும், தந்தத்திஞல் செய்யப்பட்ட கோமுகத்துடன் தங்கப்பூண் பிடிக்கப்பட்ட கைப் பிரம்பும், பட்டுக் குஞ்சரம் கட்டிய குடையும், காலில் திவ்வியமான ஜப்பான் சடாவும், மார்பில் தங்கக் கடியாரச் சங்கிலியும் அணிந்த ஒரு அலங்கார புருஷன் அவனிடம் வந்து 'குட் மார்னிங்' என்று சலாம் செய்து வயிர மோதிரங்களணிந்த தன் கையால் அவன் கையைக் குலுக்கி "என்ன சௌக்கியமா? நெடுநாளாய் விட்டதே பார்த்து" என்று யோகக்ஷேமங்களை விசாரித்தான். ஸ்ரீநிவாசனுக்கு அந்த மனிதனை முன் பார்த்த ஞாபகமே கிடையாது. ஆஞல் அவனை 'நீ யார்' என்று கேட்பது அலௌகிகமென நினைத்து, தெரிந்ததுபோல் பாவனை பண்ணித் தானும் அவனுடைய யோகக்ஷேமாதிசயங்களை ஜாக்கிரதையாய் விசாரித்தான். அந்த மனிதன் அவன் கையுடன் கைகோர்த்து உல்லாசமாய் உலவுவதுபோல் அவனைப் பேசிக்கொண்டே நடத்திக் கொண்டு போக, ஸ்ரீநிவாசன் "ரயிலுக்கு நாழிகையாய் விட்டது போக வேணுமே" என, அந்த மனிதன் "இல்லை, இன்றைக்கு இன்னும் அரைமணிக்கு இங்கே ரயில் நிற்கவேண்டியிருக்கிறது. வடக்கேயிருந்து வரும் ரயில் வந்துதான்

இது புறப்படவேண்டியிருக்கிறது. அடே யாரடா 'ப்யூன்' சாமான்களை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்'' என்று சேவகனுக்குத் தாக்கீது கொடுத்துவிட்டு, ''நாம் மழையில் இங்கு நிற்பானேன், இங்கு ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டு வரையில் போய் வருவோம். நமக்காக அங்கே டிபன் தயாராயிருக்கிறது, போய் சீக்கிரம் வந்துவிடலாம்; நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம்; இன்னும் அரைமணி செல்லும் ரயில் போவதற்கு; நெடுநாளாய்விட்டது 'சார்', தங்களைப் பார்த்து, கடைசியாய் நான் மட்ராசை விட்டு ஊருக்கு வருவதற்கு முந்தின நாள் பார்த்தது'' என்று சொல்லி அவனை இட்டுப்போக, ரயில் புறப்பட்டுவிட்டது. ஸ்ரீநிவாசன் ''ஐயையோ ரயில் புறப்பட்டுவிட்டதே'' என, அவன் ''என்ன பயம் பயப்படுகிறீர்கள் ஐயா! இத்தனை வருஷம் மட்ராசிலிருந்து விட்டு வண்டி 'லைன்' மாற்றுகிறதற்காகப் போகிறது தெரியாதா! அதோ அந்த வண்டி வருகிறதே தெரியவில்லையா, மணி யடித்தது தங்களுக்குக் கேட்கவில்லையோ?'' என்று சொல்லி ஏமாற்றி ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டிற்குப் பின்புறமாகக் கூட்டிப்போக, உருவின கத்தியும் கையுமாய் நின்ற குதிரைப் படைஞர் நால்வர் திடீரென்று ஸ்ரீநிவாசனைத் தூக்கித் தயாராயிருந்த ஓர் குதிரையில் வைத்துக் கை கால்களில் விலங்கிட்டுத் தங்கள் வாகனங்களைத் தட்டி விட்டார்கள். அவனைக் கூட்டி வந்த மனிதனும் ஓர் குதிரையின்மீது ஏறி அவர்களுடன் கூடவே சென்றான். ஸ்ரீநிவாசனுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. ஆனால் குதிரை போகிற வேகத்தில் அவன் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. தனியே விட்டு வந்த மனைவி, மாமியார், மைத்துனனுக்காக விசாரப்படுகிறான். ஐயோ அவர்கள் என்ன செய்வார்களோ என்று ஏங்குகிறான். இந்த ராக்ஷதப் பயல்களைக் கொன்றுவிடுகிறேன் என்று சபதம் கூறுகிறான். தன்னை வஞ்சித்து வந்த மனிதனை வாயில் வந்தபடியெல்லாம் உரக்கத் திட்டுகிறான். அதைத் தவிர அவன் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

இது நிற்க, ரயிலில் உள்ளவர்கள் அவன் வராமல் ரயில் போவதைக் கண்டு அலறி வண்டியைவிட்டுக் கீழே வர

எத்தனிப்பதைக் கண்டு ரயில் வேலைக்காரன் கதவைப் பலமாய் சாத்தி 'இறங்கக்கூடாது, வண்டி போகிறபொழுது இறங்கக் கூடாது' என்று அதட்ட அவர்கள் உள்ளே உட்கார்ந்து அச்சத்துடன் அழ ஆரம்பித்தார்கள். கூடவிருந்த மனிதர்களுள் ஒருவர், "அம்மா பயப்படாதேயுங்கள். அடுத்த ஸ்டேஷனுக்குப் போய் இறங்கிக்கொண்டு தந்தி கொடுத்தால் மறு ரயிலில் அவர் வந்துவிடுவார். ராத்திரி எட்டுக்குள் நீங்கள் இவரைப் பார்க்கலாம். தைரியமாய் இருங்கள். இன்னும் சிறிது தூரம்தான் இருக்கிறது. விசாரப்படவேண்டாம். நாங்கள் எல்லாரும் இருக்கிறோம்" என்று தைரியம் சொல்லிக்கொண்டு வரும்போதே திடீரென்று ஒரு பாலம் படார் என்ற சப்தத்துடன் உடைந்தது. உடையவே வண்டிகள் சரசரவென்று கீழே அமோகமாகப் போகிற பிரவாகத்தில் ஒன்றின்மேல் ஒன்றாய் விழுந்தன. 'ஹோ'வென்று ஜனங்கள் அலறுகிறார்கள். இஞ்சின் வண்டி மணலுடன் புதைந்துவிட்டது. மற்ற வண்டிகளுள்ளும் ஜலம் குதித்து புகுந்து ஜனங்களை வெளியில் இழுத்தது. நதியில் மேல் வள்ளம் வேறு வண்டலிட்டு வருகிறது. அப்படியப்படியே ஜனங்கள் ஜலத்தால் அரித்துக்கொண்டு போகப்படுகிறார்கள். குஞ்சு குழந்தைகள், மூட்டை முடிச்சுகள் எல்லாம் பிரவாகத்தில் பிரயாணம் புறப்பட்டுவிட்டன. நீந்தத் தெரிந்த சிலர் கை கால்களை வீசி நீந்துகிறார்கள். கரையோரம் தள்ளப்பட்ட சிலர் தத்தளித்துக் கரையை நோக்கிச் செல்ல முயலுகிறார்கள். நடு ஜலத்தில் அகப்பட்டவர்கள் அரோஹர வென்று முழுகுவதும், மிதப்பதும், அடித்துக்கொண்டு போகப்படுவதுமாயிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் இவ்வளவும் போதாதென்று காற்றும் மழையும் வெகு உக்கிரமாய் வீசுகிறது. கரையோரத்திலுள்ள மரங்கள் சடசடவென்று முறிந்து ஜலத்தில் விழுகின்றன. அவைகளைப் பற்றிக்கொண்டு சிலர் கரைக்கு ஏறுகிறார்கள். சிலர் அவைகளால் மோதப்பட்டு 'ஐயோ' வென்று அபயக் குரலுடன் முழுகுகிறார்கள். பயங்கரமாய் இடி இடிக்கிறது. ஆகாயம் இருண்டுவிட்டது. மின்னல் 'பளீர் பளீர்' என்று மின்னி இருட்டை அதிகப்படுத்துகிறது. கல்லுக்கல்லாய் மழை யடிக்கிறது. ஆகாயத்துக்கும் பூமிக்கும் அமோகமான

கோர யுத்தம் போலிருந்தது. காற்று 'ஹோ' என்று யுத்த முழக்கம் முழங்கி ஆதிசேஷனைப் போலச் சீறிக் கரைக்குப் போகிறவர்களையும் ஜலத்திலிழுக்கிறது. இடி முழக்கத்தில் பூமி யதிருகிறது. மரங்கள் இப்படியுமுண்டா வென்று தாரை தாரையாய்க் கண்ணீர் பெருக்குகின்றன. பகலோ இரவோ என்றுகூடத் தெரியவில்லை. சூரிய சந்திர நக்ஷத்திர மெல்லாம் இந்தப் பரிதாபத்தைப் பார்க்கமாட்டாமலோ ஏதோ, போன இடம் தெரியாமல் ஓடி யொளித்தன. ஏரி, குளங்களெல்லாம் உடைய, அவற்றின் ஜலத்தையுங் கூடக் கொள்ளை கொண்ட நதி, மலைப்பாம்புகள், குறவர் குடிசைகள், செத்த பிணங்கள், விழுந்த மரங்கள், மடிந்த மாடுகள் 'கன்று கள் இவைகளை யெல்லாம் வாரியடித்துக்கொண்டு சில விடங் களில் 'ஹோ' வென்று கூப்பிட்டும், சில விடங்களில் 'ஹம்' என்று அடங்கியும் 'தூக்கமே மிகுந்து உள் தெளிவின்றியே வாக்கு தேன் நுகர் மாக்களை மானுமே' என்றபடி சுய ஞாபக மற்று அறிவை யிழந்து அங்கங்கள் துவண்டு வரும் கட்குடி யனைப் போலத் தள்ளாடியும், விரைந்தோடியும், கூவிப்பாடி யும், ஆடியசைந்தும், களியாட்டக் கோலாகலத்துடன் சஞ்சரித் துத் தான் அடித்த கொள்ளை போதாதென்று தனக்குமேல் போடப்பட்ட பாலத்தைப் பொறுமல் அதிற் பாய்ந்து அதை உடைத்துத் தகர்த்து நூற்றுக்கணக்கான ஜனங்களையும் தன் வசப்படுத்திக்கொண்டது. குழந்தை உருண்டு முழுகுவதைக் கண்ட ஒரு தாய் தானும் கூடவே முழுகினாள். ஸ்திரீ முழுகு வதைக்கண்ட புருஷன் அவளைப்பிடித்து இழுக்க எத்தனித்துத் தன் உயிரையும் அவளுடைய உயிரோடு உயர அனுப்பினான். மாமனூரகம் போய் வந்த மாப்பிள்ளைச் சிறுவர்கள் எத்தனையோ; நூதனமாய் புதுமணம் புரிந்த புருஷர் எத்தனையோ; பெரியோரிருக்க அவர் கண்முன் தாமிறந்த சிறியோர் எத்தனையோ; இன்று வருவார் நாளை வருவார் என்று 'நாளெண்ணித் தேய்ந்த விரலுடன் காலமதைக் கழிக்கும் நாயகிகளிருக்க அங்கு ஒன்றும் உரையாதிறந்த நாயகரெத்தனையோ; ஒரு தாய்க்கொரு மகனாயிருந்த பாலர்களெத்தனையோ; கர்ப்பஞ்சுமந்த காதலிகள்தான் எத்தனையோ; இவ்வித பரிதாபங்கள் நிறைந்து ஜனங்கள்

முழுகினோரும், முழுக இருப்போரும், மிதப்போரும், நீந்து வோருமாயிருந்த அத்தருணத்தில் கரையை நோக்கி நல்ல காற்று ஒன்று சமயசஞ்சீவியாய் வீச நீந்த முடியாத நிர்ப்பலர்களில் அநேகர் கரையோரம் ஒதுக்கப்பட்டனர். லட்சுமியும் சுந்தரமும் கரையோரமாயுள்ள ஓர் மணற்றிட்டில் ஒதுக்கப்பட்டார்கள். கமலாம்பாள் அவர்களுக்கருகில் ஒரு நாணற்புதரில் அரை உயிருடன் அலங்கோலமாய்க் கிடந்தாள். இப்படி இவர்கள் கிடக்கும்போது யாரோ ஒரு கிழவர் அந்த மழையில் கையில் குடையும் ராந்தலும் கொண்டு அங்கு விழுந்திருந்தவர்களைத் தட்டி யெழுப்பி மூர்ச்சை தெளிவித்து அருகிருந்த மடத்துக்கு அழைத்துப்போய்க்கொண்டிருந்தார். அவர் கமலாம்பாளும், லட்சுமியும், சுந்தரமும் இருந்த இடம் வந்து அவர்களைப் பார்த்துத் திடுக்கிட்டு அருகில் உட்கார்ந்து "ஐயோ இதென்ன ஆபத்து. இவர்கள் எங்கே யிங்கு வந்தார்கள்! அடப்பாவமே, உயிர்தான் இருக்கிறதோ இல்லையோ!' என்று கவலைப்பட்டுக் கைதட்டி சுவாசமறிந்து பார்த்து அவர்களை மெதுவாய்த் தூக்கி மண்டபத்தில் சேர்த்து மூர்ச்சை தெளிவிக்கவேண்டிய பிரயத்தனங்களைச் செய்துகொண்டிருந்தார்.

29

அம்மையப்ப பிள்ளையின் பூர்வகதை

மூர்ச்சையாய்க் கிடந்த லட்சுமி, கமலாம்பாள், சுந்தரம் ஆகிய மூவரும் ஆற்றங்கரையினருகிலிருந்த ஓர் மண்டபத்தில் சேர்க்கப்பட்டார்கள். அங்கே அவர்களை அறிவுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. அவ்வுபாயங்களின் உதவியால் அவர்கள் மூவரும் தங்களுடைய சுயஞாபகத்தை யடைந்தார்கள். கமலாம்பாள் திடுக்கிட்டு விழித்துப் பார்க்க வித்வான் அம்மையப்ப பிள்ளை அவர்கள் அருகில் நின்றுகொண்டு இருந்தார். ஆடுசாபட்டியில் அவதரித்த அண்டர் புகழும் அஷ்டாவதானம்

மகாவித்வான் அம்மையப்பபிள்ளை அவர்களை இதைப் படிப்பவர்கள் மறந்திருக்க மாட்டார்களென்று நம்புகிறேன். அவர் வயதாய்விட்டபடியால் மதுரைக் காலேஜில் பென்ஷன் பெற்றுக்கொண்டு அதைவிட்டு வெளியேறி புண்ணிய ஸ்தலங்களில் போய் சுவாமி தரிசனம் செய்யும்பொருட்டு வடக்கே யாத்திரை போய்க் கொண்டிருந்தார். எந்த ஸ்தலதக்குப் போனாலும் அங்கேயே அதைப்பற்றிப் பாடாமல் விடுவதில்லை. சீர், தளை, மோனை, எதுகை முதலிய யாப்பிலக்கணத்தின் பிள்ளை குட்டி சம்சாரங்கள் சமயமறிந்து சண்டைசெய்யும். செய்தாலும் அந்த முரட்டுக்கிழவர் விடுவதில்லை. அவர் சித்திரக்கவிகள் எழுதுவதில் மகா சமர்த்தர். சீர்கணக்கு, அடிக்கணக்கு, மோனை, எதுகை, விதிகள் இவைகளை லட்சியம் செய்யாமலே பாடிவிடுவார். இரண்டு கால் மனிதன் பிறப்பது உலகத்தில் சகஜமாயிருக்கிறது. அப்படியில்லாமல் மூன்றுகால், நாலுகை, இரண்டு தலை இப்படி மனிதர்கள் இருந்தால அவர்களை டிக்கட்டு வரி கொடுத்தல்லவோ ஜனஙகள் போய்ப் பார்க்கிறார்கள். அதுபோல நாலடி வெண்பாக்கள் உலகத்தில் சர்வசாமான்யம். அப்படியில்லாமல் 6-அடி வெண்பாக்கள், 7-அடி வெண்பாக்களாயிருந்தால் எவ்வளவு விசித்திரமாயிருக்கும். அவைகளை அம்மையப்ப பிள்ளையவர்களைத் தவிர வேறுயார்தான் பாடக்கூடும் இவ்வித விசித்திரக் கவிகளை ஸ்தலங்கள்தோறும் கூசாமல் வாரியிறைத்து பாடல் பெறாத ஆலயங்களைக்கூடப் பாடல் பெறச்செய்து யாத்திரை செய்துகொண்டிருந்தார். பாலம் உடைந்து ரயிலில் ஆபத்து நேரிட்ட அன்று அவர் அந்தப் பாலத்துக்கு அடுத்த ஓர் கிராமத்தில் இருந்துகொண்டிருந்தார். இவ்வித விபத்து நேரிட்டதென்று தெரிந்த உடனேயே புண்ணியம் சேகரிப்பதில் வெகு குறிப்பாயிருந்த அவர் ராந்தலும் குடையும் எடுத்துக்கொண்டு மற்றுஞ் சிலருடன் நதியில் அகப்பட்டுக் கொண்ட ஜனங்களை ரட்சிப்பதற்காக ஓடிவந்தார். வந்தவர் கமலாம்பாள், லட்சுமி யிவர்களைக் கண்டு, அடடா, இவர்களெங்கே யிங்கு வநதார்களென்று ஆச்சரியப்பட்டு அவர்களை மண்டபத்தில் சேர்த்துக் கொண்டிருந்தார்.

அம்மையப்ப பிள்ளை முத்துஸ்வாமியய்யரால் ஆதரிக்கப் பட்டவரென்று மாத்திரம் சொன்னோமேயல்லாது அவர் களிருவருக்கும் உள்ள உறவை நாம் முன்னே சொல்லவில்லை. மேல் நடக்கவேண்டிய விர்த்தாந்தங்களுக்கு அது தெரிய வேண்டிய தவசிமாயிருப்பதால் அதைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்வோம்.

முத்துஸ்வாமியய்யருடைய தகப்பனார் ரங்கசாமியய்யர் என்று ஒருவர் இருந்தார். அவர் மகா கோலாகல புருஷர். அனுபவிப்பதற்காகவே அவதரித்த ஆத்மா. சந்தனம், புஷ்பம், பாட்டு இவை இல்லாத நாள் கிடையாது. ஆடல், பாடலிலேயே அவருடைய ஆயுசு முழுவதும் சென்றது. இந்த நித்திய கல்யாண புருஷர் சாகும் சமயத்தில் தன் தாசியின் மடியில் தலைவைத்து அவளுடைய வீணாகானத்தைக் கேட்டுக்கொண்டே பரலோகம் சென்றார்.

அவர் ஒருநாள் தன் தாசி தெய்வயானை வீட்டில் உட்கார்ந்து அவளைப் பாடச்சொல்லிக் கேட்டுக் கொண்டிருந் தார். அவள் ஜாவளி, க்ஷேத்திரிய பதம் எல்லாம் பாடிவிட்டுத் தான் நூதனமாக மெட்டு அமைத்து வைத்திருந்த சில நைஷதப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அம்மையப்ப பிள்ளை சம்பாத்தியத்தின் நிமித்தமாக ஆடுசா பட்டியை விட்டு வெளியேறி சிறு குளத்துக்கு வந்திருந்தார். அவர் அப்பொழுதே கொஞ்சம் தமிழ் பார்த்திருந்தார். ரங்கசாமி அய்யரும் தெய்வயானையும் மேற்சொல்லிய அவசரத்திலிருந்தபோது அம்மையப்ப பிள்ளை தற்செயலாய் அந்த வீதி வழி சென்றார். அன்று ராத்திரி அவருக்குச் சோறு கிடையாததால் ஸ்தல உபவாசம். தமிழ்ப் பாடல்கள் அவருடைய காதில் படவே,

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றிற்கு மீயப் படும்"

என்ற குறளை மனதில் நினைத்துக்கொண்டு தெய்வயானை வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தார். சங்கீதத்தில் அவருக்கு நிரம்ப ஞானம்! டல்லவி பாடினால், 'மேலே

பாட்டுத் தெரியாதோ, திருப்பித் திருப்பிச் சொன்னதையே சொல்லுகிறுன்' என்று நினைப்பார். 'பாட்டில் இத்தனை சேஷ்டை எதற்கு. நேராக உள்ளபடி சொல்லிவிட்டால் நான் கேட்டுப் போகமாட்டேனே' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு திண்ணையில் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். அது குளிர்காலம். காற்று அவருடைய தரித்திரத்தைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாது அவர்மேல் ஜில்லென்று அடித்தது. அவர் உடுத்தியிருந்த கந்தல்கள் அவரைக் காப்பாற்றப் போதாதனவாயிருந்தன. குளிருக்குப் பயந்து அவர் திண்ணையை விட்டிறங்கி அந்த வீட்டு ரேழிக்குள் சென்றுர். பாட்டு மயக்கத்தில் அது அன்னியருடைய வீடென்பது அவருக்கு மறந்துபோய் விட்டது. அங்கே போனபிறகு யாராவது பார்க்கக்கூடுமென்று பயந்து அருகிலிருந்த ஒரு குடுவையிடுக்கில் நுழைந்து கொட்டுக்கொட்டென்று கண்ணை விழித்துக்கொண்டு பதுங்கி உட்கார்ந்திருந்தார். இப்படி இருக்கிறபோதே ரங்கசாமியய்யர் திடீரென்று எழுந்து தற்செயலாய் வாசலை நோக்கி வர அம்மையப்ப பிள்ளை பதுங்கிக்கொண்டிருந்ததைக் கண்டு விட்டார். ஊரில் அப்பொழுது கள்ளர் பயம் அதிகம். தெற்குச் சீமையிலிருந்து சில கள்ளர்கள் நூதனமாக வந்திருப்பதாக அன்றுதான் பிரஸ்தாபம். ரங்கசாமியய்யர் அவரைக் கண்டவுடன் 'கள்ளன், கள்ளன்' என்று கூக்குரலிட வீட்டு வேலைக்காரர்கள், அடுத்த வீட்டுக்காரர்கள், எதிர்த்த வீட்டுக்காரர்கள் எல்லாருமாகத் 'திருடன், திருடன்' என்று கத்திக்கொண்டு ஓடிவந்து அம்மையப்ப பிள்ளையைக் குடுவையிடுக்கிலிருந்து சரசரவென்று வெளியே இழுத்தார்கள். அவர் உருவம், நிறம், உடை எல்லாவற்றிலும் சாக்ஷாத் கள்ளனைப் போலவே இருந்தார். அப்படியிருந்த ஆடுசாபட்டித் திருமேனியை அவர்கள் எல்லாருமாகப் பிடித்துக்கட்டி வாயில் வந்தபடியெல்லாம் திட்டி அடிக்கத் தொடங்கினுர்கள். ஒரு தமிழ் வித்வான் ஒருவர் தனிவழி போய்க்கொண்டிருந்தபோது திருடர்கள் வந்து மறிக்க அவர் 'என்னிடத்தில் ஐந்து ரூபாய் பெறும்படியான ஒரு அரைஞாண் மாத்திரந்தானிருக்

கிறது. யானோ பட்டணத்திற்குள் செல்பவன், அரைவேஷ்டியுடன் விட்டுவிடு வீரனே வேண்டுகிறேன்' என்று வெகு இலக்கணமாய் மறுமொழி சொன்னதாக ஒரு கதையுண்டு. அதுபோல நடந்த உபசாரத்தைச் சகியாத பிள்ளை அவர்களும் 'இன்று நீவிர் *பிழைத்தீர், இங்ஙனம் பிழையீர். என் கொடுமை. நீவிர் பலர், நான் தனி' என்று, 'நீங்கள் ஒருநாளும் தப்பிதம் செய்யாதவர்கள், இன்று என்னை அடித்துத் தப்பிதம் செய்தது என் காலக் கொடுமை, நீங்கள் பலர், நான் ஒருவன்' என்ற அர்த்தத்தில் இலக்கண சொல்ல, அவர்கள் 'ஏனடா பயலே நாங்கள் பிழைத்தோமா? மாய்ச் இல்லாவிட்டால் கொன்று போடுவாயோ? இனிமேல் பிழைக்க மாட்டோமோ, என்னடா செய்வாய்? இவன் பக்காத் திருடன், தெற்குச் சீமைக் கள்ளன். என்ன தைரிய மாய் நீங்கள் பிழைக்கமாட்டீர்களென்று சொல்லுகிறான்' என்று பின்னும் பலமாய்ப் பிரகாரம் சாதிக்க, பிள்ளையவர்கள் 'நான் புலவன்' என்றார். 'ஏனடா புலையனா! பறையனா! பறைப்பயல் இங்கே வரலாயிற்றா! நீ பறைத்திருடனா, ஏனடா பறைப்பயலே?' என, அம்மையப்பபிள்ளை 'நான் நன் §மரபில் உதித்தேன். அதை நீவிர் அறியீர்' என்று கதற, அது அவர்கள் காதுக்கு 'நான் நன்மறைவில் ஒளித்தேன்' என்று பட்டது. படவே அவர்கள் 'நீ மறைவில் ஒளித்திருந் தால் எங்களுக்குத் தெரியாதோ திருட்டுப் போக்கிரி' என்று திட்டிப் பின்னும் பலமாய் மொத்த, பிள்ளையவர்கள் 'நான் கள்ளனல்லேன. நும் இல்மாட்டு வெளவ வந்தேன் அல்லேன், விட்டுவிடுங்கள், இனித் தாங்காது இச்சரீரம், விடுமின் விடுமின்' என்று பின்னும் இலக்கணமாய்க் கூவியழ, ரங்கசாமி அய்யர் 'இது யார், இவன் தொழிலில் திருடனா யிருக்கிறான். பேச்சில் புலவனாயிருக்கிறான்' என்று கூட்டத்தை விலக்கிக் குற்றுயிராயிருந்த அம்மையப்ப பிள்ளையிடம வர,

*'பிழைத்தீர்' என்ற வார்த்தையைப் பிழைசெய்தீர், தப்பிதம் செய்தீர்கள், என்னையடித்தது உங்களுக்குச் சரியல்ல என்ற அர்த்தத்தில் சொன்னார்.

§ மரபு—குலம்

அவர் அவர் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "நான் ஆடுசாபட்டி வித்துவான் அம்மையப் பிள்ளை, பாடல் கேட்பான் வந்தேன், திருடுவான் வந்தேன் அல்லேன்" என்று சொல்ல, அவர் அவரைக் கூர்ந்து பார்த்து இவன் திருட வந்தவனல்லவென்று தோற்றததால் ஊகித்து "இப்பொழுது விட்டுவிடுங்கள். காலமே பார்த்துக்கொள்வோம்" என்று சொல்லி அவரைப் பத்திரமாய் ஒரு அறையில் போட்டுப் பூட்டி விடும்படி உத்தரவு செய்தார் அப்படியே அவர்களும் சம்மதித்து தெய்வயானை வீட்டிலேயே ஒரு அறையுள் அவரைப் பூட்டிவைத்தார்கள்.

காலையில் எழுந்து ரங்கசாமி அய்யர் அறையைத் திறந்து பார்க்க, பட்ட அடியில் நன்றாய்த் தூங்கி அப்பொழுதுதான் விழித்த அம்மையப்ப பிள்ளை அவர் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தன் விர்த்தாந்தத்தை உள்ளபடி சொல்லியழ, அவர் 'இந்த மனிதன் ஒரு கற்றறி மூடன், ஒன்றும் தெரியாத அப்பாவி' என்று அறிந்து ராத்திரி அவர் பட்ட அவஸ்தையைக் குறித்துத் துக்கித்து அன்று முதல் அவரைத் தன் சம்ரட்சணையிலேயே வைத்துக்கொண்டார். அவருடன் பழகப் பழக அவருடைய மாதிரி ரங்கசாமி அய்யருக்கு நிரம்பப் பிடித்தது. அவருக்கு தெய்வயானை வயிற்றிற் பிறந்த பெண் ஒன்று இருந்தது. அதற்கு ஜானகி யென்று பெயர். அதை வேசித் தொழிலில்விட அவருக்குச் சம்மதமில்லை. யாராவது ஒரு ஏழைக்குக் கொடுத்து அவளை சம்ரட்சணை செய்யவேண்டுமென்று அவருக்கு நெடுநாளாய் எண்ணம் உண்டு. அம்மையப்ப பிள்ளையினுடைய குணம் அவருக்கு நிரம்பப் பிடித்திருந்ததால் அந்தப் பெண்ணை அவருக்கே கன்னிகாதானம் செய்து கொடுத்தார். அவர் இறந்துபோன பிறகு முத்துஸ்வாமியய்யரும் அந்த உறவைப் பாராட்டி வந்ததுமன்றி அவருக்குத் தக்க சீர்வரிசைகள் செய்து நிலம் முதலியன கொடுத்து மதுரைக் காலேஜில் தமிழ்ப் பண்டிதர் வேலையும் சம்பாதித்துத் தந்தார். அம்மையப்ப பிள்ளையும் ஜானகியம்மாளும் இல்லற தர்மத்தை வழுவாது பரிபாலித்து வந்தார்கள். கமலாம்பாள் ஜானகி

யம்மாளைத் தன் பர்த்தாவின் தங்கையெனவே பாவித்து வந்தாள். அவர்களிருவருக்கும நிரம்ப நேசம். இப்பொழுது அம்மையப்ப பிள்ளையும் ஜானகியம்மாளும் சேர்ந்துதான் யாத்திரை வந்திருந்தார்கள்.

கமலாம்பாள் கண் விழித்தவுடன் அம்மையப்ப பிள்ளை எழுந்து அவளை நமஸ்காரம் செய்தார். லட்சுமியும் சுந்தரமும் 'அத்திம்பேர்' அம்மையப்ப பிள்ளையைக் கண்டு நிரம்ப சந்தோஷித்தவர்களாய் அத்தையைப்பற்றி யோகக்ஷேம விசாரணை செய்தார்கள். பிறகு எல்லோரையும் அம்மையப்ப பிள்ளை தான் இறங்கியிருந்த ஜாகைக்கு அழைத்துப் போனார். ஜானகியம்மாள் இவர்களை நிரம்பசந்தோஷத்துடன் உபசரித்துச் சமையலுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் கொடுத்து யோகக்ஷேமங்களையெல்லாம் விசாரித்தாள். முத்துஸ்வாமியய்யருடைய குடும்பம் நிலைகுலைந்து போயிருப்பதைக் கேட்ட ஜானகி அம்மாளும் அவள் கணவரும் அழுது துக்கித்தனர். பிறகு அழுவதில் பயனில்லையென்று ஒருவரையொருவர் தேற்றிக்கொண்டு சீர்காழியிலிருந்து சிதம்பரத்துக்கு மறு ரயில் வருமுன்னம் தாங்கள் வண்டிப்பாதையாய்ச் சிதம்பரம் போகவேண்டும் என்று தீர்மானித்து அப்படியே புறப்பட்டார்கள். இவர்கள் போனபிறகு இரண்டுநாளைக்கு சீர்காழிக்கப்பால் ரயில் கிடையாது. அப்புறம் ஏதோ பாலங்களைச் செப்பனிட்டு ரயிலை விட்டார்கள். ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட அந்த ரயிலில் ஸ்ரீநிவாசனைக் காணோம். மறுபடி இரண்டு மூன்று ரயிலுக்கு வந்து வந்து ஸ்ரீநிவாசனை அம்மையப்ப பிள்ளை தேடினார். அவன் வரவில்லை. இதற்குள் சிதம்பரம் ஊர் முழுவதும் வீடு வீடாக நுழைந்து முத்துஸ்வாமியய்யரைத் தேடினார்கள். அவரைப்பற்றி யாதொரு துப்பும் கிடைக்கவில்லை. மூன்று நாள் இப்படித் தேடியான பிறகு கடைசியாய் ஒரு தீட்சிதர் முத்துஸ்வாமியய்யருடைய லட்சணங்களைக் கேட்டவுடன் அந்தமாதிரி ஒருவர் தன் அகத்திலேயே தங்கியிருந்ததாகவும், அவர் சீக்கிரத்தில் சம்சார சகிதமாகக் காசிக்குப் போகப்போகிறதாய்ச் சொன்னதாகவும் தெரிவித்தார். அவர் சொன்ன ஆள் அடையாளங்கள், பேச்சு, நடை முதலிய யாவும் பொருந்தி

யிருந்தன. அவர் ஊரும் ஏதோ ஒரு 'குளம்' என்று சொன்ன தாகவும் சொன்னூர். இந்தத் துப்பை வைத்துக்கொண்டு அவர் காசிக்குத்தான் போயிருக்க வேண்டுமென்று தீர்மானித் தார்கள். ஆனுல் இவர்கள் வடக்கே போவதா தெற்கே போவதா என்று தீர்மானிக்கச் சுலபத்தில் கூடவில்லை. ஸ்ரீநிவாசனைக் காணேம் என்று லட்சுமி புழுவாய்த் துடிக் கிருள். காற்று மூலமாவது அவனுடைய க்ஷேமசமாசாரம் தெரிந்தால் போதுமென்ருய் விட்டது. ஸ்ரீநிவாசனையே தேடுவதா அல்லது முத்துஸ்வாமி அய்யரைத் தேடுவதா என்று அவர்களுக்குள் ஸ்திரப்படவில்லை. கடைசியாக ஸ்ரீநிவாசன் அவர்களைத் தேடிக்கொண்டு சிதம்பரத்துக்குத் தான் வருவான் என்று ஊகித்து அப்படி வரும் பட்சத்தில் அவர்கள் காசிக்குப் போயிருக்கும் செய்தியை அவனுக்குத் தெரிவிக்க அவன் பேருக்கு அவ்வூர் தபாலாபீசில் ஒரு காகிதமும் முக்கியமான ஒவ்வொரு தீட்சதரிடத்தும் ஒரு காகிதமும் கொடுத்துவிட்டு நடராஜர் சந்நிதியில் போய் விழுந்து முறையிட்டுக் காசியை நோக்கிப் புறப்பட்டார்கள்.

30

*'கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த செழுந்தேனுகி'

இதுநிற்க, முன்னே முத்துஸ்வாமியய்யரும் அவருக்குக் குருவாய் வந்துதவிய சச்சிதானந்த ஸ்வாமிகளும் நடுராத் திரியில் தனிவழி சென்ருர்களே, அவர்களுடைய நிலைமையைப்

---

*மனிதனுடைய சின்மய ஸ்வரூபத்திலும் ஞானனந்த வல்லமையிலும் நம்பிக்கையற்றவர்க்கு இவ்வத்தியாயம் ருசிக்காது; கதையைமட்டும் கவனிப்பவருக்கு இது அத்தியா வசியமுமன்று.

பற்றிச் சிறிது விசாரிப்போம். முத்துஸ்வாமி அய்யர் சுவாமிகளை நிழல் போலப் பின்பற்றிச் சென்றார். இவ்விருவரும் சிதம்பரத்தின் கடைசி எல்லையைத் தாண்டுந்தருணத்தில் சுவாமிகள் திடீரென்று பின் திரும்பி "அதோ அந்தக் கோபுரத்தைப் பார், அது தரையிற் கிளம்பி உயரச்சென்று உம்பருலகுடன் உறவாடி நிலையாய் நிற்பதுபோல் உன் உள்ளமும் மேல் நோக்கி மயங்காது நிற்கும்படி கடவுள் உனக்கு அருள் செய்வார். அப்படி அருள் செய்யும்படி பிரார்த்தனை செய்து அந்தக்கோபுரத்தைக் கடவுள் மூர்த்தமாகப் பாவித்துச்சேவை செய்" என்று ஆக்ஞாபிக்க, முத்துஸ்வாமி அய்யரும் 'சுவாமி, உன் மகிமை அளவிடப்படாதது, மனோவாக்குக்கு எட்டாமலும், தட்டாமலும் நின்ற பொருள் நீ ஒருவனே. உன் ஸ்வரூபமாய் இவ்வுலகை ஆதரித்தடக்கும் இவ்வாகாயமும் அதில் நீ இட்டதைச் செய்து சஞ்சரிக்கும் நட்சத்திரக் கூட்டமாகிய அகிலாண்டகோடிகளும் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தில் நான் ஒரு ஏழை, பஞ்சை, அனாதை, நாயினும் நாயேன், புழுவினும் புல்லன். இவ்வுலகங்களின் ஓட்டத்தினால் உதிரும் ஒரு துளிக்குக்கூட நான் ஈடல்லன். பெருங்கடலுள்ள ஒரு துளி உவர்நீர் அழகாலும் குணத்தாலும் என்னிலும் உயர்ந்தது. வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, காற்றில் உலரும் செயலற்ற சிறு மணலுக்கும் நான் ஈடல்ல. மலை, நதி, கடல், காற்று, மேகம், சூரிய சந்திர நட்சத்திராதிகள் முதலிய பெரிய குடும்பத்தை நிலை குலையாது, நெறி வழுவாது பாதுகாக்கும் லீலையையுடைய சந்நியாச சம்சாரியான உனக்கு நானும் ஒரு பொருட்டாகத் தோன்றியதையும், என்னையுங்கூட அனாதையாய் விடச் சம்மதியாது ஆதரிக்க நினைத்த உன் நினைப்பையும், கிருமிமுதல் கிரஹங்கள்வரை சலியாது சஞ்சரிக்கும் உனது சித்விலாசச் சிறப்பையும் நான் நினைக்கும்போது உன் கோபுரத்தைக் கண்டு தெண்டனிடுவதும் எனக்கு ஒரு சிரமமா?' தீர்க்கமாய்த் தியானித்து, மயிர்க் கூச்செறிந்து, உடல் முழுவதும் தரையில் பட சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து எழுந்தார். எழுந்தவுடன் சுவாமிகள் 'முத்துஸ்வாமி என் தங்கமடா நீ'

* என்று மனதார மெச்சித் தட்டிக்கொடுத்து, ‘தில்லை ஸ்தலமே ஸ்தலமப்பா. “தில்லை தில்லை யென்றாற் பிறவி இல்லை இல்லை” யென்று மறைமொழியும். “தொல்லைதொல்லை யென்ற கொடுவினை வல்லை வல்லை” யென்றகலும். சுவாமி உண்டு என்பதும் அங்கேதான், இல்லை என்பதும் அங்கே தான். கடவுள் ஆனந்தத்தாண்டவம் ஆடுவதும் அங்கே தான். அசைவற்ற வெளியாயிருப்பதும் அங்கேதான். அறியாதாரும் அறிவைப் பெறுவது அங்கேதான். அறிந்தவர்கள் அனுபவிப்பதும் அங்கேதான். அது தெரியாமலா “தேங்கு நீர்சூழ்வயல் தில்லைக்கூத்தனைப் பாங்கிலாத் தொண்டனேன் மறந்துய்வனோ” என்று சொன்னான் எங்கள் அப்பன்.’

“அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை
யருமறையினகத்தானை யணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்

* இதை குரு சிஷ்ய பாவத்தை அனுபவித்தவர் அன்றி மற்றோர் அறிதல் அரிது. சிஷ்யன் குருவைத் தேடிச் செல்வது போலவே குருவும் சிஷ்யனைத் தேடி அலைகிறார். ஒரு ஊரில் ஒரு அரசன் வேதாந்த விசாரணையில் ஆசைகொண்டு சிஷ்யனுக்குத் தக்க குரு வேண்டும் என்று முரசறைவித்தான். வள்ளுவன் முரசறைந்து வரும்போது ஊருக்கு வெளியில் ஓர் குப்பை மேட்டில் கூர்மாசனமிட்டு எழுந்தருளியிருந்த ரிஷி ஒருவர் அவ்வள்ளுவனை அழைத்து குருவுக்குத் தக்க சீஷன் வேண்டுமென்று முரசறையச் சொன்னார். அவன் அவ்வாறு அறைந்த பறையோசையைக் கேட்டு அரசன் திடுக்கிட்டு, உண்மை விசாரித்து, மனமகிழ்ந்து குருவை யடைந்து பிறவி கடந்தான் என்ற ஒரு கதைகூட உண்டு. தேடிப்பெற்ற சிஷ்யனிடத்து குருவுக்கு அந்தரங்கமுள்ள சின்மயமான பேரின்ப வாஞ்ஜை ஜனிக்கும். இருவரும் பிரம்மத்தை யறிந்தனுபவிக்கும்பொழுது குரு சீஷன், சிறியன் பெரியன் என்ற பேதாபேதமற்ற சமரசநிலையில் இருப்பது வேதாந்திகள் அறிந்த அதிசயம்.

கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.''

சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு
மேழுலகுங் கடந்தப்பானின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.''

''உருவமும் இங்கேதான்; ஒளியும் இங்கேதான். சிருஷ்டியும் சம்ஹாரமும் இங்கேதான்.

''பசியா மருந்தளிக்கும் பரமரகசியத்தி
லசையாமலே யாடு மம்பல நாதனைக்
காணாத கண்ணென்ன கண்ணே.''

''ஊராரு மறியாம லொளிகண்டு பிசகாமல்
ஈராறு கண்கொண்டு எழும்பிய மண்டபம்
காணாத கண்ணென்ன கண்ணே''

* என்று சொல்லி உபநிஷத்தின் உட்கருத்தை உள்ளடக்கி அமைத்த ஆலயத்தையும் அதற்குள் சிருஷ்டிக்கு முன்னும் பின்னும் ஒடுங்காத கடவுளின் ஆனந்த நிலைமையையும், ஆகாசரூபத்தையும், ஆனந்தத்தாண்டவத்தையும் ஒருமித்து உருவகம் செய்திருக்கும் சபாபதியையும் ரஹசிய வெளியையும் அவற்றிற்குப்பின்னுள்ள திருமூலர் மந்திரத்தையும் எண்ணி சுவாமிகள் ஞானானந்தப் புலம்பல் புலம்பிச் செல்ல, அவர் பின்னே முத்துஸ்வாமி அய்யரும் சூரியனுடைய பிரதி

* அடியில் விஸ்தரிக்கப்படும் மோனானந்த நிலை சொந்தமாய் அனுபவித்தாருக்கன்றி மற்றோருக்குத் தெளிவாய் விளங்காதெனப் பெரியோர் கூறுவர். ஆயினும் அதை ''வெறுங்கதை'' யென்று ஒருவரும் நிராகரிக்கமாட்டார் களென்று நம்புகிறேன்.

பிம்பத்தைத் தன்னுள் பெற்று பனித்துளியானது மகிழ்ந்து விளங்குவது போல் மகிழ்ந்து சென்றார்.

இவ்வாறு இவர்கள் வழிநடந்து திருவொற்றியூரை அடைந்து அவ்விடத்திலுள்ள பட்டணத்தார் சமாதியை அடைந்து அங்கே தங்கி யிருந்தார்கள். அவ்வாறு தங்கியிருக்கும் பொழுது ஒருநாள் பிரபஞ்ச முழுவதும் தன்னுடைய குலாசார கர்மானுஷ்டானங்களை முடித்துக் கடவுளுக்கு வந்தனமளித்துத் தியானம் செய்யும் சாயங்கால சமயத்தில் ஞானதவபவ சுவரூபராகிய சச்சிதானந்த சுவாமிகள் மூலலிங்கத்தைத் தழுவிக்கொண்டு யோக நித்திரையிலிருந்தார். அப்பொழுது முத்துஸ்வாமியய்யரும் சுவாமிகளுடைய மற்ற சிஷ்யர்கள் சிலருமாகச் சமாதிக்கு வெளிப்புறத்திலுள்ள கிணற்றோரத்தில் உட்கார்ந்திருந்தார்கள். முத்துஸ்வாமியய்யர் 'கடவுளொருவரே யானாலும் அவரை யறியவும், அனுபவிக்கவும் பல வழிகளிலிருக்கின்றன. அந்த வழிகளிலெல்லாம் உத்தமமான வழியை எது போதிக்கிறதோ அதுதான் உத்தமமான மதம்' என்ற விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது 'நம்முடைய பெரியவர்கள் கடவுள் மூர்த்தங்களை யெல்லாம் 'ஞான ஆனந்த மூர்த்திகளாக' பாவனை பண்ணியிருக்கிறார்கள். நானறிந்த மட்டில் வேறெவர்களும் கடவுளை இப்படி யறியவில்லை. கடவுள் அழிவில்லாத ஆனந்தமூர்த்தி. கணபதியோ ஆனந்தமதம் பொழிந்து அந்த ஆனந்த வெள்ளத்தில் கண்சிறுத்த யானை ஸ்வரூபம். சுப்பிரமணியரோ மயில் வாகனத்தின் மேலேறி ஆனந்தப் பிரேமை பாடுகிறார். மகாவிஷ்ணு பாற்கடலைத் தேடிப் பள்ளி கொண்டிருக்கிறார். நித்திரை வராவிடிலோ கருடன் மீதேறி ஆனந்தமாய் பவனி பண்ணுகிறார். நடராஜனைப்பற்றித்தான் கேட்கவே வேண்டியதில்லை. "சிற்சபையிலானந்த நர்த்தமிடு கருணாகரக் கடவுளே" என்று நன்றாய்ச் சொன்னார். மனிதனும் பிரம்மஸ்வரூபமில்லாவிட்டால் அவனுக்கு அவ்வளவு ஆனந்தமுண்டாகுமா? உலகந்தான் மனிதனுக்கு விரோதி. ஐயோ அது செய்கிற சந்தடியும், அதன் அற்ப சந்தோஷங்களும் அற்ப துக்கங்களும், மகா அற்பமான சண்டைகளும், சச்சரவு

களும் மனிதனைக் கழுதையாக்கி விடுகின்றன. ''இடும்பைகூர் என் வயிறே'' என்று சொன்னபடி இந்த வயிறு மட்டும் ஒன்று இல்லாவிட்டால் மனிதனுக்குச் சமானமாக யாரைச் சொல்லுகிறது. அவன் அனுபவிக்கவே பிறந்தவன். சுவாமி அனுபவிக்கச் சக்தியும் கொடுத்து அவ்வனுபவம் சுலபத்தில் கிட்டாதபடி பலமான தடைகளையு மேற்படுத்தி யிருக்கிறார். நாம் ஒரு மாம்சத் துண்டை நாய்க்குக் காட்டித் தூர வீசியெறிந்து விளையாடுவதுபோல சுவாமியும் நம்மைச் சோதனை செய்து விளையாடுகிறார். ''சரமெறிந்த பல்குனற்கு சரமீந்தான்.'' அதாவது அர்ச்சுனனை வலியச் சண்டைக் கிழுத்து அவனோடு கைகலந்து சண்டை போட்டல்லவோ சுவாமி அவனுக்குப் பாசுபத அஸ்திரம் கொடுத்தார். அது போல நம்மைச் சோதனை செய்வதில் அவருக்கு வெகு திருப்தி. நாம் எல்லாம் அவருக்குக் குழந்தைகள். நம்மைத் துரத்தி ஓடியும், நாம் துரத்த ஓடியும், நம்முடன் கொஞ்சிக் குலாவியும், அடித்துக் கிள்ளியும், தாலாட்டியும், ஏமாற்றியும், மாற்றி மாற்றி அழப் பண்ணுவதும் சிரிக்கச் செய்வதுமே அவருக்குத் தொழிலாகிவிட்டது. நமக்கு விளையாடக் கொடுத்திருக்கிற சாமான்களைத்தான் பாருங்கள். மரங்கள், நதிகள், நட்சத்திரங்கள், மேகங்கள், ஆகாயம். ''நமக்கு என்ன குறைவு! இவைகளை நாம் அனுபவிக்காவிட்டால் அது நம்முடைய குற்றம்''—என்று உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருக்கும்போதே திடீரென்று பெரிய விஷயங்களைப் பேச ஒரு ஆசையும் கட்டுக்கடங்காத ஒரு குதூகலமும் உண்டாயிற்று. அவர் ஆகாயம், காற்று, மேகம், கடவுள் இவற்றையெல்லாம்பற்றிப் பேசியும் அவருடைய உள்ளத்தின் ஆரவாரக் கொதிப்பு அடங்கவில்லை. இவ்விதம் சிறிது நேரம் அவருக்கு அசாத்தியமான பரபரப்பு இருந்தது. பிரமாத மான மனப்பசி ஒன்று உண்டாயிற்று. இப்படிச் சில நிமிஷங்கள் கழிந்த பிறகு அப் பரபரப்பு முற்று மடங்கி ஓர்வித ஆனந்தம் அவருக்கு ஜனித்தது. நிஷ்காரணமான குதூகலம் ஒன்று அவருள்ளத்தில் பிறக்க அவருக்குக் கண் மூடிவிட்டது. பேச்சு ஒழிந்து மௌனம் குடிகொண்டது. மனதில் தான் அனுபவிக்கும் எண்ணம் ஒன்று தவிர மற்ற

நினைப்பனைத்தும் இறந்தது. வெளியில் பார்க்கப்படும் பொருள்களெல்லாம் கொஞ்சமும் மனதில் பதியவே இல்லை. அவர் ஏதோ வெளியில் கலந்து ஒன்றுபட்டாற்போல அவருடைய மனம் அகண்டாகாரமான விரிவை யடைந்தது. அவர் அனுபவித்த ஆனந்தத்திற்கு எதுவும் ஈடல்ல. அக்காலத்தில் மற்ற எவ்வித சந்தோஷமும் அவருக்குக் கேவலமாகத் தோன்றிற்று. அவருடைய உள்ளக் கொதிப்பு அலைவீசி யெழுந்தது. அவர் முகம் மலர்ந்தவண்ணமாகவே இருந்தது. கண் போயே போய்விட்டது. தானே பிரம்ம மயமானாற்போன்ற ஓர்வித அறிவு அவருக்கு உண்டாயிற்று. புலன்களனைத்தும் அடங்கியிருந்தன. பகவத் விஷயமாகத் தாழ்ந்த குரலில் அருகிலிருந்தவர்கள் பேச அவருக்கு அந்த ஆனந்தம் அதிகப்பட்டது. சொல்லவறியாத இவ்வித ஆனந்தத்தில் அவர் இருந்தபோது சுவாமிகள் உள்ளே யிருந்து வெளியே வந்தார். அவரைக் கண்டவுடன் முத்து ஸ்வாமியய்யருக்கு ஆனந்தம் பெருகிற்று. சுவாமிகள் அவர் அருகில் உட்கார்ந்து "இதுதான் இன்பம், உனக்குப் பரிபாக காலம் சமீபிக்கிறது" என்று சொல்லி உற்சாகப்படுத்த முத்துஸ்வாமியய்யருக்கு ஆனந்தம் கரைகடந்து பெருகிற்று. அவர் வாய்விட்டுச் சிரிக்கவும் தொடங்கிவிட்டார். இன்னவித மான சந்தோஷமென்று அவருக்கு வாய்திறந்து சொல்ல மட்டும் கூடவில்லை. மனதில் இன்னமிர்தம் ஊறிக்கொண்டே யிருந்தது. இவ்விதமாகப் பொழுது போவதே தெரியாமல் இராக்காலம் முழுவதும் கழிந்தது. அது மறுநாளும் தொடர்ச்சியாய் நடந்திருக்கும். ஆனால் காலையில் தம்பட்ட ஓசைகளும் சமீபத்தில் ஈனஜாதி ஸ்திரீகளுக்குள் உண்டான சச்சரவுகளின் சப்தமும் அதைக் கெடுத்துவிட்டன.

———

31

பிள்ளையவர்களின் கல்வித்திறமையும் புத்தி நுட்பமும்

இங்கே முத்துஸ்வாமியய்யர் இப்படி ஆனந்தித்துக் கொண்டிருக்கக் கமலாம்பாள், லட்சுமி, அம்மையப்ப பிள்ளை முதலியவர்கள் சிதம்பரம் விட்டுப் புறப்பட்டுப் பட்டணம் வந்து ஸ்ரீநிவாசன் முன்னேயிருந்த ஜாகையிலேயே தங்கினார்கள். கமலாம்பாள் 'தெய்வமே உன் திருவுள்ளம் இப்படியா! நான் துன்பப்படுவது போதாதென்று என் பெண்ணையுமா இப்படிச் சிரமிக்கிறாய்' என்று ஓயாமல் கவலைப்பட்டாள். லட்சுமி, "தகப்பனையும் புருஷனையும் பறிகொடுத்து உயிர் வைத்துக்கொண்டிருக்கிற கள்ளச்சி நானல்லவோ' என்று ஏங்கினாள். அம்மையப்ப பிள்ளை ஊரெங்கும் அலைந்து பார்த்துக்கொண்டிருந்தார். இப்படியிருக்கும்போது அடுத்த வீட்டுப் பாட்டியம்மாள் கமலாம்பாளிடம் வந்து அவளுடைய நிலைமையைக் கண்டு பரிதபித்து, "அம்மா திருவொற்றியூர் என்று இதற்குச் சமீபத்தில் மகா க்ஷேத்திரம் ஒன்று இருக்கிறது. அங்கேதான் பட்டணத்தார் சமாதியடைந்தார். அவருடைய கோவிலில் ஒரு பெரியவர் வந்திருக்கிறார். அவருக்கு ஐந்நூறு வயதாய்விட்டதாம்; அன்ன ஆகாரம் கிடையாதாம். நடந்தது, நடக்கப்போகிறது, நடக்கிறது எல்லாவற்றையும் கொஞ்சங்கூடத் தவறாமல் சொல்லக் கூடியவராம். ஒரு மனிதனைப் பார்த்தால் அவனைப் பார்த்தவுடனேயே அவன் இன்ன காரியமாய் வந்திருக்கிறான் என்று சொல்லி அது பலிக்கும் பலிக்காது என்றும் சொல்லி விடுகிறாராம். வெகு லட்சணமாயிருக்கிறாராம். தொண்டு கிழவராம். நிரம்ப சாந்தமுள்ளவராம். அவர் பெயர் என்னவோ ஒரு 'ஆனந்த சுவாமிகள்' என்று வரும்—ஆமாம் சரிதான். சச்சிதானந்த சுவாமிகள். அவரைப்போய்க் கண்டால் உன் துக்கம் இந்த க்ஷணத்திலேயே நிவர்த்தியாகிறது அம்மா. ஆனால், அவர் இப்போது அங்கேதான்

இருக்கிறாரோ என்னவோ. முதலிலே யாரையாவது போய்ப் பார்த்துக்கொண்டு வரச்சொன்னால் அப்புறம் நீங்கள் எல்லோரும் போகலாம்'' என்று சொல்ல, கமலாம்பாள், "அம்மா பெரிய உபகாரம் செய்தீர்கள். இந்த உதவி யார் செய்வார்கள். இந்தக் காலத்தில் ஏதோ எங்கள் நிலைமையைக் கண்டு இரக்கப்பட்டு இவ்வளவு நல்ல செய்தியைச் சொன்ன உங்களுக்கு நான் என்ன உபகாரம் செய்யப்போகிறேன்'' என்று உபசாரம் சொல்லிவிட்டு, அம்மையப்ப பிள்ளை வந்தவுடன் அவருக்குத் தெரிவிக்க, "அவர் இதோ நான் போய்ப்பார்த்து வருகிறேன்'' என்று புறப்பட்டார்.

பிள்ளையவர்கள் திருவொற்றியூரை யடைந்து பட்டணத்தார் கோயிலுக்கு வழி விசாரித்துக்கொண்டிருந்தார். ஆய்விட்டது, கால்மணி சென்றால் கமலாம்பாளுடைய கவலை ஒழியும். அம்மையப்ப பிள்ளை தீவிரமாக வந்துகொண்டிருக்கிறார். அவ்வாறு வரும் வழியில் பண்டாரம் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவர் அவனைப் பட்டணத்தார் கோயிலுக்கு வழி கேட்க, அவன் அவர் மடியிலிருந்த பணப் பையைப் பார்த்து அவரைப் 'புதுக்கோழி' விசாரிக்க ஆவல் கொண்டு எழுந்திருந்து அவரைச் சேவித்து "சுவாமி அடியேன் இட்டுப்போகிறேன், வாருங்கள். இந்த நாய் இன்றைக்கு நல்ல பூஜை பண்ணிற்று. தங்களைப்போல பெரியவர்கள் சேவை எனக்குக் கிடைத்தது. சுவாமி ஏதோ தங்களிடம் வசிய சக்தி இருக்கிறது. 'ஊசியைக் காந்தம் இழுக்கிறது' போல் என்னை இழுக்கிறது'' என்று ஸ்தோத்திரம் செய்தான். வாஸ்தவத்திலேயே அவரிடத்தில் வெள்ளிக் காந்தம் மடியில் பைக்குள் இருந்தது. (பணமில்லாமல் பிள்ளையவர்கள் வெளியேறுகிறதில்லை.) பிள்ளையவர்களுக்கு அந்த ஞாபகம் கிடையாது. 'யதார்த்தத்திலேயே ஏதோ தன்னிடத்தில் அற்புதமான வசீகரசக்தி ஒன்று இருக்கிற'தாக அவர் எண்ணிக்கொண்டு சந்தோஷித்தார். இதுதான் சமயம் என்று கண்ட அந்தப் பண்டாரம் "சுவாமி, தங்கள் ஊர் பேரை யறிய இந்த நாய் ஆசைப்பட்டது'' என்று கை கட்டி வாய்பொத்தி விநயமாய்க்கேட்க, அம்மையப்பபிள்ளையவர்கள் அம்மை தவழ்ந்த தன் இருள் முகத்தில் புன்சிரிப்பு உலவி

நிலவு வீச, தான் ஆடுசாபட்டியில் அவதரித்த புண்ணிய சரித்திரத்தை நன்கு உணர்த்தி தற்காலத்தில் அண்டர் புகழும் அஷ்டாவதானம் ஆடுசாபட்டி அம்மையப்பக் கவிராயராய் விளங்குவதைச் சூட்சுமமாகச் சூசிப்பித்தார். அதைக் கேட்ட ஆஷாடபூதிப் பண்டாரம் கைகட்டி (வந்த சிரிப்பை யடக்க) வாய்பொத்தி நின்று, கீழே விழுந்து நமஸ்கரித்து "சுவாமி, இந்த நாய் இனி தங்களுக்கு அடிமை. இந்த நாயும் தமிழில் கொஞ்சம் எழுதப் படிக்கச் செய்யும். கொஞ்சம் கொஞ்சம் படிக்கும். தங்களைப்போல வித்வான் களைக் கண்டுவிட்டால் இந்த நாய்க்குத் தலைகால் தெரிகிறதில்லை" யென்று சொல்லி அவர் மடியில் பையில் பத்திரம செய்யப்பட்ட லட்சுமி தேவியை அந்தரங்க பக்தி யுடன் தியானித்து மறுபடியும் தெண்டனிட, வித்வான் அம்மையப்ப பிள்ளை அந்த நமஸ்காரங்களனைத்தையும் தனக்கே அர்ப்பிதம் செய்துகொண்டு பெருந்தன்மையான மந்தகாஸத்துடன் அவனைக் கைகொடுத்து எழுப்பினர். அப்படி எழுந்திருக்கும்போதே ஞானக் கண் படைத்த அப்பண்டாரத்துக்குப் பைக்குள் இவ்வளவு பணம் இருக்கலாம் என்று மதிப்புப் போடச் சௌகரியமாயிருந்தது. பிள்ளையவர் கள் அந்த ஏழைப் பண்டாரத்துக்கு அபயஸ்தம் அளித்து, அவனுடைய கல்வித்திறமையைப் பரீட்சை செய்ய ஆவல் கொண்டு, "நீர் ஏதாவது பாடல்கள் பார்த்ததுண்டா" என்று கம்பீரமாய்க் கேட்க, அவன் "முருகையா வேலாயுதம் சுவாமி, அவன் தான் எனக்குத் தெய்வம். அவன் ஒரு ஆண்டி, நான் ஒரு ஆண்டி; அவன் மேலேமேலே ஆண்டி. நான் கீழே ஆண்டி. அவனைப் பற்றித்தான் இந்த நாய் ஏதோ இரண்டு ஒன்று உளறியிருக்கிறது; வேறென்னத்தை அறியப்போகுது" என்று வணக்கமாய்ச் சொல்ல, கவிராயர் "எங்கே அதைக் கேட்போம் சொல்" என்று ஆக்ஞாபிக்க, அவருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு,

ஆறுமுகமாறு முகமாறு முகமாறுமுக
மாறுமுக மாறுமுக மாறுமுக மாறுமுகம்
ஏறுமயி லேறுமயி லேறுமயி லேறுமயில்
ஏறுமயி லேறுமயி லேறுமயி லேறுமயில்

என்று பாடி முடிக்கக் கவிராயர் பாடு சங்கடத்தில் வந்து விட்டது. அந்தப் பாட்டுக்கு அர்த்தம் கேட்டுவிட்டால் என்ன பண்ணுகிறது என்று அவருச்குப் பயம். ஆனாலும் அர்த்தம் அவன் கேட்கிறவரையில் இடங்கொடுக்கப் படாதென்று தீர்மானித்து "பாட்டு நன்றாயிருக்கிறது, எமகம் நன்றாயிருக்கிறது, சொற் பொலிவு, பொருட் பொலிவு நிரம்பி யிருக்கிறது" என்று உபசாரம் சொல்ல, அவன் "இந்த நாய் குளிகைகூடப் பாடும். குளிகை, பின் குளிகை, முன் குளிகை, அடி முடக்கு, நுனி முடக்கு, நொண்டிச்சிந்து, சப்பாணிச்சிந்து, சிவகாமிப்பண், காமாட்சிப்பண், ஓட்டக்கிடாரம், வட்டக்கிடாரம், சங்காக்கிடாரம், சக்கரைக்கிடாரம், திருக்குறிஞ்சி, முல்லைக் குறிஞ்சி இப்படிச் சில்லரையாகப் பாடும்" என்று சண்டப்பிரசண்டமாய்ச் சொல்ல, கவிராயர் "இதென்ன நாம் கனவிலும் கேளாத சங்கதிகளாயிருக்கிறதே; 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது'" என்று பயந்து, தான் நிரம்ப புத்திசாலியானதினால் தந்திரமாய்த் தப்பிக்க வழி யோசித்துத் தன் கவிக்கடையை அவிழ்த்துவிட்டார். அர்த்தமோ அர்த்தமில்லையோ அது அவருக்கு லட்சியமே யில்லை. இலக்கண விதியைக் கவனித்தே கட்டி வருகிறதில்லை. எமகம் திருபுக்குக் குறைந்த பாட்டு அவர் அபிப்பிராயத்தில் பாட்டே யில்லை.

* "மலரிடைவைகும் மதியிலர்காள்
டுடுடுடுடுடுடு
மலரிடைவைகும் மதியிலர்காள்
டுடுடுடுடுடுடு

என்று டுகர வர்க்கத்திலும்,

* "சேர்சிசூசா சீசுசச் சைசூ சோசாசு"

என்று சகர வர்க்கத்திலும் பாட்டுகளை வாரிவீசத் துவக்கினார். அவர் இவ்வித வித்யா வெறியிலிருக்கும்போது

*இப்பாட்டுகளின் பொருள் நான் எங்கு விசாரித்தும் கிடைக்கவில்லை. யாரேனும் தயவுகூர்ந்து சொல்வரேல் வந்தன முள்ளவனாயிருப்பேன்.

இதுதான் சமயம் என்று கண்ட அந்தப் பண்டாரம் பேசிக் கொண்டே அவரை வழியைவிட்டு இழுத்துக்கொண்டு போனான். அம்மையப்ப பிள்ளைக்கு இருந்த ஆவேசத்தில் எங்கே போகிறோம், வருகிறோம் என்கிற நினைவு கூட இல்லை. அவர் வெறும் சித்திரக் கவிகளுடன் நிறுத்தாமல் உத்பிரேட்சை முதலிய அலங்காரக் கவிகளிலேயும் புகுந்து விட்டார். ஒரு ஸ்திரீ விரகதாபத்திலிருந்தாளாம். அப்பொழுது நாழிகையாய்விட்டதால் சூரியன் தன் வழக்கப்படி கிரமமாக அஸ்தமித்தான். அப்படிச் சொல்வதற்குப் பதிலாக நமது வித்வான் 'சூரியனாகிய காற்றாடியானது அந்த ஸ்திரீயினுடைய பெருமூச்சாகிய சண்டமாருதத்தால் அடிபட்டுக் கீழே விழுந்தது விழுந்து மேலெல்லாம் காயம்பட்டு இரத்தம் வந்ததால் ஆகாயமெல்லாம் செவ்வானமாய்விட்டது' என்று திவ்யமான சிருங்கார ரசத்தோடு கூடிய பாட்டுகள் அநேகம் பாடினார். இன்னும் வசந்தகாலத்தை வர்ணிக்கும்போது வசந்த காலம் கார்காலத்தையொத்தது என்று பாடினார். ஏனென்றால் கார்காலத்தில் மேகங்கள் நிறைந்திருக்கும். வசந்த காலத்திலும் ஸ்திரீகளுடைய கூந்தல்களாகிய மேகங்களுண்டு. மேலும் கார்காலத்தில் மழை பெய்யும். அதுபோல வசந்த காலத்திலும் ஸ்திரீகள் நாயகர்களுடன் கோபித்துக்கொண்டு அழுகிறார்கள். கார்காலத்தில் பெருங் காற்று அடிக்கும். அதுபோலவே வசந்த காலத்திலும் ஸ்திரீகள் பிரிவாற்றாமையாற் பெருமூச்சு விடுகிறார்கள். கார்காலத்தில் மயில்களாடும். அதுபோல வசந்த காலத்திலும் ஸ்திரீகளாகிய மயில்கள் ஆடுகின்றன.—என்றிப்படி அபூர்வமான உபமானங்கள் அநேகம் எடுத்துச் சொன்னார். இங்கே இவர் இப்படிப் பிரசங்கம் செய்துகொண்டு போகும்போதே பட்டணத்தாருடைய சமாதியில் சுவாமிகள் முத்துஸ்வாமி பய்யரை அழைத்து "இனி நமக்கு இங்கே அலுவல் இல்லை" என்று சொல்லி அவருடன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு விட்டார். இவ்விடத்தில் அம்மையப்ப பிள்ளையவர்கள் அந்த ஏழைப் பண்டாரத்துக்கு வித்வத் லட்சணத்தையும், சித்திரக் கவிகளின் ஒழுங்கையும் உவமானங்களின் சாதுர்யத்தையும்,

இவைகளெல்லாம் தன்னிடத்தில் ஒருங்கே அமைந்திருக்கும் உண்மையும், முன் ஒரு காலத்தில் பட்டி வீரன் பட்டிக் கவண்டயன் கோட்டைக் கவிராயருடன் கைகலந்து யுத்தம் செய்து காக்கைதான் அன்னப்பட்சியென்று சாதித்ததையும், இன்னும் அனேக விஷயங்களையும் பற்றிப் பிரசங்கம் பண்ணிக்கொண்டே அவனுடன் போனார். அவனும் இவரை நிரம்ப ஆதரவு பண்ணித் தனிமையான ஓரிடத்துக்கு அழைத்துச்சென்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு அவர் மடியில் கைபோட எத்தனித்தான். பிள்ளைபவர்கள் தான் செய்த பிரசங்கத்தினால் உருகி தன்னை அன்புடன் ஆலிங்கனம் செய்கிறான் என்று எண்ணி மன மகிழ்ந்து முன்னிலும் அதிக உற்சாகத்துடன் நாய்க்கும் திருடனுக்கும், ஜலத்துக்கும் நெருப்புக்கும், கொக்குக்கும் கழுதைக்கும் சிலேடைகளை எடுத்து விசித்திரமான விருத்தங்களினால் விளக்கத்துவக்கினார். பண்டாரம் அவர் மடியில் அன்புடன் கைபோட்டு அங்கிருந்த பணப்பையை மெதுவாய் உருவினான். பணப்பையை உருவின வுடன் பிள்ளையவர்களுக்குப் பிரக்ஞை வந்துவிட்டது. "அடேடே என்னடாப் பயலே பண்ணுகின்றனை!" என்று அவர் அதட்ட, அந்தப் பண்டாரம் "ஒன்றும விசேடமில்லை சுவாமி; தாங்கள் இனனும் சொல்லவேணும், நிரம்ப நன்றாயிருக்கிறது; நாய்க்கும் திருடனுக்கும் சிலேடை வெகு நன்றாயிருக்கிறது. இவ்வளவு அருமையா யறிந்து யார் சொல்லப் போகிறார்கள். நாய் தன்பாட்டில் குலைக்கிறது, திருடனும் தன் பாட்டில் திருடுகிறான், நன்றாயிருக்கிறது உபமானம். ஐயோ தெய்வீகப் புலமை! தங்களுக்கு சரஸ்வதி நாவில் நர்த்தனம் செய்கிறாள்" என்று சொல்லித் தன் மடியில் அந்தப் பையைச் சமர்ப்பிக்கும் போது வித்வான் அம்மையப்ப பிள்ளையவர்கள் முற்றிலும் விழித்துக்கொண்டு "ஏனடா பயலே! வஞ்சகக் கள்வோய்! எனது தன்த்தை வௌவுகின்றனையா?" என்று கூவ, அவன் "இனிமேலெடுக்கவில்லை, சலாம், போய்வருகிறேன்" என்று சொல்லி ஓட்டமெடுத்தான். அம்மையப்ப பிள்ளை கூடத் துரத்தினார். கொஞ்சதூரம் போனவுடன் அவன் திடீரென்று திரும்பி அவர் முகத்தில் பளீரென்று ஒரு பலமான அறை அறைந்து கீழேவிழத் தள்ளிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடியே

போய் விட்டான். அம்மையப்ப பிள்ளை எழுந்திருக்க மாட்டாமல் எழுந்து 'ஐயோ தெய்வமே, இன்றைக்கு யார் முகத்தில் விழித்தோமோ, நம்மை இந்தப் போக்கிரிப்பயல் பாட்டுக் கேட்கிற பாவனையாய் மோசம் செய்து போய் விட்டான். அடடா, இப்படியுந்தான் உலகத்தில் உண்டா. செவிடன் காதில் சங்கூதின கதையாய் இவனிடத்தில் போய் நம்முடைய அருமையான பாட்டுக்களைப் பாடினோமே' என்று நிரம்பத் துக்கித்தார். பாவம் அவருக்குப் பணம்போனது கூட உறுத்தவில்லை. அனுபவிக்கத் தெரியாத மூடனிடத்தில் தம்முடைய பாட்டைப் பாடிக் கொண்டிருந்தோமே என்பதில் நிரம்ப வருத்தம். 'இனிமேல் அந்தப் பயல் வரட்டும், சொல்லுகிறேன் பார்' என்று சொல்லி அவர் பல்லைக் கடித்துக் கொண்டார். இனிமேல் இவரிடம் வர அவனுக்கு என்ன பயித்தியமா பிடித்திருக்கிறது! அவன் ஓடியே போய்விட்டான். இவரும் தன் மேலிருந்த புழுதியைத் துடைத்துவிட்டு தன் காலில் பட்ட காயத்தைப் பார்த்துக் கண்ணீர்விட்டு, கடைசியாக 'நாம் விழுந்ததும் மோசமானதும் நல்லவேளையாய் நம்மைத் தவிர ஒருவருக்கும் தெரியாதே' என்று தன்னைச் சமாதானம் பண்ணிக்கொண்டு 'ஏதோ வேளைப்பிசகு' என்று வேதாந்தம் பேசி மறுபடி திருவொற்றியூரைத் தேடிச் சென்றார். கடைசியாய்க் கண்டு பிடித்து பட்டணத்துப் பிள்ளையின் சமாதியைப் போய்ப் பார்க்க, அங்கே ஒருவருமில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார், எவரையும் காணோம். தனியேயிருந்த லிங்கத்தை மட்டும் தரிசனம் செய்துவிட்டு பட்டபாடு போதும் என்று வெயிலில் அலைந்து, உழன்று, வியர்த்து, வெறுங்கையாய் வீடுவந்து சேர்ந்தார். இவர் ஏதோ நல்ல சமாசாரங்கள் கொண்டு வரப்போகிறார் என்று காத்திருந்த கமலாம்பாள் முதலியவர்களும் வெறும் ஆளாய் வந்து சேர்ந்ததைப் பற்றி விசனித்தார்கள். அன்று மறுநாளே அங்கே காலதாமதம் செய்வதில் பயனில்லையென்று கண்டு அவ்விடம் விட்டு வடக்கே போக அவர்கள் எல்லோருமாகப் புறப்பட்டார்கள்.

32

ஆசை நோய்க்கு மருந்துமுண்டோ?

இங்கே இப்படியிருக்க, புதுச்சேரியில் ஒரு காராக்கிரஹத்தின் மெத்தையில் ஒரு யௌவன புருஷன் அங்கவஸ்திரத்தால் தனது முழந்தாளைச் சேர்த்துக்கட்டிக் கொண்டு தனியே உட்கார்ந்திருந்தான். நேரம் நடுநிசி. நிலவு வீசி யடித்தது. ஊர் முழுவதும் நிசப்தமாயிருந்தது. உலக மாந்தர் உண்ணுந் தொழிலை மறந்து உறங்குந் தொழிலிலிருந்தனர். பட்சிக ளெல்லாம் ஆடிப்பாடித் தமது கூட்டிலமர்ந்திருந்தன. மரங்கள்கூட அசைவற்று வாயடக்கி மௌனமாயிருந்தன. இப்படிப் பூலோகம் முழுவதும் நித்திராதேவியின் மோக வலையிலடங்கிச் சிறிதும் செயலற்று உறங்கிக் கொண்டிருக்க ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பேசாது ஒளிர்ந்தன. மேகங்கள் அரவமற்றுத் தனிவழி நடந்தன. எங்கும் பயங்கரமான நிசப்தம் குடிகொண்டிருந்தது. பேய்கூடத் தனிவழி செல்ல அஞ்சும் இந்நடுராத்திரி வேளையில் ஸ்ரீநிவாசன் மாத்திரம் சோர்ந்த முகத்துடன் சந்திரனைப் பார்த்துக் கொண்டு பெருமூடு வவிச்சுதும், தன்னையறியாமல் ததும்பி வரும் கண்ணீர்த் துளிகளை விரலால் சுண்டி யெறிவதுமாயிருந்தான். 'எம தூதர்கள் போல் நம்மை வஞ்சித்த போக்கிரிகள் இன்ன காரணத்திற்காக நம்மைச் சிறையிலிட்டிருக்கிறார்களென்று கூடத் தெரியவில்லையே' என்று ஏங்கினான். 'நாம் எங்கேயோ ஒரு இடத்திலும், அவள் எங்கேயோ ஒரு இடத்திலுமாக இருக்க நேரிட்டதே! ஐயோ அவள் நினைந்து நினைந்து உருகி உயிரை மாய்த்துக் கொள்ளுவாளே' என்று கவலைப்பட்டான். 'ஐயோ அவளை எலும்பும் தோலுமாகவாவது நான் காண்பேனோ தெய்வமே. முன்னே நாலுநாள் அவளைவிட்டுப் பிரிந்து நான் காஞ்சிபுரம் போய் வருவதற்குள் அவள் உடம்பு அரையுடம்பாயிருந்ததே. ஐயோ இப்பொழுது என்ன செய்கிறாளோ' என்று பெருமூச்செறிந்தான். 'ஏது அவள் உயிரை வைத்துக் கொண்டிருப்பாள் என்று தோன்றவில்லை. எனக்காவது அவளை விட்டுப் பிரிந்த

ஒரு துன்பம். அவளுக்குத் தகப்பனார், தம்பி, போதாக் குறைக்கு நான், எங்கள் மூன்று பேரையும் விட்டுப் பிரிந்த துன்பம். அத்துன்பத்துடன் அவள் உயிர் தரிக்கவா !' என்று கண்ணீர் பெருக்கினான். 'நான் இவ்விதமாகப் போனேன், வந்தேன், இவ்விடத்திலிருக்கிறேன்' என்று கூட அவளுக்குச் சொல்வாரில்லையே. அவள்தான் எங்கே யிருக்கிறாளோ, சிதம்பரத்துக்கே போனாளோ. அல்லது மறுபடி சிறுகுளத்துக்கே போனாளோ, தகப்பனாரைத்தான் கண்டாளோ, அதுவுமில்லையோ. எந்தக் காடோ, செடியோ, யார் கையிலோ எங்கே தவிக்கிறாளோ' என்று உருகினான். 'இதே தருணத்தில், இதே நிலவில், அவளும் என்னை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தாலுமிருக்கலாம். அப்படியிருந்துமென்ன ; இந்தச் சந்திரன் நமக்காகச் சாட்சி சொல்லப் போகிறதா ? அன்னத்தைத் தூதுவிட்டதும், மேகத்தைத் தூதுவிட்டதும் கைக்கெட்டாத கதையாயிருக்கிறதே !' என்று கண்ணீர் விட்டான். 'ஐயோ நாங்கள சேர்ந்திருந்த காலத்தில் இந்த மாதிரி நிலவைக் கண்டுவிட்டால் என்ன பாடு படமாட்டாள். அன்றைக்குச் சமுத்திரக்கரையிலே சந்திரன் "கலந்தவர்க் கினியதோர் கள்ளாய்" இருக்கிறது என்று பாடினாளே ; இப்பொழுது "பிரிந்தவர்க்கு உயிர்சுடு விஷமுமாய்" என்று அடுத்த வரியைப் பாடி யழுகிறாளோ !" என்று தானுமழுதான். 'இந்த மேகங்கள் ஒன்றோடொன்று பேதமில்லாமல் கலப்பதுபோல் நம்மிருவர் மனமும் கலந்துவிட்டது என்று களித்தாளே ; அதற்குத்தான் தண்டனையா இது, தெய்வமே !' என்று தவித்தான். 'இந்த ஆகாசம் போல் கடவுள் கிருபை அளவற்றிருக்க நமக்கு என்ன குறை! என்று கர்வித்தவளுக்கு இது வேண்டியதுதான்' என்று தலையசைத்தான். 'நாமிருவரும் சந்திரனும் ரோகிணியும் போல ஒருநாளும் பிரியவே மாட்டோம். சாகிறபோதுகூட இரண்டு பேரும் சேர்ந்து ஒரேநாளிலேதான் சாவோம். செத்த பிறகு துருவன், அருந்ததி, ரோகிணி இவர்கள் இருக்கிறது போல நாமிருவரும ஜோடியாக அடுத்தடுத்து இரண்டு நட்சத்திரமாகச் சுக்கிரனைப் போல ஆகாயததில் 'பளீர்' என்று மின்னிக் கொண்டு வேடிக்கையாக இருப்போம் என்று பிதற்றினையேடி

பயித்தியக்காரி, இவ்வளவு கர்வம் ஆகுமா என்று கடவுள் கண்டிக்கிறார் பார்த்தாயா! கண்டிக்கட்டும், கண்டிக்கிற தெல்லாம் கண்டிக்கட்டும்'—என்று பெருமூச்சு விட்டான்.

பிறகு உட்கார இருப்புக்கொள்ளாமல் எழுந்து 'இந்த நிலாவையும், தென்றலையும் போலிருக்கிறது நம்முடைய அன்பு என்று உபமானங்கள் கொண்டுவந்தாயேடி, ஐயோ நாம் அனுபவித்ததும், விளையாடினதும், ஆனந்தப்பட்டதும் எல்லாம் கனவாகப் போய்விட்டதே' என்று சொல்லி அங்கு மிங்கும் உலாவினான். பிறகு தன்னைப் 'பாரா'க் காக்கும் காவலாளரின் குரல் காதில்பட, 'போக்கிரி கவர்ண்மெண்டு, இதுவும் ஒரு கவர்ண்மெண்டா! காமாட்டி சர்க்கார், அயோக்கியப் பையல்கள்; அந்நியாய ராஜ்ஜியம், தொலை யக் காலம் வந்துவிட்டது இந்தக் கவர்ண்மெண்டுக்குச் சொல்லுகிறேன் வழி. கேள்வி முறை கிடையாதா? விசாரணை, இழவு, எட்டு ஒன்றுமா கிடையாது! நான் எழுதின விண்ணப்பத்துக்குக் கூடவா பதில் கிடையாது. அடா, இன்ன குற்றததிறகாக நீ சிறைச்சாலையில் வைக்கப் பட்டிருக்கிறாய் என்று சொல்லித் தொலைக்கவேண்டாமோ! இப்பொழுது ஒன்றும் பேசப்படாது. இவர்கள் கையைவிட்டு வெளியேறினவுடனே சொல்லுகிறேன் வழி. சுப்பராயனுக்கு எழுதின கடிதம் நாளைபோய்ச் சேரும். அவன் நாளையே பதில எழுதினால் இரண்டு மூன்று நாளிலேயாவது வந்து விடாதா. ஒருவேளை அவனே வந்தாலும் வரலாம். ஐயோ என் மாமியார் ஒரு மகாலட்சுமி. அவளுக்கு வந்த கஷ்டங் களைப் பார். என் மாமனார், அவர் பெருந்தன்மையும், புத்தி விசாலமும், அவர்கள் ஒருவரோடொருவரிருந்த அன்பும், ஐயோ! அவர்களுக்குக்கூட இப்படி வருமா! அப்பப்பா! இந்த உலகம் வெகு கெட்ட உலகமப்பா!' என்று வெறுத் தான். பிறகு சந்திரனும் ரோகிணியும் மற்ற எண்ணிறந்த நட்சத்திரக் கூட்டங்களால் சூழப்பட்டு ஆகாயத்தில் சிங்காரமாய் கம்பீரமான அழகுடன் மெதுவாய்ப் பவனி செல்வதைச் சிறிதுநேரம் உற்றுப்பார்த்து 'ஐயோ லட்சுமி, உன்னை விட்டும் நான் பிரிந்திருப்பேனோ; அமெரிக்கா

தேசத்தவர்களுச்குக் கடிதம் எழுத வேண்டுமென்று சொன்னுயே எப்படி அந்தக் கடிதம்!*—'மகா-ராஜ-ராஜ-ஸ்ரீ அமெரிக்கா தேசத்து மகாஜனங்கள் அவர்களுக்கு அனேக ஆசீர்வாதம். க்ஷேமம் க்ஷேமத்துக்கு எழுதக் கோருகிறோம். எங்கள் தேசத்து சக்கரவர்த்தியாகிய சந்திர மகாராஜாவும், பட்டமகிஷியாகிய ரோஹிணி மகாராணியும் உங்களுடைய தேசத்துக்குப் பவனி வந்திருக்கிறார்கள். இவ்விடத்தில் நாங்கள் ஏழைக் குடிகள் அவர்களுடைய தரிசனமில்லாமல் தவிக்கிறதினுலே, அவர்கள் இவ்விடம் விஜயம் செய்யும்படி நாங்கள் வேண்டுகிறதாய் எங்கள் விண்ணப்பத்தை அவர்களுக்குத் தெரிவிக்கக் கோருகிறோம்.

இப்படிக்கு (இத்தேசத்துப் பிரஜைகளுக்காக)
ஸ்ரீநிவாசனும், லட்சுமியும்.——

என்று இப்படியெல்லாம் விளையாடினுயே,' என்று சொல்லி அவளுடைய அழகையும், அவளுடைய குரலையும், அவளுடைய பாட்டையும், படிப்பையும், புத்தி விஸ்தாரத்தையும், அவளுடன் தான் விளையாடின விளையாட்டுகளையும் நினைத்து நினைத்து, வாயும், நெஞ்சும், உலரமயங்கி, தன்னையும் தனக்குப் பலமுறை உருவெளியாகத் தோன்றிய தன் மனைவியையும், உயர விளங்கும் சந்திரனையும், தன்னைக் காக்கும் காப்பாளரையும் முறை முறையே நோக்கி, இரவு முழுவதும் வாடும் சந்திரனுடன் தானும் வாடிச் சோர்ந்திருந்தான்.

பொழுது விடிந்து சிறிது நேரத்துக்கெல்லாம் இரண்டு காவலாளிகள் உருவின கத்தியும் கையுமாய் ஸ்ரீநிவாசனைக் கச்சேரிக்கு விசாரணைக்காக இட்டுச் சென்றார்கள். குற்றம் பெரிய குற்றமானதினுலும், விசாரணை பெரிய விசாரணையானதாலும், ஐந்து நியாயாதிபதிகள் உட்கார்ந்து விசாரணை செய்தார்கள். இவ்வேடிக்கையைப் பார்க்க ஊர் முழுவதும் கச்சேரியில் வந்து கூடியிருந்தது. கைதி கூட்டிலடைபட்டு

*சந்திரன் இங்கே மறைந்திருக்கும்போது அமெரிக்கா தேசத்தில் பிரகாசிக்கிறதென்பது யாவருக்கும் தெரியும்.

நிற்கிறான். இரண்டு பக்கத்திலும் இரண்டு போர் வீரர்கள் உருவின கத்தியும் கையுமாய்க் காவல் நிற்கிறார்கள். சர்க்கார் தரப்பு வக்கீலாகிய பெரிய துரையவர்கள் கால் வரையில் தொங்கவிட்ட சட்டையுடன் கம்பீரமாய் எழுந்து, மூக்கில் கண்ணாடி தரித்து, குற்றப் பத்திரிகை படிக்கத் துவக்கினார். அதன் விவரம் யாதெனில் : 'புதுச்சேரி ராஜ்ஜியத்தின் முதல் மந்திரி திவான் சங்கரய்யர் என்று ஒருவர் இருந்தார். அவர் சர்க்கார் திரவியங்கள் சிலவற்றை அபகரித்துப் பட்டணத்தில் தன் பிள்ளைக்கு அனுப்பிவிட்டார். குற்றம் வெளிப்பட இருந்த தருணத்தில் குடும்ப சகிதமாய் ராஜ்யத்தை விட்டுப் புறப்பட்டு விட்டார். ஸ்ரீநிவாசன் ரூபத்திலும், நிறத்திலும் சங்கர அய்யருடைய மகனைப்போல இருந்தான். ஆதலால் அவனைச் சங்கரய்யருடைய மகனெனவே சிறை செய்து விசாரணையிலிட்டார்கள்.' ஸ்ரீநிவாசன் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டுக் குற்றமறியாத மனதானதால் கொஞ்சமும் கலங்காமல் சிங்கக்குட்டிபோல் நின்று கம்பீரமாய்க் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தான்.

வக்கீல் துரை:—உன் பெயரென்ன?

ஸ்ரீநிவாசன்:—ஸ்ரீநிவாசன்

வக்கீல்:—உண்மையான பெயர்?

ஸ்ரீநிவாசன்:—ஸ்ரீநிவாசன்.

வ்க்கீல்:—ஒளியாமல் சொல்லு!

ஸ்ரீநிவாசன்:—ஸ்ரீநிவாசன்.

வக்கீல்—வெங்கட்டராமன் என்று உனக்கு ஒரு பெயருண்டா?

ஸ்ரீநிவாசன்:—அப்படி எனக்கு இதுவரையில் ஒருவரும் பெயரிடவில்லை.

வக்கீல்:—உன் தகப்பனார் பெயர்?

ஸ்ரீநிவாசன்:—நாராயண அய்யர்.

வக்கீல்:—அவர் உத்தியோகம்?

ஸ்ரீநிவாசன்:—தாசில்.

வக்கீல்:—நீ திவான் சங்கரய்யர் மகனல்லவா?

ஸ்ரீநிவாசன்:—அவ்வளவு பெரிய பாக்கியத்தை நான் அடையவில்லை.

வக்கீல்:—நீ அவர் மகனைப்போலவே இருக்கிறாயே!

ஸ்ரீநிவாசன்:—அதுவும் என் குற்றமா!

வக்கீல்:—நீ நல்ல பால்யம்; நிரம்ப லட்சணமாயிருக்கிறாய்—

ஸ்ரீநிவாசன்:—அது என் குற்றமல்லவே!

வக்கீல்:—நான் சொல்லுவதைக் கேள்; அவ்வளவு வயதையும் லட்சணத்தையும் வீண்போக்காதே!

ஸ்ரீநிவாசன்:—வீண்போக்கவில்லை. எனக்குத் தக்கபடி கல்யாணம் ஆயிருக்கிறது.

வக்கீல்:—நான் சொல்வதைக் கேள்! நீ சங்கரய்யர் மகன்போலவே யிருக்கிறாய், குற்றத்தை ஒப்புக்கொண்டுவிடு.

ஸ்ரீநிவாசன்:—சங்கரய்யர் மகனைப்போல் இருக்கிற குற்றத்தை நான் வேணுமென்று செய்யவில்லை.

வக்கீல்:—நீ உண்மையை ஒப்புக்கொண்டுவிடு!

ஸ்ரீநிவாசன்:- தங்களுடைய ஆத்திரத்திற்காகப் பொய் சொல்ல எனக்குச் சம்மதமில்லை.

வக்கீல் துரையவர்களுடைய கேள்விகளுக்குத் திருப்தியான உத்தரம் அவருக்குக் கிடைக்காததால் சாட்சிகளையழைத்து இந்த மனிதன் சங்கரய்யர் மகன்தானா அல்லவா என்று விசாரித்தார்கள். ஸ்ரீநிவாசனைச் சிறைபிடித்து வந்தவர்கள் ஆமென்றும் மற்றவர்கள் அல்லவென்றும், பின்னும் சிலர் சந்தேகமாயிருக்கிறது என்றும், சரீரப் பரீட்சையின்மேல் அபிப்பிராயம் கொடுத்தார்கள். பிறகு ஸ்ரீநிவாசன் தன் தரப்பு சாட்சிகளாகத் தன்னுடைய டையரி' புஸ்தகம், தன் கையிலிருந்த சில கடிதங்கள்

இவைகளை ஆஜர்செய்தான். நியாயாதிபதிகள் அவைகளைப் பரிசோதனை செய்துகொண்டு ஸ்ரீநிவாசன் குற்றவாளி யல்லவென்று தீர்ப்புச்செய்தார்கள். ஸ்ரீநிவாசன் 'தன் தாயார், தகப்பனுருக்குத்தான் பிறந்தவன் என்ற செய்தியைக் கோர்ட்டு முன்பாக ருசுப்படுத்தினவன் நான் ஒருவன்தான் உலகத்தில். அதைத் தாங்கள் ஒப்புக்கொண்டதற்காக வந்தனமளிக்கிறேன்' என்று சொல்ல, கோர்ட்டார் அவனுடைய மனோ தைரியத்தையும் பெருந்தன்மையையும் மெச்சி இதுவரையில் சிறையில் வைத்ததற்காகவும், மான நஷ்டத்திற்காகவும் இதர நஷ்டத்திற்காகவும் பதினாயிரம் ரூபாய் சர்க்காரிலிருந்து கொடுக்கும்படி உத்தரவிட்டார்கள்.

33

கமலாம்பாள் கண்ட அதிசயக் கனவு

அம்மையப்ப பிள்ளை முதலானவர்கள் திருவொற்றியூரை விட்டுக் காசியை நோக்கியே புறப்பட்டுவிட்டார்கள். கமலாம்பாள் தான் முன்னிருந்த நிலைமையையும் தன் கணவர் நிரபராதியான தன்னைவிட்டுப் பிரிந்ததையும் நினைத்துப் பின் வருமாறு துக்கிக்கிறாள். 'இவ்வுலகில் கடவுள் ஒருவரை நம்ப லாமேயன்றி மனிதரில் யாரையும் நம்பக்கூடாது. எவ்வளவு உத்தமமான மனிதனானாலென்ன! அவனும் கடவுளுடைய ஆக்ஞைக்கு உட்பட்டவன்தானே.கடவுளுடைய கிருபை இருந் தால் நமக்கு ஒரு குறைவும் வராது. ஏதோ நாம் செய்த பாவம் அனுபவிக்கிறோம். பகவானுடைய சங்கல்பம் அப்படியிருக்கு மானால் அதற்கு நாம் செய்யத்தக்கது என்ன? புருஷனைத் தியானித்து வருந்துவதைக் காட்டிலும் கடவுளைத் தியானித்தாலாவது பயனுண்டு. மற்ற ஸ்திரீகள் அனுபவியாதபடி நாம் சுகம் அனுபவித்தோமே, அது போதாதா? ஆசைக்கு அளவில்லையென்பது சரியாகத்தான் இருக்கிறது. மேலும் இந்தத் துன்பமே கடவுளைப்பற்றி

நினைக்கச் செய்வதினால் நமக்கு ஒரு பெரிய அனுகூலமாக இருக்கிறது. 'வெங்காரம் வெய்தெனினும் நோய் தீர்க்கும், சிங்கி குளிர்ந்தும் கொல்லும்' என்றதுபோல மனிதன் அனுபவிக்கிற சுகமெல்லாம் அவனுக்கே ஹித சத்துருவாயும், துக்கமெல்லாம் உண்மையான நன்மையாகவும் இருக்கிறது. வாழ்வு வந்துவிட்டால் மனிதனுக்கு உள்ள கண், காது எல்லாம் அடைத்துப் போகிறது. நான், நான் என்று 'சர்வம் அஹம்மயம் ஜகத்'என்றபடி உலகமெல்லாம் நானாகவே நிறைந்திருக்க, பெரியோர், சிறியோர் கடவுள் ஒருவருமே இல்லாமற் போய்விடுகிறது. துன்பம் வந்தாலோ எவ்வளவு கேவலமான மனிதனானாலும் கடவுளைப்பற்றி ஒரு க்ஷணமாவது நினைக்கிறான். 'மரணகாலத்தில் என்னைத் தியானித்தவனுக்குக்கூட நான் மோக்ஷம் கொடுக்கிறேன்' என்று வாக்களித்திருக்கும் எளியார்க் கெளியானாகிய பகவான் துன்பம் வந்தகாலத்து நினைப்பவர்களுக்கு ஈடுபடமாட்டானா! 'பகவானே, உன் இஷ்டப்படி நடத்து; நான் ஒன்றும் முணுமுணுப்ப தில்லை. உன்னையற்றி இவ்வுலகில் ஒரு துணையும் காணேன். இன்பமானாலும், துன்பமானாலும் கொடுக்கிறவன் நீ என்பதை நினைத்தால் எனக்கு ஆனந்தமாயிருக்கிறது'— என்றிவ்வாறு தன் மனதில் எண்ணி யெண்ணிக் கணவனைப் பற்றிக் கவலைப்படுவதைவிட்டுப் பர்த்தாமீது வைத்திருந்த பக்தியையும், அன்பையும் உருக்கத்தையும் மெள்ள மெள்ளப் பகவான்மீது கமலாம்பாள் வைக்கத் தொடங்கினாள். ராம், ராம், ராம் என்று ராமநாம ஸ்மரணை செய்யத் தொடங்கினாள். 'சாக்ஷாத் ஸ்ரீராமனே சீதையை விட்டுப் பிரிந்து வருந்தினானே. அவன் காட்டின மாயையிலகப்பட்டுப் புழுவினுங் கேடான நான் புருஷனைவிட்டுப் பிரிந்து வருந்துகிறதும் ஓர் அதிசயமா' எனச் சிரிப்பாள் ஒரு சமயம். 'புருஷனேன், பெண்டேன், பிள்ளையேன், குட்டியேன்! நீ ஒருவன் இருக்க உன்னிலும் பெரியவராய் ஒருவரை மதிக்கவும் கூடுமோ? நீ நிறைந்த உலகத்தில் எதுவும் இல்லையென்று குறைபடுவதும் எங்கள் பாவமன்றோ!' என்று எண்ணுவாள் ஒரு சமயம். 'நீ இருப்பது மெய்; நான் இருப்பது பொய். உன் இச்சை வெல்லுமோ, என் இச்சை

வெல்லுமோ? உன் திருவுளப்படியே நடத்து; உன்னிடத்தில் இன்னதுதான் கேட்பதென்றுகூட நான் அறியேன்; எனக்கு எது நன்மையென்று உன் திருவுளத்திற்குத் தோன்றுகிறதோ அது எனக்குச் சித்திக்கட்டும்' என்று கோருவாள் ஒரு சமயம். 'ஐயோ என் கணவரைத்தான் இன்னும் ஒரு தடவை நான் காணவும் கூடுமோ! உன் கிருபை அப்படிக்கில்லையோ' என்றேங்குவாள் ஒரு சமயம். இப்படிப் பலவாறு சிந்தித்தழியு நாட்களுள் ஒரு நாள் இரவில் கடைச்சாம சமயத்தில் திடீரென்று கமலாம்பாளுக்கு ஓர் வெகு விசித்திரமான கனவொன்று நேர்ந்தது. மலைகளும், நதிகளும், யானைகளும், புலிகளும், ரிஷிகளும், முனிவர்களும் நிறைந்த ஒரு பெருங் காடொன்று அவள் கண்ணுக்குத் தென்பட்டது. அக்காட்டில் பளீர் என்றும் மின்னும் மின்னற்கொடி போன்ற தேஜோ ரூபத்துடன் பார்க்கப் பதினாயிரம் கண்ணும் போதாத திவ்ய சௌந்தரியத்துடன் கூடிப் புன்னகை தவழ்ந்த உதடும், மலரென மலர்ந்த முகமும், வண்டெனக் கரிய குழலும், பிறையென வளர்ந்த நுதலும், வில்லெனக் கோடிய புருவமும் நஞ்சிடையமிழ்தங் கூட்டி, 'கஞ்சத்தினளவிற்றேனும் கடலினும் பெரியதாய்,' 'சேயரி சிதறித் தீயவஞ்சமும் களவுமின்றி மழையென மதர்த்த' கண்களும் கொண்டு 'அன்னமும் அரம்பையரும் ஆரமழ்து நாண'—

"கற்றைவிரி பொற்சடைமயிர்த்துறுகலாபம்
சுற்றுமணி புக்கவிழை மிக்கிடை துவன்றி
விற்றவிழ வாணிமிர மெய்யணிகள் மின்னச்
சிற்றிடை துடங்கவொளிர் சீரடி பெயர்த்து"

ஒரு பெண்ணரசி அய்லே வர, அவளுடன் கைகோர்த்து

"நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும்வாளி யூடுலாவு தூணியும்"

கொண்டு மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ அய்யோ 'இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்,' என்ற கற்பனை கடந்த வடிவத்துடன் ஒரு மகாபுருஷன் தன்னெதிரே வந்ததாகவும், வரும்போதே,

ராமனும் சீதையும் வருகிறுர்கள்; ராமனும் சீதையும் நான் காண வருகிறுர்கள்' என்று அவளுக்கு ஒரு எண்ணம் உண்டானதாகவும், அவர்கள் வந்தவுடனே கீழே விழுந்து தெண்டனிட்டு அவரிருவருடைய பாதத்தையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டதாயும், அந்த மகா புருஷர் "பயப் படாதே! இவளைத் தேடி நானலைந்தது உனக்குத் தெரியுமே" என்று சொல்லித் தேற்றித் திடீரென்று மறைந்ததாயும் கமலாம்பாள் கண்டாள் ஒரு கனவு. கண்டு திடுக்கிட்டு விழித்து "கடவுளே உன் மகிமையே இது, கனவிலாயினும் கண்டேனே" என்று களித்துச் சந்தோஷத்தால் கண்ணீர் பெருகி விம்மியழுதாள். அவள் கண்டது கனவேயன்றி நனவல்ல. ஆயினும் அவளுடைய பெண்புத்திக்கு அது போதுமானதா யிருந்தது. அந்தக் கனவை மறுபடி மறுபடி ஞாபகத்துக்குக் கொண்டுவந்து அமிர்தபானம் பண்ணிறுற் போல் அவள் ஆனந்தித்தாள். மறுபடியும் வருமோ அந்தக் கனவு என்று முயற்சித்தாள். வராததைக் கண்டு கண்ணீர் பெருக்கிஞள். ராமா, ராமா, ராமா என்று ராம நாம ஸ்மரணையை முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகச் செய் தாள். கணவனை யிழந்த கவலையினும் கனவினை யிழந்த கவலை யதிகமாயிற்று. 'கடவுளே உன் மகிமையே மகிமை! நானும் ஒரு பொருட்டென உன் திருவுளம் நினைத்ததே' என மகிழ்ந் தாள். 'பயப்படாதே' என்று சொன்ஞய்; நீ யிருக்க எனக் கென்ன பயம்' என்று நகைத்தாள். 'வந்தவர்கள் இன்னும் சிறிது நேரம் இருந்தனர்களா' என ஏங்கிஞள். 'வெளி வந்தவரோ. போய் மறைந்தார் விலக்கவொருவர் தமைக் காணேன்' என விம்மிஞள். 'ராமன் சீதையைக் கண்டது போல் நானும் என் கணவனைக் காண்பேன், என் புருஷ நாயகத்தைக் காண்பேன்' எனக் களித்தாள். கமலாம்பா ளாவது இப்படியழுவதும், சிரிப்பதுமாக இருந்தாள். லட்சுமியோ முற்றிலும் அழுதவண்ணமாகவே இருந்தாள். ஏதாவது சில சமயம் சிரித்தால் தான் முன்னிருந்த நிலைமை யையும், இப்பொழுது இருக்கும் நிலைமையையும் குறித்து இரங்கும் இரத்தச் சிரிப்பாகவே இருக்குமன்றிச் சந்தோஷச் சிரிப்புக் கிடையாது. புருஷனைக் கண்டது போலவும், காணுமல்

தேடுவதுபோலவும், கனவுகள் கண்டு துயிலற்று வருந்தியது மன்றி, நேரில் சில சமயங்களில் உருவெளித்தோற்றமாகக் கண்டு விரைந்தோடி ஆலிங்கனஞ் செய்யப்போய் வெறு வெளியைக் கண்டு வெட்கித்தாள். மலர்ந்த செந்தாமரை போன்ற முகம் சதா வாடியே யிருந்தது. சரீரம் மாசுபடிந்து அங்கமெல்லாம் துரும்பாய் மெலிந்தது. கூந்தல் சடையாய்த் திரண்டது. கண் உருகிய செம்பாய் உருகியது. பவள வாய் ஒளி மழுங்கி உரையிழந்தது. கைகால் செயலற்றுச் சோர்ந்து கிடந்தன. கை வளைகள் நழுவி முழங்கைமட்டும் ஓடின. கழுத்தில் மாங்கல்யம் ஒன்றன்றி மற்ற நகை யாவும் கிடையாது. தாம்பூல புஷ்பம் சந்தனாதிகள் வாடையும் உதவாது. லட்சுமி,

> "உண்டென வுறையிற் கேட்டா ருயிருறு பாவமெல்லாங்
> கண்டினித் தெளிகவென்று காட்டுவாள் போலவாகி"

தன் மனோவேதனையைச் சகிக்கமாட்டாது தீயிடையிட்ட பூங்கொடி போலச் சோம்பினாள்.

34

பிரம்மானந்த சுகம்—ஓர் அதிசய சம்பவம்

இவர்கள் நிலைமை யிவ்வாறாக, சச்சிதானந்த சுவாமிகளும் முத்துஸ்வாமியய்யரும் பின்னும் சில சிஷ்யர்களுமாக ஜீவன் முத்தி க்ஷேத்திரமாகிய காசிமாநகரை யடைந்து அங்கே ஹனுமந்த கட்டத்தினருகே ஒரு மடத்தில் தங்கினார்கள். சச்சிதானந்த சுவாமிகள் காசியில் வெகு பிரபலம். அவ்விடத்தில் அவருடைய சேவைக்காகக் காத்திருப்பவர்கள் அனேகர். அவர், மத்தியில் காணப்படாது, மறுபடியும் வந்திருக்கிறார் என்ற செய்தி பரவினவுடனே திரள் திரளாய் ஜனங்கள் வந்துசேவித்தார்கள். அவ்வாறு சேவித்தவர்களில்

சச்சிதானந்த சுவாமிகளுடைய வைபவத்தையும் முத்துஸ்வாமி யய்யருடைய ஆனந்த நிலைமையும் கண்டு புகழாதவர் களில்லை. குழந்தைகளெல்லாம் பிரம்மானந்த ஸ்வரூபராகிய சுவாமிகளிடத்தில் வெகு பிரியம். குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும்போதும், வரும்போதும் அவரிடம் வந்து அவர் அவர்களுக்காகச் சேகரித்து வைத்திருக்கும் தேங்காய் பழங் களை வாங்கி வழி நெடுகத் தின்றுகொண்டே போகும். மற்ற வேளை மடத்தில் வந்து கூச்சலிட்டு விளையாடும். அப்படி விளையாடியும் அந்த மகானுடைய நிஷ்டை கலையாது இருப் பதைக் கண்டு ஆச்சரியப்படும். இரண்டு வயது, மூன்று வயது, நாலு வயதுக் குழந்தைகளெல்லாம் அவர் தோள் மேலும், தலை மேலும், கால் மேலும், கை மேலும் ஏறிக்கொண்டே யிருக்கும். அவரை அந்தக் குழந்தைகள் 'தாத்தா' என்று அழைப்பது வழக்கம். முத்துஸ்வாமியய்யரும் அவர்களிடத்தில் சுவாமிகள் போலவே பட்சம் பாராட்ட, அவரும் அவர் களுக்கு 'மாமா' ஆய்விட்டார். குழந்தைகள் அவருடைய தோள் மேலுமேறிக் குதிக்கத் தொடங்கின சுவாமிகளுடைய உபதேச பலத்தினால் குழந்தைகளெல்லாம் அவருக்குப் பிரம்ம ஸ்வரூபமாய்த் தோன்றும். அவ்வாறு தோன்ற கடவுளுடன் பிரத்தியட்ச ஸரஸம் செய்வதுபோல் அவர் அவர்களுடன் விளையாடி வந்தார். அக்குழந்தைகள் எல்லாரிலும் துரைசாமி என்னும் ஒரு குழந்தைமேல் அளவிலா பிரியம் ஏற்பட்டது. அக்குழந்தை லட்சணமாயிருந்ததினால் மாத்திரமல்ல, அதனுடைய முகவிலாசத்திலும் செய்கையிலும் பிர்ம்மதேஜஸ் தீர்க்கமாய்ப் பிரதிபலித்ததால் அக்குழந்தையுடன் அவர் ஸாட்சாத் கோபாலனைக் குழந்தையாய்ப் பெற்ற வசுதேவர் போலக் களித்து விளையாடினார்.

இப்படியவர் நிஷ்டையிலும் வியவகாரத்திலும் தன்னை மறவாது சுகப்பட்டுக்கொண்டு இருக்கும் நாட்களுள் ஒரு நாள் திடீரென்று அவருடைய மடத்துக்குள் இரண்டு பிரா மணரும் ஒரு சூத்திரனுமாக மூன்று பேர் சேர்ந்துவந்து அவரைச் சேவித்தார்கள். அவர்களைக் கண்டு முத்துஸ்வாமி யய்யர் ஆச்சரியப்பட்டு நிற்க, அவர்கள் மூவரும் "சுவாமி,

நாங்கள் செய்த அபராதத்தை மன்னித்தருள வேண்டும்'' என்று வேண்டினார்கள். அவர்களுள் சூத்திரனாயிருந்தவன், “சுவாமி, நான் செய்த குற்றத்துக்கு இது ஒரு பரிகாரமாகாது'' என்று சொல்லி, கூட வந்த பிராமணர்களிடம் வாங்கி பாங்கு நோட்டுகளாக ஒரு பெரிய திரவியக் குவியலை அவருடைய பாதத்தில் சமர்ப்பித்தான். அவ்வாறு சமர்ப்பித்தவன் நமது பழைய சிநேகிதனாகிய பேயாண்டித்தேவனே. அவன் வடதேசங்களில் சென்று கொள்ளையிட்டுச் சில வருஷங்களுக்குப் பின்னர் தன்னுடைய எதிராளியான முத்துஸ்வாமி அய்யருடைய நிலைமையைக் கண்டு வருவோம் என்று சிறுகுளத்துக்கு வர, ஊர் முழுவதும் மதியை யிழந்த இரவு போலவும், கணவனை யிழந்த கைம்பெண்ணைவும் ஒளி மழுங்கி, அருளிழந்து கிடக்கக் கண்டு ஆச்சரியப்பட்டு அதன் காரணத்தை விசாரிக்க, அவ்வூர் அரசர் போல விளங்கிய அய்யரவர்களுடைய குடும்பம் நிலைகுலைந்து, சின்னாபின்னப் பட்டுப்போனதைக் கேட்டு, அதற்குத் தான் காரணமானதையும் நினைத்து, மிகவும் மனவருத்தமடைந்து, எவ்விதமும் தான் செய்த தீங்குக்குப் பரிகாரம் செய்து விடுவதென்ற பெருந் தன்மையான வைராக்கியத்துடன் முத்துஸ்வாமி அய்யரைத் தேடிப் புறப்பட்டான்.

ஊருக்கு ஊர் உளவு விசாரித்துக்கொண்டு செல்லுகையில் ஒரு நாளிரவில் ஒரு வீட்டு வாசற்றிண்ணையில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். நடுநிசிக்குமேல் அவ்வீட்டுள இருவர் ஒருவர்மேல் ஒருவர் கடுங்கோபத்துடன் கலகப் படுவது அவன் காதில் விழ, அவன் தூக்கத்தை உதறிவிட்டுக் கவனிப்பானாயினான். கவனிக்கவே அவ்விருவரும் பம்பாயில் முத்துஸ்வாமியய்யருடைய பெருந்திரவியத்தைக் கூட்டுக் கொள்ளையடித்து ஊர் விட்டோடிய திருட்டுப் பிராமணர் களென்றும், அத்திரவியத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் அவ் விருவரும் தர்க்கிததுக் கொண்டிருப்பதாயும் அறிந்து, தந்திரமாய் அக்கணமே அவ்வீட்டுள் புகுந்து போலீஸ் உத்தியோகஸ்தனைப் போல நடித்து அவர்களைக் கலக்க, அவர்கள் கலங்கி அவன் கையிலகப்பட்டார்கள். பிறகு பணத்தைச்

சொந்தக்காரரிடம் சேர்த்துவிட்டால் அவர்களைச் சர்க்கார் தண்டனைக்குக் காட்டிக் கொடுப்பதில்லை என்று அவர்களுக்குச் சத்தியம் செய்துகொடுத்து அவர்களை யிட்டுக்கொண்டுபோய் பணம் புதைத்து வைக்கப்பட்டிருந்த இடம் சென்று அதைக் கைப்பற்றிக்கொண்டு மூவருமாகக் காசியை யடைந்து, முத்துஸ்வாமியய்யர் தங்கியிருந்த மடத்துக்கே வந்து சேர்ந்தார்கள். திடீரென்று இழந்த திரவியமனைத்தும் குவியலாய்த் தன்னெதிரே வரப்பெற்றும் முத்துஸ்வாமியய்யர் நிர்விகற்பமான மனோ லட்சணத்தை யடைந்த முக்தரானதினால் கடவுளுடைய அருளை வியந்து திரவிய முழுவதையும் தானம் செய்துவிடும்படி பேயாண்டித் தேவனுக்கு அனுமதி கொடுத்தார். அதைக் கேட்டு உள்ளேயிருந்த சச்சிதானந்த சுவாமிகள் "அது உன் செல்வமல்ல,மற்றவர்களுக்காக நீ அதைப் பத்திரப்படுத்தும்படி கடவுள் உனக்கு அனுப்பியிருக்கிறார். அதை எடுத்து வை!" என்று ஆக்ஞாபிக்க, குரு ஆணையை மதித்து அவரும் அப்படியே செய்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் முத்துஸ்வாமி அய்யருடைய முக்கிய சினேகிதனாகிய குழந்தை துரைசாமியும், அவனுடைய தகப்பனார் ராமசேஷய்யரென்பவரும் அவ்விடம் வந்து அவரைச் சேவை செய்து உட்கார்ந்தனர். அருகிலிருந்த பேயாண்டித்தேவன் அவ்விருவரையும் சிறிது நேரம் கூர்ந்து பார்த்து பிறகு ராமசேஷய்யரை நோக்கி "சுவாமி, அடியேன் வந்துவிட்டேன். குழந்தைக்கு உரியவர் எதிரவே இருக்கிறார். தங்களுக்கு அவ்வளவுதான் பிராப்தம்" என்று சொல்ல, ராமசேஷய்யர் திடுக்கிட்டு, தன்னுடன் பேசியது பேயாண்டித் தேவனென உணர்ந்து அவனுடைய க்ஷேமத்தையும் எதிர்பாராத வரவையும் விசாரித்து, கிலேசத்துடன் "யார் குழந்தைக்கு உரியவர்?' என்று கேட்க, "குழந்தை யார் மடியில இருக்கிறதோ அவர்கள்தான்" என்று பேயாண்டி முத்துஸ்வாமி அய்யரைக் காட்டி மறுமொழி சொன்னான். இவ்வுரை காதில் படுமுன்னமே ராமசேஷய்யருக்குக் கண்ணீர் பிரவாகமாகப் பெருகிற்று. அழுதுகொண்டே அவர் முத்துஸ்வாமி அய்யரைப் பார்த்து "சுவாமி தங்களுடைய குழந்தையாம்.

வளர்த்த வாஞ்சை என்னை விடவில்லை. குழந்தையைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொல்லி வெளியே போக ஆரம்பிக்க, முத்துஸ்வாமியய்யர் கடவுளுடைய நாடகத்தை யும், மனிதரது அக்ஞானத்தையுங் கண்டு, வியந்து அவரைக் கைப்பற்றி யிழுத்து "முன்போலும் தங்கள் குழந்தையேதான்; என்னுடையதானாலென்ன தங்களதானால் என்ன" என்று உபசாரங்கள் சொல்லி அவரைத் தேற்றி துரைசாமியை 'நடராஜா' என்று அருமையாய் அழைத்து பெற்ற என்னைக் காட்டிலும் வளர்த்த அவர் பெரிய பிதா என்று நயந்து சொல்லி தன் மனத்துக்குள் "சுவாமி! என்ன காரியத்துக்கோ இந்த உன் தந்திரம்' என்று எண்ண, உள்ளேயிருந்த சச்சிதானந்த சுவாமிகள் வெளியே வந்து குழந்தை நடராஜனையும் முத்துஸ்வாமி அய்யரையும் பார்த்து 'கடவுள் செயலுக்கு 'ததாஸ்து' சொல்லுவதே நம்முடைய தொழில், நயக்காக வேண்டியதொன்றுமில்லை" என்று தன் சிஷ்யருக்கு எடுத்துக் கூறினார். பிறகு பேயாண்டித்தேவன் தான் சொக்குப்பொடிக் காரி ஒருத்தியை அனுப்பிக் குழந்தையைத் தந்திரயாய்க் கைப்பற்றிக் குதிரைமீது வைத்தோடியதையும், குழந்தை யில்லாமல் தவித்துக்கொண்டிருந்த ராமசேஷய்யருடைய வேண்டுகோளுக்கிசைந்து ஆயிரம் பொன்னுக்கு அவ்வருமைக் குழந்தையை விக்கிரயம் செய்ததையும், தற்செயலாய் அவர்களை இங்கு சந்தித்ததையும் சவிஸ்தாரமாய்ச் சொல்ல, எல்லோரும் கடவுளுடைய திருவருளைக் கொண்டாடினார்கள். பேயாண்டித்தேவன் ராமசேஷய்யரைநோக்கித் "தங்களுடைய ஆயிரம் பொன்னையும் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன், யோசிக்க வேண்டாம்" என்று சொல்ல, அவர் "நானுள்ள வரையில் இந்தக் குழந்தையை விட்டுப் பிரியாதிருக்க வரம் வாங்கித் தருவாயாகில் ஆயிரம் பொன்னுக்கு ஆயிரம் லட்சம் பொன்னாகக் கொடுத்ததுபோல" என்று அழுது சொல்ல, முத்துஸ்வாமியய்யர் "பயப்படாதேயுங்கள், குழந்தை தங்களதே, தங்களதே" என்று தைரியம் சொன்னார்.

35

'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ!'

அம்மையப்ப பிள்ளை, கமலாம்பாள், லட்சுமி, சுந்தரம் முதலானவர்கள் பல ஊர்களிலலைந்து காசிக்கே கடைசியாய் வந்து ஓர் வீட்டில் தங்கியிருந்தார்கள். சில நாள் தங்கியிருந்த பிறகு, ஒருநாள் கமலாம்பாள் அவ்வீட்டில் வீணை யொன்றிருந்ததைக் கண்டு, பகவானைப் பற்றிப் பாட வேண்டுமென்று ஆசையுண்டானதால், லட்சுமியைக் கொஞ்சம் தேற்றி, உபசாரம் சொல்லி, அந்த வீணையை யெடுத்துப் பாடும்படி வேண்ட, அவளும் அரைமனதுடன் இசைந்து, *வீணையைக் கையிலெடுத்து, சுருதிகூட்டிப் பாடத் தொடங்கினாள்.

அகமேவு மணவாளுக்கென் னல்லலெல்லாஞ் சொல்லி
சுகமான நீபோய்ச் சுகம்கொடுவா பைங்கிளியே.
ஆருமறியாமலென்னை யந்தரங்கமாக வந்து
சேரும்படியிறைக்குச் செப்பிவா பைங்கிளியே.
ஆறாத கண்ணீர்க்கென் னங்கபங்கமானதையும்
கூறாததென்னோ குதலைமொழிப் பைங்கிளியே.
என்று விடியுமிறைவாவோ வென்றென்று
நின்ற நிலையெல்லாம் நிகழ்த்தாயோ பைங்கிளியே.
எந்தமடலூடுமெழுதா வென்னிறை வடிவைச்
சிந்தைமடலாலெழுதிச் சேர்ப்பனோ பைங்கிளியே.
கண்ணின் மணிபோலின்பங் காட்டியெனைப் பிரிந்த
திண்ணியருமின்னம் வந்து சேர்வாரோ பைங்கிளியே.

—என்றிப்படிப் பாடி வரும்பொழுதே கமலாம்பாள் கனவில் தோன்றிய ராமனைக் குறித்துக் கண்ணீர் பெருக்கினாள். பாட்டைக் கேட்டவர்கள் பைங்கிளிக் கண்ணியினிமைக்கும்

---

*குறிப்பு:— வீணை பூரண வாத்தியம் என்பது பிரசித்தம். சுத்த சத்வமான அதனுடைய அழகிய நாதத்துக்கு எதுவும் ஈடில்லை. இவ்வாத்தியம் நமது ஸ்திரீகளுக்குள் அருமையாகி வருவது மிகவும் பரிதாபமான விஷயம்.

பாட்டின் திறமைக்கும் உருகியெழுதார்கள். பாடிக்கொண்டிருந்த லட்சுமியோ தன் கணவனுக்குக் கண்ணிதோறும் கண்ணிதோறும் தூதுவிட்டுத் தூதுவிட்டுத் துக்கத்தால் பாடமாட்டாது முகமீது துணிபோட்டுக் கண்ணீரால் நனைந்திருந்த வீணையைக் கைவிட்டுக் கீழேவைத்துக் கோவென்று அலறி அழுதாள். இப்படி இவர்கள் கரை தெரியாத துக்கக் கடலுள் மூழ்கியிருக்கும் காலத்தில் ஒருநாள், தாங்கள் தங்கியிருந்த ஜாகைக்குக் கொஞ்ச தூரத்துக்குள் திரிகால ஞானியாகிய சச்சிதானந்த சுவாமிகள் என்று ஒரு பெரியவர் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைத் தரிசக்கும்பொருட்டு அம்மையப்ப பிள்ளை, ஜானகியம்மாள், கமலாம்பாள் இம் மூவருமாகப் புறப்பட்டுச் சென்றார்கள். இவர்கள் போய்ச் சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களுடைய ஜாகையின் வாசற்றிண்ணையில் இரண்டு சிறுவர் வழிப்போக்காய் வந்து உட்கார்ந்தார்கள்.

அவர்களுள் பெரியவன்: "காசிக்கு வந்திருப்பது மெய்யானால் இவ்வளவு அலைந்துமா அகப்படமாட்டார்கள்? சிதம்பரத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட கடிதங்கள் பொய்யென்றல்லவோ ஆய்விட்டது. கல்யாணத்தில் எப்பொழுது அவ்வளவு கெட்ட சகுனங்கள் நேரிட்டதோ அப்பொழுதே எனக்கு நம்பிக்கையில்லை. இனி ஊருக்குத் திரும்பவேண்டியது தான்."

மற்றவன்: "ஊரிலென்ன வைத்திருக்கிறது எனக்கு, நீ மட்டும் போ. பாவம் எனக்காக நீயும் வீணலைச்சலலைகிறாய். நான் அவர்களுக்காகக் கயாவில் சிரார்த்தம் செய்துவிட்டு எனக்கும் சிரார்த்தம் செய்துகொண்டு விடுகிறேன், நீ சீக்கிரம் புறப்படு."

முன் சொன்னவன்: "உன்னைவிட்டு ஊரில் எனக்கு வெகு வாழ்வோ! இரண்டுபேரும் இவ்வூரிலேயே இறபோம். காசியிலிறந்தாலும் கதியுண்டு."

மற்றவன்: "ஏற்கெனவே உள்ள பழி ஒன்று போதாதென்று உன் தாய், தகப்பனார், பெண்டாட்டி யிவர்கள் பழியும் எனக்கு வேண்டுமா?"

முன் சொன்னவன் : "உன்னைவிட அவர்கள் இருவரும் எனக்குப் பெரிதில்லை; இங்கேயே இருவரும் இறப்போம் வா."

மற்றவன் : "சுவாமி விசுவேசுவரா, உனக்கு இது சம்மதமா!" என்று உரக்கக் கூவி "சரி இங்கே உட்கார்ந்தால் எப்படி!" என்று சொல்ல இருவருமாய்க் கீழேயிறங்க ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது உள்ளேயிருந்த லட்சுமி தமிழ்ப் பேச்சாயிருக்கிறது, தன் நாயகன் குரல்போலுமிருக்கிறது என்று திடுக்கிட்டு, சுந்தரத்தை யழைத்து "வாசலில் யார் பார்" என்று சொல்ல, சுந்தரம் ஓடிவந்து வாசலில் பார்க்க, தனது அத்திம்பேர் ஸ்ரீநிவாசனுயிருக்கக் கண்டு, சந்தோஷத்துடன் "அத்திம்பேரே" என்று கூவினன். அதைக் கேட்டு ஸ்ரீநிவாசனும், சுப்பராயனும் திடுக்கிட்டுத் திரும்பி சுந்தரத்தைக் கண்டு அவனைத் தட்டிக்கொடுத்து "இங்கேயா இருக்கிறீர்கள், அக்கா எங்கே?" என்று கேட்க, சுந்தரம் சந்தோஷப் பெருக்கால் பேசமாட்டாது உள்ளே கை காட்டினன். உடனே ஸ்ரீநிவாசன் விரைந்து உள்ளே செல்ல, லட்சுமி எதிர்கொண்டு ஓடி வந்து அவனை இறுகத் தழுவி மூர்ச்சித்தாள். ஸ்ரீநிவாசன் அவளை இறுக மார்புறத் தழுவி ஆனந்தத்தால் கண்ணீர் பெருக்கினன். சுப்பராயன் சுந்தரத்தைத் தழுவிக்கொண்டு விம்மினன். நெடுநேரம் சென்ற பிறகு, லட்சுமி மூர்ச்சை தெளிந்து, பிரக்ஞைவந்து, தன் நாயகரத்தினத்தை மறுபடியும் மறுபடியும் பார்த்துப்பார்த்து, இப்பொழுது மறு ஜனனமும், மறு கல்யாணமுமாதலால் தனது பரிமளமான அதரத்தின் முத்தங்களால் மறுபடியும் பணமாலையிட்டு, தன்னைத் தேடி நொந்துவந்த அவயவங்களுக்குக் கண்ணாலும், கையாலும், முகத்தாலும் ஒற்றி ஒற்றி வேது செய்தாள். "பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ" என்றபடி ஒருவரை ஒருவர் தன்னிலும் அன்னியமாக முன்னிலையில் வைத்துப் பேசக்கூடாதபடி, முகத்தோடு முகமும், கண்ணோடு கண்ணும், கையோடு கையும், உடலோடு உடலும், மனத்தோடு மனமும் ஒன்றுபட்டு இருவரும் மாறிப் புளகாங்கிதமடைந்து ஈருடலுக்கு ஒருயிராகிய ஸ்ரீநிவாசன் லட்சுமி இவர்களின் நிலைமையை என்னென்று சொல்வேன்!

இறந்தனர் பிறந்த பயனெய்தினர் கொலென்கோ!
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர் கொலென்கோ!
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்தது கொலென்கோ!

அல்லது கண்களையிழந்து குருடாய் உழல்பவர் திடீரென்று காட்சி பெற்றார்கள் எனவோ, அல்லது பகவானுடைய கிருபைக்காக நெடுநாள் கொடூர தபசு செய்பவர் திடீரென்று சாட்சாத்காரமாய் அக்கடவுளைக் கண்ணாரக் கண்டார்களெனவோ!

இவர்களுடைய நிலைமை யிவ்வாறாக, சச்சிதானந்த ஸ்வாமிகள் கமலாம்பாளைக் கண்டவுடனேயே அவளுடைய முகவிலாசத்தையும், கம்பீரத்தையும், சாந்தத்தையும் பார்த்து அவள் தன் சிஷ்ருடைய பத்தினியென ஏதோ எண்ணம் எழ, விரைந்து வந்து, தனது இருகையையும் அவள் சிரமேல் வைத்து "தீர்க்க சுப மங்கலிபவா" என வாழ்த்தி "மகாலெட்சுமியென்றால் உன்னைத் தவிர வேறில்லை" என்று கொண்டாட, வணங்கி நின்ற கமலாம்பாள் சுவாமிகளை நிமிர்ந்து பார்த்தாள். அருகே நின்ற முத்துஸ்வாமியய்யருடைய முகம் தென்பட்டது. உடனே கமலாம்பாள் விரைந்தோடி அவர் பாதத்தில் வீழ்ந்து மூர்ச்சித்தாள். முத்துஸ்வாமியய்யரோ "கடவுளே, உன் மாயை அகாதமாயிருக்கிறது. சிரிப்பதென்றும், அழுவதென்றும் எனக்குத் தெரியாது. நான் இரண்டும் செய்யாமல் உன் பிரபாவத்தையே புகழ்வேன்" என்று ப்ரம்மத்தில் லயித்துப் பரவசமானார். இவர்கள் இப்படி ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கும் போதே ஸ்ரீநிவாசன், லட்சுமி, சுந்தரம், சுப்பராயன் முதலியவர்களும் மடத்திற்கு வழியை விசாரித்துக்கொண்டு வந்து விட்டார்கள். வரவே ஏக கல்யாணமாய்விட்டது. பலபேருடைய பலநாள் துயரம் பகவானுடைய கிருபையால் ஒரே இடத்தில் ஒரு நாழிகையில் நிவர்த்தியாக, சச்சிதானந்த மடம் சாக்ஷாத் சச்சிதானந்த மடமாகவே முடிந்தது. அலைந்ததும் திரிந்ததும், அழுததும் ஏங்கியதும், ஊரூராய் ஓடியதும், வீடு வீடாய்த் தேடியதும் எல்லாம் ஏதோ கனவு போல் மாற, யாவரும் அடங்காத குதூகலத்துடன் ஆனந்தத் தாண்டவ மாடினார்கள்.

36

'பொறுமையுடையோர் சிறுமையடையார்'

ஸ்ரீநிவாசன்-லட்சுமிக்கு வடக்கே ஹிமோத்பர்வதத்தைப் போய்ப் பார்த்து வரவேண்டுமென்ற ஆசை. உலகத்திலுள்ள மலைகளெல்லாவற்றிற்கும் பெரியதாய், பயங்கரமான காம்பீரியத்துடன், சிருஷ்டியின் காட்சிகளில் ஒன்ருகி மகோன்னதமான வைபவத்தோடு விளங்கா நிற்கும் தேவர்கள் வசிக்கத்தக்க ஹிமாலயத்தைக் கண்குளிரக் கண்டுவர அவ்விருவருக்கும் அதிக ஆசை. ஆனுல் சமயம் சரியாக இல்லை. ஆனுலும் அம்மலையிற் பிறந்து, பிறந்த இடத்திற்கியைந்த பெருமையுடன் இரு கரையையும் அலை வீசி, ஆர்த்திரைத்து மயிரடர்ந்த சிம்மம்போலவும், திமிள் பெருத்த ரிஷபம் போலவும், மலைக்குணம் நிரம்பிய மதயானை போலவும், கம்பீரமான கதியுடன் அரசன் பவனி சென்ருற் போல, ஊருரும் சென்று கடலில் கலக்கும் கடவுள் நதியாகிய கங்கையைக் கண்டு அவர்கள், தங்களை ஒருவாறு திருப்தி செய்துகொண்டார்கள். 'மணல் வீடுகட்டி, அதினடு சோற்றை யுண்டுண்டு தேக்கு சிறியார்கள் போல' அற்ப விஷயங்களில் ஆயுள்களைச் செலவிட்டு 'ஊன கந்தனதாக' உயிரை ஒடுக்கும் சிறியோராகிய நாம் நம்முடைய எல்லையைக் கடந்து கடல், காற்று, மேகம், சூரிய, சந்திர நட்சத்திராதிகள் முதலிய பெரிய வஸ்துகளுடன் மனங்கலந்து உறவாடுவதே இவ்வுலகில் ஒரு பெரும் பாக்கியம் அல்லவா! கமலாம்பாள் முதலிய எல்லோரும் ஒன்றுசேர்ந்து இரண்டு மூன்று நாளுக்கப்பால், கட்சி கட்சியாய்க் கங்காநதியின் வெண்மணலில் வெண்நிலவில், வெண் பொங்கல் முதலிய வைத்து விருந்தாடிப் பின், சிறுகுளம் நோக்கி எல்லாருமாகப் புறப்பட்டார்கள். உத்தரப்பிரதேசம் தாண்டி தக்ஷிணம் வந்தவுடனே தந்தி மூலமாய் யாவையும் அறிந்திருந்த சப்மாஜிஸ்திரேட்டு வைத்தியநாதய்யர், அவர்களுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். அவர்கள் வந்து சேருமட்டுமாவது உயிர் தரித்திருக்க வேண்டுமென்பதுதான்

அந்தப் பிரபுவின் கோரிக்கை. 'காதலொன்றீது மோர் கள்ளின் தோற்றமே' என்றபடி ஆசைப்பெருக்கால் தன் நினைவுகூட இன்றிக் கண்டோர் யாவரிடத்தும் 'முத்துஸ்வாமியய்யர் வருகிறார், முத்துஸ்வாமியய்யர் வருகிறார்' என்று சொல்லி முற்காலத்தில் ராமனை எதிர்பார்த்த பரதன் போல வேதியரையும், தாதியரையும், தன்னையும், தொழுதுகொண்டிருந்த அவர் ஊருக்கு ஒரு மைலுக்கப்பாலேயே பூரண கும்பங்கள், மேள வாத்தியங்கள் சகிதம், அவர்கள் வருகிற செய்தி கேட்டுக் காத்திருந்தார்.

சிறுகுளம் முழுவதும் ஆண் பெண் அடங்க அவ்விடத்தில் கூடியிருந்தது. முத்துஸ்வாமியய்யரும் சச்சிதானந்த ஸ்வாமிகளும் இரண்டு பல்லக்குகளில் எழுந்தருளினார்கள். மற்றவர்கள் குதிரை வண்டிகள் முதலிய வாகனங்களில் ஏறினார்கள். ஜம், ஜம், ஜம் என்று மங்கள வாத்தியங்கள் முழங்கின. அம்மையப்ப பிள்ளை மாத்திரம் ஒரு குதிரையில் ஏறினார். அக்குதிரை வாத்திய கோஷத்தைக கேட்டு வெருண்டோட பிள்ளையவர்கள் அதனுடன் கௌரதையாய் யுத்தஞ் செய்து பார்த்துக் கட்டாமல் 'கூ கூ' என்று கூக்குரலிடத் துவக்கினார். பிறகு அவருக்கும் அவர் வாகனத்துக்குமுள்ள வழக்கைத் தீர்த்து இருவருக்கும் பாகம் செய்துவிட்டார்கள். வைத்திய நாதய்யருக்குச் சந்தோஷத்தால் தலைகால் தெரியவில்லை. ஊர் முழுவதும் அல்லோல கல்லோலப்பட்டது. சுவாமிகள் பிரம்மஸ்வரூபமாய் எழுந்தருளியிருந்தார்கள். முத்துஸ்வாமியய்யர் முதலியவர்கள் வைத்தியநாதய்யர் முதலிய சகலருக்கும் அன்பான முகமன் அளித்து ஊருக்குள் பிரவேசிக்க எத்தனித்தார்கள். ஊர் எல்லையை அவர்கள் மிதித்ததுதான் தாமதம்.

ஆர்த்தன பேரிகள் ஆர்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை ஆர்த்தனர் யாரும்

'பம்பம்' என்று சங்கத்தொனியும், ததீம் ததீம் என்ற பேரிகை ஒலியும், 'ஜம்ஜம்' என்ற தாளங்களின் ஒலியும், 'தாம்தாம்' என்ற மத்தள ஒலியும், மேள வாத்தியத்தின் ஓசையும்,

பாண்டு வாத்தியத்தின் ஓசையும் வேதியர் கோஷமும், அந்தணர் ஆசியும் ஆனந்தமான உற்சவ கோலத்தை உண்டு பண்ணின. இவ்விதம் உற்சாகத்துடன் ஊரை வலம் வந்து யாவரும் தத்தம் விடுதிகளில் சேர்ந்தார்கள்.

ஜனநெருங்கிய காசியையும் கங்கையையும் மறந்து சிறுகுள மென்ற கிராமத்தில் சிலகாலம் நாமும் தங்குவோம். அவ்வூர் அக்கிரஹாரம், கோயில், குளம், நதி, தோப்புகள், மந்தை, மந்தையின் ஒற்றைமரம், கொல்லன் பட்டரை, குத்துக்கல், அரசந்தட்டு, மீன் பாதை முதலிய கிராமச் சின்னங்கள் யாவற்றையும் நாம் மனதுக்குக் கொண்டுவந்து நம் மனோபலத்தால் சிறுகுளத்தைச் சிருஷ்டி செய்து அதில் சற்று வசிப்போம்.

சுவாமிகள் முத்துஸ்வாமியய்யரை இல்லறத்துறவி விருத்தி ஆசீர்வதித்துக் காசி சென்றார். பொன்னம்மாளுடைய நிலைமையை முத்துஸ்வாமியய்யர் கண்டு பரிதபித்து அவள் நிமித்தம் கடவுளை வேண்டுகிறார். அவளுக்குச் சித்தம் ஸ்வாதீனப்பட்டிருக்கிறது என்று வதந்தி. ஏதோ முன் இருந்ததற்கு இப்பொழுது 'தெளிவு' என்பதற்கு ஐயமில்லை. 'பாப்பா பட்டியகத்து வெட்டரிவாள்' என்ற குப்பிப்பாட்டி நெடுநாள் வியாதியால் வருந்தி இறந்தாள். சங்கரியம்மாள் கமலாம்பாளுடைய வாழ்வைக் கேட்டு மனம்பொறுது கிணற்றில் விழுந்து மரித்தாள். சுப்பம்மாள் கணவனை யிழந்து உபாதான மெடுத்து வயிறு வளர்க்கிறாள். அவளுக்குக் கண் ஒன்று அவிந்துபோய்விட்டது. ஈசுவர தீட்சிதர் குஷ்ட வியாதியால் வருந்துகிறார். முத்துஸ்வாமியய்யர் இவ்விரு வரும் தனக்குச் செய்த பெரிய உபகாரத்துக்காக அவர்களுக்கு மிகவும் வந்தனமுள்ளவராயிருக்கிறார். சுப்பம்மாளுடைய ஜீவனத்துக்காகக் கொஞ்சம் நிலம் விட்டிருக்கிறார். தீட்சிதருக்கும் அடிக்கடி ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கிறார். துஷ்டர்களை யிப்படி ஆதரவு செய்யலாமா என்றால் அவர் "நன்மைக்குப் பிரதி செய்யலாம். தீமைக்கு மட்டும் பிரதி செய்யக்கூடாது. மேலும் நமக்குத் துன்பம் கொடுப்பவர்கள் நமக்குப் பெரிய உபகாரிகள். ஏனெனில் துன்பத்தைப் போல்

ஹிதமான சிநேகிதன் யாருமில்லே. எனக்கு அடுத்தடுத்து துன்பங்கள் நேரிட்டிரா விட்டால் நான் இப்பொழுது அனுப விக்கும் பிரம்மானந்தத்தை அடைந்திருக்கமாட்டேன்" என்று மறுமொழி கூறுகிருர்.

எதார்த்தத்திலேயே இவ்வுலக இன்பங்களேப் போல் நமக்கு விரோதிகள் வேறு ஒன்றுமில்லே. நம்முடைய நிஜஸ்வரூபத்தை நம்மிடமிருந்து மறைத்து நாளேவரும் நெற் குவியலிலும் இன்றுள்ள பிடி விதை பெரிதென்று விழுங்கி வீணே நாள் கழிக்கும் 'நீக்ரோ' ஜாதியாரைப்போல நாம் நாளே அடையக்கூடிய ப்ரம்மானந்த சுகத்தை மறந்து இன்றுள்ள சிற்றின்பத்தில் முழுகி மயங்கும்படி நம்மைச் செய்கின்ற அற்பமாயும், அநித்தியமாயும், பயனற்றதாயும் தமோகுண சம்பந்தமாயும் துக்க கரமாயும் அசுரகுண ஸ்வரூப மாயும், நமக்கும் பிறருக்கும் ஜனனமரண சம்சாரமாகிய அனர்த்த பரம்பரைக்கு ஹேதுவாயும் உள்ள இவ்வகை இன்பங்கள் உயர்ந்தோரால் விரும்பற்பாலனவன்று. 'இங்கற்றவர்க்கு அங்குண்டு' என்றபடி அனேகருக்கும் துன்பமே ஒரு பெரிய மோட்ச சாதனமாயிருக்கிறதாதலால், தனவானுடைய தனத்தையும், ரூபவானுடைய ரூபத்தையும் போகத்தில் உல்லாசமாய்க் களித்திருப்பவரது போகத் தையும் கண்டு நாம் பொருமை கொள்ளாது, அவற்றிற்கு ஆளாகியிருப்போருக் கிரங்கி, துன்ப ரூபமாகக் கடவுளது அனுக்கிரகத்தைப் பெற்றேரைக் கண்டு கைகூப்புவதே இரகசியமான தத்துவ வழியாம். இது நிற்க.

ஸ்ரீநிவாசனும் லட்சுமியும் சௌக்கியமாகவே யிருக்கிறார் கள். அவர்களுடைய இன்பம் தாழ்ந்த சிற்றின்பமல்ல. உதாரணமாக: ஒருநாள் சிறுகுளத்திலிருக்கும்பொழுது சாயந்திரம் ஸ்ரீநிவாசன் கொல்லேப்புறத்திலுள்ள தோப்புக் குள் சென்றான். அஸ்தமனமான சமயம் ஆனதால் சூரிய னுடைய மெல்லிய ஒளி பரவி எங்கும் பொன்னிறமாயிருந்தது. ஸ்ரீநிவாசன் அந்திப் பொழுதின் ஆனந்தமான சாந்தத்தைக் கண்டு களிப்புற்றான். அங்கு ஓர் அழகிய அரச மரத்தில் திவ்வியமான மல்லிகைக்கொடி ஒன்று அன்பாய்ச் சுற்றிக்

கொண்டு அபரிமிதமான புஷ்பங்களை ஏந்தி நின்றது. அதைக் கண்டு, 'பண்டிதன், கொடி, ஸ்திரீ ஆகிய மூவரும் ஆஸ்ரய மன்றித் தனித்து விளங்கார்கள்' என்ற வாக்கியம் ஞாபகத்துக்கு வர, அவன் அவ்வரசமரத்தின் கம்பீரத்தையும், யௌவனத்தையும், சாந்தத்தையும், ஆதரவையும், அழகையும், அப்பூங்கொடியின் இளக்கத்தையும், பசுமையையும், மிருதுத் தன்மையும், புஷ்ப சம்பத்தையும், மனோக்கிய மான சௌந்தரியத்தையும், அவ்வரசமரத்தை நம்பி, நேசித்து, அன்பாய்த் தழுவி, அலங்காரமாய் நின்ற காட்சியையும் கண்டு பரவசப்பட்டு நின்றான். லட்சுமி அவனை அங்குமிங்கும் தேடிக் காணாது தோப்புப் பக்கம் வர, அவன் மயங்கி நிற்பதைக் கண்டு சந்தடி செய்யாது அணுகி அப்பூங்கொடி அரசமரத்தைத் தழுவி நின்றதுபோல் தானும் அன்பாய் அவனைத் தழுவி நின்றாள். தழுவவே ஸ்ரீநிவாசன் திடுக்கிட்டுத் திரும்பி அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்தான். லட்சுமி அரசமரத்தைக் குறிப்பாய்ப் பார்த்துத் தன் நாயகனையும் பார்த்துப் புன்முறுவலித்தாள். ஸ்ரீநிவாசன் பூங்கொடியை நோக்கித் தன் நாயகியையும் நோக்கிப் புன்னகை செய்தனன். அப்படி நிற்கும்பொழுதே படீலென்று பல மல்லிகை மொட்டுகள் கண்திறந்து மலர்ந்தன. மலர்ந்ததைக் கண்டு ஸ்ரீநிவாசன் "உன்னைக் கண்டதில் அக்கொடிக்கு என்ன ஆனந்தம் பார்" என்று பரிகாசம் செய்தான். அதைவிட்டு அப்பால் சிறிது தூரம் செல்ல, அவர்கள் ஒரு பிரம்மாண்டமான ஆலமரத்தைக் கண்டார்கள். அது வானுற ஓங்கி, வளம்பெற வளர்ந்து ஏராளமான விஸ்தாரமுடையதாய் அனேகமான கொடிகளைக் கீழே விட்டு அனேக ஸ்தம்பங்களும், மண்டபங்களும் நிறைந்த ஒரு பெரிய ஆலயம்போல் விளங்கி பரிசுத்தமான காற்று வீசி, அலங்கரித்த தேர்ச் சிகரம்போல சிகரமுடைத்தாய், அணி தேர்ப்புரவி ஆள் பெரும்படையொடு மன்னர்கள் தங்கத்தக்க தண்ணிழல் பரப்பி நின்றது. சூரியன் மலைவாயில் விழுகிற தருணமாதலால், அவனுடைய செங்கிரணங்கள் அந்த ஆல விருட்சத்திற் புகுந்து ரத்தின தீபங்கள் ஏற்றியதுபோல் ஏற்றி விளங்க, அம்மரத்தினுடைய கம்பீரத்தையும், கொடிகளின்

வரிசையான அழகையும், சூரியனுடைய ஒளியையும், தரையில் வீழ்ந்த இள நிழலையும், அவ்வடாலயத்தின் மண்டபங்களையும் ஸ்தம்பங்களையும், சிகரத்தையும், தீபங்களையும் கண்டு 'இது வன்றோ ஆலங்காட்டார் ஆனந்தக் கூத்தாடிய இடம்' என்று தம் மனதுள் சொல்லி இருவரும் ஒருவரையொருவர் கேளாது ஏககாலத்தில் அம்மரத்தின்கீழ் தலைவணங்கிக் கைக்கூப்பினர். கைகூப்பி ' உற்ற உடலும் சிந்தைவசமாதமால்' ஒருவரை யொருவர் விரைந்து தழுவி இருவருமாய்ப் பேசாது பேசி மகிழ்ந்தார்கள்.

இவர்கள் நாள் இவ்வாறு கழிய குழந்தை நடராஜன் சுந்தரத்துடன் ஜோடி சேர்ந்துவிட்டான். அவ்விருவரும் ஆற்றங்கரை, தோப்பு, துறவு, கோயில், குளம் முதலிய இடங்களெங்கும் உல்லாசமாய் ஓடி விளையாடுகிறார்கள். விளையாடுவதுடன் சண்டையும் பிடித்துக்கொள்ளுகிறதுதான். சண்டை செய்துகொண்டாலும் மறு நிமிஷமே ராஜியாய் விடும். ஒருநாள் அவ்விருவரும் ஒரு கிட்டிக்கொம்புக்காகச் சண்டை போட்டுக்கொண்டு விட்டார்கள். சில நிமிஷங் களுக்குப் பிறகு நடராஜன் ஒரு விளாம்பழத்தை எடுத்துக் கொண்டு சுந்தரம் இருந்த இடம் வந்தான். வந்து "எங்கப்பா எனக்கு விளாம்பழம் தந்திருக்காளே, உனக்குத் தருவேனே" என்றான். அதற்குச் சுந்தரம் "நான் எங்காத்திலே ஒரு மொக்கை விளாம்பழம் வச்சிருக்கேனே; அதை உனக்குத் தருவேனே, நீ தந்தா நான் தருவேன்!" என, நடராஜன் "நீதான் என்னை அடித்தாயே;இனிமேல் அடிக்கவில்லையென்று சொல்லு தரேன்" என்றான். சுந்தரம் "இனிமேல் அடிக்க வில்லை" என்று சொல்ல, நடராஜன் "கன்னத்தில் போட்டுக் கொள்" என்றான். சுந்தரம் அப்படியே செய்தான். 'கன்னத் திலே போட்டுக்கொண்டால் போதுமோ, தோப்புக்கரணம் போடணும்; அப்பத்தான் குடுப்பேன்" என்று சொன்னான் பாவம் சுந்தரம், தோம்புக்கரணமும் போட, நடராஜன பழத்தைப் பகிர்ந்து ஒரு பாதியை அவனுக்குக் கொடுத்தான். உடனே இருவரும் வெகு நேசமாய்விட்டார்கள். இப்படி யவர்கள் விளையாடி வர ராமசேஷய்யருக்கு நடராஜனைவிட்டு

அரை நாழிகைகூடப் பிரிய மனம் வராது. ஆகையால் அவர்கள் போகும் இடமெல்லாம் கூடவே தாமும் திரிந்து கொண்டேயிருக்கிறார். சிறுகுளத்திலே தகுதியான வீடு நிலம் முதலியன வாங்கி குழந்தை துரைசாமி (நடராஜன்) பெயருக்கு எழுதி வைத்துவிட்டார்.

அம்மையப்ப பிள்ளையவர்கள் சிறுகுளத்திலேயே தங்கி முத்துஸ்வாமியய்யருக்கு ஓர் சிஷ்யரானார். பொழுது போகா விட்டால் அவ்வூரார் அனைவரும் அவரைச் சூழ்ந்துகொள்ளு வார்கள். ஆடுசாபட்டியின் மகத்துவத்தை அவர் சொல்ல ஆரம்பித்துவிட்டால் ஆறு நாளானாலும் ஓயமாட்டார். தஸ்தாவேஜூகளிலேகூட 'நில வலயத்திற்கு ஓர் திலகம் போன்ற ஆடுசாபட்டியில் அவதரித்த அண்டர் புகழும் அஷ்டாவதானம் மகாவித்வான் அம்மையப்பபிள்ளையவர்கள்' என்றுதான் கையெழுத்து. ஆடுசாபட்டி என்பதற்கு ஆட்டுக்கு மோட்சம் கொடுத்த இடம் என்று பொருளாம். கஜேந்திராழ்வாருக்குப் போட்டியாக அஜேந்திராழ்வார் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு ஆடுசாபட்டியில் மோட்ச மாம். இப்படி ஸ்தல புராணங்களை விஸ்தாரமாகப் பேசிக் கொண்டு அம்மையப்ப பிள்ளையவர்கள் காலத்தைக் கடத்து கிறார்.

பேயாண்டித்தேவன் தன்னூர் சென்று அங்கு ராஜ்ய பரிபாலனம் செய்து வருகிறான். காலமே எழுந்ததும் முத்து ஸ்வாமி அய்யரிருக்கும் திசையை நோக்கி ஒருதரம் நமஸ் கரித்த பிறகுதான் மற்றக் காரியங்களில் பிரவேசிப்பான். அந்தத் திருமங்கையாழ்வாருக்கும் முத்துஸ்வாமியய்யர் ஏதோ அனுக்கிரஹித்திருப்பதால் அவரிடத்தில் அவனுக்கு தேவதா விசுவாசம். அவன் திருடுவதைக் கட்டோடு ஒழித்துவிட்டான்.

வைத்தியநாதய்யரவர்கள் வேலையை ராஜினமா கொடுத்துவிட்டுச் சிறுகுளத்திலே வாசத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டு முத்துஸ்வாமியய்யரிடம் உபதேசம் பெற்று சிவராஜயோகப்பியாசம் செய்துவருகிறார். நல்ல

அனுபவங்கள் சீக்கிரத்தில் சித்தியாகுமென்று நான் நினைக்கிறேன். முத்துஸ்வாமியய்யர் குடும்பங்களை அவர்தான் மேல் பார்த்து வருகிறார்.

கமலாம்பாள் சகலவித பாக்கியத்தையும் திரும்பப் பெற்றும் ராம நாம ஸ்மரணையை விட்டுவிடவில்லை. நாளுக்கு நாள் அவள் பக்தி பெருகிக்கொண்டே வந்தது. அந்த பக்தி விசேஷத்தால் அவளுக்கு உலகமெல்லாம் ராமஸ்வரூபமாய் தோன்றிற்று. "பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" என்றபடி மேகம் சூரிய சந்திர நட்சத்திராதிகள் முதல் மரம், மட்டை, மனிதன் ஈறுகச் சகலமும் அவளுக்கு ஆனந்தமான ஸ்ரீராம மயமாகவே தோன்ற, "எல்லா முன்னுடைமையே, எல்லாமுன் செயலே, எங்கணும் வியாபிநீ" என்று சதா அந்த இராமனையே வாழ்த்திய வண்ணமாய்த் தனக்கென்று ஒன்றுமில்லாது உண்ணு நீர் முதல் அந்நீரிலும் நின்றிலங்கும் அவனுக்கே அர்ப்பிதம் செய்து 'உலகனைத்தும் உன் நாமப் பொருளதையே ஓதிடுமால்' என்று உளமகிழ்ந்து, கதித்தெழும் இராகத்வேஷாதிகள் யாவற்றையும் கண்டித்து அடக்கிக் கொலைபுரிந்து,

'கரவன்றி யிராமர் கணக்கிலவாம்
பரவை மணலிற் பலரென்பர்களால்'

என்று பார்க்கும் பொருளனைத்திலும் ராமனையே பார்த்து உலகெங்கும் ஒருவன் என உணரும் உணர்ச்சியோடு களித்தாள். பாடுவதெல்லாம் ராமனுடைய பாட்டு, பேசுவதெல்லாம் ராமனுடைய பேச்சு, ஓதுவதெல்லாம் ராமனுடைய திருநாமம்.

"மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்திறுத்தாய் [செம்பொன்சேர்
கன்னிநன்மாமதின் புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய வின்னமுதே யிராகவனே தாலேலோ."

"கொங்குமலி கருங்குழலாள் கோசலைதன் குலமதலாய்
தங்குபெரும் புகழ்ச்சனகன் திருமருகா தாசரதி
கங்கையிலுந் தீர்த்தமவி கணபுரத்தென் கருமணியே
எங்கள்குலத் தின்னமுதே யிராகவனே தாலேலோ."

என்றிப்படி ராகவனைப் பாடிக் கொஞ்சி 'மன்னே மாமணியே' என்று ஏத்தி, 'அன்னே தேனே யமுதே" என்று அழுது, 'ஐயே நினக்காளானேன் அல்லலெனலாமோ' என்று களித்து அவள் தன் காலத்தைக் கடத்தினுள் தன் கணவனைக் கண்டுவிட்டால் ஸ்ரீ ராமனையே பிரத்தியட்சமாய்க் கண்டது போல் நினைப்பு. அவருடன் பேசினுல் ராமனுடன் பேசுவதாய் மதிப்பு. அவரருகு இருந்தால் ஸ்ரீ ராமனருகு இருப்பதாய்க் களிப்பு. அவர் நடையையும் அவர் சிரிப்பையும் காணுந்தோறும் 'கடந்தரு மதங்கலுழ் கவிநல் யானைபோல் நடந்தது கிடந்தது என்னுள நண்ணியே" என்றும், 'முந்தியென்னுயிரைவலுண்டதே" யென்றும் ராமனைக் கண்ட சீதையைப் போல் தன்னுள் பாடி மகிழ்ந்து,

"தீராஎளியார் வலிசேவகனே
நாராயணனே தனிநாயகனே"

என்று துதித்து இவ்வாறு அவள் ராமத்தியானனந்த் வைபவத்தில் முழுகியிருக்கிருள்.

கமலாம்பாளது பக்தியின் வைபவமே யிவ்வாருயின், முத்துஸ்வாமியய்யருடைய ஞானத்தின் வைபவத்தைச் சொல்லவும் வேண்டுமோ!

யதாகாலஸ்திதோ நித்யம்வாயுஸ் ஸர்வத்ரகோமஹான்
ததாஸர்வாணிபூதாநிமத்ஸ்தா நித்யுபதாரய.

—சர்வ வியாபகமாயும் நிறைந்துமிருக்கிற வாயுவானது எப்போதும் எப்படி ஆகாசத்தில இருககிறதோ அப்படி சகல பூதங்களும் என்னிடத்திலிருக்கிறதாகத் தெரிந்துகொள் எனறுப, 'உலகம் யாவும் உயிர் பலவும் நானே, சிறிதும் வேறில்லை' என்றும் வாக்குக்கொடுத்திருக்கும் பகவானுடைய

மகாவாக்கியத்தை விசாரணைசெய்து உலகெல்லாம் அலகைத்தேரெனத் தேர்ந்து,

பூதநீயலைபொறிகளுமலையலை புந்தி
ஏதநீயலையிவற்றினை மயங்கியானென்னும்
போதநீயலை யென்றிவையனைத்தும் போக்கிச்
சோதியாகியபிரஹ்மமேநீ

எனச் சொன்ன குருஉபதேச விசேஷத்தால் பஞ்சகோசத் திரைகளைப் பிளந்து பூரணமாய், ஏகமாய், அசலமாய், அசரீரியாய், அனுதியாய், ஆப்தமாய், நித்திய நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப நிர்விஷயமாய் விளங்காநின்ற சச்சிதானந்த ஸ்வரூபமாகிய ஆத்மாவைத் தரிசனம்செய்து, அகண்ட பிர்மமாகாரன விஸ்வரூப விருத்தியிற் பிரவேசித்து திரிபுடி ரஹிதமான பிர்மமாநந்தத்தில் மூழ்கி, ஆத்மக்கிரீடை புரிந்து சமாதி நிஷ்டையில் நிர்வஹித்து, சமாதியொழிந்த சமயங்களில் பகவானுடையமாயவிபூதியை வியந்து ஒளியிலே, இருளிலே, வெளியிலே, மண்ணிலே, தண்ணிலே, மலையிலே, கடலிலே, கரையிலே, மரத்திணிலையிலே, கனியிலே, காற்றிலே, கற்றூர் கல்லாரிலே, கதியறியாக் கயவர் தம்மிலே, கடலன்ன ஜகமுழுதிலே

"நீயலால்பிறிது மற்றின்மை சென்று சென்றணுவாய்த்
தேய்ந்து தேய்ந்தென்றுந் திருப்பெருந்துறையுறை
சிவனேயொன்று நீயல்லையன்றி யொன்றில்லை"

இல்லையில்லையெனத் தெளிந்து, உலக வியவகாரங்களில் புகும் பொழுதும் கோத்தநிலை குலையாது, புதுமணம் புரிந்த நாரியர் போற்புக்கு ஆனந்தமாய்,

'அச்சந்தவிர்த்தானென் றூ தூ துசங்கே
'யம்பலவாணனென் றூ தூ துசங்கே
'இச்சையளித்தானென் றூ தூ துசங்கே!
'இன்பங்கொடுத்தானென் றூ தூ துசங்கே!
'இறவாமையீந்தானென் றூ தூ துசங்கே
'எண்ணம்பலித்ததென் றூ தூ துசங்கே

'ஊனேமறிவதென் றூ தூ துசங்கே
'உணர்வேபிரஹ்மமென் றூ தூ துசங்கே
'நானே அவனுமென் றூ தூ துசங்கே
'நானுவதில்லையென் றூ தூ துசங்கே

எனப் பாடிப் பாடி ஞானனந்த வைபவசாகரத்தில் மூழ்கி யிருந்தார். முத்துஸ்வாமி அய்யர்.

இரவியுமதியும்வானும்வாயுவுமன முமம்பு
முரவியமண்ணுமற்றையுணர்பவன்றனுமாகி
பரவிடுங்கரணம்பன்னுன் காயமன்றுயுநின்றே
உரைமன மிறந்துளோங்குமொளியது வாழிவாழி

கண்முதற்புலன் களந்தக் கரணங்கள் விளங்குமெத்தாற்
தண்மதியருக்கனங்கி தாரகைவிளங்கு மெத்தால்
விண்முதற் பூதமியாவும் விளங்கிடுமெத்தாலந்த
வுண்மையாஞ்சிவப்பிரகாச வொளியதுவாழிவாழி

இரண்டாம் பாகம்

முற்றிற்று

—

பிற்கூற்று

இப்பொய்க்கதையை இதுகாறும் பொறுத்தருளிய நேசர்காள்! நும்பெரும் பொறுமைக்கு என் பெரும் வந்தனம்.

இக்கதை பெரும்பான்மையும் பலவித மனோசஞ்சலத்தின் மத்தியில் எழுதப்பட்டதாதலால் அழகு குன்றி 'குன்றக் கூறன் மிகைபடக்கூறல்' முதலிய யீரைங்குற்றங்களுக்கும் குடியாயுளது. மேலும் என்னறியாமையானும் பிறகாரணங் களாலும் சொற்பிழைகள் பலவடர்ந்து கற்றோர்க்கு விரசமாயுமுளது. ஆயினும் அவகாசம் முதலிய சில சாதனங்கள் ஏற்பட்டிருப்பின், அவை ஒருவாறு விலகியிருக்க லாம்.

இதுநிற்க, இச்சரித்திரமெழுதுவதில் எனக்குக் கதையே முக்கிய கருத்தன்று. மற்றென்னையோவெனில், ஆசையோடு உசாவும் அர்ச்சுனனுக்கு,

'நாந்தோஸ்திம்மதிவ்யாஞம் விபூதிஞம்பரந்தப'

அதாவது,

இறந்தெவன் விபூதிக்கோ ரெல்லையின்மையின்
பிறந்தனமுடிவு பெறப்பேசவொண்ணுமோ'

என்று பகவானாலேயே மசால்லிவிடப்பட்ட அவனது மாயாவிபூதியாம் பெருங்கடலுள் ஓர் அலையுள், ஓர் நுரையுள், ஓர் துளியில், ஓர் அணுவை யானெடுத்து அதனுள் என் புல்லறிவிற் கெட்டிய மட்டும் புகுந்து பார்த்து,

'சாணினுமுளனோர் தன்மையணு வினைச்ச தகூறிட்ட
கோணினுமுளன் மாமேருக்குன்றினு முளனிந்நின்ற
தூணினுமுளன் முன்சொன்ன சொல்லினு முளனித்
தன்மை காணுதிவிரைவில்'

என்று காட்டத் தூண்பிளந்து தோன்றிய அவனே அங்கும் இருக்கக் கண்டு திசைதிறந்தண்டங்கீறிச் சிரித்த செங்கட் சீயத்தைக் கண்டு கைகூப்பி, ஆடிப் பாடி யரற்றி, உலகெலாந் துள்ளித் துகைத்த இளஞ் சேயொப்ப, யாமும் ஆடிப்பாடி ஓட வேண்டுமென்பதே யன்றி வேறன்று.

பொன்னம்மாளது சூழ்வினையினும், சங்கரியது கொலைத் தொழிலினும், சுப்புவின கலகத்திறத்தினும், நடராஜனது விவரமறியா இளமையிலும், ராம சேஷய்யரது வாஞ்சா ரூபமான முதுமையிலும், லட்சுமி ஸ்ரீநிவாசனது மனோதர்ம விசேஷத்திலும், கமலாம்பாளது பக்தி வைபவத்திலும், முத்து ஸ்வாமியய்யரது ஆத்மானந்தத்திலும் எங்கும் சமமாய், சாட்சியாய், ஏகமாய், பூரணமாய், நித்தியமாய்,

நன்றாய்ஞான கனமாகி நானாவெல்லாம் பிறப்பிடமா
யொன்றாய் வேறோர் பொருளின்றி யொளியா யொன்றோடு
[வமிப்ப
தன்றா யகிலசராசரங்கட்கா தாரந்தானாயென்றும்
பொன்றாததுவாய் விகாரப்பொருளாய்ப் புலனாய்ப் புணர்ப்
[பரிதாய்

"உம்பர்க்கும் உனக்கும் ஒத்து இவ்வுலகெங்கும் நாம் காண்போம்.

கமலாம்பாள் போல 'புத்தி யாலறியொண்ணாய் புராணனைப் பத்தியாம் வலையிற் படுத்து'

'கன்றினுக்குச்சே தாகனிந்திரங்கல் போலெனக்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய்பராபரமே'

என்று அருட்டாகங்கொண்டு,

'கன் குறுணிலாக்கனியகுத்தமாயவ
னின்றுநம்மானுள் வருமேலவன் வாயிற்
கொன்றைபந்திங்குழல் கேளாமோதோழீ'

என்றவன் புராண வைபவங்களில் மயங்கி,

'கீளார்கோவணமும் திருநீரும்'

என்றவன் மூர்த்திலாவண்யத்தி லீடுபட்டு 'ஊடுவது மூவப்பதும் நின்னோடே' எனத் தன்னையும் ஜகத்தையும் மறந்து,

சொல்லாலேவாய்துடிப்ப தல்லாநெஞ்சந்
துடித்திருகணீரருவி சொரியத்தேம்பி
கல்லாலே யிருந்த நெஞ்சங்கல்லான்முக்கட்
கனியேநெக்குருகிடவுங் காண்பேன்கொல்லோ'

எனத் தன்னையே நொந்து நொந்து நெஞ்சங் கரைந்துருகி,

மாசில்வீணையும் மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போறதேன்
ஈதுனெந்தை யிணையடிநீழலே

என்று விசேஷிக்கப்பட்ட அவாங்மன கோசரமான அவ்வடி நிழலில் ஒய்வடைவோம். அல்லது முத்துஸ்வாமி அய்யரைப் போல "வேண்டேணிபமாயப் புன பிறவி வேண்டேனே" என உலக விரக்திபெற்றுக் கிருமிமுதல் கிரகங்கள் வரை சலியாது சஞ்சரிக்கின்ற பகவானுடைய சித்விலாஸச் சிறப்பில் எந்தக் கேவலமான பிராணியும் அநாதியாய் விடப்படவில்லை யென அறிந்து அஞ்ஞானங்கழல சத்ருவைச் சேர்ந்து வழிபட்டு அஹம்ப்ரஹ்மாயாதி மகாவாக்கியங்களை விசாரணை செய்து அப்பியாச பலத்தினால் ஆத்மஸ்வரூபத்தைத் தீர்க்கமாகத் தரிசித்து'பாகற்காய்க்காகப் பங்கை விற்ற கதையைப்' போல அற்பமான உலக இன்பங்களின் பொருட்டு விலையற்ற ஆத்ம லாபத்தை விலைப்படுத்தாது "மனமிறக்கக் கல்லார்க்கு

வாயேன் பராபரமே' என்றபடி மனமிறக்கக்கற்று உலக வாஞ்சைகளை யொழித்துச் ''சிந்தையிலெழுத்து மொங்கிச் ஜகமெலா நிறைந்து தேங்கி'' அந்தமில்லாததான ஆனந் தத்தில் மூழ்கித் திடமாகச் சிவானுபூதி பெற்றுச் சிவோஹ மென்றிருந்து காலத்தைத் தள்ளுவோம்.

எந்தத் தெய்வத்தைத் தொழுது இச்சிறு கிரந்தமானது இயற்றப்பட்டதோ, எந்தச் சுயம்பிரகாசமான திவ்ய தேஜா ரூபத்தின் பொருட்டு இக்கதையானது நிஷ்காமியமாக அர்ப்பிக்கப்படுகிறதோ, அந்தத் திவ்ய, மங்கள, குணாதீத பரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபத்தை நாமனைவரும் முயற் சித்து அடைவோமாக. அடைந்து, அவருடைய குழந்தை களான மன்குலபாக்கியமாம் பாலர்க்குதவிசெய்ய அடியார்க்கடியனாயிருந் துழைப்போமாக. தாதஸ்து.

சுபம்.

கமலாம்பாள் சரித்திரம்

சில அபிப்பிராயங்கள்

'ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளையையும் பாப்பா பட்டியகத்து வெட்டரிவாளையும் அறியாதார் யார்? அழுவதில் நிபுணனாகிய ஸ்ரீநிவாசனும் லட்சியவாதியான முத்துஸ்வாமி அய்யரும் தமிழ் நாட்டுக் கிராமங்களில் இன்னும் இருக்கின்றனர். அவர்களை நாம் எங்கேயோ பார்த்த ஞாபகம் வருகிறது. எங்கே? கமலாம்பாள் சரித்திரத்தில்தான். இதைவிட வேறு சிபார்சு வேண்டுமா?'

தினமணி

'புத்தகத்தைக் கையில் எடுத்தால் வாசித்து முடித்தபின்தான் கீழே வைக்க மனம் வரும்........ *கதா ரஸமும் கவிதா ரஸமும் நிரம்பியது.*'

சுதேசமித்திரன்

"பி. ஆர். ராஜமய்யர் எழுதிய கமலாம்பாள் சரித்திரத்தை நீ படிக்க வேண்டும். இந்நாவல் தனிச் சிறப்பு வாய்ந்தது."

ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி
(தன் அருமை மகளுக்கு எழுதிய கடிதம்)

'நாளது வரையில் வெளியான நாவல்களுள் எது தலைமை ஸ்தானம் வகிக்கிற தென்று கேட்டால் 'கமலாம்பாள் சரித்திரம்' என்று கூசாமல் சொல்லி விடலாம்.......அழகான வர்ணனைகளும், கவிதா ரஸமும் கலந்து மணம் வீசுகிறது.......வம்பர் மகாசபை என்ற சொற்றொடர் இந்த ஆசிரியர் சிருஷ்டித்தது....... கமலாம்பாள் சரித்திரத்தின் வழியேதான் தமிழ் நாவல் சுவடுவிட்டுக் கொண்டு போகிறது.'

ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி

(ரேடியோ பிரசங்கம்)

"கமலாம்பாள் சரித்திரத்தை வெகு ஸ்வாரஸ்ய மாகச் சொல்லுவாள் அம்மா. 'பாப்பா பட்டி யகத்து வெட்டரிவா'ளைப்பற்றியும்,'பேயாண்டித்தேவர் திருவுலா' வைப் பற்றியும் பேசுவோம். இப்பேச்சு முடியும் பொழுது நம்ம ராஜம்மாதிரி இனி யார் எழுத முடியும் என்று அம்மா சொல்லுவாள்."

('என்கதை' கட்டுரையில்)

பி. எஸ். ராமையா

'It would be a pity if 'Kamalambal' is not prescribed For Intermediate or B.A., Degree Examinations. It would certainly be more acceptable to Students than 'Midsummer Nights Dream.'

Prof. P. Sundaram Pillai

M.A. F.M.V., F.R.H.S., M.R.A.S.

Rao Bahadur. (Author of 'Manonmani')

'The strength of the Novel lies in its philosophical depths and spiritual significance and in this respect it appears to be an unique production of its kind. The style is simple, chaste, vigourous, dignified and is exceedingly poetic without being ornate.'

—Prabudda Bharata
(Journal started by Swami Vivekananda)

'Kamalambal' in one sense is not new. Almost all the words and thoughts are current coin among the people and it is the chief merit of the author that he has used such available materials with so much dexterity as to afford pleasure and to adorn a tale and point a moral.'

Siddhanta Dipika

'Kamalambal' is an excellent story depicting Hindu Social life, manners and customs. The book is written in an easy and flowing style and will no doubt be much appreciated by the Tamil reading public.'

Indian Social Reformer

'Kamalambal' is replete with choice quotations from standard Tamil authors appropriately worked into the text.

Madras Mail

★

நீங்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல்

"பாரதியார் இதயம்"

தினமணி மதிப்புரை

தலைப்புக்கேற்ப மகாகவி பாரதியாரின் உள்ளத்தைப் படிப்போர் நன்கு அறிந்துகொள்ளும் வகையில் இந்நூலைத் தயாரித்துள்ளார் ஆசிரியர்.

கவியரசர் ஒரு இலட்சியக் கவிஞர் என்பதை முதலில் விளக்கிவிட்டு, அவரது சமயக்கொள்கை, கடவுட் கொள்கை, நாட்டு ஒருமைப்பாடு, அன்பின் பெருமை, பெண்ணின் சிறப்பு, கலைச் சிறப்பு யாவற்றையும் பற்றிக் கவிஞரின் கதைகளி லிருந்தும், அவர்பற்றி வெளியாகியுள்ள நூல்களி லிருந்தும் மேற்கோள்கள் காட்டிப் படிப்போர் பரவசமடையுமாறு அமைத்திருக்கிறார் இந்நூலை.

இப்புத்தகத்தைத் தயாரிப்பதில் இரு நல்ல உத்திகளைக் கையாண்டுள்ளார் ஆசிரியர். திரு. வி. க. அவர்கள் மேடையில் சொற்பொழிவாற்றினால் இறுதியில் தன் பிரசங்கத்தின் சாராம்சத்தை எடுத்துக் கூறுவார். அம்மாதிரியே இந்த நூலின் இறுதியில் புத்தகத்தின் சாரத்தைப் பிழிந்து அளித்துள்ளார்.

மற்றொரு உத்தி, ஆசிரியர் தாம் கூறும் கருத்துக்களை விளக்கமாகவும் தாம் காட்டியுள்ள மேற்கோள்களின் ஆசிரியர்களின் படங்களை, எழுத்தின் பின்னணியில் வெளியிட்டுள்ளார். உதாரணமாக, பாரதியார் ஏசுநாதரைப்பற்றிய பாடலைக் குறிப்பிடுகையில், அந்தப் பகுதியின் பின்னணியில் ஏசுநாதர் படம் பளிச்சிடுகிறது.

இந் நூலைப் படித்தால் பாரதியாரின் கவிதைகளையும், உரைநடை நூல்களையும் படிக்கவேண்டும் என்கிற ஆர்வம் வாசகர் மனங்களில் ஏற்படும்.

★

கமலாம்பாள் சரித்திரம்

சில அபிப்பிராயங்கள்

"பி. ஆர். ராஜமய்யர் எழுதிய கமலாம்பாள் சரித்திரத்தை நீ படிக்க வேண்டும். இந்நாவல் தனிச் சிறப்பு வாய்ந்தது."

ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி

'நாள துவரையில் வெளியான நாவல்களுள் எது தலைமை ஸ்தானம் வகிக்கிற தென்று கேட்டால் 'கமலாம்பாள் சரித்திரம்' என்று கூசாமல் சொல்லி விடலாம்.......அழகான வர்ணனைகளும் கவிதா ரஸமும், கலந்து மணம் வீசுகிறது.......வம்பர் மகாசபை என்ற சொற்றொடர் இந்த ஆசிரியர் சிருஷ்டித்தது....... கமலாம்பாள் சரித்திரத்தின் வழியேதான் தமிழ் நாவல் சுவடுவிட்டுக் கொண்டு போகிறது.'

ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி

'புத்தகத்தைக் கையில் எடுத்தால் வாசித்து முடித்தபின்தான் கீழே வைக்க மனம் வரும்....... கதா ரஸமும் கவிதா ரஸமும் நிரம்பியது.'

சுதேசமித்திரன்

'The strength of the Novel lies in its philosophical depths and spiritual significance and in this respect it appears to be an unique production of its kind. The style is simple, chaste, vigourous, dignified and is exceedingly poetic without being ornate.'

—Prabudda Bharata

பார்க்கர் பிரஸ், சென்னை-1